மாண்புமிகு தமிழ்நாடு

முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்

பல்வேறு நிகழ்ச்சிகளில்

ஆற்றிய உரைகள்

(01.01.2022 முதல் 05.05.2022 வரை)

தொகுப்பு -2

1 ஆண்டு ஆட்சி

ஓயா உழைப்பின் ஓராண்டு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள்

பல்வேறு நிகழ்ச்சிகளில் ஆற்றிய உரைகள்

(01.01.2022 முதல் 05.05.2022 வரை)

தொகுப்பு – 2

சிறப்பு வெளியீடு எண். 56

தமிழரசு

இலவச வெளியீடு

மே 2022

வெளியிடுபவர் :
இயக்குநர்,
செய்தி–மக்கள் தொடர்புத்துறை,
சென்னை.

அச்சிட்டோர் :
தமிழரசு அச்சகம்,
இராஜீவ் காந்தி சாலை,
தரமணி,
சென்னை – 600 113.

பொருளடக்கம்

வ. எண்.	உரை விவரம்	பக்கம் எண்

1. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், புத்தாண்டை முன்னிட்டு நாட்டு மக்களுக்கு காணொலி வாயிலாக ஆற்றிய உரை – 01.01.2022 1

2. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், சென்னை, சைதாப்பேட்டை, சென்னை பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் 15 முதல் 18 வயதுள்ள மாணவ, மாணவிகளுக்கு கொரோனா தடுப்பூசி சிறப்பு முகாமை தொடங்கி வைத்து ஆற்றிய உரை – 03.01.2022.............................. 5

3. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், தலைமைச் செயலகத்தில், நடைபெற்ற நீட் தேர்வு முறையை முழுமையாக நீக்கிட சட்டப் போராட்டத்தினை ஒன்றிணைந்து மேற்கொள்வதென அனைத்து சட்டமன்றக் கட்சித் தலைவர்களுடனான ஆலோசனைக் கூட்டத்தில் ஆற்றிய உரை – 08.01.2022...12

4. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், சென்னை, பழவந்தாங்கலில் நடைபெற்ற இஸ்பாகான் (ISBACON) அமைப்பின் 14ஆவது மாநாட்டினை தொடங்கிவைத்து ஆற்றிய உரை – 10.01.2022...18

வ. எண்.	உரை விவரம்	பக்கம் எண்
5.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், ஈரோடு மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாவில், தலைமைச் செயலகத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக முடிவுற்ற திட்டப் பணிகளைத் திறந்துவைத்து, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி ஆற்றிய உரை – 10.01.2022	28
6.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை சார்பில் நடைபெற்ற அயலகத் தமிழர் நாள் விழாவில் ஆற்றிய உரை – 12.01.2022	37
7.	தமிழ்நாட்டில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள 11 அரசு மருத்துவக் கல்லூரிகள் மற்றும் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்திற்கான புதிய கட்டடம் ஆகியவை காணொலிக் காட்சி வாயிலாக மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. **நரேந்திர மோடி** அவர்களால் திறந்து வைக்கப்பட்ட நிகழ்ச்சியில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் ஆற்றிய உரை – 12.01.2022	44
8.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், எட்டு மாதத்தில் ஏற்றமிகு சாதனைகள் – நாட்டு மக்களுக்கு காணொலி வாயிலாக ஆற்றிய உரை – 13.01.2022	49

வ. எண்.	உரை விவரம்	பக்கம் எண்

9. கொரோனா அலையை நிருவகிப்பதில் ஒன்றிய அரசு எடுக்கும் அனைத்து முயற்சிகளிலும் தமிழ்நாடு துணை நிற்கும் – மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. **நரேந்திர மோடி** அவர்கள் தலைமையில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், ஆற்றிய உரை – 13.01.2022 57

10. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், தருமபுரி மாவட்டத்தில் முடிவுற்ற திட்டப்பணிகளை திறந்துவைத்து, புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி ஆற்றிய உரை – 20.01.2022. 59

11. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், சென்னை, நுங்கம்பாக்கத்தில் நடைபெற்ற இந்து சமய அறநிலையத்துறை ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் ஆற்றிய உரை – 20.01.2022 69

12. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், மதுரை மாவட்டத்தில் முடிவுற்ற திட்டப்பணிகளைத் திறந்துவைத்து, புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி ஆற்றிய உரை – 21.01.2022 79

வ. எண்.	உரை விவரம்	பக்கம் எண்

13. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்,
2010 முதல் 2019ஆம் ஆண்டுகள் வரையிலான
செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தால் வழங்கப்படும்
கலைஞர் மு. கருணாநிதி செம்மொழித் தமிழ் விருதுகள்
வழங்கும் விழாவில், தமிழறிஞர்களுக்கு விருதுகள்
வழங்கி ஆற்றிய உரை – 22.01.2022 92

14. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், சென்னை,
அண்ணா பல்கலைக்கழகத்தில் ரூ.10 கோடி மதிப்பீட்டில்
புதிதாக தோற்றுவிக்கப்பட்டுள்ள தமிழ்நாடு ஆளில்லா
வான்வழி வாகனக் கழகத்தை தொடங்கிவைத்து, மதுரை
காமராசர் பல்கலைக்கழகத்தில் ரூ.7.25 கோடி மதிப்பீட்டில்
அமைக்கப்பட்டுள்ள சூரிய சக்தி மையத்தையும்
திறந்துவைத்து, கருணை அடிப்படையில் பணிநியமன
ஆணைகளையும் வழங்கி ஆற்றிய உரை – 25.01.2022............102

15. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்,
“சமூக நீதிக்கான போராட்டத்தை முன்னெடுத்துச்
செல்லுதல் மற்றும் ஒருங்கிணைந்த தேசிய திட்டம்”
என்ற தலைப்பிலான தேசிய இணையக் கருத்தரங்கில்
ஆற்றிய தலைமையுரை – 26.01.2022....................109

16. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்,
நீட் தேர்வு விலக்கு தொடர்பான சட்டமன்ற அனைத்துக்
கட்சித் தலைவர்களுடனான ஆலோசனைக் கூட்டத்தில்
ஆற்றிய உரை – 05.02.2022....................117

வ. எண்.	உரை விவரம்	பக்கம் எண்

17. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், சென்னை, நந்தனம், ஒய்.எம்.சி.ஏ. உடற்கல்வியியல் கல்லூரி வளாகத்தில், 45ஆவது சென்னை புத்தகக் காட்சியைத் தொடங்கிவைத்து ஆற்றிய உரை – 16.02.2022 123

18. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், சென்னை, கோடம்பாக்கம், மீனாட்சி சுந்தரராஜன் பொறியியல் கல்லூரியின் சமூக மேம்பாட்டிற்கான புத்தாக்கத் திட்டத்தினைத் தொடங்கிவைத்து ஆற்றிய உரை – 26.02.2022 135

19. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 'நான் முதல்வன்' திட்டத்தைத் தொடங்கிவைத்து ஆற்றிய உரை – 01.03.2022 142

20. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், தனது பிறந்தநாளையொட்டி, சென்னை, சிறுமலர் பார்வை மற்றும் செவித்திறன் குறைபாடுடையோர் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டு ஆற்றிய உரை – 01.03.2022 153

21. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், சென்னை, சிஷ்யா பள்ளி பொன்விழா ஆண்டு நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு ஆற்றிய உரை – 05.03.2022 157

வ. எண்.	உரை விவரம்	பக்கம் எண்
22.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், தூத்துக்குடியில் அமைக்கப்படவுள்ள சர்வதேச அறைகலன் பூங்காவிற்கு அடிக்கல் நாட்டி ஆற்றிய உரை – 07.03.2022	161
23.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், "தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்" ஆங்கில நாளேடு நடத்திய "Think Edu-2022" கருத்தரங்கில் காணொலி வாயிலாக ஆற்றிய உரை – 09.03.2022	173
24.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் , மாவட்ட ஆட்சித் தலைவர்கள், காவல் துறை மற்றும் வனத்துறை அலுவலர்கள் மாநாட்டின் முதல் நாள் கூட்டத்தில் ஆற்றிய உரை – 10.03.2022	178
25.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள், காவல்துறை, வனத்துறை அலுவலர்கள் மாநாட்டில் (முற்பகல் கூட்ட நிறைவின்போது) ஆற்றிய உரை – 10.03.2022	186
26.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், காவல்துறை அலுவலர்கள் மாநாட்டில் ஆற்றிய தொடக்கவுரை மற்றும் நிறைவுரை – 10.03.2022	189

வ. எண்.	உரை விவரம்	பக்கம் எண்
27.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள், காவல் துறை மற்றும் வனத் துறை அலுவலர்கள் மாநாட்டின் இரண்டாம் நாள் நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கான மாநாட்டில் ஆற்றிய தொடக்க உரை – 11.03.2022	193
28.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், தென் மாநிலப் பல்கலைக்கழக துணைவேந்தர்கள் மாநாட்டில் காணொலிக்காட்சி வாயிலாக ஆற்றிய உரை – 11.03.2022	196
29.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாடு – 2022 இரண்டாம் நாள் கூட்ட நிறைவில் ஆற்றிய உரை – 11.03.2022	201
30.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் வனத்துறை அலுவலர்கள் மாநாட்டில் ஆற்றிய தொடக்க உரை – 12.03.2022	206
31.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள், காவல்துறை, வனத்துறை அலுவலர்கள் மாநாட்டின் இறுதி நாளில் ஆற்றிய நிறைவுரை – 12.03.2022	209

வ. எண்.	உரை விவரம்	பக்கம் எண்
32.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், 30ஆவது அனைத்திந்திய கட்டுநர் மாநாட்டைத் தொடங்கி வைத்து ஆற்றிய உரை – 12.03.2022	227
33.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற தமிழ்நாடு அரசின் விருதுகள் வழங்கும் விழாவில் ஆற்றிய உரை – 15.03.2022	235
34.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், சாம்சங் நிறுவனத்தின் ரூ.1,588 கோடி முதலீடு மற்றும் 600 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கக்கூடிய காற்றழுத்தக் கருவிகள் (Compressor) உற்பத்தித் திட்டத்தை ஸ்ரீபெரும்புதூரில் நிறுவுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்த நிகழ்ச்சியில் ஆற்றிய உரை – 15.03.2022	247
35.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், 44ஆவது உலக செஸ் ஒலிம்பியாட் போட்டி தமிழ்நாட்டில் நடக்க இருப்பது தொடர்பாக ஆற்றிய உரை – 16.03.2022	252
36.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், செங்கல்பட்டு மாவட்டம், வண்டலூரில், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை மூலம் மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமினைத் தொடங்கிவைத்து ஆற்றிய உரை – 20.03.2022	254

வ. எண்.	உரை விவரம்	பக்கம் எண்
37.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், துபாய் உலக கண்காட்சியின் இந்திய அரங்கில் தமிழ்நாடு அரங்கினை திறந்துவைத்து ஆற்றிய உரை – 25.03.2022	261
38.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், துபாயில் நடைபெற்ற ஐக்கிய அரபு நாடுகளின் முதலீட்டாளர்கள் சந்திப்பில் ஆற்றிய உரை – 26.03.2022	264
39.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், அபுதாபியில் உள்ள இந்திய சமூக மற்றும் கலாச்சார மையத்தில், இந்திய சமூக மற்றும் கலாச்சார மையம் மற்றும் அபுதாபி வாழ் தமிழ் சமூகம் சார்பாக நடைபெற்ற பாராட்டு விழாவில் ஆற்றிய உரை – 28.03.2022	273
40.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், துபாய் மற்றும் அபுதாபி பயணத்தை முடித்துக் கொண்டு, அதிகாலை சென்னை வந்தடைந்த பின் சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்கள் கூட்டத்தில் ஆற்றிய உரை – 29.03.2022	287
41.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், புதுதில்லி, தமிழ்நாடு இல்லத்தில் செய்தியாளர்களிடம் ஆற்றிய உரை – 31.03.2022	291

வ. எண்.	உரை விவரம்	பக்கம் எண்
42.	*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.* ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள், விழுப்புரம் மாவட்டம், ஒழுந்தியாம்பட்டில் நடைபெற்ற அரசு விழாவில் முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்துவைத்து, பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி ஆற்றிய உரை – 05.04.2022*	*297*
43.	*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.* ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள், பெலாக்குப்பம் சிப்காட் தொழிற்பூங்கா வளாகத்தில் ரூ.500 கோடி மதிப்பீட்டில் செய்யார் SEZ டெவலப்பர்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் காலணி தயாரிக்கும் தொழிற்சாலைக்கு அடிக்கல் நாட்டி ஆற்றிய உரை – 05.04.2022*	*313*
44.	*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.* ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள், சென்னை, கொளத்தூர், அனிதா அச்சீவர்ஸ் அகாடமியில் பயிற்சி முடித்த மாணவ, மாணவியர்களுக்கு மடிக்கணினிகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கிய நிகழ்ச்சியில் ஆற்றிய உரை – 08.04.2022*	*324*
45.	*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.* ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள், மாண்புமிகு மாநகராட்சி மேயர்கள், துணை மேயர்கள், நகராட்சித் தலைவர்கள் மற்றும் துணைத் தலைவர்களுக்கான நிருவாகப் பயிற்சி முகாம் நிறைவு விழாவில் ஆற்றிய உரை – 13.04.2022*	*330*

வ. எண்.	உரை விவரம்	பக்கம் எண்
46.	*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.* ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள், ஆவடியில் உள்ள நரிக்குறவர் குடியிருப்புகளுக்கு நேரில் சென்று அங்குள்ள மக்களுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி ஆற்றிய உரை – 15.04.2022*	*347*
47.	*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.* ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் தலைமை அலுவலகத்தில், ஓராண்டில் ஒரு இலட்சம் மின் இணைப்பு பெற்று பயனடைந்த விவசாயப் பெருமக்களுடன் நடைபெற்ற கலந்துரையாடல் விழாவில் ஆற்றிய உரை – 16.04.2022*	*357*
48.	*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.* ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள், பேரூராட்சித் தலைவர்கள் மற்றும் துணைத் தலைவர்களுக்கான நிருவாகப் பயிற்சி நிறைவு விழாவில் ஆற்றிய உரை – 18.04.2022*	*365*
49.	*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.* ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள், சென்னை, லேடி வில்லிங்டன் மேல்நிலைப் பள்ளியில் பள்ளிக் கல்வித்துறை சார்பில் நடைபெற்ற "நம் பள்ளி நம் பெருமை" பள்ளி மேலாண்மைக் குழு மறுகட்டமைப்பு நிகழ்வினைத் தொடங்கிவைத்து, ஆற்றிய உரை – 19.04.2022*...	*380*

வ. எண்.	உரை விவரம்	பக்கம் எண்
50.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், சென்னை, கொளத்தூர், எவர்வின் பள்ளியில் நடைபெற்ற 30ஆம் ஆண்டு விழாவில் கலந்து கொண்டு ஆற்றிய உரை – 22.04.2022	388
51.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் நடைபெற்ற நீதிமன்றக் கட்டட திறப்பு விழா மற்றும் அடிக்கல் நாட்டு விழாவில் ஆற்றிய உரை – 23.04.2022	401
52.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், “TechKnow-2022” கண்காட்சி மற்றும் கருத்தரங்கு நிறைவு விழாவில் ஆற்றிய உரை – 23.04.2022	410
53.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், தேசிய ஊராட்சிகள் தினத்தை முன்னிட்டு, காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் ஒன்றியம், செங்காடு ஊராட்சியில் நடைபெற்ற சிறப்பு கிராம சபைக் கூட்டத்தில் கலந்துகொண்டு, ஆற்றிய உரை – 24.04.2022	419
54.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் தடுப்பூசி செலுத்தும் பணிகள் குறித்து காணொலிக் காட்சி மூலம் நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்களுடனான ஆலோசனைக் கூட்டத்தில் ஆற்றிய உரை – 26.04.2022	427

வ. எண்.	உரை விவரம்	பக்கம் எண்

55. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்,
தேனி மாவட்டம், ஊஞ்சாம்பட்டி கிராமத்தில்
நடைபெற்ற அரசு விழாவில் முடிவுற்ற திட்டப் பணிகளை
திறந்து வைத்து, புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி,
ஆற்றிய உரை – 30.04.2022 431

56. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்,
திண்டுக்கல் மாவட்டத்தில் நடைபெற்ற
அரசு விழாவில் முடிவுற்ற திட்டப் பணிகளை
திறந்து வைத்து, புதிய திட்டங்களுக்கு
அடிக்கல் நாட்டி ஆற்றிய உரை – 30.04.2022 448

57. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்,
நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய வளாகத்தில்
நெடுஞ்சாலைத்துறை பவள விழா நினைவுத் தூணை
திறந்து வைத்து புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி,
தொடங்கி வைத்து ஆற்றிய உரை – 01.05.2022 461

58. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்,
39ஆவது வணிகர் தினத்தையொட்டி திருச்சிராப்பள்ளியில்
தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பின் சார்பில்
நடைபெற்ற தமிழக வணிகர் விடியல் மாநாட்டில்
ஆற்றிய உரை – 05.05.2022 472

***

புத்தாண்டில் மகிழ்ச்சியாக இருப்பதைப்போல் பாதுகாப்பாகவும் இருக்க வேண்டும்

வணக்கம்.

உங்கள் எல்லோருக்கும் என் இனிய ஆங்கில புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்.

இந்த 2022ஆம் ஆண்டு மிகவும் நன்றாக இருக்க வேண்டும் என்பது தான் நம் எல்லோருடைய எதிர்பார்ப்பு, நம்பிக்கை. அப்படி நன்றாக இருக்க வேண்டும் என்றால் கடந்த ஆண்டுகள் தந்த பாடங்களை நாம் மறந்துவிடக்கூடாது. கொரோனா என்ற நோய்த் தொற்றின் முதலாவது அலை மற்றும் இரண்டாவது அலையிலிருந்து நாம் மீண்டு வந்திருக்கிறோம். குறிப்பாகச் சொல்ல வேண்டும்

என்றால், இரண்டாவது அலை உச்சகட்டத்தில் இருந்தபோது தான், உங்களுடைய முதலமைச்சராக மட்டும் அல்ல, உங்களுடைய நலனுக்கும் நான் பொறுப்பேற்றுக்கொண்டேன். இரண்டாவது அலையை கட்டுப்படுத்துவதுதான் என்னுடைய முதல் வேலையாக இருந்தது. என்னுடன் நம் அமைச்சர் பெருமக்கள், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையினர், உள்ளாட்சி நிருவாகத்தினர், காவல் துறையினர், தூய்மைப் பணியாளர்கள் என்று பல்வேறு துறைகளைச் சார்ந்தவர்கள் இணைந்து நின்று செயல்பட்டார்கள். அதை மறக்கவே முடியாது. அதனால் குறைந்த கால அளவிலேயே, இரண்டாவது அலையை கட்டுப்படுத்தினோம். அதற்கு பொதுமக்களாகிய உங்களுடைய ஒத்துழைப்பும் முக்கிய காரணமாக இருந்தது.

தடுப்பூசி முகாம்களை தொடர்ந்து நடத்தியபோது, அறிவியல் மீது நம்பிக்கை வைத்து ஆர்வத்துடன் வந்து ஊசி போட்டுக் கொண்டீர்கள். உங்களுடைய ஆர்வம் பெரிய விழிப்புணர்வை ஏற்படுத்தியது. அதனால் தடுப்பூசி போட்டவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்தது. கொரோனா பரவலையும், இறப்பு எண்ணிக்கையையும் பெருமளவில் கட்டுப்படுத்த முடிந்தது. அதே மாதிரியான ஒரு ஒத்துழைப்பைத்தான் இந்த புத்தாண்டில் உங்களிடம் மறுபடியும் நான் எதிர்பார்க்கிறேன்.

கொரோனா தொற்றுப் பல உருமாற்றங்களை அடைந்திருக்கிறது. இப்போது ஒமைக்ரான் என்ற பெயரில் அது உலகம் முழுவதும் பரவிக்கொண்டிருக்கிறது. அதனுடைய வேகம் அதிகரித்து இருக்கிறது. அதனால் நாம் இன்னும் கொஞ்சம் கவனமாக இருக்க வேண்டும். ஒமைக்ரான் பரவலைக் கட்டுப்படுத்த என் தலைமையில் இருக்கக்கூடிய உங்கள் அரசு, தேவையான எல்லா நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது. வெளிநாடுகளிலிருந்தும், பிற மாநிலங்களிலிருந்தும் வருபவர்களுக்கான பரிசோதனை,

நம் மாநிலத்தில் அறிகுறி தெரிந்தால் அதற்கான பரிசோதனை, சிகிச்சைக்கான ஆக்சிஜன், படுக்கை, மருந்து அனைத்தும் போதுமான அளவில் இருக்கிறது. கூடுதல் தேவையை யோசித்தும் அதற்கேற்றவாறு முழுமையான ஏற்பாடுகளைச் செய்திருக்கிறோம். அதனால் நீங்கள் யாரும் பயப்படத் தேவை இல்லை. உங்கள் ஒத்துழைப்புதான் எங்களுக்கு தேவைப்படுகிறது.

ஒமைக்ரான் பரவலைத் தடுக்க சில கட்டுப்பாடுகளை அரசாங்கம் போட்டிருக்கிறது. அது உங்கள் பாதுகாப்பிற்காகத்தான். அந்த கட்டுப்பாடுகளை கடைபிடியுங்கள். COVID Appropriate Behaviour என்ற கோவிட் காலத்தில் கடைபிடிக்க வேண்டிய பழக்கங்களை கட்டாயமாக நீங்கள் கடைபிடிக்க வேண்டும்.

கூட்டம் கூடுகின்ற நிகழ்ச்சிகளை தயவு செய்து தவிர்த்துவிடுங்கள். அவசரத் தேவைகள், அன்றாடப் பணிகளுக்காக வெளியில் போகும்போது போதுமான இடைவெளியை கடைபிடியுங்கள். சானிடைசர் பயன்படுத்துங்கள் அல்லது சோப்பு போட்டு நன்றாகக் கையை கழுவுங்கள். முகக்கவசத்தை கட்டாயம் பொதுவெளியில் போட்டுக்கொள்ளுங்கள். அதை எப்போதும் மறந்துவிடாதீர்கள். அது உங்கள் பாதுகாப்பிற்கு மட்டுமல்ல, உங்களை சார்ந்திருக்கக்கூடிய அனைவருடைய பாதுகாப்பிற்காகத்தான்.

தடுப்பூசி போட்டுக்கொள்ளாதவர்கள் இருந்தீர்கள் என்றால், தாமதிக்காமல் போட்டுக்கொள்ளுங்கள். முதல் டோஸ் போட்டவர்கள், உங்களுக்கு சொல்லப்பட்ட தேதியில் இரண்டாவது டோஸ் போட்டுக்கொள்ளுங்கள்.

ஜனவரி மாதத்தில் இருந்து ஒன்றிய அரசு, 15 வயதிலிருந்து 18 வயது வரையிலான சிறார்களுக்கு தடுப்பூசித் திட்டத்தை

செயல்படுத்த அறிவித்திருக்கிறார்கள். தமிழ்நாடு அரசு அந்த திட்டத்தையும் முழுமையாக செயல்படுத்தும். உங்கள் வீட்டில் அந்த வயதில் சிறார்கள் இருந்தால், மறக்காமல் தடுப்பூசி முகாமிற்கு அழைத்துச் சென்று ஊசி போட்டுக்கொண்டு வாருங்கள். தடுப்பூசி முழுமையாக போட்டிருந்தால், ஒமைக்ரான் நோய்த் தொற்று ஏற்பட்டாலும், அதனுடைய தாக்கம் மிக மிகக் குறைவாகத்தான் இருக்கும் என்று மருத்துவ வல்லுநர்கள் சொல்கிறார்கள். அதனால் இதுவரையில் தடுப்பூசி போடாதவர்கள் உடனே கண்டிப்பாக போட்டுக்கொள்ளுங்கள். தமிழ்நாட்டு மக்கள் ஒவ்வொருவருடைய உடல் நலனும் உங்களுடைய முதலமைச்சரான எனக்கு மிகவும் முக்கியம். அதற்காகத்தான் சில கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு தமிழ்நாட்டு மக்களான நீங்கள் நிச்சயமாக ஒத்துழைப்பு தருவீர்கள் என்று எதிர்பார்க்கிறேன். அரசு அறிவித்திருக்கிற வழிகாட்டு நெறிமுறைகளை தவறாமல் பின்பற்ற வேண்டும் என்று உங்களுடைய முதலமைச்சராக மட்டுமல்ல, உங்களுடைய அன்பு சகோதரனாகவும், உங்களில் ஒருவனாகவும், மிகுந்த பணிவோடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

மீண்டும் ஒருமுறை புத்தாண்டு வாழ்த்துக்களை சொல்லிக் கொள்வதுடன், புத்தாண்டில் மகிழ்ச்சியாக இருப்பதைப்போலவே நீங்கள் எல்லோரும் பாதுகாப்பாகவும் இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள்,*
புத்தாண்டை முன்னிட்டு நாட்டு மக்களுக்கு காணொலி வாயிலாக
ஆற்றிய உரை – ***01.01.2022***

தடுப்பூசி போட்டுக்கொள்வோம்
புதிய வைரஸ் தாக்கத்தை
தடுத்து நிறுத்துவோம்

15 முதல் 18 வயது வரை இருக்கக்கூடிய மாணவ, மாணவிகளுக்கு கொரோனா தடுப்பூசி சிறப்பு முகாம் தொடக்க விழா நிகழ்ச்சியில் திட்ட விளக்கவுரை ஆற்றி அமர்ந்திருக்கக்கூடிய மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்களே!

மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி அவர்களே!

துவக்கத்தில் அனைவரையும் வரவேற்று மகிழ்ந்திருக்கக்கூடிய மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு.அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்களே!

சட்டமன்ற உறுப்பினர்கள்

திரு.கணபதி அவர்களே!

திரு.பிரபாகர ராஜா அவர்களே!

நிறைவாக நன்றியுரை ஆற்றவிருக்கக்கூடிய மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு முதன்மைச் செயலாளர் மருத்துவர் ஜெ.ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., அவர்களே!

சென்னை மாநகராட்சி ஆணையர் திரு.ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப., அவர்களே!

சென்னை மாநகராட்சி துணை ஆணையர்கள்

டாக்டர் மனிஷ் ஷங்கர்ராவ், இ.ஆ.ப., அவர்களே!

திருமதி சினேகா, இ.ஆ.ப., அவர்களே!

பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்து இயக்குநர் டாக்டர் செல்வவிநாயகம் அவர்களே!

பள்ளிக் கல்வித்துறை மற்றும் மருத்துவத்துறையைச் சார்ந்திருக்கக்கூடிய அரசு அதிகாரிகளே!

அரசு அலுவலர்களே!

என்னுடைய பாசத்திற்குரிய மாணவச் செல்வங்களே!

பத்திரிகை மற்றும் ஊடக தொலைக்காட்சி நண்பர்களே!

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

கொரோனா இரண்டாம் அலையை நமது அரசு எப்படி தீவிர நடவடிக்கைகளை எல்லாம் எடுத்து, அதனுடைய வீரியத்தைக் குறைத்து, மக்களுக்கு ஏற்படக்கூடிய பாதிப்பையும் குறைத்து, அந்தத் தொற்றின் தாக்கத்திலிருந்து, மக்களுடைய வாழ்வாதாரம் ஓரளவுக்கு பாதுகாக்கப்பட்டு வந்தது என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். மாநிலத்தின் பொருளாதாரமும் மீட்சிப் பாதையில் மீண்டும் நடைபோடத் தொடங்கியது. ஆகவே, ஒரு பெருமூச்சு விட்டுக்கொண்டிருந்தோம். ஆனால், இப்போது "ஒமைக்ரான்"

என்ற புதிய தொற்று நோய் புதிய அச்சுறுத்தலோடு நம்மை மிரட்டத் தொடங்கியிருக்கிறது.

நான் உங்களிடம் ஒரு செய்தியை நினைவுபடுத்த விரும்புகிறேன். நேற்று காலையில் இரண்டு பிரபலமான ஆங்கிலப் பத்திரிகைகளில் செய்தியைப் படித்திருப்பீர்கள். அதை ஒரு முக்கியச் செய்தியாக நாம் எடுத்துக்கொள்ள வேண்டும். அதில் குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால்,

தி இந்து ஆங்கிலப் பத்திரிக்கையில் “Recovery with headwinds” எனத் தலைப்பு செய்தியாக, ஒரு முழுப்பக்க கட்டுரையை வெளியிட்டிருந்தது. அதில் என்ன செய்தியை சொல்லியிருந்தார்கள் என்றால், ‘‘இரண்டு கொரோனா அலைகளைச் சாமாளித்தும், தமிழ்நாட்டில் தொழிற்சாலைகள் மீட்சிப் பாதையில் இருந்து முன்னேறி ஒரு நல்ல நிலைக்கு வரத் தொடங்கியது. ஆனால் ஒமைக்ரான் என்கிற தொற்றின் தாக்கம் அதிகரித்த காரணத்தால், வெற்றியை நோக்கி போய்க்கொண்டிருந்த நம்முடைய பயணம், மீட்சிப் பணியிலிருந்து மீண்டு போய்க்கொண்டிருந்த அந்தப் பயணத்திற்கு சிறிது தடை ஏற்படும்’’ என்ற சூழ்நிலை இப்போது வந்திருக்கிறது.

அதேபோலத்தான் ‘‘டைம்ஸ் ஆப் இந்தியா’’ ஆங்கில நாளிதழில் ஒரு செய்தி வந்திருக்கிறது. அந்தச் செய்தியில், ‘‘தமிழ்நாட்டில் கொரோனா தொற்றுக்கு உள்ளானோரின் எண்ணிக்கையில் 46 விழுக்காடு பேர் சென்னையில் இருக்கிறார்கள். அந்த அளவிற்கு சென்னையில் நாளுக்கு நாள் கொரோனா தொற்று அதிகரித்துக் கொண்டே போய்க்கொண்டிருக்கிறது’’ என்கிறது அந்தச் செய்தியை அந்த ஆங்கிலப் பத்திரிகையில் வெளியிட்டிருக்கிறார்கள்.

இந்த இரு செய்திகளையும் நான் குறிப்பிட்டுச் சொல்வதற்கு என்ன காரணம் என்றால், உங்களை பயமுறுத்துவதற்காக அல்ல. உங்களையெல்லாம் அச்சுறுத்த வேண்டும் என்பதற்காக

சொல்லவில்லை. நீங்கள் அனைவரும் பாதுகாப்புடன் இருக்க வேண்டும். அதுதான் என்னுடைய மனதிற்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தும் என்கிற நம்பிக்கையை நான் உங்களிடத்தில் சொல்ல விரும்புகிறேன். உங்களின் சுய பாதுகாப்பில் நீங்கள் அதிகம் கவனத்தைச் செலுத்த வேண்டும், மிகவும் கவனமாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் நான் இதை குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறேன்.

ஜனவரி 1ஆம் நாள் மக்களுக்கு ஆங்கிலப் புத்தாண்டு வாழ்த்துக்களை சொல்ல வேண்டும் என்பதற்காக நானே பேசி, அதை பதிவு செய்து, எல்லா தொலைக்காட்சிகளிலும் வெளியிடப்பட்டிருக்கிறது, சமூக வலைத்தளங்களிலும் அது தொடர்ந்து வந்துகொண்டிருக்கிறது, அதை பார்த்தவர்களுக்குத் தெரிந்திருக்கும். நான் புத்தாண்டு வாழ்த்துக்களை மட்டும் சொல்லவில்லை, அதில் ஒரு வேண்டுகோளையும் எடுத்து வைத்திருக்கிறேன். ஒமைக்ரான் தொற்றிலிருந்து நம்மைப் பாதுகாத்துக்கொள்ள விழிப்புணர்வுடன் இருக்க வேண்டியதன் அவசியத்தையும் நான் அதில் வலியுறுத்திச் சொல்லியிருக்கிறேன். அதன் தொடர்ச்சியாகத்தான், இன்றைய நாள், மூன்று முக்கியச் செய்திகளை உங்களுக்கு நான் சொல்லப் போகிறேன்.

ஒன்று, ஓமைக்ரான் வைரஸ் டெல்டா வைரஸிலிருந்து உருமாறி இருந்தாலும், முந்தைய வைரசைவிட இந்த புதிய வைரஸின் நோய்தாக்கத் தன்மை குறைவு என்று மருத்துவர்கள் தெரிவிக்கிறார்கள். அது ஒரு ஆறுதல் அளிக்கக்கூடிய செய்திதான். ஆனால், முந்தைய வைரஸை விட பல மடங்கு வேகமாக பரவக் கூடியது இந்த ஒமைக்ரான் என்ற தொற்று. அதனால்தான், இதில் நாம் கவனமாக இருக்க வேண்டும் என்று எச்சரிக்கையாக உங்களுக்கு சொல்ல விரும்புகிறேன். ஏனென்றால், இதில் பரவல் வேகம் அதிகம், நோயின் தாக்கம் தமிழகத்தில் நிச்சயமாக அதிகரிக்கக்கூடும். ஆனால், இதைத் தடுப்பதற்காக நமக்கு முன்னால் இருக்கக்கூடிய

கேடயம் என்னவென்றால், முகக்கவசம் தான். இதுதான் அதைத் தடுக்கிற ஒரு முக்கியமான கேடயமாக இருக்கிறது.

கட்டாயம் முகக்கவசத்தை அணிய வேண்டும். குறிப்பாக, பொது இடங்களில் நீங்கள் செல்கின்றபோது, கூட்டம் இருக்கும் இடங்களுக்குச் செல்லும்போது, நிச்சயமாக இந்த முகக்கவசத்தை அணிந்தே தீர வேண்டும். அதுமட்டுமல்லாமல் சமூக இடைவெளியை கடைப்பிடித்தாக வேண்டும். அதுதான் என்னுடைய முக்கியச் செய்தியாக நான் வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுச் சொல்லியிருந்தேன்.

அடுத்து, ஒமைக்ரான் வைரஸ் உருமாறி இருந்தாலும், நம் நாட்டில் செலுத்தப்படும் தடுப்பூசிகள் நல்ல நோய்த் தடுப்பை தொடர்ந்து அளித்து வருகிறது. தடுப்பூசியால் கிடைக்கும் நோய் எதிர்ப்பு சக்தியால் புதிய வைரஸ் தாக்கினால்கூட, அந்த நோயின் தாக்கம் குறைவாகத்தான் இருக்கும். அதோடு, தடுப்பூசி செலுத்திக் கொண்டவர்களில் இறப்பு விகிதமும் மிக மிக குறைவு என்பதைத்தான் மருத்துவர்கள் கூறி வருகிறார்கள். ஆகவே, நோய் எதிர்ப்பு சக்தியைக் கொடுக்கும், உயிர் காக்கும் தடுப்பூசியை ஒவ்வொருவரும் போட்டுக்கொள்ள வேண்டும்.

அமெரிக்காவில் தினமும் 5 இலட்சம் பேர் ஒமைக்ரான் என்ற தொற்று நோயால் பாதிக்கப்படுகிறார்கள். ஐரோப்பா போன்ற வளர்ச்சி அடைந்திருக்கக்கூடிய நாடுகளிலேயே புதிய வைரஸின் தாக்கம் அதிகமாக இருக்கின்றது.

இந்தியாவில் அந்த அளவிற்கு இல்லை என்றாலும், இப்போது நோய்த் தொற்று கொஞ்சம், கொஞ்சமாக அதிகரித்துக் கொண்டு வருகிறது. நம் அண்டை மாநிலங்களான, கேரளாவிலும் தொற்று அதிகரித்து வருகிறது.

மஹாராஷ்டிராவில் 10 அமைச்சர்கள், 20 சட்டமன்ற உறுப்பினர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று தாக்கப்பட்டு,

அவர்கள் சிகிச்சையில் இருக்கிறார்கள் என்ற செய்தியும் வந்துகொண்டிருக்கிறது. ஆகவே, தமிழ்நாட்டிலும் தொற்று அதிகரிக்கும் சூழலில், தடுப்பூசி போட்டுக்கொள்ளாத அனைவரும் தவறாமல் தடுப்பூசி போட்டுக்கொள்ள வேண்டும். ஆகவேதான், நமது அரசு தடுப்பூசி செலுத்திக் கொள்வதை ஒரு இயக்கமாக மாற்றியிருக்கிறது. ஆகவே மக்களாகிய நீங்கள் அந்த இயக்கத்தில் இணைந்து, கட்டாயம் தடுப்பூசி போட்டுக்கொள்ள வேண்டும். இது எனது இரண்டாவது செய்தி.

இன்னும் குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் இன்னும் இரண்டு டோஸ் தடுப்பூசியும் போட்டுக் கொள்ளாதவர்கள் கட்டாயம் தடுப்பூசி போட்டுக் கொள்ள வேண்டும். நிச்சயம் இரண்டு டோஸ் தடுப்பூசியும் போட வேண்டும் என்று நான் உங்களை அன்புடன், பணிவோடு, உரிமையோடு, உங்கள் வீட்டுப் பிள்ளையாக, உங்களில் ஒருவனாக கெஞ்சி, மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன். இது நான் விடுக்கக்கூடிய மூன்றாவது செய்தி.

ஆகவே, முதலமைச்சர் என்கிற முறையில் மட்டுமின்றி, உங்களின் குடும்பத்தில் ஒருவராக இருந்து உங்களை அன்போடு மீண்டும், மீண்டும் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பொது இடங்களில் நிச்சயமாக, உறுதியாக முகக் கவசம் அணிய வேண்டும். சமூக இடைவெளியை கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டும். இரண்டு டோஸ் தடுப்பூசியை அனைவரும் போட்டுக் கொள்ளுங்கள். அரசு அறிவித்துள்ள புதிய கட்டுப்பாடுகளை முறையாக கடைப்பிடியுங்கள். நம் அரசின் கொரோனா தடுப்பு நடவடிக்கைகளுக்கு முழு ஒத்துழைப்பு நீங்கள் தரவேண்டும்.

தடுப்பூசி போட்டுக் கொள்வோம், புதிய வைரஸ் தாக்கத்தை தடுத்து நிறுத்துவோம் என்ற உறுதியை நீங்கள் இந்த நிகழ்ச்சியில்

எடுத்துக்கொள்ள வேண்டும் என்று மீண்டும் ஒருமுறை கேட்டுக்கொள்கிறேன்.

எல்லாவற்றிலும் முதல் இடம் என்று மாண்புமிகு அமைச்சர் திரு.சுப்பிரமணியன் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, வரக்கூடிய காலக்கட்டத்தில் இந்த தொற்று நோயிலிருந்து விடுபட்டிருக்கக்கூடிய மாநிலம் நம்முடைய தமிழ்நாடு என்ற பெயரை நாம் எடுத்தாக வேண்டும். அதற்கு உங்களுடைய ஒத்துழைப்பு நிச்சயமாக தேவைப்படும். அரசு நினைத்தால் அது வெற்றி பெற வைத்துவிட முடியாது. அரசோடு, பொதுமக்களாக இருக்கக்கூடிய நீங்களும் ஒத்துழைப்பு தரவேண்டும். ஒரு கையால் தட்டமுடியாது, இரண்டு கைகளால் தான் தட்டமுடியும். ஆகவே, நீங்களும் ஒத்துழைப்பு தரவேண்டும் என்று அன்போடு கேட்டு, வாய்ப்புக்கு நன்றி சொல்லி விடைபெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள்,*
சென்னை, சைதாப்பேட்டை, சென்னை பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் 15 முதல் 18 வயதுள்ள மாணவ, மாணவிகளுக்கு கொரோனா தடுப்பூசி சிறப்பு முகாமை தொடங்கிவைத்து ஆற்றிய உரை – 03.01.2022

நீட் தேர்வுக்கு முற்றுப்புள்ளி வைத்து மாணவர்களின் நலனைக் காப்பாற்றிட வேண்டும்

அனைவருக்கும் அன்பான வணக்கம்.

நீட் தேர்வு தொடர்பாக அவசரமாகக் கூட்டப்பட்டுள்ள இந்தக் கூட்டத்தில் பங்கேற்றுள்ள சட்டமன்ற அனைத்துக் கட்சித் தலைவர்கள் அனைவருக்கும் நான் முதலில் நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன், அதே நேரத்தில் என் வணக்கத்தையும் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நீட் தேர்வு கூடாது என்பதில் நாம் அனைவரும் ஒரு கருத்து கொண்டவர்கள்தான். நமக்குள் அதில் மாறுபாடும் வேறுபாடும் இல்லை. அந்த ஒற்றுமையைக் காட்டுவதற்காக இன்று நாம் அனைவரும் இங்கே கூடியிருக்கிறோம்.

இது தமிழ்நாட்டின் பிரச்சினை, தமிழக மாணவர்களின் பிரச்சினை, ஆகவே இதில் நாம் அனைவரும் ஒற்றுமையாக இருக்கிறோம் என்ற கருத்துருவாக்கம் மிகவும் தேவைப்படுகிறது. கல்வி நீரோடையானது அனைவருக்கும் பொதுவானது. அதனால் பயன்பெற அனைவருக்கும் உரிமை உண்டு.

இந்தியா போன்ற ஏழை, எளிய விளிம்புநிலை மக்கள் வாழும் நாட்டில், வறுமை சூழ்ந்த நாட்டில், சாதியின் பெயரால் சமத்துவமற்ற தன்மை இருக்கும் நாட்டில் இத்தகைய கல்வியை அனைவரும் அடைவது என்பதே மிகப்பெரிய, சிரமமான காரியமாக இருக்கிறது. அதனால்தான் தமிழ்நாட்டில் இருந்த நுழைவுத் தேர்வு ரத்து செய்யப்பட்டது. அந்த ரத்து குடியரசுத் தலைவரின் ஒப்புதலையும் பெற்றது, ஏன் உச்சநீதிமன்றத்தின் அங்கீகாரத்தையும் பெற்றது என்பதை இந்தக் கூட்டத்தில், இந்த மன்றத்தில் நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அப்படிப் பெற்ற அந்த கல்வி உரிமையை இந்த நீட் தேர்வு பறிக்கிறது. தமிழக மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்குத் தடை போடும் நீட் தேர்வை நாம் அனைவரும் தொடர்ந்து எதிர்த்து வருகிறோம்.

பன்னிரண்டாம் வகுப்பு வரை கற்ற கல்வியை விட மேலானதாக நீட் என்ற இரண்டு மணிநேரத் தேர்வு அமைவதை எப்படி நாம் ஏற்றுக்கொள்ள முடியும்? இது சமூக அநீதி அல்லவா? இலட்சக்கணக்கில் பணம் செலுத்தி எத்தனைப் பேர் நீட் தேர்வு எழுத பயிற்சி பெற முடியும்?

அதனால்தான் தி.மு.க. ஆட்சிப் பொறுப்பேற்றதும், முதலில் இந்தியப் பிரதமர் அவர்களை **17.06.2021** அன்று நேரில் சந்தித்து, நீட் தேர்விலிருந்து தமிழ்நாட்டிற்கு விலக்கு அளிக்க வேண்டும் என நான் கோரிக்கை வைத்தேன். நம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எல்லாம் மக்களவையிலும், மாநிலங்களவையிலும் வலியுறுத்தியிருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட நிலையில்தான், நீட் தேர்விலிருந்து தமிழ்நாட்டிற்கு விலக்கு அளிக்கும் சட்டமுன்வடிவை **13.09.2021** அன்று நம் சட்டமன்றத்தில் ஒருமனதாக நிறைவேற்றினோம். அப்படி நிறைவேற்றப்பட்ட சட்டமுன்வடிவைக் குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காக மாநில ஆளுநருக்கு அனுப்பி வைத்தோம். ஆனால், அந்த சட்டமுன்வடிவைக் குடியரசுத் தலைவருக்கு அனுப்பாமல் வைத்திருக்கிறார் மாநில ஆளுநர் அவர்கள்.

ஒரு சட்டமன்றம், தனக்கு இருக்கும் சட்டம் இயற்றும் அதிகாரத்தின்கீழ் ஒரு சட்டத்தை நிறைவேற்றும்போது, அதை ஆளுநர் அவர்கள் மதித்து ஒப்புதல் அளிப்பதுதான் மக்களாட்சியின் தத்துவம். ஆகவே, நான் நேரில் சென்று ஆளுநர் அவர்களை வலியுறுத்தியும் குடியரசுத் தலைவருக்கு அவர் அனுப்பவில்லை. மாநில உரிமையும், சட்டமன்றத்தின் சட்டம் இயற்றும் அதிகாரமும் கேள்விக்குறியாக்கப்படும் சூழ்நிலை உருவானதால்தான், அவசரமாக, ஏன் அவசியத்துடன் இந்த அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டியிருக்கிறோம்.

இங்கே மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள், ஒரு வரைவு தீர்மானத்தை உங்களிடத்தில் எடுத்துரைப்பார்கள்.

நம் அனைவரின் இலக்கும் நீட் தேர்வுக்கு முற்றுப்புள்ளி வைத்தாக வேண்டும் என்பதுதான். தமிழ்நாட்டு மாணவர்களின் நலனைக் காப்பாற்றிட வேண்டும் என்பதுதான். ஆகவே இந்த வரைவுத் தீர்மானத்தின்மீது தங்களின் ஆக்கப்பூர்வமான ஆலோசனைகளை வழங்குமாறு உங்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொண்டு என்னுடைய துவக்கவுரையை இந்த அளவில் நிறைவு செய்கிறேன்.

நன்றி வணக்கம்!

தீர்மானம்

மருத்துவத் துறையில் தமிழ்நாடு இந்த நாட்டிற்கே முன்னோடியாக விளங்கி வருகின்றது. ஆனால் ஒன்றிய அரசு கொண்டுவந்த நீட் தேர்வு திருத்தச் சட்டம் மற்றும் அதன்பிறகு கொண்டுவரப்பட்ட தேசிய மருத்துவ ஆணையச் சட்டம் ஆகியன மருத்துவ மாணவர் சேர்க்கையில் நீட் தேர்வை முன்நிறுத்தி நமது மாணவர்களை பெருமளவில் பாதித்துள்ளது. மாநில அரசு நிதியிலிருந்து, மாநில அரசுகளால் தொடங்கி நடத்தப்பட்டுவரும் மருத்துவக் கல்லூரிகளில் அம்மாநில மாணவர்கள் எந்த முறையில் சேர்க்கப்பட வேண்டும் என்பது குறித்து முடிவு செய்யும் உரிமையை மாநில அரசிடமிருந்து ஒன்றிய அரசு பறித்து விட்டது. இது மாநில சுயாட்சிக்கு எதிரானது.

இதுமட்டுமின்றி, ஒன்றிய அரசினால் மாநில அரசுகளின் மீது திணிக்கப்பட்டுள்ள நீட் தேர்வானது, இதுபோன்ற நுழைவுத் தேர்வுக்கான சிறப்புப் பயிற்சிகளைப் பெறுவதற்கு வசதி வாய்ப்புகள் உள்ள மாணவர்களுக்கு மட்டுமே சாதகமாகவும், மருத்துவர் மாணவர் சேர்க்கையில் **12** ஆண்டுகள் படிக்கக்கூடிய பள்ளிக்கல்வியால் எவ்விதப் பயனும் இல்லை என்ற நிலையை உருவாக்கிப் பள்ளிக்கல்வி அமைப்பையே அர்த்தமற்றதாக்கும் இந்த நீட் தேர்வை மாணவர்களின் கல்விக் கனவை சிதைப்பதாக மட்டுமின்றி, அரசியலமைப்புச் சட்டம் வழங்கியுள்ள கூட்டாட்சி தத்துவத்தை சீரழிப்பதாகவும் அமைந்து விட்டது. ஆகவே மாநில உரிமைகளை நிலைநாட்டிடவும், நம் மாணவர்களின் மருத்துவக் கனவை நிறைவேற்றிடவும் தமிழ்நாடு சட்டமன்றத்தில் **13.09.2021** அன்று ஒருமனதாக ஒரு சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட்டு, மாண்புமிகு குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காக மாநில ஆளுநர் அவர்களுக்கு அனுப்பப்பட்டது. ஆனால் இந்த சட்டமுன்வடிவினை

மாநில ஆளுநர் குடியரசு தலைவருக்கு அனுப்பாமல் இருப்பது சட்டமன்றத்தின் இறையாண்மைக்கு ஏற்றதல்ல என்று கருதப்படுகிறது.

தமிழக மாணவர்களின் கல்வி மற்றும் எதிர்கால நலன் கருதி மாண்புமிகு முதல்வர் அவர்களே நேரில் சென்று ஆளுநரைச் சந்தித்து நீட் சட்டமுன்வடிவை மாண்புமிகு குடியரசுத் தலைவர் அவர்களின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கவேண்டும் என வலியுறுத்தி கேட்டுக்கொண்டார்கள். மேலும் இது தொடர்பாக, கடந்த 28.12.2021 அன்று தமிழ்நாட்டில் உள்ள அனைத்துக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும், மாண்புமிகு குடியரசுத் தலைவர் அவர்கள் அலுவலகத்தில் சந்திக்கச் சென்ற நேரத்தில், அவரை சந்திக்க இயலவில்லை என்பதால், மனுவினை அவரது அலுவலகத்தில் அளித்து, அன்று மாலையே அம்மனுவும் ஒன்றிய உள்துறை அமைச்சகத்திற்கு அனுப்பப்பட்டதாக நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் இதுகுறித்து மேலும் வலியுறுத்திட, ஒன்றிய மாண்புமிகு உள்துறை அமைச்சர் அவர்களைச் சந்திக்க நேரம்கோரி, பல நாட்கள் ஆகியும் சந்திக்க மறுத்து விட்டதால், அவரிடம் கொடுக்கப்பட வேண்டிய மனுவும் அவரது அலுவலகத்திலேயே கொடுக்கப்பட்டது. தமிழ்நாடு நாடாளுமன்ற உறுப்பினர்களை சந்திக்க ஒன்றிய உள்துறை அமைச்சர் மறுத்தது மக்களாட்சி மாண்புகளுக்கு எதிரானது என்று 06.01.2022 அன்று, தமிழக சட்டமன்றத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்து, இன்றைக்கு இந்த அனைத்துக் கட்சிக் கூட்டத்திலும் விரிவான ஆலோசனை நடத்தப்பட்டுள்ளது. மாண்புமிகு ஒன்றிய உள்துறை அமைச்சர் அவர்களிடம் நாம் ஏற்கெனவே அளித்த கோரிக்கையை பரிசீலிக்க அவரிடமிருந்து அழைப்பு வரப்பெற்றால் அனைத்து

கட்சிகளின் சார்பில் அவரை சந்திக்கலாம் எனவும் இந்தக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.

நாமும் நமது மாநிலமும் இன்று அடைந்துள்ள இந்த வளர்ச்சியை சமூக நீதிக்கான அரசியல், சட்ட மற்றும் மக்கள் போராட்டங்களின் மூலமே பெற்றுள்ளோம் என்ற அடிப்படையில் ஏழை, எளிய, கிராமப்புற மாணவர்களின் உயர்கல்வி கனவுகளை சிதைத்திடும், மாநில சுயாட்சித் தத்துவத்தை சீர்குலைத்திடும் நீட் தேர்வு முறையை முழுமையாக நீக்கிடத் தேவையான சட்டரீதியான நடவடிக்கைகளை மூத்த சட்ட வல்லுநர்களை கலந்தாலோசித்த பின், தமிழ்நாடு சட்டமன்றத்தில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து மேற்கொள்வது எனவும், நீட் தேர்வின் பாதகங்களை நாட்டின் மற்ற மாநிலங்களும் உணரும் வகையில் ஒருமித்த கருத்தை உருவாக்க தேவையான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வது எனவும் தீர்மானிக்கப்படுகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள், தலைமைச் செயலகத்தில்,*
நடைபெற்ற நீட் தேர்வு முறையை முழுமையாக நீக்கிட சட்டப்
போராட்டத்தினை ஒன்றிணைந்து மேற்கொள்வதென அனைத்து
சட்டமன்றக் கட்சித் தலைவர்களுடனான ஆலோசனைக் கூட்டத்தில்
ஆற்றிய உரை – ***08.01.2022***

எண்ணங்களே ஏற்றத்தை உருவாக்குகின்றன மனிதர்களே மாற்றத்தை உருவாக்குகிறார்கள்

இஸ்பாகான் அமைப்பின் விழாவில் எனக்கு முன்னால் உரையாற்றி அமர்ந்திருக்கும் மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்களே!

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை செயலாளர் திரு.அருண்ராய் அவர்களே!

தொழில் ஆணையர், தொழில் வணிக இயக்குநர் திருமதி சிஜி தாமஸ் வைத்யன் அவர்களே!

இஸ்பாகான் அமைப்பின் தலைவர் டாக்டர் கே. சுரேஷ்குமார் அவர்களே!

ஒன்றிய அரசின் தொழில் மற்றும் உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுத் துறையின் புத்தொழில் ஆரம்ப நிலை நிதி குழு தலைவர் டாக்டர் எச்.கே.மிட்டல் அவர்களே!

நிறைவாக நன்றி நல்கவிருக்கக்கூடிய டாக்டர் ஏ. பாலச்சந்திரன் அவர்களே!

அரசு உயர் அதிகாரிகளே! தமிழ்நாடு மற்றும் இந்தியாவின் பல பகுதிகளிலிருந்து பங்கேற்க வந்துள்ள தொழில் காப்பகத்தின் நிருவாகிகளே!

தொழிலதிபர்களே!

தொழில்முனைவோர்களே!

பத்திரிகை மற்றும் தொலைக்காட்சி ஊடகங்களைச் சார்ந்த செய்தியாளர்களே!

உங்கள் அனைவருக்கும் எனது அன்பான வணக்கம்!

இந்திய அளவிலான புதுயுக தொழில் முனைவுக் காப்பகங்களின் கூட்டமைப்பின் பொறுப்பாளர்களுக்கு முதலில் நான் நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த இஸ்பாகான் **2022** (ISBACON-2022) ஆண்டு விழா, இந்த ஆண்டு தமிழ்நாட்டின் தலைநகர் சென்னையில் நடப்பது உள்ளபடியே மகிழ்ச்சி அளிக்கிறது. தமிழகம் வந்துள்ள உங்கள் அனைவரையும் தமிழ்நாட்டின் முதலமைச்சர் என்ற முறையில் வருக, வருக என்று நான் வரவேற்கிறேன்.

ஆண்டு விழாவைத் தொடங்கிவைக்க என்னை அழைத்திருக்கும் பொறுப்பாளர்களுக்கு முதலில் என் நன்றியை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதே நேரத்தில், உங்கள்

அனைவருக்கும் எனது புத்தாண்டு வாழ்த்துக்களையும் இங்கே நான் தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னுடைய உரையை தொடங்குவதற்கு முன்பு, என் மனதில் பட்ட ஒரு உணர்வை உங்களிடத்தில் வெளிப்படுத்த நான் விரும்புகிறேன். நிச்சயமாக, எந்த எண்ணத்தோடு இந்த மாநாட்டை நீங்கள் நடத்திக் கொண்டிருக்கிறீர்களோ, அந்த எண்ணம் நிச்சயமாக நிறைவேற்றப்படும், நிறைவேறும், அதில் எனக்கு எந்த சந்தேகமும் ஏற்படவில்லை. அதற்கு ஒரு உதாரணத்தை நான் சொல்ல வேண்டுமென்றால், எப்போதும் ஒரு அரசு நிகழ்ச்சியாக இருந்தாலும், ஒரு பொது நிகழ்ச்சியாக இருந்தாலும், கட்சி நிகழ்ச்சியாக இருந்தாலும், ஒரு நேரத்தை குறிப்பிடுவார்கள். ஒன்று, இரண்டுக்கு விதிவிலக்கு, ஆனால், பெரும்பாலும் ஒரு அரைமணிநேரம், ஒரு மணி நேரம் தாமதமாகத்தான் தொடங்கும். ஆனால், இந்த நிகழ்ச்சி 10 மணிக்கு தொடங்கும் என்று நிகழ்ச்சி நிரலில் போடப்பட்டிருக்கிறது. ஆனால் 10 நிமிடத்திற்கு முன்பே இந்த நிகழ்ச்சி தொடங்கிவிட்டது. இதிலிருந்து என்ன தெரிகிறது என்றால், நீங்கள் நிறைவேற்ற இருக்கக்கூடிய, வெற்றிப்பெற இருக்கக்கூடிய நிலையைப் பொறுத்தவரை, முன்கூட்டியே அது கிடைக்கும் என்ற நம்பிக்கை எனக்கு வந்திருக்கிறது.

இந்த நிகழ்ச்சியில் கீழ்க்கண்ட மூன்று செயல்திட்டப் பரிந்துரை அறிக்கைகள் வெளியிடப்பட்டிருக்கிறது:

1. தமிழ்நாட்டிற்கான தொழில் காப்பகங்கள் மேம்பாட்டுக்கான செயல்திட்டங்கள்.
2. சவால் மிகுந்த புதிய சூழலில் தொழில் காப்பகங்களுக்கான பரவலாக்கப்பட்ட செயலாக்க மாதிரிகள்.
3. பெரு நிறுவனங்களின் சமூகப் பொறுப்புக் கொள்கைகளில் புத்தொழில் உருவாக்கம் மற்றும் தொழில் காப்பகங்களை இணைத்தல்.

இவை வெறும் அறிக்கைகளாக மட்டும் இருந்துவிடாமல் குறிப்பிடத்தக்க பலன்களை நடைமுறையில் உருவாக்க வேண்டும் என்று நான் வாழ்த்துகிறேன்.

மேலும், இந்திய அளவில் தொழில் காப்பகங்களின் வெற்றிக்கு நீண்டகாலமாக பெரும் பங்காற்றி வருவதற்காக இங்கே கௌரவிக்கப்பட்ட திரு.H.K.மிட்டல் அவர்கள், திரு.R.M.P.ஜவஹர் அவர்கள் மற்றும் திரு.K.சுரேஷ்குமார் அவர்களுக்கு துணை நிற்கும் அனைவருக்கும் நான் இந்த நேரத்தில் எனது நன்றியையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

உங்களது ஆண்டுவிழாவில் பங்கேற்பதன் மூலமாக தமிழ்நாடு அரசின் எண்ணங்களை உங்களோடு பகிர்ந்துகொள்வதற்கு இது நல்லதொரு வாய்ப்பாக நான் கருதிக்கொண்டிருக்கிறேன்.

தமிழ்நாடு என்பது கல்வியிலும், பொருளாதாரத்திலும், தொழில் வளர்ச்சியிலும், பண்பாட்டிலும், மேன்மை அடைந்த ஒரு மாநிலம்! இதில் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டியது இளைஞர்களின் அறிவு சக்தி ஆகும். தமிழ்நாட்டில் அறிவு சக்தி நிரம்பிய ஏராளமான இளைஞர்கள் இருக்கிறார்கள். அத்தகைய இளைய அறிவு சக்தியை உருவாக்கக்கூடிய அறிவுசார் கல்வி நிறுவனங்களும் இங்குதான் அதிகம்.

- ✶ இந்தியாவில் இருக்கும் மிகமுக்கியமான 100 கல்வி நிறுவனங்களில் 30க்கும் மேற்பட்டவை தமிழ்நாட்டைச் சார்ந்தவை என்று அண்மைக்கால புள்ளிவிவரங்கள் குறிப்பிட்டுக் காட்டுகின்றது.
- ✶ தமிழ்நாடு தொழில்நுட்பங்கள் மற்றும் தொழில்முனைவின் அடிப்படைகளில் தேவையான தகுதிகளுடன் முன்னிலையில் உள்ள மாநிலம்.

- ✶ இந்த வரிசையில் புத்தாக்க மற்றும் புத்தொழில் முயற்சிகளிலும் கடந்த சில ஆண்டுகளாக நிலவிய தொய்வு நிலையை மாற்றி, மிக விரைவில் தமிழ்நாட்டினை உலகின் முன்னணி புத்தொழில் தளமாக மாற்றும் பணிகளை முடுக்கிவிடும் நோக்கில் நாங்கள் செயல்பட்டு வருகிறோம்.

- ✶ TANSIM எனப்படும் தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கம் மூலமாக பல்வேறு ஆக்கப்பூர்வமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த இயக்கம் மூலமாக இதுவரை **29** புத்தொழில் நிறுவனங்களுக்கு ஊக்க உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது. எதிர்வரும் ஆண்டுகளில் இந்த எண்ணிக்கை பன்மடங்காக உயர்த்தப்படும் என்ற உறுதியினை உங்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். உங்களைப்போன்ற புத்தொழில் காப்பகங்கள் மூலமாகவே இத்தகைய திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. தமிழ்நாட்டில் இயங்கும் புத்தொழில் காப்பகங்களை உலகத்தரத்துக்கு மேம்படுத்தவும் மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களிலும் தேவையான அளவுக்கு இத்தகைய புத்தொழில் காப்பகங்கள் மற்றும் புத்தொழில் பூங்காக்களையும் உருவாக்குவதற்குமான செயல்திட்டங்கள் வகுக்கப்படுகின்றன.

- ✶ தமிழ்நாட்டில் கடந்த ஆண்டில் மட்டுமே ஏறத்தாழ **1.8** பில்லியன் அமெரிக்க டாலர்கள் **60** நிறுவனங்களில் முதலீடு செய்யப்பட்டுள்ளது.

- ✶ அதேபோல் விண்வெளித்துறை, மின் வாகனங்கள் உள்ளிட்ட பல்வேறு துறைகள் சார்ந்த நிறுவனங்களையும் இங்கு உருவாக்கி உங்கள் கவனத்தை ஈர்க்கவும் திட்டமிட்டுள்ளோம்.

- ✶ உயர் வருவாய் உள்ள தனிநபர் முதலீட்டாளர்கள் சென்னையில் மட்டுமல்லாது, மாநிலத்தின் இரண்டாம்

மூன்றாம் கட்ட நகரங்களிலும் தன்னார்வ அமைப்பாக உருவாகி சிறு நிறுவனங்களில் முதலீடு செய்வதிலும் நாம் பிற மாநிலங்களுக்கு முன்னுதாரணமாக இருந்து கொண்டிருக்கிறோம்.

✶ வரும் நாட்களில் தமிழ்நாடு புத்தொழில் முதலீட்டாளர்களின் பணத்தோட்டமாக உருவெடுக்கும் என்பதை நான் உறுதியாக தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய எண்ணங்கள், சிந்தனைகள், நோக்கங்கள், திட்டமிடுதல்கள் இப்போது இருப்பதைவிட மேலும் மேலும் விரிவடைய வேண்டும் என்பதே என்னுடைய ஆசை. கடந்த காலப் பெருமைகள், நிகழ்கால வளர்ச்சிகளை மட்டுமே சொல்லி நாம் திருப்தி அடைந்துவிடக் கூடாது. எதிர்காலத்தை நோக்கிய உலக நாடுகளின் பயணம் எப்படி அமைந்துள்ளது என்பதை இப்போதே அறிந்தும் புரிந்தும் செயல்பட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

வழக்கமான, குறிப்பிட்ட சில தொழில்களிலேயே நமது வளர்ச்சி அடங்கி இருக்கிறது. அதனை நான் குறை சொல்லவில்லை. அதே நேரத்தில் புதிய தொழில்களை நோக்கியும் நமது எண்ணங்கள் செல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

உலகெங்கும் நான்காம் தொழிற்புரட்சி தொடங்கிவிட்டது. செயற்கை நுண்ணறிவும் (Artificial Intelligence); வேறு பல புதிய உற்பத்தி முறைகளும் எல்லாத்துறைகளிலும் மாற்றங்களை நிகழ்த்திவருகின்றன.

✶ தானியங்கி வாகனங்கள்,

✶ தொலைவழி மருத்துவம்,

✶ முப்பரிமாண அச்சு,

- ✶ மரபணுப் புரட்சி,
- ✶ மெய்நிகர் நுட்பங்கள் என தொழில்நுட்பவியல் விரிந்து பரவி விட்டது.

பெருந்தொற்றுச் சூழலில், தொழில் நிறுவனங்கள் இயங்கும் முறையே மாறிப்போயிருக்கிறது. இத்தகைய சூழலில், தொழில், தொழில் நிறுவனங்கள், பொதுமக்களுக்கான சேவை ஆகியவற்றின் தன்மை மாறுகிறது. அந்த வகையில் தொழிலதிபர்கள் தங்களது சிந்தனைகளையும் கூர்மைப்படுத்தியாக வேண்டும்.

தொழில்நுட்பம்தான் உலகின் போக்கை தீர்மானிக்கும் மிக முக்கியமான சக்தியாக இருக்கிறது என்பதை '21ஆம் நூற்றாண்டுக்கான 21 பாடங்கள்' என்ற புத்தகத்தில் யுவால் நோவா ஹராரி சொல்லி இருக்கிறார். நாம் உருவாக்கி வைத்துள்ள உலகத்தை நாம் புரிந்து வைத்திருக்கிறோமா என்பதுதான் அவர் எழுப்பும் கேள்வி. இது ஏதோ தத்துவ, அரசியல் கேள்வி மட்டுமல்ல. அனைத்துத் தரப்பினரும் சிந்தித்து செயல்பட வேண்டிய கேள்வியாக அமைந்திருக்கிறது.

இத்தகைய புதிய சூழலில் இயங்க உங்களை நீங்கள் தகவமைத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இத்தகைய மாற்றுச்சிந்தனை நிரம்பிய அரசாக தமிழ்நாடு அரசு செயல்படுகிறது.

பெரிய நிறுவனங்களை வரவேற்கிறோம். அதேநேரத்தில் சிறு, குறு, நடுத்தரத் தொழில்களுக்கும் கூடுதல் முக்கியத்துவம் தந்துகொண்டிருக்கிறோம்.

தொழில் வளர்ச்சியை நிதி அளவுகோளாக மட்டுமில்லாமல், நீதியின் அளவுகோலாக, சமூகநீதியின் அளவுகோலாக நாங்கள் பார்க்கிறோம்.

புதிய புத்தாக்கத் தொழில்களில் இறங்கிப் பார்க்கும் தைரியமும், தன்னம்பிக்கையும் கொண்டதாக இந்த அரசு இருக்கிறது.

புதுயுக சிந்தனைகளுடன் சுதந்திரமாக இயங்கும் புத்தொழில்களை ஊக்கப்படுத்திக் கொண்டிருக்கிறோம் என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும்.

இப்படித்தான் கணினித்துறையில் தைரியமாக 1996ஆம் ஆண்டே திராவிட முன்னேற்றக் கழக அரசு இறங்கியது. தமிழ்நாட்டில் கம்ப்யூட்டர் புரட்சியையே முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான் உருவாக்கினார்கள். இன்றைக்கு இருக்கும் டைடல் பார்க் கட்டடத்துக்கு 25 வயது. கால் நூற்றாண்டுக்கு முன்பே கம்ப்யூட்டர்தான் இளைய சமூகத்துக்கு வேலைவாய்ப்பை உருவாக்கும் அற்புதமான தொழில் என்பதை உணர்ந்து, இந்தக் கட்டடத்தை கலைஞர் அவர்கள்தான் முதலமைச்சராக இருந்தபோது உருவாக்கித் தந்தார்கள்.

நமக்கு வெளிநாட்டு நிறுவனங்கள் மென்பொருள் உருவாக்கித் தந்த காலம் முடிந்துவிட்டது. வெளிநாட்டு நிறுவனங்கள் நம்மிடம் இருக்கும் பொருட்களை வாங்கக்கூடிய சூழ்நிலை உருவாகிக் கொண்டிருக்கிறது. இதனை சாஸ் புரட்சி என்கிறார்கள். இதுதான் தி.மு.க.வின் புரட்சி.

சேவைவழி மென்பொருள் துறையில் இன்று சென்னை உலகளாவிய மையமாகவே மாறியிருக்கிறது. அண்மையில் சென்னையில் உருவான இத்துறை சார்ந்த ஒரு நிறுவனம் அமெரிக்காவின் பங்குச்சந்தையில் சாதனை படைத்திருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. பின்டெக் (Fintech), எஜுடெக் (Edutech), மீடியா டெக் (Mediatech), ஹெல்த்டெக் (Healthtech) எனப் பல களங்களில் நமது இளைஞர்கள் உலகத்தையே திரும்பிப்பார்க்க வைக்கும் தொழில்நுட்பங்கள் மூலமாக உருவாக்கத்

தொடங்கி விட்டார்கள். இந்தச் சாதனையோடு நாம் அமைதியாகி விடக் கூடாது. அடுத்த சாதனைக்குத் தயாராக வேண்டும் என உங்களை நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழ்நாடு **2030**க்குள், அதன் மாநில மொத்த உள் உற்பத்தி மதிப்பை ஒரு டிரில்லியன் டாலர் என்ற அளவுக்கு உயர்த்த வேண்டும் என்று நான் உறுதி ஏற்றிருக்கிறேன். இது சாத்தியமாக வேண்டும் என்றால் ஆயிரக்கணக்கான புத்தொழில் நிறுவனங்கள் உருவாக வேண்டும். அவை உள்ளூர் சந்தையிலும் உலகச் சந்தையிலும் வெற்றிப்பெற வேண்டும். பல இலட்சக்கணக்கான மக்களுக்கு வேலைவாய்ப்பு அளித்தாக வேண்டும். இதுதான் நாம் காண வேண்டிய வளர்ச்சி!

இம்மாநிலத்தின் அனைத்துப் பகுதிகள் மற்றும் அனைத்துத் தரப்பு மக்களை உள்ளடக்கிய வளர்ச்சியாக, சுற்றுச்சூழலைச் சீர்குலைக்காத வளர்ச்சியாக, அறிவை மையப்படுத்திய வளர்ச்சியாக இருக்கவேண்டும். அப்போதுதான் வளர்ச்சி என்பதன் பொருள் முழுமை பெறும். இந்தப் புதிய விதமான வளர்ச்சியைப் பெற புதிய சூழல்களை நாம் உருவாக்கவேண்டும்.

புதிய தொழில் திறனாளர்கள் உருவாக வேண்டும்.

புதிய தொழில் முனைவோர் உருவாகி அவர்கள் பல்வேறு வெற்றிகளைப் பெற்றாக வேண்டும்.

இவர்கள் தமிழ்நாட்டின் அனைத்து நிலைகளிலிருந்தும் வரவேண்டும்.

வளர்ச்சிக்கு அடையாளமான, அதே வளர்ச்சிக்கு அடிப்படையான முதன்மை முதலீடு மனிதவள முதலீடே. தொழில்முனைவோர்களும் தொழில் திறனாளர்களுமே இந்தச் சூழலை உருவாக்குகிறார்கள். எண்ணங்களே ஏற்றத்தை உருவாக்குகின்றன, மனிதர்களே மாற்றத்தை உருவாக்குகிறார்கள்.

இதனை அறிந்து தொழில் திறனாளர்களையும் தொழில் முனைவோர்களையும் கண்டறிந்து அவர்களை ஆதரித்து அவர்களை ஊக்கப்படுத்துவதிலே டான்சிம் என்ற எங்கள் புத்தாக்க மற்றும் புத்தொழில் இயக்கத்தின் கடமையாக இருக்கிறது.

புதிய நூற்றாண்டின் புதிய சவால்களை எதிர்கொள்ளவும், புதிய வாய்ப்புகளைப் பயன்படுத்திக்கொள்ளவும், புத்தாக்கத்தின் வழியாக புதிய தொழில்கள் உருவாக்கவும், இந்த அரசு நிச்சயமாக துணைநிற்கும். இந்த நல்ல வேளையிலே இஸ்பாகான் (ISBACON) 14 ஆண்டு மாநாட்டினை முறைப்படி தொடங்கி வைக்கிறேன் என்பதை மகிழ்ச்சியுடன் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

உலகப் புத்தாண்டுக்கும் தை முதல் நாளாம் தமிழர் திருநாளுக்கும் சேர்த்து உங்களுக்கு மீண்டும் என்னுடைய வாழ்த்துக்களைச் சொல்லி விடைபெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்,*
சென்னை, பழவந்தாங்கலில் நடைபெற்ற
இஸ்பாகான் (ISBACON) அமைப்பின் 14ஆவது மாநாட்டினை
தொடங்கிவைத்து ஆற்றிய உரை – 10.01.2022

மக்களுக்காவே என்னை நான் அர்ப்பணித்திருக்கிறேன்

ஈரோடு மாவட்டத்தில் அரசின் சார்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கக்கூடிய இந்த சிறப்பான நிகழ்ச்சிக்கு தலைமை பொறுப்பேற்றுள்ள மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் திரு.சு.முத்துசாமி அவர்களே!

முன்னிலை ஏற்றுள்ள மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்களே!

நிகழ்ச்சியில் பங்கேற்று சிறப்பித்துக் கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.க.பொன்முடி அவர்களே!

நாடாளுமன்ற மேலவையின் உறுப்பினர் திரு.அந்தியூர் செல்வராஜ் அவர்களே!

ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் திரு.கணேசமூர்த்தி அவர்களே!

சட்டமன்ற உறுப்பினர்கள் திருமதி சி.கே.சரஸ்வதி அவர்களே! திரு.ஏ.ஜி.வெங்கடாசலம் அவர்களே! திரு.திருமகன் அவர்களே!

தலைமைச் செயலாளர் முனைவர் வெ.இறையன்பு, இ.ஆ.ப., அவர்களே!

துவக்கத்தில் அனைவரையும் வரவேற்று அமர்ந்திருக்கக்கூடிய மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கிருஷ்ணனுண்ணி, இ.ஆ.ப., அவர்களே!

நிறைவாக நன்றி நல்கவிருக்கக்கூடிய கூடுதல் ஆட்சியர் திரு.மதுபாலன், இ.ஆ.ப., அவர்களே!

அரசு அதிகாரிகளே!

பல்வேறு இடங்களில் இந்த கொரோனா கால இடைவெளியின் காரணமாக காணொலியின் மூலமாக தொடர்பு கொண்டு இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டிருக்கும் பயனாளிகளே!

ஊடகவியலாளர்களே!

என் உயிரோடு கலந்துள்ள தலைவர் கலைஞருடைய உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புகளே!

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்!

ஈரோடு மாவட்டத்தில் முடிவுற்ற பணிகளைத் திறந்துவைத்தும்,

புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டு விழாவும்,

பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கக்கூடிய நிகழ்ச்சியையும் இணைத்து இந்தக் காணொலிக் காட்சி மூலமாக நடந்து கொண்டு இருக்கிறது.

இதற்கான முழு ஏற்பாட்டை ஈரோடு மாவட்டத்தைச் சார்ந்திருக்கக்கூடிய மாண்புமிகு வீட்டுவசதி, நகர்ப்புற அமைச்சர் திரு.முத்துசாமி அவர்கள் சிறப்பாக இந்தப் பணியை நிறைவேற்றியிருக்கிறார். எதையும் எதிர்பார்ப்பதைவிட சிறப்பாக செய்யக்கூடிய பெயரைப் பெற்றவர் திரு.முத்துசாமி அவர்கள்.

பல்வேறு வகைகளிலும் அனுபவம் வாய்ந்தவராக இருந்தாலும், இளைஞர்களோடு போட்டி போடும் அளவுக்கு சுறுசுறுப்பாக தனது பணியை செய்து முடிப்பவர் திரு.முத்துசாமி அவர்கள்.

கொரோனா கட்டுப்பாடுகள் இல்லாமல் இருந்தால், ஈரோட்டில் மாபெரும் விழாவை, விழா என்று சொல்லமுடியாது, ஒரு பெரிய மாநாட்டையே நடத்தியிருப்பார். நானும் நேரடியாக வந்து இந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்ளும் வாய்ப்பையும் பெற்றிருப்பேன். ஆனால், கொரோனா என்ற அந்த தொற்று நோய் அந்த நிகழ்ச்சிக்கு தடைபோடக்கூடிய வகையில் அமைந்துவிட்டது.

இருந்தாலும், விழாக்களைவிட, மக்கள் உயிர்தான் நமக்கு முக்கியம் என்பதை அருமைச் சகோதரர் திரு.முத்துசாமி அவர்கள் நன்றாக அறிவார்கள், நானும் நன்றாக அறிந்திருக்கிறேன், மற்றவர்களும் அறிந்திருக்கிறார்கள். இதைப்பற்றி அதிகமாக விளக்கம் சொல்லவேண்டிய அவசியமில்லை. அதே நேரத்தில், இன்னொன்று சொல்ல விரும்புவது, இன்னும் சில வாரங்களில் இந்த நோய்த் தொற்று குறையும் நேரத்தில், அதை கட்டுப்படுத்துகிற சூழல் அமைந்த பிறகு, நிச்சயமாக நான் ஈரோட்டுக்கு வருவேன், ஈரோட்டு மக்களை நான் நேரடியாக வந்து சந்திப்பேன்.

ஈரோடு என்பது திராவிட இயக்கத்தின் தாய் வீடு. தந்தை பெரியார் பிறந்த ஊர். பேரறிஞர் அண்ணா அவர்கள் வாழ்ந்த ஊர். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் குருகுலம் என்பதும் ஈரோடுதான்.

அதனால், எங்கள் மனதில் குடியிருக்கும் ஊராகத்தான் ஈரோட்டை நாங்கள் எப்போதும் மதித்துக் கொண்டிருக்கிறோம். அத்தகைய வரலாற்றுச் சிறப்புமிக்க ஈரோட்டில், கழக ஆட்சி அமைந்ததற்குப் பிறகு நடக்கின்ற முதல் விழாவில் இந்த காணொலிக் காட்சியின் மூலமாக கலந்துகொள்வதில் நான் பெருமைப்படுகிறேன்.

மொத்தம் 66 பணிகள் ஈரோடு மாவட்டத்தில் முடிவுற்று, இன்று திறந்துவைக்கப்பட்டிருக்கிறது. இவை மொத்தம் 104 கோடி ரூபாய் மதிப்பிலானவை ஆகும்.

அதேபோல 45 கோடி ரூபாய் மதிப்பிலான 365 பணிகளுக்கு அடிக்கல் நாட்டு விழாவும் நடத்தப்பட்டிருக்கிறது.

- ✶ இதில் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால், மலைவாழ் மக்களின் மிக நீண்ட நாள் கோரிக்கையான அந்தியூர் வட்டாரம் பர்கூர் ஊராட்சியில் கத்திரிப்பட்டி வன எல்லை முதல் ஈசலங்காடு வரையிலான சாலையைத்தான் நான் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும்.
- ✶ தாளவாடி வட்டாரம் பையணாபுரம் ஊராட்சியில் ஒரு கோடியே 29 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 5 தடுப்பணைகள் கட்டும் பணிக்கும் இன்று அடிக்கல் நாட்டப்பட்டிருக்கிறது.
- ✶ பல்வேறு அரசுத் துறைகளின் சார்பில் 40 ஆயிரத்து 95 பயனாளிகளுக்கு ரூ.2,0976.71 இலட்சம் மதிப்பீட்டில் பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கியிருக்கிறோம்.

கொரோனா காலம் என்பதால்தான், எல்லோரையும் ஒரே இடத்தில் அழைத்துவந்து இந்த நிகழ்ச்சியை நாம் நடத்த முடியவில்லை. நூற்றுக்கும் மேற்பட்ட இடங்களில் பயனாளிகள் இருந்து, இந்த நலத்திட்ட உதவிகளை அவர்கள் அந்தந்த பகுதிகளில் இருக்கக்கூடிய மக்கள் பிரதிநிதிகள், அரசு அதிகாரிகள் மூலமாக பெற இருக்கிறார்கள்.

அனைவருக்கும் முறையாக, சரியாக அந்த உதவிகள் சென்றடைந்ததா என்று அதிகாரிகள் கடைசி வரை இருந்து கண்காணிக்க வேண்டும், அதில் அலட்சியமாக இருக்கக்கூடாது என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

- ✶ பெருந்துறை அரசு ஈரோடு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில், ஏற்கெனவே 550 எண்ணிக்கையில் படுக்கைகள் இருந்தன. இதனை அதிகரிக்க எடுக்கப்பட்ட முயற்சியின் காரணமாக, ரோட்டரி சங்கத்தின் மூலம் 401 படுக்கைகளும், 'ஒளிரும் ஈரோடு' தொழிலதிபர்கள் மற்றும் பொதுமக்கள் பங்களிப்போடு 180 படுக்கைகளும், Fiscal மூலம் 80 படுக்கைகளும், ஏற்கெனவே உள்ள கட்டிடத்தில் கூடுதலாக 100 படுக்கைகளும் உருவாக்கப்பட்டு, தற்பொழுது 1,311 எண்ணிக்கையில் பிரம்மாண்டமான இந்த மருத்துவமனை அமைந்துள்ளது என்பதை நான் அறிவிக்க விரும்புகிறேன்.

அதேபோல், பெருந்துறை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் கோவிட் மருத்துவமனை கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது. 401 படுக்கைகளுடன் 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 45 நாட்களில் இது உருவாக்கப்பட்டு இருக்கிறது. இதற்குத் துணை நின்ற ஈரோடு மாவட்ட ரோட்டரி சங்கங்கள் அனைத்தையும் நான் மனதாரப் பாராட்டுகிறேன்.

ரோட்டரி அறக்கட்டளையின் நிருவாக இயக்குநர், டாக்டர் இ.கே.சகாதேவன், தலைவர் திரு.எஸ்.செங்குட்டுவன் ரோட்டரி மாவட்ட ஆளுநர் சண்முகசுந்தரம் மற்றும் அறக்கட்டளையின் உறுப்பினர்கள் அனைவரையும் அரசின் சார்பில் அவர்களுக்கு நன்றி சொல்கிறேன், வாழ்த்துகிறேன், பாராட்டுகிறேன்.

கொரோனா நோயாளிகளுக்கு என்று ஒளிரும் ஈரோடு பவுண்டேஷன் ஏராளமான நிதி உதவியைச் செய்திருக்கிறார்கள். அவர்களோடு அமைதிப்பூங்கா அறக்கட்டளை, கொங்கு கல்வி அறக்கட்டளை உள்ளிட்ட தொழில் நிறுவனங்களும் உதவி செய்திருக்கிறது.

- ✶ மருத்துவமனை வளாகம்,

* மருந்துகள் சேமிப்பு வளாகம்,
* மருத்துவ ஆக்சிஜன் தயாரிக்கும் இயந்திரம் ஆகியவை அனைத்தும் உருவாக்கித் தந்துள்ள பெருந்தன்மையை நான் அரசின் சார்பில் அவர்களை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஈரோடு மாநகராட்சி 2008 முதல் மாநகராட்சியாகத் தரம் உயர்த்தப்பட்டது. 2011 முதல் விரிவடைந்த மாநகராட்சியாகச் செயல்பட்டு வருகிறது. 109.52 சதுர கி.மீ. பரப்பளவில் அமைந்துள்ளது. இம்மாநகராட்சி மக்களுடைய வசதிக்காக மாபெரும் போக்குவரத்து மேம்பாட்டுத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கிறது என்பதை இக்கூட்டத்தின் வாயிலாகத் தெரிவிக்க நான் பெருமை அடைகிறேன்.

இந்தத் திட்ட அறிக்கையில், பெருந்துறையில் ஒரு பேருந்து நிலையமும், ஈரோடு புறநகர்ப் பகுதிகளில் இரண்டு பேருந்து நிலையங்கள் என்று மூன்று பேருந்து நிலையங்கள் அமைக்கப் பரிந்துரைக்கப்பட்டிருக்கிறது.

சோலார் பகுதியில் ஒரு புதிய பேருந்து நிலையம் அமைக்க நடவடிக்கையில் இருக்கிறது. இந்தப் பேருந்து நிலையத்திலிருந்து மதுரை, திருச்சி, கரூர், பழனி, வெள்ளக்கோவில் வழியாக செல்லக்கூடிய பேருந்துகள் இயக்கப்பட இருக்கிறது.

சத்தி சாலையில் மற்றொரு பேருந்து நிலையம் அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பேருந்து நிலையத்திலிருந்து சத்தி, கோவை, திருப்பூர், ஊட்டி மார்க்கம் மற்றும் கருநாடக மாநிலங்களுக்குச் செல்லும் பேருந்துகள் இயக்கப்பட இருக்கிறது.

அடுத்து இன்னொரு முக்கியமான அறிவிப்பையும் இந்த நிகழ்ச்சியில் வெளியிட நான் விரும்புகிறேன்.

சிக்கய்ய நாயக்கர் கல்லூரியானது 1954இல் தந்தை பெரியார் அவர்களால் உருவாக்கப்பட்டது. இக்கல்லூரியில் இளநிலைப்

பட்ட வகுப்பு பதினொன்றும், முதுநிலைப் பட்ட வகுப்பு மூன்றும் இருக்கிறது. 1,400க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர்கள் இந்தக் கல்லூரியில் படித்து வருகிறார்கள். இந்தக் கல்லூரியானது, அரசின் நேரடிக் கட்டுப்பாட்டில் 1998ஆம் ஆண்டு முதல் கோவை மண்டலக் கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் அவர்களைப் பாதுகாவலராகக் கொண்டு, இப்போது செயல்பட்டு வருகிறது. இந்தக் கல்லூரியை அரசுக் கல்லூரியாக அறிவிக்கக் கோரி ஏறக்குறைய கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக அந்தக் கோரிக்கை வைக்கப்பட்டு வருகிறது. அதை நிறைவேற்றக்கூடிய வகையில், இந்தக் கல்லூரியை, அரசுக் கல்லூரியாக இந்த நிகழ்ச்சியின் மூலம் நான் அறிவிப்பதில் பெருமைப்படுகிறேன்.

இப்படி தமிழ்நாட்டின் ஒவ்வொரு மாவட்டத்திலும் நலத்திட்ட உதவிகள் வழங்குதல், புதிய திட்டங்களை தொடங்கிவைத்தல், முடிந்த திட்டங்களை மக்கள் பயன்பாட்டுக்கு கொண்டு வருதல் ஆகிய விழாக்களைத் தொடர்ந்து இந்த அரசு நடத்திக் கொண்டு வருகிறது.

இதுவரை நான் நேரடியாக கலந்துகொண்டு, 714 கோடி ரூபாய் மதிப்பிலான 185 அரசு திட்டப் பணிகளைத் தொடங்கி வைத்திருப்பது மட்டுமல்லாமல், 339 கோடியே 86 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 190 புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியிருக்கிறேன். மேலும், பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த 8 இலட்சத்து 18 ஆயிரத்து 835 பயனாளிகளுக்கு 3 ஆயிரத்து 642 கோடி ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கியிருக்கிறேன்.

இன்று ஈரோட்டில் இந்த விழா நடக்கிறது. வரிசையாக எல்லா மாவட்டங்களிலும் இந்த விழாக்கள் நடக்க இருக்கிறது. இவற்றை அரசு விழாக்கள் என்று நாம் சொல்லிக் கொண்டிருக்கிறோம். அதைவிட நான் பெருமையாக சொல்வது, மக்கள் விழா, அதுதான் முக்கியம்.

உங்களால் உருவாக்கப்பட்ட இந்த அரசு உங்களுக்கான பல்வேறு பணிகளைச் செய்வது மட்டுமல்ல, கண்ணும் கருத்துமாக கவனித்துக் கொண்டிருக்கிறது. மக்களுக்காகவே என்னை நான் அர்ப்பணித்திருக்கிறேன்.

கடந்த 5ஆம் தேதி தமிழ்நாடு சட்டமன்றத்தில், மாண்புமிகு ஆளுநர் அவர்கள் உரையாற்றினார்கள். அவர் உரையாற்றும்போது, தமிழக அரசின் செயல்பாடுகளை, நாம் ஒவ்வொரு துறை வாயிலாகக் கொண்டுவரும் திட்டங்களை மனம் திறந்து ஆளுநர் அவர்கள் பாராட்டிப் பேசியிருக்கிறார். பொறுப்பேற்ற நொடியில் இருந்து நான் மக்கள் பணியாற்றி வருவதாக ஆளுநர் அவர்கள் பாராட்டினார்கள்.

அப்படித்தான் தலைவர் கலைஞர் அவர்கள் எங்களையெல்லாம் பழக்கி வைத்திருக்கிறார். தன்னை, பெரியார் எப்படி பழக்கினார் என்றும் தலைவர் கலைஞர் அவர்கள் எங்களிடத்தில் அடிக்கடி சொல்வார். யானை தன்னுடைய குட்டியை எப்படிப் பழக்குமோ, அப்படி பெரியார் எங்களை மக்கள் தொண்டாற்றப் பழக்கினார் என்று கலைஞர் அவர்கள் அடிக்கடி சொல்வார்கள்.

அதைப் போலத்தான் கலைஞர் அவர்களும் எங்களைப் பழக்கினார். மக்களுக்கு ஒரு துன்பம், துயரம் என்றால் துடிக்கும் உள்ளம் கொண்டவர்களாக எங்களை வடிவமைத்திருக்கிறார். அந்த அடிப்படையில்தான் மக்கள் பணியை நாங்கள் ஆற்றிக்கொண்டு இருக்கிறோம்.

இந்த நிலையில், தமிழகத்துக்கு மட்டுமல்ல, இந்தியாவுக்கே சமூகநீதியை உருவாக்கிக் கொடுக்கும் பெரும் பணியை நாம் செய்து வருகிறோம்.

இதர பிற்படுத்தப்பட்ட பிரிவினருக்கான 27 விழுக்காடு இடஒதுக்கீட்டுக்காக நாம் எடுத்த சட்டரீதியான முயற்சிகள்தான், அகில இந்தியா முழுமைக்குமான பிற்படுத்தப்பட்ட மாணவ,

மாணவியருக்கு இந்தச் செய்தி இனிப்புச் செய்தியாக அமைந்திருக்கிறது.

தந்தை பெரியார் பிறந்த ஈரோட்டில், அரசு விழாவில் பங்கெடுக்கின்ற இந்த நேரத்தில், உச்சநீதிமன்றம் வழங்கி இருக்கக்கூடிய தீர்ப்பு என்பது பெரியாருக்குக் கிடைத்த காணிக்கையாக நான் நினைக்கிறேன். அவர் உருவாக்கிக் கொடுத்த சமூகநீதித் தத்துவத்தை இன்றைய தினம் உச்சநீதிமன்றம் ஏற்றுக்கொள்ளும் காலமானது உருவாகி இருக்கிறது. இதைவிட பெரியாருக்கு உண்மையான தொண்டு நிச்சயமாக அமையாது.

அனைத்து வளமும் நலமும் கொண்ட தமிழ்நாட்டை உருவாக்குவதும், அகில இந்தியா முழுமைக்கும் மாநில சுயாட்சி, சமூகநீதிக் கொள்கையை மலரச் செய்வதையும் நான் என்னுடைய வாழ்க்கையின் லட்சியமாகக் கொண்டுள்ளேன்.

இந்த இலட்சியப் பயணம் தொடரும் என்பதைச் சொல்லி இந்த நிகழ்ச்சிக்கு காரணமாக இருந்தவர்களையும் இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டிருக்கக்கூடிய, குறிப்பாக பயனாளிப் பெருமக்களுக்கும் என்னுடைய புத்தாண்டு வாழ்த்துக்களையும், பொங்கல் வாழ்த்துக்களையும் தெரிவித்து, என் உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி, வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்,*
ஈரோடு மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாவில்,
தலைமைச் செயலகத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக
முடிவுற்ற திட்டப் பணிகளைத் திறந்துவைத்து, புதிய
திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, பயனாளிகளுக்கு
*அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி ஆற்றிய உரை – **10.01.2022***

தமிழால் இணைவோம்
தமிழை வளர்ப்போம்

உலகமெங்கும் வாழும் தமிழ் உடன்பிறப்புக்கள் அனைவருக்கும் தமிழ் வணக்கம்.

தமிழ்நாடு அரசின் அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறையின் சார்பில் நடைபெறும் அயலகத் தமிழர் நாள் விழாவில் பங்கெடுத்து உரையாற்றுவதில் நான் பெருமை அடைகிறேன்.

"தமிழால் இணைவோம்" என்ற அடிப்படையில் நாம் ஒன்று சேர்ந்துள்ளோம்.

தமிழுக்குத்தான் அந்த வலிமை இருக்கிறது.

மத மாயங்களையும் சாதிச் சழக்குகளையும் வீழ்த்தும் வல்லமை மொழிக்குத்தான் உள்ளது.

அதனால்தான் தமிழால் இணைவோம் என்பதை நமது முழக்கமாகக் கொண்டுள்ளோம்.

ஒரு தமிழன், இன்னொரு தமிழனைச் சந்திக்கும்போது தமிழைச் சொல்லி வாழ்த்து தெரிவிக்க வேண்டும். அப்படிச் செய்தால்தான் மற்ற வேறுபாடுகள் எதற்கும் முக்கியத்துவம் தரக் கூடாது என்ற

எண்ணம் தோன்றும் என்றார் இலக்கிய மேதை மு.வரதராசனார் அவர்கள்.

அத்தகைய தமிழ் வாழ்த்தை உங்களுக்கு முதலில் நான் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழால் இணைந்துள்ள அனைவருக்கும் நன்றி தெரிவிக்கும் அதேவேளையில் – அயலகத் தமிழர் நாள் வாழ்த்துக்களையும் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உலகின் பல்வேறு நாடுகளில் இருந்தும், பல்லாயிரம் மைல் கடந்தும் இன்று நாம் ஒன்றாகக் கூடி இருக்கிறோம் என்றால், தமிழன் என்ற உணர்வோடு நாம் கூடி இருக்கிறோம். நம்மை நாடுகள் பிரிக்கிறது. நிலங்கள் பிரிக்கிறது. ஆனாலும் மொழி இணைக்கிறது. அந்த வல்லமை தமிழ்மொழிக்கு உண்டு.

‘வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்’ என்பதை தமிழ் மண்ணில் விதைத்து மொழிப்பற்றும் – ‘தமிழா! இன உணர்வு கொள்’ என்று முழங்கி இனமான உணர்வும் ஊட்டிய இயக்கம்தான் திராவிட இயக்கம்! மொழிக்காக போராடிய, வாதாடிய இயக்கம் மட்டுமல்ல, மொழிகாக்க தனது தேகத்தை தீக்குத் தின்னத் தந்த தீரர்களின் இயக்கம்தான் திராவிட முன்னேற்றக் கழகம்.

கழக ஆட்சி அமையும் போதெல்லாம் அது, இங்குள்ள தமிழர்களின் ஆட்சியாக மட்டுமில்லாமல், உலகம் முழுவதும் பரந்து விரிந்து வாழும் அனைத்து மக்களின் அரசாக கழக அரசு செயல்பட்டு வருகிறது.

உங்களில் பலருக்கும் தமிழ்நாட்டில் வாக்களிக்கும் உரிமை இல்லாமல் இருக்கலாம். ஆனால், தமிழ்நாடு அரசும் நமது அரசு என்று சொல்லிக்கொள்ளும் உரிமை உங்களுக்கு எப்போதும் உண்டு. அதனால்தான் கழக அரசு அமைந்ததும் கடந்த செப்டம்பர் மாதம் அயலகம் வாழ் தமிழர்கள் நலன் காக்கக்கூடிய ஏராளமான அறிவிப்புகளை வெளியிட்டேன்.

நம்முடைய இனம் ஒரு நிலத்தில், ஒரு நாட்டில் மட்டுமே வாழ்ந்த இனம் அல்ல. உலகளாவிய இனம் ஒன்று உண்டென்றால் அது தமிழினம் தான். 30க்கும் மேற்பட்ட நாடுகளில் அதிக எண்ணிக்கையிலும், 60க்கும் மேற்பட்ட நாடுகளில் குறைந்த எண்ணிக்கையிலும் தமிழர்கள் வாழ்கிறார்கள்.

இது குறித்து தமிழ்நாடு சட்டமன்றத்திலேயே விரிவாக நான் பேசி இருக்கிறேன்.

வணிகம் செய்வதற்காகச் சென்றார்கள்.

வாழ்வதற்காகச் சென்றார்கள்.

வேலைகளைத் தேடிச் சென்றார்கள்.

கடற்கோள்களில் இருந்து தப்புவதற்காகச் சென்றார்கள்.

புதிய இடங்களை அறிவதற்காகச் சென்றார்கள்.

இப்படிப் பலருக்கும் பல நோக்கங்கள் இருந்திருக்கும். இத்தகைய இடப்பெயர்வுகள் காலம்காலமாக நடந்து வருகின்றன. எங்கே தமிழர்கள் வாழ்ந்தாலும், அவர்களுக்கு தமிழ்நாடுதான் தாய் வீடு.

இன்றைக்கு நவீனத் தொழில்நுட்பம் வளர்ந்துவிட்டது. உலகின் பல்வேறு நாடுகளில் இருந்து நான் பேசுவதைக் கேட்கிறீர்கள். நீங்கள் பேசுவதை பார்த்தபடி நானும் கேட்கிறேன்.

இவை எதுவும் இல்லாத காலத்தில் தன்னம்பிக்கையும் தணியாத தாகமும் கொண்ட தமிழர்கள் எல்லா நாடுகளுக்கும் சென்றார்கள். பழம்பெருமை மட்டுமே பேசிக்கொண்டு உள்ளூரிலேயே இருந்துவிடாமல், தனது திறமையை உலகம் மதிக்கும் என்ற நம்பிக்கையோடு சென்றார்கள். அத்தகைய தமிழர்கள் அனைவருக்கும், அவர்களது பிள்ளைகளுக்கும், குழந்தைகளுக்கும் எனது இதயப்பூர்வமான பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உங்களை அயலகத்துக்கு வாழப் போனவர்களாக நான் நினைக்கவில்லை. தமிழ்நாட்டின் பண்பாட்டுத் தூதர்களாக அயல்நாடுகளில் இருப்பவர்களாக நினைத்துப் போற்றக் கடமைப்பட்டுள்ளேன்.

இத்தகைய அயலகத் தமிழர் மேன்மைக்காக தன்னுடைய வாழ்வை ஒப்படைத்தவர்தான் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள்!

புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களின் பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக வெளிநாடு வாழ் தமிழர் நலச்சட்டம் 2011ஆம் ஆண்டு மார்ச் 1ஆம் நாள் கழக அரசால் இயற்றப்பட்டுள்ளது. "வெளிநாடு வாழ் தமிழர் நலவாரியம்" ஒன்றை உருவாக்கி அவர்களுக்கு நலத்திட்டங்களைச் செயல்படுத்துவோம் என்று அறிவித்தோம்.

ஆட்சி மாற்றம் ஏற்பட்டதன் காரணமாக நம்மால் அமைக்க முடியவில்லை. அடுத்து வந்த ஆட்சியாளர்களும் இதனை அமைக்கவில்லை. மீண்டும் ஆட்சிக்கு வந்த நமது அரசு 'வெளிநாடு வாழ் தமிழர் நல வாரியம்' அமைக்கப்படும் என்பதை ஐந்தே மாதத்தில் தமிழ்நாடு சட்டமன்றத்தில் நான் அறிவித்தேன்.

அரசு மற்றும் புலம்பெயர்ந்த தமிழர் பிரதிநிதிகள் பதிமூன்று பேரைக்கொண்டு இந்த வாரியம் அமைக்கப்படும்.

5 கோடி ரூபாய் வெளிநாடு வாழ் தமிழர் நலநிதி என மாநில அரசின் முன்பணத்தைக் கொண்டு உருவாக்கப்படும்.

மூலதனச் செலவினமாக 1 கோடியே 40 இலட்சம் ரூபாய் மற்றும் தொடர் செலவினமாக, நலத்திட்டங்கள் மற்றும் நிருவாக செலவினங்களுக்காக 3 கோடி ரூபாய் ஆண்டுதோறும் ஒதுக்கப்படும் என்று அறிவித்தேன்.

வெளிநாடு வாழ் தமிழர் குறித்த தரவு தளம் (Database) ஏற்படுத்தப்படும்.

தமிழர்கள் பணியின் போது இறக்க நேரிட்டால், அவர்கள் குடும்பத்தில் கல்வி பயிலும் குழந்தைகளுக்கு கல்வி உதவித்தொகை, திருமண உதவித் தொகை வழங்கப்படும்.

தமிழர்கள் புலம்பெயரும்போது, பயண புத்தாக்கப்பயிற்சி பல்வேறு ஊர்களில் நடத்தப்படும்.

ஆலோசனைப்பெற வசதியாக கட்டணமில்லா தொலைபேசி வசதி மற்றும் வலைதளம், கைப்பேசி செயலி (Mobile application) அமைத்துத் தரப்படும்.

சட்ட உதவி மையம் அமைக்கப்படும்.

தமிழ்நாடு திரும்பியவர்களுக்கு குறு தொழில்கள் செய்திட, அதிகபட்சமாக இரண்டரை இலட்சம் ரூபாய் மானியத்துடன் கூடிய கடன் வசதி செய்து தரப்படும். இதற்கென ஆறு கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

வெளிநாடு வாழ் தமிழர்களின் முதலீடுகளை அரசு மற்றும் தொழில் நிறுவனங்களில் பாதுகாப்பான முதலீடு செய்ய ஏதுவான சூழல் உருவாக்கப்படும்.

தமிழர்கள், ‘எனது கிராமம்’ திட்டத்தின் மூலம் தங்களது சொந்த ஊருக்கு நன்மைகள் செய்து தரலாம்.

தமிழ்ப் பிள்ளைகள் தமிழ் கற்றுக்கொள்ள வசதிகள் ஏற்படுத்தித் தரப்படும்.

தமிழர்கள் அந்தந்த நாடுகளில் உருவாக்கியுள்ள நலச்சங்கங்கள் ஒருங்கிணைக்கப்படும்,

என்று பல்வேறு அறிவிப்புகளைச் செய்தேன். இவை அனைத்துக்கும் சேர்த்து 20 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த வரிசையில்தான், வெளிநாடுகளில் உள்ள தமிழ்ச் சங்கங்களுடன் இணைந்து ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 12ஆம் நாள் உலகத்தமிழர் புலம்பெயர்ந்தோர் நாளாகக் கொண்டாடப்படும்.

இலங்கையில் இருந்து தமிழ்நாட்டை நோக்கி வந்த தமிழர்களுக்கு 317 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு சமூக பாதுகாப்புத் திட்டங்களைச் செயல்படுத்தி வருவதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள்.

கொரோனா என்ற பெருந்தொற்று காலமாக இல்லாமல் இருந்திருந்தால், இந்த விழாவை மிகப்பெரிய விழாவாக முன்னெடுத்திருப்போம். கொரோனா என்பதால் அது இயலவில்லை.

ஆனால் பரந்த உள்ளம் கொண்ட நாம், காணொலியில் பெரிய அளவில் கொண்டாடிக் கொண்டு இருக்கிறோம். பல நாடுகளைச் சேர்ந்த, பல்வேறு பெருமக்கள், பல்வேறு தலைப்புகளில் பேச இருக்கிறீர்கள். உங்கள் அனைவரது உரைகளும் தமிழை, தமிழினத்தை, தமிழர்களை மேம்படுத்துவதாக அமைய வேண்டும். நம்மை பிளவுபடுத்தும் எண்ணங்களை பின்னுக்குத் தள்ளி, நம்மை இணைக்கும் எண்ணங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பவையாக உங்களது உரைகள் அமைய வேண்டும்.

தமிழ்நாட்டில் இருக்கும் பிளவுகளுக்கு வெளிநாடுகள் சென்ற பிறகும் முக்கியத்துவம் தராதீர்கள். ஒருதாய் மக்களாக வாழுங்கள். கல்வியிலும் வேலைவாய்ப்பிலும், தொழில் வளர்ச்சியிலும் முன்னேற்றம் காணுங்கள். எவ்வளவு உயரமாக மரம் வளர்ந்தாலும் அது தன்னுடைய வேரை விட்டுவிடுவதில்லை என்பதைப் போல தமிழை, தமிழ்நாட்டை விட்டு விடாதீர்கள். அரவணைத்து

வாழுங்கள். தமிழகத்துக்கு வாருங்கள். உங்களது பிள்ளைகளுக்கு தமிழ்நாட்டைக் காட்டுங்கள்.

மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் பண்பாட்டிலும் செழிப்பிலும் மேம்பட்ட இனம் நாம் என்பதை அவர்களை அழைத்து வந்து கீழடியை, ஆதிச்சநல்லூரைக் காட்டுங்கள்.

இங்குள்ள தமிழர்களுக்கு எல்லாமுமாய் இந்த அரசு இருப்பதைப் போலவே அயலகத் தமிழ் மக்களுக்கும் எல்லாமுமாக இந்த அரசு இருக்கும். தமிழர் பண்பாட்டை இன்றைய தலைமுறைக்கு அறிமுகம் செய்ய, தமிழ் கற்பிக்க, ஒன்றாக இணைந்து ஒருவருக்கொருவர் உதவியாக இருக்க அனைத்தையும் தமிழ்நாடு அரசு நிச்சயம் செய்யும்.

இவ்விழாவில் இணைய வழியாக கலந்துகொண்ட டாக்டர் தனபால் ராமசாமி, முனைவர் ராஜா நடராஜன், மொரிஷியஸ் முன்னாள் அதிபர் திரு.பார்லென் வையாபுரி, இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் மாண்புமிகு எம்.ஏ.சுமந்திரன், மலேசிய முன்னாள் அமைச்சர் தத்தோ பி.கமலநாதன், பப்புவா நியூ கினியா நாட்டைச் சேர்ந்த மாகாண ஆளுநர் திரு.சசிந்தரன் முத்துவேல் ஆகியோருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழால் இணைவோம். தமிழை வளர்ப்போம். தமிழரை வளர்ப்போம். அனைவருக்கும் தமிழர் திருநாளாம் பொங்கல் நல்வாழ்த்துக்கள்!

வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள்,*
அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை சார்பில் நடைபெற்ற
அயலகத் தமிழர் நாள் விழாவில் ஆற்றிய உரை – 12.01.2022

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனக் கட்டடம் அமைத்து தந்ததற்கு நன்றி

மாண்புமிகு பிரதமர் அவர்களே!

மாண்புமிகு ஒன்றிய சுகாதாரத்துறை அமைச்சர் அவர்களே!

ஒன்றிய துணை அமைச்சர் பெருமக்களே!

தமிழகத்தின் ஆளுநர் அவர்களே!

தமிழ்நாடு அரசின் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே!

நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே!

ஒன்றிய, மாநில அரசுகளின் உயர் அதிகாரிகளே! அலுவலர்களே!

மாவட்ட ஆட்சித் தலைவர்களே!

மருத்துவர்களே!

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான மாலை வணக்கம்!

தமிழ்நாட்டில் ஆட்சி மாற்றம் நடந்த பிறகு மாண்புமிகு பிரதமர் அவர்கள் கலந்துகொள்ளக்கூடிய முதல் அரசு விழா என்பதால் மாண்புமிகு பிரதமர் அவர்களுக்குத் தமிழ்நாடு அரசின் சார்பில்

வாழ்த்துக்களையும் நன்றியையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தனது பல்வேறு பணிகளுக்கிடையே தமிழ்நாட்டு மக்களின், குறிப்பாக, மாணவர்களின் நலனை மனதில் கொண்டு இந்தச் சிறப்பான நிகழ்ச்சிக்கு தங்களின் நேரத்தை ஒதுக்கித் தந்தமைக்காக, மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் மருத்துவக் கல்லூரி அமைய வேண்டும் என்பது முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் கனவாகும்.

2006ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலுக்கு முன்னதாக தி.மு.க.வின் தேர்தல் அறிக்கையைத் தலைவர் கலைஞர் அவர்கள் வெளியிட்டார்கள். அதில் கல்வி என்ற துணைத் தலைப்பில் ஒரு குறிக்கோளை அறிவித்தார்கள்.

''மாவட்டத்திற்கு ஒரு மருத்துவக் கல்லூரி என்ற குறிக்கோளை நடைமுறைப்படுத்துவோம்'' என்று அறிவிக்கப்பட்டது.

2006ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சிக்காலத்தில் பின்தங்கிய மாவட்டங்களில் மருத்துவக் கல்லூரிகளை அமைக்கத் திட்டமிடுதல்களைச் செய்திருக்கிறோம். 'அனைத்து மாவட்டங்களிலும் மருத்துவக் கல்லூரிகள்' என்ற முத்தமிழறிஞர் கலைஞரின் கனவுதான் இன்றைய நாள் நிறைவேறி இருக்கிறது.

இன்று நமது நாட்டிலேயே அரசு மருத்துவக் கல்லூரிகளில் மிக அதிக எம்.பி.பி.எஸ். இடங்களையும், மருத்துவ மேற்படிப்பு இடங்களையும் கொண்டு, மருத்துவத்துறையில் நமது நாட்டிற்கே தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக விளங்கிக் கொண்டிருக்கிறது. இதற்கான அனுமதியையும், ஒத்துழைப்பையும், நிதி ஒதுக்கீடுகளையும் வழங்கிவரும் ஒன்றிய அரசுக்கும் குறிப்பாக,

மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாடு அரசின் இத்தகைய முயற்சிகளுக்கு ஒன்றிய அரசு அளித்துள்ள ஆதரவிற்கு நன்றி கூறக்கூடிய அதேநேரத்தில், புதியதாக உருவாக்கப்பட்டுள்ள மாவட்டங்களிலும் புதிய மருத்துவக் கல்லூரிகளை அமைப்பதற்கு மாநில அரசிற்குத் தங்களது அரசு தொடர்ந்து உதவி அளிக்க வேண்டுமென்றும் நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

மருத்துவக் கட்டமைப்பு வசதிகள் மட்டுமன்றி, மக்களுக்குப் பயன் தரும் மருத்துவத் திட்டங்களைச் செயல்படுத்துவதிலும், தமிழ்நாடு அரசு, குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழக அரசு, நாட்டிற்கே முன்னுதாரணமாகத் திகழ்ந்துள்ளது.

✶ கண்ணொளித் திட்டம்,

✶ முதலமைச்சரின் மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்,

✶ மருத்துவர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு உதவித் திட்டம்,

✶ வருமுன் காப்போம் திட்டம்,

✶ மக்களைத் தேடி மருத்துவம்,

✶ நம்மைக் காக்கும் 48

என, தமிழ்நாடு அரசின் திட்டங்கள் பலவற்றை என்னால் குறிப்பிட்டுச் சொல்ல முடியும். இவ்வாறு புதுமையான திட்டங்களைத் தீட்டி, சிறப்புறச் செயல்படுத்தும் தமிழ்நாடு அரசின் மருத்துவத்துறைக்கு ஒன்றிய அரசின் நிதி ஒதுக்கீடுகள் மேலும் உயர்த்தப்பட வேண்டும் என்றும் இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

பல மாநிலங்களில் மருத்துவர்களின் பற்றாக்குறை நிலவி வரும் இச்சூழலில், தமிழ்நாட்டில் மருத்துவம் பயிலும் மாணவர்கள் கிராமப்புறங்களிலும் அரசுத் துறையிலும் சிறப்பாகச் சேவை

செய்வதற்கு தமிழ்நாடு அரசின் மாணவர் சேர்க்கை கொள்கையே அடிப்படையாகும்.

எங்களது கொள்கை, இந்த வாய்ப்புகளை தமிழ்நாட்டில் உள்ள கிராமப்புற ஏழை, எளிய மாணவர்களுக்குக் கிடைக்கச் செய்வதே!

தமிழ்நாட்டின் மருத்துவத்துறையின் வெற்றியும் இந்தக் கொள்கையின் விளைவே!

இந்த அடிப்படைக் கொள்கை பாதிக்கப்பட்டுவிடக்கூடாது என்பதற்காகத்தான் நீட் தேர்விலிருந்து தமிழ்நாட்டிற்கு விதிவிலக்கு அளிக்க வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம்!

எனவே மனிதவள ஆற்றலின் அடித்தளமாக அமைந்துள்ள மாணவர் சேர்க்கை முறை தொடர்பான தமிழ்நாடு அரசின் கோரிக்கையை ஒன்றிய அரசு நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

Honourable Prime Minister, the admission policy of Tamil Nadu plays a very important role in our health infrastructure. It is to protect this, we have been continuously demanding NEET exemption for Tamil Nadu.

I appeal union government to consider our request favourably.

இந்த நாளில், மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்கள் செம்மொழி தமிழாய்வு நிறுவனத்தின் புதிய கட்டடத்தைத் திறந்து வைக்க இருக்கிறார்கள். அதற்காக தமிழ்நாட்டு மக்களின் சார்பிலும், அரசின் சார்பிலும், தனிப்பட்ட என் சார்பிலும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் இன்று இருந்திருந்தால் மிகுந்த மகிழ்ச்சி அடைந்திருப்பார்கள். தமிழர்களின் நூற்றாண்டுக் கனவான செம்மொழித் தகுதியை 2004ஆம் ஆண்டு

பெற்றுத்தந்தவர் கலைஞர் அவர்கள். அவரது முயற்சியால் உருவாக்கப்பட்ட நிறுவனம்தான் இந்தச் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம். அந்த நிறுவனத்துக்கு 24 கோடியே 65 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய கட்டடம் அமைத்துத் தந்த ஒன்றிய அரசுக்கும் மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கும் நான் நன்றியைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளின்போது தமிழுக்கு இத்தகைய சிறப்பு செய்யப்பட்டுள்ளது மகிழ்ச்சிக்குரியதாக இருக்கிறது.

தமிழுக்குச் சிறப்புச் செய்யும் செம்மொழி நிறுவனத்தின் கட்டடத்தையும், தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு அடித்தளம் அமைக்கும் மருத்துவக் கல்லூரிகளையும் திறந்து வைக்கக்கூடிய மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கு மீண்டும் ஒரு முறை நன்றி கூறி, தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாள் வாழ்த்துக்களை மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கும், அனைவருக்கும் தெரிவித்து விடைபெறுகிறேன்.

நன்றி வணக்கம்!

தமிழ்நாட்டில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள 11 அரசு மருத்துவக் கல்லூரிகள் மற்றும் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்திற்கான புதிய கட்டடம் ஆகியவை காணொலிக் காட்சி வாயிலாக மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. ***நரேந்திர மோடி*** *அவர்களால் திறந்து வைக்கப்பட்ட நிகழ்ச்சியில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.* ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள் ஆற்றிய உரை – 12.01.2022*

நான் மக்களோடு மக்களாக இருக்கிறேன்

நாட்டு மக்கள் அனைவருக்கும் எனது அன்பான வணக்கம்!

கடந்த மே 7ஆம் நாள் உங்களது அன்பான உத்தரவுடன் தமிழ்நாட்டின் முதலமைச்சராக நான் பொறுப்பேற்றுக் கொண்டேன்!

'வாக்களித்தவர்களுக்கு மட்டுமல்ல, வாக்களிக்கத் தவறியவர்களுக்கும் சேர்ந்து நான் முதலமைச்சராக இருப்பேன்' என்று உறுதி எடுத்துக்கொண்டேன்.

பொறுப்பேற்றுக்கொண்ட உடனே ஐந்து முக்கியமான வாக்குறுதிகள நிறைவேற்ற நான் கையெழுத்திட்டேன்.

- ✶ கொரோனா கட்டுப்பாடுகள் காரணமாக வாழ்வாதாரம் பாதிக்கப்படுகின்ற மக்களோட துயரத்தை போக்குகின்ற வகையில், அரிசி குடும்ப அட்டை வைத்திருக்கின்ற குடும்பத்துக்கு தலா 4,000 ரூபாய் தரப்படும். அதில்

முதல் கட்டமாக 2,000 ரூபாய் இந்த மே மாதத்திலேயே வழங்கப்படும் என்கிற முதல் கையெழுத்திட்டேன்.

- ✶ ஆவின் பால் விலையை, லிட்டர் ஒன்றுக்கு மூன்று ரூபாய் வீதம் குறைத்து விற்பனை செய்வதற்கான அரசாணையில் இரண்டாவது கையெழுத்து.
- ✶ அரசு கட்டுப்பாட்டில் இயங்குகின்ற நகரப் பேருந்துகளில், பெண்கள் கட்டணம் இல்லாமல் பயணம் செய்வதற்கான உத்தரவில் மூன்றாவது கையெழுத்து.
- ✶ தொகுதிகள் தோறும் நான் பெற்ற மனுக்கள் மேல் நடவடிக்கை எடுக்க, "உங்கள் தொகுதியில் முதலமைச்சர்" என்கிற திட்டத்தின்கீழ், புதிய துறையை உருவாக்குவதற்கான உத்தரவில் நான்காவது கையெழுத்து.
- ✶ கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டு தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக்கொள்பவர்களின் இன்னலைக் குறைக்கின்ற வகையில், அதுக்கான கட்டணத்தை தமிழக அரசே காப்பீட்டுத் திட்டத்தில் ஏற்கும் என்பதற்கான ஐந்தாவது கையெழுத்தை போட்டுள்ளேன்.

இப்படி ஒவ்வொரு நாளிலும் மக்களுக்காக நான் போட்டக் கையெழுத்துப் பட்டியலை சொல்லிக்கொண்டே போகலாம்.

கோடிக்கணக்கான மக்களின் தேவையை,

இலட்சக்கணக்கான மக்களின் எதிர்ப்பார்ப்பை,

ஒற்றைக் கையெழுத்தில் நிறைவேற்றிக் காட்டிய அரசுதான் இந்த அரசு.

- ✶ தேர்தலுக்கு முன்னால், தமிழ்நாடு முழுவதும் சுற்றி நான் பெற்ற மனுக்களில் இரண்டரை இலட்சம் மனுக்களை 100 நாட்களில் நிறைவேற்றிக் கொடுத்துள்ளேன்.

- ✶ கொரோனா நிவாரண நிதி 4 ஆயிரம் ரூபாயை 2.15 கோடிக் குடும்பங்கள் பெற்றுள்ளார்கள்.
- ✶ கொரோனா கால நிவாரணமாக 13 பொருட்களை 2.15 கோடி குடும்பங்கள் பெற்றுள்ளார்கள்.
- ✶ மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின் மூலம் 50 இலட்சம் பேர் பயனடைந்துள்ளார்கள்.
- ✶ இல்லம் தேடிக் கல்வி திட்டத்தில் 80 ஆயிரத்து 138 இல்லம் தேடி கல்வி மையங்களைத் தொடங்கியிருக்கிறோம் .

பள்ளிக்கூடத்துக்கு வராமல் நின்ற குழந்தைகளில், 1 இலட்சத்து 73 ஆயிரத்து 792 குழந்தைகள் பள்ளிக்கூடத்திற்கு திரும்ப சேர்த்திருக்கிறோம்.

- ✶ 18.30 இலட்சம் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், ஓய்வூதியர்கள் பயன்பெறும் வகையில் அவர்களுக்கான அகவிலைப்படி அதிகரிக்கப்பட்டுள்ளது.
- ✶ 5 பவுனுக்கு கீழே நகைக் கடன் பெற்ற 13.50 இலட்சம் குடும்பங்களுக்கு கடன் ரத்து செய்யப்பட்டுள்ளது.
- ✶ மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கான 2 ஆயிரம் கோடி மதிப்பிலான கடன்கள் ரத்து செய்யப்பட்டுள்ளது.
- ✶ விபத்தில் சிக்குபவர்கள் எந்த மாநிலத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும், எந்த நாட்டுக்காரராக இருந்தாலும், முதல் 48 மணி நேர சிகிச்சையை அரசே ஏற்கும் என அறிவித்தோம். அதில் 4 ஆயிரத்து 482 பேர் சிகிச்சை பெற்று பயன் அடைந்துள்ளனர்.
- ✶ தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை முன்னிட்டு 21 பொருட்கள் கொண்ட பொங்கல் பரிசை 2.15 கோடி குடும்பங்களுக்கு வழங்கி இருக்கிறோம்.

- ✶ இவை அனைத்துக்கும் மேலாக கோடிக்கணக்கான மகளிர் நித்தமும் பயன்பெறும் வகையில் அவர்களுக்கு பேருந்துகளில் கட்டணம் இல்லை என்ற மாபெரும் உரிமையை வழங்கி உள்ளோம்.

மக்கள் கடலில் மாபெரும் மகிழ்ச்சி அலை எழும்புவதற்கு இதுதான் காரணம். ஒட்டுமொத்தமாக மாநிலம் முழுவதும் நலத்திட்டங்கள் போய்ச்சேரும் வகையில் செயல்பட்டுள்ளோம்.

- ✶ திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையில் சொல்லப்பட்ட வாக்குறுதிகள மட்டுமில்லாமல், சொல்லாத வாக்குறுதிகளையும் இந்த அரசு நிறைவேற்றும்.

ஆளுநர் உரையில் 66 அறிவிப்புகளை வெளியிட்டு – 49 அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

இந்த 8 மாதத்தில் – ஆளுநர் உரை, நிதிநிலை அறிக்கை, வேளாண் நிதிநிலை அறிக்கை, 110ஆவது விதி உள்ளிட்ட பல்வேறு தலைப்புகளில் 1,641 அறிவிப்புகள் வெளியிட்டுள்ளோம்

அதில், 1,238 அறிவிப்புகளுக்கு அரசாணை வெளியிடப்பட்டுவிட்டது. அதாவது வெளியிட்ட அறிவிப்புகளில், 75 விழுக்காடு நிறைவேற்றப்பட்டுள்ளது.

மீதி இருக்கிற அறிவிப்புகள், புதிய அறிவிப்புகள் நிறைவேற்றபடுவது குறித்து என்னோட அடுத்த உரையில் தெரிவிப்பேன்.

ஒன்று மட்டும் நிச்சயம்.

கொடுத்த வாக்குறுதிகளை நிச்சயம் இந்த ஸ்டாலின் நிறைவேற்றுவேன்.

அதில் யாருக்கும் சந்தேகம் வேண்டாம்!

தேர்தல் அறிக்கையை புத்தகம் போட்டு நாட்டு மக்களுக்கு வெளிப்படையாகக் கொடுத்துள்ளோம். அதனால் அதை வைத்து யாரும் பார்த்துக்கொள்ளலாம்.

இந்த நேரத்தில் நாட்டு மக்களுக்கு நான் சொல்ல வேண்டிய முக்கியமான ஒரு செய்தி இருக்கிறது.

தேர்தல் அறிக்கையில் சொல்லாத பல திட்டங்களை இந்த ஆட்சியில் செயல்படுத்தி இருக்கிறோம்.

தமிழ்நாடு சட்டமன்றத்தில் விதிஎண் 110இன் கீழ் நான் அறிவித்த பல்வேறு அறிவிப்புகளை தமிழ்நாடு அரசு சார்பில் புத்தகமாக போட்டு வெளியிட்டு இருக்கிறோம்.

அதேபோல், சட்டமன்றத்தின் மானியக் கோரிக்கையின்போது அமைச்சர் பெருமக்கள் துறைவாரியாக அறிவித்த அறிவிப்புகளும் 500 பக்க புத்தகமாக வெளியிடப்பட்டுள்ளது. எனவே, எங்கள் செயல்பாடுகளுக்கான ஆதாரம் பொது வெளியில் இருக்கிறது. அந்த அளவிற்கு வெளிப்படையான நிருவாகம்தான் இந்த ஸ்டாலினின் விருப்பம். அதுதான் முத்தமிழறிஞர் கலைஞர் எங்களுக்கு சொல்லித்தந்தது.

எதையும் சும்மா வாய்வார்த்தைக்குச் சொல்லி மறந்து விடுபவர்கள் அல்ல நாங்கள். அதை கல்வெட்டுப்போல மனதில் பதிய வைத்துக்கொண்டு செயல்படுத்துவோம். செயல்படுத்தியும் வருகிறோம்.

கோப்புகள் எப்போதும் எந்தச் சூழலிலும் தேங்கக் கூடாது என்று நான் அமைச்சராக இருந்தபோது என்னிடம் அடிக்கடி தலைவர் கலைஞர் அவர்கள் சொல்வார்கள். அந்த அடிப்படையில் என்னிடம் வரும் அனைத்து மனுக்களையும் உடனுக்குடன் முடிவுகளை எடுத்து உத்தரவுகளை போட்டிருக்கிறேன் என்பதை பெருமையாக, கம்பீரமாக நான் சொல்லிக்கொள்கிறேன்.

மே மாதத்தில் வந்தவை 144 கோப்புகள்,

சூன் மாதத்தில் வந்தவை 220 கோப்புகள்,

சூலை மாதத்தில் வந்தவை 227 கோப்புகள்,

ஆகஸ்ட் மாதத்தில் வந்தவை 241 கோப்புகள்,

செப்டம்பர் மாதத்தில் வந்தவை 422 கோப்புகள்,

அக்டோபர் மாதத்தில் வந்தவை 450 கோப்புகள்,

நவம்பர் மாதத்தில் வந்தவை 559 கோப்புகள்,

– இவை அனைத்தையும் உடனுக்குடன் பார்த்து முடிவுகள் எடுத்துவிட்டேன்.

டிசம்பர் மாதத்தில் என்னிடம் தரப்பட்ட 420 கோப்புகளில் 356 கோப்புகளில் கையெழுத்து போட்டுவிட்டேன். மீதம் 64 கோப்புகள், அதுவும் பல்வேறு கட்டங்களில் ஆலோசனையில் இருக்கிறது.

மொத்தமாகச் சொல்வதாக இருந்தால் பதவி ஏற்றுக்கொண்ட மே மாதம் முதல் என்னிடம் வந்த 2 ஆயிரத்து 683 கோப்புகளில் 2 ஆயிரத்து 619 கோப்புகளைப் பார்வையிட்டு அனைத்திலும் முடிவுகள் எடுத்து கையெழுத்து போட்டுள்ளேன்.

கோப்புகள் துரிதமாக நகர்வதுதான் நல்லாட்சியின் முக்கியமான அடையாளம். அந்த அடையாளத்தின் நல்லரசாக இந்த அரசு செயல்பட்டுவருகிறது.

நான் மட்டுமல்ல, அமைச்சர்கள் அனைவரையும் அவர்களிடம் வரும் கோப்புகளை உடனுக்குடன் முடிவெடுத்து அறிவிப்புகளைச் செய்ய உத்தரவிட்டுள்ளேன் என்பது மட்டுமல்ல, அதனை கண்காணித்தும் வருபவன் நான்.

கோப்புகள் தேங்காத அரசாக இந்த அரசை நடத்திக்காட்டி வருகிறேன்.

கோட்டையில் உட்கார்ந்து உத்தரவுபோடும் முதலமைச்சர் அல்ல நான். மக்களோடு மக்களாக இருந்து அவர்கள் சிந்தனைகளை உணர்ந்து அறிந்து செயல்படுத்திக்காட்டும் முதலமைச்சராகச் செயல்பட்டு வருகிறேன்.

கொரோனா காலமா ? கொரோனா வார்டுக்குள் சென்று நோயாளிகளைக் கவனித்தேன்.

மழை வெள்ளமா ? இடுப்பளவு தண்ணீரிலும் போய் மக்களைச் சந்தித்தேன்.

காஞ்சிபுரத்திலும், கன்னியாகுமரியிலும் எனது கால்கள் பயணித்தது.

திருவள்ளூரிலும், திருப்பூரிலும் நான் வலம் வந்தேன்.

தஞ்சையிலும், திருச்சியிலும் பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் கொடுத்துவிட்டு இரவில் சென்னைக்குத் திரும்பிய நான் கொட்டும் மழையில் சென்னை இருப்பதைக் கண்டு அன்றைய நாள் நள்ளிரவு முழுவதும் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று பராமரிப்புப் பணிகளை முடுக்கி விட்டு நள்ளிரவு 2 மணிக்குத்தான் வீடு திரும்பினேன். மறுநாள் காலையில் மீண்டும் அனைத்துப் பகுதிகளையும் பார்வையிடச் சென்றேன்.

கொரோனா தடுப்பூசியா, மக்கள் தடுப்பூசி போடும் இடத்துக்கே நானும் போய் பார்க்கிறேன்.

ரேசன் கடையில் பொருள்கள் வாங்குவதில் பிரச்சினையா, நானே நேரில் போய் ஆய்வு செய்கிறேன்.

காவல் நிலையத்தில் மக்கள் குறை தீர்க்கப்படுகிறதா என நானே காவல் நிலையத்திற்குப்போய் பார்வையிட்டுள்ளேன்.

என்னை இப்படித்தான் பழக்கி இருக்கிறார் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள்.

மக்களோடு வாழ் என்று சொன்னார் பேரறிஞர் அண்ணா.

அப்படித்தான் வாழ்ந்து வருகிறேன்.

மக்களின் நேற்றையத் தேவையை இன்று நிறைவேற்றித் தருபவனாக இருக்கிறேன்.

நாளைய கோரிக்கையை இன்று உணர்பவனாக இருக்கிறேன்.

ஏனென்றால் நான் மக்களோடு மக்களாக இருக்கிறேன்.

உங்களுக்காகவே உழைக்கிறேன். உழைத்துக் கொண்டிருக்கிறேன்.

உங்களுக்கு உழைக்கவே காத்திருக்கிறேன்.

நன்றி, வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள்,*
எட்டு மாதத்தில் ஏற்றமிகு சாதனைகள் – நாட்டு மக்களுக்கு
காணொலி வாயிலாக ஆற்றிய உரை – ***13.01.2022***

கொரோனா அலையை நிருவகிப்பதில் ஒன்றிய அரசுக்கு தமிழ்நாடு துணை நிற்கும்

கொரோனா தொற்றுநோயின் ஓமிக்ரான் அலையை நிருவகிக்க தமிழ்நாடு முழுமையாக தயார் நிலையில் உள்ளதாகவும், தமது அரசு பொறுப்பேற்ற பிறகு, தடுப்பூசி செலுத்துவதை அதிகரித்துள்ளதாகவும், அந்த வகையில் இன்று வரை, தகுதியுள்ளவர்களில் 64% பேருக்கு முழுமையாக தடுப்பூசி போடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். மேலும், 15 முதல் 18 வயது வரையிலான இளைஞர்களில் 74 சதவிகிதத்தினருக்கு தடுப்பூசி போட்டுள்ளதாகவும், பூஸ்டர் டோஸ் தடுப்பூசிக்கும் தற்போது நல்ல வரவேற்பு உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கொரோனா நோய்த் தொற்றினைக் கட்டுப்படுத்திட, மாநில மற்றும் மாவட்ட அளவில் கட்டுப்பாட்டு அறைகளை ஏற்படுத்தியுள்ளதோடு, தேவையான அனைத்து நகரங்களிலும் கோவிட் பராமரிப்பு மையங்களும் தொடங்கப்பட்டுள்ளதாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தனது உரையில்

குறிப்பிட்டுள்ளார். மேலும், தமிழ்நாட்டில் தேசிய அளவில் வரையறுக்கப்பட்ட சோதனை விதிமுறைகளைத் தொடர்ந்து பின்பற்றுவதாகவும், ஆர்.டி.பி.சி.ஆர். சோதனையை மட்டுமே பயன்படுத்துவதாகவும் குறிப்பிட்ட அவர், ஆர்.டி.பி.சி.ஆர். சோதனைகளின் எண்ணிக்கை, ஆக்சிஜன் உற்பத்தித் திறன், ஆக்சிஜன் சேமிப்பு மற்றும் தீவிர சிகிச்சைப் பிரிவு படுக்கைகளையும் தமிழ்நாட்டில் அதிகரித்துள்ளதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

கோவிட் பெருந்தொற்றினைக் கட்டுப்படுத்தத் தேவையான அனைத்து விதிமுறைகள் மற்றும் நெறிமுறைகளைக் கண்டிப்பாக அமல்படுத்துமாறு அனைத்து அதிகாரிகளுக்கும் தான் அறிவுறுத்தியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், நிலைமையைச் சமாளிக்க அனைத்து அரசு இயந்திரமும் முழுமையாக தயார் நிலையில் உள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இறுதியாக, இந்த கொரோனா அலையை நிருவகிப்பதில் ஒன்றிய அரசு எடுக்கும் அனைத்து முயற்சிகளிலும் தமிழ்நாடு துணை நிற்கும் என்று உறுதியளிப்பதாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்.

கொரோனா அலையை நிருவகிப்பதில் ஒன்றிய அரசு எடுக்கும் அனைத்து முயற்சிகளிலும் தமிழ்நாடு துணை நிற்கும் – மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. ***நரேந்திர மோடி*** *அவர்கள் தலைமையில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.* ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள், ஆற்றிய உரை – 13.01.2022*

ரூ.4,600 கோடியில் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்ட இரண்டாம் கட்ட பணிகள்

தருமபுரி மாவட்டத்தில் அரசின் சார்பில் நடைபெறக்கூடிய இந்த சிறப்பான நிகழ்ச்சியில் கலந்துகொண்டு இந்த நிகழ்ச்சிக்கு தலைமைப் பொறுப்பு ஏற்று உரையாற்றி அமர்ந்திருக்கக்கூடிய மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்களே!

நிகழ்ச்சியில் பங்கேற்று சிறப்பித்துக் கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்களே!

தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் திரு.செந்தில்குமார் அவர்களே!

பென்னாகரம் சட்டமன்ற உறுப்பினர் என்னுடைய மதிப்பிற்குரிய திரு.ஜி.கே.மணி அவர்களே!

தருமபுரி சட்டமன்ற உறுப்பினர் அருமை சகோதரர் திரு.வெங்கடேஸ்வரன் அவர்களே!

தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி திவ்யதர்ஷினி, இ.ஆ.ப., அவர்களே!

மற்றும் பல்வேறு துறைகளைச் சார்ந்திருக்கக்கூடிய அரசு அதிகாரிகளே!

பத்திரிகை, ஊடகத்துறையைச் சார்ந்திருக்கக்கூடிய நண்பர்களே! சகோதரர்களே!

மகளிர் சுயஉதவிக் குழுவைச் சார்ந்திருக்கக்கூடிய அன்பிற்கினிய தாய்மார்களே! சகோதரிகளே!

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கத்தை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழக அரசின் சார்பில் நடைபெறக்கூடிய பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி மற்றும் திட்டப் பணிகளைத் தொடங்கி வைக்கக்கூடிய அந்த நிகழ்வு, பல்வேறு அடிக்கல் நாட்டு விழாக்களையும் நடத்தக்கூடிய அந்த நிகழ்ச்சி, இப்படி பல்வேறு நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்து இந்த நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

பழங்காலத்தில் தகடூர் என்று அழைக்கப்பட்ட தருமபுரியில், கடையேழு வள்ளல்களில் ஒருவரான அதியமான் வாழ்ந்த தருமபுரியில் நடைபெறும் இந்த நிகழ்ச்சியைப் பொறுத்தவரைக்கும், காணொலி விழாவில் இந்த நிகழ்ச்சியை நடத்திக்கொண்டிருக்கிறோம்.

நான் தருமபுரிக்கு நேரடியாக வந்து எனது கரங்களால் உங்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்க வேண்டும் என்று எதிர்பார்ப்போடு நீங்கள் எப்படி காத்திருந்தீர்களோ நானும் அப்படித்தான் காத்திருந்தேன். ஆனால், கொரோனா காலக் கட்டுப்பாடுகள் அதைக் கொஞ்சம் தடுத்திருக்கிறது.

தருமபுரி மாவட்டத்துக்கு என்று அரசுத் துறைகளை கவனிப்பதற்காக, அதை முறைப்படுத்துவதற்காக, தொடர்ந்து ஆய்வு செய்வதற்காக அமைச்சரவையில் இடம்பெற்றிருக்கக்கூடிய சகோதரர் திரு.எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்களை நான் அரசின் சார்பில் நியமித்திருக்கிறேன் என்பது உங்கள் அனைவருக்கும் நன்றாகத் தெரியும். எங்களால் வேங்கையின் மைந்தன் என்று அழைக்கப்படுபவர். ஆள் பார்க்க அமைதியாகத் தெரிவார். ஆனால் காரியத்தைக் கொடுத்துவிட்டால் வேங்கையைப் போல விறுவிறுப்பாகவும், சுறுசுறுப்பாகவும் செயல்படக் கூடியவர் தான் அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்கள். இந்த விழாவை அவர் எப்படி எல்லாம் நடத்த திட்டமிட்டார் என்பது உங்களுக்கும் தெரியும், எனக்கும் தெரியும். அதனை அரசு விழாவாக மட்டுமில்லாமல், பல்வேறு கிராமங்களை உள்ளடக்கிய கிராமத் திருவிழாவாக நடத்த வேண்டும் என்று அவர் பல மாதங்களாக முயற்சிகளில் ஈடுபட்டிருந்தார். ஆனால், கொரோனாவால் அதனை நாம் பார்க்க முடியாமல் போய்விட்டது. அதனால் சில கட்டுப்பாடுகளை அரசின் சார்பாக விதித்திருப்பதன் காரணத்தால், அந்த நிகழ்ச்சியை நம்மால் நடத்த முடியாமல் போய்விட்டது. ஆனாலும் இன்னும் சில வாரங்களில் மற்றொரு வாய்ப்பு கிடைக்கும். அப்போது நிச்சயமாக தருமபுரிக்கு வருவேன் என்ற உறுதியை முதலில் நான் உங்களிடத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தருமபுரி மாவட்டம் என்றாலே இரண்டு விஷயங்களை நாம் மறக்க முடியாது. ஒன்று தலைவர் கலைஞரால் உருவாக்கப்பட்ட மகளிர் சுயஉதவிக் குழுக்கள் தருமபுரியில்தான் முதல் முதலாக தொடங்கப்பட்டது. இன்னொன்று என்னவென்றால், என்னுடைய மேற்பார்வையில் நடந்த ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டம்.

சமூகத்தின் சரிபாதியான மகளிர் இனம், தனது சொந்தக் காலில் நிற்க வேண்டும், பொருளாதாரத் தன்னிறைவு பெற்றவர்களாக மகளிர் வாழ வேண்டும் என்பதற்காகத்தான் தலைவர் கலைஞர் அவர்கள் மகளிர் சுயஉதவிக் குழுக்களை தருமபுரி மாவட்டத்தில் முதன்முதலாக தொடங்கிவைத்தார்கள். அந்தத் திட்டத்தின் தொடக்கவிழா நடந்தது முதன்முதலில் தருமபுரியில் தான். இங்கு நடந்த விழாவிற்கு கலைஞர் அவர்களே நேரடியாக வந்து மகளிருக்கு கடன் வழங்கும் அந்த திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.

உள்ளாட்சித்துறையின் அமைச்சராக இருந்த நான் தமிழ்நாடு முழுவதும் சுற்றுப்பயணம் செய்து அரசு விழாக்கள் மூலமாக மகளிர் சுயஉதவிக் குழுக்களை அன்றைக்கு நாம் வார்த்தெடுத்தோம்.

இன்றைய தினம் எந்த ஊருக்குச் சென்றாலும், நாங்கள் மகளிர் சுயஉதவிக் குழுவைச் சேர்ந்தவர்கள் என்றும், உங்களால் கடன் பெற்று இன்று தலைநிமிர்ந்து வாழ்கிறோம் என்று மகளிர் பலர் பேசும் போது, என்னையும் அறியாமல் மனம் மகிழ்ச்சி அடையக்கூடிய அளவிற்கு என்னுடைய உணர்வு வந்துவிடுகிறது. அதனால், என்னால் தருமபுரி மாவட்டத்தை ஒருக்காலும் மறக்க முடியாது.

அதேபோல், என்னுடைய வாழ்க்கையில் நீ எதையாவது சாதித்திருக்கிறாயா என்று கேட்டால், பட்டியல் போடும்போது நிச்சயம் இடம்பெறும் மகத்தானத் திட்டம்தான் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டம்.

தருமபுரி மாவட்ட மக்கள் மட்டுமல்ல, கிருஷ்ணகிரி மாவட்ட மக்களும் குடிநீருக்காக பல கிலோமீட்டர் தூரம் நடந்து செல்ல வேண்டிய நிலை இருந்தது. அவர்களுக்கு கிடைக்கக்கூடிய குடிதண்ணீரில் ப்ளோரைடு அதிகமாக கலந்து இருந்தது. குறிப்பாக

பென்னாகரம், பாலக்கோடு, தருமபுரி உள்ளிட்ட பகுதிகளில் உள்ள மக்களுக்கு எலும்பு சம்பந்தப்பட்ட நோய்களும் பற்களில் காரை படிவதும் நீண்ட நாட்களாக இருந்து வந்தது. இதில் இருந்து இந்த இரண்டு மாவட்ட மக்களைக் காப்பாற்றுவதற்காக உருவாக்கப்பட்ட திட்டம் தான் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டம்.

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் சிந்தனையில் உதித்த திட்டம் அந்தத் திட்டம். அன்றைக்கு நான் உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்து அந்தத் திட்டத்தை செயல்படுத்த நான் எந்த அளவிற்கு முனைப்பாக இருந்தேன் என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு என்னை ஜப்பான் நாட்டுக்கு அனுப்பி வைத்தார். இதற்கான திட்டமிடுதல்கள், நிதி வசதிகள் ஏற்பாடு செய்தல் ஆகியவற்றை முடுக்கிவிடச் சொன்னார்கள். நான் ஜப்பான் சென்று இதற்கான பணிகளைச் செய்தேன். அப்படி உருவாக்கப்பட்டது தான் இந்த ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டம். அந்த சீரிய திட்டத்தைக் கடந்த 2008ஆம் ஆண்டு தருமபுரியில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களே நேரடியாக வந்து துவக்கி வைத்தார்.

பலமுறை கிருஷ்ணகிரி மற்றும் தருமபுரிக்கு நான் நேரடியாக ஆய்வு செய்து அந்தப் பணிகளை முடுக்கிவிட்டேன். சுமார் 80 சதவீத பணிகள் நிறைவுற்ற நிலையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. அடுத்து வந்த ஆட்சி, அந்தத் திட்டத்தை முடக்கிவைத்தது. இந்தத் திட்டத்தை செயல்படுத்த வேண்டும் என்பதற்காக நானே தருமபுரி மாவட்டத்திற்குச் சென்று அங்கிருக்கக்கூடிய மக்களையெல்லாம் ஒன்று திரட்டி போராட்டம் நடத்தினேன். அதன்பிறகுதான் வேறு வழியில்லாமல் அந்தத் திட்டத்தை கடந்த கால அரசு நிறைவேற்றியது.

எனவேதான் தருமபுரியை நினைத்தால் என்னுடைய நினைவிற்கு வருவது ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டம், அதை மறக்கவே முடியாது.

இப்போது இந்த இரண்டு மாவட்டங்களிலும் உள்ள 3 நகராட்சிகள், 16 பேரூராட்சிகள் மற்றும் 7,639 ஊரக குடியிருப்புகளில் வாழும் மக்களுக்கு இத்திட்டம் நிறைவேற்றப்பட்டு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படும் குடிநீரின் அளவை மேலும் உயர்த்தும் வகையில், இத்திட்டத்தின் இரண்டாவது கட்டப்பணிகளை 4,600 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்துவதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிகள் துவக்கப்படும் என்பதை இந்த நிகழ்ச்சியின் மூலமாக உங்கள் அனைவருக்கும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, இன்னும் சில அறிவிப்புகளை நான் இங்கு கூற இருக்கிறேன்.

- ✶ சேலம் – தருமபுரி மாவட்டங்களுக்கு இடையேயான போக்குவரத்தை மேலும் எளிதாக்கக்கூடிய வகையில், சேலம் மாவட்டத்தில் உள்ள கோட்டையூருக்கும், தருமபுரி மாவட்டத்தில் உள்ள ஒட்டனூருக்கும் இடையே புதிய மேம்பாலம் ஒன்று அமைக்கப்பட்டு, 250 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய சாலை இணைப்பு உருவாக்கப்படும்.
- ✶ அதிக அளவில் பால் உற்பத்தி செய்யும் தருமபுரி மாவட்ட விவசாயிகளின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று தருமபுரியில் புதிய பால் பதனிடும் நிலையம் ஒன்று அமைக்கப்படும்.
- ✶ புதிய தொழிற்சாலைகளை ஏற்படுத்தி இளைஞர்களுக்கு அதிக அளவில் வேலைவாய்ப்புகளை வழங்குவதற்கு

ஏதுவாக தருமபுரியில் புதிய சிப்காட் தொழில் பூங்கா ஒன்று அமைக்கப்படும்.

- ✶ தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகத்தில், 40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அனைத்து வசதிகளுடன் கூடிய கூடுதல் அலுவலகக் கட்டடம் ஒன்று அமைக்கப்படும்.

– ஆகிய அறிவிப்புகளை இந்நிகழ்ச்சியின் மூலமாக நான் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைய தினம்,

- ✶ 56.20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 46 அரசுக் கட்டடங்கள் திறந்துவைக்கப்பட்டுள்ளன.
- ✶ 591 புதிய கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டி இருக்கிறேன். இதன் மொத்த மதிப்பு 35.42 கோடி ரூபாய் ஆகும்.

இந்தக் கட்டடங்கள் தருமபுரி மாவட்டத்தில் தருமபுரி, நல்லம்பள்ளி, அரூர், கடத்தூர், பென்னாகரம், மொரப்பூர், பாப்பிரெட்டிபட்டி, எரியூர், காரிமங்கலம் ஆகிய பல்வேறு இடங்களில் அமைய இருக்கிறது. இவை விரைந்து கட்டப்படும். விரைவில் திறப்பு விழாவும் நடைபெறும்.

இன்றைய தினம் 13 ஆயிரத்து 587 பேருக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் செய்யப்பட இருக்கின்றன.

- ✶ வீட்டுமனைப்பட்டா,
- ✶ முதியோர் உதவித்தொகை,
- ✶ மாற்றுத்திறனாளிகளுக்கான உதவிகள்,
- ✶ கைம்பெண் உதவித்தொகை,
- ✶ முதிர்கன்னி உதவித் தொகை,

* திருமண உதவித் தொகை,
* கல்வி உதவித்தொகை,
* உழவர் அட்டைகள்,
* பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டம்,
* கருணை அடிப்படையிலான பணிகள்,
* இருளர் மக்களுக்கு வீடுகள்,
* இலவச சலவைப் பெட்டி,
* உலமாக்களுக்கு உதவி,
* கொரோனாவால் பெற்றோரை இழந்த குழந்தைகளுக்கு இழப்பீடு,
* புதிய விவசாய மின் இணைப்புகள்,
* சூரிய மின் சக்தி,
* நுண்ணுயிர் பாசனத் திட்டம்,
* நகரும் காய்கறி வண்டி

– என்று பல்வேறு வகையில் இந்த நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன. நான் சிலவற்றைத்தான் இங்கு குறிப்பிட்டிருக்கிறேன். இன்னும் பல்வேறு உதவிகள் வழங்கப்படவிருக்கிறது.

13 ஆயிரத்து 587 பேருக்கு சுமார் 157 கோடியே 41 இலட்சத்து 88 ஆயிரத்து 552 ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் செய்யப்படுகின்றன. மொத்தமாகச் சொல்வதாக இருந்தால்,

இன்றைய தினம் மட்டும் 249 கோடியே 5 இலட்சத்து, 11 ஆயிரத்து, 552 ஆயிரம் ரூபாய்க்கான நலத்திட்டங்கள்

மக்களுக்காக உருவாக்கப்பட்டுள்ளன. இதையெல்லாம் நான் செய்து வழங்கியுள்ளேன் என்று சொல்வதைவிட, உங்களால் உருவாக்கப்பட்ட இந்த அரசு, உங்களுக்கு வழங்கியிருக்கிறது என்று சொன்னால்தான் அது சரியாக இருக்கும், பொருத்தமாக இருக்கும்.

எங்கள் மீது நம்பிக்கை வைத்து நீங்கள் ஆட்சியை வழங்கினீர்கள். உங்களுக்குக் கொடுத்த வாக்குறுதியை நாங்கள் காப்பாற்றி வருகிறோம் என்பதன் அடையாளம்தான் இந்த விழா. இதுபோன்ற விழாக்கள் இனிமேல் அடிக்கடி நடக்கும். இங்கு மட்டுமல்ல, அனைத்து மாவட்டங்களிலும் நடக்கும்.

கழக அரசு என்பது எப்போதும் இதே சுறுசுறுப்புடன் தான் செயல்படும்.

சில நாட்களுக்கு முன்னால் பிசினஸ் லைன் என்கிற ஆங்கில நாளேடு வெளியிட்ட சிறப்புக் கட்டுரையில், ‘தொழில் முதலீடுகளுக்கு மிகச் சிறந்த மாநிலம் தமிழ்நாடுதான்’ என்று எழுதி இருக்கிறது.

மே மாதம் இந்த அரசு பொறுப்பேற்றது. இந்த ஆறு மாத காலத்தில் 304 திட்டங்களுக்காக ஒரு இலட்சத்து 34 ஆயிரத்து 902 கோடி ரூபாய் முதலீடுகளை தமிழ்நாடு ஈர்த்துள்ளது என்று சொன்னால், அதுதான் தமிழ்நாட்டில் நடப்பது நல்லாட்சி என்பதற்கான உதாரணம்.

ஒரு மாநிலத்தில் ஏராளமான முதலீடுகள் பல்வேறு நிறுவனங்களால் செய்யப்படுகிறது என்றால் அந்த மாநிலத்தில் நல்லாட்சி நடக்கிறது என்று பொருள். அந்த மாநிலத்தில் அமைதி நிலவுகிறது என்று பொருள். அந்த மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு சீராக இருக்கிறது என்று பொருள். அந்த மாநிலம் வளர்ச்சிக்குரிய மாநிலமாக இருக்கிறது என்று பொருள். அந்த மாநிலத்தில் புதிய நிறுவனத்தை தொடங்கினால் அந்த நிறுவனம் வளரும் என்று பொருள்.

அத்தகைய மரியாதையை, பெருமையை இன்றைய அரசு பெற்றிருக்கக்கூடிய காரணத்தால்தான், இத்தனை நிறுவனங்கள், இவ்வளவு பெரிய தொகையைக் கொண்டுவந்து தமிழ்நாட்டில் முதலீடு செய்துள்ளார்கள்.

முதலீடு என்பது வெறும் தொழில் சார்ந்தது மட்டுமல்ல, அது வளர்ச்சியைச் சார்ந்தது. அது நல்லாட்சியின் அடையாளம் ஆகும். அத்தகைய பெயரை ஆட்சிக்கு வந்த ஆறுமாத காலத்தில் பெற்றிருக்கிறோம், அதுதான் முக்கியமானது. இரண்டு ஆண்டுகள் கழித்தோ, நான்கு ஆண்டுகள் கழித்தோ பெயர் வாங்குவதைவிட ஆறுமாத காலத்தில் பெயர் வாங்குவதுதான் மிகமிக முக்கியமானது.

இதை எல்லாம் வைத்துப் பார்க்கும் போது எனக்கு மிகப்பெரிய நம்பிக்கை பிறக்கிறது.

நமது தாய்த்தமிழகத்தை தலைசிறந்த மாநிலமாக நிச்சயமாக நாம் ஆக்குவோம், ஆக்க முடியும், அதுவும் விரைவில் ஆக்க முடியும் என்ற நம்பிக்கை எனக்கு பிறக்கிறது. அந்த நம்பிக்கையோடு உங்கள் அனைவருக்கும் நான் மீண்டும் ஒரு முறை நன்றி கூறி என் உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி, வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள்,*
தருமபுரி மாவட்டத்தில் முடிவுற்ற திட்டப்பணிகளை திறந்துவைத்து,
புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, பயனாளிகளுக்கு
அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி ஆற்றிய உரை – ***20.01.2022***

திருக்கோயில்கள் சிறப்படையும் என்ற நம்பிக்கை எனக்கு நிச்சயமாக வந்துவிட்டது

இந்து சமய அறநிலையத்துறை ஆலோசனைக் குழுக் கூட்டத்திற்கு வருகை தந்திருக்கக்கூடிய அனைவரையும் வரவேற்புரை ஆற்றி மகிழ்ந்திருக்கக்கூடிய முதன்மைச் செயலாளர் திரு.சந்தரமோகன், இ.ஆ.ப., அவர்களே!

இந்த நிகழ்ச்சிக்கு முன்னிலை பொறுப்பேற்றிருக்கக்கூடிய இந்தக் குழுவின் துணைத் தலைவர் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்களே!

இந்தக் குழுவில் உறுப்பினர்களாக பொறுப்பேற்றுக்கொண்டு இந்தத் துறைக்கும், அரசுக்கும் பல்வேறு சிறப்புகளைத் தேடித் தருவதற்காக உறுதி எடுத்திருக்கக்கூடிய தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் அவர்களே!

மதிப்பிற்குரிய திரு.சுகி சிவம் அவர்களே!

திரு.தரணிபதி இராஜ்குமார் அவர்களே!

திருமதி தேச மங்கையர்க்கரசி அவர்களே!

ஸ்ரீமத் வராக மகாதேசிகன் அவர்களே!

ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் அவர்களே!

முனைவர் திருப்பெருந்திரு சாந்தலிங்க மருதாசல அடிகளார் அவர்களே!

நீதியரசர் திரு.டி.மதிவாணன் அவர்களே!

திரு.கருமுத்து தி. கண்ணன் அவர்களே!

முனைவர் சக்திவேல் முருகனார் அவர்களே!

திரு.ந.சுப்பிரமணி அவர்களே!

திருமதி ஸ்ரீமதி சிவசங்கர் அவர்களே!

நிறைவாக நன்றி நல்கவிருக்கக்கூடிய ஆணையர் திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., அவர்களே!

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கத்தை நான் முதலில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஆட்சிப் பொறுப்பேற்றதிலிருந்து முதலமைச்சர் என்கின்ற முறையில், அரசினுடைய துறைகளைச் சார்ந்திருக்கக்கூடிய அதிகாரிகள் கூட்டத்தில்தான் நான் தொடர்ந்து பங்கேற்று வந்திருக்கிறேன் என்பது உங்களுக்குத் தெரியும். அப்படி பணியாற்றிக் கொண்டிருந்த நேரத்தில் இன்று உங்களைச் சந்திக்கக்கூடிய, உங்கள் கருத்துக்களைக் கேட்கக்கூடிய, உங்களுடன் கலந்தாய்வு நடத்தக்கூடிய சிறப்பான வாய்ப்பு எனக்குக் கிடைத்திருக்கிறது.

குறிப்பாக, திருக்கோயில்களின் வளர்ச்சிக்காக தமிழ்நாடு இந்து சமயம் மற்றும் அறக்கொடைகள் சட்டத்தின்படி மாநில அளவில் ஒரு

ஆலோசனைக்குழு இந்தத் துறைக்கு அமைக்கப்பட வேண்டும். ஆனால், இந்தக் குழு 2015–க்குப் பிறகு அமைக்கப்படவில்லை என்ற தகவல். இந்தத் தகவல் என் கவனத்திற்கு நம்முடைய துறையின் அமைச்சர் அவர்கள் கொண்டுவந்த நேரத்தில், உடனடியாக அதற்கான பணிகளை நீங்கள் நிறைவேற்ற வேண்டும் என்று நான் அவரிடத்தில் வலியுறுத்தி, வற்புறுத்திச் சொன்னேன். அந்த அடிப்படையில்தான் கடந்த 21.06.2021 அன்று மாண்புமிகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரையில், சட்டமன்றத்தில் அவர் தாக்கல் செய்த கவர்னர் உரையில், இப்படி ஒரு குழு அமைக்கப்படும் என்று அவருடைய அறிக்கையில் அறிவிக்கப்பட்டது.

அந்த அடிப்படையில், 6 ஆண்டுக் காலமாக நியமிக்கப்படாத இந்தக் குழு – 13 அலுவல் சாரா உறுப்பினர்களுடன் அமைக்கப்பட்டு அதற்குப் பின்னால் இந்தக் கூட்டம் இங்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

நீங்கள் எல்லாம் அரசியல் தொடர்பில்லாத, ஆன்மீகத்தில் நாட்டமுள்ளவர்கள் என்பது எல்லோருக்கும் தெரியும், ஏன் பொதுநலனில் மிகுந்த அக்கறை கொண்டவர்கள் நீங்கள். உங்களை எல்லாம் இக்குழுவில் அலுவல் சாரா உறுப்பினர்களாக நியமித்துள்ளதில் நான் உள்ளபடியே மகிழ்ச்சியடைகிறேன். மகிழ்ச்சியடைகிற நேரத்தில் நீங்கள் இந்தக் குழுவில் இடம்பெற வேண்டும் என்று உங்களிடத்தில் கேட்ட நேரத்தில் நீங்களும் மனமுவந்து ஒப்புக்கொண்டு இந்தக் குழுவிற்கு பெருமை சேர்த்துத் தந்திருக்கிறீர்கள், இந்த அரசுக்கும் பெருமை சேர்த்துத் தந்திருக்கிறீர்கள். அதற்காக நான் முதலில் நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அனைவரும் மகிழ்ச்சிகரமாக இருக்கின்ற இந்த வேளையில், கழக அரசு இத்துறையில் கடந்த 8 மாதத்தில் செய்திருக்கக்கூடிய

சாதனைகளை ஆன்மீகத்தில் நாட்டம் உள்ள நீங்கள் நன்றாக அறிவீர்கள். ஆனாலும் ஆட்சிக்கு தலைவர் என்ற முறையில், அவற்றை எல்லாம் உங்களிடம் பகிர்ந்துகொள்வதில் எனக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது, அப்படி பகிர்ந்துகொள்வதை என்னுடைய கடமையாகவும் நான் கருதுகிறேன்.

725 திருக்கோயில்களுக்கு திருப்பணி வழங்க அனுமதி.

அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகலாம் என்ற திட்டத்தில் 58 அர்ச்சகர்கள் நியமனம்.

அன்னைத் தமிழில் அர்ச்சனை.

ஒருகால பூசைத் திட்டத்திற்கு ரூ.1 இலட்சமாக இருந்த நிதி ரூ.2 இலட்சமாக உயர்வு.

அத்திட்டத்தில் உள்ள அர்ச்சகர்களுக்கு முதல் முறையாக ஊக்கத் தொகையாக 1,000 ரூபாய் வழங்குதல்.

10 திருக்கோயில்களில் மருத்துவ மையங்கள்.

திருத்தணி, சமயபுரம், திருச்செந்தூர் கோயில்களில் நாள் முழுவதும் அன்னதானத் திட்டம்.

ஆயிரத்து 689 கோடி ரூபாய் மதிப்புள்ள திருக்கோயில் நிலங்கள் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்பு.

10 ஆண்டுகளுக்கும்மேல் ஓடாமல் இருந்த சமயபுரம், திருத்தணி கோயில் தங்கரதங்கள் உலாவர நடவடிக்கை.

திருக்கோயில்களில் உள்ள 65 தங்கத் தேர், 49 வெள்ளித் தேர்களை முறையாகப் பராமரித்து உலா வருவதற்கான நடவடிக்கை.

100 திருக்கோயில்களில் உள்ள நந்தவனங்கள் மேம்படுத்துதல், திருத்தேர் திருப்பணி, திருக்குளப் பராமரிப்பு.

கொரோனா பேரிடர் காலத்தில் திருக்கோயில் அர்ச்சகர்கள், ஒருகால பூஜை திட்டத்தில் உள்ள அர்ச்சகர்களுக்கு 15 வகையான உணவுப் பொருட்கள் மற்றும் 4,000 ரூபாய் நிதியுதவி.

திருக்கோயில்களில் பணியாற்றி ஓய்வு பெற்ற அர்ச்சகர், ஓதுவார், இசை கலைஞர் ஆகியோருக்கு 1,000 ரூபாயாக இருந்த ஓய்வூதியம் 3,000 ஆக உயர்வு.

கிராமக் கோயிலில் பணியாற்றி ஓய்வு பெற்ற பூசாரிகளுக்கு மாத ஓய்வூதியம் 3 ஆயிரத்திலிருந்து 4 ஆயிரமாக உயர்வு.

அரசு ஊழியர்களுக்கு வழங்கியதுபோல் அகவிலைப்படி உயர்வு, 2,000 ரூபாய் பொங்கல் கருணைத் தொகை.

திருக்கோயில் அர்ச்சகர்களுக்கு புத்தாடை, பணியாளர்களுக்கு சீருடை.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த தினமான 03.06.2021 அன்று இந்த ஆணையர் அலுவலகத்தில் தல மரக்கன்று நடும் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டு, இதுவரை திருக்கோயில்களில் 68 ஆயிரம் மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன.

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள 490 திருக்கோயில்களின் நிருவாகம் மற்றும் பராமரிப்பு செலவுக்கு ஒதுக்கிய நிதி ரூ.3 கோடியை ரூ.6 கோடியாக உயர்த்தி வழங்கியது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள 225 திருக்கோயில்களின் நிருவாகம் மற்றும் பராமரிப்பு செலவிற்கு 1 கோடி ரூபாய் என்பதை 3 கோடி ரூபாயாக உயர்த்தி வழங்கியது.

10 கல்லூரிகள் துவங்குவதாக அறிவிக்கப்பட்டு, 4 கல்லூரிகள் ஏற்கெனவே தொடங்கியது. இதனால் 500 மாணவர்கள் பயன்பெற்று வருகிறார்கள்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதிகளில் உள்ள மக்களுக்கு வழங்கப்படும் 1 இலட்சம் நிதி 2 இலட்சமாக உயர்வு.

கிராமப்புற திருக்கோயில்கள் திருப்பணிக்காக 1 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டு வந்த நிதி 2 இலட்சம் ரூபாயாக உயர்வு.

அன்னதானத் திட்டத்தின் மூலம் கொரோனா காலத்தில் இதுவரை 44 இலட்சம் உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இன்னும் சொல்வதற்கு பல சாதனைகள் இருக்கின்றன. ஆனால் குறிப்பிட்ட சிலவற்றை மட்டும்தான் உங்களிடம் நான் பகிர்ந்து கொண்டிருக்கிறேன்.

திருக்கோயில்களின் பணிகளை மேலும் செம்மையாக எடுத்துச் செல்வதற்கு உங்களின் ஆலோசனைகளை எல்லாம் நிச்சயம் இந்த அரசுக்கு வேண்டும் என்ற அந்த நோக்கத்தில்தான் இந்தக் குழு அமைக்கப்பட்டது, அந்தக் குழுவின் சார்பில்தான் இந்தக் கூட்டம் நடந்துகொண்டிருக்கிறது.

திருக்கோயில்கள் வளர்ச்சிப் பணியில் ஆலோசனைக்குழுவில் உள்ள உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்குமான பொருண்மைகள் குறித்து இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

- திருக்கோயில்களின் தல வரலாறு மற்றும் தல புராணத்தைத் தவிர திருக்கோயில்கள் மற்றும் திருமடங்களால் வெளியிடப்பட்ட அரிய வகைப் புத்தகங்களை மறு பதிப்பாக்கம் செய்தல், மின்னணுமயமாக்குதல் மற்றும் அப்புத்தகங்களை திருக்கோயில்கள் மற்றும் திருமடங்கள்

வாயிலாகப் பக்தர்களுக்கு குறைந்த விலையில் விற்பனை செய்தல்.

- தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்,
- ஸ்ரீமத் வராக மகாதேசிகன்

✶ திருக்கோயில்கள் மற்றும் திருமடங்களால் வெளியிடப்பட்ட அரிய புத்தகங்களை மறுபதிப்பாக்கம் செய்தல், மின்னனுமயமாக்குதல் மற்றும் அப்புத்தகங்களை திருக்கோயில்கள்/ திருமடங்கள் வாயிலாக பக்தர்களுக்கு விற்பனை செய்தல்.

- ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாச்சாரிய சுவாமிகள்

✶ திருக்கோயில்களின் சார்பில் நடத்தப்படும் ஓதுவார்கள் பயிற்சிப் பள்ளிகள், அர்ச்சகர்கள் பயிற்சிப் பள்ளிகள் மற்றும் இசைப் பள்ளிகளின் தரம் மற்றும் பாடத்திட்டத்தினை மேம்படுத்துதல், மாணவர்களின் சேர்க்கையை அதிகரித்தல் மற்றும் அவர்களுக்கான வேலைவாய்ப்பினை உறுதிப்படுத்துதல்.

- முனைவர் திருப்பெருந்திரு சாந்தலிங்க மருதாசல அடிகளார்,
- திரு. கருமுத்து தி. கண்ணன்,

✶ தமிழ்நாடு இந்து சமயம் மற்றும் அறநிலையக் கொடைகள் சட்டம் 1959இல் உள்ள பிரிவுகளை தற்போதைய நடைமுறைக்கு ஏற்றவாறு திருத்தி அமைத்தல்

- நீதியரசர் டி. மதிவாணன் (ஓய்வு)

- ✶ திருக்கோயில்களின் ஆகமங்களை பக்தர்கள் அறிந்து பயன்பெறும் வகையில் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் வெளியிடுதல்,
  - ➢ முது முனைவர் மு.பெ.சத்தியவேல் முருகனார்
  - ➢ திரு. சுகி சிவம்
- ✶ திருக்கோயில்களில் ஆன்மீகச் சொற்பொழிவு, ஆன்மீக வகுப்புகள் மற்றும் ஆன்மீக நிகழ்ச்சிகள் நடத்துதல்.
  - ➢ திருமதி தேச மங்கையர்க்கரசி,
  - ➢ திரு. ந. இராமசுப்பிரமணியன்
- ✶ திருக்கோயில்களின் சார்பில் பக்தர்களுக்கு அளிக்கப்படும் அனைத்து சேவைகளையும் கணினிமயமாக்குதல்.
  - ➢ திருமதி ஸ்ரீமதி சிவசங்கர்,
  - ➢ திரு. தரணிபதி இராஜ்குமார்
- ✶ திருக்கோயில்களின் நிதி மேலாண்மையினை மேம்படுத்துதல் மற்றும் கணினிமயமாக்குதல்
  - ➢ திரு. மல்லிகார்ஜுன் சந்தானகிருஷ்ணன்

உங்களுடைய ஆலோசனையைப் பெற்று அதற்கேற்ற வகையில் அரசின் சார்பில், இந்தத்துறையின் சார்பில் செய்ய வேண்டிய பணிகளை எல்லாம் நம்முடைய தவத்திரு அடிகளார் அவர்களும், திரு.சு.கி.சிவம் அவர்களும், திரு.தரணிபதி இராஜ்குமார் அவர்களும், திருமதி தேச மங்கையர்க்கரசி அவர்களும் இங்கு பேசும்போது பல கருத்துக்களையும், ஆலோசனைகளையும் எடுத்து வைத்திருக்கிறார்கள். நிச்சயமாக, இந்தத்துறையின்

அமைச்சர் திரு.சேகர்பாபு அவர்கள் சொன்னதுபோல, அவைகள் எல்லாம் நிச்சயமாக, படிப்படியாக, உறுதியாக நிறைவேற்றப்படும் என்பதையும் தெரிவித்துக்கொண்டு, கடந்த 8 மாதங்களில் அனைவரும் போற்றத்தக்க வகையில், இன்னும் பெருமையாக சொல்ல வேண்டுமென்றால், தமிழ்நாட்டில் இருக்கின்ற அந்தப் புகழ்ச்சியைவிட மற்ற மாநிலங்கள், தமிழ்நாட்டின் அரசை பாராட்டக்கூடிய அளவிற்கு, பல வெளிநாடுகள் பாராட்டக்கூடிய அளவிற்கு ஊடகங்களில் செய்தி வந்துகொண்டிருக்கின்றன, நீங்களும் பார்த்திருப்பீர்கள். அது உள்ளபடியே பெருமை தான். நான் இன்னும் சொல்லிக்கொண்டிருக்கிறேன், இந்தியாவில் இருக்கக்கூடிய நான்கைந்து முதலமைச்சர்களை ஒரு கணிப்பு நடத்தி ஒரு ரிசல்ட் வெளியிட்டார்கள். அதில் எனக்கு முதலிடம் கிடைத்தது. அது எனக்குப் பெருமைதான். இந்தியாவில் நம்பர் 1 முதலமைச்சர் என்று சொல்வதை விட, நம்பர் 1 தமிழ்நாடு என்று சொல்வதுதான் எனக்குப் பெருமை. அதை நோக்கித் தான் நாம் போய்க்கொண்டிருக்கிறோம். அதற்கு உங்களுடைய ஒத்துழைப்பு நிச்சயமாக இருக்கப் போகிறது.

இந்தக் குழுவில் இடம்பெற்றிருக்கும் நீங்கள் சொல்லியிருக்கும் யோசனைகள், ஆலோசனைகள், அதனால் இந்தத் துறையின் செயல்பாடு நிச்சயமாக மிளிரப் போகிறது. இந்தக் குழுவின் நோக்கம் சமய நிறுவனங்களில் பொதுமக்களுக்கான வசதிகளை ஏற்படுத்தித் தருவது, அது மட்டுமன்றி, மலைக் கோயில்களுக்கு செல்லும் பக்தர்களுக்கு கம்பிவட ஊர்தி ஏற்பாடு செய்தல், நந்தவனங்களை மேம்படுத்துதல், திருக்குளம் பராமரிப்பு, திருத்தேர் பராமரிப்பு உள்ளிட்டவை குறித்து தங்கள் கருத்துக்களைத் தயக்கமின்றி, சுதந்திரமாக இந்தத்துறை அமைச்சர் அவர்களிடத்தில் நீங்கள் சொல்லலாம், அலுவலர்களிடத்தில் சொல்லலாம். இன்னும் சொல்ல

வேண்டுமென்றால், என்னையும் நேரடியாக சந்தித்துச் சொல்லலாம், அதற்கு உங்களுக்கு உரிமை உண்டு. எந்த நேரத்திலும் என்னை சந்திப்பதற்கான வாய்ப்பு உங்களுக்கு உண்டு.

நீங்கள் அனைவரும் இடம்பெற்றிருக்கும் இந்தக் குழுவின் செயல்பாடு இந்து சமய அறநிலையத்துறையை மேலும் மிளிர வைக்கும், திருக்கோயில்கள் சிறப்படையும் என்ற நம்பிக்கை எனக்கு நிச்சயமாக வந்துவிட்டது, உங்களைப் பார்த்தவுடனேயே வந்துவிட்டது. பொதுமக்கள், அதற்கு முன் இல்லாத அளவிற்கு அனைத்து வசதிகளையும் திருக்கோயில்கள் மூலமாகப் பெற வேண்டும் என்று இந்தத்துறையின் மூலமாகப் பெறுவார்கள் என்று நம்புகிறேன். மீண்டும் நான் இந்தக் குழுவில் இடம் பெற்றிருக்கக்கூடிய உங்களுக்கு, அரசின் சார்பிலும், இந்தத்துறையின் சார்பிலும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து என் உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி, வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், சென்னை, நுங்கம்பாக்கத்தில்*
நடைபெற்ற இந்து சமய அறநிலையத்துறை ஆலோசனைக்
*குழுக் கூட்டத்தில் ஆற்றிய உரை – **20.01.2022***

சங்கம் வளர்த்த மதுரையில் ரூ.114 கோடியில் முத்தமிழறிஞர் "கலைஞர் நினைவு நூலகம்"

மதுரை மாவட்டத்தில் புதிய திட்டப்பணிகள் அடிக்கல் நாட்டு விழா, திட்டப் பணிகளின் தொடக்கம் மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்து நடைபெற்றுக் கொண்டிருக்கக்கூடிய இந்த சிறப்பான நிகழ்ச்சிக்கு தலைமை பொறுப்பையேற்றுள்ள மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் முனைவர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராாசன் அவர்களே!

இந்த நிகழ்ச்சியில் பங்கேற்று சிறப்பித்துக் கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்களே!

சட்டமன்ற உறுப்பினர்கள்

திரு.தளபதி அவர்களே!

திரு.வெங்கடேசன் அவர்களே!

திரு.பூமிநாதன் அவர்களே!

நாடாளுமன்ற உறுப்பினர் அன்பிற்குரிய திரு.வெங்கடேசன் அவர்களே!

நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.சிவ்தாஸ் மீனா, இ.ஆ.ப., அவர்களே!

மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.அனீஷ் சேகர், இ.ஆ.ப., அவர்களே!

மதுரை மாநகராட்சி ஆணையாளர் திரு.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்களே!

மதுரை மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் திருமதி சூரியகலா கலாநிதி அவர்களே! மற்றும்

அரசு அதிகாரிகளே! அரசு அலுவலர்களே!

நிகழ்ச்சியில் பங்கேற்றிருக்கும் பயனாளி பெருமக்களே!

மகளிர் சுயஉதவிக் குழுக்களை சார்ந்திருக்கக்கூடிய சகோதரிகளே!

தொலைக்காட்சி, பத்திரிகை ஊடக நண்பர்களே!

அன்பர்களே!

உங்கள் அனைவருக்கும் என் அன்பான வணக்கம்!

இந்த நிகழ்ச்சி மிகச் சிறப்போடு நடைபெற வேண்டும் என்ற உணர்வோடு நம்முடைய மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் திரு.மூர்த்தி அவர்கள் அதற்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்துகொண்டிருந்த நேரத்தில் அவருக்கு உடல்நலம் பாதிக்கப்பட்டு காய்ச்சல் அதிகமாகி, அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் காரணத்தால், இந்த நிகழ்ச்சியில்

அவரால் கலந்துகொள்ள முடியவில்லை. காலையில் கூட, அவரோடு நான் தொலைபேசியில் தொடர்புகொண்டு அவர் எப்படியாவது நான் வந்து விடுகிறேன் என்று என்னிடத்தில் சொன்னபோது, வேண்டாம், கட்டாயம் வரக்கூடாது, முதலில் உடல்நலத்தை நன்றாகப் பார்த்துக் கொள்ளுங்கள், அதற்குப் பிறகு பார்க்கலாம் என்று சமாதானம் செய்து, அவர் மருத்துவமனையில் இருக்கிறார் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொண்டு, மருத்துவமனையில் இருந்தாலும் தொலைக்காட்சி மூலமாக இந்த நிகழ்ச்சியைப் பார்த்துக் கொண்டிருப்பார் என்பதும் நமக்குத் தெரியும். ஆகவே, இந்த நிகழ்ச்சி சிறப்போடு அமைவதற்கான எல்லா பணியிலும் ஈடுபட்ட அவருக்கும் நான் இந்த நேரத்தில் நன்றியைச் சொல்லி, வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நீதிகேட்டு கண்ணகி முழங்கிய இந்த மதுரை மண்ணில், சங்கம் வைத்து தமிழ் வளர்த்த இந்த மண்ணில், தமிழினத் தலைவர் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் நீதிகேட்டு நெடும்பயணம் தொடங்கிய இந்த மண்ணில், எனக்கு அரசியல் பயிற்சிக் களமாக அமைந்த இளைஞர் அணி தொடங்கப்பட்ட இந்த மண்ணில், இன்று நடக்கும் அரசு விழாவில் காணொலி வாயிலாகப் பங்கெடுப்பதில் நான் பெருமைப்படுகிறேன், மகிழ்ச்சி அடைகிறேன்.

முடிவுற்ற பணிகளைத் திறந்துவைத்தும், புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும், பல்வேறு நலத்திட்ட உதவிகளைப் பயனாளிகளுக்கு வழங்கியும், நடக்கின்ற இந்த விழா. கொரோனா காலமாக இல்லாமல் இருந்தால் மதுரையே குலுங்கக்கூடிய வகையில் பிரமாண்டமாக இந்த நிகழ்ச்சி நடந்திருக்கும், நேரடியாக நாங்களும் வந்திருப்போம்.

அமைச்சர் திரு.மூர்த்தி அவர்கள் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்க முடியாவிட்டாலும், அவர் ஒருவார காலமாக ஜல்லிக்கட்டுப் போட்டியை

பிரம்மாண்டமாக நடத்திக் காட்டிய பெருமை அவரைச் சாரும். இந்த விழாவையும் அதற்கு இணையாக நிச்சயமாக நடத்தி இருப்பார். எந்த நிகழ்ச்சியாக இருந்தாலும், அது கட்சி நிகழ்ச்சியாக இருந்தாலும், அரசு நிகழ்ச்சியாக இருந்தாலும் சரி, அதைப் பிரம்மாண்டமாக நடத்திக் காட்டுவதில் திரு.மூர்த்தி சிறந்த வல்லவராக விளங்கிக் கொண்டிருக்கக்கூடியவர். எத்தனையோ விழாக்களை மதுரையில் அவருக்கே உரிய பாணியில் பிரம்மாண்டத்தோடு நடத்திக் காட்டியிருக்கிறார்.

காளையை அடக்க எப்படி மூக்கணாங்கயிறு அவசியமோ, அதைப்போல நாங்கள்தான் அவரைக் கட்டுப்படுத்துவோம். இல்லாவிட்டால் மிகப்பிரம்மாண்டத்தைக் காட்டிவிடுவார். பத்திரப் பதிவுத்துறை அமைச்சராக இருந்து, அந்தத் துறையில் பல்வேறு சீர்திருத்தங்களைச் செய்து, அதன் வழியாக அரசுக்கு வருவாய் ஈட்டித்தரும் துறையாக அதனை மாற்றிக் கொண்டிருக்கக்கூடியவர் திரு. மூர்த்தி அவர்கள்.

அதைப்போலத்தான் நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் திரு.பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராசன் அவர்கள். அவர் எந்த அளவுக்கு சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார் என்பதை நான் அதிகம் உங்களுக்கு சொல்ல வேண்டிய அவசியமில்லை. இன்னும் வெளிப்படையாகச் சொல்ல வேண்டுமென்றால், பூரிப்பாக சொல்ல வேண்டுமென்றால், மூன்று தலைமுறைகளாக இந்த மாநிலத்தில் வளர்ச்சிக்குத் தங்களை அர்ப்பணித்துக்கொண்ட குடும்பத்தைச் சார்ந்தவர் பி.டி.ஆர். அவர்களது குடும்பம். இது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும்.

பி.டி.ராஜன் அவர்கள் இந்த மாநிலத்தின் அமைச்சராக இருந்தவர்கள். சில காலம் பஃர்ஸ்ட் மினிஸ்டராகவும் இருந்தவர்.

தமிழகத்தில் கூட்டுறவுத்துறை செழிக்க வேண்டும் என்பதற்காக பாடுபட்டவர், அதற்கு அடித்தளம் அமைத்தவர் பி.டி.ராஜன் அவர்கள்.

பி.டி.ஆர்.பழனிவேல்ராஜன் அவர்கள், தமிழ்நாடு சட்டமன்றத்தின் மாண்பைக் காக்கக்கூடிய வகையில் அவையின் தலைவராகவும், அதற்குப் பிறகு அமைச்சராகவும் இருந்தவர். அவரது அருமைப் புதல்வர் தான் நம்முடைய பழனிவேல் தியாகராசன் அவர்கள், இன்று நிதி அமைச்சராக பொறுப்பேற்று பணியாற்றிக் கொண்டிருக்கிறார். அமைச்சரவையிலே மிகமிக கடினமான துறை எது என்றால், அது நிதித்துறைதான்.

நிதி நிலைமை மோசமாக இருந்தாலும், அதைக் காரணமாகச் சொல்லாமல், நிதியை வழங்க வேண்டிய நெருக்கடியான கடமை அமைச்சர் பொறுப்பேற்று இருக்கக்கூடிய பழனிவேல் தியாகராசனுக்குத்தான் உண்டு. நிதியை உருவாக்கவும், இந்த அரசின் கொள்கைத் திட்டங்களை வகுப்பதிலும் தனது மொத்த திறமையையும் வழங்கிவருபவராக பழனிவேல் தியாகராசன் அவர்கள் இருந்துகொண்டிருக்கிறார்.

அமைச்சர்கள் மூர்த்தியும், பழனிவேல் தியாகராசனும் இந்த நிகழ்ச்சியை சிறப்பாக ஏற்பாடு செய்துள்ளார்கள். அமைச்சர்கள் இருவருக்கும் ஈடு கொடுத்து சிறப்பாக பணியாற்றக்கூடிய மாவட்ட ஆட்சியருக்கும் என்னுடைய வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்ள நான் விரும்புகிறேன். அதேபோல, அவர்களுக்குத் துணை நின்று கொண்டிருக்கும் அரசு அதிகாரிகளுக்கும், அலுவலர்களுக்கும் நான் என்னுடைய இதயப்பூர்வமான வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

சங்க கால நகரமாக மதுரை இருந்தாலும் நாம் பார்க்கும் நவீன மதுரையை உருவாக்கியது திராவிட முன்னேற்றக் கழக அரசுதான்.

* நகராட்சியாக இருந்த மதுரையை 1971இல் மாநகராட்சியாக தரம் உயர்த்தி மேம்படுத்திய அரசு, நம்முடைய தி.மு.க. அரசு தான்.
* மாவட்ட நீதிமன்றம் அமைக்க அடிக்கல் நாட்டியவர் முதலமைச்சராக இருந்த பேரறிஞர் அண்ணா அவர்கள். அதைத் திறந்து வைத்தவர் முதலமைச்சராக இருந்த நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள்.
* சென்னை உயர்நீதிமன்றக் கிளை மதுரையில் அமைய வேண்டும் என்று முதன்முதலாக 1973ஆம் ஆண்டு முயற்சித்தவர் முத்தமிழறிஞர் கலைஞர். 1989ஆம் ஆண்டும் முயற்சித்தார். 1996ஆம் ஆண்டு நிலத்தை கையகப்படுத்த உத்தரவு பிறப்பித்தார். அதற்காக 5 கோடி ரூபாயை ஒதுக்கினார். அதுவும் கழக ஆட்சியில்தான், 2000ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் தலைமையில் அடிக்கல் நாட்டப்பட்டது.
* மதுரை சுப்பிரமணியபுரம் மேம்பாலம் கட்டப்பட்டு, அதற்கு 'மதுரை முத்து மேம்பாலம்' என்ற பெயர் சூட்டியவரும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான்.
* ஆண்டாள்புரம் பாலத்துக்கு பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் பெயரைச் சூட்டியவரும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான்.
* மதுரை தெற்குவாசல் இருப்புப்பாதை மேம்பாலம் கட்டப்பட்டு, 'தியாகி என்.எம்.ஆர். சுப்புராமன் மேம்பாலம்' என்று பெயர் சூட்டப்பட்டது.
* மானம் காத்த மருதுபாண்டியருக்கு சிலை அமைக்கப்பட்டது.

- தமிழைச் செம்மொழி என்று 100 ஆண்டுகளுக்கு முன்னால் நிறுவிய பரிதிமாற்கலைஞருக்கு மணிமண்டபம்.
- திராவிட மொழிநூல் ஞாயிறு என்று போற்றப்பட்ட தேவநேயப்பாவாணருக்கு மணிமண்டபம் ஆகியவை அமைத்த அரசும் கழக அரசுதான்.
- மதுரா கோட்ஸ் மேம்பாலம், ஆனைக்கல் வைகை ஆற்றின் குறுக்கே மேம்பாலம், வைகை ஆற்றின் குறுக்கே 3 தரைப் பாலங்கள், வைகை ஆற்றின் குறுக்கே மேம்பாலம், செல்லூர் அருகே தத்தநேரி இருப்புப்பாதை, உயர்மட்ட மேம்பாலம் ஆகியவை கழக ஆட்சியில்தான் அமைக்கப்பட்டன.
- மதுரை வடபகுதியிலிருந்து 27 கிலோமீட்டர் முதல் ரிங்ரோடு.
- மாட்டுத்தாவணி ஒருங்கிணைந்த பேருந்து நிலையம்.
- மாட்டுத்தாவணியில் வணிக வளாகம், பூமார்க்கெட், சென்ட்ரல் மார்க்கெட்.
- மதுரை ரயில் நிலையம் அருகே எல்லீஸ் நகர் மேம்பாலம்.
- மதுரை மத்தியப் பகுதியில் மதுரை அண்ணா பல்கலைக்கழகம்.
- இரண்டு பாலிடெக்னிக்குகள்.
- வைகை இரண்டாம் குடிநீர் திட்டம் மற்றும் காவிரி கூட்டுக் குடிநீர் திட்டம்.
- வாடிப்பட்டியில் கைத்தறி ஜவுளிப் பூங்கா.
- இந்தியாவுக்கு வளம் சேர்க்கும் திட்டமாக மாறியிருக்கக் கூடிய சேதுசமுத்திரத் திட்டத்தின் தொடக்கவிழாவை நாம் நடத்தியதும் மதுரையில்தான்!

- ✶ மதுரை விமான நிலையத்தை சர்வதேச விமான நிலையமாக 120 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மாற்றினோம். புதிய டெர்மினல் முனைய கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டி அவை திறந்து வைக்கப்பட்டதும் தி.மு.க. ஆட்சியில்தான்!
- ✶ மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவு புதிய கட்டடத்துக்கு 2007இல் நான்தான் அடிக்கல் நாட்டினேன்.

இப்படி மதுரைக்குச் செய்த சாதனைகளை அடுக்கிக்கொண்டே போகலாம். இத்தகைய சாதனைச் சரித்திரத்தை மீண்டும் தொடங்கி இருக்கிறோம்.

சங்கம் வளர்த்த மதுரையில் மாபெரும் நூலகம் அமையப் போகிறது. அதுவும் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் பெயரால் அமையப் போகிறது. 114 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அது கட்டப்பட இருக்கிறது. 2.70 ஏக்கர் நிலத்தில், 2,13,288 சதுர அடி கட்டடப் பரப்பில், 8 தளங்களுடன் அமையப் போகிறது. இந்த நூலகத்துக்குத் தேவையான நூல்கள், மின் நூல்கள், இணையவழி பருவ இதழ்கள், ஆகியவை வாங்க 10 கோடி ரூபாயும், தொழில்நுட்ப சாதனங்கள் வாங்குவதற்கு 5 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்ய இருக்கிறார்கள். காலத்தால் அழிக்க முடியாத அறிவுக்கருவூலமாக கலைஞர் நினைவு நூலகம் அமையப் போகிறது. அதுவும் மதுரை மண்ணில் அமையப் போகிறது என்பது உங்களுக்கு மட்டுமல்ல; எங்களுக்கும் பெருமையாகும்.

அதேபோல், மதுரை நகரை மேம்படுத்துவதற்காக மதுரை நகர வளர்ச்சிக் குழுமத்தை உருவாக்கி இருக்கிறோம்.

மதுரையில் மக்கள்தொகையின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகமாகி வருகிறது. எனவே, அடிப்படைக் கட்டமைப்பை

உருவாக்கித்தர வேண்டியது ஒரு அரசின் கடமையாகும். அந்தக் கடமையை, இந்த அரசு அமைந்ததும் உணர்ந்து செயல்படுத்திக் கொண்டு வருகிறோம்.

1972ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான் முதன்முதலாக சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தை உருவாக்கினார். அதுதான் சென்னையை நவீன சென்னையாக உருவாக்கியது.

அந்த வரிசையில் மதுரை நகர வளர்ச்சிக் குழுமத்தைத் தொடங்கி வைக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்திருப்பதை எண்ணி நான் பெருமையாகக் கருதுகிறேன். இதன்மூலமாக மதுரை மாநகருக்கு பல்வேறு திட்டப்பணிகளை செயல்படுத்தித்தர உள்ளோம். இந்த வளர்ச்சித் திட்டங்களைத் தயாரித்து செயல்படுத்த 14 பேர் கொண்ட குழுவை அமைத்துள்ளோம்.

மதுரையானது மாமதுரையாக, அழகான மதுரையாக, எல்லா வகையிலும் தன்னிறைவு பெற்ற மதுரையாக மாற்றிக் காட்டப்படும் என்று இக்கூட்டத்தின் வாயிலாக, இந்த நிகழ்ச்சியின் மூலமாக நான் உறுதி அளிக்கிறேன்.

இதன்தொடர்ச்சியாக மேலும் சில அறிவிப்புகளைச் செய்ய நான் விரும்புகிறேன்.

- ✶ மதுரை மாநகராட்சியில் புதிதாக இணைக்கப்பட்ட வார்டுகளில் பாதாள சாக்கடை வசதிகளை அமைக்கவும், இந்த வசதி ஏற்கெனவே உள்ள பகுதிகளில் கழிவுநீர் சுத்திகரிப்புப் பணிகளை மேம்படுத்தவும் 500 கோடி ரூபாய் மதிப்பில் புதிய திட்டப்பணிகள் செயல்படுத்தப்படும்.
- ✶ மதுரை நகரின் மையப் பகுதியில் தற்போது அமைந்துள்ள பல்வேறு மொத்த விற்பனை சந்தைகள் அனைத்தையும்

புறநகர் பகுதிகளுக்கு மாற்றி, நகரின் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்கான திட்டம் 50 கோடி ரூபாய் மதிப்பில் செயல்படுத்தப்படும்.

- ✶ உலகப் புகழ்பெற்ற மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலில் 25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருப்பணிகள் மேற்கொள்ளப்படும். ஏற்கெனவே தீ விபத்தில் சேதமடைந்த வீரவசந்தராயர் மண்டபம் 18 கோடி ரூபாய் மதிப்பீட்டில் விரைவில் புனரமைக்கப்படும். திருப்பணிகளும், புனரமைப்புப் பணிகளும் விரைவில் மேற்கொள்ளப்பட்டு இரண்டு ஆண்டுகளில் அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலுக்கு குடமுழுக்கு நடத்தப்படும்.

- ✶ மதுரை நகரின் மையப்பகுதியில் அமைந்துள்ள பல்வேறு மொத்த விற்பனை சந்தைகள் அனைத்தையும் புறநகர்ப் பகுதிகளுக்கு மாற்றி, நகரின் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காக ஒரு திட்டம் 50 கோடி ரூபாய் மதிப்பில் செயல்படுத்தப்படும்.

- ✶ மாநகராட்சிப் பகுதிகளில் அதிகரித்து வரும் போக்குவரத்தை கருத்தில் கொண்டு, 100 கோடி ரூபாய் மதிப்பில் வைகை ஆற்றின் வடகரையில் உள்ள சாலையை நீட்டிப்பதற்கும், மேலக்கல் சாலையை அகலப்படுத்துவதற்கும் தேவையானப் பணிகள் செயல்படுத்தப்படும்.

- ✶ நகரின் மையப் பகுதியில் அமைந்துள்ள மத்திய சிறைச்சாலை, மாநகராட்சிக்கு வெளியே புதிய இடத்திற்கு மாற்றி அமைக்கப்படும். தற்போது உள்ள அந்த சிறைச்சாலை இடம், பொதுமக்களின் பயன்பாட்டுக்கு உகந்த வகையில் பசுமைப் பகுதியாக மேம்படுத்தப்படும்.

- வண்டியூர், செல்லூர் மற்றும் தென்கரை ஏரிப்பகுதிகள், பொதுமக்கள் அன்றாடம் பயன்படுத்தும் வகையில் பொது பயன்பாட்டு இடங்களாக மேம்படுத்தப்படும்.

- விரகனூர் சந்திப்பு, அப்போல்லோ மருத்துவமனை சந்திப்பு, மண்டேலா நகர் சந்திப்பு, இராஜாஜி மருத்துவமனை சந்திப்பு போன்ற அதிக போக்குவரத்து நெரிசல் காணப்படும் சந்திப்புகளில், புதிய மேம்பாலங்களை அமைப்பதற்கான விரிவான திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இந்தப் பணிகளும் விரைவில் தொடங்கப்படும்.

- தொழில் வளர்ச்சியில் மதுரை மாவட்டத்தை முன்னிறுத்தும் வகையில் மதுரையில் புதிய சிப்காட் தொழில் பூங்கா ஒன்று அமைக்கப்படும்.

- உலகத் தமிழர்களின் உணர்வோடு கலந்துவிட்ட பண்பாட்டு அடையாளமான ஏறு தழுவுதலை நம் வீர விளையாட்டை முறைப்படுத்திப் பாதுகாப்பது நம் கடமையாகும். உலகெங்கிலும் இருந்து வரும் சுற்றுலாப் பயணிகளைக் கவரக்கூடிய வகையில் நவீன வசதிகளுடன் கூடிய மாபெரும் அரங்கம் ஒன்று மதுரை, அலங்காநல்லூர் பகுதியில் அமைக்கப்படும்.

- தமிழரின் வீர விளையாட்டுகள் மற்றும் பாரம்பரிய காளை இனங்கள் குறித்த அருங்காட்சியகம் ஒன்று ஆயிரக்கணக்கான பார்வையாளர்கள் பாதுகாப்புடன் போட்டியைக் கண்டுகளிக்கக்கூடிய வகையில் நிரந்தர அரங்கம் வீரர்கள் மற்றும் காளைகளின் நலம் காக்க மருத்துவமனைகள் என பல்வேறு சிறப்பு அம்சங்களைக் கொண்டதாக இந்தத் திட்டம் அமையும். இன்றைய நாள்

51.77 கோடி ரூபாய் மதிப்பிலானப் பணிகள் முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

49.74 கோடி ரூபாய் மதிப்பிலான பணிகளைத் தொடங்குவதற்கு அடிக்கல் நாட்டி இருக்கிறேன்.

அமைச்சர்கள் மூலமாகக் கிடைத்த மனுக்கள், முதலமைச்சரின் முகவரி திட்டத்தின் மூலமாக கிடைத்த மனுக்கள் என்ற வகையில், எங்களுக்கு 40 ஆயிரத்து 978 மனுக்கள் கிடைத்துள்ளன. இதில் முதல்கட்டமாக 23 ஆயிரத்து 879 மனுக்கள் ஏற்கப்பட்டுள்ளன.

இதன் அடிப்படையில் 67 ஆயிரத்து 831 பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் இந்த நிகழ்ச்சியின் வாயிலாக வழங்கப்படுகின்றன. இதன் மதிப்பு 219 கோடி ரூபாய் ஆகும்.

மொத்தமாக இன்றைய நாள் மட்டும் 342.33 கோடி ரூபாய் மதிப்பிலானப் பணிகள் மக்களுக்குக் கிடைத்துள்ளன.

✶ மதுரை அரசு மருத்துவக் கல்லூரி வளாகத்தில் 6 தளம் கொண்ட கல்விக் கூடம்.

✶ 5 தளம் கொண்ட குடியிருப்பு வளாகம்.

✶ குருவிக்காரன் சாலையில் உயர்மட்ட மேம்பாலம்.

✶ முடுக்குவார்பட்டி அரசு மேனிலைப்பள்ளியில் கூடுதல் வகுப்பறை.

✶ மணியாஞ்சியில் கூடுதல் வகுப்பறை.

✶ யா.ஒத்தக்கடையில் கூடுதல் வகுப்பறை.

✶ செல்லம்பட்டி, கருப்பட்டி, அரசப்பட்டியில் அங்கன்வாடி கூடங்கள் ஆகியவை இன்று முதல் திறக்கப்படுகின்றன.

இப்படி ஊர் ஊராக, பகுதி பகுதியாக, என்னென்ன தேவையோ அவை அனைத்தையும் செய்து கொடுக்கும் அரசாக இந்த அரசு இருக்கும். ஊரின் தேவை, ஒரு வட்டாரத்தின் தேவை, ஒரு தெருவின் தேவை, தனிப்பட்ட ஒரு மனிதனின் தேவை என்ன என்பதைக் கேட்டறிந்து நிறைவேற்றித் தரும் அரசாக இந்த அரசு இருக்கும். மைக்ரோ அளவிலான பிரச்சினையையும் கூர்மையாக பார்த்து நிவர்த்தி செய்யும் அரசாக இந்த அரசு இருக்கும்.

பெரிய, பெரிய திட்டங்களுக்கு எந்தளவு முக்கியத்துவம் தருகிறோமோ, அதே அளவுக்கு ஒரு தனிமனிதனின் விருப்பத்துக்கும், தேவைக்கும் முக்கியத்துவம் தரும் அரசாக நாங்கள் இருப்போம்.

அதனால்தான் ஒட்டுமொத்தமாக மதுரை வளர்ச்சிக்கான நகர வளர்ச்சிக் குழுமத்தை அமைத்துள்ளோம். தனிமனிதர்களின் தேவைகளையும் பூர்த்தி செய்துள்ளோம். இதுதான் எங்களது ஆட்சியின் இலக்கணம்!

மதுரை வாழ்க! இம்மாநிலம் வாழ்க!

நன்றி! வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள்,*
மதுரை மாவட்டத்தில் முடிவுற்ற திட்டப்பணிகளைத் திறந்துவைத்து,
புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, பயனாளிகளுக்கு
அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி ஆற்றிய உரை – 21.01.2022

தமிழுக்காக உழைத்திடும் அறிஞர்களுக்கு "கலைஞர் மு. கருணாநிதி செம்மொழி விருது"

இந்த சிறப்பான நிகழ்ச்சியில் பங்கேற்று பெருமை சேர்த்திருக்கக்கூடிய மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் திரு.துரைமுருகன் அவர்களே!

மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் டாக்டர் பொன்முடி அவர்களே!

இந்த விழாவை சிறப்போடு ஏற்பாடு செய்து அதில் வெற்றி கண்டிருக்கக்கூடிய மாண்புமிகு தொழில்கள், தமிழ் ஆட்சி மொழி, மற்றும் தமிழ்ப் பண்பாடு, தொல்லியல்துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு அவர்களே!

மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்களே!

மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு.அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்களே!

சட்டமன்ற உறுப்பினர்களே!

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறைச் செயலாளர் திரு.மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., அவர்களே!

செம்மொழித் தமிழாய்வு நிறுவனத்தின் துணைத் தலைவர் பேராசிரியர் இ.சுந்தரமூர்த்தி அவர்களே!

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் இயக்குநர் பேராசிரியர் இரா.சந்திரசேகரன் அவர்களே!

விருதுகளை தேர்வு செய்திருக்கக்கூடிய நடுவர் பெருமக்களே!

தமிழறிஞர்களே!

அரசு உயர் அலுவலர்களே!

பத்திரிகை, ஊடகத்துறையை சார்ந்திருக்கக்கூடிய நண்பர்களே!

உங்கள் அனைவருக்கும் எனது அன்பான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

‘‘தமிழுக்கும் அமுதென்றுபேர் – அந்தத் தமிழ்
இன்பத் தமிழ் எங்கள் உயிருக்குநேர்!’’

– என்ற புரட்சிக்கவிஞர் பாரதிதாசனின் கவிதை வரிகளை நெஞ்சில் ஏந்தி, இந்த விழாவின் மேடையில் நான் நின்றுகொண்டு இருக்கிறேன்.

தமிழுக்குச் செம்மொழித் தகுதி ஏற்பட வேண்டும் என்பது தமிழறிஞர்களின் நூற்றாண்டுக் கனவு. அந்தக் கனவை நிறைவேற்றிய தலைவர் தான் நம்முடைய தமிழினத் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்!

அத்தகைய தலைவர் கலைஞரின் பெயரால் அமைந்திருக்கக்கூடிய செம்மொழித் தமிழாய்வு விருதுகள், அதை விழாவாக, அதிலும் குறிப்பாக, பேரறிஞர் அண்ணா பெயரில்

அமைந்திருக்கக்கூடிய இந்த நூலகத்தின் அரங்கத்தில் நாம் நடத்திக் கொண்டிருக்கிறோம்.

அண்ணனாகவும் தம்பியாகவும் இருந்து தமிழுக்குத் தொண்டாற்றிய இரண்டு பெருமக்களின் நினைவை ஏந்தி இந்த விழா மேடையில் நான் நின்றுகொண்டு இருக்கிறேன்.

தமிழ் தொன்மையான மொழி என்பதைத் தமிழர்கள் சொல்லித்தான் தெரிய வேண்டிய அவசியமில்லை. உலகம் முழுவதும் இருக்கும் மொழியியல் அறிஞர்கள், இனவியல் அறிஞர்கள் அதைத்தான் சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மாபெரும் உண்மை இது.

தமிழ் – குறிப்பிட்ட நாட்டு மக்கள் பேசும் மொழியாக மட்டுமல்ல, ஒரு பண்பாட்டின் அடையாளமாக இருக்கிறது நம்முடைய தமிழ் மொழியானது. நிலத்துக்கு, மண்ணுக்கு, இயற்கைக்கு, மக்களுக்கு, பண்பாட்டுக்கு இலக்கணத்தை வகுத்திருக்கக்கூடிய மொழி!

தமிழைப் பேசும்போது இனிமையாக இருக்கிறது. தமிழைக் கேட்கும்போது இனிமையாக இருக்கிறது. ஏன், ‘தமிழ்’ என்று சொல்லும்போதே இனிமையாக இருக்கிறது.

தமிழ் என்றாலே இனிமை என்றுதான் பொருள்! ‘இனிமையும் நீர்மையும் தமிழ் எனல் ஆகும்’ என்று பிங்கலநிகண்டும் கூறுகிறது!

தமிழ், உலகின் மூத்த மொழிகளில் ஒன்று! தமிழ், எந்த மொழியில் இருந்தும் கடன் வாங்கி உருவான கிளை மொழி அல்ல. தமிழில் இருந்துதான் ஏராளமான மொழிகள் உருவாகியுள்ளன.

இப்படிப் பல மொழிகளை உருவாக்கும் திறன்கொண்ட மொழிதான், நமது தாய்மொழியான தமிழ். தமிழ், தமிழரசி, தமிழரசன் என்று மொழியின் பெயரையே பெயராக வைத்துக்கொள்ளும்

அளவுக்கு பற்று நம் இனத்தில் இருக்கிறது. மொழிக்காக உயிரைத் தந்த தியாகிகளைப் பெற்ற மொழியும் நம் தமிழ்மொழி ஆகும்.

இலக்கியச் செழுமையும் இலக்கண அறிவும் கொண்ட மொழியை உயர்தனிச் செம்மொழியாக அறிவிக்க வேண்டும் என்ற கோரிக்கை தமிழ் அறிஞர்கள் இடையே பல ஆண்டுகளுக்கு முன்பே எழுந்தது. அந்தக் கனவை நிறைவேற்றி வைத்தவர்தான் நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

2004ஆம் ஆண்டு அக்டோபர் 14ஆம் நாள், ஒன்றிய அரசால், காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் தமிழ்மொழி, செம்மொழியாக அறிவிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து, செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், அன்றைய ஒன்றிய அரசால் 2007ஆம் ஆண்டு ஆகஸ்ட் 18ஆம் நாள் தொடங்கி வைக்கப்பட்டது.

தொடக்கத்தில் இந்த நிறுவனம், மைசூரில், இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனத்தில் இருந்து செயல்பட்டது. 2008ஆம் ஆண்டு மே மாதம் 19ஆம் நாள் முதல் சென்னைக்கு இந்த நிறுவனம் மாற்றப்பட்டுச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

அப்போதுதான் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் என்று பெயர் சூட்டப்பட்டது. இதற்கும் காரணமாக இருந்தவர் நம்முடைய தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள்.

சென்னை கடற்கரை காமராசர் சாலையில் உள்ள பாலாறு இல்லத்தில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் அலுவலகத்தை 2008ஆம் ஆண்டு சூன் 30ஆம் நாள் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

செம்மொழி நிறுவனத்துக்கு எனத் தனியாக ஒரு கட்டடம் அமைய வேண்டும் என்று முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் ஆசைப்பட்டார்கள். அதற்காக 2007ஆம் ஆண்டு நவம்பர்

5ஆம் நாள் சென்னை பெரும்பாக்கத்தில் 16 ஏக்கர் நிலத்தை வழங்கினார்கள். சுமார் 1 கோடியே 45 இலட்சம் ரூபாய் மதிப்பில் அந்த இடத்தை சமப்படுத்தி வழங்கினோம்.

அந்த இடத்தில் 24 கோடியே 65 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒன்றிய அரசு மாபெரும் கட்டடம் அமைத்துத் தந்துள்ளது. கடந்த 12ஆம் தேதி அந்தக் கட்டடத்தை மாண்புமிகு இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி அவர்கள் திறந்து வைத்திருக்கிறார்கள்.

காணொலி வாயிலாக நடந்த அந்த விழாவுக்கு நான் முன்னிலை வகித்துப் பேசும்போது, “மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்கள் செம்மொழித் தமிழாய்வு நிறுவனத்தின் புதிய கட்டடத்தைத் திறந்து வைத்துள்ளார்கள். அதற்காகத் தமிழ்நாட்டு மக்களின் சார்பிலும், அரசின் சார்பிலும், தனிப்பட்ட என் சார்பிலும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்” என்று குறிப்பிட்டுச் சொன்னேன்.

“தலைவர் கலைஞர் அவர்கள் இன்று இருந்திருந்தால் மிகுந்த மகிழ்ச்சி அடைந்திருப்பார்கள். தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளின்போது தமிழுக்கு இத்தகைய சிறப்பு செய்யப்பட்டுள்ளது மகிழ்ச்சிக்குரியதாக இருக்கிறது” என்று குறிப்பிட்டுக் காட்டியிருப்பார்கள்.

அதன்பிறகு நானும் தமிழ் வளர்ச்சித்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்களும் பெரும்பாக்கம் சென்று தமிழாய்வு நிறுவனத்தைப் பார்வையிட்டோம். உண்மையில் மிகச் சிறப்பாக அந்த நிறுவனம் செயல்பட்டு வருகிறது. தொடக்கம் முதல் இன்று வரை இதன் வளர்ச்சிக்குப் பாடுபட்ட அனைவருக்கும் தமிழக அரசின் சார்பில் நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

- ✶ செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் 41 செவ்வியல் தமிழ் நூல்களின் ஆய்வுக்கு முதலிடம் வழங்கி வருகிறது.

- ✶ தொல் பழங்காலம் முதல் கி.பி. 6ஆம் நூற்றாண்டு வரையிலான காலப்பகுதிக்குள் தோன்றிய இலக்கிய, இலக்கணம் குறித்த ஆய்வினை மேற்கொள்ள உருவாக்கப்பட்டிருக்கக்கூடிய இந்த நிறுவனம், தமிழ்மொழி ஆய்விலும் அதன் மேம்பாட்டிலும் தனிக்கவனம் செலுத்தி வருகிறது.

- ✶ செம்மொழித் தமிழின் தொன்மையையும் தனித் தன்மையையும் அவற்றின் மரபுத் தொடர்ச்சியையும் ஆராய்ந்து பாதுகாப்பதை முக்கிய நோக்கமாக இந்நிறுவனம் கருதிக்கொண்டிருக்கிறது.

இந்த வரிசையில் செம்மொழித் தமிழாய்வில் குறிப்பிடத்தக்க பங்களிப்புச் செய்தவர்களுக்கு விருதுகள் வழங்கிச் சிறப்பித்து வருகிறது.

செம்மொழித் தமிழாய்வு நிறுவனத்துக்கு, 2008ஆம் ஆண்டு சூலை 24ஆம் நாள், தனது சொந்த நிதியில் இருந்து ஒரு கோடி ரூபாயை முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் வழங்கினார்கள். ‘கலைஞர் மு.கருணாநிதி செம்மொழித் தமிழ் அறக்கட்டளை’ என்ற பெயரால் ஓர் அறக்கட்டளையை நிறுவினார்கள். இந்த அறக்கட்டளை சார்பில் தகுதிசால் தமிழறிஞர்களுக்கு விருது வழங்க வேண்டும் என்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் விரும்பினார்கள்.

இந்தியாவிலேயே மிக உயரிய விருதாக, பத்து இலட்சம் ரூபாய் பரிசுத் தொகை கொண்டது இந்த விருது. பாராட்டு இதழும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் உருவம் பொறித்த நினைவுப்பரிசும் வழங்கப்படும்.

முதல் விருது 2010, ஜூன் 23 அன்று கோவையில் நடைபெற்ற உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டில், அன்றைய குடியரசுத்

தலைவர் அவர்களால் பின்லாந்து நாட்டைச் சேர்ந்த ‘பேராசிரியர் அஸ்கோபார்ப்போலா’ அவர்களுக்கு வழங்கப்பட்டது. தொடர்ச்சியாக ஆண்டுதோறும் இந்த விருதைத் தொடர்புடைய அரசுகள் வழங்கி இருக்க வேண்டும். அதை இந்த மேடையில் பேசி நான் அரசியலாக்க விரும்பவில்லை.

தமிழுக்கு, தமிழறிஞர்களுக்குச் செய்ய வேண்டிய பாராட்டுகள், மரியாதையில் கூட அரசியல் புகுந்ததன் காரணமாக, 2011ஆம் ஆண்டு முதல் 2019ஆம் ஆண்டு வரை இந்த விருதுகள் வழங்கப்படவில்லை. கழக அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு விருதாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள்.

வேறு எதற்காக இல்லாவிட்டாலும், தமிழறிஞர்களுக்கு விருது கொடுப்பதற்காகவாவது, தமிழ்நாட்டில் மீண்டும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி மலர்ந்ததை நினைத்து இன்றைய நாளில் நான் பெருமைப்படுகிறேன்.

எப்போதும் தமிழுக்காகவே உழைத்திடும் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோதெல்லாம், தமிழின் வளர்ச்சிக்காகப் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தியிருக்கிறது. குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால்,

- ✶ நமது மாநிலத்துக்கு மொழியின் பெயரால் ‘தமிழ்நாடு’ என்று பெயர் சூட்டியது, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி!
- ✶ தமிழ்த்தாய் வாழ்த்தை நிறுவி, அதனை மாநிலப் பாடல் ஆக்கியது, கழக ஆட்சி!
- ✶ உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடுகளைப் பேரறிஞர் அண்ணா தலைமையில் தொடங்கி, உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு வரை நடத்தி, தமிழை உலகளவில் கொண்டு சென்றது.
- ✶ அய்யன் வள்ளுவர், அவ்வையார் முதலான பழங்காலத் தமிழ்ப் புலவர்கள் தொடங்கி, கால்டுவெல், ஜி.யு.போப்

போன்ற அயல்நாட்டுத் தமிழறிஞர்கள் வரை, திருவுருவச்சிலை நிறுவியதும் கழக ஆட்சியில் தான்.

- ✶ தமிழ் வழியில் பயிலும் மாணவர்களுக்கு சமூகநீதி வழியில் உயர்கல்வியில் இடஒதுக்கீடு தந்தது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி தான்!
- ✶ வள்ளுவருக்குச் சென்னையில் கோட்டமும் – குமரியில் 133 அடியில் வானுயர்ந்த சிலையும் நிறுவி உலகமே அண்ணாந்து பார்க்க வைத்த ஆட்சிதான் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி!
- ✶ சுவடிகளில் இருந்து புத்தகங்களுக்குத் தமிழ் மாறியது போல், தமிழை இணையத்துக்குக் கொண்டு செல்ல 1999–லேயே தமிழ் இணைய மாநாடு நடத்தியதும், தமிழ் இணையக் கல்விக் கழகத்தை நிறுவி, இன்று உலகில் எங்கிருந்தாலும், தமிழ் இலக்கண, இலக்கியங்களை அனைவரும் படிக்கும் அளவிற்குத் தமிழை இணையப்படுத்தியதும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி தான்.

இப்படி என்னால், ஒரு நீண்ட பட்டியலை சொல்லிக் கொண்டிருக்க முடியும்!

இப்படித் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி தமிழுக்கு ஆற்றிய பணிகளின் தொடர்ச்சியாகத்தான் இந்த விழாவில் சில அறிவிப்புகளை நான் வெளியிட விரும்புகிறேன்.

- ✶ செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் புதிய வளாகம் அமைந்துள்ள மேடவாக்கம் – சோழிங்கநல்லூர் இணைப்புச்சாலை இனி “செம்மொழிச்சாலை” எனப் பெயர் மாற்றம் செய்யப்படும்.
- ✶ செம்மொழிச் சிறப்புகளை உலகெங்கும் கொண்டு சேர்க்கும் வகையில் முதற்கட்டமாகத் தென்கிழக்கு ஆசிய

நாடுகளில் உள்ள 5 பல்கலைக்கழகங்களில் ‘செம்மொழித் தமிழ் இருக்கைகள்’ அமைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

தமிழ் மொழிக்கு வளம் சேர்க்கும் முக்கியத்துவம் வாய்ந்த பல திட்டங்களை செம்மொழி நிறுவனம் மேற்கொண்டு வருகின்றது. செம்மொழி நிறுவனம் முன்வைத்துள்ள இலக்குகளை அடைய, தமிழ்நாடு அரசு எப்போதும் துணை நிற்கும்.

விருது பெற்ற தமிழறிஞர்கள் அனைவரையும் நான் மனதாரப் பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன். உங்களுக்கு விருது வழங்கியதன் மூலமாகச் செம்மொழி நிறுவனம் பெருமை அடைகிறது, ஏன், நானும் பெருமை அடைகிறேன், தமிழ்நாடு அரசும் பெருமை அடைகிறது.

இந்த விருதின் மூலமாகத் தமிழ்மொழி மேலும் சிறப்படையப் பல்வேறு ஆக்கப்பூர்வமானப் பணிகளை நீங்கள் தொடர வேண்டும் என்று கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

பழமைக்குப் பழமையாய் – புதுமைக்கு என்றும் புதுமையாய் இருக்கக்கூடிய மொழி நம்முடைய தமிழ் மொழி!

இந்த மொழி குறித்த ஆய்வுகள் தமிழ்நாட்டோடு, இந்திய எல்லையோடு முடிந்துவிடாமல் உலகளாவியதாக அமைய வேண்டும். உலக மொழியியல் கோட்பாடுகளை உள்ளடக்கியதாக நமது ஆய்வுகள் அமைய வேண்டும்.

மொழியை ஒரு பண்பாடாகச் சொல்வது உலக மரபாகவே உள்ளது.

‘நோம்சாம்ஸ்கி’ போன்ற உலகப் புகழ்பெற்ற அறிஞர்கள், மொழியை மூளையின் ஓர் உறுப்பு என்று சொல்லத் தொடங்கி இருக்கிறார்கள். “குழந்தையின் மூளைக்குள் ஒரு மொழியறிவு இருக்கிறது, இது மனித இனத்துக்கே உரியது” என்று அவர் சொல்கிறார்.

‘தமிழ் எங்கள் இளமைக்குப் பால்’ என்று எப்போதோ சொல்லிவிட்டார் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்கள்.

உங்களது ஆய்வுகள் அறிவுப்பூர்வமானதாக மட்டுமில்லாமல் உணர்வுப்பூர்வமானதாகவும் அமைய வேண்டும். அப்படி அமைந்தால் உலக மொழியியல் அறிஞர்கள் அனைவரும் தேடி வரக்கூடிய இடமாகச் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் நிச்சயமாக மாறும். அப்படி உயர்ந்து நிற்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

‘எங்கும் தமிழ்! எதிலும் தமிழ்!’ என்று பேரறிஞர் அண்ணா காட்டிய பாதையில், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் தொலைநோக்குப் பார்வையோடு நடைபோடும் நமது அரசு, தமிழை ஆட்சிமொழியாகவும் வழக்காடு மொழியாகவும் மேலும் உயர்த்திட தொடர்ந்து குரல் கொடுக்கும் என்பதைக் கூறி, தமிழ் வாழ்க! செம்மொழித் தமிழ் வாழ்க! என்று வாழ்த்தி விடைபெறுகிறேன்.

நன்றி, வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள்,*
2010 முதல் 2019ஆம் ஆண்டுகள் வரையிலான
செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தால் வழங்கப்படும்
கலைஞர் மு. கருணாநிதி செம்மொழித் தமிழ் விருதுகள்
வழங்கும் விழாவில், தமிழறிஞர்களுக்கு விருதுகள்
வழங்கி ஆற்றிய உரை – 22.01.2022

ஆராய்ச்சி கல்வியில் தமிழ்நாடுதான் சிறந்தது என்ற பட்டத்தை பெற்றாக வேண்டும்

மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி அவர்களே,

மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு.மா. சுப்பிரமணியன் அவர்களே,

துவக்கத்தில் அனைவரையும் வரவேற்று மகிழ்ந்திருக்கக்கூடிய உயர்கல்வித்துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்களே,

தொழில்நுட்ப கல்வி இயக்குநர் திருமதி க.லட்சுமிபிரியா, இ.ஆ.ப., அவர்களே,

கல்லூரிக் கல்வி இயக்குநர் முனைவர் சி.பூரணசந்திரன் அவர்களே,

அண்ணா பல்கலைக்கழகத் துணை வேந்தர் டாக்டர் ஆர்.வேல்ராஜ் அவர்களே,

திருவள்ளுவர் பல்கலைக்கழக துணைவேந்தர் தாமரைச்செல்வி அவர்களே,

இஸ்ரோ முன்னாள் இயக்குநர் திரு. மயில்சாமி அண்ணாத்துரை அவர்களே,

பேராசிரியர் பெருமக்களே,

அரசு உயர் அலுவலர்களே,

அன்பிற்கினிய மாணவச் செல்வங்களே,

பத்திரிகை மற்றும் ஊடகத் துறையைச் சார்ந்திருக்கக்கூடிய நண்பர்களே,

உங்கள் அனைவருக்கும் எனது அன்பான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உயர்கல்வித்துறையின் சார்பில் நடைபெறும் இந்த விழாவானது எங்களையெல்லாம் ஏன், நம்மையெல்லாம் ஆளாக்கிய பேறிஞர் அண்ணா அவர்கள் பெயரால் அமைந்த பல்கலைக்கழகத்தின் வளாகத்தில் நடைபெற்றுக்கொண்டிருப்பது மிகப் பொருத்தமாக அமைந்திருக்கிறது.

அறிஞர்களுக்கு எல்லாம் அறிஞர் பேறிஞர் அண்ணா அவர்கள்! சென்னை கன்னிமரா நூலகத்தில் இருக்கும் பெரும்பான்மையான முக்கியமானப் புத்தகங்களைப் படித்தவர் பேறிஞர் அண்ணா அவர்கள். அத்தகைய பேறிஞர் பெயரால் அமைந்த பல்கலைக்கழகத்தின் அரங்கத்தில் இந்த விழாவை ஏற்பாடு செய்துள்ள நம்முடைய உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் பொன்முடி அவர்களை நான் மனதாரப் பாராட்ட விரும்புகிறேன்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் படித்த காலத்தில் இருந்து அவர் மாணவராக அரசியலில் இறங்கி விழுப்புரம் கல்லூரியில் பேராசிரியராக இருந்தபோது அமைச்சராக ஆக பொறுப்பேற்றுப் பணியாற்றி இருக்கிறார். இன்றைய தினம் தமிழகத்தில் இருக்கும் அனைத்துப் பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் அனைத்தையும் வழிநடத்தக்கூடிய மாபெரும் பணியைச் சுமந்துகொண்டு இருப்பவர் தான் நம்முடைய பொன்முடி அவர்கள்.

அவர் அரசியல், வரலாறு, பொதுத்துறை நிருவாகம் என பல்வேறு பாடங்களில் முதுநிலை பட்டம் வாங்கியவர். அனைத்துக்கும் மணிமகுடமாக முனைவர் பட்டம் பெற்றவர். உயர் கல்வித்துறையைக் கவனிக்க அனைத்துவகையிலும் பொருத்தமான அனைத்து உயர் கல்வியைப் பெற்றிருக்கக்கூடியவர்.

தமிழ்நாட்டின் உயர் கல்வியை உயரமான நிலைக்குக் கொண்டுவர நித்தமும் உழைத்துக் கொண்டிருக்கக்கூடியவர். அத்தகைய ஒரு முனைப்போடு செயல்பட்டு வரும் முனைவர் பொன்முடி அவர்களை நான் மனதாரப் பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன்.

உயர்கல்வித்துறையில் கருணை அடிப்படையில் **36** வாரிசுதாரர்களுக்கு இன்று பணி நியமன ஆணை வழங்கப்பட்டுள்ளது. கருணை அடிப்படை என்ற பிரிவின் கீழ் இந்த வேலைகள் வழங்கப்பட்டு இருந்தாலும், கல்வித் தகுதியின் அடிப்படையில்தான் உங்களுக்கு பணிகள் வழங்கப்பட்டுள்ளன.

கல்வித் தகுதி அடிப்படையில் பணி கிடைத்த உங்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

உங்களுக்குக் கொடுத்த பணியை, இதைவிட வேறு யாரும் சிறப்பாகச் செய்துவிட முடியாது என்று சொல்கின்ற அளவுக்கு

நீங்கள் பேர் வாங்க வேண்டும். அதற்கு நான் முன்கூட்டியே உங்களுக்கு என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

யாருடைய வாரிசு என்பதற்காக உங்களுக்கு இந்தப் பணி கிடைத்துள்ளதோ, அவர்கள் இருந்தால் பெருமைப்படக்கூடிய அளவுக்கு நீங்கள் பணியாற்ற வேண்டும். உங்களது குடும்பத்தின் பெருமையை நிலைநாட்டும் வகையில் சிறப்பாகச் செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இதே விழாவில் தமிழ்நாடு ஆளில்லா வான்வழி வாகனக் கழகம் மற்றும் மதுரைக் காமராசர் பல்கலைக்கழகத்தின் 1 மெகாவாட் சூரிய சக்தி மையத்தை துவக்கிவைத்துள்ளேன். இங்கும் சூரிய சக்தியைத் தான் தொடங்கிவைத்துள்ளேன்.

சூரியன் என்று சொன்னாலே அது சக்தி தான். சூரியன் என்ற சொல்லையும், சக்தி என்ற சொல்லையும் யாராலும் பிரிக்க முடியாது. நான் அரசியல் பேசுவதாக யாரும் கருதவேண்டிய அவசியமில்லை. அது தேவையுமில்லை. சூரிய சக்தியை உருவாக்கும் மையத்தைத் தான் நான் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறேன்.

கிராமப்புற மின்மயமாக்கல் நிறுவனக் குழுமத்தின் நிதி உதவியுடன் மதுரைக் காமராசர் பல்கலைக்கழகத்தில் 7.25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சூரிய சக்தி மையம் உருவாக்கப்பட்டுள்ளது.

நாளுக்கு நாள் மின் தேவை அதிகமாகிக்கொண்டிருக்கிறது. அந்தத் தேவையைப் பூர்த்தி செய்ய சூரிய ஆற்றலை பயன்படுத்த வேண்டும். மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தைப் போல அனைத்து பல்கலைக்கழகங்களும் இதுபோன்ற முயற்சிகளில் ஈடுபட வேண்டும். இதுபோன்ற முன்னோட்டமான முயற்சிகள் தொடர வேண்டும் என்று இந்தக் கூட்டத்தின் வாயிலாக அனைத்துப் பல்கலைக்கழகங்களையும் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அண்ணா பல்கலைக்கழகமானது பல்வேறு துறைகளில் ஆராய்ச்சி மையங்களை உருவாக்கி வருவதை அறியும்போது உள்ளபடியே மகிழ்ச்சியாக இருக்கிறது.

எம்.ஐ.டி. வளாகத்தில் ஏரோநாட்டிகல் துறை சார்பில் பல்வேறு ஆராய்ச்சிகள் செய்யப்பட்டு வருகிறது. இந்த வரிசையில் அண்ணா பல்கலைக்கழகத்தின் விண்வெளி ஆராய்ச்சி மையம் சார்பில் ட்ரோன் எனப்படும் ஆளில்லா வான்வழி சிறிய ரக விமானத்தின் வடிவமைப்பையும், அதற்கான மாதிரிகளையும் தயாரித்துள்ளார்கள். இதற்குக் காரணமாக ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரையும் நான் பாராட்டுகிறேன். அவர்கள் அனைவரையும் தனித்தனியாக பெயரைச் சொல்லி நான் பாராட்டியதாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு அரசின் நிதி உதவியால் இந்த வான்வழி ஆராய்ச்சி மையம் பல்வேறு ட்ரோன்களை தயாரித்து வழங்கி வருகிறது. முதலில் இது காவல்துறையில் பயன்படுத்தப்பட்டது. பின்னர், வான்வழியில் புகைப்படம் எடுக்கவும், பேரிடர் மேலாண்மைக்கும், சுரங்கங்களை அளவீடு செய்யவும் இது பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதுபோன்ற ட்ரோன்களின் தேவை நாளுக்கு நாள் அதிகமாகி வருகிறது.

தமிழ்நாட்டின் தொழில்நுட்ப முயற்சிகளுக்கு இது முன்மாதிரியாக அமைகிறது. அனைத்துப் பல்கலைக்கழகங்களும், வெறுமனே பட்டம் வழங்கும் பல்கலைக்கழகங்களாக இல்லாமல் ஆராய்ச்சி நிறுவனங்களாக மாற வேண்டும், ஏராளமான கண்டுபிடிப்புகளைச் செய்து அவர்கள் அர்ப்பணிக்க வேண்டும்.

தமிழகத்தில்தான் ஆற்றல்மிக்க இளைஞர் சக்தி அதிகம். இந்தியாவில் இருக்கும் மிக முக்கியமான 100 கல்வி நிறுவனங்களில் 30க்கும் மேற்பட்டவை தமிழகத்தைச் சேர்ந்தவைதான் என்பதை அண்மைக்கால தரவரிசை முடிவுகளை நமக்கு சொல்லிக் கொண்டிருக்கின்றது.

பள்ளிகள், மேனிலைப் பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள், உயர் ஆராய்ச்சி நிறுவனங்கள் தமிழ்நாட்டில் இருப்பது போல எந்த மாநிலத்திலும் இல்லை.

தமிழ்நாட்டு இளைஞர்கள் உலகத்தின் அனைத்து நாடுகளிலும் வேலை செய்துகொண்டிருக்கிறார்கள். உயர் பொறுப்புகளை வகிக்கிறார்கள். இந்த இளைஞர்கள் எல்லாம் தமிழ்நாட்டின் உயர்கல்வியால் உயர்ந்தவர்கள், உயர்ந்த நிலைக்குச் சென்றவர்கள் தான், அந்த நிலையை இன்னும் கூடுதலாக உயர்த்த வேண்டும்.

ஆய்வுகள், ஆராய்ச்சிகள், கண்டுபிடிப்புகள் இன்னும் அதிகமாக வேண்டும். வெளிநாட்டுகளில் இருக்கும் புதுவிதமான படிப்புகள், பட்டங்கள் அனைத்தும் தமிழ்நாட்டின் கல்லூரி, பல்கலைக்கழகங்களில் நாம் புகுத்த வேண்டும்.

செயற்கை நுண்ணறிவு குறித்த படிப்புகள் இன்று முக்கியமானதாகச் சொல்லப்படுகிறது.

- டேட்டா சைண்டிஸ்ட்டுகள்,
- சைபர் செக்யூரிட்டி ஸ்பெஷலிஸ்ட்,
- ஆர்ட்டிபிஷியல் இண்டலிஜெண்ட்,
- கஸ்டமர் சக்ஸஸ் ஸ்பெஷலிஸ்ட்,
- சோஷியல் இன்ஜினியரிங்,
- டிஜிட்டல் மார்க்கெட்டிங்,
- பிகேவியர் எக்கனாமிக்ஸ்,
- கேம் தியரி,
- வரலாற்றின் புவியியல்,
- பொருளாதாரத்தின் வரலாறு,

✶ யுனிவர்ஸ் குறித்த படிப்புகள்.

இப்படி சொல்லிக்கொண்டேப் போகலாம். இதுபோல நிறைய இருக்கிறது. இப்படி என்னென்ன படிப்புகள் எல்லாம் புதுமையாக வந்திருக்கிறதோ அவை அனைத்தையும் கற்க, இன்றைய மாணவர்களை உயர்கல்வித்துறையானது அவர்களுக்கு ஊக்கமாக, தூண்டப்படக்கூடிய நிலையில் இருக்க வேண்டும்.

இது குறித்து உயர் கல்வித்துறை நிபுணர்கள் கூடி மாணவர்களுக்கு ஆலோசனைகளை வழங்க வேண்டும். கல்வியில் சிறந்த தமிழ்நாடு என்ற பட்டம் நமக்கு போதாது. உயர் கல்வியில், ஆராய்ச்சிக் கல்வியில் சிறந்த தமிழ்நாடு என்ற பட்டத்தை நாம் பெற்றாக வேண்டும். அதை நோக்கி உயர்கல்வித் துறை செயல்பட வேண்டும் எனக் கேட்டு, இந்த நிகழ்ச்சியிலே பங்கேற்க நல்ல வாய்ப்பை எனக்கு உருவாக்கித் தந்த அனைவருக்கும் மீண்டும் ஒருமுறை என்னுடைய இதயப்பூர்வமான நன்றியைத் தெரிவித்து என் உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி, வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள், சென்னை,*
அண்ணா பல்கலைக்கழகத்தில் ரூ.10 கோடி மதிப்பீட்டில் புதிதாக
தோற்றுவிக்கப்பட்டுள்ள தமிழ்நாடு ஆளில்லா வான்வழி
வாகனக் கழகத்தை தொடங்கிவைத்து, மதுரை காமராசர்
பல்கலைக்கழகத்தில் ரூ.7.25 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள
சூரிய சக்தி மையத்தையும் திறந்துவைத்து, கருணை அடிப்படையில்
பணிநியமன ஆணைகளையும் வழங்கி ஆற்றிய உரை – 25.01.2022

சமூக நீதி வரலாற்றில் நிகழ்த்தப்பட்டிருக்கும் மாபெரும் சாதனை

திராவிடர் கழகத்தின் தலைவர் மானமிகு அய்யா ஆசிரியர் அவர்களே!

AIBF அமைப்பின் தலைவர் மற்றும் ஒருங்கிணைப்பாளர் மாண்புமிகு நீதியரசர் திரு.ஈஸ்வரய்யா அவர்களே!

மாண்புமிகு மகாராஷ்டிர மாநிலத்தின் உணவுத்துறை அமைச்சர் திரு.ஷகன் சந்திரகாந்த் புஜ்பால் அவர்களே!

மாண்புமிகு ஆந்திர மாநிலத்தின் கல்வித்துறை அமைச்சர் டாக்டர் ஆதிமுலப்பு சுரேஷ் அவர்களே!

பீகார் சட்டமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவர் திரு.தேஜஸ்வி யாதவ் அவர்களே!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் நாடாளுமன்ற உறுப்பினரும் 27 விழுக்காடு சட்டப் போராளியுமான வழக்கறிஞர் திரு.வில்சன் அவர்களே!

கேரள இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் எம்.பி. திரு.முகம்மது பஷீர் அவர்களே!

அகில இந்திய திரிணாமுல் காங்கிரஸ் நாடாளுமன்ற கட்சித் தலைவர் திரு.டெரிக் ஓ பிரையன் அவர்களே!

ராஷ்ட்ரி ஜனதா தளம் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.மனோஜ் குமார் ஜா அவர்களே!

அலகாபாத் உயர்நீதிமன்றத்தின் முன்னாள் நீதியரசர் திரு.வீரேந்திர சிங் யாதவ் அவர்களே!

PAGAAM நிறுவனத்தின் திரு.சர்தார் தஜிந்தர் சிங் ஜல்லி அவர்களே!

BAMCEF நிறுவனர் திரு.பி.டி.போர்க்கர் அவர்களே!

லீட் இந்தியா அறக்கட்டளை தலைவர் டாக்டர் ஹரி எப்பனப்பள்ளி அவர்களே!

சமூக நீதியில் பற்றுகொண்டு இந்தியா முழுவதும் செயல்பட்டு வரக்கூடிய செயல்பாட்டாளர்களே!

மனித உரிமையினுடைய ஆர்வலர்களே!

வழக்கறிஞர்களே!

அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

வரலாற்று சிறப்புமிக்க நாள் இது!

சமூக நீதி வரலாற்றிலே பொன்னெழுத்துக்களால் பொறிக்கத் தக்க நாள் இந்த நாள்!

சமூக நீதியை அடித்தளமாகக்கொண்ட ஒரு அகில இந்தியா கூட்டமாக இந்தக் கூட்டம் காணொலிக் காட்சி மூலமாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. நம்முடைய மானமிகு ஆசிரியர் அவர்கள் இங்கே பேசுகிறபோது ஒன்றைக் குறிப்பிட்டுச்

சொன்னார். திராவிட இயக்கம் பாராட்டை எதிர்பார்க்கவில்லை, இது திராவிட இயக்கத்தின் கடமை என்று சொன்னார். அதை நானும் வழிமொழிவதற்கு கடமைப்பட்டிருக்கிறேன்.

இதனைப் பாராட்டு விழாவாக நான் கருதாமல், அடுத்தக்கட்ட சமூக நீதி உரிமையைப் பாதுகாக்க எடுக்கக்கூடிய நடவடிக்கைக் கூட்டமாகவே நான் இதைக் கருதுகிறேன். காணொலி வாயிலாக இந்தக் கூட்டம் நடந்தாலும், கண்கொள்ளாக் காட்சியாக இது அமைந்திருக்கிறது. இப்போது என் வருத்தம் எல்லாம், இதைக் காண்பதற்கு தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும், நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞரும் இல்லையே என்பது மட்டும்தான் வருத்தமாக இருக்கிறது.

இந்தியா முழுவதும் சமூக நீதி பேரியக்கம் பரவ வேண்டும் என்று அவர்கள் மூவரும் தங்கள் வாழ்நாள் முழுவதும் உழைத்தார்கள். அந்த உழைப்பு வீண் போகவில்லை. இந்திய வரைப்படத்தின் கிழக்கும், மேற்கும், வடக்கும், தெற்கும் என பல்வேறு மாநிலங்களைச் சார்ந்தவர்கள் இந்த காணொலி வாயிலாக இன்றைக்கு இணைந்திருக்கிறோம். சரியாக சொல்ல வேண்டுமென்று சொன்னால், நம்மையெல்லாம் இணைத்தது சமூக நீதி என்ற கருத்தியல்தான்.

திராவிட இயக்கம் போட்ட விதை தமிழ்நாட்டில் மட்டுமல்ல, இந்தியா முழுவதும் முளைக்கத் தொடங்கியிருக்கிறது. அதன் அறுவடையைத்தான் இப்போது நாம் பார்க்கிறோம். அகில இந்திய பிற்படுத்தப்பட்டோர் கூட்டமைப்பு SRA, PAGAAM, BAMCEF, We the people மற்றும் LEAD India ஆகிய அமைப்புகள் இணைந்து ஏற்பாடு செய்திருக்கக்கூடிய சமூக நீதி நிகழ்ச்சியில் பேசிய அனைவரும் அதிகப்படியான அளவிற்கு என்னைப் பாராட்டி பேசியிருக்கிறீர்கள். இந்தப் பாராட்டுக்கள், புகழுரைகள் அனைத்தும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கோடிக்கணக்கான தொண்டர்களுக்கு நான் சமர்ப்பிக்க விரும்புகிறேன்.

தொண்டர்களின் பலத்தால் அவர்கள் நித்தமும் அளித்து வரக்கூடிய ஊக்கத்தால்தான் இந்த எளியேனால் இத்தகைய சாதனைகளுக்கு முடிந்த அளவு பங்களிப்பு செலுத்த முடிகிறது.

தொடர்ச்சியான போராட்டத்தின் மூலமாக, சமூக நீதிக்கான வெற்றியை அடைந்துள்ளோம். இதர பிற்படுத்தப்பட்ட பிரிவினருக்கான 27 விழுக்காடு இடஒதுக்கீட்டினை அனைத்து இந்திய மருத்துவக் கல்லூரிகளிலும் பெற்றிருப்பதன் மூலமாக, சமூக நீதி வரலாற்றில் மாபெரும் சாதனை நிகழ்த்தப்பட்டிருக்கிறது. இந்த சாதனை என்பது சாதாரணமாக கிடைத்துவிடவில்லை. மக்கள் மன்றத்திலும், நாடாளுமன்றத்திலும், சட்டமன்றத்திலும், நீதிமன்றத்திலும் நடத்திய போராட்டங்களின் மூலம் இந்தச் சாதனையை நாம் பெற்றிருக்கிறோம். இந்தப் போராட்டத்தில், திராவிட முன்னேற்றக் கழகம் மகத்தான பங்களிப்பை செய்துள்ளது என்பதை தலை நிமிர்ந்து சொல்வதை நான் பெருமையாக நினைக்கிறேன்.

சமூக நீதி என்பது திராவிட இயக்கம் இந்த நாட்டிற்குக் கொடுத்த மிக முக்கியமான கொடையாகும். சமூக நீதி என்பது அனைத்து சமூகங்களையும் உள்ளடக்கிய வளர்ச்சியாகும்.

அனைத்து சமூகத்திற்குமான இட ஒதுக்கீட்டை 1921ஆம் ஆண்டு வழங்கியது நீதிக் கட்சியின் ஆட்சி. இந்த இட ஒதுக்கீட்டிற்கு, அதனுடைய முறைக்கு உச்சநீதிமன்றத்தால் ஆபத்து வந்தபோது கடுமையாகப் போராடி 1950ஆம் ஆண்டு அரசியல் சட்டத் திருத்தத்தை செய்ய வைத்தவர்கள் பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும், பெருந்தலைவர் காமராஜரும்.

பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 25 விழுக்காடு இடஒதுக்கீட்டை 31 விழுக்காடாக ஆக்கியது திராவிட முன்னேற்றக் கழகம். பட்டியலினத்தவர் இடஒதுக்கீட்டை 16 விழுக்காட்டிலிருந்து 18 விழுக்காடாக ஆக்கியதும் தி.மு.க. தான். இந்த 18 விழுக்காடில் பழங்குடியினரும் இருந்தார்கள். அவர்களுக்குத் தனியாக

1 விழுக்காடு வழங்கி, முழுமையாக 18 விழுக்காடும் பட்டியலினத்தவர்களுக்கு கிடைக்க வழி செய்து இன்றைய 69 விழுக்காடை கொண்டுவந்தது தி.மு.க.

மதம் மாறிய ஆதிதிராவிட கிறிஸ்துவர்களையும், பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்ததும் தி.மு.க. தான். மிகவும் பிற்படுத்தப்பட்ட 107 சாதியினருக்குத் தனியாக 20 விழுக்காடாக பிரித்து, மிகப் பிற்படுத்தப்பட்டோர் எனப் பெயரிட்டு ஒதுக்கீடு வழங்கியது தி.மு.க.

அருந்ததியினர்க்கு 3 விழுக்காடு உள்ஒதுக்கீடு வழங்கியது தி.மு.க. இசுலாமியர்களுக்கு 3.5 விழுக்காடு உள்ஒதுக்கீடு வழங்கியது தி.மு.க.

மண்டல் ஆணையத்தின் பரிந்துரைப்படி, ஒன்றிய அரசுப் பணிகளில் இதர பிற்படுத்தப்பட்டோருக்கு 27 விழுக்காடு இடஒதுக்கீட்டிற்கு பிரதமர் வி.பி.சிங் மூலமாக வலியுறுத்தி அதையும் பெற்றோம்.

அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற சட்டம் நிறைவேற்றியது தி.மு.க. இதுதான் திராவிட முன்னேற்றக் கழகம். சமூக நீதி கருத்தியலுக்கு செய்த மாபெரும் பங்களிப்பாகும்.

இதனுடைய தொடர்ச்சியாக, 27 விழுக்காடு இடஒதுக்கீட்டை மருத்துவப் படிப்புகளில் வழங்க வலியுறுத்திப் போராடினோம், இப்போது பெற்றுத் தந்திருக்கிறோம்.

அகில இந்திய அளவில் இதர பிற்படுத்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீடு வழங்க வேண்டுமென்று நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வந்தார்கள். ஒன்றிய ஆட்சியாளர்களிடம் தொடர்ந்து எடுத்துச்சொல்லி வந்தார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையில் எப்போதும் இடம்பெறும் கொள்கையாக அது அமைந்திருந்தது.

2019ஆம் ஆண்டு முதல் இதற்கான முனைப்புகளை அதிகமாக எடுத்தோம். நம்முடைய கழகத்தின் நாடாளுமன்ற மேலவை உறுப்பினர், மூத்த வழக்கறிஞர் வில்சன் அவர்கள் தன்னுடைய சொந்த வழக்கைப்போல இதனை அவர் நடத்தினார். இன்னும் வெளிப்படையாகச் சொல்லவேண்டுமென்றால், அவரை வழக்கறிஞர் என்று சொல்வதைவிட சமூக நீதிப் போராளியாகவே இதில் அவர் செயல்பட்டார். MBBS, OBC இடஒதுக்கீடு குறித்த வெள்ளை அறிக்கையை வெளியிடுமாறு 2019ஆம் ஆண்டு பிரதமருக்கு நான் கோரிக்கை வைத்தேன். நாடாளுமன்ற மக்களவை, மாநிலங்களவையில் தி.மு.க. உறுப்பினர்கள் இது குறித்து கேள்வியை எழுப்பியிருக்கிறார்கள். மருத்துவம் மற்றும் பல் மருத்துவ இடங்களில் ஓ.பி.சி. இடஒதுக்கீடு தொடர்பாக ஒன்றிய சுகாதாரத்துறை அமைச்சர் அவர்களை நமது கழக எம்.பி வில்சன் அவர்கள் நேரடியாகச் சந்தித்து கடிதமும் கொடுத்து வலியுறுத்தியிருக்கிறார். ஆனால், ஒன்றிய அரசு சரியான பதிலைச் சொல்லாத காரணத்தால், நான் ஒன்றிய அரசுக்கு கண்டனம் தெரிவித்தேன்.

இவர்களிடம் சும்மா கேட்டால் கிடைக்காது என்ற காரணத்தால் தான் 2020ஆம் ஆண்டு மே மாதம் உச்சநீதிமன்றத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வழக்கை தாக்கல் செய்தோம், அனைத்துக் கட்சிக் கூட்டத்தை நடத்தினோம். தி.மு.க. தொடுத்த வழக்கை உயர்நீதிமன்றத்தில் போடச் சொன்னார்கள். அப்போதும் ஒன்றிய அரசு மனம் இரங்கவில்லை. சலோனி குமாரி வழக்கை காரணமாகக் காட்டினார்கள். அந்த வழக்கு முடிந்தால்தான் முடிவெடுக்க முடியும் என்று சாக்கு போக்கு சொன்னார்கள். தி.மு.க. போட்ட வழக்கு வேறு, சலோனி குமாரி வழக்கு வேறு என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான இடஒதுக்கீடு வழங்கியாக வேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்றம்

தீர்ப்பளித்தது. **2021–2022**ஆம் ஆண்டிலிருந்து வழங்க வேண்டும் என்று உத்தரவும் போட்டது. இதுதான் மிகப்பெரிய வெற்றியாகும். ஆனாலும், இதனை ஒன்றிய அரசு வழங்காத காரணத்தால் சென்னை உயர்நீதிமன்றத்தில் தி.மு.க. சார்பில் நீதிமன்ற அவமதிப்பு மனு தாக்கல் செய்யப்பட்டது. முறையாக செயல்படுத்துங்கள் என்று உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது.

26.07.2021 அன்றுதான் இந்தியாவின் சொலிசிட்டர் ஜெனரல் அவர்கள், நீதிமன்ற உத்தரவுகளுக்கு இணங்குவதாகச் சொல்லி உறுதியளிக்கிறார்.

– ஏதோ பா.ஜ.க. அரசுதான் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு இடஒதுக்கீடு உரிமை தூக்கிக் கொடுத்ததைப் போல சிலர் பரப்புரை செய்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு நடந்த உண்மை எதுவும் தெரியாது.

2020ஆம் ஆண்டு மே மாதம் உச்சநீதிமன்றத்தில் தி.மு.க. வழக்கு போட்டது.

2021ஆம் ஆண்டு சூலை மாதம்தான் பா.ஜ.க. அரசு இதனை ஒப்புக்கொண்டது.

இந்த உண்மைகளை அவர்கள் மறக்கலாம். ஆனால் மறைக்க முடியாது.

இது ஏதோ ஒரு வழக்கின் வெற்றி அல்ல. பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட இனத்தின் வெற்றி ஆகும்.

இதோடு நமது பணி முடிந்துவிடவில்லை. சமூகநீதி என்பது சமூக சமத்துவம் ஆகும்.

அது கல்வியில் வேலைவாய்ப்பில் மட்டுமல்ல, அனைத்து இடங்களிலும் உருவாக்கப்பட வேண்டும்.

“எங்கெல்லாம் அநீதி இருக்கிறதோ அங்கெல்லாம் நீதியை நிலைநாட்ட வேண்டும்” என்று உலகப் பொருளாதார மேதை அமர்த்தியா சென் சொல்லியிருக்கிறார்.

அத்தகைய நீதியை உருவாக்கவே திராவிட இயக்கம் பாடுபட்டுக் கொண்டிருக்கிறது.

இரத்த பேதம் இல்லை, பால் பேதம் இல்லை என்பதே திராவிட இயக்கத்தின் அடிப்படை இலட்சியம் ஆகும். சமூகநீதியும், பெண்ணுரிமையும்தான் தலையாய இலட்சியம் ஆகும்.

இந்த மகத்தான கொள்கையைத் தமிழகத்தில் மட்டுமல்ல, இந்தியா முழுமைக்கும் கொண்டு சேர்க்கும் பணியை நாங்கள் தொடங்க இருக்கிறோம்.

I am planning to launch an All India Federation for Social Justice soon. Leaders of depressed classes from all states, those truly concerned about social justice would be part of it. This federation will provide prompt suggestions for all states to adhere to laws related to social justice. The percentage of backward, oppressed communities may differ with each state. However, the ideology of Social Justice is same. Everything for everyone will be the base of this federation. This will be a federation that works to achieve the principles of federalism. Let us meet often and uphold Social Justice. Thank you.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், “சமூக நீதிக்கான போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லுதல் மற்றும் ஒருங்கிணைந்த தேசிய திட்டம்” என்ற தலைப்பிலான தேசிய இணையக் கருத்தரங்கில் ஆற்றிய தலைமையுரை – 26.01.2022*

நீட் தேர்வுக்கு விலக்குபெறும் முயற்சிக்கு அனைவரும் தொடர்ந்து துணை நிற்க வேண்டும்

நீட் தேர்வு விலக்கு தொடர்பான சட்டமன்ற அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்திற்கு வருகை தந்துள்ள அனைவரையும் நான் வருக, வருக என வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நீட் தேர்வு தொடர்பாக கூட்டப்பட்டிருக்கக்கூடிய இந்த இரண்டாவது கூட்டத்திற்கு எங்களுடைய அழைப்பை ஏற்று வந்தமைக்காக நான் மீண்டும் ஒருமுறை நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாணவர்களைப் பாதிக்கும் நீட் தேர்வினை இரத்து செய்திட வேண்டும் என்பதில் நாம் அனைவருமே ஒருமித்த கருத்தோடு இருக்கிறோம். அதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை. அதையொட்டித்தான் ஒற்றுமையாகப் பல்வேறு நடவடிக்கைகளை நாம் தொடர்ந்து எடுத்துக்கொண்டு வருகிறோம். நுழைவுத் தேர்வு

தேவையில்லை என்று முடிவு செய்த மாநிலம்தான் நம்முடைய தமிழ்நாடு.

2006இல் இதற்காக டாக்டர் அனந்தகிருஷ்ணன் அவர்கள் தலைமையில் ஒரு கமிட்டி அமைத்து, அந்தக் கமிட்டியின் மூலமாக ஒரு அறிக்கையைப் பெற்று, நுழைவுத் தேர்வை இரத்து செய்யும் சட்டத்தை நம்முடைய சட்டமன்றத்தில் கொண்டுவந்து நிறைவேற்றியிருக்கிறோம்.

அதுகுறித்து சற்று விவரமாக நாம் கூற வேண்டும் என்றால், டாக்டர் அனந்தகிருஷ்ணன் அவர்கள் தலைமையில் 07.07.2006 அன்று ஒரு கமிட்டி அமைத்தோம். 13.11.2006 அன்று அறிக்கை பெற்றோம். 06.12.2006 அன்று சட்டமன்றத்தில் அதற்கான சட்டமுன்வடிவை நிறைவேற்றினோம்.

அந்தச் சட்டமுன்வடிவு ஆளுநருக்கு அனுப்பப்பட்டு, 03.03.2007 அன்று குடியரசுத் தலைவர் ஒப்புதல் அளித்தார். அதாவது, 86 நாட்களில் ஆளுநரும், குடியரசுத் தலைவருமே ஒப்புதல் அளித்து, தமிழ்நாட்டில் பொறியியல் மற்றும் மருத்துவக் கல்விக்கான சேர்க்கைக்கு நுழைவுத் தேர்வு இரத்து செய்யப்பட்டது.

இப்படி குடியரசுத் தலைவர் ஒப்புதல் அளிக்கும் முன்பு, ஒன்றிய அரசில் உள்ள மனிதவள மேம்பாட்டுத் துறையின்கீழ் இருக்கும் உயர் கல்வித் துறை 15.02.2007 அன்று தமிழ்நாட்டின் சட்டத்தை ஏற்கலாம் என்று ஒப்புதல் வழங்கியது.

அந்த ஒப்புதலில் குறிப்பிட்டுள்ள மிக முக்கியமான கருத்துக்களை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

- நுழைவுத் தேர்வை ரத்து செய்யும் தமிழ்நாடு அரசின் சட்டம் அரசமைப்புச் சட்டப்படி செல்லத்தக்கது.
- நுழைவுத் தேர்வு ரத்து செய்யப்படுவது உயர் கல்வியின் தரத்தைக் குறைக்காது.

- ✶ பிளஸ்–டூ தேர்வுகள் மிகவும் நேர்மையானவை, வெளிப்படைத்தன்மை வாய்ந்தவை.

- ✶ ஒவ்வொரு மாநிலமும் வெளிப்படையான மற்றும் நேர்மையான மாணவர் சேர்க்கை நடைமுறையை வகுத்துக் கொள்ள ஆட்சேபனை இல்லை.

இதைக் கூறியது தமிழ்நாடு அரசு அல்ல; ஒன்றிய அரசின் உயர்கல்வித்துறை.

அது மட்டுமல்ல; தமிழ்நாடு அரசின் நுழைவுத் தேர்வை ரத்து செய்யும் சட்டமுன்வடிவு ஒன்றிய அரசின் மக்கள் நல்வாழ்வுத் துறைக்கும் போனது.

இந்தத் துறையின்கீழ்தான் இப்போது சொல்லப்படுகின்ற நீட் தேர்வு வருகிறது. அந்த ஒன்றிய மக்கள் நல்வாழ்வுத்துறை, நுழைவுத் தேர்வினை ஒழிக்கும் அன்றைய தமிழ்நாடு அரசின் சட்ட முன்வடிவிற்கு குடியரசுத் தலைவர் ஒப்புதல் அளிக்க எங்களுக்கு ஆட்சேபனை இல்லை என்று தெரிவித்தது.

ஒன்றிய அரசின் உயர்கல்வித்துறை, மக்கள் நல்வாழ்வுத்துறை, சட்டத்துறை அனைத்தும் ஆட்சேபனை இல்லை என்று தெரிவித்த பிறகுதான் குடியரசுத் தலைவர் 2006ஆம் ஆண்டு நுழைவுத் தேர்வை ஒழிக்கும் தமிழ்நாடு அரசின் சட்டத்திற்கு ஒப்புதல் அளித்தார்.

அந்தச் சட்டதை எதிர்த்து உயர்நீதிமன்றம் போனார்கள். சென்னை உயர்நீதிமன்றம் “சட்டம் செல்லும்” என்று தீர்ப்பளித்தது.

உயர்நீதிமன்றம் அளித்த தீர்ப்பில், “தமிழ்நாடு அரசின் நுழைவுத் தேர்வு ஒழிப்புச் சட்டம் ஒரு சமூகநலன் சார்ந்த சட்டம்; சமூகநீதியை அடைய இது தேவை” என்று சொல்லியிருக்கிறது.

அதை ஆங்கிலத்தில் சொல்லவேண்டுமென்றால்– “It is a Social Welfare Legislation to meet social Justice” என்று அந்த

அமர்வில் இருந்த நீதியரசர்கள் மிஸ்ரா, சம்பத்குமார் ஆகியோர் தீர்ப்பளித்ததை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அப்படிப்பட்ட பிரத்யேகமான நிலை, மருத்துவ மற்றும் பொறியியல் கல்லூரி சேர்க்கையில் தமிழ்நாட்டில் சுமார் 10 ஆண்டுகள் நீடித்தது. அதாவது, பிளஸ்–டூ மதிப்பெண்களை வைத்து மாணவர்களை மருத்துவக் கல்வியிலும், பொறியியல் கல்வியிலும் சேர்த்துக் கொண்டிருந்தோம்.

இந்தச் சூழலில்தான் ஆட்சிப் பொறுப்பேற்றதும், ஓய்வுபெற்ற நீதியரசர் ஏ.கே.ராஜன் அவர்கள் தலைமையில் ஒரு கமிட்டி அமைத்தோம். அந்தக் கமிட்டியின் அறிக்கையைப் பெற்று சட்டமன்றத்தில் விவாதித்திருக்கிறோம். நீட் தேர்விலிருந்து விலக்கு அளிக்க வேண்டும் என்று தமிழ்நாடு சட்டமன்றத்தில் 13.09.2021 அன்று மசோதாவை நிறைவேற்றினோம். இந்தச் சட்டமுன்வடிவினை உடனடியாக ஆளுநர், குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைத்திருக்க வேண்டும். ஆனால், அவர் அந்த அரசியல் சட்ட கடமையைச் செய்யவில்லை. அதனால் நானே 27.11.2021 அன்று நேரில் சென்று ஆளுநர் அவர்களிடத்திலே வலியுறுத்தியிருக்கிறேன். பிறகு எனது அமைச்சரவையிலே இடம்பெற்றிருக்கக்கூடிய மூத்த அமைச்சர் அண்ணன் மாண்புமிகு திரு.துரைமுருகன் அவர்கள் 17.12.2021 அன்று ஆளுநரை நேரில் சென்று சந்தித்து வலியுறுத்தியிருக்கிறார்.

அதுமட்டுமல்ல, 28.12.2021 அன்று அனைத்துக் கட்சி எம்.பி.க்களுடன் குடியரசுத் தலைவர் அலுவலகத்தில் சென்று மனு அளித்து வலியுறுத்தியிருக்கிறோம். ஒன்றிய உள்துறை அமைச்சரை சந்திக்க இயலாத சூழலில், அடுத்தகட்ட நடவடிக்கை குறித்து ஆலோசிக்க அனைத்துக் கட்சிக் கூட்டத்தை அவசரமாக முதலமைச்சர் என்ற முறையில் கூட்டினேன். அதாவது, 08.01.2022 அன்று நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்திற்கு நீங்கள்

எல்லாம் வருகை தந்து ஆலோசனைகளை எல்லாம் வழங்கினீர்கள். ‘‘நாம் அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட்டு நீட் தேர்விலிருந்து விலக்குப் பெறுவோம்’’ என்று தீர்மானம் நிறைவேற்றினோம்.

ஜனவரி 12ஆம் தேதி தமிழ்நாட்டில் 11 மருத்துவக் கல்லூரிகளை காணொலிக் காட்சி வாயிலாக மாண்புமிகு பிரதமர் அவர்கள் திறந்து வைத்தார்கள். அப்போதுகூட காணொலி வாயிலாகவே, நீட் தேர்விலிருந்து தமிழ்நாட்டிற்கு விலக்கு அளிக்குமாறு வலியுறுத்தி நான் பேசியிருக்கிறேன். 17.01.2022 அன்று நம்முடைய நாடாளுமன்ற திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் திரு. டி.ஆர்.பாலு அவர்கள் தலைமையில் நம்முடைய தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய அனைத்துக் கட்சிகளின் எம்.பி.க்கள் குழு ஒன்றிய உள்துறை அமைச்சர் அவர்களைச் சந்தித்து இந்தக் கோரிக்கையை வலியுறுத்தியது.

ஆனால், 2007இல் 87 நாட்களுக்குள் தமிழ்நாடு சட்டமன்றம் நிறைவேற்றி அனுப்பிய சட்டமுன்வடிவிற்கு குடியரசுத் தலைவர் ஒப்புதல் கொடுத்தார். ஆனால், 13.09.2021இல் நாம் நீட் தேர்வு தேவையில்லை, மாணவர்களைக் கொல்லும் இத்தேர்விலிருந்து விலக்கு அளியுங்கள் என்று நிறைவேற்றிய சட்டமுன்வடிவை நம்முடைய ஆளுநரே 142 நாட்கள் கிடப்பில் போட்டு வைத்திருந்து, இந்த ஆண்டிற்கான நீட் தேர்வு முடிவுற்று மாணவர் சேர்க்கை தொடங்கிய பிறகே, சட்டமன்றம் மீண்டும் பரிசீலிக்க வேண்டும் என்று 01.02.2022 அன்று அதைத் திருப்பி அனுப்பியுள்ளார்.

அதற்கான செய்திக் குறிப்பில், நீட் தேர்வு செல்லும் என்ற உச்சநீதிமன்ற தீர்ப்பு இருப்பதாக மேற்கோள் காட்டுகிறார். ஆனால், நீட் விலக்கு சட்டமுன்வடிவு நமது சட்டமன்றத்தினுடைய 8 கோடி மக்களின் உணர்வுகளை வெளிப்படுத்தும் தமிழ்நாடு சட்டமன்றத்தின் சட்டமியற்றும் அதிகாரம் தொடர்புடையது. தமிழ்நாடு சட்டமன்றத்தின் இறையாண்மை தொடர்பானது. அந்தத் தீர்ப்பு வேறு, தமிழ்நாடு சட்டமன்றத்தின் சட்டமியற்றும் அதிகாரம்

வேறு. அதனால்தான் இந்தச் சட்டத்திற்கு குடியரசுத் தலைவரின் ஒப்புதலைக் கோருகிறோம்.

குடியரசுத் தலைவர் முடிவு எடுக்கும் முன்பே, ஆளுநர் சட்டமுன்வடிவை திருப்பி அனுப்பியிருக்கிறார். அதனால்தான் இந்த அசாதாரண சூழல் குறித்து விவாதித்து, நாம் அனைவரும் ஒற்றுமையாக இந்த சமூகநீதிப் போராட்டத்தை நடத்திட வேண்டுமென்ற அடிப்படையில் நாங்கள் உங்களை எல்லாம் அழைத்திருக்கிறோம்.

அடுத்தகட்டமாக நாம் என்ன செய்ய வேண்டும் என்பதற்கான ஆலோசனைகளை நீங்கள் அனைவரும் வழங்கிட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே ஒரு வரைவுத் தீர்மானத்தைப் படிக்கவிருக்கிறார். அதன்மீது தாங்கள் அனைவரும் கருத்துக்களை எடுத்துரைத்து, நீட் தேர்வுக்கு விலக்குப் பெறும் தமிழ்நாடு அரசின் முயற்சிக்கு நீங்கள் அத்தனை பேரும் தொடர்ந்து துணை நிற்க வேண்டும் என்று கேட்டு என் உரையை நிறைவு செய்கிறேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்,*
*நீட் தேர்வு விலக்கு தொடர்பான சட்டமன்ற அனைத்துக் கட்சித் தலைவர்களுடனான ஆலோசனைக் கூட்டத்தில் ஆற்றிய உரை – **05.02.2022***

வாசிப்புப் பழக்கம் விரிவடையட்டும்
நானிலமெங்கும் அறிவுத் தீ பரவட்டும்

45 ஆவது சென்னைப் புத்தகக் கண்காட்சியைத் தொடங்கி வைக்கக்கூடிய இந்த விழாவில் சிறப்புரை ஆற்றி அமர்ந்துள்ள மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் தம்பி அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்களே!

மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்களே!

தென்னிந்திய புத்தக விற்பனையாளர் மற்றும் பதிப்பாளர் சங்கத்தின் தலைவர் திரு.எஸ்.வயிரவன் அவர்களே!

செயலாளர் திரு.எஸ்.கே.முருகன் அவர்களே!

பபாசி அமைப்பின் பல்வேறு பொறுப்பாளர்களே!

தமிழ்நாடு பாடநூல் கழகத்தின் தலைவர் என்னுடைய அன்பிற்கினிய திரு.திண்டுக்கல் லியோனி அவர்களே!

மாநிலங்களவை உறுப்பினர் அருமை சகோதரர் திரு.டி.கே.எஸ்.இளங்கோவன் அவர்களே!

விருது பெற்றுள்ள விருதாளர்களே!

பதிப்பாளர்களே!

விற்பனையாளர்களே!

எழுத்தாளர்களே!

புத்தக ஆர்வலர்களே!

நிகழ்ச்சியில் கலந்துகொண்டிருக்கக்கூடிய பெரியோர்களே! தாய்மார்களே!

ஊடகத் துறையைச் சார்ந்திருக்கக்கூடிய நண்பர்களே!

உங்கள் அனைவருக்கும் என்னுடைய மாலை வணக்கத்தை மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

கடந்த 45 ஆண்டுகளாகச் சென்னைக்கு மட்டுமல்லாமல், தமிழகத்தில் இருக்கக்கூடிய பல்வேறு மாவட்டங்களைச் சார்ந்தவர்களுக்கும், இன்னும் சொல்ல வேண்டுமென்று சொன்னால், உலகம் முழுவதும் இருக்கும் தமிழ்ப் புத்தக அறிவுலகத்தைச் சேர்ந்த அனைவருக்கும் மகிழ்ச்சி தரக்கூடிய நிகழ்ச்சியாக இந்த சென்னைப் புத்தகக் கண்காட்சி நடந்து கொண்டிருக்கிறது.

இந்த நிகழ்ச்சி, கடந்த சனவரி மாதம் 6ஆம் நாள் தொடங்கியிருக்க வேண்டும். ஆனால், அன்றைக்கு இருந்த சூழ்நிலை, கொரோனா தொற்றுப் பரவல் என்கிற நிலையில் நாம் இருந்த காரணத்தால், பல்வேறு நிபந்தனைகளை, பல்வேறு கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டிய பொறுப்பு அரசுக்கு ஏற்பட்டது. அந்த வகையில் புத்தகக் கண்காட்சியையும் சிறிது தள்ளி வைக்கக்கூடிய ஒரு நிலையை நாங்கள் குறிப்பிட்டுச் சொன்னோம்,

எடுத்துச் சொன்னோம். பபாசி சார்பில் அதன் நிருவாகிகளும் அதனை மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டு, பல்வேறு பதிப்பாளர்கள் இந்த கண்காட்சியை மிகவும் எதிர்பார்த்துக் காத்திருந்த நிலையில், ஏன், இதற்கான அரங்கமும் அமைத்த நிலையில், பல்வேறு செலவுகள் செய்யப்பட்ட நிலையில், கண்காட்சி நடக்கக்கூடிய அந்தத் தேதியைத் தள்ளி வைப்பது மிகவும் சிரமம் தரக்கூடிய சூழ்நிலை அமைந்திருந்தாலும், கொரோனா பரவலை அலட்சியம் செய்யக்கூடாது என்கிற அடிப்படையில் இந்த அரசு எடுத்த அந்த முடிவை மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டு, அந்த நிகழ்ச்சியை ஒத்திவைத்தார்கள். அதற்காக இந்த பபாசி நிறுவனத்திற்கு, இந்த அமைப்பிற்கு நான் என்னுடைய நன்றியை அரசின் சார்பில் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

சென்னையில் நடப்பதைப் போலவே, மதுரையில் 14 ஆண்டுகளாகவும், கோவையில் 4 ஆண்டுகளாகவும் இந்த புத்தகக் கண்காட்சியை பபாசி நடத்தி வருகிறது. இதேபோல, மற்ற மாவட்டங்களிலும் நடத்த, அந்தந்த மாவட்டத்தில் இருக்கக்கூடிய நிருவாகம் உதவி செய்ய உரிய நடவடிக்கை எடுக்க நம்முடைய அரசு நிச்சயமாக அறிவுரை வழங்கும் என்பதை நான் முதலிலேயே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

2007ஆம் ஆண்டு இந்தப் புத்தகக் கண்காட்சியைத் தொடங்கி வைத்த நம்முடைய முதலமைச்சராக இருந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், சென்னையில் மிகப் பிரம்மாண்டமான நூலகம் அமையப் போகிறது என்ற அறிவிப்பை அப்போதுதான் வெளியிட்டார்.

அதுதான் இன்று எல்லோரும் வியக்கக்கூடிய அண்ணா நூற்றாண்டு நூலகம் என்பதை இன்றைக்கு நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

அதேபோல், மதுரையில் நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் பெயரால் 114 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு

மாபெரும் நூலகம் அமைக்க இன்றைய தமிழ்நாடு அரசு பணிகளைத் தொடங்கி இருக்கிறது. அந்த நூலகம் மிகப் பிரம்மாண்டமாக விரைவில் மதுரையில் எழ இருக்கிறது.

இதுபோன்ற அறிவுக்கோவில்களை கட்டுவதில் ஆர்வமாக உள்ள அரசுதான் இந்த அரசு. இந்த அரசு என்று சொல்வதை விட நமது அரசு. திராவிட இயக்கம் என்பதே அறிவியக்கம் தான். நூற்றாண்டுகளாய் அடிமைப்படுத்தப்பட்டிருந்த தமிழ்ச் சமுதாயத்துக்கு சுயமரியாதையையும், பகுத்தறிவையும் ஊட்டியது திராவிட இயக்கம்தான்!

நீங்கள் ஒன்றை நன்றாக கவனித்துப் பார்க்கலாம், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமைக் கழக அலுவலகத்தின் பெயரே அண்ணா அறிவாலயம். அந்த அறிவாலயம் தொடங்கப்படுவதற்கு முன்பு தி.மு.க.வின் முதல் தலைமையகம் எது என்று கேட்டீர்கள் என்றால், ராயபுரத்தில் இருக்கக்கூடிய அறிவகம்.

ஆண்டாண்டுக் காலமாக அடக்கி ஒடுக்கப்பட்டுக் கிடந்த மக்களுக்கு புத்தகம் அச்சடித்து சுயமரியாதைப் பரப்புரையில் ஈடுபட்டு அறிவுப் புரட்சியை ஏற்படுத்திய இயக்கம்தான் திராவிட இயக்கம்.

‘என்னுடைய வாரிசுகள் என்பது என்னுடைய புத்தகங்கள்தான்’ என்று சொன்னார் தந்தைப் பெரியார் அவர்கள்.

‘வீட்டுக்கொரு நூலகம் அமையுங்கள்’ என்று சொன்னார் பேரறிஞர் அண்ணா அவர்கள்.

புத்தகத்தின் மூலமாக உலகைப் படியுங்கள் என்று கட்டளையிட்டார் நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள்.

அந்த வழித்தடத்தில்தான் இந்த ஸ்டாலின் அரசும், ஏன் நமது அரசும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

- தமிழ்நாடு அரசுத் துறைப் பணியிடங்களில் நுழைபவர்களுக்கு தமிழ் மொழி அறிவு கட்டாயம் ஆக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள அனைத்துத் தேர்வு முகமைகளால் அரசுப் பணிக்காக நடத்தப்படும் போட்டித் தேர்வுகள் அனைத்திலும்; நியமன அலுவலர்களால் நடத்தப்படும் எழுத்துத் தேர்வுகளிலும், தமிழ் மொழித்தாளினைத் தகுதித் தேர்வாக ஆக்கி உள்ளது நம்முடைய அரசு.

- ஆசிரியர் தேர்வு வாரியம், மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம், தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமம் உள்ளிட்ட மாநிலத்தில் உள்ள அனைத்துத் தேர்வு வாரியங்களைப் பொறுத்தவரையில் கட்டாயத் தமிழ்மொழித் தகுதித் தேர்வு நிச்சயமாக நடத்தப்படும்.

- ஆலயங்களில் அன்னைத் தமிழ் ஒலிக்கத் தொடங்கி இருக்கிறது. ‘அன்னைத் தமிழில் அர்ச்சனை’ என்ற திட்டத்துக்கான குறிக்கோள் சின்னத்தையும், ஆலயங்களில் தமிழில் வழிபாடு நடத்துவதற்கான நூல்களையும் நான் வெளியிட்டுள்ளேன்.

- மாவட்டங்களில் உள்ள அரசு அலுவகங்களில் ஊழியர்கள் தமிழ் மொழியில் கையெழுத்து இடுவது, கோப்புகளை முழுவதும் தமிழிலேயே தயாரித்து நிறைவேற்றுவது ஆகிய செயல்பாடுகளை அரசு ஊக்குவித்துக் கொண்டிருக்கிறது.

- கரிசல் இலக்கியத்தின் பிதாமகர் கி.ராஜநாராயணன் செந்தமிழ் அந்தணர் மதுரை இரா.இளங்குமரனார் ஆகியோர் மறைவுக்கு அரசு மரியாதை தரப்பட்டுள்ளது.

- கடந்த **37** ஆண்டுகளில் **165** தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமை ஆக்கப்பட்டுள்ளன. இதில், **148** பேரின்

நூல்கள் நாட்டுடைமை ஆக்கப்பட்டது தி.மு.க. ஆட்சியில்தான். இந்த எட்டு மாத காலத்தில் ஏழு தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமை ஆக்கப்பட்டிருக்கிறது, அவர்களது குடும்பத்துக்கு 80 இலட்சம் ரூபாய் பிரித்துத் தரப்பட்டுள்ளது.

- ✶ கப்பலோட்டிய தமிழர் வ.உ.சிதம்பரனாரின் 150ஆவது பிறந்தநாளை முன்னிட்டு அவர்தம் நூல்களை இரண்டு பெரும் தொகுதிகளாகத் தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் சார்பில் வெளியிட்டுள்ளோம்.
- ✶ தமிழறிஞர்கள், எழுத்தாளர்களின் பிறந்தநாளன்று இலக்கியக் கூட்டங்கள் நடத்த அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.
- ✶ சங்க இலக்கிய நூல்களைக் குறைந்த விலையில் அச்சிட்டு வெளியிடத் திட்டமிட்டுள்ளோம்.
- ✶ திராவிட இயக்கத்தின் வரலாறு, கொள்கைகள், கோட்பாடுகள் குறித்த ஆராய்ச்சிக் கட்டுரைகள் கொண்ட திராவிடக் களஞ்சியம் வெளியாக இருக்கிறது.
- ✶ மனோன்மணீயம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடல் மாநிலப் பாடலாக அறிவிக்கப்பட்டுள்ளது.
- ✶ இதழியல் துறையில் மிகச்சிறந்து விளங்குவோருக்குக் கலைஞர் எழுதுகோல் விருது ஐந்து இலட்சம் ரூபாய் பரிசுத் தொகையுடன் வழங்கப்படும்.
- ✶ மகாகவி பாரதியின் நினைவு நூற்றாண்டை முன்னிட்டு அவரைச் சிறப்பிக்கும் 13 முக்கிய அறிவிப்புகளை வெளியிட்டுள்ளேன்.
- ✶ செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் புதிய வளாகம் அமைந்துள்ள மேடவாக்கம் – சோழிங்கநல்லூர்

இணைப்புச் சாலை "செம்மொழிச் சாலை" எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

- செம்மொழிச் சிறப்புகளை உலகெங்கும் கொண்டு சேர்க்கும் வகையில் முதற்கட்டமாகத் தெற்காசிய நாடுகளில் உள்ள 5 பல்கலைக்கழகங்களில் 'செம்மொழித் தமிழ் இருக்கைகள்' அமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

- பொது நூலகங்களுக்கு கலை, இலக்கியம், கணித்தமிழ், சுற்றுச்சூழல் குறித்த பல்வேறு சிற்றிதழ்கள் வாங்குவதற்காகத் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் மூலமாக ஒரு கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அதேபோல, பல்வேறு நூலகங்களுக்கு 60க்கும் மேற்பட்ட ஆங்கிலப் பருவ இதழ்கள், குறிப்பாக, அரசியல், சமூக ஆர்வலர்கள், போட்டித் தேர்வு எழுதுவோர் மற்றும் குழந்தைகளுக்குப் பயன்படும் இதழ்கள் வாங்குவதற்கு, 2 கோடியே 35 ஆயிரத்து 181 ரூபாய் தமிழ்நாடு பாடநூல் கழக நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளது.

- இயல், இசை, நாடகத்தில் சிறந்து விளங்கும் கலைஞர்களுக்குக் கலைமாமணி விருது வழங்குவதைப் போல, தமிழ் எழுத்தாளர்களுக்கு இலக்கிய மாமணி விருது வழங்கப்பட இருக்கிறது. விருதாளர்களுக்கு ஒரு இலட்சம் ரூபாய் வழங்கப்பட இருக்கிறது.

- முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 98ஆவது பிறந்தநாளை முன்னிட்டு ஒரு அறிவிப்பை நான் செய்துள்ளேன். உயரிய விருது பெற்ற எழுத்தாளர்களுக்கு வீடு வழங்கும் கனவு இல்லத் திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் உயர் வருவாய்ப் பிரிவு இல்லம் அவர்களுக்கு ஒதுக்கப்படும் அல்லது அவர்கள்

விரும்பும் மாவட்டத்தில் 5 செண்ட் மனையில் 1,500 சதுர அடியில் வீடு கட்டித் தரப்படும்.

– இப்படிச் சொல்லிக்கொண்டே போகலாம்.

✶ பள்ளிக்கல்வித்துறை,

✶ உயர்கல்வித்துறை,

✶ தமிழ் வளர்ச்சித்துறை,

✶ பொதுத்துறை

என்று நான் தனித் தனியாகச் சொல்லத் தொடங்கினால் நீண்ட நேரம் ஆகும்.

முக்கியமானவற்றைச் சொல்ல வேண்டும் என்றால், திராவிட மொழிகளில் மூத்த மொழியாக விளங்கும் தமிழ் மொழியில் இருந்து தமிழின் அடையாளமாக விளங்கும் பல்வேறு புத்தகங்கள் ஆங்கிலம் மற்றும் பிற திராவிட மொழிகளில் மொழிபெயர்க்கப்படும். ‘‘திசைதோறும் திராவிடம்’’ என்ற திட்டத்தின்கீழ் தற்போது ஆறு புத்தகங்களை நான் வெளியிட்டுள்ளேன். மக்கள் காப்பியமாக விளங்கும் இளங்கோவடிகள் எழுதிய சிலப்பதிகாரம், தமிழின் தலைசிறந்த தலித் எழுத்தாளர்களின் சிறுகதைத் தொகுப்பு, தோப்பில் முகமது மீரான் சிறுகதைகள், 50 தமிழ்ச் சிறுகதை எழுத்தாளர்களை அறிமுகப்படுத்தி எஸ்.இராமகிருஷ்ணன் அவர்கள் எழுதிய ‘கதாவிலாசம்’, தமிழ்ப் புதின எழுத்தாளர்களில் குறிப்பிடத் தகுந்த எழுத்தாளரான எப்சிபா ஜேசுதாசன் அவர்களின் ‘புத்தம் வீடு’ ஆகிய நூல்கள் ஆங்கிலத்தில் மொழிப்பெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.

‘முத்தமிழறிஞர் மொழிப்பெயர்ப்புத் திட்டம்’ என்ற திட்டத்தின்கீழ் மொழிப்பெயர்க்கப்பட்டுள்ள பா.ரா.சுப்பிரமணியம் அவர்கள் மொழிப்பெயர்த்த, ராபர்ட் கால்டுவெல்லின் ‘திராவிட மொழிகள்’ அல்லது தென்னிந்திய மொழிகளின் ‘ஒப்பிலக்கணம்

நூல்’ தமிழ்நாடு பாடநூல் கழகம் மற்றும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் கூட்டு வெளியீடாக இன்று வெளியிடப்படுகிறது. இந்த நூல்களை வெளியிட்டதில் நான் மிகுந்த பெருமைப்படுகிறேன், மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த ஆட்சியின் சாதனை என்று சொன்னால், அது தமிழாட்சி! தமிழ்நாட்டுக்கான ஆட்சி!

தமிழ்நாட்டு மக்களுக்கான ஆட்சி!

ஒரே வரியில் சொன்னால், திராவிட ஆட்சி!

நான் 2017ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகத்தின் செயல் தலைவராகப் பொறுப்பேற்ற நேரத்தில் ஒரு அறிவிப்பை நான் வெளியிட்டேன். பொது நிகழ்ச்சிகளில் பொன்னாடைகள் மற்றும் பூங்கொத்துகளுக்குப் பதிலாக எனக்கு புத்தகங்களைக் கொடுங்கள் என்று நான் கேட்டுக்கொண்டேன். என்னைச் சந்திக்க வருபவர்கள் மட்டுமல்ல, பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு நான் செல்கிறபோது அங்கேயும் புத்தகம் கொடுக்கும் பழக்கம் பரவி வருவதைப் பார்க்கும்போது எனக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது.

இதுவரை எனக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்ட ஒன்றரை இலட்சத்துக்கும் அதிகமான புத்தகங்களை இலங்கை யாழ்ப்பாண நூலகம் தொடங்கி, பல மேலை நாடுகளுக்கும் தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் உள்ள சிறிய நூலகங்களுக்கும் நான் வழங்கி இருக்கிறேன்.

பல்வேறு ஊர்களில் இருந்து, நூலகங்களின் சார்பில் எனக்குக் கடிதங்கள் தொடர்ந்து வந்துகொண்டிருக்கிறது. அந்த வகையில், தமிழகத்தில் அறிவுத்திறன் மேம்பாடு எந்த அளவுக்கு பெரிதாக வளர்ந்திருக்கிறது என்பதை இந்த புத்தகங்களை அன்பளிப்பாக கொடுக்கின்ற அந்தக் காட்சியைப் பார்க்கும்போது நான் உணருகிறேன்.

அதற்கு நானும் ஒரு தூண்டுகோலாக அமைந்திருக்கிறேன் என்பது உள்ளபடியே எனக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது.

அந்த மகிழ்ச்சியோடு இந்த நேரத்தில் உங்களுக்கு நான் ஒரு செய்தியை, அறிவிப்பை வெளியிட இருக்கிறேன். அது என்னவென்று கேட்டீர்களானால், நான் எழுதியிருக்கும் 'உங்களில் ஒருவன்' நூலின் முதல் பாகத்தை இம்மாத இறுதியில் வெளியிடுவதற்கான ஏற்பாடுகளில் செய்திருக்கிறேன்.

என்னுடைய 23 ஆண்டுகால வாழ்க்கைப் பயணத்தின் சுவடுகளை, அதில் நான் பதிவு செய்துள்ளேன். இளமைக் காலம், பள்ளிப் படிப்பு, கல்லூரிக் காலம், அரசியல் ஆர்வம், முதலில் நடத்திய கூட்டம், அதில் முதலில் பேசிய என்னுடைய பேச்சு, திரையுலகம், திருமணம், மிசா காலத்தின் தொடக்கம் வரையிலான பதிவுகள் இடம்பெற்றிருக்கிறது.

1976 வரையில் முதல் பாகமாக அதை எழுதி இருக்கிறேன். விரைவில் புத்தகக் கண்காட்சிக்கும் அது விற்பனைக்கு வரும். ஆகவே, நூலாசிரியன் என்ற அடிப்படையிலும் நான் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டிருக்கிறேன்!

45ஆவது புத்தகக் கண்காட்சியைத் தொடங்கி வைக்கக்கூடிய இதே நாளில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பெயரால் அமைந்த பொற்கிழி விருதை,

- பத்திரிகையாளர் சமஸ் அவர்கள்,
- பிரசன்னா ராமசாமி அவர்கள்,
- ஆசைத்தம்பி அவர்கள்,
- வெண்ணிலா அவர்கள்,
- பால் சக்கரியா அவர்கள்,

- ✶ மீனா கந்தசாமி ஆகியோருக்கு வழங்குவதில் நான் பெருமைப்படுகிறேன். உங்கள் அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல பபாசி விருதுகளைப் பெற்றுள்ள

- ✶ மீனாட்சி சோமசுந்தரம்,
- ✶ ரவி தமிழ்வாணன்,
- ✶ பொன்னழகு,
- ✶ திருவை பாபு,
- ✶ முனைவர் தேவிரா,
- ✶ அன்பிற்குரிய பேச்சாளர் பாரதி பாஸ்கர் ஆகியோருக்கு எனது பாராட்டுதல்களை, வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

2007ஆம் ஆண்டு இந்தப் புத்தகக் கண்காட்சியைத் தொடங்கி வைக்க நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் வருகைதந்த நேரத்தில், அப்போது நிகழ்ச்சியில் பேசிய எழுத்தாளர் பிரபஞ்சன் அவர்கள், ‘முதலமைச்சர் வந்தால் அறிவிப்பு இல்லாமல் இருக்காது’ என்று சொன்னார்.

‘ஒரு எழுத்தாளன் சொன்னது வீண் போக விட்டுவிடக் கூடாது’ என்று அதைக் குறிப்பிட்டுப் பேசிய நம்முடைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள், தனது சொந்த நிதியில் இருந்து ஒரு கோடி ரூபாயை பபாசி அமைப்புக்கு வழங்கி இந்த விழாவில் பொற்கிழி வழங்கக்கூடிய நிலைக்கு இந்த நிகழ்ச்சியை நடத்திக் கொண்டிருக்கிறோம்.

அந்தவகையில், முதலமைச்சராக வந்துள்ள நானும் ஒரு அறிவிப்பை வெளியிட வேண்டும் என்றுதான் ஆசையோடு

வந்தேன். ஆனால், நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல், அதனுடைய விதிமுறைகள் எல்லாம் உங்களுக்குத் தெரியும். எனவே, அந்த அடிப்படையில் இப்போது அறிவிக்க முடியாது. இவ்வளவு நாள் பொறுத்திருந்தீர்கள், இன்னும் இரண்டு நாட்கள் பொறுத்திருங்கள். விரைவில் நல்ல செய்தியை நான் அறிவிப்பேன்.

இதுபோன்ற புத்தகக் கண்காட்சிகள் தொடர்ந்து நடக்கட்டும்.

வாசிப்புப் பழக்கம் விரிவடையட்டும்!

நானிலமெங்கும் அறிவுத்தீ பரவட்டும்!

கொரோனா காலம் என்பதால் அரசின் கட்டுப்பாடுகளைக் கடைப்பிடித்து இந்தப் புத்தகக் கண்காட்சி சிறப்புடன் இயங்கட்டும் என்று மனதார, நெஞ்சார தமிழக அரசின் சார்பிலும், என்னுடைய சார்பிலும் வாழ்த்தி விடைபெறுகிறேன்.

நன்றி, வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள்,*
சென்னை, நந்தனம், ஒய்.எம்.சி.ஏ. உடற்கல்வியியல்
*கல்லூரி வளாகத்தில், **45**ஆவது சென்னை புத்தகக் காட்சியைத்*
*தொடங்கிவைத்து ஆற்றிய உரை – **16.02.2022***

மாணவர்களின் படைப்பாற்றலை ஊக்குவிக்கும் "சமூக மேம்பாட்டிற்கான புத்தாக்கத் திட்டம்"

மீனாட்சி சுந்தரராஜன் பொறியியல் கல்லூரியின் சமூக மேம்பாட்டிற்கான புத்தாக்கத் திட்ட தொடக்க விழாவில் மாணவர்களின் அரிய நல்படைப்புகளைப் பயனாளிகளுக்கு வழங்கக்கூடிய இந்த சிறப்பான நிகழ்ச்சியில் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கியிருக்கக்கூடிய தமிழகத்தினுடைய மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி அவர்களே!

மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அருமை நண்பர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்களே!

சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் எழிலன் அவர்களே, திரு.வேலு அவர்களே, திரு.கருணாநிதி, அவர்களே!

வரவேற்புரை ஆற்றியிருக்கக்கூடிய இந்தக் கல்லூரியின் செயலாளர் முனைவர் கே.எஸ்.பாபை அவர்களே!

திட்ட விளக்கவுரை ஆற்றியுள்ள இயக்குநர் திரு.என்.ஸ்ரீகாந்த் அவர்களே!

நிகழ்ச்சிக்கு முன்னிலையேற்று வாழ்த்துரை வழங்கியுள்ள

திரு.நல்லி குப்புசாமி செட்டியார் அவர்களே!

நன்றியுரை ஆற்றவுள்ள கல்லூரியின் தலைவர் முனைவர் கே.எஸ்.லட்சுமி அவர்களே!

இந்நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கக்கூடிய பெரியோர்களே, அன்பிற்கினிய தாய்மார்களே, என் பாசத்திற்கும், அன்பிற்கும் உரிய மீனாட்சி சுந்தரராஜன் கல்லூரியினுடைய மாணவியர்களே, பயனாளிப் பெருமக்களே, மாணவச் செல்வங்களே, பாசமிகு பத்திரிகைத் துறையைச் சார்ந்த இனிய நண்பர்களே, உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

சென்னையின் புகழ்வாய்ந்த கல்லூரிகளில் ஒன்றாக மீனாட்சி மகளிர் கல்லூரி விளங்கிக்கொண்டிருக்கிறது என்பதை அறிந்து நான் உள்ளபடியே மகிழ்ச்சியடைகிறேன், பெருமைப்படுகிறேன். மீனாட்சி மகளிர் கல்லூரி, மீனாட்சி சுந்தரராஜன் பொறியியல் கல்லூரி, மீனாட்சி சுந்தரராஜன் மேலாண்மைக் கல்லூரி ஆகியவை உள்ள இந்த கே.ஆர்.எஸ். கல்விக் குழும வளாகத்திற்கு வருகைதந்து உங்களை எல்லாம் சந்திக்கின்ற, அதே நேரத்தில் நலத்திட்டங்களை வழங்குகின்ற இன்னும் சொல்லவேண்டும் என்று சொன்னால், உங்களிடத்திலே சில கருத்துக்களை எடுத்துச் சொல்லக்கூடிய வாய்ப்பை நான் பெற்றிருக்கிறேன். அதற்காக நான் மகிழ்ச்சியடைகிறேன். இந்த வாய்ப்பை உருவாக்கித் தந்திருக்கக்கூடிய இந்தக்

கல்லூரியினுடைய நிர்வாகிகளுக்கு முதலில் என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

வரலாற்றுச் சிறப்புக்குரிய கல்லூரியாக, இந்த மீனாட்சிக் கல்லூரி விளங்கிக்கொண்டிருக்கிறது. திருநெல்வேலி மாவட்டத்தைச் சார்ந்த, கோடகநல்லூர் என்கிற சின்னஞ்சிறிய கிராமத்தில் பிறந்து வளர்ந்து, KRS என்று எல்லோராலும் அன்போடு அழைக்கப்படும், கோடகநல்லூர் ராமசாமி சுந்தரராஜன் அவர்களால் 1947ஆம் ஆண்டு துவங்கப்பட்டது. இந்திய அளவில் மிகவும் குறைந்த எண்ணிக்கையில்தான் அப்போது பொறியியல் கல்லூரிகள் இருந்தது. இந்த நாட்டின் பெரும்பான்மையான மக்களுக்கும் கல்வி உரிமை மறுக்கப்பட்டு, பலருக்கும் ஆரம்பக் கல்விக் கூட கிடைக்காத காலக்கட்டமாக இருந்திருக்கிறது. மாபெரும் சமூகப் புரட்சியாளர்கள் எளிய மக்களுக்கான கல்விக் கதவுகளைத் திறந்து கொண்டிருந்தார்கள். அந்தக் காலக்கட்டத்தில், உயர்கல்வி பெற வாய்ப்புக் கிடைத்த சிலருக்குக் கூட பொறியியல் பட்டப் படிப்பு என்பது வெறும் கனவாகத்தான் இருந்திருக்கிறது. அந்தச் சூழலில்தான் பொறியியல் படிக்க விரும்பக் கூடியவர்கள், அந்தப் படிப்பில் பட்டம் பெற வழிவகை செய்யக்கூடிய நோக்கத்தோடு, இந்தக் கல்லூரி துவங்கப்பட்டிருக்கிறது.

உலக மகளிர் ஆண்டான 1975ஆம் ஆண்டு மீனாட்சி மகளிர் கல்லூரி துவங்கப்பட்டது. இப்பொழுது முனைவர் கே.எஸ்.லட்சுமி அம்மையார் அவர்களும் நிருவாகத் திறனோடு இந்தக் கல்லூரியை நடத்திக்கொண்டிருக்கிறார் என்பது உள்ளபடியே பெருமைப்படக்கூடிய ஒன்று. கே.ஆர்.எஸ். அவர்களின் மகளான முனைவர் கே.எஸ்.பாபை அவர்களின் சிறப்பான பங்களிப்பால் முன்னணிப் பொறியியல் கல்லூரியாக இந்தக் கல்லூரியை மாற்றியிருக்கிறார். அதற்காக

என்னுடைய வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொறியியல் கல்வி எளிதாக கிடைக்க வேண்டும் என்கின்ற நோக்கத்திற்காகத்தான் இந்தக் கல்வி நிறுவனம் துவங்கப்பட்டிருக்கிறது. அதே நோக்கத்தோடுதான், மாணவர்கள் பொறியியல் கல்லூரியைப் பெறுவதற்கு இடராக இருந்த நுழைவுத் தேர்வை முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் நீக்கினார் என்பதும் வரலாறு, அதை நீங்கள் மறந்துவிடக்கூடாது.

அதனால், இன்று தமிழ்நாட்டின் ஒவ்வொரு வீட்டிலும் ஒரு பொறியாளர் இருக்கிறார் என்று சொல்கிற அளவுக்கு நிலைமை மாறியிருக்கிறது. பொறியியல் மட்டும் அல்ல, அனைத்துப் படிப்புகளும் நமது தமிழ்நாட்டு மாணவர்களுக்கு எளிதாக கிடைக்க வேண்டும் என்பதுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிலைப்பாடு. இப்பொழுது இருக்கக்கூடிய எனது அரசு என்று சொல்ல மாட்டேன், நமது அரசினுடைய நிலைப்பாடும்!

அதனால்தான், இன்று ஏழை, எளிய, கிராமப்புற மாணவர்கள் மருத்துவக் கல்வி பெறுவதற்குத் தடையாக இருக்கக்கூடிய 'நீட்' தேர்விலிருந்து விலக்கு பெற நாம் எப்படியெல்லாம் போராடிக் கொண்டிருக்கிறோம், அதுவும் சட்டப் போராட்டத்தை நடத்தக்கூடிய நிலையிலே இன்றைக்கு நாம் இருக்கிறோம்.

மாணவர்கள்தான் நாட்டினுடைய மிகப்பெரிய சொத்து! எக்காரணம் கொண்டும் மாணவர்களுக்கான கல்விக் கதவுகள் மூடப்படக்கூடாது!

தமிழ்நாட்டில்தான் ஆற்றல்மிக்க இளைஞர் சக்தி அதிகம். இந்தியாவில் இருக்கும் மிக முக்கியமான 100 கல்வி நிறுவனங்களில் 30க்கும் மேற்பட்டவை தமிழ்நாட்டைச் சேர்ந்தவைதான் என்பது பெருமைப்படக்கூடிய ஒன்று. அண்மைக்காலத்தில் வெளியான

ஒன்றிய அரசினுடைய தரவரிசை முடிவுகளே அதைச் சுட்டிக்காட்டிக் கொண்டிருக்கிறது.

பள்ளிகள், மேனிலைப் பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள், உலக ஆராய்ச்சி நிறுவனங்கள் தமிழ்நாட்டில் இருப்பதுபோல எந்த மாநிலத்திலும் கிடையாது, அதுவும் தமிழ்நாட்டுக்குத்தான் பெருமை.

தமிழ்நாட்டு இளைஞர்கள் உலகத்தின் அனைத்து நாடுகளிலும் வேலை செய்துகொண்டிருக்கிறார்கள். உயர் பொறுப்புக்களில் இருந்துகொண்டிருக்கிறார்கள். இந்த இளைஞர்கள் எல்லாம் தமிழ்நாட்டின் உயர்கல்வியால் உயர்ந்தார்கள், உயர்ந்த நிலைக்குச் சென்றவர்கள், அந்த நிலையை இன்னும் கூடுதலாக நாம் உயர்த்தவேண்டும்.

ஆய்வுகள், ஆராய்ச்சிகள், கண்டுபிடிப்புகள் இன்னும் அதிகமாக வேண்டும். வெளிநாடுகளில் இருக்கும் புதுவிதமான படிப்புகள், பட்டங்கள் அனைத்தையும் தமிழ்நாட்டின் கல்லூரி, பல்கலைக்கழகங்களில் நாம் புகுத்தவேண்டும். இதை நான் கடந்த மாதம் 25ஆம் தேதி அண்ணா பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற விழாவில் குறிப்பிட்டுச் சொன்னேன்.

இந்தக் கல்லூரியில் இன்றையதினம் ‘‘சமூக மேம்பாட்டிற்கான புத்தாக்கம்’’ எனும் திட்டத்தை நீங்கள் உருவாக்கியிருக்கியிருக்கிறீர்கள்.

சமுதாயத்தில் மாற்றுத்திறனாளிகள், பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய நிலையிலே இருக்கக்கூடிய பிரிவினர் மற்றும் பல்வேறு சூழல்களால் நலிவடைந்த பெண்கள், இதையெல்லாம் மனதில் நாம் உருவாக்கிக்கொண்டு அவர்களின் தேவையைப் பூர்த்தி செய்து, அவர்களது வாழ்வில் உயர்வினைக் கொண்டு வருவதுதான் இந்தத் திட்டத்தின் நோக்கமாக அமைந்திருக்கிறது.

மாணவர்கள் தாங்கள் கல்வி கற்கும் பருவத்திலேயே சமுதாயத்தில் உள்ள தேவைகளைக் கண்டறிந்து, தங்களது கல்லூரியில் அமைந்துள்ள ஆய்வுக்கூடம், நூலகம் மற்றும் பேராசிரியர்கள் துணை கொண்டு தங்களது கற்பனைத் திறனையும், தொழில்நுட்பத்தையும், படைப்பாற்றலையும், கண்டறிந்து செயலாக்கத்தை ஊக்குவிக்க இந்தத் திட்டம் நிச்சயம் உதவும்.

நலிவுற்ற மக்களின் தேவைகளைக் கண்டறிந்து நவீன தொழில்நுட்பம் மூலம் தீர்வுகாண இந்தத்திட்டம் உதவும். இந்தத்திட்டத்தின் தொடக்கமாக இக்கல்லூரி மாணவர்கள் உருவாக்கிய சமூகப் பயன்பாட்டிற்கான எளிமையான சிறந்த தொழில்நுட்பங்களை உள்ளடக்கிய, குறைந்த பொருட்செலவிலான படைப்புகளை பார்க்கும்போது இவர்கள் இதுபோல இன்னும் பல்வேறு கண்டுப்பிடிப்புகளைத் தொடர்ந்து அறிமுகப்படுத்தி, எளிய மக்களுக்கு உதவியாக இருக்க வேண்டும் என்று நான் மனந்திறந்து இந்த மாணவச் செல்வங்களை வாழ்த்துகிறேன்.

இந்தத் திட்டங்களை மக்களுடைய பயன்பாட்டிற்கு வழங்குவதில் நான் உள்ளபடியே பெருமைப்படுகிறேன். தலைவர் கலைஞர் அவர்கள் இந்தக் கண்டுபிடிப்புகளைப் பார்த்திருந்தால் நிச்சயமாக அவரும் பாராட்டியிருப்பார், வாழ்த்தியிருப்பார். அவர்தான் நாட்டியிலேயே முதல்முறையாக மாற்றுத்திறனாளிக்கு என்று ஒரு தனித் துறையே உருவாக்கினார். அந்தத்துறையை தன்னுடைய நேரடிக் கட்டுப்பாட்டில் வைத்திருந்தார். இப்பொழுது நான் அதை நேரடிக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறேன். ஆகவே, கண்ணும்கருத்துமாக அதைக் கலைஞர் அவர்கள் பார்த்தார்கள்.

இதுபோன்ற கண்டுபிடிப்புகள் சிறியதாக இருந்தாலும் அவற்றின் மையமாக இருக்கும் மனிதநேயப் பண்பு பெரியது. கல்லூரி துவங்கியுள்ள சமூக மேம்பாட்டிற்கான புத்தாக்கத் திட்டத்தில் உறுதுணையாக இருந்த அனைத்துப் பேராசிரியர்கள், கல்லூரி

முதல்வர் மற்றும் செயலாளர் அத்தனைப் பேர்களையும் நான் இந்த நேரத்தில் வாழ்த்துகிறேன்.

“கல்வியில் சிறந்த தமிழ்நாடு என்ற பட்டம் நமக்குப் போதாது. உயர் கல்வியில், ஆராய்ச்சிக் கல்வியில் சிறந்த தமிழ்நாடு என்ற பட்டத்தை நாம் பெற்றாக வேண்டும்” என்கிற என்னுடைய விருப்பத்தை, என்னுடைய எண்ணத்தை நான் இந்த நேரத்தில் எடுத்துச்சொல்லி, அதை நோக்கி நாம் பயணிப்போம் என்று நான் உங்களையெல்லாம் அன்போடு கேட்டுக்கொண்டு, உங்கள் அனைவரையும் சந்திக்கக்கூடிய ஒரு நல்ல வாய்ப்பை ஏற்படுத்தித் தந்திருக்கக்கூடிய இந்தக் கல்லூரியினுடைய நிருவாகப் பெருமக்களுக்கு அதேநேரத்தில் இங்கே இவ்வளவு அமைதியாக, மாணவச் செல்வங்கள் என்று சொன்னால் இங்கொன்றும் அங்கொன்றுமாக சலசலப்பு, கூச்சல் எல்லாம் இருக்கும், ஆனால் நீங்கள் உட்கார்ந்து இருக்கக்கூடிய இந்தக் கட்டுப்பாட்டைப் பார்க்கிறபோது எவ்வளவு கண்ணியத்தோடு, எவ்வளவு கட்டுப்பாட்டோடு இந்தக் கல்லூரி செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதற்கு இதுவே எடுத்துக்காட்டாக விளங்கிக் கொண்டிருக்கிறது. இந்தக் கட்டுப்பாட்டோடு இருங்கள், கடமை ஆற்றுங்கள், நிச்சயம் நமக்கு வெற்றி, வெற்றி, வெற்றி என்று கூறி விடைபெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்,*
*சென்னை, கோடம்பாக்கம், மீனாட்சி சுந்தரராஜன் பொறியியல் கல்லூரியின் சமூக மேம்பாட்டிற்கான புத்தாக்கத் திட்டத்தினைத் தொடங்கிவைத்து ஆற்றிய உரை – **26.02.2022***

உலகை வெல்லும் இளைய தமிழகத்தை உருவாக்கிட "நான் முதல்வன்" திட்டம்

நான் முதல்வன் என்கின்ற புதிய திட்டத்தினுடைய தொடக்க விழா நிகழ்ச்சியில் கலந்துகொண்டு வரவேற்று மகிழ்ந்திருக்கக்கூடிய தலைமைச் செயலாளர் முனைவர் வெ.இறையன்பு, இ.ஆ.ப., அவர்களே!

சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கக்கூடிய தமிழக அரசினுடைய நீர்வளத்துறை அமைச்சர் மாண்புமிகு அண்ணன் துரைமுருகன் உள்ளிட்ட தமிழக அமைச்சர் பெருமக்களே!

சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களே!

அரசுத் துறையை சார்ந்திருக்கக்கூடிய பல்வேறு நிலையில் இருக்கக்கூடிய அதிகாரி பெருமக்களே!

சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொண்டிருக்கக்கூடிய பிரிட்டிஷ் தூதரகத்தினுடைய துணை உயர் ஆணையர் திரு.ஆலிவர் பால்ஹட்செட் அவர்களே!

காவல்துறையின் தலைமை இயக்குநர் முனைவர் சைலேந்திரபாபு அவர்களே!

இணைய வழியாக கலந்து கொண்டிருக்கக்கூடிய சர்வதேச சதுரங்க கிராண்ட் மாஸ்டர் திரு.விஸ்வநாதன் ஆனந்த் அவர்களே!

இந்தியத் தொழில்நுட்பக் கழகத்தினுடைய இயக்குநர் திரு.காமகோடி வீழிநாதன் அவர்களே!

இந்திய விண்வெளி ஆராய்ச்சிக் கழகத்தினுடைய அறிவியலாளர் திரு.மயில்சாமி அண்ணாதுரை அவர்களே!

டையாம்லர் கமர்ஷியல் வெகிகிள்ஸ் நிறுவனத்தினுடைய மேலாண்மை இயக்குநர் மற்றும் முதன்மைச் செயலர் திரு.சாய்ராம் ஆர்யா அவர்களே!

இந்திய கிரிக்கெட் வீரர் திரு.நடராஜன் தங்கராசு அவர்களே!

டாக்டர் சந்தியா சிந்தலா அவர்களே!

செயல் அலுவலர் திரு.சுரேஷ் சம்பந்தம் அவர்களே!

கல்வி மற்றும் வேலைவழிகாட்டல் நிபுணர் திரு.நெடுஞ்செழியன் அவர்களே!

வருகை தந்திருக்கக்கூடிய கல்வியாளர்களே!

என் பேரன்பிற்கும் பாசத்திற்கும் உரிய மாணவச் செல்வங்களே!

பாசமிகு பத்திரிகையாளர்களே!

பெரியோர்களே! தாய்மார்களே! நண்பர்களே!

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்!

இந்த நாள் என்னுடைய வாழ்விலே ஒரு பொன்னாளாக அமைந்திருக்கிறது!

இன்றைக்கு என்னுடைய பிறந்தநாள் காண்கிறேன் என்பதற்காக மட்டும் நான் இதைச் சொல்லவில்லை. எனது கனவுத் திட்டமான 'நான் முதல்வன்' திட்டத்தின் தொடக்க நாள் இது. அதனால் தான்

இது, ‘என்னுடைய வாழ்விலே கிடைத்திருக்கக்கூடிய பொன்னாள்’ என்று நான் குறிப்பிட்டுச் சொன்னேன்.

தமிழ்நாட்டு மக்களால் முதலமைச்சராக ஆக்கப்பட்டிருக்கக் கூடிய நான் அனைத்து மாணவச் செல்வங்களையும் முதல்வன் ஆக்க, உருவாக்கிய திட்டம்தான் இந்தத் திட்டம். தமிழ்நாட்டு மாணவச் செல்வங்கள், இளைஞர்கள் அனைவரும் அனைத்து விதமான தகுதியையும் பெற்று முன்னேறி, அனைவரும் அனைத்திலும் முதலாவதாக வந்தார்கள் என்ற நிலையை உருவாக்கும் திட்டம்தான் இந்தத் திட்டம், இந்தத் திட்டத்தினுடைய நோக்கம். அனைத்து இளைஞர்களையும் கல்வியில், ஆராய்ச்சியில், சிந்தனையில், செயலில், திறமையில், சிறந்தவர்களாக மாற்றிட வேண்டும் என்கிற அந்த உணர்வோடு இந்தத் திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது.

தமிழ்நாட்டில் எல்லோரும் பள்ளிக் கல்வியை முடித்து விடுகிறார்கள். கல்லூரிப் பட்டங்களையும் பெற்றுவிடுகிறார்கள். ஆனால் அவர்கள் எல்லோருக்குமே வேலை கிடைத்திருக்கிறதா என்று கேட்டால் அது ஒரு கேள்விக் குறியாகத்தான் இருக்கிறது. வேலை இல்லை என்று சொல்லும்போது, சிலர் ஒரு காரணத்தைச் சொல்கிறார்கள். “வேலைகள் நிறைய இருக்கிறது; ஆனால் அதற்குத் தகுதியான இளைஞர்கள் இல்லை” என்று சொல்லக்கூடிய நிலை இன்றைக்கு நாட்டில் இருக்கிறது. இதைக் கேட்கும்போது மிக வருத்தமாகத்தான் இருக்கிறது. பட்டம் வாங்கியிருக்கிறார்கள், ஆனால், அந்தப் படிப்பு குறித்த தெளிந்த அறிவு எல்லோருக்கும் இல்லை என்று சொல்லப்படுகிறது.

இந்தியாவில் இருக்கும் உயர்கல்வி நிறுவனங்களில் 33 விழுக்காடு இடங்கள் தமிழ்நாட்டில் இருக்கிறது என்று நாம் சொல்லிப் பெருமைப்பட்டுக்கொள்கிறோம். இன்னொரு பக்கம், திறமைக் குறைவு பற்றியும் கவலைப்பட வேண்டிய சூழ்நிலையில்

தத்தளித்துக் கொண்டு இருக்கிறோம். பள்ளிக்கூடங்கள் இல்லாத கிராமமே இல்லை என்று நாம் பெருமைப்பட்டுக் கொள்கிறோம். ஆனால் அதே நேரத்தில், அப்படிக் கற்பவர்களுக்குத் தனித்திறமைகள் இல்லை என்பது பற்றியும் கவலைப்பட வேண்டியவர்களாக இருக்கிறோம்.

இந்தியாவைப் பார்த்து உலகநாடுகள் பயப்படுகிறார்கள், இந்தியாவில் இருக்கும் ஆயுதங்களைப் பார்த்து பயப்படவில்லை. இந்தியாவில் இருக்கும் இளைய சக்தியின் எண்ணிக்கையைப் பார்த்து பயப்படக்கூடிய பெருமையை நாம் பெற்றிருக்கிறோம். ஆனால், இந்த இளையசக்தி முழுமையான திறமை கொண்டதாக இருக்கிறதா என்று கேட்டால், இல்லை என்பதையும் சொல்லித்தான் ஆக வேண்டும்.

இப்படிப்பட்ட குறைகளை மட்டும் சொல்லிக்கொண்டு இருப்பதால் பயன் இல்லை, அவர்களை நிறையுடை மனிதர்களாக மாற்றுவதற்கான முயற்சியில் ஈடுபடுகிறோம், அதற்காகத்தான் இந்தத் திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது. அதற்குத்தான் 'நான் முதல்வன்' என்ற அந்தப் பெயரையும் நாம் சூட்டியிருக்கிறோம்.

ஒளிபடைத்த கண்ணினாய் வா வா வா!
உறுதி கொண்ட நெஞ்சினாய் வா வா வா!
களிபடைத்த மொழியினாய் வா வா வா!
கடுமை கொண்ட தோளினாய் வா வா வா!
தெளிமை பெற்ற மதியினாய் வா வா வா!

– என்று பாடினார் மகாகவி பாரதி அவர்கள்.

இந்தப் பாடலின் இறுதி வரியாக, அதேநேரம் உறுதிமிகு வரியாக ஒரு வரியை எழுதியிருப்பார் பாரதியார் அவர்கள்.

"நாடெல்லாம் ஒரு பெருஞ்செயல் செய்வாய் வா வா வா" என்று எழுதினார்.

அத்தகைய ஒரு பெருஞ்செயல்தான் 'நான் முதல்வன்' என்கிற அந்தத் திட்டமாக அமைந்திருக்கிறது.

மாணவச் செல்வங்களே!

பள்ளிப் பிள்ளைகளே!

கல்லூரி மாணவ, மாணவியரே!

நீங்கள் அனைவரும் உரக்கச் சொல்லிப் பாருங்கள்!

'நான் முதல்வன்'

நான் முதல்வன்

நான் முதல்வன் – என்று சொல்லிப் பாருங்கள்!

உங்களுக்குள் ஒரு சக்தி பிறக்கும்.

உங்களுக்குள் ஒரு நம்பிக்கை பிறக்கும்.

உங்களுக்கு ஒரு தைரியம் பிறக்கும்.

நான் முதல்வன் என்று சொல்லுவது எளிது. ஆனால், எல்லாவற்றுக்கும் முதல்வன் ஆவது என்பது எளிமையான செயல் அல்ல. அதற்கு முதலில் உங்களை நீங்கள் தயார்ப்படுத்திக் கொள்ள வேண்டும். உங்களது தனித்த திறமைகள் எது என்பதில் உங்களுக்கு ஒரு தெளிவான நிலைப்பாடு இருக்க வேண்டும். பலர், தங்களுடைய பெற்றோர்கள் சொன்னார்கள் என்று மருத்துவம் படிப்பது, பொறியியல் படிப்பது என்று சேர்கிறார்கள். எந்தப் படிப்பில் உங்களுக்கு ஆர்வம் இருக்கிறதோ, உங்களுக்கு விருப்பம் இருக்கிறதோ, அந்தப் படிப்பில் சேருங்கள். அந்தப் படிப்பு, பட்டம் வாங்குவதற்காக மட்டுமில்லாமல், அந்தப் படிப்பு குறித்த முழுமையான அறிவை நீங்கள் தெளிவு பெற வேண்டும்.

மக்கள்தொகை நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டிருக்கிறது. எனவே போட்டிகளும் அதிகம் ஆகிக்கொண்டிருக்கிறது.

தமிழ்நாடு போன்ற மாநிலங்களில் ஏராளமான கல்வி நிலையங்கள் இருக்கின்றன. எனவே, கல்லூரிப் பட்டம் என்பதை எளிதாக, எல்லோரும் பெற்றுவிடலாம். ஆனால், அந்தப் பட்டத்தைத் தாண்டிய தனித்திறமை இருந்தால்தான் இந்தப் போட்டி நிறைந்த உலகத்தில் உங்களால் வெல்ல முடியும்.

உலகப் போட்டியில் உங்களையும் ஒரு மனிதராக நீங்கள் இணைத்துக்கொள்ள வேண்டும். உங்களை நீங்களே திறமைசாலிகளாக ஆக்கிக்கொள்ள வேண்டும்.

- இந்த மூன்று பட்டங்கள் பெற்றவர்களுக்குக் கூட, நான்கு பேருக்கு முன்பாகப் பேசுவதற்குத் தயக்கம் இருக்கிறது.
- எடுத்துச் சொல்வதில் தெளிவு இல்லை.
- தைரியம் இல்லை.
- புதிய முயற்சிகள் இல்லை.
- ஏதோ ஒரு வேலை கிடைத்தால் போதும் என்ற ஒரு சலிப்பு இருக்கிறது.
- நமக்கெல்லாம் எங்கே பெரிய வேலை கிடைக்கப் போகிறது என்ற விரக்தி இருக்கிறது.

இவை எல்லாம் ஒரு மனிதரை வீழ்த்தும் காரணிகள். ஒரு மனிதனுக்குப் புறத் தடைகளைவிட உள்ளார்ந்த அந்தத் தடைகள்தான் அதிகம் இருக்கிறது. இந்தப் புறத் தடைகளை ஒவ்வொரு மனிதருக்குள்ளும் உடைக்க வருகிற திட்டம்தான் நான் முதல்வன் திட்டம் ஆகும் என்பதைப் பெருமையோடு சொல்கிறேன்.

நான் திட்டத்தை உருவாக்கி இருக்கிறேன். இது மாணவர்கள் அனைவரையும் தகுதிப்படுத்தும் திட்டம். இளைஞர்கள் அனைவரையும் உயர்த்தும் திட்டம். தமிழ்நாட்டு மாணவர் ஒருவர்,

உலகின் எந்த நாட்டு மாணவரையும் விட, தரமும் தகுதியும் குறைந்தவர் கிடையாது என்பதைக் காட்டும் திட்டம்தான் இந்தத் திட்டம்.

இந்தத் திட்டத்தின் மூலமாக நிறுவனங்களை, தொழில் நிறுவனங்களை, அரசு நிறுவனங்களை, கல்வி நிறுவனங்களை ஒன்றிணைப்போம். அதற்கான முயற்சியில் நாம் முழுமையாக ஈடுபட்டிருக்கிறோம். அரசு நிறுவனங்களுக்கும், தொழில் நிறுவனங்களுக்கும், தகுதியானவர்களாக இளைஞர்களை உருவாக்குவதை எனது முக்கியக் குறிக்கோளாக நான் ஏற்றுக் கொள்கிறேன்.

கல்வியில் சிறந்தவர்களாக,

சிந்திக்கும் திறம் படைத்தவர்களாக,

தனித்திறமை கொண்டவர்களாக,

தொழில்திறன் கொண்டவர்களாக,

நிறுவனங்களை நடத்துபவர்களாக,

அவர்களை உருவாக்க எனக்கு நானே உறுதி எடுத்துக் கொள்கிறேன்.

கலைத் திறன் படைத்தவர்கள் கலைஞர்களாகட்டும். தொழில் திறன் படைத்தவர்கள் தொழில் முனைவோர் ஆகட்டும். விளையாட்டில் ஆர்வம் கொண்டோர் விளையாட்டு வீரர்கள் ஆகட்டும். நிறுவனங்கள் நடத்தத் தெரிந்தோர் நிறுவனங்களைத் தொடங்கட்டும். வேலை தேடுபவர்களாக இல்லாமல், வேலை கொடுப்பவர்களாக எல்லோரும் மாற வேண்டும். பிற நிறுவனங்களின் கதவுகளைத் தட்டுபவர்களாக இல்லாமல், இவர் நிறுவனத்தைப் பிறர் பயன்படுத்திக்கொள்ளட்டும். அந்த வரிசையில், உங்கள் பெயரும் இணைய வேண்டும் என்றால், அப்போது, உங்களுக்காக

உருவாக்கப்பட்ட திட்டம்தான் இந்த 'நான் முதல்வன்' திட்டம் என்பதை நான் மீண்டும், மீண்டும் நினைவுபடுத்துகிறேன்.

படிப்பு என்பது பட்டம் சார்ந்தது மட்டுமல்ல, திறமை சார்ந்ததாக மாறவேண்டும். வேலை என்பது சம்பளம் சார்ந்ததாக மட்டுமல்ல, திறமை சார்ந்ததாக மாறவேண்டும். நீங்கள் அடையும் உயரம் சலுகை சார்ந்ததாக மட்டுமல்ல, திறமை சார்ந்ததாக மாறவேண்டும்.

அத்தகைய திறமையை உங்களுக்கு உருவாக்க, உங்களுக்காக உருவாக்க ஒருவன் இருக்கிறான், அதுதான் இந்த நாட்டின் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் என்பதை இன்று முதல் நீங்கள் நினைவில் வையுங்கள். உங்களது மூத்த சகோதரனாக இருந்து, உங்கள் வளர்ச்சியை தூரத்தில் இருந்து நானே நேரடியாகப் பார்க்கப் போகிறேன்.

அதற்காக எனது நேரடி மேற்பார்வையில் ஒரு திட்டத்தை உருவாக்கி இருக்கிறேன்.

- ✶ உங்கள் படிப்பை கவனிப்போம்.
- ✶ உங்கள் தனித்திறமையை வளர்த்தெடுப்போம்.
- ✶ உங்கள் மனதில் அறிவியல் திறனை உருவாக்குவோம்.
- ✶ உங்களுக்குத் தன்னம்பிக்கையையும் தைரியத்தையும் ஊட்டுவோம்.
- ✶ உங்களுக்கு விருப்பமான பயிற்சிகளை நாங்களே தருவோம்.
- ✶ தொழில்நுட்ப அறிவை மேம்படுத்துவோம்.
- ✶ புதிது புதிதாக உருவான படிப்புகளை அறிமுகம் செய்வோம்.
- ✶ அந்தப் படிப்புகளுக்குத் தகுதியான இளைஞர்களை உருவாக்குவோம்.

- ✶ நவீனம் அனைத்தையும் உங்களது உள்ளங்கையில் கொண்டுவந்து சேர்ப்போம்.
- ✶ மொழித் திறனை மேம்படுத்துவோம்.
- ✶ தாய் மொழியாம் தமிழ் மொழியா? அதை அனைவருக்கும் எழுத, படிக்க, பேசத் தெரிந்திருக்க வேண்டும்.
- ✶ உலக மொழியாம் ஆங்கிலமா? அதில் அனைவருக்கும் எழுத, படிக்க, பேசத் தெரிந்திருக்க வேண்டும்.
- ✶ உடல்பயிற்சியும், உள்ளப்பயிற்சியும் வழங்குவோம்.
- ✶ மனப்பயிற்சியும், குணப்பயிற்சியும் நிச்சயம் வழங்குவோம்.
- ✶ ஒரு வரியில் சொல்வதென்றால் உங்களைப் பெற்ற தாய் போல், உங்களுடைய நலனில் அக்கறை கொண்ட திட்டம்தான் 'நான் முதல்வன்' என்கிற அந்தத் திட்டம்.

அனைவரையும் உள்ளடக்கிய, அனைத்துத் துறை வளர்ச்சி என்று நான் சொல்லி வருகிறேன்.

இதான் திராவிட மாடல் என்று நான் சொல்லி வருவது உங்களுக்கு இப்போது புரியும். தெரியும்.

2030ஆம் ஆண்டுக்குள் தமிழகத்தில் ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரத்தை வளர்க்க வேண்டும் என்று சொல்லி வருகிறேன்.

இப்படிப் பொருளாதாரம் வளர வேண்டும் என்றால், 2026ஆம் ஆண்டுக்குள் தமிழ்நாட்டின் 2 மில்லியன் இளைஞர்களின் திறன் மேம்பாடு அடைய வேண்டும். இதற்காக மாணவர்களுக்குப் பயிற்சி தரப் போகிறோம். அதற்கு முன், பயிற்சி தரக்கூடிய ஆசிரியர்களுக்கு முதலில் பயிற்சி தரப்போகிறோம்.

என்ன படிக்கலாம், எங்கு படிக்கலாம் என்கிற வழிகாட்டி மையங்களாகப் பள்ளிகள் இனி மாறும். என்ன வேலைக்குத்

தகுதிப்படுத்தலாம் என்பதன் வழிகாட்டி மையங்களாக கல்லூரிகள் இனி மாறும். வேலை தேடுபவர்களுக்குத் தகுதிப்படுத்தும் மையங்களை அரசே நிறுவும்.

மொத்தத்தில், தமிழ்ச் சமுதாயத்தின் அனைத்து மாணவர்களையும், இளைஞர்களையும் தமிழ்நாடு அரசு தகுதிசால் மனிதர்களாக மாற்ற நினைக்கிறது என்பதை இந்த நிகழ்ச்சியின் வாயிலாக அறிவிப்பதில் நான் மிகுந்த பெருமைப்படுகிறேன்.

சில திட்டங்கள் சில வாரங்களுக்குப் பயன்படும்.

சில திட்டங்கள் சில மாதங்களுக்குப் பயன்படும்.

சில திட்டங்கள் சில ஆண்டுகளுக்குப் பயன்படும்.

ஆனால், இந்தத் திட்டம் என்பது தலைமுறை தலைமுறைக்குப் பயன்படும் திட்டம் ஆகும்.

கால் நூற்றாண்டு, அரை நூற்றாண்டு கழித்தும் 2022ஆம் ஆண்டு மார்ச் மாதம் 1ஆம் தேதி, மு.க.ஸ்டாலின் என்ற ஒரு முதலமைச்சர் உருவாக்கிய 'நான் முதல்வன்' என்ற திட்டத்தின் மூலமாக நான் முன்னேறினேன் என்று ஒருவர் சொன்னால், அதைவிட வேறு பெரிய பெருமை எனக்கு நிச்சயமாக இருக்க முடியாது.

தமிழ்நாட்டு மாணவச் செல்வங்களே!

உங்கள் முதலமைச்சரான இந்த மு.க.ஸ்டாலினின் கனவுத் திட்டமான நான் முதல்வன் திட்டத்தின் தொடக்கவிழாவில் கலந்து கொண்டு உங்கள் அனைவரையும் நான் மனதார வாழ்த்துகிறேன், போற்றுகிறேன், பாராட்டுகிறேன். வருங்காலச் சமுதாயம் உங்களுக்கு ஒளிமயமானதாக ஆகப்போகிறது. உங்களது வாழ்வில் மலர்ச்சி ஏற்படப் போகிறது.

இன்று முதல் நீங்கள் புதிய மனிதர்களாக மாறப்போகிறீர்கள். உங்கள் வாழ்க்கைக்கு ஒளியேற்றும் வாய்ப்பை நான் பெற்றமைக்காக பெருமைப்படுகிறேன், மகிழ்ச்சி அடைகிறேன். பள்ளிகளில் ஏற்படுத்த இருக்கும் பயிற்சிகள், கல்லூரிகளில் தொடங்க இருக்கும் பயிற்சிகள் பற்றி விரிவாக அரசின் சார்பில் விரைவில் அதற்குரிய அறிவிப்புகள் எல்லாம் வெளியிடப்படும். அந்த அறிவிப்பு அறிவின் உதயமாக அமையும்.

உங்களில் ஒருவனான நான், எனது பிறந்தநாளில் இந்தத் திட்டத்தைத் தொடங்கி வைத்ததை எனது வாழ்நாள் பெருமையாகக் கருதுகிறேன். உங்கள் அனைவரையும் சந்தித்ததற்காக நான் மகிழ்ச்சி அடைகிறேன். அது மட்டுமல்ல, பிறந்த நாள் வாழ்த்தை இங்கே நீங்கள் சொல்லிக்கொண்டிருப்பது என் செவிகளில் விழாமல் இல்லை, அந்த வாழ்த்தையும் ஏற்றுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள்,*
சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில்
'நான் முதல்வன்' திட்டத்தைத் தொடங்கிவைத்து
ஆற்றிய உரை – ***01.03.2022***

உங்கள் வாழ்த்துக்களோடு எனது பயணம் தொடரும்

சிறுமலர் பள்ளியில் நிருவாகத்தை மிகச் சிறப்போடு ஏற்றுக்கொண்டு இந்தப் பள்ளியை நிருவகித்துக் கொண்டிருக்கக்கூடிய ஆசிரியப் பெருமக்களே!

இந்தப் பள்ளியில் பயின்று கொண்டிருக்கக்கூடிய அன்பிற்கினிய மாணவச் செல்வங்களே! அன்பிற்கினிய அருமைச் சகோதரிகளே!

உங்கள் அனைவருக்கும் முதலில் என்னுடைய வணக்கத்தை, நன்றியை மிகுந்த மகிழ்ச்சியோடு, நெகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

என்னுடைய பிறந்த நாள் வருகிறபோது, ஒவ்வொரு ஆண்டும் மறக்காமல் நீங்கள் நடத்தக்கூடிய நிகழ்ச்சிக்கு வருகை தந்து, கலந்துகொள்ளக்கூடிய வாய்ப்பு எனக்கு தொடர்ந்து கிடைத்துக் கொண்டிருக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் நானும் தவறாமல்

வருகை தந்து, உங்களுடைய வாழ்த்துக்களை நான் பெற்றுக் கொண்டிருக்கிறேன். யார் என்னை வாழ்த்தினாலும், உங்களுடைய வாழ்த்துக்கு நிச்சயம் அது ஈடாகாது. அதனால்தான், நானும் தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் மறக்காமல் உங்களைத் தேடி, நாடி வந்துவிடுகிறேன்.

நான் ஒவ்வொரு ஆண்டும் கலந்துகொள்கிறபோது, இதே மாதிரி ஏற்புரை ஆற்றுகிறபோது, ஒன்றை மறக்காமல் நான் சொல்வது உண்டு. ஒவ்வொரு ஆண்டும் கலந்துகொள்கிறபோது, அது எந்த ஆண்டு, என்ன வயது என்று நான் சொல்லி, இந்த ஆண்டு 69, இதைச் சொன்னால் சிலர் நம்ப மாட்டார்கள். இவ்வளவு இளமையாக இருக்கிறானே, 69 எல்லாம் இருக்காது, 39 தான் இருக்கும். அதற்குக் காரணம், நான் உடல் நலத்தை, உணவுப் பழக்கத்தை, உடற்பயிற்சியை எல்லாம் முறையாக செய்துகொண்டு இருக்கக்கூடியவன். என்னதான் உடற்பயிற்சி, உணவுக் கட்டுப்பாடு இருந்தாலும், உங்களைச் சந்திக்கின்றபோது 5 வயது குறைந்து விடுகிறது, அதுதான் நான் நினைத்துக் கொண்டிருப்பது. அதேபோல் தான், இன்றைக்கும் உங்களை எல்லாம் சந்தித்து, அதிலும் குறிப்பாக முதலமைச்சராக உங்களுடைய அன்போடு, ஆதரவோடு அந்தப் பொறுப்பை நான் ஏற்றுக்கொண்டதற்குப் பிறகு சந்திக்கிற நிகழ்ச்சியாக இது அமைந்திருக்கிறது.

இந்தப் பள்ளிக்கு ஒவ்வொரு ஆண்டும் என்னுடைய பிறந்த நாளையொட்டி வருகிறபோது, ஒவ்வொரு பொறுப்பிலிருந்தும் படிப்படியாக நான் வந்திருக்கிறேன். முதலில் ஆயிரம் விளக்கு தொகுதியில் சட்டமன்ற உறுப்பினராக வந்தேன். அடுத்து, சென்னை மாநகரத்தின் மேயராகப் பொறுப்பேற்று வந்தேன். அதற்குப் பின்னால், உள்ளாட்சித்துறை அமைச்சராகப் பொறுப்பேற்று வந்தேன். துணை முதலமைச்சராக பொறுப்பை ஏற்று, இந்தப் பள்ளிக்கு நான் வந்திருக்கிறேன். இப்போது முதலமைச்சராக, உங்களுடைய முதலமைச்சராக நான் வந்திருக்கிறேன்.

இப்படி ஒவ்வொரு ஆண்டும் நான் வருகிற போது, ஒவ்வொரு பதவியை அடைந்திருக்கக்கூடிய சூழ்நிலையில், பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கக்கூடிய நிலையில் வந்திருக்கிறேன் என்று எண்ணிப் பார்க்கின்றேன். ஆனால், எப்போதும் இந்தப் பொறுப்புக்களைப் பற்றி நான் கவலைப்பட்டது கிடையாது, பதவிகளைப் பற்றி நான் கவலைப்பட்டது கிடையாது. உங்களில் ஒருவனாக நான் என்றைக்கும் இருக்கிறேன். அதுதான் யாராலும் பிரிக்க முடியாதது. பதவி என்பது இன்றைக்கு வரும், போகும், அது வேறு. ஆனால், அந்தப் பதவியைப் பயன்படுத்தி இங்கே வரவேற்புரை ஆற்றிய, என்னை வாழ்த்திப் பேசிய சகோதரிகள், தாய்மார்கள் எல்லாம், ஏன் பிள்ளைகள் பாடுகிறபோது அந்தப் பாட்டிலே இருக்கக்கூடிய கருத்துக்கள் எல்லாம், இந்த 9 மாத காலத்தில் என்னென்ன சாதனைகளைச் செய்திருக்கிறோம், என்னென்ன பணிகளை மக்களுக்கு ஆற்றியிருக்கிறோம் என்பதைப் பற்றியெல்லாம் மிகத் தெளிவாக பாடல்கள் மூலமாக, தங்களுடைய பேச்சுக்கள் மூலமாக இங்கே எடுத்துச் சொன்னார்கள், அதுதான் முக்கியம்.

இந்தப் பதவியை நான் என்றைக்கும் பெரும் பதவியாக நினைத்ததில்லை, அதைப் பொறுப்பு என்று நான் நினைத்து, அந்தப் பொறுப்பினை உணர்ந்து என்னுடைய கடமையை ஆற்றிக் கொண்டிருக்கிறேன். ஆகவே, இன்றைக்கு உங்களை எல்லாம் சந்திக்கிற, எப்போதும் பிறந்தநாளான மார்ச் 1ஆம் தேதி வருவது உண்டு. ஆனால், கடந்த ஆண்டு கொரோனா வந்த காரணத்தால், உங்களைச் சந்திக்க முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டது உங்களுக்குத் தெரியும். ஆனால், அதற்குப் பிறகு வந்து சந்தித்துவிட்டுச் சென்றேன்.

இப்போது கூட, அதனால்தான் முன்கூட்டியே உங்களை வந்து சந்தித்து விடுவோம் என்று முடிவு செய்து, நம்முடைய தோழர்களிடத்தில் சொல்லி, உங்களுடைய ஒப்புதலைப் பெற்று,

எல்லோரும் எனக்கு பிறந்தநாள் வாழ்த்து சொல்வதற்கு முன்னால், முன்கூட்டியே நீங்கள்தான் எனக்குப் பிறந்தநாள் வாழ்த்து சொல்கிறீர்கள். நீங்கள் சொன்னதற்குப் பிறகுதான், எங்களுடைய கட்சிக்காரர்கள் சொல்லப் போகிறார்கள், அதிகாரிகள் சொல்லப் போகிறார்கள், மக்கள் சொல்லப் போகிறார்கள். நீங்கள் தான் முதலில் பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்து இருக்கிறீர்கள், அதுதான் எனக்கு மகிழ்ச்சி.

முதலமைச்சராக இருந்து இந்த விழா நடத்துவதன் காரணத்தால் நான் சொல்லவில்லை, இன்றைக்கு முதல் நிகழ்ச்சியாக, முதலில் வாழ்த்தக்கூடிய நிகழ்ச்சியாக இது அமைந்திருப்பதன் காரணத்தால் இந்தப் பிறந்தநாளை என்றைக்கும் நான் மறக்கவே முடியாது. அதனால், உங்கள் வாழ்த்துக்களோடு என்னுடைய பயணம் தொடரும், என்னுடைய பணி நிறைவேறும் என்று உங்கள் மூலமாக மக்களுக்கும், நாட்டு மக்களுக்கும் எடுத்துச் சொல்லி, நீங்கள் தந்த இந்தச் சிறப்பான வாழ்த்துக்கும், வரவேற்புக்கும் மீண்டும் ஒருமுறை உங்கள் அத்தனை பேருக்கும் நன்றி சொல்லி, என்றைக்கும் உங்களில் ஒருவனாக நான் இருந்து என் கடமையை ஆற்ற உங்கள் வாழ்த்து தொடர வேண்டும், தொடர வேண்டும் என்று கேட்டு விடைபெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள்,*
தனது பிறந்தநாளையொட்டி, சென்னை, சிறுமலர் பார்வை மற்றும்
செவித்திறன் குறைபாடுடையோர் மேல்நிலைப் பள்ளியில்
நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டு
ஆற்றிய உரை – ***01.03.2022***

கற்றல், கற்பித்தலில் தங்களுக்கென தனித்துவத்தை உருவாக்கும் “சிஷ்யா பள்ளி”

அனைவருக்கும் வணக்கம்.

சிஷ்யா பள்ளியினுடைய ஐம்பதாவது ஆண்டுவிழா, பொன்விழா. இந்த நிகழ்ச்சியில் பங்கேற்றிருக்கும் சிஷ்யா பள்ளியின் அறங்காவலர் திரு.சலீம் தாமஸ் அவர்களே!

பள்ளியினுடைய முதல்வர் திருமதி ஓமனா தாமஸ் அவர்களே!

ஆசிரியர் பெருமக்களே!

பெற்றோர்களே!

என் பாசத்திற்கும், அன்பிற்கும் உரிய மாணவச் செல்வங்களே!

பத்திரிகை மற்றும் ஊடகத்துறையைச் சார்ந்திருக்கக்கூடிய நண்பர்களே!

உங்கள் அனைவருக்கும் என் அன்பான வணக்கம்.

கல்வி என்பது மனிதச் சமுதாயத்தினுடைய அடிப்படைகளில் ஒன்றாக விளங்கிக்கொண்டிருக்கிறது. தரமான கல்விதான்,

ஒரு மனிதனை அறிவுள்ளவனாக நல்வழிப்படுத்தி, அவனுடைய உயர்வுக்கு உறுதுணையாக இருக்கும். அத்தகைய கல்வியினை வழங்கும் நிறுவனமாக இந்த ‘சிஷ்யா பள்ளி’ செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. 1972ஆம் ஆண்டு துவங்கப்பட்ட இந்தப் பள்ளி, 1986 முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரையிலான மேனிலைக் கல்வியை வழங்கி வந்துகொண்டிருக்கிறது.

கற்றல், கற்பித்தல் முறையில், தங்களுக்கெனத் தனித்துவமான பாணியை உருவாக்கிக் கொண்டிருக்கக்கூடிய இந்த சிஷ்யா பள்ளி, திரு.கே.ஐ.தாமஸ் அவர்களது சீரிய முயற்சியால் நிறுவப்பட்டது. அவருடைய கனவுகளை மெய்ப்பிக்கும் பணியை, இந்தக் கல்வி நிறுவனம் தொடர்ந்து செய்துகொண்டு வருகிறது, அது உள்ளபடியே பாராட்டுக்குரிய ஒன்று, மகிழ்ச்சிக்குரிய ஒன்றாக விளங்கிக் கொண்டிருக்கிறது.

இன்றைய கேரள மாநிலம் திருச்சூர் அருகே உள்ள குன்னம்குளம் என்ற கிராமத்தில் பிறந்த திரு.தாமஸ் அவர்கள், சென்னை கிறித்துவக் கல்லூரியில் பட்டம் பெற்றவர். இரண்டாம் உலகப் போர் காலக்கட்டத்தில், லண்டன் மற்றும் எடின்பர்க் நகரங்களில் முதுகலைப் படிப்பு பயின்ற அவர், சென்னை, ராஜ்கோட், கராச்சி உள்ளிட்ட நகரங்களில் ஆசிரியராகப் பணிபுரிந்திருக்கிறார். பின்னர், ஊட்டியில் உள்ள லாரன்ஸ் பள்ளியை வழிநடத்தி, அந்தப் பள்ளிக்கெனத் தனி அடையாளத்தை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார். இருபதாண்டுகள் அங்குப் பணியாற்றிய பின் அவர் ஓய்வுபெற்றதற்குப் பின்னால், அவர், திருமதி கிரேஸ் செரியன் மற்றும் திருமதி தங்கம் தாமஸ் ஆகியோருடன் இணைந்து, 1972ஆம் ஆண்டு இந்த சிஷ்யா பள்ளியைத் துவக்கினார்.

‘‘குழந்தைகளிடம் இருந்து குழந்தைப் பருவம் களவாடப்படக் கூடாது’’ என்பது திரு.தாமஸ் அவர்களுடைய சிந்தனை. இன்றைய காலக்கட்டத்தில் எல்லாரும் வளர்த்துக்கொள்ள வேண்டிய, உணர வேண்டிய சிந்தனை இது!

அத்தகைய சிந்தனையோடு செயல்படுவதால்தான், சிஷ்யா பள்ளியில் இருந்து ஏராளமான சாதனையாளர்கள் உருவாகியிருக்கிறார்கள்.

அப்படிப்பட்ட இந்தப் பள்ளியை நினைத்து நான் பெருமைப்படுகிறேன். இந்தப் பள்ளியில் என்னுடைய பெயரன், பெயர்த்தியும் கூட படித்துக் கொண்டிருக்கிறார்கள். எனக்கு இங்கு வந்தவுடன் ஒரு எண்ணம் வந்தது. பேரனையும், பேத்தியையும் உடனே பார்த்தேன். நான் இருக்கக்கூடிய அரசியல் சூழ்நிலையில், அவர்களை அடிக்கடி என்னால் பார்க்க முடியாது. இது மாதிரி, பள்ளிக்கூட நிகழ்ச்சிக்கு வந்தால்தான் பார்க்க முடியும். அதற்காகவே அடிக்கடி பள்ளிக்கூடத்திற்கு வரவேண்டும் என்ற எண்ணம் கூட எனக்கு வந்தது. அதற்காக, பள்ளி நிருவாகம் அடிக்கடி என்னை கூப்பிடக்கூடிய முயற்சியில் ஈடுபட்டு விடாதீர்கள். ஏனென்றால், எனக்கு இருக்கக்கூடிய பணி அப்படி. இந்தப் பள்ளியில் அவர்கள் படித்துக்கொண்டிருப்பது உள்ளபடியே எனக்குப் பெருமையாக இருக்கிறது. என்னுடைய பேரப் பிள்ளைகள் மட்டுமல்ல, இந்தப் பள்ளியிலே படிக்கக்கூடிய மாணவர்கள் மட்டுமல்ல, தமிழ்நாட்டில் இருக்கும் எல்லா மாணவர்களுமே என்னுடைய செல்வங்கள் தான், என்னுடைய அன்புக்குரியவர்கள்தான், என்னுடைய பாசத்திற்குரியவர்கள்தான்.

அதனால்தான் தரமான கல்வியை நமது அரசு, இன்றைக்கு இருக்கக்கூடிய அரசு, பல்வேறு திட்டங்களை அதற்காக செயல்படுத்திக்கொண்டிருக்கிறது. அதெல்லாம் உங்களுக்குத் தெரியும்.

அண்மையிலே கூட, என்னுடைய பிறந்தநாள் அன்று ‘நான் முதல்வன்’ என்ற ஒரு திட்டத்தை நான் அறிமுகம் செய்தேன். நீங்கள் எல்லோரும் அந்தச் செய்திகளை பத்திரிகைகளிலும், மீடியாவிலும் பார்த்திருப்பீர்கள்.

Coding, Robotics போன்ற எதிர்காலத்திற்குத் தேவையான தொழில்நுட்பங்களையும் பள்ளி மாணவர்களுக்கு வழங்கி, திறன்மிகு மாணவர்களாக அவர்களை உருவாக்கக்கூடிய திட்டம்தான் அந்தத் திட்டம். என்னுடைய நெஞ்சுக்கு நெருக்கமான திட்டம் என்று அதைச் சொல்லலாம்!

கல்வி கற்க எந்தத் தடையும் இருக்கக்கூடாது என்று நினைக்கின்றவன் நான். அதுதான் திராவிடச் சிந்தனை!

அந்தச் சிந்தனையோடு செயல்படுவதால்தான் நமது அரசை, 'திராவிட மாடல்' அரசு என்று நான் சொல்லிக்கொண்டு வருகிறேன்.

அந்த வகையில், நமது அரசின் முழக்கம்தான், இந்த சிஷ்யா பள்ளியின் முழக்கமாகவும் இருக்கிறது. அதுதான், 'Aspire and Excel' என்று நான் இங்கே குறிப்பிட்டுக் காட்டி, இந்த இனியதொரு விழாவிலே நானும் பங்கேற்று உங்கள் அனைவரையும் சந்திக்கக்கூடிய ஒரு சிறப்பான வாய்ப்பை எனக்கு வழங்கிய இந்த சிஷ்யா பள்ளியினுடைய நிருவாகத்திற்கும், இங்கு பயிற்றுவித்துக் கொண்டிருக்கக்கூடிய ஆசிரியர் பெருமக்களுக்கும், வருகை தந்திருக்கக்கூடிய பெற்றோர் பெருமக்களுக்கும், எனது அன்பிற்குரிய மாணவச் செல்வங்களுக்கும் மீண்டும் ஒருமுறை என்னுடைய நன்றியைத் தெரிவித்து, இந்த அளவோடு என் உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி, வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள்,*
சென்னை, சிஷ்யா பள்ளி பொன்விழா ஆண்டு நிகழ்ச்சியில்
சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு ஆற்றிய உரை ***– 05.03.2022***

3.5 இலட்சம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் "சர்வதேச அறைகலன் பூங்கா"

இந்த விழாவினுடைய தலைமைப் பொறுப்பை ஏற்று உரை ஆற்றி அமர்ந்திருக்கக்கூடிய மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு.தங்கம் தென்னரசு அவர்களே!

நிகழ்ச்சிக்கு முன்னிலைப் பொறுப்பேற்றுள்ள மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறையினுடைய அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்களே!

மாண்புமிகு சமூகநலன், மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி பி. கீதா ஜீவன் அவர்களே!

மாண்புமிகு மீன்வளம், மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் திரு. அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் அவர்களே!

நிகழ்ச்சியில் கலந்துகொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் அவர்களே!

தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் என்னுடைய அருமைத் தங்கை திருமதி கனிமொழி அவர்களே!

சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. சண்முகய்யா அவர்களே!

மார்க்கண்டேயன் அவர்களே! ஊர்வசி அமிர்தராஜ் அவர்களே!

தூத்துக்குடி மாநகராட்சியினுடைய வணக்கத்திற்குரிய மேயர் ஜெகன் அவர்களே! துணைமேயர் ஜெனிதா அவர்களே!

துவக்கத்தில் அனைவரையும் வரவேற்று மகிழ்ந்திருக்கக்கூடிய தொழில்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.கிருஷ்ணன், இ.ஆ.ப., அவர்களே!

தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி பூஜா குல்கர்னி அவர்களே!

தொழில் வணிக ஆணையர் திருமதி தாமஸ் வைத்தியன் அவர்களே!

மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் கி.செந்தில்ராஜ், இ.ஆ.ப., அவர்களே!

ஒன்றிய அரசின் தொழில் மற்றும் உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுத் துறையின் SCALE கமிட்டி தலைவர் திரு.பவன் கோயங்கா அவர்களே!

ராம்கோ குழுமத் தலைவர் திரு.வெங்கட்ராம ராஜா அவர்களே!

மற்றும் தொழில் அதிபர்களே! தொழில்முனைவோர்களே!

பாசமிகு பத்திரிகையாளர்களே, ஊடகத்துறையைச் சார்ந்திருக்கக்கூடிய நண்பர்களே!

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்!

தமிழகத்திலே ஆட்சி மாற்றம் ஏற்பட்டு பத்து மாதங்கள் முடிந்து இருக்கிறது. 11ஆவது மாதம் தொடங்கக்கூடிய இந்த

நாளில், தூத்துக்குடியில் இத்தகைய விழாவை ஏற்பாடு செய்து அந்த விழாவில் நானும் பங்கெடுக்கக்கூடிய வாய்ப்பை எனக்கு ஏற்படுத்தித் தந்திருக்கக்கூடிய அனைவருக்கும் நான் நன்றி தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பொறுப்பேற்ற நாள்முதல் இன்னும் சொல்ல வேண்டுமென்று சொன்னால், தேர்தல் முடிவுகள் வெளிவந்து கொண்டிருக்கும்போதே அரசுப் பணியை நாங்கள் தொடங்கியிருக்கிறோம். நாள்தோறும் தமிழ்நாட்டினுடைய வளர்ச்சிக்காகவும், தமிழ்நாட்டினுடைய மக்களின் முன்னேற்றத்திற்காகவும் எப்படியெல்லாம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம் என்பது உங்கள் அனைவருக்கும் நன்றாகத் தெரியும்.

நாள்தோறும் ஏதாவது ஒரு திட்டத்தைத் தொடங்கி வைக்கிறோம். ஏதாவது ஒரு முக்கியமான அறிவிப்பை வெளியிட்டுக் கொண்டிருக்கிறோம். தொடர்ந்து நலத்திட்ட உதவிகளையும் மக்களுக்கு வழங்கிக் கொண்டிருக்கிறோம். தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்கக்கூடிய அடிப்படையிலே ஏதாவது ஒரு தொழில் நிறுவனத்தைத் தொடங்கிவைத்துக் கொண்டிருக்கிறோம்.

'மக்களிடம் செல்; மக்களோடு வாழ்' என்று எங்களை ஆளாக்கிய பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதை தாரக மந்திரமாக நாங்கள் எங்கள் உள்ளத்தில் ஏற்றுக்கொண்டு அந்தப் பணியை தொடர்ந்து நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம். அமைச்சரவையில் இருக்கக்கூடிய அமைச்சர் பெருமக்களையும், திராவிட முன்னேற்றக் கழகத்திலே பொறுப்பேற்றுக் கொண்டிருக்கக் கூடிய நிருவாகிகளையும், சட்டமன்ற உறுப்பினர்களையும், நாடாளுமன்ற உறுப்பினர்களையும், உள்ளாட்சி அமைப்பினுடைய பிரதிநிதிகளையும், அதேபோல் நடந்திடவேண்டும் என்று நாங்கள் தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம்.

இந்த நிகழ்ச்சிக்கு வருவதற்கு நேற்று முன்தினம் தமிழக அமைச்சரவைக் கூட்டத்தை நாங்கள் கூட்டினோம். விரைவில் நிதிநிலை அறிக்கையைச் சட்டமன்றத்தில் தாக்கல் செய்யவிருக்கிறோம். அது குறித்து ஆலோசனைகளை அமைச்சரவைக் கூட்டத்தில் நாங்கள் கலந்து பேசினோம்.

இப்படி ஒரு ஆலோசனைக் கூட்டத்திற்கு முன்பு, தமிழகத்தில் இருக்கக்கூடிய வணிகப் பெருமக்கள், உழவர்கள், தொழில் அதிபர்கள் உள்ளிட்ட பல்வேறு சமுதாயத்தின் அனைத்துத் தரப்பினரிடமும் நிதிநிலை எப்படி அமையவேண்டும், எந்த நிலையிலே இருந்திடவேண்டும் என்பதைப் பற்றியெல்லாம் விரிவாக அவர்களோடு கலந்து பேசி, அதற்குப் பிறகு அதை நிறைவேற்றுகின்ற முயற்சியில் நாங்கள் ஈடுபடவிருக்கிறோம். இப்படி மக்கள் நல அரசாக, அனைவரையும் அரவணைத்துச் செல்லும் அரசாக, என்னுடைய அரசு என்று நான் சொல்லமாட்டேன், நம்முடைய அரசு, நமது அரசு என்றுதான் நான் தொடர்ந்து சொல்லிக்கொண்டு இருக்கிறேன். நம்முடைய அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அந்தப் பணிகளையெல்லாம் நிறைவு செய்துவிட்டுத்தான், நான் தூத்துக்குடிக்கு வந்திருக்கிறேன்.

சர்வதேச அறைகலன் பூங்கா இங்கு அமைக்கப்படவிருக்கிறது. இந்தியாவிலேயே முதன்முதலாகத் தொடங்கப்படக்கூடிய இத்தகைய பூங்கா, இங்குதான் அமையப்போகிறது என்ற பெருமை இந்தத் தூத்துக்குடிக்கு கிடைத்துள்ளது.

இந்தியாவினுடைய தென் எல்லையில் இருக்கிற மாவட்டம் இந்த மாவட்டம். அந்த மாவட்டத்தில் சர்வதேச அறைகலன் பூங்கா அமைய இருக்கிறது. முத்துக்குளிக்கும் முத்து நகரில், மிகப்பெரிய நிறுவனம் அமையப்போகிறது.

நம்முடைய இந்திய விடுதலை வேள்விக்குத் தங்களது உடலையே விறகாகத் தந்த வீரபாண்டிய கட்டபொம்மன், வீரன்

சுந்தரலிங்கம், மகாகவி பாரதியாரும், கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி.யும் பிறந்த மண்ணில் இது அமையப்போகிறது.

சொந்த தேசத்தில், சொந்தப் பணத்தில், சுயச்சார்பு பொருளாதாரத்தை நாம் உருவாக்கிக்கொள்ள வேண்டும் என்று கனவு கண்டவர்தான் வ.உ.சிதம்பரனார் அவர்கள். அவரது பொருளாதாரக் கனவு நிறைவேறக்கூடிய நாளாக இது அமைந்திருக்கிறது.

நீர் வளம், நிறைந்த வேளாண் நிலமாகவும், தமிழரின் ஆட்சி, நாகரிகம், பண்பாடு ஆகியவற்றைப் பிரதிபலிக்கும் நிலமாகவும் இந்தத் தூத்துக்குடி விளங்கிக்கொண்டிருக்கிறது.

முத்துக் குளிக்கும் தொழிலுக்குப் பெயர் பெற்றதால்தான் தூத்துக்குடியை ‘‘முத்து நகர்’’ என்று நாம் சொல்கிறோம். இந்த முத்து நகரைத்தான், 2008ஆம் ஆண்டில், நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் தமிழ் நாட்டினுடைய 10ஆவது மாநகராட்சியாக அதிகாரப்பூர்வமாக அறிவித்தார்கள்.

கிராமங்கள் நகரங்கள் ஆக வேண்டும். நகரங்கள் மாநகரங்கள் ஆகவேண்டும் என்பதுதான் கழக அரசினுடைய கொள்கை. அந்த அடிப்படையில் தூத்துக்குடியை மாநகராட்சியாக கலைஞர் அவர்கள் அறிவித்தார்கள். ஏராளமான திட்டங்களை, நிறுவனங்களை இந்த மாவட்டத்திற்குச் செய்ய வேண்டும் என்பதற்காகத்தான் இதை மாநகராட்சியாக உருவாக்கிக் கொடுத்தார்கள்.

அந்த வரிசையில் இன்றைய நாள், இந்த சர்வதேச அறைகலன் பூங்கா அமைக்க இருக்கிறோம். தூத்துக்குடி மாவட்டத்தினை இதற்குத் தேர்ந்தெடுத்ததற்கு முக்கியமான காரணம் ஒன்று உண்டு.

தென் தமிழக மக்களுக்குப் பெரிய அளவில் வேலைவாய்ப்புகளை உருவாக்கி, இந்த மக்களுக்கு வாழ்வாதாரத்தை ஏற்படுத்தி,

பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்கத்தில்தான் தூத்துக்குடியில் இந்த சர்வதேச அறைகலன் பூங்கா அமைக்கப்படவுள்ளது.

தமிழ்நாட்டினுடைய 2ஆவது பெரிய துறைமுகமாக இருப்பதோடு, அகில இந்திய அளவில் 3ஆவது பெரிய கொள்ளளவு கொண்ட தூத்துக்குடி துறைமுகத்தில் ஏற்றுமதி, இறக்குமதி வணிகம் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. தென்கிழக்கு ஆசிய நாடுகளிலிருந்தும் ஆஸ்திரேலியா, நியூசிலாந்து ஆகிய நாடுகளிலிருந்தும் வரக்கூடிய கப்பல்களுக்கு இந்தியாவின் நுழைவு வாயிலாக இந்தத் தூத்துக்குடி துறைமுகம் விளங்கிக்கொண்டிருக்கிறது. அதனால்தான் நாங்கள் தூத்துக்குடியில் இந்தப் பூங்காவை அமைக்க முடிவெடுத்தோம்.

கொரோனா என்ற பெருந்தொற்றில் இருந்து இன்னும் சில மாநிலங்கள் மீளவில்லை. கொரோனா காரணமாக விழுந்த பொருளாதாரத்தை சில மாநிலங்கள் இன்னமும் மீட்டெடுக்க முடியவில்லை.

கொரோனாவில் இருந்து மீண்டது மட்டுமல்ல, பொருளாதாரத்தையும் மேம்பாடு அடைய வைக்க தமிழ்நாடு அரசு தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டுள்ளது. அதனால்தான் நமது மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சி கடந்த பத்து மாத காலத்தில் சீராக இருந்து வருகிறது. அது உள்ளபடியே மகிழ்ச்சிக்குரிய ஒன்றாக அமைந்திருக்கிறது.

வறுமையை ஒழித்தல், வேலைவாய்ப்பினை பெருமளவில் உருவாக்குதல், சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல் மற்றும் சமூகநீதி காத்தல் போன்ற நோக்கங்களோடு அனைவரையும் உள்ளடக்கிய பரவலான வளர்ச்சி என்ற 'திராவிட மாடல்' இலக்கினை நோக்கி நாம் பயணம் செய்துகொண்டு இருக்கிறோம்.

தற்போது நாம் செயல்படுத்தி வரும் திட்டங்களும், எடுத்து வரக்கூடிய நடவடிக்கைகளும், குறுகியகால நல்விளைவுகளுக்காக மட்டும் மேற்கொள்ளப்படுபவை கிடையாது. நமது மாநிலத்தின்

மகத்தான வளங்களை முழுமையாகப் பயன்படுத்தி, அதன்மூலம் தொழில் வளர்ச்சியை சிறப்புற உயர்த்தி, நமது தமிழ் மக்கள் அனைவருக்கும் நிகழ்காலத்திலும், எதிர்காலத்திலும் ஒரு சிறப்பான வாழ்க்கை நிலையை ஏற்படுத்திட வேண்டும் என்பதே நமது அரசினுடைய குறிக்கோள், இலட்சியம்.

இதுவரை மூன்று முதலீட்டாளர்கள் மாநாட்டை நாம் நடத்தியிருக்கிறோம். இம்மாநாடுகளில் மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் நமது மாநிலத்தின் மீது முதலீட்டாளர்கள் வைத்திருக்கக்கூடிய பெரும் நம்பிக்கையை இது எடுத்துக் காட்டுகின்றது. இரண்டு மாநாடுகள் சென்னையிலும், மூன்றாவது மாநாடு கோவையிலும் நடத்தப்பட்டது. இம்மாநாடுகள் முதலீட்டாளர்களிடையே மிகப் பெரிய வரவேற்பைப் பெற்றன.

“நிதிநுட்பக் கொள்கை”, “ஏற்றுமதி மேம்பாட்டுக் கொள்கை” போன்ற துறை சார்ந்த கொள்கைகளைத் தமிழ்நாடு அரசு சமீபத்தில் வெளியிட்டுள்ளது. இதுவரை 109 திட்டங்களுக்குப் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையொப்பமிடப்பட்டுள்ளன. இவற்றில், உறுதி செய்யப்பட்ட 56 ஆயிரத்து 229 கோடி ரூபாய் முதலீட்டில் 1 இலட்சத்து 74 ஆயிரத்து 999 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் கிடைக்கும். இந்தத் திட்டங்கள், பரவலாக மாநிலம் முழுவதும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

“பரவலான வளர்ச்சியே பார்போற்றும் வளர்ச்சி, சமச்சீரான வளர்ச்சியே சிறப்பான வளர்ச்சி” என்று நான் சொன்னேன். அவையே செயல் வடிவம் ஆகி வருகிறது.

முதலீடுகளை ஈர்த்திட, மாநிலத்தின் ஒவ்வொரு பகுதிக்கும் சென்று, இத்தகைய திட்டங்களுக்கான துவக்க விழாக்களை நடத்தி, மாநிலம் முழுவதும் பரவலான மற்றும் சீரான தொழில் வளர்ச்சியை ஏற்படுத்துவதுதான் எங்களுடைய இலக்கு, இந்த அரசினுடைய இலட்சியம்.

தென் மாவட்டங்களைத் தொழில்மயமாக்கிட, இந்த அரசு மிகப் பெரும் திட்டங்களை மேற்கொண்டு வருகின்றது. தமிழ் நாட்டின் தென் மாவட்டங்களாக இருக்கக்கூடிய தூத்துக்குடி, திருநெல்வேலி, விருதுநகர், இராமநாதபுரம், தேனி மற்றும் சிவகங்கை, ஆகிய மாவட்டங்களில், புதிய தொழிற்பூங்காக்கள் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தென் மாவட்டங்களில், தொழில் முனைவோரை ஊக்குவிக்கக்கூடிய வகையில், தென்மாவட்டத் தொழிற் பூங்காக்களில் அமைக்கப்படும் தொழிற்சாலைகளுக்கு சிறப்புச் சலுகைகள் அளிக்கப்பட்டுள்ளன:

✶ ஊக்கத்தொகை அளிக்க நிருணயம் செய்திடும் முதலீட்டு வரம்பு குறைவாக நிருணயிக்கப்பட்டுள்ளது.

✶ தொழில் பூங்காக்கள் மற்றும் வளர்ச்சி மையங்களில், 50 விழுக்காடு மானியத்தோடு நிலம் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

✶ முத்திரைக் கட்டணத்திலிருந்து 100 விழுக்காடு விலக்கு அளிக்கப்படுகிறது.

✶ மேலும், ஆம்வே (Amway), போஷ் (Bosch), ஏடிசி டயர்ஸ் (ATC Tyres), பிரிட்டானியா (Brittannia), ஐடிசி லிமிடெட் (ITC Limited), சின்டெல் (Syntel) போன்ற நிறுவனங்கள், ஏற்கெனவே தென் மாவட்டங்களில் தங்கள் தொழிலகங்களை நிறுவி, தங்கள் வணிக உற்பத்தியினையும் தொடங்கி உள்ளன.

இத்தோடு சேர்த்து, தென் மாவட்டங்களுக்கென்று மேலும் பல சிறப்புத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தூத்துக்குடி சிப்காட் தொழில் வளாகத்திலுள்ள தொழிற்சாலைகள் மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் அமைந்துள்ள

தொழிற்சாலைகளின் நீர் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில், நாளொன்றிற்கு 30 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்புத் திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் ஆலை அமைக்க சிப்காட் நிறுவனம் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- ✶ தேனி மற்றும் தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் தலா 150 ஏக்கர் பரப்பளவில் உணவுப் பூங்காக்கள் நிறுவிட சிப்காட் நிறுவனம் திட்டமிட்டுள்ளது. இந்தத் திட்டத்திற்கான, விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கக்கூடிய பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.
- ✶ விருதுநகர் மாவட்டம், இ.குமாரலிங்கபுரம், இ.முத்துலிங்கபுரம் மற்றும் துலுக்கப்பட்டி கிராமங்களில், ஒன்றிய அரசின் ஜவுளி அமைச்சகத்தின் மித்ரா (மெகா ஒருங்கிணைந்த ஜவுளிப் பகுதிகள் மற்றும் ஆடைப் பூங்காக்கள்) திட்டத்தின் கீழ் ஒரு மெகா ஜவுளிப் பூங்காவை சுமார் 1,000 ஏக்கர் பரப்பளவில், சிப்காட் நிறுவனம் அமைக்க உள்ளது. இதற்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கக்கூடிய பணி மேற்கொள்ளப்பட உள்ளது.

ஒவ்வொரு துறையையும் ஆய்வு செய்து, அத்துறைகளுக்குத் தேவையானத் திட்டங்களைத் தீட்டி, அவற்றை செயல்படுத்துவதற்கான ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை, இந்த அரசு தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. எதிர்கால மாற்றங்களை எதிர்கொள்ளக்கூடிய வகையில், புதிய மற்றும் நவீன உள்கட்டமைப்பு முதலீடுகளுடன் தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்திட தேவையான நடவடிக்கைகளை நாங்கள் மேற்கொண்டு வருகிறோம்.

அத்தகைய திட்டங்களில் ஒன்றுதான் இன்று தொடங்கி வைக்கக்கூடிய திட்டமாகும்.

2021–2022ஆம் நிதி ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட உரையில், தமிழ்நாட்டில் 4,500 கோடி ரூபாய் முதலீட்டை ஈர்க்கும் விதமாகவும், 3.5 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கும் வகையிலும், அறைகலன்களுக்கான சர்வதேச பூங்கா அமைக்கப்படும் என்று நாம் அறிவித்திருந்தோம். அதை நடைமுறைபடுத்தும் விதமாக இந்த சர்வதேச அறைகலன் பூங்காவிற்கு இன்றைக்கு அடிக்கல் நாட்டி வைப்பதில் நான் மிகுந்த பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

நாங்கள் சொல்வதைச் செய்வோம்; செய்வதைத்தான் சொல்வோம்!

இன்றைய காலச் சூழலுக்கு இது மிகமிக அவசியமான திட்டம் ஆகும்.

உலக அளவில் அறைகலன் / மரச்சாமான்கள் சந்தையானது 2020–2025ஆம் ஆண்டிற்குள் 750–800 பில்லியன் அமெரிக்க டாலர் அளவிற்கு பரந்து விரிந்திருக்கும் என்று வல்லுநர்களால் கணக்கிடப்படுகிறது. இந்தத் தொழிலில் சீனா, வியட்நாம் போன்ற நாடுகள் முன்னணியில் இருக்கின்றன. ஆனால் இந்தியாவின் பங்களிப்பு குறைவாக உள்ளது. இந்தக் குறையினை போக்கும் விதத்தில், தமிழ்நாடு அரசு இந்த பூங்காவை அமைத்துள்ளது.

உலகத்தரத்திற்கு இணையாக ஒரு சர்வதேச அறைகலன் பூங்காவை உருவாக்கிடவும், தமிழ்நாடு அரசு முன்வந்துள்ளது. இதற்காக, தூத்துக்குடி துறைமுகத்தில் இருந்து 13 கிலோ மீட்டர் தொலைவில் தேசிய நெடுஞ்சாலையை ஒட்டி அமைந்துள்ள 1,156 ஏக்கர் நிலப்பரப்பு அடையாளம் காணப்பட்டுள்ளது.

அறைகலன்கள் தயாரிப்பில் 70 முதல் 80 விழுக்காடு மூலப்பொருள் தேவையை இந்தப் பூங்காவிலேயே பூர்த்தி செய்திடும் வகையில் முழுமையான சூழல் அமைப்பு இந்த சர்வதேச அறைகலன்

பூங்காவில் உருவாக்கப்படவுள்ளது. சுருங்கச் சொன்னால், உலக அளவில், அறைகலன் உற்பத்தியில், தமிழ்நாட்டின் போட்டியிடும் திறன் வெகுவாக அதிகரிக்கும்.

அதற்கென 600க்கும் மேற்பட்ட முதலீட்டாளர்களை அணுகி, விநியோகச் சங்கிலியில் பெரும் பங்கு வகிக்கும் 25க்கும் மேற்பட்ட நிறுவனங்களுடன் நூற்றுக்கணக்கான உரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டன. இதன் விளைவாக, பெல்ஜியம் நாட்டைச் சேர்ந்த ஒரு மிகப்பெரிய நிறுவனம் ரூ.430 கோடி முதலீட்டில், தங்களது கதவுகள் மற்றும் ஜன்னல்கள் உற்பத்தி ஆலையை இந்தப் பூங்காவில் நிறுவிட முன்வந்துள்ளது.

அதேபோல், பல வர்த்தக நிறுவனங்கள் ரூ.300 கோடி முதல் ரூ.750 கோடி முதலீட்டில் தங்களது திட்டங்களைத் துவக்கிடவும் ஆர்வத்தை தெரிவித்துள்ளது. இது உள்ளபடியே பெருமை அளிக்கக்கூடிய செய்தி. அவற்றுள் ‘ஹெட்டிக்’ மற்றும் ‘டெசனின்க்’ ஆகிய 2 நிறுவனங்களுக்கு ஒதுக்கீடு ஆணை வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காகவும், தொழில் நிறுவனங்களை ஈர்க்கும் அரசாகவும் நமது அரசு செயல்பட்டு வருகிறது. தேர்தலுக்கு முன்பாக நாங்கள் சொன்னோம் ‘தமிழகம் மீட்போம்’ என்று நான் என்னுடைய பிரசாரத்தில் தொடர்ந்து சொன்னேன். இப்போது அந்தப் பணியில்தான் என்னை முழுமூச்சாக ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறேன். அனைத்துத் துறைகளிலும் ‘தமிழ்நாடு நம்பர் 1’ என்ற நிலையை நிச்சயமாக விரைவில் அடையப்போகிறது என்று என்னுடைய வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும், நன்றியையும் தெரிவிக்கிற அதே நேரத்தில் இன்னொன்றையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். நிச்சயமாக இந்த நிகழ்ச்சி மிகப் பெரிய வெற்றியைப் பெறப்போகிறது விரைவில். அதற்கு ஒரு அடையாளம் சொல்ல வேண்டும் என்று சொன்னால்,

எப்பொழுதுமே எந்த நிகழ்ச்சியாக இருந்தாலும், அந்த நிகழ்ச்சிக்கு ஒரு minute to minute programme தயார் செய்வார்கள். Programme schedule ஒன்று தயார் செய்து என்னிடத்தில் ஒரு நகலை கொடுத்திருக்கிறார்கள். இந்த நிகழ்ச்சி 10 மணிக்கு தொடங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால், நாம் இந்த நிகழ்ச்சியை 9.45க்கே தொடங்கிவிட்டோம். ஆக நிகழ்ச்சியை அறிவித்ததற்கு முன்னாடியே நடத்தத் தொடங்கிவிட்டோம். நான் பேசுகிற நேரத்தையும் கூட கவனித்துப் பார்த்தேன். 10.44க்கு ஆரம்பித்து 10.56க்கு முடிக்க வேண்டும் என்று. ஆனால், நான் பேசத் தொடங்கியது 10.30க்கே பேச ஆரம்பித்து விட்டேன். ஆக எல்லாவற்றிலும் முன்கூட்டியே போய்க்கொண்டிருக்கிறோம். ஆகவே, இந்த fast, முன்கூட்டியே இருக்கக்கூடிய இந்த நிலை, நாம் ஈடுபட்டிருக்கக்கூடிய ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கக்கூடிய இந்த நிலையில் இருந்து வெற்றி பெறவேண்டும், வெற்றி பெறவேண்டும் என்று அன்போடு கேட்டு உங்கள் அனைவருக்கும் மீண்டும் ஒரு முறை என்னுடைய நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன்.

நன்றி, வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்,*
தூத்துக்குடியில் அமைக்கப்படவுள்ள சர்வதேச அறைகலன் பூங்காவிற்கு அடிக்கல் நாட்டி ஆற்றிய உரை – 07.03.2022

தீமைகளை ஒழிக்க ஆக்கப்பூர்வமாக விவாதிக்கப்படும் கருத்தரங்குகள்...

அனைவருக்கும் வணக்கம்!

புகழ்பெற்ற “தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்” ஆங்கில நாளேடு நடத்தும் “Think Edu-2022” கருத்தரங்கில் காணொலி வாயிலாகப் பங்கேற்பதில் பெருமையடைகிறேன்.

பத்தாவது ஆண்டாக நடைபெறும் இக்கருத்தரங்கம், ஆக்கப்பூர்வமான விவாதங்களுக்கும் ஆலோசனைகளுக்குமான சிந்தனைக்களமாக விளங்கி வருகிறது.

இதனை முன்னின்று நடத்தும் ‘தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்’ நாளேட்டின் ஆசிரியர் குழு இயக்குநர் திரு.பிரபு சாவ்லா அவர்களுக்கும்,

‘தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்’ குழுமத் தலைவர் திரு.மனோஜ் குமார் சொந்தாலியா அவர்களுக்கும் ஏற்பாட்டாளர்களுக்கும் எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அனைவருக்கும் கல்வி என்ற முன்னெடுப்பை முதன்முதலில் பெரிய அளவில் செயல்படுத்தியது நமது தமிழ்நாடுதான். அத்தகைய சமூகநீதி விளைந்த மண் இது! அப்படிப்பட்ட இந்த மாநிலத்தின் முதலமைச்சர் என்கிற முறையில்தான் இன்று உங்களிடையே நான் உரையாற்றுகிறேன்.

நீதிக்கட்சித் தலைவர்கள், பெருந்தலைவர் காமராசர், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், எம்.ஜி.ஆர். எனத் தொடர்ந்து வந்த முதலமைச்சர்கள் அனைவருமே மாணவர்களை கல்விச் சாலைகளுக்கு அழைத்து வந்தார்கள். கல்விக்கு அதிக நிதியை ஒதுக்கினார்கள். அனைத்துத் தரப்பு மக்களுக்கும் கல்விச் சென்று சேர்ந்தால்தான் தமிழ்நாடு வளர்ச்சி பெறும் என்ற தொலைநோக்குப் பார்வை அவர்களுக்கு இருந்தது.

திராவிட இயக்கத்தின் அடிப்படையிலேயே கல்வியை முதன்மைப்படுத்தும் நோக்கம் இருந்தது. ஐந்து முறை தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான், தமிழ்நாட்டை உயர்கல்வியில் முன்னேறிய மாநிலம் ஆக்குவதற்கான முயற்சிகளை மேற்கொண்டார். தமிழ்நாடு முழுவதும் புதிய கல்லூரிகளை அவர் தொடங்கினார். பல பல்கலைக்கழகங்களை உருவாக்கினார். சமச்சீர் கல்வித் திட்டத்தை அறிமுகப்படுத்தினார்.

அம்பேத்கர் பெயரில் சட்டப் பல்கலைக்கழகம் அமைத்தார். இவை அனைத்துக்கும் மேலாக, தொழிற்கல்விப் படிப்புகள் அனைவருக்கும் சென்றுசேரப் பெரும் தடைக்கல்லாக இருந்த நுழைவுத்தேர்வு முறையை நீக்கினார்.

இன்று தமிழ்நாடு முழுவதும் ஏராளமான பொறியாளர்களும் தலைசிறந்த மருத்துவர்களும் உருவாகியுள்ளனர் என்றால் அதற்கு வித்திட்டது திராவிடப் பேரியக்கமும், ஒப்பில்லாத் தலைவரான முத்தமிழறிஞர் கலைஞரும்தான்!

படிப்பதற்கே தகுதி வேண்டும் என்று தடைக்கற்களைப் போட்ட சமூகத்தில், படித்தால் தகுதி தன்னால் வந்துவிடும் என்று ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமையைப் பெற்றுத் தந்தோம்.

இன்று நீட் என்ற பெயரில் தகுதி என்ற தடைக்கல்லைப் போடுகிறார்கள். அதனால்தான் நீட் தேர்வை எதிர்க்கிறோம். அந்தத் தடைக்கல்லும் தூக்கியெறியப்படும்.

முதல் தலைமுறைப் பட்டதாரிகளுக்கும் தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கும்; பெண்களுக்கும் பல்வேறு கட்டணச் சலுகைகளை அறிவித்ததும் தமிழ்நாடுதான். நூறாண்டுகளாகப் பார்த்துப் பார்த்து வடிவமைத்த, பண்படுத்திய, செதுக்கிய தமிழ்நாட்டுக் கல்வி முறையை குலைக்க, நீட் தேர்வைப் போலவே, பழைய கருத்தாக்கங்களுக்கு, 'புதிய கல்விக் கொள்கை' என்று ஒப்பனை போட்டு, மீண்டும் கொண்டு வருகிறார்கள்.

கடந்த எட்டு ஆண்டுகளில் ஒன்றிய பா.ஜ.க. அரசின்கீழ் கல்வி மிக மோசமாகச் சீரழிக்கப்பட்டுள்ளது. அதிகாரத்தைப் பயன்படுத்தி அறிவியலுக்கும் பகுத்தறிவுக்கும் ஒவ்வாத பழமைவாதங்களும் மூடக்கருத்துகளும் கல்வியில் திணிக்கப்படுகிறது.

கல்விச் சாலைகளில் வெறுப்புணர்ச்சிக்கு வித்திட்டு, இளம் பருவத்திலேயே மாணவர்களின் நெஞ்சில் மதவாத சக்திகள் நஞ்சைக் கலக்கிறார்கள். இதுதான் கல்விக்கு ஒரு அரசு செய்யும் பங்களிப்பா ?

இதைத்தான் இந்த நாட்டில் உள்ள அறிவார்ந்தோரும், மனச்சாட்சி உள்ளோரும், நடுநிலையாளர்களும், கல்வியாளர்களும் அறச்சீற்றத்தோடு துணிச்சலோடு கேட்க வேண்டிய கேள்வி! இதுபோன்ற கல்விக் கருத்தரங்குகளில் நம் நாட்டின் கல்வியைச் சூழ்ந்துள்ள இதுபோன்றத் தீமைகளை ஒழிக்கப் பாடுபட வேண்டியது குறித்து ஆக்கப்பூர்வமாக விவாதிக்கப்பட வேண்டும்.

கல்வி ஒத்திசைவுப் பட்டியலில் இருப்பது, ஒன்றியத்தில் ஆட்சிப் பொறுப்புக்கு வரும் கட்சிகள் தங்களது பிற்போக்குக் கொள்கைகளைப் பரப்புரை செய்வதற்காக அல்ல!

கல்வி என்பது இந்த நாட்டின் சொத்து! ஒவ்வொரு இந்தியக் குடிமகனின் உரிமை! அதை ஒன்றியத்தில் உள்ள ஓர் ஆட்சியின் கட்சி, ஆக்கிரமித்துச் சீரழிக்க நினைப்பது, இந்த நாட்டின் உயிர்க்காற்றைப் பறிப்பதற்குச் சமம்! இதை நல்லோர் யாரும் அனுமதிக்க மாட்டார்கள்.

அதனால்தான், கல்வியை மீண்டும் மாநிலப் பட்டியலுக்கேக் கொண்டுவர வேண்டும் என்று திரும்பத் திரும்ப வலியுறுத்தி வருகிறோம். இப்படிப்பட்ட நிலையிலும், கல்வி முன்னேற்றத்திற்காக தமிழ்நாட்டில், திராவிட முன்னேற்றக் கழக அரசு, பல்வேறு முற்போக்கான திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

கொரோனா ஊரடங்குக் காலத்தில் ஏற்பட்ட கற்றல் இழப்பை ஈடு செய்திட 'இல்லம் தேடிக் கல்வி' என்ற திட்டம். இத்திட்டத்தை உலகப் புகழ்பெற்ற பொருளாதார வல்லுநரான ழான் திரேஸ் அவர்கள், ஜார்க்கண்ட் மாநிலத்திலும் செயல்படுத்த அம்மாநில அரசுக்குப் பரிந்துரை செய்கிறார்.

தமிழ்நாட்டிலுள்ள 24 ஆயிரத்து 345 அரசுத் தொடக்கப் பள்ளிகள் அனைத்திலும் திறன்மிகு வகுப்பறைகள் அமைக்கப்படுகின்றன. 6 ஆயிரத்து 992 நடுநிலை, உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளிலும் உயர் தொழில்நுட்பக் கணினி ஆய்வகங்கள், நவீன அறிவியல் மற்றும் மொழி ஆய்வகங்கள் உருவாக்கப்படுகின்றன.

அனைத்துப் பள்ளிகளுக்கும் அகன்ற அலைவரிசை வசதி ஏற்படுத்தப்படுகிறது. நாட்டின் தலைசிறந்த கல்வியாளர்களின் வழிகாட்டுதலுடன் ஆசிரியர்களுக்கான புத்தாக்கப் பயிற்சிகளும், மாணவர்களுக்கான மென்திறன் பயிற்சிகளும் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அனைத்திற்கும் முத்தாய்ப்பாக, ‘மாநிலக் கல்விக் கொள்கை’ உருவாக்கப்படவுள்ளது. கல்வி அறிவில் சிறந்த மாணவர்கள் என்பதோடு, அவர்களுடைய திறன் மேம்பாடு அடைய, கடந்த மார்ச்–1 அன்று, மிகப் புதுமையான ‘நான் முதல்வன்’ என்ற திட்டத்தைத் தொடங்கி வைத்துள்ளேன்.

கல்வி சிறந்த தமிழ்நாடு என்ற பெருமை மட்டும் நமக்குப் போதாது. உயர்கல்வியிலும் ஆராய்ச்சிக் கல்வியிலும் புதிய கண்டுபிடிப்புகளிலும் சிறந்த தமிழ்நாடாக நாம் மாற வேண்டும். எந்தக் கல்வி நிறுவனத்துக்குச் சென்றாலும் நான் இதைத்தான் வலியுறுத்தி வருகிறேன்.

அந்நிலையை எய்த, கல்வி யாருக்கும் மறுக்கப்படக் கூடாது. சாதி, ஊர், பின்புலம், பணம், மதம், உடை, பாலினம் எதுவும் ஒரு மாணவரின் கல்விக்குத் தடையாக அமைந்திடக் கூடாது. அத்தகைய சமூகத்தைப் படைக்கத்தான் போராடி வருகிறோம். கல்வி அறிவிலும், திறன் மேம்பாட்டிலும் சிறந்தவர்கள் தமிழ்நாட்டு மாணவர்கள் என்று உலகம் இன்னும் இறுக்கமாக அரவணைத்துக்கொள்ளும் நாளை நோக்கி நாம் வேகமாக நடைபோட்டு வருகிறோம்.

சமூகநீதி மண்ணான தமிழ்நாட்டில் நடைபெறும் இந்த இரு நாள் கருத்தரங்கில் இந்தியா முழுமையில் இருந்தும் பல்வேறு கல்வியாளர்கள், அரசியல் தலைவர்கள் கலந்துகொண்டு உரையாற்றி உள்ளனர். ஆக்கப்பூர்வமான விவாதங்கள் நல்ல மாற்றங்களுக்கு வித்திட எனது வாழ்த்துக்களைத் தெரிவித்து விடைபெறுகிறேன்.

நன்றி, வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள்,*
“தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்” ஆங்கில நாளேடு நடத்திய
“Think Edu-2022” கருத்தரங்கில் காணொலி வாயிலாக
ஆற்றிய உரை – ***09.03.2022***

அர்ப்பணிப்பு உணர்வோடு செயல்பட வேண்டும்

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே!

தலைமைச் செயலாளர் அவர்களே!

காவல்துறைத் தலைமை இயக்குநர் அவர்களே!

அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்களே!

அரசு துறைச் செயலாளர்களே!

மாவட்ட ஆட்சித் தலைவர்களே!

மாவட்டக் காவல் கண்காணிப்பாளர்களே!

மாவட்ட வனத்துறை அதிகாரிகளே!

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்!

தமிழ்நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு இந்தப் புதிய அரசு அமைந்த பிறகு நடைபெறக்கூடிய முதலாவது மாவட்ட ஆட்சியர், மாவட்டக் காவல் கண்காணிப்பாளர்கள், மாவட்ட வனத்துறை அதிகாரிகள் மாநாடு, இந்த மாநாடு. எனவே, உங்கள் அனைவரையும் ஒருசேர இந்த மாநாட்டின் மூலமாகச் சந்திப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். உங்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த அரசு பொறுப்பேற்று பத்து மாதங்கள் ஆகியிருக்கின்றன. இரண்டு கொரோனா அலைகளை வெற்றிகரமாக எதிர்கொண்டு அதற்கு முற்றுப்புள்ளியும் வைத்திருக்கிறோம்! அதற்கு உங்களுடைய ஒத்துழைப்புதான் முக்கியமான காரணமாக அமைந்தது. ஊரடங்கைச் செயல்படுத்துவது; மக்களின் வாழ்வாதாரமும் அடிப்படைத் தேவைகளும் பாதிக்காத வகையிலே, அரசு எடுத்த நடவடிக்கைகளை, மாவட்ட நிருவாகம் சிறப்பாகச் செயல்படுத்தியிருக்கிறது. தடுப்பூசி செலுத்துவது எனும் 'மாபெரும் மக்கள் இயக்கம்' வெற்றிகாணக்கூடிய அளவிலே உழைத்தது நீங்கள் என்பதை எண்ணிப் பார்க்கிறபோது, நீங்கள் அளித்த உழைப்பு மெச்சத்தக்கது, பாராட்டுக்குரியது. வரலாறு காணாத கனமழையால் பல்வேறு மாவட்டங்களில் வெள்ளப் பாதிப்புகள் ஏற்பட்டபோது, அந்தந்த மாவட்ட நிருவாகத்தைச் சார்ந்தவர்களும் இரவு பகல் பாராது பணியாற்றியிருக்கிறீர்கள்.

இவற்றுக்கெல்லாம் பாராட்டுக்களை மனதாரத் தெரிவித்துக் கொள்கிறேன். நாங்கள் பொறுப்பேற்றபோது மாநில நிருவாகம் எந்த நிலையில் இருந்தது என்பது உங்கள் அனைவருக்கும் நன்றாகத் தெரியும்.

சவால்கள் ஒருபக்கம் இருந்தாலும் இன்னொரு பக்கத்தில் மாபெரும் பல சாதனைகளையும் நாம் செய்திருக்கிறோம். நேர்மையான, வெளிப்படையான, மக்கள் விரும்புகின்ற அரசு நிருவாகத்தை நாம் அனைவரும் இணைந்து அளித்து வருகிறோம். நீங்களும் இந்தப் பணியிலே பங்குதாரர்களாக இருந்திருக்கிறீர்கள் என்ற முறையில், என்னுடைய பாராட்டுக்களை மீண்டும் மீண்டும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஐந்நூற்றுக்கும் அதிகமான வாக்குறுதிகளை பொதுமக்களுக்கு நாங்கள் வழங்கியிருக்கிறோம். அவற்றுள் 70 விழுக்காட்டிற்கும் அதிகமான வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளில் தற்போது ஈடுபட்டு இருக்கிறோம்.

‘ஸ்டாலினின் 7 உறுதிமொழிகள்’ என்று ஏழு தொலைநோக்குக் குறிக்கோள்களை அறிவித்தோம். அவற்றுக்கான செயல்திட்டங்களையும் வகுத்து நிறைவேற்றி வருகிறோம். அந்தக் குறிக்கோள்களை அடைய மாநிலப் பொருளாதார ஆலோசனைக் குழுவை அமைத்தோம்; மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழுவை உருவாக்கினோம்; நிதிநுட்பக் கொள்கையை வகுத்தோம்; ஏற்றுமதி மேம்பாட்டுக் கொள்கையை உருவாக்கினோம்; தமிழ்நாடு மாநில குழந்தைகளுக்கான கொள்கையை வெளியிட்டோம்; வேளாண்மைக்கு எனத் தனி நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்தோம்; கொள்கை அரசையும் மக்கள் நலச் சேவை அரசையும் ஒருசேர நடத்தவேண்டுமென்ற இலட்சியத்தை வகுத்தோம்.

இப்படி, இந்த ‘திராவிட மாடல்’ அரசின் முன்னுரிமைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து அரசு நிருவாகச் சக்கரத்தைச் சரியான திசையில், மக்கள் பயனடையக்கூடிய திசையிலேத் திருப்பினோம்.

இந்தியாவுக்கே முன்னோடித் திட்டங்களாக விளங்கக்கூடிய

- ‘மக்களைத் தேடி மருத்துவம்’,
- ‘இல்லம் தேடிக் கல்வி’,
- ‘இன்னுயிர் காப்போம் நம்மை காக்கும் 48’

இப்படி மக்கள் நலனுக்காக நாம் தீட்டியுள்ள அனைத்துத் திட்டங்களும் கடைகோடியில் வாழக்கூடிய மனிதரையும் சென்றடையத் தேவையான நடவடிக்கைகளை இந்தப் பத்து மாதங்களில் எடுத்து தமிழ்நாட்டின் நிருவாகத்தை இந்திய அளவிலே தலைநிமிரச் செய்திருக்கிறோம். அதற்கு அதிகாரிகளாகிய நீங்கள் அளித்த ஒத்துழைப்புக்கு மீண்டும் பாராட்டுக்களை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாவட்ட ஆட்சித் தலைவர்கள், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆகியோருடன் முதன்முறையாக மாவட்ட வன அதிகாரிகளையும் இணைத்து ஒருங்கிணைந்த மாநாடாக இந்த மாநாடு நடைபெறவிருக்கிறது. இதனுடைய முக்கிய நோக்கம், இன்று உள்ள காலநிலை மாற்றம்! மனித சமுதாயத்தின் வளர்ச்சியில் சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை ஆகியவற்றின் முக்கியத்துவத்தை உணர்த்துவதற்குத்தான் இந்த ஒருங்கிணைந்த மாநாடு நடத்தப்படுகிறது.

இத்தகைய மாற்றம் வரவேண்டும் என்பதற்காகத்தான் சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத்துறை என்று பெயர் சூட்டியிருக்கிறோம். தமிழ்நாட்டைப் பசுமை நிறைந்த மாநிலமாக மாற்றுவதற்கு இதுவொரு மிக முக்கியமான முன்னெடுப்பு.

தற்போது நமது தமிழ்நாட்டில் 24 விழுக்காடாக இருக்கும் மொத்த பசுமைப் பரப்பினை குறைந்தபட்சம் 33 விழுக்காடாக 10 ஆண்டுக்குள் உயர்த்திட வேண்டும். இந்த இலக்கை அடைய ஒட்டுமொத்த மாவட்ட நிருவாகமும் இணைந்து ஒரே திசையில் பயணிக்க வேண்டும்.

புதிய முதலீடுகள் வருவதற்கும் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைப்பதற்கும், அதன் வழியாக நாம் விரும்பும் ஒரு ட்ரில்லியன் டாலர் பொருளாதாரம் எனும் இலக்கினை அடைந்து மாநிலத்தின் முன்னேற்றத்தை உறுதிசெய்யவும் சட்டம் ஒழுங்கு மிக மிக முக்கியமாகும்! தமிழ்நாட்டில் எப்போதும் சட்டம், ஒழுங்கு சீராக இருப்பதை மாவட்ட நிருவாகம் ஒருங்கிணைந்து கண்காணிக்க வேண்டும்! சட்டம் ஒழுங்கு விஷயத்திலே நான் சமரசம் செய்துகொள்ள மாட்டேன். அதை நீங்கள் அனைவரும் உணர்ந்திருப்பீர்கள் என்று நம்புகிறேன்.

குறிப்பாக பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள், போதைப் பொருள் குற்றங்கள், பொருளாதாரக் குற்றங்களை இந்த அரசு ஒருபோதும் அனுமதிக்காது. மத நல்லிணக்கத்திற்கு ஊறுவிளைவிக்கக்கூடிய வகையில் யார் செயல்பட்டாலும், அவர்கள் மீது தயவுதாட்சண்யமின்றி உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். சமுதாயத்தில் அமைதி நிலவுவதை உறுதிசெய்திடக்கூடிய வகையில் சாதி மோதல்கள் ஏற்பட வாய்ப்புள்ள பகுதிகளில் மிகுந்த கவனத்துடன் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளில் காவல்துறை ஈடுபட்டு வருகிறது. நாசக்கார சக்திகள் எந்த வடிவிலும் தலைதூக்க நாம் அனுமதித்துவிடக் கூடாது.

எல்லோரும் ஓரினம் எல்லோரும் ஓர் குலம் என்ற சமத்துவ சமூகமே – நமது அரசினுடைய குறிக்கோள்! கட்டப்பஞ்சாயத்து, அடிதடி, மோசடி, நில அபகரிப்பு போன்ற பொதுமக்களைப் பாதிக்கக்கூடிய செயல்களில் ஈடுபடுவோர் யாராக இருந்தாலும் அவர்களை ஒடுக்குவதில் காவல்துறை எந்தவித பாரபட்சமும் காட்டக்கூடாது. மாநிலத்தில் சட்டம் ஒழுங்கிற்கும், பொது அமைதிக்கும் குந்தகம் விளைவிக்கக்கூடிய சமூகவிரோத சக்திகளை கூலிப்படைகளை இரும்புக்கரம் கொண்டு ஒடுக்க வேண்டும். நீங்கள் உருவாக்கும் அமைதியில்தான் அனைத்தும் அடங்கி இருக்கிறது.

சாலை விபத்துகள் அதிகம் நடைபெறும் மாநிலங்களில் ஒன்றாகத் தமிழ்நாடு இருப்பது எனக்கு மிகுந்த கவலையை அளிக்கிறது. அவற்றை குறைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை நாம் எடுத்துக்கொண்டிருக்கிறோம்.

நமது அரசு ஆட்சிப் பொறுப்புக்கு வருவதற்கு முன்பே 'உங்கள் தொகுதியில் ஸ்டாலின்' முன்னெடுப்பைத் தொடங்கி அதில் பெறப்பட்ட மனுக்களுக்குத் தீர்வுகாண ஆட்சிப் பொறுப்பேற்றதும் தனித் துறையை அதற்காக நான் தொடங்கினேன். தற்போது உருவாக்கப்பட்டுள்ள "உங்கள் தொகுதியில் முதலமைச்சர்" என்ற துறையிலே, தங்களது குறைகளை, தேவைகளை மனுக்களாகக் கொடுத்துள்ள மக்களின் குரல் காது கொடுத்துக் கேட்கப்பட வேண்டும். அந்தத் துறையில் பெறப்பட்ட மனுக்களை ஆய்வு செய்து பொதுவான கோரிக்கைகள் மற்றும் தனிநபர் சம்பந்தப்பட்ட கோரிக்கைகள் எனத் தரம்பிரித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படுவதை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் உறுதிசெய்திட வேண்டும்.

மாவட்ட அளவில் தீர்க்கப்பட வேண்டிய, வட்ட அளவில் முடிக்கப்பட வேண்டிய, வட்டார அளவில் களையப்பட வேண்டிய, சிற்றூர் அளவில் செய்து முடிக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளை உரிய காலத்தில் செய்யாமல் இருப்பதன் காரணமாக, பெரும்பாலான மக்கள் கண்ணீரோடும், கவலைகள் நிறைந்த இதயத்தோடும் தீர்வினை எதிர்பார்த்து தலைமைச் செயலகத்திற்கு மனுக்களை அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். அவற்றைக் கருணையோடு பரிசீலனை செய்து விரைவாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். நமது அரசின் திட்டங்களால் பயன்பெறும் பயனாளிகள் குறித்து துறைவாரியாகத் தொகுக்கப்பட வேண்டும்.

அதேபோல், பல தலைமுறைகளுக்குப் பயன்படக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள எனது கனவுத் திட்டமாக

இருக்கக்கூடிய 'நான் முதல்வன்' திட்டத்தை கடந்த மார்ச் 1ஆம் தேதி தொடங்கி வைத்துள்ளேன். மாணவர்கள் மற்றும் இளைஞர்களின் தனித்துவத் திறன்களை மேம்படுத்தி அவர்களுக்குச் சிறப்பான எதிர்காலத்தை ஏற்படுத்தித்தரக்கூடிய இந்த உன்னதமானத் திட்டத்தில் உங்களை ஈடுபடுத்திக்கொள்ள வேண்டும் என்று அனைத்து மாவட்ட ஆட்சியர்களையும், காவல்துறை கண்காணிப்பாளர்களையும் இந்தத் தருணத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாணவர்கள், இளைஞர்கள் ஆகிய அனைவருக்கும் மாவட்டத்தின் தலைமை வழிகாட்டியாக நீங்கள் திகழ வேண்டும் என்கிற என்னுடைய விருப்பத்தை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நீங்கள் இந்த உயரத்தை அடைய யாரோ ஒருவர் தூண்டுதலாக வழிகாட்டியாக அமைந்திருப்பார்கள். அதேபோல், நீங்களும் தமிழ்நாட்டு மாணவர்களுக்கு, இளைஞர்களுக்கு வழிகாட்டிகளாக மாறி ஊக்கப்படுத்தினால் அனைவரும் முதலிடத்தை அடைவார்கள்.

தமிழ்நாடும் 'நம்பர் 1' என்ற நிலையை அடையும். எனது கனவுத் திட்டத்தை உங்களை நம்பி நான் ஒப்படைக்கிறேன். நமது அரசின் சார்பில் தீட்டப்படக்கூடிய மக்கள் நலன் சார்ந்த திட்டங்களின் வெற்றி என்பது உங்களைப் போன்ற மாவட்ட அளவில் உள்ள அதிகாரிகளின் செயல்பாடுகளைப் பொறுத்தே அமையும் என்பதில் இருவேறு கருத்துகளுக்கு இடமேயில்லை. எனவே, நீங்கள் அனைவரும் நேர்மையாக, ஒளிவுமறைவற்ற, வெளிப்படைத்தன்மையோடு, முழு அர்ப்பணிப்பு உணர்வோடு செயல்பட வேண்டும். அப்படி செயல்படும் உங்களுக்கு இந்த அரசு என்றென்றும் உறுதுணையாக இருக்கும் என்பதை நான் இந்த நேரத்தில் உறுதிபடத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாள்தோறும் என்னுடைய கவனத்துக்கு வந்த பல விஷயங்கள் குறித்து நான் பேச விரும்பினாலும் மாநாட்டின் முதல் நாளான இன்று உங்கள் கருத்துக்களை முழுமையாக நான் கேட்க விரும்புகிறேன். மாவட்ட அளவில் உள்ள உண்மையான நிலவரங்களை அறிந்துகொள்ள நான் காத்திருக்கிறேன். ஆகவே, உங்களுடைய கருத்துக்களைத் தெளிவாக நீங்கள் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உங்களுடைய மாவட்டத்தில் செயல்படுத்தப்படும் அரசு திட்டங்களின் செயல்பாடுகள் குறித்தும் நீங்கள் தயக்கமின்றி உங்களது கருத்துக்களை எடுத்துச் சொல்லுங்கள். அவற்றை மேலும் சிறப்பாகச் செயல்படுத்துவதற்குத் தேவையான ஆலோசனைகளையும் தெரிவியுங்கள்.

உங்கள் மனதில் தோன்றக்கூடிய புதிய எண்ணங்களை, திட்டங்களுக்கான ஆலோசனைகளை, மக்களுக்குப் பயனளிக்கக்கூடிய முன்னெடுப்புகளை விளக்கமாக இங்கே தெரிவிக்க வேண்டும். புதிய முன்னெடுப்புகளுக்கு நமது அரசு முழு ஒத்துழைப்பை அளிக்கும் என்று சொல்லி என் உரையை இந்த அளவோடு நிறைவு செய்கின்றேன்.

நன்றி, வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள்,*
மாவட்ட ஆட்சித் தலைவர்கள், காவல் துறை மற்றும்
வனத்துறை அலுவலர்கள் மாநாட்டின்
முதல் நாள் கூட்டத்தில் ஆற்றிய உரை – ***10.03.2022***

சட்டம், ஒழுங்கை பராமரிப்பதில்தான் ஆட்சியின் மதிப்பீடு உள்ளது

மாவட்ட ஆட்சித் தலைவர்களும், காவல்துறை கண்காணிப்பாளர்களும் மற்றும் அலுவலர்களும் நமது மாநிலத்தில் தற்போது நிலவி வரக்கூடிய சட்டம்–ஒழுங்கு சூழல் குறித்து, அவற்றை மேலும் மேம்படுத்துவதற்கான பல்வேறு ஆலோசனைகளை, இந்தப் பணியில் நீங்கள் சந்தித்துக்

கொண்டிருக்கும் பல்வேறு சவால்கள் குறித்தும் சுருக்கமாக, அதே நேரத்தில் தெளிவாகவும் எடுத்துச் சொல்லியிருக்கிறீர்கள்.

சட்டம்—ஒழுங்கு என்பது காவல் துறையின் பணி மட்டுமல்ல. மேலும், இது ஒரு துறையை மட்டும் பாதிக்கக்கூடிய விஷயம் மட்டுமல்ல. நமது மாநிலத்தினுடைய மக்களுடைய வாழ்க்கைத் தரம், பொருளாதார முன்னேற்றம், அடுத்த தலைமுறையினருடைய கல்வி, வேலைவாய்ப்பு என நமது சமுதாயத்தின் ஒவ்வொரு பரிணாமத்தையும் நிருணயிக்கக்கூடிய முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை இந்தத் தருணத்தில் உங்களுக்கெல்லாம் மீண்டும் வலியுறுத்திக்கூற நான் விரும்புகிறேன். மாவட்ட ஆட்சித் தலைவர்களையும், காவல்துறை கண்காணிப்பாளர்களையும் நான் கேட்டுக்கொள்ள விரும்புவது,

- ✶ உங்கள் மாவட்டத்தில் சட்டம்—ஒழுங்கு தொடர்பான மாதாந்திரக் கூட்டத்தை மிகுந்த கவனத்துடன் தவறாமல் நீங்கள் நடத்திட வேண்டும்.
- ✶ கடந்த இரண்டு ஆண்டுகளாக கோவிட் பிரச்சினையால் இந்தக் கூட்டங்கள் முறையாக நடத்தப்படவில்லை. எனவே, இந்த நிலை மாற்றப்பட வேண்டும்.
- ✶ மேலும், வாரந்தோறும் சட்டம்—ஒழுங்கு குறித்து நுண்ணறிவுப் பிரிவைச் சார்ந்த தகவல்கள் குறித்து கலந்தாலோசனையும் நீங்கள் தவறாமல் நடத்த வேண்டும்.
- ✶ என்னுடைய அடுத்த ஆலோசனை என்னவென்று கேட்டால், நீங்கள் உங்கள் மாவட்டத்தில் Dash Board ஒன்றை உருவாக்கிக்கொள்ள வேண்டும். மாதந்தோறும் நடைபெறுகிற சட்டம்—ஒழுங்கு தொடர்பானக் கூட்டத்தில் எடுக்கப்படக்கூடிய முடிவுகள் முறையாக நடைமுறைப்படுத்தப்படுகிறதா என்பது குறித்து அடுத்து வரும் கூட்டங்களில் ஆராய்ந்து முழுமையாக அதற்கானத் தீர்வு காண வேண்டும்.

✶ சட்டம்–ஒழுங்கு பிரச்சினைகளும், குற்றங்களும் நிகழ்ந்து முடிந்த பின்பு அவற்றைத் தீர்ப்பதற்கும், புலனாய்வு செய்வதற்கும் எடுக்கப்படக்கூடிய நடவடிக்கைகளை விட, அவை நிகழாமல் தடுப்பதற்கான முயற்சிகள்தான் மக்களுக்கு மிகுந்த பயனை அளிக்கும். எனவே, நமது வெற்றி என்பது சட்டம்–ஒழுங்கு பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதிலோ, குற்றங்களைக் கண்டுபிடிப்பதிலோ இருப்பதைவிட, அவை, மக்களைப் பாதிக்காத வகையில் தடுப்பதில்தான் இருக்கிறது என்பதை நீங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

நான் ஆட்சிக்கு வந்தவுடன், தவறு செய்பவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்பதை சொல்லால் மட்டுமல்ல, செயலாலும் தொடர்ந்து பலமுறை நான் செய்தும் காட்டியிருக்கிறேன், அதையெல்லாம் நீங்கள் நன்கு அறிவீர்கள். இதை நான் மீண்டும் சொல்வதற்குக் காரணம், வருங்காலத்திலும் இந்த நிலை தொடர வேண்டும், தொடர்வதை நீங்கள் உறுதி செய்ய வேண்டும். நான் உங்களுக்கு இறுதியாகச் சொல்ல விரும்புவது, இந்த ஆட்சியினுடைய மதிப்பீடு என்பது சட்டம்–ஒழுங்கினைப் பராமரிப்பதில்தான் உள்ளது என்பதை நீங்கள் அனைவரும் முழுமையாக உணர்ந்து செயல்பட வேண்டும் என்று உங்கள் அனைவரையும் மீண்டும் ஒருமுறை கேட்டுக்கொண்டு, இந்த அளவோடு இந்த உரையை முடித்துக்கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள்,*
மாவட்ட ஆட்சித் தலைவர்கள், காவல்துறை, வனத்துறை
அலுவலர்கள் மாநாட்டில் (முற்பகல் கூட்ட நிறைவின்போது)
*ஆற்றிய உரை – **10.03.2022***

களத்திற்கு நேரடியாக சென்று பிரச்சினையைத் தீர்க்க வேண்டும்

தொடக்கவுரை

அனைவருக்கும் வணக்கம்.

காவல்துறை அமைச்சரவையில் எனது கட்டுப்பாட்டில் இருக்கின்ற துறை!

நாம் ஆட்சிப் பொறுப்பேற்றப் பிறகு பல்வேறு இடர்களை எதிர்கொண்டபோதிலும்,

சிறப்பாகப் பணியாற்றிய காவல்துறையினருக்கு முதலில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏற்கெனவே நான் சொன்னதுபோல, இது, ‘சமூக வலைத்தள யுகம்’!

இந்தச் சமூக வலைத்தளத்தில், எல்லோருடைய கைகளிலும் செல்போன் வந்துவிட்டது.

காவல்துறையின் பெரிய கவலையாகவும் பணியாகவும் இருக்கப்போவது,

சமூக வலைத்தளங்களால் ஏற்படும் பிரச்சினைகளைத் தடுப்பதும்,

அதன் மேல் உடனடி நடவடிக்கை எடுப்பதும்தான்.

இன்னும் சொல்லவேண்டுமென்றால்,

நாட்டில் ஏற்படுகிற சாதி, மத மோதல்களுக்கும்,

உள்நாட்டுப் பாதுகாப்புக்கு இடையூறு ஆகியவற்றுக்கும்,

தொடக்கப்புள்ளியாக இருப்பது, இந்த சமூக வலைத்தளம்தான்.

இங்கு பல்வேறு தலைப்புகளில் பேசுபவர்கள்,

களத்தில் ஆற்ற வேண்டிய பணிகளோடு,

ஆன்லைனில் ஆற்ற வேண்டிய பணிகள் குறித்தும் உங்களுடைய கருத்துக்களைத் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

நிறைவுரை

அனைவருக்கும் வணக்கம்.

இன்றைய மாலை அமர்வில் பேசிய அனைத்து மாவட்டக் காவல் கண்காணிப்பாளர்களும், காவல் ஆணையர்களும், உயர் அதிகாரிகளும், உங்கள் கருத்துக்களை தெளிவாக எடுத்துச் சொன்னீர்கள்.

அதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உங்கள் கருத்துக்கள் அனைத்தும் உரிய பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, தேவையான இனங்களில் உரிய

நடவடிக்கையும் எடுக்கப்படும் என்பதை முதற்கண் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

நமது மாநிலம் ஒரு அமைதியான வாழ்வினை ஒவ்வொரு சராசரி குடும்பத்திற்கும், தொழில் நிறுவனத்திற்கும் மற்றும் பல்வேறு வணிக அமைப்புகளுக்கும், கல்வி அமைப்புகளுக்கும் வழங்கி, நாட்டிற்கே ஒரு முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. இதற்குக் காரணம், இங்கு நிலவும் அமைதியான சட்டம்—ஒழுங்கு நிலைமைதான். இதனை முன்வைத்துத்தான் மக்கள் ஒரு அரசினை, அங்கு நடக்கின்ற ஆட்சியினைப் பற்றிய மதிப்பீட்டைச் செய்கிறார்கள்.

இதர அரசுத் துறைகளுக்கும், காவல் துறைக்கும் உள்ள இந்தப் பெரிய வேறுபாட்டினை நீங்கள் உணர வேண்டும். இதனை எப்போதும் நெஞ்சில் நிறுத்தி நீங்கள் செயல்பட வேண்டும்.

குறிப்பாக, ஓரிரு விஷயங்களை உங்களுக்கு இத்தருணத்தில் தெரிவிக்க விரும்புகிறேன்.

சட்டம்—ஒழுங்குப் பிரச்சினைகளில் மாவட்டக் காவல் கண்காணிப்பாளர்கள், கள நிலவரத்திற்கு ஏற்ப, சட்ட வரம்பிற்குட்பட்டு என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ, அதை அவர்களாகவே மேற்கொள்ள வேண்டும். இதற்குத் தனியாக மேலிடத்திலிருந்து ஆணை வர வேண்டுமென்று எதிர்பார்த்துக் காத்திருக்க வேண்டிய அவசியம் இல்லை, காத்திருக்கவும் கூடாது.

அடுத்து, உயர் அலுவலர்கள் சட்டம்—ஒழுங்குப் பிரச்சினைகள் ஏற்படும் நேரங்களில், நேரடியாக களத்திற்குச் சென்று, பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும். இது சார்—நிலை அலுவலர்களுக்கு தெம்பும், தைரியமும் அளிப்பதாக அமையும். மக்களின் ஆதரவும் இதனால் நிச்சயமாக உங்களுக்குக் கிடைக்கும்.

இன்னொரு முக்கியமான விஷயத்தையும் இங்கு குறிப்பிட வேண்டுமென்று நினைக்கிறேன். அது, சார்–நிலைக் காவலர்கள் அவர்களது அலுவல் ரீதியான பிரச்சினைகள் மற்றும் தேவைகளை உணர்ந்து, அவர்களை ஊக்குவித்து, நீங்கள் உங்களது குழுவை அமைத்துக்கொள்ள வேண்டும். ஆங்கிலத்தில் Team Building என்று இதனைக் குறிப்பிடுவார்கள். அப்போதுதான் நீங்கள் காவல் கண்காணிப்பாளராக மட்டுமல்லாமல், ஒரு லீடராகவும் அவர்களின் முழு ஒத்துழைப்பைப் பெறக்கூடியவர்களாகவும் விளங்க முடியும்.

அரசின் நோக்கங்கள் எல்லாம் ஒன்றே ஒன்றுதான். அது, மக்கள் நலம், சமுதாய நல்லிணக்கம், குற்றங்கள் குறைந்த ஒரு வாழ்க்கை முறை, இதனைக் கொண்டுவர வேண்டியது உங்களது கரங்களில்தான் உள்ளது. அதனை நீங்கள் செயல்படுத்திட வேண்டுமென்று உங்களை எல்லாம் இந்த நேரத்திலே கேட்டுக் கொண்டு, இந்த அளவோடு மாலை அமர்வு நிகழ்ச்சியை முடித்துக் கொள்கிறோம்.

நன்றி, வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள்,*
காவல்துறை அலுவலர்கள் மாநாட்டில்
ஆற்றிய தொடக்கவுரை மற்றும் நிறைவுரை – ***10.03.2022***

மக்கள்தான் எஜமானர்கள்

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே!

தலைமைச் செயலாளர் உள்ளிட்ட அரசு உயர் அதிகாரிகளே!

மாவட்ட ஆட்சித் தலைவர்களே!

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்!

தொடக்கத்திலே நம்முடைய தலைமைச் செயலாளர் அவர்கள் விளக்கமாக, விரிவாக இந்தக் கூட்டத்தினுடைய நோக்கத்தைப் பற்றி, இதில் எப்படி உங்களுடைய கருத்துக்களை எடுத்து வைக்க வேண்டும் என்பதைப் பற்றியும், நாம் ஆற்ற வேண்டிய பணிகள் குறித்தும் இங்கே விளக்கமாக, விரிவாக எடுத்து வைத்திருக்கிறார்கள். எனவே, நான் அது குறித்து அதிகம் உங்களிடத்திலே பேச வேண்டிய அவசியம் இல்லை. இருந்தாலும், தொடக்க உரையாக, சுருக்க உரையாக என்னுடைய உணர்வை உங்களிடத்தில் நான் வெளிப்படுத்த விரும்புகிறேன்.

மாவட்ட ஆட்சித் தலைவர்கள், தங்களுடைய மாவட்டங்களில் நிறைவேற்றப்படக்கூடிய திட்டங்கள் குறித்து, கள நிலவரத்தை விரிவாக நீங்கள் இங்கே எடுத்துரைக்கலாம். இந்த அரசினுடைய திட்டங்களின் பயன் மக்களுக்கு சென்றடைகிறதா என்பதை உறுதி செய்வது குறித்து அனைவரும் தங்களுடைய கருத்துக்களில் அதை இணைத்து தெரிவிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

எங்களுக்கும், உங்களுக்கும் அதாவது, எங்களைப் போன்ற அரசியல்வாதிகளுக்கும், உங்களைப் போன்ற அதிகாரிகளுக்கும் மக்கள்தான் எஜமானர்கள் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. ஆகவே, ஒரு ரூபாய் செலவு செய்தால், அந்த ஒரு ரூபாய் சிந்தாமல், சிதறாமல் கடைக்கோடி மக்களுக்கும் சென்றடைய வேண்டும். அதுதான் சிறந்த நிருவாகத்திற்கு எடுத்துக்காட்டாக அமைந்திட முடியும். ஒவ்வொரு மாவட்டத்திலும் நிறைவேற்றப்பட வேண்டிய புதிய திட்டங்கள் குறித்து ஆலோசனைகள் இருந்தால்,

நீங்கள் இங்கே கூறலாம். ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒவ்வொரு விதமானப் பொருட்கள் கிடைக்கிறது. அது மஞ்சளாக இருக்கலாம், இயற்கை வளங்கள் அதிகமாக இருக்கலாம். அவற்றை எப்படி மார்க்கெட் செய்வது, அதிலிருந்து எப்படி அரசிற்கு வருமானத்தைப் பெருக்குவது என்பது குறித்தும், விவசாயிகள், தொழிலாளர்கள், சிறுதொழில், பெருந்தொழில் உள்ளிட்ட அனைவருக்கும் பயனளிக்கக்கூடிய திட்டங்கள் என்னென்ன என்பது குறித்த கருத்துக்களையெல்லாம் நீங்கள் இங்கே தெரிவிக்கலாம் எனக் கேட்டு, நேர்மையான நிருவாகம், வெளிப்படையான நிருவாகம் என்பதை மனதில் வைத்துக்கொண்டு, உங்களுடைய ஆலோசனைகளைச் சுதந்திரமாக நீங்கள் கூறலாம் என்று கேட்டு, அந்த வகையில் உங்களுடைய கருத்துக்களைக் கேட்பதற்கு நான் ஆர்வமாக இருக்கிறேன் என்பதை மட்டும் இங்கே எடுத்துச் சொல்லி, என்னுடைய தொடக்க உரையை இதோடு முடித்துக்கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள்,*
மாவட்ட ஆட்சித் தலைவர்கள், காவல்துறை மற்றும்
வனத்துறை அலுவலர்கள் மாநாட்டின் இரண்டாம் நாள்
நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கான மாநாட்டில்
*ஆற்றிய தொடக்க உரை – **11.03.2022***

பல்கலைக்கழகத்தின் தரம், செயல்பாட்டை வடிவமைப்பதில் முக்கிய பங்காற்றுபவர்கள் துணைவேந்தர்களே

தென்மாநிலப் பல்கலைக்கழக துணைவேந்தர்களின் மாநாட்டைத் தொடங்கிவைத்து, தொடக்கவுரை ஆற்றியுள்ள மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் மற்றும் பல்கலைக்கழகங்களின் வேந்தர் மாண்புமிகு ஆர்.என்.ரவி அவர்களே!

மாநாட்டிற்குத் தலைமையேற்றுள்ள, ‘அனைத்து இந்தியப் பல்கலைக்கழகக் கூட்டமைப்பின்’ தலைவர், துணைவேந்தர் திரு.திருவாசகம் அவர்களே!

வரவேற்புரை நிகழ்த்திய பாரதியார் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் திரு.பி.காளிராஜ் அவர்களே!

அனைத்து இந்தியப் பல்கலைக்கழகக் கூட்டமைப்பின் செக்கரட்டரி ஜெனரல் முனைவர் திரு.பங்கஜ் மிட்டல் அவர்களே!

இம்மாபெரும் உயர்கல்வி மாநாட்டில் பங்குபெற்றுள்ள தென் மாநிலங்களில் உள்ள பல்வேறு பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்களே!

மாநாட்டில் உரையாற்ற உள்ள மரியாதைக்குரிய கல்வியாளர்களே, மாநில மற்றும் ஒன்றிய அரசினைச் சார்ந்த பல்வேறு துறைசார் வல்லுநர்களே! கலந்துகொண்டுள்ள பேராசிரியப் பெருமக்களே!

உங்கள் அனைவருக்கும் எனது அன்பான வணக்கம்.

தேசிய அளவிலான தரவரிசைப் பட்டியலில், தமிழ்நாட்டுப் பல்கலைக்கழகங்களில் முதலிடம் பெற்று மாநிலத்துக்கே முன்னோடியாகத் திகழ்கின்ற பாரதியார் பல்கலைக்கழகம் மற்றும் அனைத்து இந்தியப் பல்கலைக்கழகக் கூட்டமைப்பு இணைந்து நடத்தும் இந்த மாநாடு ஆக்கப்பூர்வமானதாக அமைய வேண்டும் என முதலில் வாழ்த்துகிறேன்.

இந்த மாநாட்டின் மையப் பொருளாக ‘உயர்கல்வி நிறுவனங்கள் மூலம் ஒருங்கிணைந்த, சமமான மற்றும் தரமான கல்வியினை நடைமுறைப்படுத்துதலின் அவசியம்’ என்கிற, ஐக்கிய நாடுகள் அமைப்பின் அறைகூவல் அமைந்துள்ளது நாட்டின் நிலையான நீடித்த வளர்ச்சிக்கு அடித்தளமாக அமையும் என நம்புகிறேன்.

இந்த அடிப்படையில்தான் தமிழ்நாட்டில் உள்ள பல்கலைக்கழகங்கள் தரமான உயர்கல்வி வழங்குவதில் மற்ற மாநிலங்களுக்கெல்லாம் முன்னோடியாகத் திகழ்கிறது. அறிவுப்பூர்வமான, அறிவியல்சார்ந்த உண்மைகளை மட்டுமே பல்கலைக்கழகங்கள் ஊக்குவிக்கும் வகையில் தமிழ்நாட்டில் அனைத்துப் பல்கலைக்கழகங்கள் செயல்பட்டு வருகின்றன.

ஆகவேதான், தென்னகத்தைச் சார்ந்த ஆறு மாநிலங்களின் பல்கலைக்கழகத் துணைவேந்தர்கள் இருக்கக்கூடிய இந்த அவையில், தமிழ்நாடு உயர்கல்வியில் சிறந்து விளங்குகிறது என்பதை தெரிவிப்பதற்குப் பெருமையாக இருக்கிறது.

இத்தகைய பெருமையினையும் புகழையும் பெற்றுத் தந்துள்ள தமிழக அரசின் உயர்கல்வித்துறை மற்றும் தமிழ்நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்களை நெஞ்சாரப் பாராட்டுகிறேன்.

2020–2021ஆம் ஆண்டுக்கான தேசிய நிறுவனங்களுக்கான தரவரிசைக் கட்டமைப்பில் அனைத்து இந்திய அளவில் தமிழ்நாட்டின் 19 பல்கலைக்கழகங்கள் மற்றும் 33 கல்லூரிகள் முதல் நூறு இடங்களுக்குள் உள்ளன. சென்னையிலுள்ள லயோலா கல்லூரி அனைத்து இந்திய அளவில் மூன்றாவது இடமும் பெற்று தமிழ்நாட்டிற்குப் பெருமை சேர்த்திருக்கின்றன.

பள்ளிக் கல்வி முடித்து, உயர்கல்விக்கு பயிலவரும் மாணவர்களின் சேர்க்கை விகிதம், தேசிய அளவில் 27.1 விழுக்காடு; ஆனால், தமிழ்நாட்டில் மாணவர் சேர்க்கை விகிதம் 51.4 விழுக்காடு என்ற அளவுக்கு மிக உயர்ந்திருக்கிறது!

தமிழ்நாட்டின் மாணவர் சேர்க்கை விகிதம் தேசிய அளவிலான சராசரியை விட இரண்டு மடங்கு அதிகம் என்பது உயர்கல்வியில் தமிழ்நாடு நிகழ்த்தியுள்ள சாதனை.

அதுமட்டுமல்ல, 17 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற விகிதத்தில் தமிழ்நாடு முன்னணி மாநிலமாக விளங்குகிறது.

தமிழ்நாட்டில் 1,553 கல்லூரிகள் 52 அரசு மற்றும் தனியார் பல்கலைக்கழகங்கள், 1,096 தொழிற்கல்வி நிறுவனங்கள் உயர்கல்வி அளித்து தமிழ்நாட்டில் கல்வி வளர்ச்சிக்குத் துணை நிற்கின்றன.

தொழிற்கல்வியிலும், மருத்துவக் கல்லூரியிலும் மாணவர் சேர்க்கையில் 7.5 விழுக்காடு இட ஒதுக்கீடு செய்து, சாதாரண நிலையில் உள்ளவர்களும் சிறந்த நிலைக்கு உயர வழிவகுத்துக் கொடுத்திருக்கிறது தமிழ்நாடு அரசு.

அதோடு, தொழிற்கல்வி மற்றும் மருத்துவப் படிப்பில் சேர "நுழைவுத்தேர்வு" கட்டாயம் என்பதை ஒழித்துக்கட்டி, கிராமப்புற, பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு பெரும் அளவில் மேற்படிப்பில் இடம் கிடைக்கச் செய்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

பெண்ணடிமைத்தனத்தை ஒழித்துப் பெண்கள் சமூக ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் விடுதலை பெற்றவர்களாகத் திகழ வேண்டும் என்பதே திராவிட இயக்க வழி வந்த நமது கொள்கை. அந்த விடுதலையை அடைவதற்குக் கல்வியே திறவுகோல். ஆகவே, பெண் கல்வியிலும் தமிழ்நாடு அரசு பெண்களுக்கென்று தனிக் கல்லூரிகள், இருபாலர் கல்லூரிக்கு அனுமதி, பெண்களுக்கென்று தனிப் பல்கலைக்கழகம், இளநிலை, முதுநிலை மற்றும் முனைவர் படிப்பில் பெண்களுக்கு உதவித்தொகை, அகில இந்தியப் பணிகளுக்கு தேர்ச்சி பெற பயிற்சி தரும் மையங்கள், வேலைவாய்ப்பிற்கான கணினிப் பயிற்சி, முனைவர் ஆராய்ச்சிப் படிப்பிற்கான உதவித்தொகை போன்ற மாணவியர்களுக்கான சிறப்புத் திட்டங்களை தமிழக அரசு செயல்படுத்தி பெண்ணுரிமைக்கு முன்னுரிமை தந்து நாட்டிற்கே முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது.

நான் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் பல்வேறு திட்டங்களை, அறிவிப்புகளை 2021–2022ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் வெளியிட்டிருந்தோம். அதில், இத்தனை ஆண்டுகளும் இல்லாத வகையில், உயர்கல்வித் துறைக்கு ரூ.5,369 கோடி நிதி ஒதுக்கி, திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. மாநிலத்தில் உயர்கல்வி சென்றடையாத பகுதிகளுக்கும் அடுத்த பத்தாண்டுகளில் அரசால் விரிவுபடுத்தப்பட உள்ளது. அதிகளவிலான நிறுவனங்கள் தேசிய மதிப்பீடு மற்றும் தரச்சான்றுக் குழுவின் தரநிலையை அடைவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

தாய்மொழிக் கல்வியினை மேம்படுத்தும் பொருட்டு, தொடக்கத்தில் நான்கு பொறியியல் கல்லூரிகளில் இளநிலை வகுப்புகள் தமிழில் நடப்பதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அத்தோடு, தொழிற்கல்வியிலுள்ள பாடநூல்களைத் தமிழில் மொழிமாற்றம் செய்ய 20 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

தற்போது, பல்கலைக்கழகங்கள் பெரும்பாலும் பட்டதாரிகளை உருவாக்குவதும், முனைவர் பட்டங்களை வழங்குவதும், தேசிய மற்றும் உலகளவில் தரவரிசை பெறுவதுமாகவும் பணியாற்றி வருகின்றன. ஆனாலும் கூட, இந்திய உயர்கல்வியின் முக்கியமான

குறிக்கோளான அனைவருக்கும் வேலை தரும் கல்வி வழங்குவதில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டிய மிகப்பெரிய கடமை உங்களுக்கு இருப்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

திறன் சார்ந்த கல்வியும் பயிற்சியும் பாடத்திட்டங்களில் கட்டாயப்படுத்துதல் அவசியம். அதனால்தான், மார்ச் 1 அன்று, 'நான் முதல்வன்' திட்டத்தை மாணவச் செல்வங்களுக்காகத் துவங்கி வைத்தேன்.

பல்கலைக்கழகத்தின் தரத்தையும் செயல்பாட்டையும் வடிவமைப்பதில் முக்கியப் பங்காற்றுவோர் துணைவேந்தர்கள்தான். நீங்கள் அனைவரும் அறிவியல்பூர்வமான சிந்தனைகளை மாணவர்களிடம் வளர்த்தெடுக்கும் வகையில் உங்கள் பணியை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், கல்வி என்பது ஒத்திசைவுப் பட்டியலில் இருப்பதை வைத்து, ஒன்றிய அரசு தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி பிற்போக்குக் கருத்துக்களைப் பாடத்திட்டங்களில் புகுத்தும் போக்கும் கவலைக்குரியதாக உள்ளது. கல்வி முழுமையாக மாநிலப் பட்டியலுக்கு மாற்றப்படுவதே இதற்குச் சிறந்த தீர்வாக அமையும்.

மாநிலத்தில் உள்ள கல்விக் கொள்கையின் அடிப்படையில் பல்கலைக்கழங்கள் செயல்பட வேண்டும் என்பதே இங்குள்ள மக்களின் விருப்பம். அதனை உணர்ந்து பல்கலைக்கழகத் துணைவேந்தர்கள் செயல்பட வேண்டும்.

இந்த மாபெரும் மாநாடு தன் நோக்கங்களில் வெற்றி பெறவும் அதன்மூலம் நமது நாட்டின் உயர்கல்வி மேன்மை பெற வேண்டுமெனவும் வாழ்த்துகிறேன்.

நன்றி, வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்,*
தென் மாநிலப் பல்கலைக்கழக துணைவேந்தர்கள் மாநாட்டில்
*காணொலிக்காட்சி வாயிலாக ஆற்றிய உரை – **11.03.2022***

மாவட்டத்தை வளர்ச்சிப் பாதையில் அழைத்துச் செல்லும் வழிகாட்டியாக செயல்பட வேண்டும்

அனைவருக்கும் வணக்கம்.

இன்று காலை முதல் நீங்கள் தெரிவித்திருக்கக்கூடிய நல்ல கருத்துக்கள், ஆலோசனைகள் மற்றும் கள ஆய்வில் சந்திக்கும்

சில குறிப்பிட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வு காண நீங்கள் அரசிடம் கோரப்படும் உதவி ஆகிய அனைத்தையும் கவனத்தோடுக் கேட்டேன்.

அனைத்து மாவட்ட ஆட்சியர்களும் சிறந்த முறையிலே தங்கள் மாவட்டங்களில் அரசின் திட்டங்களை மக்களுக்குக் கொண்டு சென்று சிறப்பாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறீர்கள், இதற்காக உங்கள் அனைவருக்கும் முதற்கண் என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். நீங்கள் ஒவ்வொருவரும் பேசும் பொழுது குறிப்பிட்ட ஒரு பிரச்சினையையும் அதற்கான தீர்வுகளையும் தெரிவித்திருக்கிறீர்கள். அவற்றை, சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்களும் அரசுச் செயலாளர்களும் கவனமுடன் கருத்தில்கொண்டு தலைமைச் செயலாளருடன் ஆலோசித்து உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மக்களுக்குப் பல்வேறு நலத்திட்டங்களை பல்வேறு துறைகள் மூலமாக நிதிகளை ஒதுக்கி அரசு செயல்படுத்தினாலும், அது சில குறிப்பிட்டப் பகுதிகளில் தேவையான தாக்கத்தினை ஏற்படுத்தவில்லை என்று நமக்குத் தெரிய வருகிறது. எனவே, நீங்கள் எந்தெந்தத் துறைகளில், எந்தெந்தத் திட்டங்களை செயல்படுத்துவதில் உங்கள் மாவட்டம் சற்று பின்தங்கி உள்ளதோ அவற்றில் நீங்கள் கூடுதல் கவனம் செலுத்தி உங்கள் மாவட்டத்தை மாநிலத்தின் முன்னோடி மாவட்டங்களில் ஒன்றாக ஆக்கிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாவட்ட ஆட்சித் தலைவர்களாகிய நீங்கள் உங்கள் மனதில் கொள்ளவேண்டிய ஒன்றை சொல்ல விரும்புகிறேன். அதாவது மாவட்ட நிருவாகத்தின் முன்னுரிமைகள், Priorities என்று சொல்வார்கள், மாநில அரசின் முன்னுரிமைகளோடு ஒன்றியதாக இருக்கவேண்டும். மாநில அரசின் பரந்துபட்ட நோக்கமாக இருக்கக்கூடிய “inclusive growth” என்னும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியானது திட்டச் செயலாக்கத்திலும் வெளிப்பட

வேண்டும். குறிப்பாக விளிம்புநிலை மனிதர்கள், சிறுபான்மையினர், பட்டியலின பழங்குடிமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் ஆகியவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் நீங்கள் முன்னுரிமை அளிக்க வேண்டும்.

மாற்றுத்திறனாளிகள் துறையில் புதிய அடையாள அட்டை வழங்கும் பணிகளுக்கு நீங்கள் முக்கியத்துவம் அளிக்கவேண்டும். விடுபட்டுள்ள மாற்றுத்திறனாளிகளைக் கண்டறிய வேண்டும். இன்று காலை சிவகங்கை மாவட்ட ஆட்சியர் தெரிவித்ததுபோல, ஒவ்வொரு ஒன்றியத்திலும் ஒருங்கிணைந்த சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு அன்றைய தினமே அடையாள அட்டை வழங்க ஏற்பாடு செய்யவேண்டும். அதுமட்டுமல்ல, பிற துறைகள் மூலமாக அவர்களுக்கு வழங்கப்படும் திட்டங்களை ஒன்றிணைத்து அங்கேயே அதற்கான முடிவுகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

நல்ல திட்டங்களையும், வளர்ச்சிப் பணிகளையும் நீங்கள் மேற்கொள்ளும் அதே சமயத்தில், மக்களை உடனடியாக பாதிக்கக்கூடிய சில குறிப்பிட்ட அடிப்படை அரசுப் பணிகளிலும், உதாரணமாக, பட்டா மாறுதல், சான்றிதழ்கள் வழங்குதல், ஆக்கிரமிப்புகளை அகற்றுதல், அதிலும் குறிப்பாக நீர்நிலைப் புறம்போக்குகளில் ஆக்கிரமிப்புகளை அகற்றுதல் போன்றவற்றில் நீங்கள் தீவிர கவனம் செலுத்த வேண்டும்.

நான் முன்பே தெரிவித்தபடி, “Inspection” என்று சொல்லக்கூடிய நேரடி ஆய்வுகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு மருத்துவமனைகள், பள்ளிகள், மாணவர் விடுதிகள், அங்கன்வாடிகள், நியாயவிலைக் கடைகள் ஆகியவற்றை நீங்கள் கட்டாயம் தொடர்ந்து நேரம் கிடைக்கின்றபோதெல்லாம் ஆய்வு செய்யவேண்டும். அப்போதுதான் மக்களுக்கு, மாணவர்களுக்கு, எளியோர்களுக்கு என்ன வகையான சேவை எந்தத் துறையால் என்ன தரத்தில் வழங்கப்படுகிறது என்பதை நீங்கள் உணர முடியும், குறைபாடுகள் இருந்தால் அதையும் திருத்த முடியும்.

நம் மாநிலத்தில் குழந்தைகளிடையே ஊட்டச்சத்து குறைபாடு காணப்படுகிறது. உதாரணமாக, தருமபுரி மாவட்டத்தில் ஊட்டச்சத்து குறைபாடுள்ள குழந்தைகள் 36 சதவிகிதம் என்று ஒரு புள்ளிவிபரம் சொல்கிறது. ICDS என்னும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தை நீங்கள் கவனமுடன் செயல்படுத்த வேண்டும். தமிழ்நாடு பொருளாதார அளவில் இந்தியாவில் இரண்டாவது இடத்தில் இருந்தாலும் ஊட்டச்சத்து பட்டியலில் 19ஆவது இடத்தில் உள்ளது என்பதை நான் மிகுந்த வருத்தத்துடன் உங்களுக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதனை சரி செய்யவேண்டியது நம் அனைவரின் கடமையாகும்.

அரசாங்கத்திற்கும் மக்களுக்கும் ஒரு இணைப்புப் பாலமாக விளங்கும் நீங்கள், உங்கள் மாவட்டத்தை வளர்ச்சிப் பாதையில் அழைத்துச் செல்லும் ஒரு வழிகாட்டியாகச் செயல்பட வேண்டும். பேரிடர் காலங்களில் மக்களைக் காப்பதற்கும், அந்த நேரத்தில் எடுக்கவேண்டிய நடவடிக்கைகளை முன்னதாகவேத் திட்டமிட்டு பணிகளை மேற்கொள்ளவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, இறந்தவர்களின் உடல்களை மயானங்களுக்கு எடுத்துச் செல்ல ஒரு சிறிய நடைபாலம் இல்லை என்ற நிலை கடந்த வெள்ளத்தின்போது தொலைக்காட்சி வாயிலாக சில மாவட்டங்களில் நாம் பார்த்தோம், வேதனைப்பட்டோம். அதே காரணத்தால், பள்ளிக் குழந்தைகள் இடுப்பளவு தண்ணீரில் பள்ளிக்குச் செல்லும் நிலையையும் பார்த்தோம். இதுபோன்ற இடங்களை நீங்கள் பட்டியலிட்டு அக்குறைகளைப் போக்க வேண்டும் அதுதான் முக்கியமான முழுமையான நல்ல நிருவாகமாக அமைந்திட முடியும்.

அடுத்தபடியாக, இரண்டு முக்கியத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கான அரசாணைகள் சமீபத்தில் வெளியிடப்பட்டுள்ளது. ஊரக வளர்ச்சித் துறையின் மூலமாக "அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்" மற்றும் வேளாண்மைத் துறையின் மூலம் "கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம்", இந்த இரண்டு பெரும் திட்டங்களும் இலட்சக்கணக்கான கிராம

மக்களைச் சென்றடையும் திட்டங்களாக இது அமைந்திருக்கிறது. அதே சமயம், பல்வேறு துறைகளின் தேவைகளை ஒன்றிணைத்து நிறைவேற்றவேண்டிய திட்டமும் ஆகும். இந்த இரு திட்டங்களையும் நீங்கள் முன்னுரிமை கொடுத்து முன்னெடுத்து வெற்றிபெறச் செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இத்தருணத்தில் மற்றுமொரு விஷயத்தையும் குறிப்பிட விரும்புகிறேன். அது உங்கள் மாவட்டத்தின் ஆண்டுக் கடன் திட்டம் என்னும் “Annual Credit Plan” முறையாக செயல்படுத்துவதை நீங்கள் கண்காணித்து, மாதாந்திர வங்கியாளர் கூட்டத்தை நடத்தி கல்விக் கடன், சுயஉதவிக் குழுக்களுக்கான கடன், விவசாயிகளுக்கு வழங்கப்படும் கடன், தொழில் முனைவோர்களுக்கான கடன் ஆகியவை முறையாக மாவட்டத்தில் அனைத்துப் பகுதிகளிலும் திட்ட இலக்கின்படி வழங்கப்படுகிறதா என்பதை உறுதிசெய்ய வேண்டும்.

இப்படி ஒவ்வொரு திட்டத்தினையும் நீங்கள் நுணுக்கமாகக் கண்காணித்து, துறைகளை ஒருங்கிணைத்து செயல்படுத்துவதன் மூலம் இலட்சக்கணக்கான குடும்பங்கள் பலன் பெறுவதோடு மாநிலமும் மேம்படும். முழுமனதோடு, முழுஅர்ப்பணிப்பு உணர்வோடு நீங்கள் அனைவரும் இம்முன்னேற்றப் பணியில் ஈடுபடுவீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அவ்வாறு நீங்கள் பணியாற்ற உங்களுக்கு இந்த அரசு எல்லா வகையிலும் உதவியாக இருக்கும் என்பதை இத்தருணத்தில் தெரிவித்து, என் உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி, வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

திரு. ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள்,*

மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாடு – 2022

இரண்டாம் நாள் கூட்ட நிறைவில் ஆற்றிய உரை – 11.03.2022

பசுமைச் சூழலை உருவாக்குவது மனித குலத்தின் அத்தியாவசியத் தேவை

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே!

தலைமைச் செயலாளர் உள்ளிட்ட அரசு உயர் அதிகாரிகளே!

அரசுத் துறையைச் சார்ந்திருக்கக்கூடிய அதிகாரிகளே!

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்!

மாநில முன்னேற்றத்திற்கு நிலையான வளர்ச்சி எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பது உங்கள் அனைவருக்கும் நன்கு தெரியும். அதேபோல், சுற்றுச்சூழல் பற்றிய அக்கறையும் உங்கள் அனைவருக்கும் அதிகமாக இருக்கும் என நான் உளமார நம்புகிறேன்.

இந்த அரசைப் பொறுத்தவரைக்கும், தொழில் வளர்ச்சி, சுற்றுச்சூழல் இரண்டையும் ஒரே தராசில் இருக்கக்கூடிய இரு தட்டுகள் போலவே கருதுகிறது. இன்று புவி வெப்பமாகுதல் நாட்டு அளவில் அல்ல, உலக அளவில் அதிகமாகப் பேசப்படுகிறது. அதற்காக இலக்குகள் நிருணயிக்கப்படுகிறது. வனப்பரப்பை அதிகப்படுத்துவது, பசுமைச் சூழலை உருவாக்குவது இன்றைய மனித குலத்திற்கு மட்டுமல்ல, நம் வருங்கால தலைமுறைக்கும் அத்தியாவசியமாகத் தேவைப்படுகிறது.

என்னைப் பொறுத்தவரை எதிர்க்கட்சியாக இருந்தபோதும் சரி, சுற்றுச்சூழலை மனதில் வைத்துக்கொண்டு அப்போதே நாங்கள் மரக்கன்றுகள் எல்லாம் நட்டோம் என்பது உங்களுக்கு நன்றாகத் தெரிந்திருக்கும். அதை மனதில் வைத்துக்கொண்டு தான், இந்த அரசு பொறுப்பேற்றவுடன் முதலில் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை என்கின்ற பெயரை இதற்காகச் சூட்டினோம். அத்துடன் நிற்காமல் பிளாஸ்டிக்கை ஒழிக்க ‘மீண்டும் மஞ்சப்பை’ திட்டத்தைத் துவக்கிவைத்தோம். மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தில் நேர்மையான, வெளிப்படையான அனுமதி முறைக்கு வித்திட்டிருக்கிறோம்.

இப்போது முதல் முறையாக மாவட்ட ஆட்சித் தலைவரோடு சேர்ந்து மாவட்ட வன அலுவலர் மாநாட்டையும் நடத்திக் கொண்டிருக்கிறோம். இன்றைக்கு சுற்றுச்சூழல் தாக்கம் மதிப்பீடு வரைவு அறிக்கை 2020 குறித்தப் பல்வேறு விவாதங்கள் நடைபெற்று வருகிறது. ஆகவே, தொழில், சுற்றுச்சூழல் இரண்டும் சமுதாயத்தினுடைய சம நண்பர்கள் என்ற அளவிலே முன்னெடுத்துச் செல்லத் தேவையான ஆக்கப்பூர்வமான ஆலோசனைகளை, தொழில் துவங்க அனுமதிக்கப்படும் அனுமதிகளை இன்னும் விரைவுபடுத்தும் ஆலோசனைகளை நீங்களெல்லாம் இங்கே வழங்கிட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். உங்கள் கருத்துக்களை அறிந்துகொள்ள நான் மிகுந்த ஆர்வமாக இருக்கிறேன் என்பதை மட்டும் என்னுடைய தொடக்க உரையாக சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள்,*
மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் வனத்துறை அலுவலர்கள்
மாநாட்டில் ஆற்றிய தொடக்க உரை – 12.03.2022

அரசியலும், அரசு இயலும் இணைந்து வளமான தமிழகத்தை அமைப்போம்

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே!

தலைமைச் செயலாளர் அவர்களே!

அரசுச் செயலாளர்களே!

மாவட்ட ஆட்சியர்களே!

வனத்துறை உயர் அதிகாரிகளே,

அரசுதுறை உயர் அலுவலர்களே,

ஊடகம் மூலமாக இணைந்திருக்கும் காவல்துறை இயக்குநர் அவர்களே! காவல்துறை உயர் அலுவலர்களே, மாவட்டக் காவல்துறை கண்காணிப்பாளர்களே!

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்!

கடந்த மூன்று நாட்களாக நடைபெற்ற

மாவட்ட ஆட்சியர்கள், காவல்துறைக் கண்காணிப்பாளர்கள், வனத்துறை அதிகாரிகள் மாநாடு மிகுந்த மனநிறைவை அளிப்பதாக அமைந்திருக்கிறது.

எல்லோரும் மனம் திறந்து பல்வேறு கருத்துக்களைச் சொல்லி இருக்கிறீர்கள்.

அரசுக்குப் பல்வேறு ஆலோசனைகளை வழங்கியிருக்கிறீர்கள்.

தனிப்பட்ட முறையில் சொல்றதா இருந்தா

இந்த ஆட்சி சரியான திசையை நோக்கித்தான் சென்று கொண்டு இருக்கிறது என்பதை,

உங்கள் மூலமாக நான் அறிந்துகொண்டேன்.

இந்த ஆட்சி மக்களோட பல்வேறு தேவைகளை நிறைவேற்றி வரக்கூடிய, அந்த அடிப்படையிலே, உங்களோட கருத்துக்களின் மூலமாக நான் அறிந்துகொண்டு இருக்கிறேன்.

நாங்கள் உருவாக்கிய திட்டங்கள் மக்களுக்கு பயனளிக்கும் திட்டங்களாக அமைந்திருக்கின்றன என்பதை,

உங்களோட எண்ணங்கள் மூலமாக நான் தெரிந்து கொண்டேன்.

சுருக்கமா சொல்வதாக இருந்தால்,

உங்களின் மூலமாக தமிழ்நாட்டின் முழு நிலைமையை நான் அறிந்து கொண்டு இருக்கிறேன்.

எனவே, அரசின் சார்பில் மட்டுமல்ல,

தனிப்பட்ட முறையிலும் உங்கள் அனைவருக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முதலமைச்சர் நாற்காலியில் அமர்ந்திருப்பதால்

எல்லாம் என்னால்தான் அப்படி என்று நினைக்கின்ற அளவிற்கு நான் நிச்சயமாக இருக்கமாட்டேன், இருக்கவும் இல்லை.

என்னைத் தொடர்ந்து அமைச்சர்கள் இருக்கிறார்கள், துறைகளின் செயலாளர்கள் இருக்கிறார்கள், மாவட்ட ஆட்சியர்கள், காவல்துறைக் கண்காணிப்பாளர்கள், ஆகிய நீங்களும் இருக்கிறீர்கள், நாம் அனைவரும் சேர்ந்ததுதான் இந்த அரசு.

இத்தனை உயிர்கள் சேர்ந்துதான், அரசுக்கு நாம் உயிர்கொடுத்துக் கொண்டு இருக்கிறோம்.

நாம் அனைவரும் சேர்ந்துதான் மக்களுக்கு உயிராய், உணர்வாய் இருந்து வருகிறோம்.

மக்கள் – நம்மை நம்பி ஆட்சிப் பொறுப்பை ஒப்படைச்சிருக்காங்க.

மக்கள் – நம்மை நம்பி அதிகாரத்தையும் ஒப்படைச்சிருக்காங்க.

மக்கள் – நம்மை நம்பிதான் கோட்டையை ஒப்படைச்சிருக்காங்க.

கடைக்கோடி மனிதனோட கவலையையும் தீர்க்குற அரசா ஒரு அரசு அமையணும்; அப்படித்தான் இந்த அரசு அமைஞ்சிருக்கு.

அத்தகைய அரசுக்கு உறுதுணையா இருக்கக்கூடிய மாவட்ட ஆட்சியர்கள், காவல்துறைக் கண்காணிப்பாளர்கள், மாவட்ட வன அலுவலர்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றியை மீண்டும் ஒருமுறை தெரிவித்துக்கொள்கிறேன்.

இது நமது அரசு என்ற எண்ணத்தோடு, திறந்த மனத்தோடு, நீங்க உங்க கருத்துக்களை இந்த மூன்று நாட்களும் எடுத்து சொல்லியிருக்கிறீர்கள்.

சில முக்கியமான ஆலோசனைகளை மட்டும், நான் இங்க நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கேன்.

அரசோட முக்கிய திட்டங்களைச் செயல்படுத்துறது குறித்தும்,

சட்டம் ஒழுங்கைக் காப்பது குறித்தும்,

உங்களோட ஆலோசனைகள் அதிகமாக அமைந்திருந்தது.

✶ சட்டம் ஒழுங்குப் பிரச்சினை அவ்வப்போது ஏற்படுவதாகவும், அதனைக் கட்டுப்படுத்தி விடுவதாகவும் காவல்துறை இயக்குநர் அவர்கள் சொன்னார்.

கட்டுப்படுத்துவது பாராட்டுக்குரியதுதான். ஆனால், சட்டம் ஒழுங்குப் பிரச்சினை ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று உங்கள் எல்லோரையும் கேட்டுக் கொள்கிறேன்.

✶ அதேபோல் சட்டம் ஒழுங்கு காவல்துறை கூடுதல் இயக்குநர் அவர்கள் பேசும்போது, குற்றங்கள் குறைந்துள்ளதைப் பற்றிக் குறிப்பிட்டார். அதோடு அதன் விழுக்காட்டையும் எடுத்துச் சொன்னார்.

குற்றங்களோட விழுக்காட்டைக் குறைப்பது அல்ல, குற்றங்களே நடக்காத சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்பதுதான் உங்கள் எல்லாரையும் நான் கேட்டுக்கொள்ள விரும்புவது.

✶ சாதி மோதல்கள் குறித்து நெல்லை மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் இங்கே விரிவாகப் பேசினார்.

சாதி மோதல்களை, சட்டம் ஒழுங்கு பிரச்சினையாக மட்டும் பார்க்காதீர்கள் என்று நான் கேட்டுக்கிறேன். ஏனென்றால், அது சமூக ஒழுங்குப் பிரச்சினை.

கிராமங்களில் இந்தப் பிரச்சினை அதிகமாக உருவாவதாக எஸ்.பி. அவர்கள் இங்கே பேசும்போது சொன்னார்.

படிக்காத இளைஞர்களால் மட்டுமல்ல,

படித்து முடித்துவிட்டு வேலை கிடைக்காமல் ஊரில் இருக்குற ஒரு சிலராலும், இதுபோன்ற மோதல்கள் உருவாகக் கூடிய சூழ்நிலை உருவாகிறது.

இதுபோன்ற இளைஞர்களைக் கண்டறிந்து மனமாற்றம் செய்யணும். அவர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கித் தரணும். ஆக்கப்பூர்வமான வழிகளில், விளையாட்டுப் போட்டிகளில், ஊர்க்காவல் படைகளில் என அவர்களை நல்வழிப்படுத்த வேண்டும்.

பல்வேறு துறைகளை ஒருங்கிணைத்து செயல்படுறதா நெல்லை எஸ்.பி. சொன்னார். அதேபோல், மற்ற மாவட்ட நிருவாகமும் செயல்படணும்.

✶ இதேபோல், மத மோதல்கள் குறித்து, கன்னியாகுமரி மாவட்டக் கண்காணிப்பாளர் பேசினார்.

மத மோதல்கள் குறித்து கோவையில் இயங்குவதைப்போல சிறப்புப் பிரிவு அனைத்து மாவட்டங்களிலும் அமையணும்னு அவர் சொன்ன ஆலோசனை நிச்சயமாக பரிசீலிக்கப்படும்.

ஒரு காலத்துல மதம் என்பது, மதம் சம்பந்தப்பட்டதா மட்டுமே இருந்தது. இப்போது அது அரசியல் நோக்கமுள்ளதாக சிலரால் மாற்றப்பட்டுவிட்டது.

எனவே, அரசியல் உள்நோக்கத்தோடு மத மோதல்களை திட்டமிட்டு உருவாக்குகிறார்கள், இதை தடுத்தாக வேண்டும்.

✶ சாதி மோதல்களுக்கும், மதப் பிரச்சினைகளுக்கும் சமூக வலைத்தளங்கள் முக்கியமான காரணமாக இருக்குறதா எல்லோரும் சொன்னீர்கள். அது உள்ளபடியே முழுமையான உண்மைதான்.

இது நவீன தொழில்நுட்ப யுகம். இந்தத் தொழில்நுட்பத்தை நல்லதுக்கும் பயன்படுத்தலாம், அழிவுக்கும் பயன்படுத்தலாம்.

சாதி, மத வக்ரம் பிடிச்சவங்க அழிவுக்குப் பயன்படுத்தி,

சமூகத்துல குழப்பம் ஏற்படுத்தப் பாக்குறாங்க. இவங்களை முளையிலேயே நாம் களையெடுக்க வேண்டும்.

இப்படிப்பட்ட பதிவுகளை போடுறவங்க மேல உடனடியாக நடவடிக்கை எடுத்தாக வேண்டும்.

சோஷியல் மீடியா சென்டருக்கு புதிய அலுவலகம் தேவை என்ற திருவள்ளூர் எஸ்.பி.யின் கோரிக்கையை நிச்சயமாக நிறைவேற்றுவோம்.

ஒன்றிய அரசில் இருப்பதைப் போல 'National Media Analytics Center', 'Social Media Lab' – ஆகியவற்றை உருவாக்க வேண்டும் என்று சொன்னார்.

சோஷியல் மீடியா மூலமா நடக்குற இந்த வன்மங்களுக்கு,

எல்லா வகையிலும் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

தனியா ஒரு ஆலோசனைக் கூட்டத்தை காவல்துறை அதிகாரிகள் நடத்தி, அறிக்கை தாக்கல் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

- ✶ வேலூர் மாவட்ட கண்காணிப்பாளர் பேசும்போது, கைதிகளை வீடியோ கான்பரன்ஸ் மூலமாக ஆஜர் செய்தால் நேரமும் மிச்சம், செலவும் மிச்சம் என்று சொன்னார். அதனைச் செயல்படுத்தலாம். நல்ல யோசனை.
- ✶ நாகை ஆட்சியரும், கண்காணிப்பாளரும் சொன்ன சுருக்குமடி வலை பிரச்சினை குறித்து,

அரசு அதிகாரிகள் மட்டத்துல முழுமையான ஆய்வு நடத்தி இதுகுறித்து தீர்வு காணப்பட வேண்டும்.

- ✶ போக்சோ வழக்குகள் அதிகமாகி வருவது குறித்து நாகை மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் பேசினார். அங்கு மட்டுமல்ல, பல்வேறு மாவட்டங்களில் இருந்தும் இதுபோல் செய்திகள் வெளியாகின்றன.

ஏதோ இப்போதுதான் அதிகம் நடக்கிறது என நினைக்க வேண்டாம், இப்போதுதான் துணிச்சலாக வந்து புகார்களைத் தருகிறார்கள்.

இதற்கு உரிய நீதி கிடைக்கச் செய்வது உங்கள் தலையாயக் கடமையாகும். குறிப்பாக, இத்தகைய வழக்குகளில் தாமதங்கள் இருக்கக்கூடாது என்று நான் எதிர்பார்க்கிறேன்.

- ✶ தொழில் நிறுவனங்கள் அதிகம் இருக்கும் பகுதிகளில் ரவுடிகள் அதிகம் இருக்குறதா தாம்பரம் ஆணையரும், காஞ்சிபுரம் எஸ்.பி.யும் சொன்னார்கள்.

அத்தகைய இடங்களில் சட்டம் ஒழுங்கை காக்க வேண்டியது மிகமிக முக்கியம்.

அதேபோல், தொழிற்சாலைகளில் பணிபுரியும் உள்ளூர் மற்றும் வெளி மாநிலத் தொழிலாளர்களின் விவரங்களை வருவாய்த் துறை, காவல்துறை மற்றும் தொழிலாளர் நலத்துறை இணைந்து டாக்குமெண்ட் செய்ய வேண்டும்.

அமைதியான மாவட்டங்களில்தான், அதிகமான நிறுவனங்கள், தொழில்கள் தொடங்க முன்வருவார்கள்.

கல்குவாரிகளால் ரவுடிகள் வளர்கிறார்கள்னு தாம்பரம் ஆணையர் குறிப்பிட்டுச் சொன்னார்.

கல்குவாரி தொழிலால் ரவுடிகள் வளர மாட்டாங்க. தொழில் போட்டி காரணமாக அப்படி உருவாகலாம்.

அவங்களுக்கு அதிகாரிகள் உடந்தையாக இருக்கக்கூடாது.

அதேபோல் ரவுடிகளில் வடசென்னை, மத்திய சென்னை என்று பிரிவினை செய்வதும் தவறானது.

ரவுடிகளை இடம், சாதி, மதம் என்று அடையாளப்படுத்தக் கூடாது.

குடிசைப் பகுதியில் கஞ்சா விற்பனை நடக்குறதா அமைச்சர் சேகர் பாபு அவர்கள் பேசுகின்றபோது இங்கே சொன்னார். இதுபோன்ற அடையாளப்படுத்தல்கள் கூடாது.

ரவுடிகளைக் கட்டுப்படுத்த ‘வெளிச்சம்’, ‘உதயம்’, ‘விடியல்’ ஆகிய திட்டங்களை அமல்படுத்தி வருவதாக தாம்பரம் ஆணையர் சொன்னார்.

அதனை மற்றவர்களும் பின்பற்றலாம்.

✶ சிறார் திருமணங்களைத் தடுக்கணும்னு தஞ்சாவூர் எஸ்.பி. சொன்னார்.

சில குறிப்பிட்டப் பகுதிகளில் மட்டும்தான் அது நடக்கிறதுன்னு நினைக்கிறேன். அதனையும் முழுமையாகத் தடுக்க சமூகநலத்துறையும், மாவட்ட ஆட்சியர்களும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

State-wide sexual offenders registry உருவாக்கி சம்பந்தப்பட்டவர்களை காலப்போக்கில் எந்தப் பணிகளுக்கும் சென்றுவிடாமல் தடுக்க வேண்டும் என்றும் அவர் சொன்னது சரியானதுதான்.

தவறு செய்த யாரும் தண்டனையில் இருந்து தப்பிவிடக்கூடாது.

- ✶ கடலூர் வெள்ளப் பாதிப்புகள் குறித்தும், அது இனி ஏற்படாமல் செய்ய வேண்டியப் பணிகள் குறித்தும் அரசுக்கு அறிக்கை அனுப்பி இருப்பதாக கடலூர் மாவட்ட ஆட்சியர் சொன்னார்.

இனி அத்தகைய வெள்ளச் சூழல் ஏற்படாத வகையில் திட்டங்களைத் தீட்டியாக வேண்டும்.

சாலை விபத்துக்கள் குறைக்கப்பட வேண்டும். உயிரிழப்புகள் தவிர்க்கப்பட வேண்டும். இதற்கு மாவட்ட ஆட்சியர்களும், காவல் கண்காணிப்பாளர்களும் முன்னுரிமை அளிக்க வேண்டும்.

அதேபோல், பட்டாசு மற்றும் தீ விபத்துக்களைத் தடுப்பதிலும், அதனுடைய பாதிப்புகளைக் குறைப்பதிலும் கவனம் செலுத்த வேண்டும்.

- ✶ போதைப் பொருள்களைக் கட்டுப்படுத்துறது குறித்து நாமக்கல் எஸ்.பி. உள்பட பலரும் பேசினார்கள்.

பள்ளி மற்றும் கல்வி நிறுவனங்கள் அருகே தீவிர கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

NSS மற்றும் NCC மாணவர்களுடன் இணைந்து, போதைப் பொருளுக்கு எதிரான செயல்பாடுகளைக் காவல்துறை மேற்கொள்ளலாம்.

- ✶ காவல்துறை நுண்ணறிவுப் பிரிவு கூடுதல் இயக்குநர் அவர்கள் பேசும்போது,

உள்நாட்டுப் பாதுகாப்பு குறித்து பல்வேறு தகவல்களைக் கூறினார்.

கடலோர மாவட்டங்களைக் கண்காணிப்பதும், தடை செய்யப்பட்ட இயக்கத்தினர் நம் மாநிலத்துக்குள் ஊடுருவி விடாமல் தடுப்பதும் மிகமிக முக்கியமானதாகும்.

அதேபோல், மத அடிப்படைவாதம் குறித்தும் இங்கு கவலை தெரிவிக்கப்பட்டது.

இப்படி ஒட்டுமொத்தமாக எல்லாரும் அமைதியை நிலைநாட்டுவதற்காகப் பேசி இருக்கிறீர்கள்.

அச்சமில்லாத தமிழ்நாட்டை உருவாக்கப் பேசி இருக்குறீங்க.

- ✶ குற்றவாளிகளுக்கு தண்டனை மட்டும் பெற்றுத்தரும் துறையா இல்லாமல்,

குற்றவாளிகள் உருவாகாமல் தடுக்குற துறையா, காவல்துறை மாற வேண்டும் என்று நான் ஆசைப்படுகிறேன், விரும்புகிறேன். உங்களோட எண்ணம் அதற்கேற்ற வகையில் வெற்றிபெற வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

அதேபோல், அரசுத் துறைகளின் சார்பில் நடைபெற்று வரும் திட்டங்கள் குறித்து, அரசுத் துறை செயலாளர்கள், மாவட்ட ஆட்சியர்கள் விரிவாக விளக்கினார்கள்.

ஒரே மாதிரியான கருத்தைச் சொல்லாமல்,

ஒவ்வொருவரும் ஒரு துறையைப் பற்றிச் சொன்னது மிகச் சிறப்பாக இருந்தது.

- ✶ சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை,
- ✶ மக்களைத் தேடி மருத்துவம்,
- ✶ நமக்கு நாமே,
- ✶ சமத்துவபுரம்,

* அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்,
* அனைத்து கிராம வேளாண் வளர்ச்சித் திட்டம்,
* கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம்,
* பாதாள சாக்கடைத் திட்டங்கள்,
* நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டம்,
* கலைஞர் வீட்டுவசதித் திட்டம்

– ஆகிய முக்கிய திட்டங்கள் குறித்து ஆட்சியர்கள் அனைவரும் விவரங்கள் அளித்தீர்கள்.

உங்களோட நிருவாக எல்லைக்குள் இத்திட்டங்களை முழுமையாகவும், விரைவாகவும் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* உள்ளாட்சி செயல்பாடுகள் குறித்து கோவை மாவட்ட ஆட்சியர் பேசினார்.

பல்வேறு முன்னெடுப்புகள், கோவை மாநகராட்சியில் நடந்து வருவதையும் அவர் குறிப்பிட்டார்.

சிறுவாணி தண்ணீர் குறித்து அரசு விரைவில் முடிவுகள் எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

'முனிசிபல் அட்மினிஸ்ட்ரேஷன் அலுவலர்கள்' நியமனம் குறித்தும் ஆலோசித்து முடிவெடுப்போம்.

* திருச்சி மாவட்ட ஆட்சியர் பேசும்போது 'முதல்வரின் முகவரி' திட்டத்தைப் பற்றி பேசினார்.

வருவாய், ஊரக வளர்ச்சி, காவல்துறை ஆகிய மூன்று துறை தொடர்பான மனுக்கள்தான் 80 விழுக்காடு வருவதாகச் சொன்னார்.

இந்த மூன்று துறையும் மாவட்டங்களில் முறையாகச் செயல்பட்டால் மனுக்கள் வருவது நிச்சயம் குறையும்.

இதனை இந்த மூன்று துறையைச் சேர்ந்தவங்களும் உன்னிப்பாகக் கவனிக்கணும்.

✶ மாற்றுத்திறனாளிகள் நலன் குறித்து பேசிய மாவட்ட ஆட்சியர்,

அவர்களுக்கான தனியான வேலைவாய்ப்புகளை உருவாக்கணும்னு சொன்னார்.

புதிதாக அவர்களுக்காக தனியான வேலைவாய்ப்புகள் உருவாக்குறதவிட, இருக்குற வேலைவாய்ப்புகளில் எதில் எல்லாம் அவர்களைப் பங்கெடுக்கச் செய்ய முடியுமோ, அதில் எல்லாம் அவர்களை பங்கெடுக்கக்கூடிய சூழ்நிலையை நீங்கள் ஏற்படுத்தித் தரவேண்டும்.

நில அபகரிப்புகள், ஆக்கிரமிப்புகள் குறித்து சென்னை மாவட்ட ஆட்சியர் உள்பட பலரும் பேசினார்கள்.

நீர் நிலைகளில் குடியிருப்போருக்கு பட்டா வழங்குவது குறித்து இங்கு பெரிய விவாதமே நடந்தது.

நீர் இருந்தாலும், இல்லை என்றாலும் அது நீர் நிலைதான். எனவே, அது ஆக்கிரமிப்பு என்பதில் நீதிமன்றம் உறுதியாக இருக்கிறது.

நீர்நிலைகளைப் பராமரிக்காத காரணத்தால், வெள்ளக் காலங்களில் நாம் அடையும் பாதிப்புகளைத் தொடர்ந்து பார்த்துக் கொண்டு இருக்கிறோம்.

எனவே, நீர்நிலை ஆக்கிரமிப்பு என்பதை நாம் மிகுந்த கவனத்துடன் அணுக வேண்டும்.

- ✶ மாநிலத்தின் வனப் பரப்பினை 33 சதவிகிதத்திற்கு உயர்த்துவது குறித்து பல்வேறு நல்ல ஆலோசனைகளைச் சொன்னீர்கள். அதை எல்லாம் நடைமுறைப்படுத்த இந்த அரசு உரிய நிதி ஒதுக்கீடு செய்யும்.

- ✶ வனத்தீயினைக்கட்டுப்படுத்தவனத்துறையின்வீரர்களுக்கு உரிய தீத் தடுப்புக் கருவிகள் வழங்கப்படுவதோடு, துரதிருஷ்டவசமாக அதில் அவர்கள் உயிரிழக்க நேர்ந்தால், முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து அவர்களுக்கு 25 இலட்சம் ரூபாய் வழங்கப்படும்.

- ✶ வன விலங்குகள் சிகிச்சைக்காக கால்நடைப் பராமரிப்புத் துறையில் தனி அலகு ஏற்படுத்திப் பயிற்சிகள் அளிக்கப்படும்.

- ✶ கொரோனா காலத்தில் பெற்றோரை இழந்தவங்களுக்கு இழப்பீடு என்பது உடனடியாக வழங்கப்படணும். இதில் எந்த காரணத்தைக் கொண்டும் காலதாமதம் வேண்டாம் என உங்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன்.

- ✶ வருவாய் துறையும் தகவல் தொழில்நுட்பத் துறையும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்று சொல்லப்பட்டதை உள்ளபடியே நான் வரவேற்கிறேன்.

மாநகராட்சிகளிலும், நகராட்சிகளிலும், பகுதி சபை, வார்டு சபைக் கூட்டங்கள் நடத்தப்பட்டு மக்களின் குறைகள் களையப்படும்.

- ✶ குழந்தைத் திருமணங்கள் இருப்பதாக விழுப்புரம் ஆட்சியர் இங்கு தகவல் தந்தார். குழந்தைத் திருமணத்தை அனுமதிக்கக்கூடாது. அது தொடர்பாக அந்தக் குழந்தைகளே தகவல் தந்தார்கள் என்பது மகிழ்ச்சிக்குரியதாகும். ரத்தசோகை, சத்துக்குறைவான குழந்தைகளைக் கண்டறிய வாட்ஸ்அப் குழு தொடங்கி

இருப்பதாக அவர் சொன்னது உள்ளபடி அது வரவேற்கத்தக்கது.

- ✶ திருவண்ணாமலை மாவட்டத்தில் அமல்படுத்தப்பட்ட பண்ணைக் குட்டைகள், பசுமைக் குன்றுகள் திட்டத்தை மற்ற மாவட்டங்களும் பின்பற்றலாம்.

வளர்ப்பவர்களே ஆடு, கோழிகளை இடைத்தரகர்கள் இன்றி விற்க உழவர் சந்தைகள் போன்ற அமைப்புகள் ஏற்படுத்தப்படும்.

- ✶ இந்திராகாந்தி ஆவாஸ் யோஜனா திட்டத்தின்கீழ், 30 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட வீடுகளை சரிசெய்து தர வேண்டும் என்ற தருமபுரி ஆட்சியரின் கோரிக்கையை நிதித்துறையின் பரிசீலனைக்கு நிச்சயமாக அதுவும் நிறைவேற்றப்படும்.

- ✶ புதிதாக தொடங்கப்பட்ட கல்லூரிகளுக்கு உடனடியாக இடம் பார்த்துக்கொடுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

- ✶ சிறு, குறு நிறுவனங்களை புதிதாக உருவாக்குவதில் உள்ள சிக்கல்களை சேலம் மாவட்ட ஆட்சியர் கார்மேகம் கூறினார்.

சிறு, குறு நிறுவனங்களை அதிகமாக உருவாக்குறதுல அனைவரும் அக்கறை செலுத்த வேண்டும், அதுதான் சாமானியர்களுக்கு வேலைவாய்ப்பைத் தரும் துறை என்பதை மனதில் வைத்துக்கொள்ள வேண்டும்.

- ✶ பருவ மழையினால் ஏற்பட்ட சேதங்களைச் சரிசெய்ய அரசின் சார்பில் தரப்பட்ட தொகை குறைவாக இருக்கிறது என்று நீர்வளத்துறை செயலாளர் சொன்னார். நிச்சயமாக அதுவும் பரிசீலிக்கப்பட்டு தேவைப்படக்கூடிய நிதியை வழங்குவோம்.

✶ அரசுத் துறைகள் முழுமையாக கணினிமயமாக்கப்பட வேண்டும்.

அனைத்து மின்னணு சேவை மையங்களும் ஆய்வு செய்யப்பட்டு அவற்றின் செயல்பாடுகள் மேம்பட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

✶ ஆதிதிராவிடர் மாணவர் விடுதிகள் சீர்திருத்தப்பட வேண்டும். பல இடங்களில் மிக மோசமானதாக இருப்பதாக தொடர்ந்து புகார்கள் வருகிறது. அனைவரும் அதனை போய் பார்த்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

விடுதிகளில் மாணவர்கள் தங்கும் எண்ணிக்கையை அவ்வப்போது உறுதிசெய்வதோடு, சென்னை போன்ற மாநகரங்களில் தேவைக்கேற்ப கட்டமைப்புகள் விரிவுபடுத்தப்படும்.

✶ ‘நமக்கு நாமே’, ‘சமத்துவபுரம்’, ‘தொகுதி மேம்பாட்டு நிதி’ ஆகிய திட்டங்களைச் செயல்படுத்த மாவட்ட ஆட்சியர்கள் ஒத்துழைப்பு அவசியம்னு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை செயலாளர் பேசும்போது குறிப்பிட்டுச் சொன்னார்.

பட்டா மாறுதல் போன்ற வருவாய்த் துறை இனங்களில் சுணக்கம் ஏற்படாத வண்ணம் விரைவில் நடவடிக்கை எடுக்கத் தேவையான கண்காணிப்புகள் மேற்கொள்ளப்படும்.

தேங்கியுள்ள பணிகளை விரைந்து முடிக்கணும்னு சொன்னார்.

அந்த மூன்று திட்டங்களை மட்டுமல்ல,

அனைத்துத் திட்டங்களையும் செயல்படுத்த மாவட்ட ஆட்சியர்கள் ஒத்துழைக்கணும்.

* உங்கள் தொகுதியில் முதலமைச்சர்,
* மக்களைத் தேடி மருத்துவம்,
* வேளாண்மை நிதிநிலை அறிக்கை,
* இல்லம் தேடிக் கல்வி,
* நான் முதல்வன்

– இது போன்றத் திட்டங்களில் அதிக கவனத்தை நீங்கள் செலுத்தவேண்டும்.

கல்வியும் – சுகாதாரமும் இந்த அரசின் இரு கண்கள்!

சாலை வசதி, மின்சாரம், உணவுப் பொருள் வழங்கல் ஆகியவை அடுத்த இலக்கு!

இவற்றில் எந்த தடங்கலும் இருக்கக் கூடாது.

இதற்காகவே நாம் இருக்கிறோம்.

கோடிக்கணக்கான மக்களோட வாழ்க்கை சம்பந்தப்பட்டது இது.

கோடிக்கணக்கான பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள திட்டங்கள் இவை.

இவை அனைத்தையும் நிறைவேற்றும் பொறுப்பு உங்களின் இரண்டு கைகளுக்குத்தான் இருக்கிறது.

ஒவ்வொரு திட்டமும் எந்த மாதிரி செயல்பட்டுக்கொண்டு இருக்கிறது என்பதை,

நாள்தோறும் நீங்கள் கண்காணித்தால் போதும், அந்தத் திட்டம் மிகச் சிறப்பாகச் செயல்படத் தொடங்கிவிடும்.

அனைவரும் dashboard உருவாக்கி வைத்துக்கொள்ளுங்கள். நாள்தோறும் அதை நான் பார்க்கிறேன்.

நீங்களும் உங்களது dashboard–இல் உங்களது பணிகளை செதுக்கி வைத்துக்கொள்ளுங்கள்.

நீங்கள் செய்த பணிகளும் இருக்கட்டும்.

செய்ய வேண்டிய பணியும் இருக்கட்டும்.

எந்த உயரத்தை அடைவதாக இருந்தாலும் ஒவ்வொரு படியாகத்தான் ஏற வேண்டும்.

ஒவ்வொரு நாளும் அனைத்துத் திட்டங்களையும் உயரத்துக்கு நகர்த்துவோம்.

அதன்மூலமாக ஒட்டுமொத்த தமிழ்நாட்டையும் உயர்த்துவோம்.

எனக்கு நீங்க ஒத்துழைப்புத் தாங்கனு நான் கேட்கல; உங்களோட கனவுகளை நிறைவேத்த என்னை ஒரு கருவியாக பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

அரசியல் என்ற சொல்லில் அரசு இருக்கிறது.

அரசியலும், அரசு இயலும் இணைந்து நமக்கான வளமான தமிழ்நாட்டை அமைப்போம். இது உங்களால் மட்டும்தான் முடியும்.

முன்பு இருந்ததை விட கடந்த மூன்று நாட்களில் நான் அதிகமான உற்சாகத்தோடு இருக்கிறேன்.

உங்கள் ஒவ்வொருவர் பேச்சும் எனக்கு டானிக்கை, சக்தியை கொடுத்திருக்கிறது, ஒரு உற்சாகத்தைக் கொடுத்திருக்கிறது, ஊக்கத்தைக் கொடுத்திருக்கிறது.

ஒருவரை ஒருவர் நாம் புரிந்துகொள்ள இந்த மூன்று நாள் மாநாடு அடித்தளம் அமைத்துள்ளது.

இதனை மிகச் சிறப்பாக ஒருங்கிணைத்த தலைமைச் செயலாளர் அவர்களுக்கு நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

பட்டிமன்றங்களின் நடுவராக இருந்தவர் என்பதால் அனைவருக்கும் பேச அனுமதியும் கொடுத்து, குறிப்பிட்ட நேரத்தில் முடிக்கவும் வைத்தார் தலைமைச் செயலாளர் அவர்கள்.

அதேபோல் காவல்துறை இயக்குநருக்கும் நன்றி.

பங்கேற்ற துறையின் செயலாளர்கள்,

மாவட்ட ஆட்சியர்கள்,

காவல்துறை கண்காணிப்பாளர்கள் அனைவருக்கும் நன்றி.

அமைச்சர்கள் அனைவருக்கும் நன்றி.

இந்தக் கூட்டத்தில் திட்டமிடுதல்கள் குறித்து அதிகம் பேசினோம்.

அடுத்து நடக்கக்கூடிய கூட்டத்தில் சாதனைகளைப் பற்றி அதிகம் பேசுவோம்.

அந்த வகையில் அது அமைய வேண்டும் என்று கேட்டு, மீண்டும் உங்கள் அனைவருக்கும் நன்றி கூறி, என் உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி, வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள்,*
மாவட்ட ஆட்சித் தலைவர்கள், காவல்துறை,
வனத்துறை அலுவலர்கள் மாநாட்டின் இறுதி நாளில்
ஆற்றிய நிறைவுரை – 12.03.2022

அரசுக்கு "தூண்" போல் துணை நிற்க வேண்டும்

தமிழகத்தினுடைய மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் அருமை அண்ணன் திரு.துரைமுருகன் அவர்களே,

தமிழகத்தினுடைய மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு அவர்களே,

மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு.தா.மோ. அன்பரசன் அவர்களே,

நாடாளுமன்ற உறுப்பினர் திரு.செல்வம் அவர்களே,

சட்டமன்ற உறுப்பினர்கள்

திரு.எஸ்.எஸ்.பாலாஜி அவர்களே,

திரு.ரூபி மனோகரன் அவர்களே,

அனைத்திந்திய கட்டுநர் சங்கத்தின் தேசியத் தலைவர் டாக்டர் ஆர்.என்.குப்தா அவர்களே,

துணைத் தலைவர் திரு.எஸ்.அய்யநாதன் அவர்களே,

தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் அந்தமான் மாநிலத் தலைவர் திரு.ஆர்.சிவகுமார் அவர்களே,

தெற்கு மையத் தலைவர் திரு.எல்.சாந்தகுமார் அவர்களே,

30ஆவது அனைத்திந்திய கட்டுநர் மாநாட்டின் தலைவர் திரு.பீஷ்மா என்கிற ஆர்.இராதாகிருஷ்ணன் அவர்களே,

ஒருங்கிணைப்புக் குழு நிருவாகிகளே,

கட்டுமானத் துறையைச் சார்ந்த தொழிலதிபர்களே,

பாசமிகு பத்திரிகை மற்றும் ஊடகத் துறை நண்பர்களே,

இங்கே குழுமியிருக்கக்கூடிய பெரியோர்களே, அருமை சகோதரர்களே, சகோதரிகளே,

உங்கள் அனைவருக்கும் என்னுடைய மாலை வணக்கத்தை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இங்கு வரவேற்புரை ஆற்றிருக்கக்கூடிய திரு.இராதாகிருஷ்ணன் அவர்கள் உணர்ச்சிவசப்பட்டு உரையாற்றிய காட்சியை நாங்கள் மட்டுமல்ல, நீங்களும் பார்த்தீர்கள். அதிலும் குறிப்பாக, தலைவர் கலைஞரிடத்திலே அவர் கொண்டிருந்த நட்பு, பாசம், அதேபோல் தலைவர் கலைஞர் அவர்கள், அவர் மீது கொண்டிருந்த பற்று, பாசம். அதற்கு எடுத்துக்காட்டாக அவர் இன்னமும் இருக்கிறார். இந்த நிகழ்ச்சிக்கு என்னிடத்திலே தேதியைப் பெறுவதற்காக கோட்டைக்கு வந்து, முதலமைச்சர் அறைக்கு வந்து, என்னிடத்திலே வந்து சந்தித்து, என்னிடத்தில் இந்த நிகழ்ச்சியைப்பற்றிக் குறிப்பிட்டுச் சொல்லி, அவசியம் வர வேண்டும், தலைவர் கலைஞர் அவர்கள் நாங்கள் அழைத்தபோதெல்லாம் வந்திருக்கிறார். அழைத்தபோது வந்தது மட்டுமல்ல, நாங்கள் சொன்னதையெல்லாம் ஏற்றுக்கொண்டு

நிறைவேற்றித் தந்திருக்கிறார். கலைஞருடைய ஆட்சி நடைபெற்ற நேரத்தில் என்னென்ன நன்மைகளை, பலன்களை நாங்கள் பெற்றோம் என்பதையெல்லாம் அவர் இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்.

கரிகாலன் விருது வழங்கப்படும் என்று தலைவர் கலைஞர் அவர்கள் அன்றைக்கு வாக்குறுதி தந்தார்கள். ஆனால், ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பிறகு அது நடக்காமல் போய்விட்டது. இப்போது மீண்டும் ஆட்சிமாற்றம் வந்திருக்கிறது. எனவே, நீங்கள் கவலைப்பட வேண்டிய அவசியமில்லை. கலைஞர் என்ன உறுதிமொழி கொடுத்தாரோ, அது நிச்சயம் நிறைவேற்றப்படும். இந்த ஆட்சி சொன்னதைச் செய்யும், செய்வதைத்தான் சொல்லும் என்று கலைஞர் அவர்கள் எந்த அடிப்படையிலே அந்த உறுதிமொழியை மக்களிடத்திலே தந்தாரோ, அதை இன்றைக்கு நாங்கள் கூடுதலாக நிறைவேற்றிடும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறோம். சொன்னதை மட்டுமல்ல, செய்வதை மட்டுமல்ல, சொல்லாததையும் செய்யக்கூடிய ஆட்சிதான் இந்த ஆட்சி. ஏனென்றால், தாய் 8 அடி பாய்ந்தால், குட்டி 16 அடி பாயும் என்று சொல்வார்கள். 16 அடி பாய்ந்தால் எங்கள் தலைவருக்கு அது பெருமை இல்லை, 32 அடி பாய்ந்தால்தான் எங்கள் தலைவருக்கு பெருமை கிடைக்கும். அந்த உணர்வோடுதான் நானும் இந்த நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு உங்கள் அனைவரையும் சந்திக்கக்கூடிய ஒரு நல்வாய்ப்பு எனக்குக் கிடைத்திருக்கிறது. இந்த வாய்ப்பை உருவாக்கித் தந்திருக்கக்கூடிய திரு.இராதாகிருஷ்ணன் அவர்களுக்கும் மற்றும் அவருடன் இணைந்து பணியாற்றிக் கொண்டிருக்கக்கூடிய அத்தனை பேருக்கும் என்னுடைய இதயப்பூர்வமான நன்றியை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த 30ஆவது அகில இந்தியக் கட்டுநர்கள் மாநாட்டில் பங்கேற்பதில் நாங்கள் எல்லாம் உள்ளபடியே மகிழ்ச்சியடைகிறோம். இந்த நிகழ்ச்சிக்கு வருகிறபோது நீங்கள் அளித்த அழைப்பிதழைப்

பார்த்தேன். அந்த அழைப்பிதழின் அடியில் ஒரு வரியை நீங்கள் போட்டிருக்கிறீர்கள், “Role of Construction in Nation Building” என்ற வாசகத்தைப் படித்தேன். கட்டுநர்கள், இந்த மாநிலத்தின், நாட்டின் முன்னேற்றத்திற்கு மிக முக்கியமானவர்கள் என்பதை சுட்டிக்காட்டியிருக்கிறீர்கள்.

ஒன்றிய – மாநில அரசுகளின் உட்கட்டமைப்பிற்கு அடித்தளம் போடக்கூடியவர்கள் நீங்கள். ஆம், நீங்கள் எல்லாம் இந்த நாட்டை கட்டமைப்பதில் ஒன்றிய, மாநில அரசுகளுடன் கை கோர்த்துப் பயணிக்கிறீர்கள். அந்தப் பயணத்தினுடைய ஒரு அங்கமாகவே இந்த 30ஆவது அகில இந்திய கட்டுநர்கள் மாநாட்டை அகில இந்திய கட்டுநர்கள் சங்கத்தின் தென்னக மையம் நடத்துகிறது. 2,500க்கும் மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட இந்தத் தென்னக மையம், அகில இந்தியக் கட்டுநர்கள் சங்கத்தின் பழமையான மையம் என்பதையும் தாண்டி, “தாய் மையம்” என்பதாலோ என்னவோ, அதே தாய் மனப்பான்மையோடு, மாநிலத்தில் அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கும், பணியாளர்களுக்கும் வேலை வழங்கும் அமைப்பாக இது திகழ்ந்து கொண்டிருக்கிறது.

ஆகவே, முன்னேற்றத்திற்கு மட்டுமல்ல, வேலைவாய்ப்பிற்கும் உறுதுணையாக இருப்பதுதான் இந்தச் சங்கத்தின் சிறப்பு என்பதை நான் உணர்கிறேன். சென்னை மையம் மட்டுமே, 2 இலட்சத்திற்கும் மேற்பட்ட அமைப்பு சாராத் தொழிலாளர்களுக்கும், 1 இலட்சத்திற்கும் மேற்பட்ட பணியாளர்களுக்கும் வேலைவாய்ப்பு வழங்கும் மையமாக விளங்குகிறது என்று சென்னை மையத்தின் தலைவர் சாந்தகுமார் அவர்கள் என்னிடத்தில் சொன்னார்கள். கொரோனா காலத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ரேசன் பொருட்கள் வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்டங்களை இந்த மையத்தின் சார்பாக செய்திருப்பது உள்ளபடியே பாராட்டுக்குரியது. அதற்காக நான் அரசின் சார்பிலே வாழ்த்தும், நன்றியும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

வழக்கமாக, ஒரு கட்டடத்திற்கு தூண் வலு சேர்க்கும் என்று சொல்வார்கள். நீங்கள் மாநில அரசின் கட்டடங்களை தரமாகக் கட்டுவதில் வலுசேர்த்துக் கொண்டிருக்கிறீர்கள்.

அதையெல்லாம் மனதில் வைத்துதான், நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, இந்தக் கட்டுநர்கள் சங்கத்திற்கு எப்படி முக்கியத்துவம் கொடுத்து, நீங்கள் அழைத்தபோதெல்லாம் வந்து பங்கேற்றாரோ, அதுபோல இன்றைக்கு நான் வந்திருக்கிறேன், இன்றைக்கு மட்டுமல்ல, என்றைக்கும் வருவேன், எப்போதும் வருவேன், எந்த நேரத்திலும் வருவேன்.

தலைவர் கலைஞர் அவர்கள் ஒரு நிகழ்ச்சிக்கு வந்த நேரத்தில், சிமெண்ட் விலை உயர்வு குறித்து நீங்கள் எல்லாம் கவலை தெரிவித்துக் கோரிக்கை வைத்தீர்கள் அந்த நேரத்தில். மேடையிலேயே உங்களது கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டு, சிமெண்ட் விலைக் குறைப்பு அறிவிப்பை வெளியிட்டவர்தான் அன்றைக்கு முதலமைச்சராக இருந்த நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். மேடையிலேயே உங்கள் கோரிக்கையை அவர் நிறைவேற்றினார்.

இன்றைக்கு முதலமைச்சராக வந்தவுடன் என்னை அழைத்தீர்கள். முத்தமிழறிஞர் கலைஞர் வழியில், நானும் இங்கே வந்து பங்கேற்க வந்திருக்கிறேன்.

கொரோனா காலத்தில் எத்தகைய சவால்களை இந்தக் கட்டுமானத் தொழில் சந்தித்துக்கொண்டு வருகிறது என்பது அரசுக்கு நன்றாகத் தெரியும்.

- ✶ அதனால்தான் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், பொதுப்பணித்துறையில் தொகுப்பு முறையிலான ஒப்பந்தப்புள்ளி (பேக்கேஜ் டெண்டர்) கோரக்கூடிய நடைமுறை ரத்து செய்யப்பட்டது.

- ரூ.15 கோடி மதிப்பீட்டிற்கு மேல் உள்ள சிவில் மற்றும் மின் பணிகளுக்கு தனித்தனியாக ஒப்பந்தம் மேற்கொள்ள ஆணை வெளியிடப்பட்டது.

- முன்தகுதி ஒப்பந்தப்புள்ளிக்கான நிதி உச்சவரம்பு 2 கோடியிலிருந்து 5 கோடியாக உயர்த்தப்பட்டது.

- புதிய ஒப்பந்ததாரர் பதிவு மற்றும் புதுப்பித்தல் மண்டல தலைமைப் பொறியாளர்கள் அளவிலேயே மேற்கொள்ள ஆணை வெளியிடப்பட்டது.

- ஒப்பந்ததாரர் பதிவு ஓராண்டுக்கு ஒரு முறை புதுப்பித்தல் என்பது மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை புதுப்பித்தால் போதும் என்று மாற்றப்பட்டது.

- மதிப்பீடுகள் தயாரிப்பதற்கான தரவினைத் தற்போதைய நடைமுறைக்கு ஏற்றவாறு திருத்தியமைக்கக் குழு அமைக்கப்பட்டது.

ஆனாலும், கொரோனா காலத்தின் தாக்கத்திலிருந்து கட்டுமானத்துறை இன்னும் மீளவில்லை என்பதை நான் நிச்சயமாக அறிவேன்.

அதை மனதில் வைத்துக்கொண்டு, நீங்கள் ஒரு கோரிக்கையை என்னிடம் வைத்தீர்கள். ஒப்பந்ததாரர் வகுப்பு–1இல் பண வரம்பு 10 முதல் 25 கோடி ரூபாயாகவும், செல்வநிலைச் சான்று 1 கோடி ரூபாயாகவும், புதிய வகுப்பு–1A ஏற்படுத்தி அதற்கு பண வரம்பு 25 கோடி ரூபாய்க்கு மேல் நிர்ணயித்து, அதுக்கு solvency 3 கோடி ரூபாய் என்று நிர்ணயிக்க அகில இந்திய கட்டுநர் கழகத்தின் சார்பில் கோரிக்கை வைத்திருக்கிறீர்கள். பிற வகுப்புகளுக்கு தற்போதுள்ள solvency 30 விழுக்காட்டில் இருந்து, 10 விழுக்காடாக குறைக்க கோரிக்கை வைத்திருக்கிறீர்கள்.

அவரே சொன்னார், கலைஞருடைய வாரிசு நான் என்று. எனவே, அவர் வழியிலே இந்த ஆட்சி நடந்துகொண்டிருக்கிறது. எனவே நான் முத்தமிழறிஞர் கலைஞருடைய மகன், ஆகவே இந்த மேடையிலே இப்போது நான் அறிவிக்கிறேன்.

அகில இந்தியக் கட்டுநர் கழகத்தின் கோரிக்கையை பரிசீலித்து, புதியதாக வகுப்பு 1–A ஏற்படுத்தி, solvency 10 விழுக்காடாக, அதாவது ரூ.2.50 கோடி எனவும், ஏற்கெனவே நடைமுறையில் உள்ள இதர வகுப்புகளுக்கான Solvency, அனைத்து நிலை ஒப்பந்ததாரர்களும் பயன்பெறக்கூடிய வகையில் 30 விழுக்காட்டிலிருந்து 15 விழுக்காடாகக் குறைக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

நீங்கள் கோரிக்கை வைத்தீர்கள். இப்போது நான் உங்களுக்கு கோரிக்கை வைக்கப்போகிறேன். இப்போது நான் வைக்கக்கூடிய கோரிக்கை என்னவென்றால், ஏழை, எளிய, நலிந்த மக்களுக்குக் குறைந்த விலையில் வீடுகளைக் கட்டித் தர நீங்கள் முன்வர வேண்டும். தொன்மை வாய்ந்த இந்த மையம், கட்டுமானப் பணிகளை தரத்துடன் செய்வதில் புகழ்பெற்ற நிறுவனம் என்பது எனக்கு மட்டுமல்ல, எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். ஆகவே, நீங்கள் இந்த அரசின் கட்டடங்களை தரமாகக் கட்டிக்கொடுத்து, வலிமைமிக்க கட்டடங்களாக கட்டிக்கொடுத்து, இந்த அரசுக்கு, மீண்டும் சொல்கிறேன், இந்த அரசுக்குத் "தூண்" போல் நீங்கள் துணை நிற்க வேண்டும்.

ஆகவே, இன்றைக்கு தமிழ்நாட்டிலே நடைபெறக்கூடிய ஆட்சி, மக்களுக்காக நடைபெறக்கூடிய ஆட்சி, திரு.இராதாகிருஷ்ணன் அவர்கள் சொன்னார்கள். கலைஞர் மேற்கோள் காட்டிய செய்திகளை, எங்களை எல்லாம் ஆளாக்கிய அறிஞர் அண்ணா அடிக்கடி எடுத்துச் சொல்லக்கூடிய அந்த உணர்வை மக்களிடம்

செல், மக்களோடு சேர்ந்து வாழ், மக்களுக்காக பணியாற்று. ஆகவே, நான் மட்டுமல்ல, பொதுவாக, இந்த ஆட்சியை திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி என்று சொல்வதை விட, என் தலைமையில் நடைபெறக்கூடிய ஆட்சி என்று சொல்வதை விட, எங்களுடைய ஆட்சி என்று சொல்வதை விட, நான் எப்போதும் அடிக்கடி சொல்லிக் கொண்டிருப்பது, இது நமது ஆட்சி, மக்களுக்காக நடைபெறக்கூடிய ஆட்சி. அந்த உணர்வோடுதான் இந்த ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட ஆட்சிக்கு நீங்களும் எப்போதும் போல் எந்த சூழ்நிலையிலும் நீங்கள் துணை நிற்கக்கூடியவர்கள். எனவே, அதைத் தொடர்ந்து எங்களுக்கு வழங்க வேண்டும். உங்களுடைய ஊக்கமும் ஆக்கமும் எங்களுக்குக் கிடைத்தால் தான் நாங்கள் பணியாற்ற முடியும், நாங்கள் பணியாற்றினால்தான் மக்களுக்கு பல திட்டங்களைக் கொண்டுபோய் சேர்க்க முடியும் என்பதை நினைவுப்படுத்தி, இந்த சிறப்பான நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு உங்கள் அனைவரையும் சந்திக்கக்கூடிய நல்வாய்ப்பைப் பெற்றமைக்கு மீண்டும் ஒருமுறை என் இதயப்பூர்வமான நன்றியைத் தெரிவித்து, என் உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி, வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்,*
***30**ஆவது அனைத்திந்திய கட்டுநர் மாநாட்டைத்*
*தொடங்கி வைத்து ஆற்றிய உரை – **12.03.2022***

தமிழ் மொழிக்கும், இனத்துக்கும் பெருமை சேர்த்தவர்களுக்கு "தமிழ்நாடு அரசின் விருதுகள்"

தமிழ் வளர்ச்சித் துறை சார்பிலே தமிழ்நாடு அரசின் விருதுகள் வழங்கும் நிகழ்ச்சிக்கு தலைமைப் பொறுப்பேற்று உரையாற்றி அமர்ந்திருக்கக்கூடிய மாண்புமிகு தொழில், தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ் பண்பாடு, தொல்லியல் துறை அமைச்சர் திரு.தங்கம் தென்னரசு அவர்களே!

நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு இந்த மேடையில் அமர்ந்திருக்கக்கூடிய மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ. சாமிநாதன் அவர்களே!

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு.எஸ்.எஸ். சிவசங்கர் அவர்களே!

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி என்.கயல்விழி செல்வராஜ் அவர்களே! மற்றும் வருகைதந்து சிறப்பித்துக் கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே!

சென்னை மாநகராட்சியின் வணக்கத்திற்குரிய மேயர் திருமதி பிரியா, துணை மேயர் மகேஷ்குமார் உள்ளிட்ட உள்ளாட்சிப் பிரதிநிதிகளே!

துவக்கத்தில் அனைவரையும் வரவேற்று மகிழ்ந்திருக்கக்கூடிய தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறைச் செயலாளர் திரு.மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., அவர்களே!

நிறைவாக நன்றியுரை ஆற்றவிருக்கக்கூடிய தமிழ் வளர்ச்சி இயக்குநர் (பொறுப்பு) திரு.சரவணன், இ.ஆ.ப., அவர்களே!

விருது பெறுவதற்காக இங்கே வருகை தந்திருக்கக்கூடிய அன்பிற்குரிய பெருந்தகைகளே!

தமிழறிஞர்களே!

அரசு உயர் அலுவலர்களே!

பெரியோர்களே! தாய்மார்களே!

பத்திரிகை மற்றும் ஊடகத்துறையைச் சார்ந்திருக்கக்கூடிய நண்பர்களே!

என் உயிரோடு கலந்திருக்கக்கூடிய தலைவர் கலைஞர் அவர்களின் உயிரினும் உயிரான அன்பு உடன்பிறப்புக்களே!

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் இயக்கத்தினுடைய அகில இந்திய தலைவர் நம்முடைய பெருமதிப்பிற்குரிய பேராசிரியர் காதர் மொய்தீன் அவர்களே!

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

மிகவும் எழுச்சியோடு, உணர்ச்சியோடு நடைபெற்றுக் கொண்டிருக்கக்கூடிய விழாவை இந்த மேடையில் நாம் நடத்திக் கொண்டிருக்கிறோம். எத்தனையோ விருது வழங்கக்கூடிய விழாக்களில் நாம் பங்கேற்றிருந்தாலும், இந்த விழாவில் நான்

பங்கெடுக்கிற நேரத்தில் எனக்கு ஏற்படக்கூடிய உணர்ச்சியும், எழுச்சியும் அதிகமானதாக அமைந்திருக்கிறது.

தமிழுக்கும் அமுதென்று பேர் – அந்தத்
தமிழ் இன்பத் தமிழ்எங்கள் உயிருக்கு நேர்!

தமிழுக்கு நிலவென்று பேர்! – இன்பத்
தமிழ் எங்கள் சமுகத்தின் விளைவுக்கு நீர்!

தமிழ் எங்கள் பிறவிக்குத் தாய்! – இன்பத்
தமிழ் எங்கள் வளமிக்க உளமுற்ற தீ!

என்ற புரட்சிக்கவிஞர் பாரதிதாசனின் கவிதை வரிகளை மனதில் ஏந்திக்கொண்டு, இந்த மேடையில் நான் நின்று கொண்டு இருக்கிறேன்.

ஈராயிரம் ஆண்டுக்காலம் என்று இதுவரை நாம் சொல்லிக் கொண்டிருந்தோம். ஆனால், இப்போது கிடைத்திருக்கக்கூடிய ஆய்வுகளின்படி பார்த்தால், மூவாயிரத்து ஐநூறு ஆண்டு பழமையும், சிறப்பும் கொண்ட தமிழ் மொழிக்கும் இனத்துக்கும் பெருமை சேர்க்கக்கூடிய பெருமக்களின் பெயரால் அமைந்துள்ள விருதுகளை, அதே புகழும் பெயரும் அறிவும் ஆற்றலும் கொண்டிருக்கக்கூடிய பெருமக்கள் இங்கே பெற இருக்கிறார்கள்.

- தமிழனுக்கு மட்டுமல்ல உலகத்துக்கே அறத்தைப் போதித்த திருவள்ளுவர் பெயரிலான விருதை மு.மீனாட்சி சுந்தரனார் அவர்களுக்கும்,
- பகுத்தறிவுப் பகலவன், அறிவுலக ஆசான் தந்தைப் பெரியார் பெயரிலான விருதை, திராவிட இயக்கத்தின் கணினி என்று தலைவர் கலைஞர் அவர்களால் போற்றப்பட்ட எழுத்தாளர் க.திருநாவுக்கரசு அவர்களுக்கும்,
- ஒடுக்கப்பட்ட மக்களின் ஒளிவிளக்காம் டாக்டர் அம்பேத்கர் பெயரிலான விருதை, சட்ட நீதியை மட்டுமல்ல, சமூக

நீதியையும் வழங்கும் தீர்ப்புகளைத் தந்த நீதியரசர் சந்துரு அவர்களுக்கும்,

- ✶ நாமணக்கும் பேச்சால் தமிழர் உள்ளமெல்லாம் இன்றும் மணம் தந்து வரும் பேரறிஞர் அண்ணா பெயரிலான விருதை நாவுக்கரசர், திராவிட இயக்கத்தின் போர்முரசமாம் நாஞ்சில் சம்பத் அவர்களுக்கும்,
- ✶ கல்விக் கண் திறந்த பெருந்தலைவர் காமராசர் பெயரிலான விருதை நம்முடைய பெருமதிப்பிற்குரிய இலக்கியச் செல்வர் குமரி ஆனந்தன் அவர்களுக்கும்,
- ✶ பாட்டுத் திறத்தால் இவ்வையகத்தை அசரவைத்த மகாகவி பாரதி பெயரிலான விருதை, தனது பேச்சுத் திறத்தால் தமிழ்நாட்டு மேடைகளை அசர வைத்துக் கொண்டிருக்கக்கூடிய பாரதி கிருஷ்ணக்குமார் அவர்களுக்கும்,
- ✶ வார்த்தைகளால் தமிழுக்கு வாளாக அமைந்த புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் பெயரிலான விருதை திராவிடப் புலவர் செந்தலை கவுதமன் அவர்களுக்கும்,
- ✶ முத்தமிழால் மூவாத்தமிழுக்கு அணி சேர்த்த கி.ஆ.பெ.விசுவநாதன் அவர்களுடைய பெயரிலான விருதை முன்னாள் துணை வேந்தரும் எந்நாளும் தமிழாய்வு வேந்தருமான மா.ராசேந்திரன் அவர்களுக்கும்,
- ✶ கவிச்சக்கரவர்த்தி கம்பர் பெயரிலான விருதை, பட்டிமன்ற வாதத்தினுடைய சக்ரவர்த்தியான பாரதி பாஸ்கர் அவர்களுக்கும்,
- ✶ சொல்லின் செல்வர் பெயரிலான விருதை ஒவ்வொரு சொல்லையும் கல் போல எடுத்து வீசக்கூடிய சூரியா சேவியர் அவர்களுக்கும்,

- ✶ எங்கோ பிறந்து இங்கு பிறந்த தமிழனாகவே வாழ்ந்த ஜி.யு.போப் பெயரிலான விருதை இதழியல் துறையில் அனைவருக்கும் எடுத்துக்காட்டாக விளங்கும் அ.சு.பன்னீர்செல்வம் அவர்களுக்கும்,
- ✶ சீறாபுராணம் மூலம் தமிழை உயர்வித்த உமறுப்புலவர் பெயரிலான விருதை தமிழிசை வளர்ச்சிக்கு நாளும் தொண்டாற்றும் மதுரை நா.மம்முது அவர்களுக்கும்,
- ✶ தமிழ்த் தேசிய காப்பியத்தின் மூலமாக தமிழினத்தின் பெருமையை நிலைநாட்டிய இளங்கோவடிகள் பெயரிலான விருதை, மேடையில் ஏறினால் எல்லாக் காப்பியங்களையும் கரைமடை திறந்ததுபோல ஒப்பிக்கும் நெல்லை கண்ணன் அவர்களுக்கும்,
- ✶ 20 மொழிகளை அறிந்து, அன்னைத் தமிழே அனைத்துக்கும் தாய் என்று சொன்ன திராவிட மொழிநூல் ஞாயிறு பாவாணர் பெயரிலான விருதைப் பெறும் தகுதியை தனது ஆய்வுத் திறத்தால் பெற்ற முனைவர் கு.அரசேந்திரன் அவர்களுக்கும்,
- ✶ பொதுவுடைமைக் கொள்கையை திசை எட்டும் சேர்த்த சிங்காரவேலர் பெயரிலான விருதை, தினந்தோறும் தீக்கதிர் மூலமாக அதே பணியைச் செய்து வரும் மதுக்கூர் ராமலிங்கம் அவர்களுக்கும்,
- ✶ தமிழின இயக்கமாம் திராவிட இயக்கம் உருவாகும்போதே தனித்தமிழுக்காக இயக்கம் கண்ட தனித்தமிழ்த் தந்தை மறைமலையடிகள் பெயரிலான விருதை, சமயமும் தமிழுமாய் சுகித்து வாழக்கூடிய சுகி சிவம் அவர்களுக்கும்,
- ✶ வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன் என்ற அருட்பெருஞ்சோதி வள்ளலார் பெயரிலான விருதை

அதே நோக்கம் கொண்ட முனைவர் இரா.சஞ்சீவிராயர் அவர்களுக்கும்,

- ✶ முந்தைய நூற்றாண்டிலேயே தமிழன், திராவிடன் என்ற இரண்டு சொற்களையும் அரசியல் களத்தில் பதிய வைத்த அயோத்திதாசப் பண்டிதர் பெயரிலான விருதை, அயோத்திதாசர் எழுத்துக்களைப் பெருமளவில் வெளி உலகுக்கு எடுத்து வந்தவரும், அரசியல் ஆய்வாளர்களில் தலைசிறந்தவர்களுள் ஒருவரான ஞான அலாய்சிஸ் அவர்களுக்கும்,
- ✶ முதலமைச்சர் கணினித் தமிழ் விருதைக் கணினியில் முனைப்பாகச் செயல்படும் முனைவர் தனலட்சுமி அவர்களுக்கும்,
- ✶ பாமரர்களையும் செய்தித்தாள் படிக்க வைத்த சி.பா.ஆதித்தனார் பெயரிலான விருதை, படித்தவர்களுக்கும் புதிய சிந்தனைகளை உருவாக்கி வரும் உயிர்மை இதழுக்கும்,
- ✶ தமிழ்த்தாய் பெயரிலான விருதை மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கத்துக்கும்,

வழங்குவதை தமிழ்நாடு அரசு பெருமையாகக் கருதுகிறது.

உங்களுக்கு வழங்கியதன் மூலமாக இந்த விருது பெருமை அடைகிறது.

எனது கையால் வழங்கியதன் மூலமாக நானும் பெருமைப்படுகிறேன்.

விருதுகளைப் பெற்ற பெருமக்களே! உங்களுக்கு விருதுகளை வழங்கியதன் மூலமாக நான் எனது தமிழ்க் கடமையைச் சரியாகச் செய்துவிட்டதாக நினைத்து மகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழுக்குத் தொண்டு செய்வோர் சாவதில்லை,

தமிழ்த் தொண்டன் பாரதி தான் செத்ததுண்டோ? என்று பாடினார் புரட்சிக் கவிஞர்.

தமிழுக்குத் தொண்டு செய்தவர்கள் அவர்களது படைப்புகளின் மூலமாக வாழ்ந்துகொண்டு இருக்கிறார்கள். அவர்களது புத்தகங்களின் மூலமாக வாழ்ந்துகொண்டு இருக்கிறார்கள். அது மட்டுமல்ல, அவர்களைப் போலவே இருக்கும் தமிழ்த் தொண்டர்களாகவும் அவர்கள் வாழ்ந்துகொண்டு இருக்கிறார்கள்.

அத்தகைய தீரமிகு எழுத்தாளர்கள்,

கனல் தெறிக்கும் பேச்சாளர்கள்,

களம் கண்ட போராளிகள்,

ஆய்வு அறிஞர்கள்,

மொழிபெயர்ப்பாளர்கள்,

பத்திரிகையாளர்கள்,

ஆகியோர் இந்த விருதுகளைப் பெற்றுள்ளார்கள். இந்த விருதுகளை இவர்களுக்கு வழங்கிதன் மூலமாக தமிழ்நாடு அரசு இன்னொரு மிக முக்கியமான பெருமையை அடைகிறது.

வாழும் காலத்திலேயே தகுதிசால் தமிழ்த் தொண்டர்களைப் பாராட்டியது தமிழ்நாடு அரசு என்ற விருதை தமிழக அரசு அடைகிறது. இதுதான் மிக முக்கியமானது என்று நான் நினைக்கிறேன்.

யாருடைய பெயரால் விருதுகள் உள்ளதோ அவர்கள் வாழ்ந்த காலத்தில் எத்தகைய அங்கீகாரத்தை பெறத் தவறினார்களோ, அது போன்ற சூழல் இனி வருங்காலத்தில் இருக்கக்கூடாது என்பதை இன்றைய தமிழக அரசு தனது கொள்கையாக வைத்துள்ளது என்பதை இந்த மாபெரும் நிகழ்ச்சியின் மூலமாக உங்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதனால்தான் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியை தமிழாட்சியாக, தமிழின ஆட்சியாக நாங்கள் நடத்தி வருகிறோம். நாங்கள் என்றால் உங்கள் அனைவரையும் சேர்த்துத்தான் நான் சொல்கிறேன்.

விருதுபெற்ற பெருந்தகைகளையும் இணைத்துக்கொண்டே நான் சொல்கிறேன்.

✶ ஈராயிரம் ஆண்டு இலக்கண, இலக்கிய செழுமை கொண்ட மொழிக்கு செம்மொழி என்ற அந்த அங்கீகாரத்தைப் பெற்றுத் தந்தது திராவிட முன்னேற்றக் கழக அரசு.

✶ தமிழர்கள் வாழும் இந்த மாநிலத்துக்கு தமிழ்நாடு என்று பெயர் சூட்டியது கழக அரசு.

✶ தமிழர்கள் கல்வியில், வேலைவாய்ப்பில், அதிகாரம் பொருந்திய அனைத்து இடங்களிலும் போய் அமர சமூகநீதியை உருவாக்கிக் கொடுத்தது திராவிட இயக்கம்.

அதாவது தமிழ் மொழிக்கு, தமிழ் இனத்துக்கு, தமிழ்நாட்டுக்கு தலையாயத் தொண்டு செய்த இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம் என்பதையும் கழக அரசு என்பதையும் நான் தலைநிமிர்ந்து சொல்ல முடியும்.

ஐந்து முறை ஆட்சியில் இருந்த போது, எத்தனையோ சாதனைகளைச் செய்திருந்தாலும், கடந்த பத்து மாத காலத்தில் பைந்தமிழுக்கு பல்வேறு சாதனைகளைச் செய்த அரசுதான் கழக அரசு என்பதை உங்களுக்கு மீண்டும் நான் நினைவூட்டுகிறேன்.

✶ தமிழ்நாட்டு அரசுத் துறை பணியிடங்களில் நுழைபவர்களுக்கு தமிழ் மொழி அறிவு கட்டாயம் ஆக்கப்பட்டுள்ளது.

- ஆசிரியர் தேர்வு வாரியம், மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம், தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமம் உள்ளிட்ட மாநிலத்தில் உள்ள அனைத்து தெரிவு முகமைகளைப் பொறுத்தவரையில் கட்டாயத் தமிழ்மொழித் தகுதித் தேர்வு நடத்தப்படும்.
- ஆலயங்களில் அன்னைத் தமிழ் ஒலிக்கத் தொடங்கி இருக்கிறது.
- மனோன்மணீயம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடல் மாநிலப் பாடலாக அறிவிக்கப்பட்டுள்ளது.
- மதுரையில் கலைஞர் நினைவு நூலகம்.
- தமிழ் அறிஞர்கள் நூல்கள் நாட்டுடைமை.
- எழுத்தாளர்கள் பிறந்தநாளில் கூட்டங்கள்.
- குறைந்த விலையில் சங்க இலக்கிய நூல்கள் வெளியீடு.
- திராவிடக் களஞ்சியம் உருவாக்கம்.
- இதழியலாளர்க்கு கலைஞர் எழுதுகோல் விருது.
- உலகப் பல்கலைக்கழகங்களில் செம்மொழித் தமிழ் இருக்கைகள்.
- நூலகங்களுக்கு சிற்றிதழ்கள்.
- இலக்கியமாமணி விருதுகள்.
- திசைதோறும் திராவிடம்.
- முத்தமிழறிஞர் மொழிபெயர்ப்புத் திட்டம் – இப்படி தமிழாட்சி நடந்து வருகிறது.

- ✶ 2010ஆம் ஆண்டு முதல் வழங்கப்படாமலிருந்த முத்தமிழறிஞர் கலைஞர் செம்மொழித் தமிழ் விருதுகள் 22.01.2022ஆம் நாளன்று வழங்கப்பட்டன. இனி ஒவ்வோர் ஆண்டும் முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாளாம், ஜூன் மாதம் 3ஆம் நாள் ரூ.10 இலட்சம் பரிசுத் தொகையுடன் வழங்கப்படும்.
- ✶ பாரதி ஆய்வாளர்கள் ஐவருக்குத் தலா 3 இலட்சம் வழங்கி பெருமைப்படுத்தி இருக்கிறோம்.
- ✶ தமிழக எல்லைப் போராட்ட வீரர்கள் 110 பேருக்குத் தலா 1 இலட்சம் வழங்கி சிறப்புச் செய்திருக்கிறோம்.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் விரும்பிய ஆட்சி மட்டுமல்ல, தமிழர்கள் விரும்பிய ஆட்சியாகவும் நமது ஆட்சி நடந்துகொண்டிருக்கிறது.

தமிழ் வளர்ச்சி என்பது அந்த மொழியின் பெருமையைப் பேசுவது மட்டுமல்ல, மொழியைப் பெருமைப்படுத்தும் படைப்பாளிகளைப் போற்ற வேண்டும்.

கொரோனா காலத்தில் பதிப்பாளர்கள், விற்பனையாளர்கள் அதிகம் பாதிக்கப்பட்டிருந்தார்கள். ஏற்கெனவே ஜனவரி மாதம் தொடங்க இருந்த புத்தகக்கண்காட்சி தள்ளிப்போன காரணத்தால், அவர்களுக்கு இழப்பும் அதிகமாக ஏற்பட்டது. இதனை அரசாங்கம் கவனத்தில் கொண்டு, எங்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தார்கள். ஒரு கோடி ரூபாய் வரைக்கும் இழப்பு ஏற்பட்டிருக்கும் என்று அவர்கள் சொன்னார்கள். அதனை மனதில் வைத்துக்கொண்டு ஐம்பது இலட்சம் ரூபாயை தமிழக அரசு அவர்களுக்கு வழங்கி இருக்கிறது.

இந்த வகையில் இந்த ஆண்டு மட்டும் ரூ.1.25 கோடி பதிப்பாளர், விற்பனையாளர்களுக்குக் கிடைத்திருக்கிறது.

புத்தகக் கண்காட்சியைத் தொடங்கிவைக்க நான் சென்றபோது ஒரு அறிவிப்பைச் செய்யலாம் என்று நினைத்தேன். ஆனால், அது தேர்தல் காலம். உள்ளாட்சி அமைப்பினுடைய தேர்தல் நடைபெற்றுக் கொண்டிருக்கும் நேரம். அதனை அந்த நேரத்தில் சொல்ல முடியவில்லை. தேர்தல் நடத்தை விதிகள் அதற்கு இடம் தரவில்லை. தேர்தல் முடிந்துவிட்ட காரணத்தால் இந்த நிகழ்ச்சியின் மூலமாக அந்த அறிவிப்பைச் செய்கிறேன்.

அனைத்து நூல்களும் ஒரே இடத்தில் கிடைக்கும் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக மாபெரும் புத்தகப் பூங்கா அமைக்கலாம் என்றும், அதற்கான நிலத்தை அரசு வழங்கும் என்றும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஒருமுறை சொன்னார். அதற்கு புத்தகப் பூங்கா என்றும் அவரே பெயர் சூட்டினார்.

பாபசி அமைப்பைச் சார்ந்திருக்கக்கூடிய அவர்களுடைய ஆலோசனைகளைப் பெற்று அதற்கான நிலத்தைத் தேர்வு செய்து, அரசு வழங்கும் என்று இந்த நிகழ்ச்சியின் வாயிலாக நான் உறுதி அளிக்கிறேன். இந்த புத்தகப் பூங்கா உருவானால், அனைத்து புத்தகங்களையும் ஒரே இடத்தில் வாங்கலாம், அனைத்துப் பதிப்பாளர்கள், விற்பனையாளர்கள் ஒரே இடத்தில் சந்திக்கக்கூடிய சூழல் நிச்சயம் உருவாகும். அதனை உருவாக்கித்தர அரசு தன்னால் ஆன அனைத்து முயற்சிகளையும் உறுதியாகச் செய்யும்.

விருது பெற்ற அனைவரையும் நான் பாராட்டுகிறேன், போற்றுகிறேன். வாழ்த்துகிறேன். உங்களது ஆலோசனைகளும் வழிகாட்டுதல்களும் இந்த அரசுக்கு எப்போதும் தேவை.

இது உங்களது அரசு. அந்த உரிமையோடு நீங்கள் வழிகாட்டுங்கள்.

இன்றைய தினம் 21 விருதுகள் தரப்படவிருக்கின்றன. விருதுக்கு தகுதியான பெருமக்களைத் தேர்வு செய்த மாண்புமிகு அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்களையும், தமிழ்வளர்ச்சித்துறை அதிகாரிகளையும் நான் பாராட்டுகிறேன்.

தந்தை பெரியார் பெயரிலான விருது பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் துறை சார்பிலும் மாமேதை அம்பேத்கர் பெயரிலான விருது ஆதிதிராவிடர் நலத்துறையின் சார்பிலும் வழங்கப்பட்டுள்ளது. இதுவரை இந்த விருதுக்குரியவர்களுக்கு ஒரு இலட்சம் ரூபாய்தான் வழங்கப்பட்டது. கழக அரசுதான் இந்த ஆண்டு முதல் ஐந்து இலட்சம் ரூபாய் வழங்க அரசாணை வெளியிட்டது.

மற்ற 18 விருதுகளுக்கானத் தொகை 1 இலட்சத்தில் இருந்து 2 இலட்சம் ரூபாயாக ஆக்கப்பட்டுள்ளது. விருதுகளை உரியவர்களுக்கு உரிமையாக்கி இருக்கிறோம். இந்த விருதுகளைப் பெற்றதன் மூலமாக உங்களது தொண்டு மேலும், மேலும் அதிகரிக்கட்டும். இவர்களைப் போலவே இன்னும் பலரும் உருவாகட்டும். தொண்டு செய்வோம் தமிழுக்குத் துறைதோறும், துறைதோறும் எனச் சொல்லி உங்கள் அனைவருக்கும் மீண்டும் ஒருமுறை நன்றி கூறி விடை பெறுகிறேன்.

நன்றி, வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்,*
சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற
தமிழ்நாடு அரசின் விருதுகள் வழங்கும் விழாவில்
*ஆற்றிய உரை – **15.03.2022***

சாம்சங் நிறுவன ஒப்பந்தம் மகிழ்ச்சியளிக்கிறது

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு அவர்களே!

தொழில் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.எஸ்.கிருஷ்ணன் அவர்களே!

வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி பூஜா குல்கர்னி அவர்களே!

சிப்காட் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு.ஆனந்த் அவர்களே!

சாம்சங் எலக்ட்ரானிக் நிறுவனத்தின் தென்மேற்காசியத் தலைவர் மற்றும் தலைமை செயல் அலுவலர் திரு.கென் காங் (Ken Kang) அவர்களே!

சாம்சங் நிறுவனத்தின் சென்னை தொழிற்சாலையின் மேலாண்மை இயக்குநர் பியோங் ஜிங் கோன்ங் (Byong Jin Kong) அவர்களே!

அரசு அதிகாரிகளே!

பத்திரிகை மற்றும் ஊடகத் துறையைச் சார்ந்திருக்கக்கூடிய நண்பர்களே!

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கத்தை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

சாம்சங் நிறுவனத்தினுடைய விரிவாக்கத் திட்டத்திற்கான புரிந்துணர்வு (MoU) ஒப்பந்தம் செய்யப்படக்கூடிய இந்த விழாவிலே பங்கேற்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

சாம்சங் குழுமம் என்பது உலக அளவில் மிகப்பெரிய பன்னாட்டுத் தொழில் நிறுவனம் என்பது நம் எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். சாம்சங் நிறுவனத்தை நான் யாருக்கும் அறிமுகம் செய்யத் தேவையில்லை. தென்கொரிய நாட்டில் உருவான நிறுவனமாக இருந்தாலும், இன்று சாம்சங் இல்லாத நாடு இல்லை என்ற ஒரு புகழை இது பெற்றிருக்கக்கூடிய நிறுவனமாக விளங்கிக் கொண்டிருக்கிறது.

சாம்சங் என்ற கொரிய சொல்லுக்கு மூன்று நட்சத்திரங்கள் என்று பொருள் சொல்கிறார்கள். வானத்தில் என்றும் நிலைத்து நீடிக்கும் நட்சத்திரமாக இருப்பது இந்த சாம்சங் நிறுவனம் இருக்கிறது. உலகளவில் அதிகளவு சந்தை மதிப்பைக்கொண்ட எட்டாவது நிறுவனமாக சாம்சங் உயர்ந்திருக்கிறது என்பது உலகளாவிய ஒரு சாதனையாக விளங்கிக்கொண்டிருக்கிறது. அத்தகைய சாம்சங் நிறுவனத்துடன் விரிவாக்க ஒப்பந்தம் கையெழுத்திடுவது மகிழ்ச்சியாக இருக்கிறது.

"அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி" என்ற நமது அரசின் இலட்சியத்திற்கு ஏற்ப, உள்ளூர் மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதிலும், பெண்களுக்கு பெருமளவில் வேலைவாய்ப்பு வழங்குவதிலும், சாம்சங் நிறுவனத்தின் பங்கு உள்ளபடியே பாராட்டுக்குரிய ஒன்றாக விளங்கிக்கொண்டிருக்கிறது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, பல தொழில் நிறுவனங்களை தமிழ்நாட்டிற்கு கொண்டுவந்து, அத்தொழில் நிறுவனங்களையெல்லாம் அவர் துவக்கிவைத்தார். அந்த நிறுவனங்களின் விரிவாக்கத் திட்டங்களுக்கு தற்போது நான் அடிக்கல் நாட்டிக் கொண்டிருக்கிறேன். அதாவது, கலைஞருடைய சாதனைகளை நாங்கள் தொடர்ந்து அதை நிறைவேற்றுகிறப் பணியிலே ஈடுபட்டுக் கொண்டிருக்கிறோம் என்பதற்கு இது ஒரு உதாரணமாக விளங்கிக் கொண்டிருக்கிறது.

அந்த வகையில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்ட சாம்சங் நிறுவனத்தின் விரிவாக்கத் திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU) இன்று கையெழுத்திடப்பட இருக்கிறது.

தலைவர் கலைஞர் அவர்களால் தொடங்கப்பட்டது எதுவும் சோடை போனது கிடையாது. அதற்கான எடுத்துக்காட்டுதான் இந்த நிகழ்ச்சி.

எனக்கும் இந்த நிறுவனத்துக்கும் பல ஆண்டுகளாகத் தொடர்பு உண்டு. அக்டோபர் 2010ஆம் ஆண்டு, நான் தொழில்துறை அமைச்சராக இருந்தபோது, சாம்சங்கின் உயர்மட்ட நிருவாகிகளைச் சந்தித்து நான் பேசினேன். தமிழ்நாட்டில் சாம்சங் நிறுவனத்தின் முதலீடுகளை அதிகரிக்க வேண்டும் என்ற வேண்டுகோளையும் நான் அவர்களிடத்தில் எடுத்து வைத்தேன்.

அதை ஏற்றுக்கொண்டு 2010ஆம் ஆண்டு நவம்பர் மாதம், இந்த நிறுவனம், தன்னுடைய முதலீட்டினை ரூ.800 கோடியாக உயர்த்தியது. இதைத் தொடர்ந்து இந்த நிறுவனத்தின் குளிர்சாதனப்பெட்டி உற்பத்தித் திட்டத்தினையும் நான் துவக்கி வைத்தேன். நடப்பு ஆண்டில் இந்நிறுவனத்தின் முதலீடு,

ரூ.1,800 கோடியாக மேலும் உயர்ந்திருப்பது உள்ளபடியே மகிழ்ச்சிக்குரிய செய்தியாக இருக்கிறது.

உங்களுடைய வளர்ச்சிக்கு நானும் உதவி செய்திருக்கிறேன் என்று சொல்வதை விட, நாம் இணைந்து தமிழ்நாட்டின் வளர்ச்சிக்குத் துணையாக இருக்கிறோம் என்பது மகிழ்ச்சி அளிப்பதாக இருக்கிறது.

இவ்வாறு நீங்கள் முதலீடுகளை அதிகரிப்பதை தனிப்பட்ட ஒரு நிறுவனத்தின் வளர்ச்சியாக நான் கருதவில்லை. நீங்கள் முதலீடுகளை அதிகரிப்பதன் மூலமாக வேலைவாய்ப்புகள் உருவாகிறது. அதன்மூலமாக தமிழ்நாட்டின் தொழில் துறை வளர்கிறது. மாநிலத்தின் உற்பத்திச் சூழல் வலுப்பெறுகிறது.

இன்றையதினம், ரூ.1,588 கோடி முதலீடு மற்றும் 600 நபர்களுக்கு வேலைவாய்ப்பு என்ற வகையில், காற்றமுத்த கருவிகள் (Compressor) உற்பத்தித் திட்டத்தை நிறுவிட முன்வந்துள்ளதை வரவேற்கிறேன்.

இன்றைய காலகட்டத்தில், மின்னணுவியல்துறை, மாநிலத்தின் உற்பத்தி வரைபடத்தையே மாற்றியமைத்திடக்கூடிய வல்லமை படைத்தது. இந்திய அளவில் மின்னணுவியல் சார்ந்த உற்பத்தியில், தமிழ்நாட்டின் பங்களிப்பு 20 விழுக்காடாக இருக்கிறது. இதைக் கருத்தில்கொண்டுதான், தமிழ்நாடு அரசு இத்துறையை, வளர்ந்துவரும் துறை என வகைப்படுத்தி இருக்கிறது. உள்நாட்டு உற்பத்தியை பன்மடங்கு அதிகரிப்பதற்கான இவ்வாறான வகைப்படுத்துதல் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

மின்னணுவியல் துறை மட்டுமல்ல, எந்தத் துறையாக இருந்தாலும், அந்தத் துறையில் முன்னணி வகிக்க வேண்டும். அதன் பின்பு, முதல் நிலை என்ற அந்த இலக்கை நோக்கிப் பயணிக்க வேண்டும் என்பதுதான் இந்த அரசினுடைய குறிக்கோளாக இருக்கிறது.

2030ஆம் ஆண்டிற்குள் நமது மாநிலத்தின் பொருளாதாரத்தை 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் அளவிற்கு உயர்த்த வேண்டும் என்கிற எங்களது இலட்சிய இலக்கு உங்களுக்கு எல்லாம் தெரிந்திருக்கும் என்று நான் நம்புகிறேன்.

இதன் ஒரு பகுதியாக, தமிழ்நாட்டில் உங்கள் தயாரிப்பு வரிசையை பல்வகைப்படுத்தி, மேலும் விரிவாக்கம் செய்யுங்கள் என்று சாம்சங் நிருவாகத்தினை நான் கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, செமிகண்டக்டர் உற்பத்தித் திட்டத்தினை நிறுவிட வேண்டும், இந்தத் தருணத்தில், சாம்சங் நிருவாகத்தினை நான் வலியுறுத்தி கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இதற்கான அனைத்து உதவிகளையும் செய்திட மாநில அரசு தயாராக இருக்கிறது என்று உங்களுக்கு நான் உறுதி அளிக்கிறேன்.

நீங்கள் மட்டுமல்ல, உங்களைப் போன்ற மற்ற தொழில் நிறுவனங்களையும் தமிழகத்தை நோக்கி அழைத்து வாருங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சாம்சங் நிறுவனத்தின் இப்புதிய திட்டம் மேலும் வளர வேண்டும் என்று மனதார என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்து விடை பெறுகிறேன்.

நன்றி, வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்,*
சாம்சங் நிறுவனத்தின் ரூ.1,588 கோடி முதலீடு மற்றும் 600 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கக்கூடிய காற்றழுத்தக் கருவிகள் (Compressor) உற்பத்தித் திட்டத்தை ஸ்ரீபெரும்புதூரில் நிறுவுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்த நிகழ்ச்சியில் ஆற்றிய உரை – 15.03.2022

தமிழகத்தில் நடைபெறப்போகும் உலக செஸ் போட்டி தமிழர்களின் பெருமையை உலகறியச் செய்யும்

அனைவருக்கும் வணக்கம்.

நான் இப்போது தமிழ்நாடு உலக அரங்கில் ஒரு மைல்கல்லாய் நிலைத்திருக்கப் போகின்ற ஒரு நிகழ்வைப் பகிர்ந்துகொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். அந்தச் செய்தி என்னவென்றால், 44ஆவது உலக செஸ் ஒலிம்பியாட் போட்டியை நடத்துகின்ற வாய்ப்பை தமிழ்நாடு பெற்றிருக்கிறது. இது தமிழர்கள் அனைவருக்கும் பெருமிதம்.

விளையாட்டுப் போட்டிகள் என்றாலே ஆற்றல், திறமை, அழகு என நிறைய இருக்கும். அதிலும் செஸ் விளையாட்டுப் போட்டி என்றால், விளையாடுகிறவர்கள் நிதானத்தோடும்,

பார்க்கின்றவர்கள் படபடப்போடும் பங்கேற்கும் ஒரு அற்புதமான விளையாட்டு. இப்படிப்பட்ட அற்புதமான செஸ் விளையாட்டிற்கும் தமிழ்நாட்டிற்கும் நிறைய தொடர்பு இருக்கிறது. உலகில் கிராண்ட் மாஸ்டர் விஸ்வநாதன் ஆனந்த் தொடங்கி இன்றைக்கு பிரக்யானந்தா வரையில் தலைசிறந்த செஸ் விளையாட்டு வீரர்களைத் தொடர்ந்து உருவாக்கி வருகிறது தமிழ்நாடு.

இந்த நிலையில், சுமார் 150க்கும் மேற்பட்ட உலக நாடுகள் பங்குபெற இருக்கும் செஸ் விளையாட்டுப் போட்டி, இதுவரை இந்தியாவில் நடைபெற்ற அனைத்துவித பன்னாட்டு விளையாட்டுப் போட்டிகளில் மிகப் பெரியதாக அமைய உள்ளது. இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க வாய்ப்பை வழங்கிய பன்னாட்டு செஸ் அமைப்பிற்கும், இந்திய செஸ் அமைப்பிற்கும் நெஞ்சார்ந்த நன்றியைச் சொல்லிக் கொள்கிறேன்.

விருந்தோம்பலுக்கும், பண்பாட்டிற்கும் பெயர் பெற்ற தமிழர்களுடைய பெருமையை உலகறியச் செய்வதற்கான ஒரு நிகழ்வாக இது நிச்சயம் அமையும். உலக செஸ் போட்டியை தமிழ்நாடு அரசு மிகச் சிறப்பாக நடத்துவோம். உலக விளையாட்டு வீரர்களை இருகரம் கூப்பி வரவேற்கக் காத்திருக்கிறோம்.

நன்றி, வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள்,*
44ஆவது உலக செஸ் ஒலிம்பியாட் போட்டி தமிழ்நாட்டில்
நடக்க இருப்பது தொடர்பாக ஆற்றிய உரை – 16.03.2022

இளைஞர்களின் திறமைக்கேற்றவாறு வேலைவாய்ப்பு நிச்சயம் கிடைக்கும்

மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்களே,

மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் நண்பர் திரு.சி.வி.கணேசன் அவர்களே,

நாடாளுமன்ற உறுப்பினர் திரு.ஜி.செல்வம் அவர்களே,

சட்டமன்ற உறுப்பினர்கள்,

திரு.எஸ்.ஆர்.ராஜா அவர்களே,

திருமதி வரலட்சுமி மதுசூதனன் அவர்களே,

திரு.எஸ்.எஸ்.பாலாஜி அவர்களே,

திரு.இ.கருணாநிதி அவர்களே,

திரு.எழிலரசன் அவர்களே,

திரு.எம்.பாபு அவர்களே,

தாம்பரம் மாநகராட்சி மேயர் திருமதி க.வசந்தகுமாரி அவர்களே,

துணை மேயர் திரு.கோ.காமராஜ் அவர்களே,

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் செயலாளர்

திரு.ஆர்.கிர்லோஷ் குமார், இ.ஆ.ப., அவர்களே,

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்குநர்

திரு.கொ.வீர ராகவ ராவ், இ.ஆ.ப., அவர்களே,

கிரெசன்ட் கல்லூரியின் வேந்தர் ஆர்.எஸ்.புகாரி ரஹ்மான் அவர்களே,

செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ஆ.ர.ராகுல் நாத், இ.ஆ.ப., அவர்களே,

உள்ளாட்சி அமைப்புகளில் பொறுப்பேற்று இருக்கக்கூடிய பிரதிநிதிகளே,

வேலைவாய்ப்பு வழங்கக்கூடிய நிறுவனங்களே,

ஊடகத் துறையைச் சார்ந்திருக்கக்கூடிய தோழர்களே, நண்பர்களே,

என் பாசத்திற்கும் பேரன்பிற்கும் உரிய மாணவச் செல்வங்களே, இளைஞர்களே, உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

இந்த இனியதொரு விழாவில் கலந்துகொண்டு ஆயிரக்கணக்கான இளைஞர்களை இந்த காலை நேரத்தில் பார்க்கும் போது, நான் அதிகமான உற்சாகத்தையும், மனமகிழ்ச்சியையும் அடைந்துகொண்டிருக்கிறேன்.

கையில் பட்டத்துடனும், மனதில் கனவுகளோடு, எதிர்கால வாழ்க்கையை ஏக்கத்தோடு, அதேநேரத்தில் செயல்படும் உற்சாகத்தோடு நீங்கள் எல்லாம் இந்த நிகழ்ச்சிக்கு வந்திருக்கிறீர்கள். நிச்சயமாக சொல்கிறேன், உறுதியாக சொல்கிறேன், உங்கள் கனவுகள் உறுதியாக நிறைவேற்றப்படும். உங்களது ஏக்கங்கள் தீரும். உங்களது திறமைகளுக்கு ஏற்றவாறு வேலைவாய்ப்பு நிச்சயம் கிடைக்கும்.

உங்களுடைய எதிர்காலம் ஒளிமயமானதாக அமையும் என்று தமிழ்நாட்டினுடைய முதலமைச்சராக மட்டுமல்ல, உங்களில் ஒருவனாக, உங்களது அன்புச் சகோதரனாக, அத்தனை பேரையும் நான் வாழ்த்துவதற்கு கடமைப்பட்டிருக்கிறேன்.

அனைவருக்கும் கல்வி, அனைவருக்கும் வேலை, இதுதான், இந்த அரசினுடைய மன்னிக்கவும், நம்முடைய அரசின் நோக்கம். அதுதான் நம்முடைய அரசினுடைய இலக்கு. கல்வி என்றால் அடிப்படைக் கல்வி மட்டுமல்ல, அனைவருக்கும் உயர்கல்வி என்பதுதான் நமது அரசினுடைய இலக்காக அமைந்திருக்கிறது.

அதேபோல், அனைவருக்கும் ஏதோ ஒரு வேலை அல்ல, அனைவருக்கும் அவரவர் படிப்புக்கு ஏற்ற, தகுதிக்கு ஏற்ற வேலை வழங்கப்பட்டாக வேண்டும், அதுதான் இந்த அரசினுடைய இலட்சியம், இந்த அரசினுடைய இலக்கு. அதனால்தான், பள்ளிக் கல்வியையும், கல்லூரிக் கல்வியையும் மேம்படுத்திக் கொண்டிருக்கிறோம். அப்படி பள்ளியிலும், கல்லூரியிலும் படிக்கக்கூடிய மாணவர்களை, அவர்கள் விரும்புகின்ற வேலைக்கு தகுதியுடையவர்களாக உருவாக்கி வருகிறோம். என்னுடைய கனவுத் திட்டமாக அண்மையிலே அறிவிக்கப்பட்டு, செயல்பாட்டுக்கு

வந்து கொண்டிருக்கக்கூடிய 'நான் முதல்வன்' என்ற திட்டம் பற்றி நீங்கள் எல்லாம் கேள்விப்பட்டிருப்பீர்கள். அதை புரிந்து கொண்டிருப்பீர்கள் என்று நம்புகிறேன்.

பள்ளிப்பருவத்திலேயே வழிகாட்டு முயற்சிகளை மேற்கொண்டு கல்லூரிகளில் வளர்ச்சிக்கேற்ற பாடத்திட்டங்களைத் தேர்வு செய்ய உதவி செய்து வேலைவாய்ப்புக்களை உறுதிசெய்யக்கூடிய அரிய திட்டம்தான் "நான் முதல்வன்" என்கிற அந்தத் திட்டம்.

இளைஞர்களைப் படிப்பில், அறிவில், சிந்தனையில், ஆற்றலில், திறமையில் அவர்களை மேம்படுத்தி நாட்டுக்கு வழங்குவதுதான் இந்த "நான் முதல்வன்" திட்டத்தினுடைய நோக்கம்.

இந்தத் திட்டத்தின் சிறப்பம்சமானது, அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழக மாணவ, மாணவியர்களின் தனித் திறமைகளை அடையாளம் கண்டு, அதனை மேலும் ஊக்குவிப்பதுதான் இந்தத் திட்டத்தினுடைய இலட்சியம். அடுத்தடுத்து அவர்கள் என்ன படிக்கலாம், எங்கு படிக்கலாம், எப்படிப் படிக்கலாம் என்றும் வழிகாட்டப்படும்.

அறிவுத்திறத்தால் அனைத்து மாணவர்களையும், இளைஞர்களையும் வளர்த்தெடுக்கக்கூடிய திட்டம்தான் அந்தத் திட்டம். வேலைவாய்ப்புகளை உருவாக்குவது அந்த வேலைக்குத் தகுதியான இளைஞர்களை உருவாக்குவது என்கிற சக்கரச் சுழற்சியுடன் இந்த அரசு செயல்பட்டு வருகிறது.

அந்த வரிசையில் இந்த நாள் இங்குள்ள இளைஞர்களுக்கு மிகமிக முக்கியமான நாள். படித்த இளைஞர்களுக்குத் தகுதியான வேலைவாய்ப்பினை ஏற்படுத்தித் தருவதை இந்த அரசு தனது முக்கியக் குறிக்கோளாகக் கொண்டிருக்கிறது.

இந்த அரசு பொறுப்பேற்ற மே 2021 முதல் இன்று வரை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையால் 36 பெரிய அளவிலான தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம்களும் 297 சிறிய அளவிலான வேலைவாய்ப்பு முகாம்களும் நடத்தப்பட்டிருக்கிறது.

இந்த தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்கள், வேலையளிப்போர் மற்றும் வேலை தேடுவோர் ஆகிய இரண்டு தரப்பையும் நேரடியாக இணைத்து அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ள ஒரு பாலமாக அமைந்திருக்கின்றன.

இதுவரை நடந்த வேலைவாய்ப்பு முகாம்களில் 5,708 நிறுவனங்கள் கலந்துகொண்டன. 2,50,708 பேர் வேலைவாய்ப்புகளை நாடி வந்தார்கள். அவர்களில் 41,213 பேருக்கு வேலை கிடைத்திருக்கிறது. இதில் குறிப்பிடத்தக்க அம்சம் என்னவென்று கேட்டீர்கள் என்றால், 517 பேர் மாற்றுத்திறனாளிகள் என்பதும் நான் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

புதிய மாவட்டமாக இந்த செங்கல்பட்டு மாவட்டம் துவக்கப்பட்ட பிறகு முதல் முறையாக தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் இன்று நடைபெறுகிறது. இந்த முகாமில் வேலைவாய்ப்பினை பெற்ற இளைஞர்களுக்கு உரிய பணி நியமன ஆணைகளை வழங்குவதில் நான் பெறும் மகிழ்ச்சி அடைந்துகொண்டிருக்கிறேன்.

இந்த வேளையில் நான் மூன்று வேண்டுகோள்களை உங்கள் முன்னால் வைக்க விரும்புகிறேன். முதலாவதாக, இதுபோன்ற வேலைவாய்ப்பு முகாம்களை, தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் நடத்தவேண்டும். அதைத்தான் அந்தப் பொறுப்பிற்குரிய அமைச்சராக இருக்கின்ற திரு.கணேசன் அவர்களை நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இரண்டாவதாக, சொல்ல வேண்டுமென்றால், இந்த முகாம்களில் பங்கேற்கும் அனைத்து நிறுவனங்களுக்கும் ஒரு வேண்டுகோள். "நான் முதல்வன்" திட்டத்தில் தமிழ்நாடு அரசுடன் இணைந்து தமிழ்நாட்டினுடைய இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பும், திறன் பயிற்சியும் வழங்கி தமிழ்நாட்டில் வேலையின்மை என்பதே இல்லாத நிலையினை உருவாக்க அயராது உழைக்குமாறும் தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்திட கைகொடுக்குமாறும் உங்களை வேண்டி, விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

மூன்றாவதாக, இந்த வேலைவாய்ப்பு முகாம்களில் பங்கேற்று வேலை பெற்ற இளைஞர்களுக்கும், வேலைவாய்ப்பு பெறமுடியாத இளைஞர்களுக்குமான ஒரு வேண்டுகோள். வேலை பெற்றவர்கள் தங்கள் திறமைகளை வளர்த்துக்கொண்டு மேலும் முன்னேற வேண்டும். வேலையைப்பெற முடியாதவர்கள் சோர்ந்து போகாமல், கவலைப்படாமல் நீங்கள் அயர்ந்து அதில் உங்கள் கவனத்தை செலுத்தவிடாமல், வேலைவாய்ப்புத் திறன்களை நீங்கள் வளர்த்துக்கொண்டு, அடுத்தக் கட்டத்தை நோக்கிச் செல்லத் தயாராக இருக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, இந்த நோக்கத்தைப் பற்றி நம்முடைய மாண்புமிகு திரு.கணேசன் அவர்களும், மாண்புமிகு திரு.அன்பரசன் அவர்களும், இந்தத் துறையைச் சார்ந்திருக்கக்கூடிய அதிகாரிகளும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் உங்களிடத்திலே விளக்கமாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். எனவே, அதைபற்றி நான் அதிகம் விளக்கம் சொல்ல வேண்டிய தேவையில்லை என்று நான் கருதுகிறேன். நான் முதலமைச்சராக உங்களுடைய அன்போடு, ஆதரவோடு இந்தப் பொறுப்பை ஏற்ற பிறகு எத்தனை முறை

முதலீட்டாளர்கள் மாநாட்டை நடத்தி இருக்கிறோம். அதன் மூலமாக எப்படியெல்லாம் வேலைவாய்ப்புகள் உருவாக்குவதற்கான திட்டங்களைத் தீட்டிக்கொண்டிருக்கிறோம் என்பது உங்கள் அனைவருக்கும் நன்றாகத் தெரியும். எல்லோரும் இன்றைக்கு என்னைப் பாராட்டுகின்ற நேரத்தில் நம்பர்–1 முதலமைச்சர், நம்பர்–1 முதலமைச்சர் என்று எல்லோரும் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். கேட்பதற்கு மகிழ்ச்சியாகத்தான் இருக்கிறது. ஆனால், என்னைப் பொறுத்தவரையில், நம்பர்–1 முதலமைச்சர் என்பதை விட, நம்பர்–1 தமிழ்நாடு என்று சொல்லக்கூடிய நிலை உருவாக வேண்டும். அதற்கு "வேலை இல்லை, வேலை கிடைக்கவில்லை, வேலைவாய்ப்பைப் பெற முடியாத நிலையில் இருக்கிறேன்" என்று அந்த சொல்லை இந்த 5 ஆண்டு காலத்திற்குள் நிச்சயமாக நாங்கள் போக்குவோம் என்ற உறுதியை உங்களிடத்தில் எடுத்துச் சொல்லி, வந்திருக்கக்கூடிய உங்கள் அத்தனைப் பேருக்கும் என்னுடைய நல்வாழ்த்துகளைச் சொல்லி என் உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி, வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள்,*
செங்கல்பட்டு மாவட்டம், வண்டலூரில், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை மூலம் மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமினைத் தொடங்கிவைத்து
ஆற்றிய உரை – ***20.03.2022***

வேற்றுமையில் ஒற்றுமை காண வேண்டும்

உலகத்தரத்திலான இந்த எக்ஸ்போ கண்காட்சியை நடத்தி வரும் துபாய் அரசுக்கு எனது நெஞ்சார்ந்த பாராட்டுகளை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன். இந்நாட்டின் தரத்துக்கும் திறத்துக்கும் இந்த நிகழ்வின் வெற்றியே சான்றாக அமைந்திருக்கிறது.

இந்தக் கண்காட்சியின் இந்திய அரங்கில் 'தமிழ்நாடு வாரத்தைத்' தொடங்கி வைப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். முக்கியமான வளர்ந்து வரும் துறைகளில் எங்கள் மாநிலத்தின் ஆற்றலை வெளிப்படுத்துவதற்கு ஒரு நல்ல வாய்ப்பாக இந்த எக்ஸ்போ கண்காட்சி அமைந்துள்ளது. உற்பத்தித் துறையில்

சிறந்து விளங்கும் தமிழ்நாட்டில் தயாரிக்கப்பட்ட பலவகைப் பொருட்களும் இந்த அரங்கில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. சுற்றுலா, மருத்துவம், கலை – பண்பாடு ஆகிய துறைகளோடு, தொழிற்பூங்காக்கள் மற்றும் கவனம் செலுத்த வேண்டிய துறைகள் பற்றிய தகவல்கள் ஆகியவையும் நாள் முழுதும் இங்குப் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. இந்த அரங்கை யார் பார்வையிட்டாலும், தமிழ்நாடு அனைத்துத் துறைகளிலும் சாதித்துள்ள ஒருங்கிணைந்த வளர்ச்சியைப் பற்றிய புரிதலை அவர்களுக்கு இந்த அரங்கு வழங்கும்.

இந்தியத் தூதரகத்துக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு, இந்த துபாய் எக்ஸ்போ மற்றும் அதில் இடம்பெற்றுள்ள இந்திய அரங்கின் அமைப்பாளர்களுக்கு மீண்டும் ஒருமுறை எனது பாராட்டுகளை, வாழ்த்துக்களைக் கூறி என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன், நன்றி.

தமிழ்நாடு அரங்கில் நடைபெற்ற கலைநிகழ்ச்சியை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு, பேசியதாவது:

உங்கள் அனைவருக்கும் என்னுடைய தமிழ் வணக்கம்.

துபாயில் நடைபெறக்கூடிய இந்தச் சிறப்புக்குரிய கண்காட்சியில் கலந்து கொள்வதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். தமிழகத்தினுடைய முதலமைச்சராக பொறுப்பேற்று முதல் முறையாக இந்த துபாய்க்கு வருவதில் அளவு கடந்த மகிழ்ச்சி அடைகிறேன். எப்படி உலகத்தில் இருக்கக்கூடிய எந்தப் பகுதிகளாக இருந்தாலும், எந்த நாடுகளாக இருந்தாலும், அங்கு இருக்கக்கூடிய தமிழர்களுக்கு நம்முடைய தமிழக அரசு குரல் கொடுத்துக் கொண்டிருக்கிறதோ, பாதுகாப்பாக இருக்கிறதோ, அது தொடர்ந்து

நடைபெறும். எனவே ஒன்றிணைந்து வேற்றுமையிலே ஒற்றுமை காணவேண்டிய நிலையில் இந்தச் சிறப்பான கண்காட்சி நடத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. இதில் நம்முடைய தமிழ்க் கலாச்சாரத்தை, தமிழ்ப் பண்பாட்டை உணர்த்தக்கூடிய வகையில் இந்த கலை நிகழ்ச்சி நடத்தியிருக்கக்கூடிய அந்தக் கலைஞர்களுக்கெல்லாம் மீண்டும், மீண்டும் என்னுடைய தமிழ் வணக்கத்தைத் தெரிவித்து, உங்கள் அத்தனை பேருக்கும் நன்றி, நன்றி என்று கூறி விடைபெறுகிறேன்.

நன்றி, வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள்,*
துபாய் உலக கண்காட்சியின் இந்திய அரங்கில் தமிழ்நாடு
அரங்கினை திறந்துவைத்து ஆற்றிய உரை ***– 25.03.2022***

எங்கள் வளர்ச்சிக்கு வித்திடுவது
உங்கள் வளர்ச்சிக்கும் துணை புரியும்

வணக்கம்!

வணக்கம் துபாய்!

Mr. Suresh Kumar, Chairman, IBPC Dubai, Founder & Mentor, Tricolour Values Group,

Mr. Yusuff Ali, Chairman & Managing Director, LuLu Group International,

His Excellency Mr. Jamal Saif Al Jarwan, Secretary-General, The UAE International Investors Council,

Dr. Aman Puri, Consul-General,

Hon’ble Tamil Nadu Minister for Industries Mr. Thangam Thennarasu,

Additional Chief Secretary to Government of Tamil Nadu, Industries Department Mr. S. Krishnan,

Mr. Arun Roy, MSME Secretary,

MD & CEO of Guidance Mrs. Pooja Kulkarni,

Distinguished guests! Ladies and Gentlemen,

‘திரைகடல் ஓடியும் திரவியம் தேடு’ என்ற தன்னம்பிக்கை மொழியை ஏற்று துபாய்க்கு குடிபெயர்ந்து இந்த மண்ணையும் வளமாக்கியுள்ள எனது தமிழ்ச் சொந்தங்களே !

Very Good Afternoon to all.

அனைவருக்கும் எனது அன்பார்ந்த வணக்கங்கள்.

I am very happy to address this great gathering of captains of business, trade and industry.

We are committed to develop and strengthen these relations.

I am happy and honoured to be here.

UAE and Tamil Nadu share a long history of rich cultural and trade relations. We are committed to develop and strengthen this relations.

ஐக்கிய அரபு நாடுகளுக்கும் தமிழ்நாட்டுக்கும் இடையேயான உறவு முன் எப்போதையும் விட இப்போது வலுவாக வளர்ந்து வருகின்றது.

தமிழ்நாடு மற்றும் ஐக்கிய அரபு நாடுகள் இடையே பொருளாதார மற்றும் வர்த்தக உறவுகளை மேம்படுத்துவதில் நம் அனைவருக்கும் ஆர்வம் இருக்கிறது. இந்த அரங்கில் பெருமளவில் நீங்கள் இங்கு கூடி இருப்பதற்கு இதுவே சாட்சியாக அமைந்துள்ளது.

ஓர் அழகான நகரத்தில் நீங்கள் வசிக்கிறீர்கள். துபாய் மிக அழகான நகரம் மட்டுமல்ல, வர்த்தகம் அதிகம் நடைபெறக்கூடிய நகரமாகவும் அமைந்திருக்கிறது.

50 ஆண்டுகளுக்கு முன்னால், ஒரு இலட்சத்திற்கும் குறைவான மக்கள் மட்டுமே வாழ்ந்து வந்த இந்த துபாய், இன்று உலகமே வியந்து பார்க்கும் நகரமாக வளர்ந்திருக்கிறது.

இன்று நவீன கட்டடக்கலை சாதனைகளுடன் உலகளாவிய வணிக மையமாக மிகப்பெரும் வளர்ச்சியைக் கண்டிருக்கிறது. இந்த வளர்ச்சி கற்பனைகளுக்கு எல்லாம் அப்பாற்பட்டது.

உங்கள் ஊரின் புகழை நான் சொல்லி நீங்கள் தெரிந்துக் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. ஆனாலும், நான் அறிந்தும் தெரிந்தும் வைத்திருப்பதை உங்களுடன் மட்டுமல்ல, இந்த நிகழ்ச்சியை ஊடகங்களில் பார்த்துக் கொண்டிருக்கக்கூடிய தமிழ்நாட்டு மக்களுக்கும் சேர்த்துத்தான் என்னுடைய உணர்வுகளை நான் இங்கே பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

- ✶ 2,217 அடி உயரம் கொண்ட உலகிலேயே உயரமான புர்ஜ் கலிபா,
- ✶ செயற்கையாக உருவாக்கப்பட்ட பாம் ஜீமேரா தீவு,
- ✶ 5.5 கி.மீ நீளம் கொண்ட உலகிலேயே மிக நீளமான தங்கச் சங்கிலி,
- ✶ மிகப்பெரிய மால்கள்,
- ✶ மிகப்பெரிய மீன்காட்சியகம்,

- ✶ மலர் பூங்கா என துபாயில் பார்க்கும் இடமெல்லாம் பிரமிப்பாகவும் அழகாகவும் இருக்கிறது.
- ✶ பறக்கும் கார்கள் முதல் தானியங்கி ரயில்கள் வரை உயர் தொழில்நுட்பப் போக்குவரத்தில் தலைசிறந்து துபாய் விளங்கிக் கொண்டிருக்கிறது.
- ✶ துபாயின் அழகைக் கண்டு ரசிக்க ஆண்டுதோறும் சராசரியாக 17 மில்லியன் சுற்றுலாப் பயணிகள் எல்லா நாடுகளிலிருந்தும் வருகிறார்கள்.

தமிழ்நாடு மற்றும் துபாய் இடையே வளர்ந்து வரும் பொருளாதார உறவுகளை மேம்படுத்தத்தான் நான் இப்போது இங்கே வந்திருக்கிறேன். தமிழ்நாட்டில் அதிக முதலீடுகளை செய்யவேண்டும் என உங்களையெல்லாம் கேட்டுக்கொள்ள வேண்டி உங்களைத் தேடி, நாடி நான் வந்திருக்கின்றேன்.

முதலமைச்சராக ஆட்சிப்பொறுப்பை ஏற்றபிறகு, நான் மேற்கொள்ளக்கூடிய முதலாவது அயல்நாட்டுப்பயணம் இந்தப் பயணம் தான், இந்த துபாய் பயணம் தான். இந்த முதல் பயணமும் ஐக்கிய அரபு அமீரகத்தின், துபாய் நகரமாக அமைந்தது எனக்கு மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது. இந்தியாவின் மிகப் பெரிய வர்த்தகப் பங்குதாரர்களில் ஒன்றாகவும், ஏற்றுமதிகளுக்கான மிகப்பெரிய நுழைவாயிலாகவும் துபாய் விளங்குகிறது.

துபாய் மக்கள் ஒழுக்கம், கடின உழைப்பு மற்றும் சட்டத்தை மதிக்கக்கூடிய நற்பெயரைப் பெற்றவர்கள். அதனால் தான் உங்களை நாடி நான் வந்திருக்கிறேன்.

ஐக்கிய அரபு நாடுகளில் 4 இலட்சத்திற்கும் மேற்பட்ட தமிழ் பேசும் மக்கள் பணியாற்றியும், வணிகம் செய்தும் வருகின்றனர். தமிழர்களின் கடின உழைப்பு மற்றும் விடாமுயற்சி, ஐக்கிய அரபு நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்கு மிகப் பெரிய பங்களிப்பை

அளித்து வருவது அனைவரும் அறிந்த உண்மை. எனவே, துபாயை வெளிநாடாக நினைக்க முடியாத அளவுக்கு தமிழர்கள் அதிகம் வாழக்கூடிய நாடாகவும் இது இருக்கிறது.

The COVID pandemic has affected economies all over the world.

Despite the pandemic, in the last ten months alone, Tamil Nadu has signed 124 MoUs attracting investment of 8 billion US Dollars, creating employment opportunities for nearly two lakh persons.

Tamil Nadu has registered a positive GDP growth rate of 5.8% in 2020-2021 in contrast to negative growth in most economies. This clearly shows the faith and confidence that Global investors have reposed in Tamil Nadu. Our strength is our human resources.

தமிழ்நாடு, வணிக மற்றும் வர்த்தக வாய்ப்புகள் நிறைந்த ஒரு மாநிலம். கிட்டத்தட்ட ஏழரைக் கோடி மக்களைக் கொண்டிருக்கக்கூடிய மாநிலம்.

2030ஆம் ஆண்டுக்குள் தமிழ்நாட்டை 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரமாக மாற்றிடக்கூடிய வகையில் ஒரு தொலைநோக்குப் பார்வையுடன் நாங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம். அந்த இலட்சிய இலக்கினை அடைவதற்காக, தமிழ்நாட்டின் உள்கட்டமைப்புகளை மேம்படுத்துதல், பணியாளர்களின் திறனை மேம்படுத்துதல், வருங்கால தொழில் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு பணியாளர்களை தயார்படுத்துதல் போன்ற பல முன்னேற்ற நடவடிக்கைகளை நாங்கள் மேற்கொண்டிருக்கிறோம்.

இந்தச் சூழ்நிலையில், நீங்கள் எங்கள் மாநிலத்தில் முதலீடுகளை செய்வதற்கான வாய்ப்புகளும் சாத்தியக்கூறுகளும் ஏராளமாக உள்ளன.

வாருங்கள்! இதற்கான பயணத்தில் இணைந்து நாம் எல்லோரும் பயனடைவோம் என்று இந்தத் தருணத்தில் உங்களுக்கு எல்லாம் நான் அன்போடு அழைப்பு விடுக்கின்றேன்.

தமிழ்நாட்டில் உள்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் ரியல் எஸ்டேட் வணிகத்திற்கு, மிகப்பெரிய வாய்ப்புகள் இருக்கின்றன. அது மட்டுமா ? சுற்றுலாத் துறையிலும் விருந்தோம்பல் துறையிலும் எங்கள் மாநிலத்தில் வாய்ப்புகள் கொட்டிக் கிடக்கின்றன.

வேளாண்மைத் துறையைப் பொறுத்தவரையில் குளிர்பதனக் கிடங்குகள், சேமிப்புக்கிடங்குகள் ஆகியவற்றின் தேவை எங்களுக்கு உள்ளது. நிதி நுட்பம், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, தகவல் தரவு மையங்கள், வான்வெளி மற்றும் பாதுகாப்பு ஆகிய துறைகளிலும் சிறந்த உட்கட்டமைப்புகளை நாங்கள் உருவாக்கியிருக்கிறோம். மின்னணுவியல் துறையைப் பொறுத்த வரையில், மின் வாகனங்கள், மின்னேற்றி நிலையங்கள் போன்றவற்றில் முதலீடுகள் வரவேற்கப்படுகின்றன.

புத்தொழில்களிலும், புத்தாக்கத் தொழில்களிலும் முதலீடுகளை வரவேற்கிறோம். மேற்கூறிய துறைகளில் ஐக்கிய அரபு நாடுகளின் வணிகங்களுக்கு மிகப் பெரிய வாய்ப்புகள் உள்ளன.

தமிழ்நாட்டின் **2**ஆவது பெரிய துறைமுகம் மற்றும் அகில இந்திய அளவில் **3**ஆவது பெரிய கொள்ளளவு கொண்ட துறைமுகம் தூத்துக்குடி. அங்கு சர்வதேச அறைகலன் பூங்காவிற்கு Furniture Park சில வாரங்களுக்கு முன்னால் அதற்குரிய அடிக்கல் நான் நாட்டியிருக்கிறேன்.

இந்தியாவிலேயே, முதன் முதலாக, தமிழ்நாட்டில் தான் இத்தகைய சர்வதேச அறைகலன் பூங்கா அதாவது Furniture Park அமைக்கப்பட இருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. 1,156 ஏக்கர் பரப்பளவில் தூத்துக்குடியில் அமைக்கப்பட்டிருக்கக்கூடிய இந்தப் பூங்காவில், முதலீடுகளுக்கான வாய்ப்புகள் மிக அதிக அளவில் இருக்கிறது. 70–80 விழுக்காடு மூலப்பொருட்கள் தேவையை அங்கேயே பூர்த்தி செய்திடும் வகையில் முழு சூழல் அமைப்பையும் அந்தப் பூங்காவில் உருவாக்க நாங்கள் திட்டமிட்டிருக்கிறோம். அடிக்கல் நாட்டிய அன்றே, அந்த அறைகலன்பூங்காவில் 375 மில்லியன் டாலர் அளவிற்கு முதலீடுகள் ஈர்க்கப்பட்டிருக்கிறது. நம்பிக்கையுடன் முதலீடுகளை மேற்கொள்வதற்கான தகுந்த இடம் எங்களது தூத்துக்குடி சர்வதேச அறைகலன் பூங்கா Furniture Park.

உற்பத்தி, சேவைகள் உட்பட பொருளாதாரத்தின் எந்தத் துறையிலும் முதலீடுகளை ஈர்ப்பதும், தமிழ்நாட்டை உலகளாவிய முதலீட்டு மையமாக மேம்படுத்துவதும் தான் எங்களுடைய குறிக்கோள்.

பொருளாதார வளர்ச்சியினை அதிகரித்து, அதன்மூலம் சமூகநலம் பேணுதல் என்கிற நோக்குடன் செயல்பட்டு வரக்கூடிய நாங்கள், எங்கள் முதலீட்டுக் கோரிக்கைகளை உங்கள் முன் வைத்துள்ளோம்.

- ஹூண்டாய்,
- ப்யூஜோ,
- BMW,
- டெய்ம்லர்,
- கேட்டர்பில்லர்,
- அசோக் லேலண்ட்,
- TVS,

* ரெனால்ட் நிஸ்ஸான்,
* ஃபாக்ஸ்கான்,
* டெல்டா,
* டெல்,
* சால்காம்ப்,
* டாட்டா எலெக்ட்ரானிக்ஸ்,
* சியட்,
* மிச்செலின்,
* MRF,
* சாம்சங்,
* கிரண்ட்ஃபோஸ் மற்றும் L&T ஆகிய எண்ணற்ற உலகளாவிய, புகழ்பெற்ற நிறுவனங்கள், தங்களது உற்பத்தித் திட்டங்களை தமிழ்நாட்டில் அமைத்திருக்கிறது.

மேலும், 75க்கும் மேற்பட்ட பார்ச்சூன் 500 நிறுவனங்கள் தமிழ்நாட்டில் அமைந்திருக்கின்றன. பல்வேறு நாடுகளின் முதலீட்டாளர்கள் மற்றும் தூதரக அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு முதலீடுகளை ஈர்த்திடுவதற்கு ஏதுவாக, வழிகாட்டி (GUIDANCE) நிறுவனத்தில், நாடுவாரியாக பிரத்தியேக அமைவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் தமிழ்நாட்டின் மீது வைத்திருக்கக்கூடிய நம்பிக்கை இதன்மூலம் வெளிப்படுகிறது. தொழில் புரிவதற்கும், முதலீடுகள் மேற்கொள்வதற்குமான அழைப்புகளுக்கு எங்கள் கதவுகள் எப்போதும் திறந்திருக்கும்.

உலகத் தரத்திலான உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் வணிக சூழல் அமைப்பினை தொடர்ந்து மேம்படுத்த முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறோம். எல்லா தரவரிசைகளிலும் தமிழ்நாடு

முன்னேறி வருகிறது. மாநிலம் முழுவதும் உள்ள பெருந்தொழிலதிபர்கள் மற்றும் தொழில் முனைவோரின் சான்றுகளிலும் அது வெளிப்படுகிறது.

Independent surveys have validated Tamil Nadu's position as a leading State in good governance, economic growth, social and public health indicators. They also bear testimony to our vision of bringing inclusive growth.

தமிழ்நாடு மற்றும் துபாய் இடையேயான பொருளாதார மற்றும் உணர்வுப் பூர்வமான பிணைப்புகள் ஏற்கெனவே வலுவாக இருக்கிறது. இதை மேலும் வலுப்படுத்துவதற்கான சாத்தியக் கூறுகள் பெருமளவில் இருக்கிறது என்பதை இங்கு நான் மீண்டும் உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

வாய்ப்புகள் ஏராளமாக உள்ள மாநிலம் தமிழ்நாடு என்பது உங்களுக்குத் தெரியும். எங்கள் வளர்ச்சிக்கு வித்திடுவது, உங்கள் வளர்ச்சிக்கும் துணை புரியும் என்று நான் உறுதியளிக்கிறேன். எங்கள் வளர்ச்சியிலும் பங்கேற்று, நீங்களும் பயன் அடைந்திடுமாறு மீண்டும் நான் உங்களுக்கு அன்புடன் அழைப்பு விடுக்கிறேன். வாருங்கள், இணைந்து பயணிப்போம், இணைந்து வளர்ச்சி பெறுவோம்.

Once again I take this opportunity to invite you to Tamil Nadu, to engage in a partnership of investment, innovation, growth and prosperity.

I wish you all success in your endeavours.

நன்றி, வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

*திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்,*

துபாயில் நடைபெற்ற ஐக்கிய அரபு நாடுகளின் முதலீட்டாளர்கள்

*சந்திப்பில் ஆற்றிய உரை – **26.03.2022***

ரூ.6,100 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாட்டில் தொழில்கள் தொடங்க ஒப்பந்தங்கள்

இனிய சகோதரர் மாண்புமிகு திரு.தங்கம் தென்னரசு அவர்களே!

மன்னார்குடி சட்டமன்ற உறுப்பினர் அருமைத் தம்பி டி.ஆர்.பி.ராஜா அவர்களே!

நாடாளுமன்றத்தினுடைய மேலவை உறுப்பினர் அருமைத் தம்பி புதுக்கோட்டை அப்துல்லா அவர்களே!

நிறைவாக நன்றியுரை ஆற்றவிருக்கக்கூடிய டாக்டர் ரவிச்சந்திரன் அவர்களே!

பல்வேறு மாநிலத்தினுடைய தொழில் முனைவோர்களே!

இந்திய தூதரக அதிகாரிகளே!

நமது இந்தியாவினுடைய பல்வேறு மாநிலத்தைச் சார்ந்திருக்கக்கூடிய சொந்தங்களே!

அமீரக காவல் துறை அதிகாரிகளே!

பெரியோர்களே!

தாய்மார்களே!

என் உயிரோடு கலந்திருக்கக்கூடிய தலைவர் கலைஞர் அவர்களின் உயிரினும் உயிரான அன்பு உடன்பிறப்புகளே!

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்!

அபுதாபி வாழ் தமிழ் உடன்பிறப்புக்களிடத்தில் முதலில் என்னுடைய அபுதாபி மாலை வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்ள நான் விரும்புகிறேன்.

நான்கு நாட்களாக துபாயிலும், இந்த அபுதாபி பகுதியிலும் நான் ஒரு சுற்றுப் பயணத்தை நடத்திக் கொண்டிருக்கிறேன். தமிழகத்திலே தான் சுற்றுப் பயணம் நடத்துவது எனக்கு வழக்கம். அவர்கள் அழைத்த இடங்களுக்கு எல்லாம் நான் போவது உண்டு. அப்படி அழைக்கப்பெறும் இடங்களிலெல்லாம் எனக்கு வரவேற்புக்களை மகிழ்ச்சியோடு, உற்சாகத்தோடு, ஊக்கத்தோடு அவர்கள் என்னை வரவேற்பது உண்டு. அதற்குக் கொஞ்சம் கூட குறைவில்லாமல், கொஞ்சம் கூட இல்லை, ஒரு இன்ச் கூட குறைவில்லாமல், இந்த நான்கு நாட்களாக நான் திக்குமுக்காடிப் போயிருக்கிறேன். எதைப் பேசுவது, என்ன பேசுவது, எப்படிப் பேசுவது என்று நான் யோசிக்கின்ற நேரத்தில், பேசாமல் உங்கள் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தால் போதும், அப்படி என்கிற உணர்வு தான் என்னை ஆட்கொண்டிருக்கிறது.

நான் நலம்!

நீங்கள் அனைவரும் நலமா? நீங்கள் நலமாக இருக்கிறீர்கள் என்பது உங்களது முகத்தைப் பார்த்தாலே தெரிகிறது. உங்களுடைய மகிழ்ச்சியை, உங்களுடைய எழுச்சியை, உங்களுடைய உணர்ச்சியை, ஆர்வத்தை, ஆரவாரத்தை பார்க்கின்றபோதே எனக்குத் தெரிகிறது. அப்படி இருக்கக்கூடிய உங்களைப் பார்க்கிறபோது எனக்கு மகிழ்ச்சி

தான். எனக்கும் இப்போது ஒரு உத்வேகம் வருகிறது. எத்தனையோ கடல் மைல்களைத் தாண்டி இங்கே வந்து தொழில் முன்னேற்றத்திற்கு குறிப்பாக, தமிழகத்தினுடைய முன்னேற்றத்திற்கு திட்டங்களைத் தீட்டுகிற, அதற்காக ஒப்பந்தங்களை போடுகிற அந்தப் பணியை நானும் நம்முடைய தங்கம் தென்னரசு அவர்களும், எங்களோடு வருகை தந்திருக்கக்கூடிய அரசு அதிகாரிகளும், அந்தப் பணியைச் செய்து கொண்டிருக்கிறோம். ஆகவே, என்னைப் பொறுத்தவரைக்கும் நான் உங்களிடத்தில் சொல்ல வேண்டுமென்றால், தமிழ்நாட்டினுடைய முதலமைச்சராக மட்டும் மட்டுமல்ல, உங்களில் ஒருவனாக, அதனால் தான் நீங்கள் நம்மில் ஒருவராக நீங்கள் என்னை ஏற்றுக் கொண்டிருக்கிறீர்கள். உள்ளபடியே எனக்கு மகிழ்ச்சி.

தமிழ்நாட்டை நோக்கி பல தொழில் நிறுவனங்களை ஈர்ப்பதற்கான பயணமாக என்னுடைய பயணம் என்று சொல்லப்பட்டாலும், அதற்காக சுற்றுப் பயணத்தை வகுத்திருந்தாலும், இன்னும் அதைத் தாண்டி சொல்ல வேண்டுமென்றால், தமிழ்நாட்டை நோக்கி தமிழர்களின் மனங்களை ஈர்க்கின்ற பயணமாக என்னுடைய பயணம் அமைந்திருக்கிறது.

ஆனால், இந்தப் பயணம் இவ்வளவு வெற்றி அடைந்து கொண்டிருக்கிறதே, இவ்வளவு சிறப்பாக நடந்து கொண்டிருக்கிறதே, ஊடகங்களில் பார்க்கிறார்கள், பத்திரிகைகளில் படிக்கிறார்கள், தொலைக்காட்சியில் இந்தக் காட்சிகளையெல்லாம் தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய எல்லோரும் பார்க்கிறார்கள். ஆனால் ஒரு சிலருக்கு இந்த வெற்றியைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. இதைத் திசை திருப்ப வேண்டும், ஒரு தவறான பிரச்சாரத்தை நடத்திட வேண்டும் என்று திட்டமிட்டு, நான் பணத்தை எடுத்துக் கொண்டு வந்திருப்பதாக, நான் அரசியல் பேசுவதாக நீங்கள் கருதக்கூடாது, நான் அரசியல் பேசினேன் என்றால் நீங்கள் என்னை விடமாட்டீர்கள்,

அது வேறு அதுவும் எனக்குத் தெரியும். நான் பணத்தை எடுத்துக் கொண்டு வரவில்லை, தமிழ்நாட்டில் வாழக்கூடிய மக்களுடைய மனத்தைத் தான் எடுத்து வந்திருக்கிறேன், அதுதான் உண்மை.

இனத்தால், மொழியால், பண்பாட்டால், நாகரிகத்தால், பழக்க வழக்கங்களால், அன்பால், பண்பால், நடத்தையால், அடுத்தவருக்கு உதவி செய்யக்கூடிய குணத்தால், இன்னொருவர் பாதிக்கப்படும்போது துடிக்கக்கூடிய துடிப்பால் நாம் அனைவரும் தமிழினத்தைச் சார்ந்திருக்கக்கூடியவர்கள். எனக்கு ஒரு சந்தேகம், தமிழ்நாட்டில் தான் இருக்கிறோமா, துபாயில் இருக்கிறோமோ அல்லது அபுதாபியில் இருக்கிறமோ என்று ஒரு சந்தேகம். எங்கு இருக்கிறோமோ தமிழரிடத்தில் இருக்கிறோம், தமிழர் உள்ளம் படைத்திருக்கக்கூடிய உங்களிடத்தில் இருக்கிறோம். அதுதான் எனக்கு முக்கியம். அந்த நட்பின் அடிப்படையில்தான் உங்களைத் தேடி நான் வந்திருக்கிறேன். அதேபோல, என் முகத்தைப் பார்க்க, என்ன பேசப் போகிறேன் என்பதைக் கேட்க நீங்களும் வந்திருக்கிறீர்கள்.

இதெல்லாம் தமிழுக்கும் தமிழர் நலனுக்கும் எதிராகச் சிந்திக்கக்கூடியவர்களுக்குப் புரியாது, உண்மையான தமிழனாக இருந்தால் அவனுக்குப் புரியும். பொய்களையும், அவதூறுகளையும் கட்டமைத்து, வெறுப்பு என்று சொல்லக்கூடிய நஞ்சை நெஞ்சில் விதைத்து அதன்மூலம் ஆதாயம் தேடலாம் என்று கணக்குப் போடுபவர்களுக்கு இதெல்லாம் புரியாது!

உங்களில் ஒருவனான நான், உங்களது தமிழ்ச் சொந்தங்களால் தமிழ்நாட்டின் முதலமைச்சர் பொறுப்புக்கு வந்திருக்கிறேன், அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டு செயலாற்றிக் கொண்டிருக்கிறேன். நான் எப்போதும் சொல்வது உண்டு. துபாயில் கூட பேசுகிற போது, குறிப்பிட்டுச் சொன்னேன். முதலமைச்சர் பொறுப்பு என்று

சொன்னேனே தவிர, முதலமைச்சர் பதவி என்று சொல்லவில்லை. என்னை ஆளாக்கி இருக்கக்கூடிய நம்முடைய தலைவர் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் பலமுறை எங்களுக்கு சொல்லக்கூடிய அறிவுரைகள், ஆலோசனைகள் என்னவென்றால், இன்றைக்கு நீங்கள் சட்டமன்ற உறுப்பினர்களாக, நாடாளுமன்ற உறுப்பினர்களாக, அமைச்சர்களாக அல்லது பல மக்களுக்கு பணியாற்றக்கூடிய பொறுப்புக்களில் வந்திருக்கிறீர்கள் என்றால், அதை நீங்கள் பொறுப்பாக எண்ணி, பொறுப்பாகப் பணியாற்ற வேண்டும். அதை யாரும் பதவியாக நினைத்துவிடக் கூடாது, ஏதோ ஒரு பெரிய சிம்மாசனம் கிடைத்திருக்கிறது என்று நினைத்துவிடக் கூடாது. என்னுடைய உள்ளத்தில் என்றைக்கும் மறக்க முடியாத, மறைத்து வைக்க முடியாத ஒரு உண்மை என்னவென்றால், நான் முதன்முதலில் **1996**ஆம் ஆண்டு சென்னை மாநகரத்தினுடைய மேயராக, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் மேயராக பொறுப்பேற்றேன். அப்படி பொறுப்பேற்ற அந்த மேயர் பொறுப்பில் சென்று அமர்கிற நேரத்தில், அதில் முதல் பேச்சு என்னுடைய பேச்சு இருக்க வேண்டும், அந்த மன்றக் கூட்டத்தில் நான் உரையாற்ற வேண்டும். அதற்காக நான் ஒரு பேச்சை தயாரித்தேன். ஏனென்றால் முதன் முதலில் பேசப் போகிறோம், ஜாக்கிரதையாக பேச வேண்டும், கொஞ்சம் பதட்டமும் எனக்கு இருந்தது. ஆகவே, பேச்சை நானே முழுமையாக தயாரித்து நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞரிடத்தில் கொண்டு போய் காண்பித்தேன். அதை அவர் படித்துப் பார்த்து, இரண்டு இடத்தில் திருத்திக் கொடுத்தார். மேயர் பதவி என்று இரண்டு இடத்தில் போட்டிருந்தேன். அந்த இரண்டு இடத்தில் அந்த பதவி என்கின்ற வார்த்தையை அடித்து விட்டு, மேயர் பொறுப்பு என்று மாற்றிக் கொடுத்தார். நான் இதை ஏன் அடித்துத் திருத்திக் கொடுத்திருக்கிறேன் என்று உனக்குப் புரிகிறதா என்று கேட்டார். கொஞ்சம் தயக்கத்தோடு நின்று கொண்டிருந்தேன்,

அவரே சொன்னார், மக்கள் உனக்கு மேயர் பதவியைத் தரவில்லை, மேயர் பொறுப்பு என்கிற அந்த காரியத்தை உன்னிடத்தில் ஒப்படைத்திருக்கிறார்கள். அதைப் பொறுப்போடு இருந்து, பொறுப்புணர்வோடு நீ பணியாற்ற வேண்டும் என்பதற்காகத்தான் நான் அதை மாற்றிக் கொடுத்தேனே தவிர வேறு அல்ல என்று எனக்கு விளக்கம் சொன்னார்.

ஆகவே, இப்போது முதலமைச்சர் என்கின்ற பொறுப்பில் நான் அமர்ந்திருக்கிறேன் என்று சொன்னால், அதைப் பதவியாகக் கருதாமல், மக்களுக்குத் தொண்டாற்றக் கூடிய அறிஞர் அண்ணா அவர்கள் அடிக்கடி சொல்வார்கள்; மக்களிடம் செல், மக்களோடு மக்களாக இருந்து பணியாற்று, மக்களுக்காக உன் கடமையை செய் என்று அடிக்கடி சொல்வார். ஆகவே, அந்த நிலையிலே தான் நான் என்னுடைய பணியை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறேன்.

அத்தகைய கோடிக்கணக்கான மக்களுடைய பிரதிநிதியாக இருந்து தமிழ்நாட்டை தெற்காசியாவிலேயே சிறந்த மாநிலமாக மாற்றுவதற்கு, ஆக்குவதற்கு அனைத்து முயற்சிகளையும் நான் எடுத்துக் கொண்டிருக்கிறேன். அதில் நான் வெற்றி பெறுவேன் என்கிற நம்பிக்கை எனக்கு நிறைய இருக்கிறது. ஏனென்றால், நான் கலைஞருடைய மகன். அதுவும், உங்கள் முகத்தையெல்லாம் பார்க்கிறபோது, உங்களுடைய எழுச்சியை, ஆர்வத்தை, ஆரவாரத்தை, உணர்ச்சியை, இந்த அன்பை எல்லாம் பார்க்கிறபோது, அதை நிச்சயம் நிறைவேற்றுவேன் என்ற நம்பிக்கை இன்னும் அதிகமாகிக் கொண்டிருக்கிறது என்பதுதான் உண்மை.

அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி, அனைத்தையும் உள்ளடக்கிய வளர்ச்சி, அதுதான் திராவிட மாடல். அந்த திராவிட மாடல் ஆட்சியைத்தான் நாங்கள் இன்றைக்கு தமிழகத்தில் நடத்திக் கொண்டிருக்கிறோம். ஆகவே, பல துறைகள் இருந்தாலும்,

முக்கியமான துறைகளில் ஒன்று, தொழில் துறை. அந்தத் தொழில் வளர்ச்சி என்பது தனிப்பட்ட ஒரு நிறுவனத்தினுடைய வளர்ச்சி மட்டுமல்ல, ஒரு தொழில் நிறுவனம் தொடங்குகின்றபோது, அந்த நிறுவனத்தோடு சேர்ந்து பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் பயனடைகிறார்கள். அந்த நிறுவனத்தின் மூலமாக மாநிலமே வளர்ச்சி பெறுகிறது. அத்தகைய வளர்ச்சிக்கு இந்த ஐக்கிய அரபு அமீரகமும், அதன் நிறுவனங்களும் ஒத்துழைக்க வேண்டும் என்று நான் உங்களையெல்லாம் விரும்பி, வேண்டி கேட்டுக் கொள்ள வந்திருக்கிறேன்.

இந்தப் பயணத்தில், நான் பெருமையோடு சொல்கிறேன், 6,100 கோடி ரூபாய் மதிப்பிலான தொழில்கள் தொடங்க ஒப்பந்தங்கள் போடப்பட்டிருக்கிறது. துபாய் இல்லாமல், துபாய் நிறுவனங்கள் இல்லாமல் ஒரு மாநிலம் வளர முடியாது என்பது எல்லோருக்கும் தெரியும், எனக்கும் தெரியும். அதனால்தான் முதல் வெளிநாட்டுப் பயணமாக துபாய் பயணத்தைத் தான் நான் தேர்ந்தெடுத்தேன். தமிழ்நாட்டில் தொழில் தொடங்குவதற்கு இத்தனை நிறுவனங்கள் ஆர்வமாக இருப்பதைப் பார்த்து நான் உள்ளபடியே மகிழ்ச்சி அடைகிறேன்.

துபாய்க்கு வந்த பிறகு, இதனை வெளிநாட்டுப் பயணம் என்று சொல்ல முடியாத அளவுக்கு சொந்த நாட்டுக்குள் இருப்பது போன்று தான் நான் உணர்கிறேன். அந்த உணர்வை நீங்கள் ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறீர்கள்.

துபாயில் இருக்கக்கூடிய உலகின் மிக உயர்ந்த கட்டடமான புர்ஜ் கலீஃபா அந்த கோபுரத்தில் நம்முடைய செம்மொழியான தமிழ் வண்ண வண்ண விளக்குகளில் ஒளிர்ந்ததை, அதைப் பாடியதை, நம்முடைய தமிழ்நாட்டின் பெருமை – பாரம்பரியம் – அகழ்வாய்வுகள் காட்டும் தொன்மை ஆகியவற்றின் சிறப்புகள்

உலகறிய வெளிப்பட்டதைப் பார்த்தபோது எனக்கு உள்ளபடியே மகிழ்ச்சி. மகிழ்ச்சி இருந்தாலும் ஒரு ஏக்கம் இருந்தது, இதைப் பார்க்க நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் இல்லையே என்ற அந்த ஏக்கம் எனக்கு இருந்தது.

கலைஞர் அவர்கள் இல்லாவிட்டாலும், கலைஞரின் பிள்ளையான நான் அதைப் பார்த்ததில் எனக்கு மகிழ்ச்சி. இன்னும் சொல்ல வேண்டுமென்றால், நான் மட்டுமா தலைவர் கலைஞருடைய பிள்ளை, நீங்களும் தலைவர் கலைஞருடைய பிள்ளைகள் தான், அவரது உடன்பிறப்புகள்தான். அத்தகைய தமிழ் உணர்வை, கடல் கடந்து வந்திருந்தாலும், நீங்கள் தக்க வைத்திருப்பதைப் பார்க்கும் போது எனக்கு உள்ளபடியே பெருமையாக இருக்கிறது.

அதுதான் தமிழுக்கு இருக்கக்கூடிய பெருமை.

தமிழினத்தினுடைய பெருமை.

தமிழினத்துக்கு இருக்கும் பெருமை.

தமிழ்நாட்டுக்கு இருக்கக்கூடிய பெருமை.

நேற்று முன் தினம் துபாய் தமிழர்களைப் பார்த்தபோதும் அதேபோல, இன்று அபுதாபித் தமிழர்களைப் பார்க்கும்போதும் சத்தியமாகச் சொல்கிறேன், உறுதியாகச் சொல்கிறேன், அண்ணா மீது ஆணையிட்டுச் சொல்கிறேன். தமிழ்நாட்டில் தான் இருக்கிறோமோ அல்லது வேறு எங்காவது இருக்கிறோமா!

‘‘கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளொடு முன்தோன்றி மூத்தகுடி தமிழ்க்குடி’’ என்று சொல்வார்கள்.

இன்றைக்கு உலகம் முழுவதும் பரவி இருக்கும் நம்முடைய தமிழினம், சுமார் 75–க்கும் மேற்பட்ட நாடுகளில் தமிழர்கள் வந்து வாழ்கிறார்கள்.

தமிழ்ப் பெருமையை நாம் பேசினாலும்,

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற தமிழ் நெறிப்படி உலகம் முழுவதும் பரவி நாம் வாழ்ந்து வருகிறோம்.

எந்த நாட்டில் வாழ்ந்தாலும், நமது தாய் மண்ணை நாம் மறந்துவிடக் கூடாது.

சிவகங்கை மாவட்டம் கீழடியில் கிடைத்துள்ள ஆதாரங்கள் நம்முடைய பழமையை, பெருமையை பறைசாற்றுவதாக அமைந்துள்ளது.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே,

வியக்கத்தக்க வகையிலே செங்கல் கட்டுமானங்கள்,

கருப்பு மற்றும் சிவப்பு வண்ணம் தாங்கிய பானை ஓடுகள்,

அரிய கல்மணிகள்,

தங்க அணிகலன்கள்,

சிந்துவெளி நாகரிக காலத்தில் காணப்பட்ட அதே,

திமில் கொண்ட காளையின் எலும்புகள்,

விளையாட்டுப் பொருட்கள், தொழிற்பகுதிகள்

என ஒரு செழுமைமிக்க சமூகமாக சங்ககாலத் தமிழர்கள் வாழ்ந்திருக்கிறார்கள் என்பதை நாம் மட்டுமல்ல, உலகமே கீழடி மூலமாக அறிந்து கொண்டிருக்கிறது.

இவற்றைக் கொண்ட மாபெரும் கண்காட்சி அரங்கத்தை விரைவில் நாம் அமைக்க இருக்கிறோம்.

- கீழடி,
- ஆதிச்சநல்லூர்,

* சிவகளை,
* கொற்கை,
* கொடுமணல்,
* மயிலாடும்பாறை,
* கங்கைகொண்ட சோழபுரம் ஆகிய இடங்களிலும் தற்போது அகழாய்வுப் பணிகளை நாம் மேற்கொண்டிருக்கிறோம்.

தமிழினத்தின் வரலாறு என்பது 3,200 ஆண்டுகளுக்கு முந்தியது என்ற வரலாற்றை மீட்டெடுக்க தமிழ்நாடு அரசு உறுதி பூண்டுள்ளது.

ஆதிச்சநல்லூர், சிவகளை மற்றும் கொற்கை உள்ளிட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வின் போது கிடைத்திருக்கக்கூடிய அரிய பொருட்களை அழகுற காட்சிப்படுத்தும் விதமாக, திருநெல்வேலி நகரில் நவீன வசதிகளுடன் அருங்காட்சியகம் அமைக்கப்படும். இது "தண்பொருநை" அருங்காட்சியகம் என அழைக்கப்படும் என்று சட்டமன்றத்தில் நான் ஏற்கெனவே அறிவித்திருக்கிறேன்.

இதுமட்டுமல்ல, தமிழ்ப் பண்பாட்டின் வேர்களைத் தேடி, இந்திய நாடெங்கும், அதேபோல் கடல்கடந்து பயணம் செய்து தமிழர்கள் வெற்றித்தடம் பதித்த வெளிநாடுகளிலும் தமிழ்நாடு தொல்லியல் துறை உரிய அனுமதிகளைப் பெற்று இனி ஆய்வுப் பணிகளை மேற்கொள்ளும் என்றும் நான் அறிவித்திருக்கிறேன்.

ஒரு இனம் கடந்தகால வரலாற்றை முழுமையாக அறிந்திருக்க வேண்டும். அதனை ஆவணப்படுத்த வேண்டும். அதனை வரக்கூடிய வருங்காலத் தலைமுறைக்குச் சொல்லித் தர வேண்டும். எத்தகைய வரலாற்றுக்கு சொந்தக்காரர்கள் என்ற பெருமிதம் நமக்கு வேண்டும்.

அதே நேரத்தில் கடந்தகாலப் பெருமைகளை மட்டும் பேசிக் கொண்டு இருந்துவிடக் கூடாது. நிகழ்காலத்தில் கல்வியில், வேலைவாய்ப்பில், தொழில் வளர்ச்சியில், வர்த்தகத்தில் நாம் முன்னேற வேண்டும்.

அதனால்தான், ஒரு கையில் கடந்த காலப் பெருமிதங்கள், இன்னொரு கையில் எதிர்கால பெரிய உயர்வுகள் ஆகிய இரண்டுக்கும் முக்கியத்துவம் தரும் அரசாக தமிழ்நாடு அரசு செயல்பட்டு வருகிறது. இத்தகைய அரசுக்கு நீங்கள் உறுதுணையாக இருப்பதற்கு மீண்டும், மீண்டும் உங்கள் அத்தனைப் பேருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நேற்றைய முன்தினம் நான் துபாயில் குறிப்பிட்டதைப் போல, சாதி, மதம் ஆகிய வேற்றுமைக்கு முக்கியத்துவம் தராமல், இனத்தால் மொழியால் நாம் அனைவரும் தமிழர்கள் என்ற ஒற்றுமை உணர்வோடு வாழுங்கள் என்று உங்களை நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

நம்மை ஒற்றுமைப்படுத்தும் ஆற்றல் நம் தமிழ் மொழிக்கு உண்டு!

அத்தகைய தமிழினப் பெயரால் அமைந்துள்ள அபுதாபி தமிழ்ச் சங்கத்தில் எனக்கு நீங்கள் கொடுத்துள்ள இந்த வரவேற்பு என்னுடைய வாழ்நாளில் மறக்க முடியாத ஒரு வரவேற்பாக அமைந்திருக்கிறது. அதற்காக நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல, உங்களையும் தமிழ்நாடு வரவேற்கக் காத்திருக்கிறது. இந்த நிகழ்ச்சி தொடங்குவதற்கு முன்னால் அமீரக தேசிய கீதம் பாடல் பாடப்பட்டது. இந்தியாவினுடைய தேசிய கீதம் பாடலும் பாடினார்கள். அதேபோல தமிழ்த்தாய் வாழ்த்தும் பாடப்பட்டிருக்கிறது. ஆகவே, எப்படி அமீரக தேசிய கீதம் பாடுகின்றபோது, நாம் எழுந்து நின்று அதற்குரிய மரியாதையை,

நம்முடைய வணக்கத்தைச் செலுத்தினோமோ, அதேபோல, இந்தியாவினுடைய தேசிய கீதம் பாடுகிறபோதும் நாம் நம்முடைய மரியாதையை, நம்முடைய வணக்கத்தைத் தெரிவித்திருக்கிறோம். நிறைவாக, தமிழ்த்தாய் வாழ்த்து பாடுகிறபோது பார்த்தேன், எல்லோருடைய வாயும் அசைந்தது, மேடையில் இருக்கக்கூடிய எல்லோருடைய வாயும், என்னுடைய வாயும் சேர்த்துச் சொல்கிறேன். எல்லோர் வாயும், அந்தப் பாடலைப் பாடியது. அந்தப் பாடலுக்கு நாம் ஆட்சிக்கு வந்தவுடன் ஒரு சர்ச்சை ஏற்பட்டது, நான் அந்த பிரச்சினைக்கு போக விரும்பவில்லை. ஆனால், அந்த சர்ச்சைக்கு முற்றுப்புள்ளி வைத்து இனி தமிழ்த்தாய் வாழ்த்துக்கு எல்லோரும் எழுந்து நின்று வணக்கத்தைச் சொல்ல வேண்டும் என்று ஒரு அரசாணையையும் வழங்கப்பட்டது, அதை நீங்கள் செய்திகளில் பார்த்திருப்பீர்கள்.

ஆகவே, நான் அதிக நேரம் எடுத்துக் கொள்ள விரும்பவில்லை, நான் எப்போதும் அதிக நேரம் பேச மாட்டேன். அதைக்கூட எல்லோரும் கிண்டல் செய்வார்கள், இவர் பேசவே மாட்டார், பேசவே மாட்டார் என்று. ஒரு அடுக்கு மொழி உண்டு, பேச்சைக் குறைத்து செயலில் நம்முடைய திறமையை காட்டு. என்னைப் பொறுத்தவரைக்கும், அடிக்கடி பல கூட்டங்களில் சொல்லியிருக்கிறேன். ஒரு அடுக்கு மொழி உண்டு, Do or Die செய் அல்லது செத்து மடி என்று வரும். ஆனால் அந்த or என்கிற வார்த்தையை நீக்கிவிட்டு Do and Die, செய்து முடித்துவிட்டுத் தான் சாக வேண்டும். அப்படி என்கிற அந்த உறுதியை எடுத்துக்கொண்ட காரணத்தால்தான், பேச்சைக் குறைத்து நம்முடைய செயலில், நம்முடைய திறமையைக் காட்டிட வேண்டும் என்ற அந்த உணர்வோடு நான் பணியாற்றிக் கொண்டிருக்கிறேன். தமிழ்நாட்டுக்கு போய் இன்று இரவோடு இரவாக நான் இறங்கப் போகிறேன். பத்திரிக்கை நிருபர்கள், ஊடகத்துறையைச்

சார்ந்தவர்கள் என்னை மறித்து கேட்பார்கள், என்ன நடந்தது, எவ்வளவு முதலீட்டைப் பெற்றிருக்கிறீர்கள், எப்படி இருந்தது என்று துளைத்துத் துளைத்து கேள்வி கேட்பார்கள். நான் அவர்களிடத்திலே சொல்லப் போவது ஒன்றே ஒன்று தான். நான் துபாய்க்கு, அபுதாபிக்கு சென்றுவிட்டு வந்தேனென்றால், அங்கிருக்கக்கூடிய என்னுடைய சொந்தங்களை, என்னுடைய உறவினர்களை, என்னுடைய நண்பர்களை, என்னுடைய உடன்பிறப்புக்களை பார்க்கத்தான் போயிருந்தேன், பார்த்துவிட்டுத் தான் வந்திருக்கிறேன்.

எனக்கு ஒரு ஏக்கம், உள்ளபடியே ஒரு ஏக்கத்தோடு தான் நிற்கிறேன். என்ன ஏக்கம் என்றால், நான்கு நாள் தானே நிகழ்ச்சி போட்டிருக்கிறோம், இன்னும் ஒரு நான்கு நாட்கள் இருந்துவிட்டு போகக்கூடாதா அப்படியென்ற ஒரு ஏக்கம் எனக்கு வந்திருக்கிறது. ஆனால், நாளைக்கு சென்னைக்குச் சென்றவுடன், உடனடியாக நான் டெல்லிக்கு செல்ல வேண்டியிருக்கிறது. பிரதமரிடத்திலும், உள்துறை அமைச்சரிடத்திலும் நேரம் கேட்கப்பட்டு, நேரமும் தேதியும் குறித்துக் கொடுத்திருக்கிறார்கள், அந்த நிகழ்ச்சியில் சென்று கலந்து கொள்ள வேண்டும். அதைத் தொடர்ந்து எப்படி சென்னையில் கலைஞரால் கட்டப்பட்ட அறிவாலயம் இன்றைக்கு கம்பீரமாக காட்சி அளித்துக் கொண்டிருக்கிறதோ, அதேபோல, இந்தியாவினுடைய தலைநகரமான புதுதில்லியிலேயே கலைஞர் அறிவாலயம் கட்டடம் கட்டப்பட்டு, அதனுடைய தொடக்க விழா நிகழ்ச்சியும் நடைபெற இருக்கிறது. அதற்கெல்லாம், பணிகள் இருக்கிறது, அதற்கு உடனடியாக நான் போக வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறேன்.

இப்போது சொல்கிறேன், இனிமேல் நீங்கள் அழைத்தாலும், அழைக்காவிட்டாலும் அடிக்கடி இந்த துபாய்க்கு வந்து போவேன். ஆகவே, துபாயில் நடந்த நிகழ்ச்சியின்போது, ஏனென்றால் இங்கு வந்திருக்கக்கூடிய 99 சதவீதம் என்று கூட சொல்ல வேண்டாம்,

100 சதவீதமும் எப்படியாவது இவரிடம் போய் ஒரு செல்பி எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நினைத்துக் கொண்டிருப்பீர்கள், அதற்கான முயற்சியில் ஈடுபட வேண்டும் என்று காத்துக் கொண்டிருக்கிறீர்கள், அது எனக்குத் தெரிகிறது. தமிழ்நாட்டிலேயே அது இருக்கிறது என்றால் இங்கு இல்லாமல் போய்விடுமா அது? அதனால்தான், துபாயில் என்ன செய்தேன் என்றால், நீங்கள் அப்படியே அமர்ந்திருங்கள், நான் இந்த மேடையில் இருந்துகொண்டு உங்களை செல்பி எடுத்துக்கொண்டு, அது சமூக ஊடகங்களில் எல்லாம் வந்துவிடும், வந்துவிட்டது என்றால், அதை நீங்கள் எடுத்து வைத்துக் கொள்ளலாம். சுலபமாக எந்த தள்ளுமுள்ளு இல்லாமல், எந்த பிரச்சினையும் இல்லாமல் அதை எடுத்துக் கொள்ள முடியும். எனவே அமைதியாக அப்படியே உட்கார்ந்திருங்கள், நான் உங்களிடத்தில் செல்பி எடுத்துக் கொள்வதற்கு நீங்கள் அனுமதி கொடுக்க வேண்டும் என்று உங்களையெல்லாம் அன்போடு கேட்டு இந்த சிறப்பான வாய்ப்பை எனக்கு ஏற்படுத்தித் தந்த அனைவருக்கும் என்னுடைய இதயப்பூர்வமான நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்து என் உரையை நிறைவு செய்கிறேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள்,*
அபுதாபியில் உள்ள இந்திய சமூக மற்றும் கலாச்சார மையத்தில்,
இந்திய சமூக மற்றும் கலாச்சார மையம் மற்றும் அபுதாபி வாழ்
தமிழ் சமூகம் சார்பாக நடைபெற்ற பாராட்டு விழாவில்
ஆற்றிய உரை – 28.03.2022

14,700 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கும் ஒப்பந்தங்கள்

அனைவருக்கும் வணக்கம்.

நான் முதலமைச்சராக பொறுப்பேற்றதற்குப் பிறகு, முதல்முறையாக வெளிநாட்டுப் பயணமாக துபாய், அபுதாபி போன்ற நாடுகளுக்குச் சென்று விட்டு வந்திருக்கிறேன். என்னுடைய பயணம் வெற்றிகரமாக, மகிழ்ச்சிகரமான பயணமாக அமைந்தது என்பதை முதலில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். எப்படி துபாய் ஒரு பிரமாண்டமான ஒரு நாடாக உருவாகியிருக்கிறதோ, அதுபோன்று என்னுடைய பயணமும் மிகப் பிரம்மாண்டமான வகையில் அமைந்தது என்பதை மகிழ்ச்சியுடன் நான் உங்களுக்கு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஆறு மிக முக்கியமான தொழில் நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் (MoU) போடப்பட்டு இருக்கிறது. இரும்பு தளவாடங்கள் துறையில் இருக்கக்கூடிய நோபல் ஸ்டீல்ஸ் துறையோடு

1,000 கோடி ரூபாய் மதிப்பிலான ஒப்பந்தம் போடப்பட்டிருக்கிறது. ஜவுளித் துறையைச் சார்ந்த White House நிறுவனத்துடன் 500 கோடி ரூபாய் மதிப்புள்ள ஒப்பந்தம் போடப்பட்டிருக்கிறது. உணவுத் துறையைச் சார்ந்த Transworld குழுமத்தோடு 100 கோடி ரூபாய் மதிப்பில் ஒப்பந்தம் போடப்பட்டிருக்கிறது. மருத்துவத் துறையைச் சார்ந்த Aster DM Healthcare நிறுவனத்தோடு 500 கோடி ரூபாய் மதிப்பில் ஒப்பந்தம் போடப்பட்டிருக்கிறது. சரக்கு போக்குவரத்து நிறுவனத்தைச் சார்ந்த Sharaf நிறுவனத்துடன் 500 கோடி ரூபாய் மதிப்பில் ஒப்பந்தம் போடப்பட்டிருக்கிறது. உணவு பதப்படுத்தும் தொழில் மற்றும் கட்டுமானத்துறையைச் சார்ந்த Lulu நிறுவனத்தோடு 3,500 கோடி ரூபாய் மதிப்பில் ஒப்பந்தம் போடப்பட்டிருக்கிறது. இந்த ஆறு நிறுவனங்களுடன் 6,100 கோடி ரூபாய் மதிப்புள்ள ஒப்பந்தங்கள் போடப்பட்டிருக்கிறது. இந்த ஒப்பந்தங்கள் போடப்பட்டிருப்பதன் மூலமாக 14,700 பேருக்கு வேலைவாய்ப்பு உருவாகப் போகிறது. ஆகவே, இந்தப் பயணம் ஒரு மகத்தான பயணமாக, வெற்றிப் பயணமாக அமைந்திருக்கிறது என்பதை நான் மகிழ்ச்சியுடன் உங்களுக்கு தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

துபாய் மற்றும் அபுதாபிக்குச் சென்று அந்த நாட்டினுடைய முக்கியமான துறைகளின் அமைச்சர்களையும், அரசு சார்ந்த அலுவலர்களையும், பெரிய பெரிய தொழில் நிறுவனங்களின் தலைவர்களையும் நான் சந்தித்து உரையாடி இருக்கிறேன். துபாய், அபுதாபி உள்ளிட்ட அமீரகத்தின் பெரும் நிதி மேலாண்மை நிறுவனங்கள் தமிழ்நாட்டில் புதுப்பிக்கத்தக்க மின் உற்பத்தித் திட்டங்கள், சிறு துறைமுகங்கள் மேம்பாடு, உணவு பதப்படுத்துதல், தொழில் பூங்காக்கள் உருவாக்கக்கூடிய திட்டங்களில் முதலீடு செய்திட அவைகளெல்லாம் முன்வந்திருக்கின்றன. தமிழகத்தில் தொழில் முதலீடுக்கு ஏற்ற சூழல் இருப்பதை நான் தெளிவாக எடுத்துச் சொல்லி இருக்கிறேன். தமிழ்நாட்டில் நிலவக்கூடிய, தொழில் தொடங்க உதவக்கூடிய சாதகமான சூழ்நிலை

அமைந்திருப்பதை எல்லோரும் அங்கே என்னை பாராட்டினார்கள், தமிழகத்தையும் ஒட்டுமொத்தமாக பாராட்டியிருக்கிறார்கள். இப்போது **6** மிகப்பெரிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியிருக்கிறது. தொடர்ந்து, அடுத்தடுத்த மாதங்களில் இன்னும் பல ஒப்பந்தங்கள் கையெழுத்தாக இருக்கின்றன. நான் சந்தித்த அனைவரையும், தமிழ்நாட்டிற்கு வருகை தரவேண்டும் என்று அழைப்பு விடுத்திருக்கிறேன். அவர்களது வருகை தமிழகத்தினுடைய வளர்ச்சிக்கு அடித்தளமாக நிச்சயம் அமையப் போகிறது.

ஜவுளித்துறை, மருத்துவ சேவைத் துறை, உணவு பதப்படுத்துதல், இரும்பு தளவாடங்கள் செய்தல் ஆகிய துறைகள் நிச்சயமாக வளர்ச்சி பெறும். அந்த வகையில், துபாய் பயணம் தமிழக வளர்ச்சிக்கு ஆக்கப்பூர்வமான அடித்தளத்தை அமைத்துள்ளது. அதேபோல் நம்முடைய தொழில் துறை அமைச்சர் அவர்களும், அவருக்கு துணை நிற்கக் கூடிய தொழில் துறை அதிகாரிகளும் மிகவும் சிறப்பான வகையில் நம்முடைய பிரச்சினைகளை எல்லாம் அங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதற்காக நான் அவர்களை எல்லாம் இந்த நேரத்தில் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும் தமிழ்நாட்டில் தொழில் துறையின் கீழ் இயங்கக்கூடிய தொழில் வழிகாட்டி நிறுவனம் (Guidance Bureau) மூலமாக இரு நாடுகளிலிருந்து மேலும் முதலீடுகளைக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்து எடுக்கப்படும்.

கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் அனைத்தும் காகிதக் கப்பல்களாகத் தான் இருந்தது. ஒப்பந்தம் போட்டதோடு சரி. ஆனால் நாங்கள் ஒப்பந்தம் போட்டிருக்கிறோம். அதனை விட முக்கியமாக அந்த நிறுவனங்கள் இங்கே வந்து தொழில் தொடங்க நடவடிக்கை எடுப்பதும், துரிதப்படுத்துவதுடன், முதலமைச்சரின் அலுவலகத்தில் Dash Board வைத்து மாதந்தோறும் அதை நாங்கள் ஆய்வு நடத்தி குறிப்பிட்ட காலத்திற்கு

முன்னதாகவே அந்தத் தொழிலைத் தொடங்கி ஒரு நல்ல சூழலை உருவாக்கப் போகிறோம். வேலைவாய்ப்பை உருவாக்கப் போகிறோம். இதனை, உடன் வந்த அதிகாரிகள் அனைவருக்கும் நான் உத்தரவாக பிறப்பித்திருக்கிறேன். தொழில் துறைக்கு நன்றி சொன்னது போலவே, துபாய் அபுதாபி வாழ் தமிழர்களுக்கும் நான் இந்த நேரத்தில் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்கள் தந்த வரவேற்பு மிகவும் எழுச்சியோடு, உணர்ச்சியோடு இருந்தது, இன்னும் வெளிப்படையாகச் சொல்ல வேண்டுமென்றால், நாங்கள் போனபோது தமிழ்நாட்டு உணர்வைத் தான் நான் பெற்றேன். அந்த அளவிற்கு அவர்கள் உற்சாகத்தை, வரவேற்வை எனக்கு வழங்கியிருக்கிறார்கள். எனக்கே ஒரு சந்தேகம் வந்தது, இது தமிழ்நாடா அல்லது துபாயா என்று கூட எனக்கு சந்தேகம் வந்தது. அந்த வகையில், என்னுடைய பயணம் வெற்றிகரமாக அமைந்தது என்பதை மீண்டும், மீண்டும் உங்கள் மூலமாக தமிழ்நாட்டு மக்களுக்கு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள்,*
துபாய் மற்றும் அபுதாபி பயணத்தை முடித்துக் கொண்டு,
அதிகாலை சென்னை வந்தடைந்த பின் சென்னை விமான நிலையத்தில்
செய்தியாளர்கள் கூட்டத்தில் ஆற்றிய உரை – ***29.03.2022***

மாண்புமிகு பிரதமர் அவர்களிடம் தமிழ்நாட்டின் முக்கியமான 14 கோரிக்கைகள்

அனைவருக்கும் என் அன்பான வணக்கம்!

மூன்று நாள் பயணமாக நேற்று டெல்லிக்கு நான் வருகை தந்திருக்கிறேன். முதலமைச்சராகப் பொறுப்பேற்று எனது மூன்றாவது டெல்லிப் பயணம் இது!

மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களை இன்று மதியம் நாடாளுமன்ற வளாகத்தில் சந்தித்தேன். சந்திப்பதற்காக நேரம் ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று நான் கோரிக்கை வைத்த போது உடனடியாக அதற்கு நேரம் ஒதுக்கி சந்தித்தமைக்காக நான் முதலில் மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டினுடைய மிக முக்கியமான 14 கோரிக்கைகள் அடங்கிய மனுவினை (Memorandum) மாண்புமிகு பிரதமர் அவர்களிடத்தில் நான் வழங்கினேன். அந்தக் கோரிக்கைகளில் இருக்கக்கூடிய முக்கியத்துவத்தை அவருக்கு நான் தெளிவாக எடுத்துரைத்தேன். அப்போது பொறுமையாக அனைத்தையும் கேட்ட மாண்புமிகு பிரதமர் அவர்கள், அதன் மீது உரிய நடவடிக்கை எடுப்பதாக என்னிடத்தில் உறுதி அளித்திருக்கிறார்கள். மாண்புமிகு பிரதமர் அவர்கள் அளித்த உறுதிமொழிக்கும் நான் இந்த நேரத்தில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதை தற்போது இங்கு இருக்கக்கூடிய ஊடகங்கள் மூலமாகவும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பிரதமர் அவர்களுடனான இந்தச் சந்திப்பு மகிழ்ச்சிக்குரியதாகவும், மனநிறைவை அளிப்பதாகவும் அமைந்திருந்தது. மாண்புமிகு பிரதமர் அவர்களிடம் நான் அளித்த கோரிக்கை மனு ஏற்கெனவே உங்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும், குறிப்பிட்ட சில முக்கியமான கோரிக்கைகளை மட்டும் நான் உங்களுக்கு சொல்ல விரும்புகிறேன்.

இலங்கையில் இப்போது நடந்து வரும் அசாதாரண சூழலை நீங்கள் அறிவீர்கள். பொருளாதார நெருக்கடியில் சிக்கி வேதனையில் தவித்துக் கொண்டிருக்கக்கூடிய இலங்கைத் தமிழர்களுக்கு தமிழ்நாடு அரசின் சார்பில் உதவி செய்வதற்கு அனுமதி வழங்க வேண்டும். அதேபோல, அத்தியாவசியமான பொருள்களையும் உயிர் காக்கும் மருந்துகளையும் அவர்களுக்கு வழங்குவதற்கு அனுமதி வழங்க வேண்டும் என்கிற அந்தக் கோரிக்கையை நான் வைத்திருக்கிறேன். அதேநேரத்தில், இலங்கையில் தமிழர்களுக்கு சம உரிமையும், அரசியல் உரிமையும் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற அந்த கோரிக்கையையும் எடுத்து வைத்திருக்கிறேன். தமிழக மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமை

குறித்தும் வலியுறுத்தி இருக்கிறேன். கச்சத்தீவு மீட்பு குறித்தும் கோரிக்கை வைத்திருக்கிறேன்.

தொடர்ந்து, உக்ரைனில் பாதிக்கப்பட்ட இந்திய மாணவர்களின் மருத்துவக் கல்லூரிப் படிப்பை இந்தியாவில் தொடர அனுமதி வழங்க வேண்டும் என்றும் நான் எடுத்து வைத்திருக்கிறேன்.

காவிரியின் குறுக்கே மேகதாதுவில் கருநாடக அரசு அணை கட்டுவதற்கு ஒன்றிய அரசு அனுமதி வழங்கக் கூடாது என்ற அந்தக் கோரிக்கையையும் வைத்திருக்கிறேன்.

மாநிலங்களுடன் மேல் வரிகள் மற்றும் கூடுதல் கட்டணம் மூலம் வரும் வருவாயைப் பகிர்ந்து அளிக்க வேண்டும்.

ஜூன் **2022**–க்குப் பின்பு ஜி.எஸ்.டி. இழப்பீட்டை தொடர்ந்து வழங்கிட வேண்டும்.

நரிக்குறவர்கள் / குருவிக்காரர்கள் சமூகங்களை தமிழ்நாட்டின், ‘‘பட்டியல் மற்றும் பழங்குடியினர்’’ பட்டியலில் சேர்க்க வேண்டும் என்று இப்படி பல்வேறு கோரிக்கைகளை நான் மாண்புமிகு பிரதமர் அவர்களிடத்தில் எடுத்து வைத்திருக்கிறேன். முக்கியமாக மாண்புமிகு பிரதமர் அவர்களிடத்திலும், மாண்புமிகு உள்துறை அமைச்சர் அவர்களிடத்திலும் நான் அழுத்தத்துடன் பதிவு செய்து என்னவென்று கேட்டீர்களானால், நீட் தேர்வில் இருந்து விலக்கு கேட்கும் சட்டமுன்வடிவை தமிழ்நாடு சட்டமன்றத்தில் நிறைவேற்றி இரண்டாவது முறை மாண்புமிகு தமிழக ஆளுநர் அவர்களுக்கு நாங்கள் அனுப்பி வைத்தோம். ஆனால் இதுவரையில் மாண்புமிகு குடியரசுத் தலைவர் அவர்களுக்கு அனுப்பாமல் மாண்புமிகு ஆளுநர் அவர்கள் இன்னமும் தாமதம் செய்து கொண்டிருக்கிறார். இந்தச் சட்டமுன்வடிவுக்கு உரிய நடவடிக்கை எடுக்க ஒன்றிய அரசை நான் கேட்டுக் கொண்டிருக்கிறேன்.

தொடர்ந்து, மாண்புமிகு ஒன்றிய உள்துறை அமைச்சர் திரு.அமித்ஷா அவர்களிடத்தில், தமிழகத்திற்கு வரவேண்டிய வெள்ள நிவாரண நிதிகள் குறித்தும் வலியுறுத்தி இருக்கிறேன். காவல் மற்றும் தீயணைப்புத் துறையை நவீனப்படுத்தவும், நிதி ஒதுக்கீடு கோரி இருக்கிறேன்.

அடுத்ததாக, மாண்புமிகு ஒன்றிய பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு.ராஜ்நாத் சிங் அவர்களிடத்தில், தமிழகத்தில் அமையவிருக்கக்கூடிய புதிய விமான நிலையங்கள் அமைத்திட தேவைப்படக்கூடிய பாதுகாப்புத் துறை வசம் இருக்கக்கூடிய நிலங்களை ஒதுக்கித் தர வேண்டும் என்று நான் கேட்டுக் கொண்டிருக்கிறேன்.

தமிழ்நாட்டில் DRDO ஆய்வுக்கூடம் அமைக்கப்பட வேண்டும்.

சேலம் இரும்பாலையின் மிகை நிலத்தைப் பாதுகாப்பு தொழில் பூங்காவிற்கு வழங்க வேண்டும்.

ஒன்றிய அரசு பாதுகாப்புத் துறை தொடர்பாக சில திட்டமிடுதல்களைச் செய்து வருகிறது. ஒன்றிய அரசு அமைக்கத் திட்டமிட்டுள்ள, “Aviation Technology Hub” ஒன்றினை கோவையில் அமைக்க வேண்டும் என்ற அந்தக் கோரிக்கையை எடுத்து வைத்திருக்கிறேன்.

மாண்புமிகு ஒன்றிய நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் நிதின் கட்காரி அவர்களை பொறுத்தவரை, பல்வேறு கோரிக்கைகளை எடுத்து வைத்திருக்கிறேன்.

முக்கியமாக சொல்ல வேண்டுமென்றால்,

சென்னை – கன்னியாகுமரி தேசிய நெடுஞ்சாலையை ஆறுவழிச் சாலையாக ஆக்கவும்,

சென்னை – மதுரவாயல் உயர்மட்டச் சாலையை ஸ்ரீபெரும்புதூர் வரை நீட்டிக்கவும் கோரிக்கை வைத்துள்ளேன்.

தாம்பரம் – செங்கல்பட்டு வரை உயர் மட்ட பாலம் அமைக்கப்பட வேண்டும்.

மாநிலத்தில் நிலுவையிலுள்ள தேசிய நெடுஞ்சாலைத் திட்டங்களை விரைவில் அறிவிக்க வேண்டும் என்றும் கோரிக்கை வைத்துள்ளேன்.

என்னுடைய இன்றைய சந்திப்பைப் பொறுத்தவரை, மாண்புமிகு பிரதமர் அவர்கள், மாண்புமிகு உள்துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு பாதுகாப்புத் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் ஆகியோருடனான இந்த சந்திப்புகள் மனநிறைவு அளிப்பதாக அமைந்திருந்தன.

எங்களின் உரையாடலின் போது, மாண்புமிகு நிதின் கட்கரி அவர்கள், தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு, நெடுஞ்சாலைத் துறையில் அதிக அளவிலான திட்டங்களைச் செயல்படுத்த இருப்பதாக அவரே கூறினார்.

அதேபோல், மாண்புமிகு ராஜ்நாத் சிங் அவர்கள், நாட்டின் பாதுகாப்புத்துறை தொழிற்சாலைகளை துவங்குவதற்கு தமிழ்நாடுதான் உகந்த மாநிலமாகத் திகழ்வதாக பாராட்டி அதை எங்களிடத்திலே எடுத்துச் சொன்னார்.

நான் இன்று வைத்த கோரிக்கைகளை வலியுறுத்தி எங்களுடைய நாடாளுமன்ற உறுப்பினர்களும், நாடாளுமன்றத்தில் பலமுறை பேசியுள்ளார்கள். தொடர்ந்து மீண்டும் அதை வலியுறுத்துவார்கள் என்பதையும் உங்கள் மூலமாக தமிழக மக்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

நாளைய தினம், மாண்புமிகு நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் அவர்களையும், மாண்புமிகு வர்த்தகம் மற்றும் உணவுத் துறை அமைச்சர் திரு.பியூஷ் கோயல் அவர்களையும் நான் சந்திக்க இருக்கிறேன், அதற்கான நேரத்தை அவர்கள்

கொடுத்திருக்கிறார்கள். தமிழகத்துக்கான கோரிக்கைகளை நிச்சயம் அவர்களிடத்தில் நான் எடுத்து வைப்பேன்.

அதேபோல, ஒரு டெல்லி மாடல் ஸ்கூல் மற்றும் ஒரு மருத்துவமனை ஆகியவற்றை நாளைய தினம் நான் பார்வையிட இருக்கிறேன். அப்போது மாண்புமிகு டெல்லி முதல்வர் அவர்களும் என்னுடன் வருவதாகச் சொல்லியிருக்கிறார். அவருடன் சேர்ந்து நான் பார்வையிட இருக்கிறேன்.

அதைத் தொடர்ந்து, ஏப்ரல் இரண்டாம் நாள் மாலையில் ‘அண்ணா – கலைஞர் அறிவாலயம்’ திறப்பு விழா நிகழ்ச்சி நடைபெற இருக்கிறது. இந்த நேரத்தில் நான் உங்களையும் கேட்டுக் கொள்கிறேன், அனைவரும் அந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டு சிறப்பிக்க வேண்டும் என்ற அந்த அன்பான வேண்டுகோளை வைத்து, முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்,*
புதுதில்லி, தமிழ்நாடு இல்லத்தில் செய்தியாளர்களிடம்
*ஆற்றிய உரை – **31.03.2022***

இந்தியாவே சமத்துவ நாடாகவும், சமூகநீதி நாடாகவும் மாற வேண்டும்

மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி அவர்களே!

மாண்புமிகு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு.கே.ஆர்.பெரியகருப்பன் அவர்களே!

மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் திரு.கே.எஸ்.மஸ்தான் அவர்களே!

விழுப்புரம் நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் ரவிக்குமார் அவர்களே!

சட்டமன்ற உறுப்பினர்கள்

திரு.நா.புகழேந்தி அவர்களே!

டாக்டர் இலட்சுமணன் அவர்களே!

திரு.சிவக்குமார் அவர்களே!

திரு.மணிகண்ணன் அவர்களே!

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் அரசு முதன்மைச் செயலாளர் திருமதி அமுதா ஐ.ஏ.எஸ். அவர்களே!

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் இயக்குநர் திரு.பிரவீன் பி. நாயர் அவர்களே!

நிறைவாக நன்றியுரை ஆற்றவுள்ள விழுப்புரம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. மோகன், ஐ.ஏ.எஸ்., அவர்களே!

மாவட்ட ஊராட்சிக் குழுத்தலைவர் திரு.ஜெயச்சந்திரன் அவர்களே!

பல்வேறு துறைகளைச் சார்ந்திருக்கக்கூடிய அரசு அலுவலர்களே! அதிகாரிகளே!

உள்ளாட்சி அமைப்புகளைச் சார்ந்திருக்கக்கூடிய மக்கள் பிரதிநிதிகளே!

அன்பிற்கினிய தாய்மார்களே! அருமைப் பெரியோர்களே!

பத்திரிகை மற்றும் ஊடகத்துறையைச் சார்ந்திருக்கக்கூடிய நண்பர்களே!

காவல்துறையினுடைய தோழர்களே!

என் உயிரோடு கலந்திருக்கக்கூடிய தலைவர் கலைஞர் அவர்களின் உயிரினும், உயிரான அன்பு உடன்பிறப்புக்களே!

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்!

இந்த நிகழ்ச்சி உள்ளாட்சித் துறையின் சார்பில் நடைபெறக்கூடிய நிகழ்ச்சியாக அமைந்திருக்கிறது. ஆகவே, அப்படிப்பட்ட துறையின் சார்பில் நடைபெறக்கூடிய இந்த நிகழ்ச்சியிலே, என்ன தான் இன்றைக்கு நான் முதலமைச்சராக இருந்தாலும், ஏற்கெனவே நான் தலைவர் கலைஞர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற ஆட்சியிலே உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்தவன் தான் நான். அப்போது எல்லோரும் சொல்வார்கள், உள்ளாட்சித் துறையிலே நல்லாட்சி நடத்துகின்ற நாயகன் என்று சொல்வார்கள். இன்னும் கூட சொல்லவேண்டுமென்றால், தலைவர் கலைஞர் அவர்கள் பல நிகழ்ச்சிகளில் அப்பொழுது கலந்து கொண்டபோது, எனக்கு உள்ளாட்சித் துறையைப் பார்த்தால், ஸ்டாலினை பார்த்தால் எனக்கு ஒரு பொறாமை வந்திருக்கிறது. எனவே, அந்தத் துறையை நானே வைத்திருந்தால் எனக்கு நல்ல பெயர் கிடைத்திருக்குமே, இன்னும் அதிகமான பெயர் கிடைத்திருக்குமே என்று பல நேரங்களில் சொல்லியிருக்கிறார். ஆகவே அப்படிப்பட்ட, மக்களோடு மக்களாக, மக்களோடு நெருக்கமாக இருக்கக்கூடிய ஒரு துறை இந்த உள்ளாட்சித்துறை. அந்தத்துறையின் அமைச்சராக நான் ஏற்கெனவே இருந்தவன் என்ற அந்தப் பெருமையோடு, அந்தப் பூரிப்போடு, புளங்காயித உணர்வோடு. இன்னும் சொல்லவேண்டுமென்றால், கொஞ்சம் திமிரோடு, கொஞ்சம் ஆதங்கத்தோடு, அதிலே நான் பங்கேற்பதிலே உள்ளபடி நான் மகிழ்ச்சியடைகிறேன். ஆகவே, இந்தத் துறை மக்களோடு மக்களாக இருக்கக்கூடிய துறையாக அமைந்திருக்கிறது. ஆகவே இதில் சிறப்பாக பணியாற்றவேண்டும், இந்தத் துறை மேலும், மேலும் வளர்ச்சியடைய வேண்டும், மக்கள் என்ன நினைக்கிறார்களோ, அதை உடனடியாக நிறைவேற்றித் தரக்கூடிய துறையாக இது அமைந்திடவேண்டும் என்று அந்தத் துறையினுடைய அமைச்சராக இருந்த போது நான் எண்ணியதுண்டு.

இப்பொழுது முதலமைச்சராக ஆனதற்குப் பிறகும் நான் எண்ணிக் கொண்டிருப்பது உண்மை.

அதனால் தான் இந்தத்துறையிலே யாரை அமைச்சராக நியமிக்கலாம் என்று யோசித்தபோது, நம்முடைய பெரியகருப்பன் அவர்கள் என்னுடைய எண்ணத்திலே தோன்றினார். அதனால் அவரை இந்தத்துறைக்குப் பொறுப்பேற்று பணியாற்ற வேண்டுமென்று சொல்லி அந்தத்துறையை இன்றைக்கு அவரிடத்தில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

அதுமட்டுமல்ல, இன்றைக்கு, இந்தத்துறையில் செயலாளராக இருக்கக்கூடிய திருமதி அமுதா, ஐ.ஏ.எஸ்., அவர்கள் நாம் ஆட்சிப் பொறுப்பேற்றபொழுது, நான் முதலமைச்சராக பொறுப்பேற்றபோது, அவர் தலைநகர் டெல்லியிலே, அதுவும் குறிப்பாக பிரதமர் அலுவலகத்திலே பணியாற்றிக் கொண்டிருந்தார். நான் டெல்லிக்குச் சென்றபோது அவரை சந்தித்துப் பேசினேன். நீங்கள் ஏற்கெனவே தருமபுரி மாவட்டத்தில் ஆட்சித் தலைவராக இருந்திருக்கிறீர்கள். பல்வேறு அரசுத் துறையிலே பொறுப்பிலிருந்து பணியாற்றி இருக்கிறீர்கள். உங்கள் பணிகளை பார்த்து நான் வியந்ததுண்டு. ஆகவே, ஏன் நீங்கள் டெல்லியில் இருக்கிறீர்கள், தமிழ்நாட்டில் வந்துவிடலாமே, ஒரு முக்கியமான துறையை உங்களிடம் ஒப்படைக்கலாம் என்று கருதிக் கொண்டிருக்கிறேன் என்று சொன்னபோது, நீங்கள் சொன்னால் அடுத்த வினாடியே வந்துவிடுகிறேன் என்று என்னிடத்திலே உறுதி தந்தார். அதனால்தான் நான் உடனடியாக டெல்லியில் இருக்கக்கூடிய அரசு அதிகாரிகளோடு, பிரதமர் அலுவலகத்தோடு எங்கள் அதிகாரிகள் மூலமாக தொடர்பு கொண்டு, இன்றைக்கு தமிழ்நாட்டிற்கு அவரை வரவழைத்து உள்ளாட்சித் துறையினுடைய, ஊரக வளர்ச்சித் துறையினுடைய செயலாளராக இன்றைக்கு அந்தப்

பொறுப்பேற்று எல்லோரும் பாராட்டக்கூடிய வகையில் அவர் பணியை ஆற்றிக்கொண்டிருக்கிறார். ஆகவே அவர்களுக்கு அமைச்சராக இருக்கும் பெரியகருப்பன் அவர்களுக்கு அந்தத் துறையில் பொறுப்பேற்றுப் பணியாற்றிக் கொண்டிருக்கக்கூடிய திருமதி அமுதா, ஐ.ஏ.எஸ்., அவர்களுக்கும் நான் இந்த நேரத்தில் உங்கள் அனைவரின் சார்பில் என்னுடைய வாழ்த்துகளையும், பாராட்டுக்களையும், நன்றியையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார், ஈரோட்டுச் சிங்கம் தந்தை பெரியார் பெயரிலே அமைந்திருக்கக்கூடிய சமத்துவபுரத்தினுடைய திறப்புவிழா, அரசுக் கட்டடங்களுடைய திறப்புவிழா, நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா இந்த மூன்று விழாக்களை ஒருங்கிணைத்து முப்பெரும் விழாவாக நடைபெற்றுக் கொண்டிருக்கக்கூடிய இந்த விழாவிலே நான் பங்கேற்பதில் உள்ளபடியே மகிழ்ச்சி அடைகிறேன், பெருமைப்படுகிறேன்.

என்னுடைய உரையை தொடங்குவதற்கு முன்பு உங்களிடத்திலே ஒரு கேள்விக் கேட்கப்போகிறேன். நீங்கள் எல்லாம் நன்றாக இருக்கிறீர்களா ? நீங்கள் எல்லாம் நன்றாக இருக்கிறீர்களா என்று கேட்கிறேன். நானே நேரடியாக உங்களுக்கருகிலே வந்து, உங்களிடத்திலே நீங்கள் காட்டிய அந்தப் பாச உணர்வுக்கு நன்றியைத் தெரிவிக்கக்கூடிய வகையில் எல்லோரிடத்திலும் இல்லை, குறிப்பிட்ட ஒரு சிலரிடத்தில் மட்டும் கை குலுக்கி உங்கள் வாழ்த்துகளை நான் பெற்றேன். அப்போது சில தாய்மார்களிடத்திலே, சகோதரிகளிடத்திலே நான் ஒரு கேள்வியைக் கேட்டேன். இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கக்கூடிய இந்த 10 மாத கால திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி எப்படி இருக்கிறது என்று கேட்டேன். ரொம்ப சிறப்பாக இருக்கிறது என்று தாய்மார்கள்

சொன்னார்கள். ஏதாவது குறைகள் இருக்கிறதா ? என்று கேட்டேன். எந்தக் குறையும் இல்லை, இந்த 10 மாத காலமாக ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, நிம்மதியாக இருக்கிறோம்.

ஆகவே இன்றோடு அல்ல, இது தொடரும், தொடரவேண்டும். அப்படி தொடர வேண்டுமென்பதற்காக உறுதி எடுத்துக்கொள்ளக் கூடிய, அதை தொடர்ந்து நிறைவேற்றக்கூடிய அந்த நிலையிலே தான் இந்த நிகழ்ச்சி நடந்து கொண்டிருக்கிறது. ஆக இப்படிப்பட்ட இந்த சிறப்பான நிகழ்ச்சியை எழுச்சியோடு ஏற்பாடு செய்திருக்கக்கூடிய நம்முடைய அமைச்சர் பெருமக்களுக்கும், துறையைச் சார்ந்திருக்கக்கூடிய அதிகாரிகளுக்கும், அதேபோல, மாவட்டத்தினுடைய ஆட்சியராக பொறுப்பேற்றிருக்கக்கூடிய திரு.மோகன், ஐ.ஏ.எஸ்., அவர்களுக்கும், அவரோடு இணைந்து பணியாற்றிக் கொண்டிருக்கும் அரசு அதிகாரிகள் அத்தனை பேருக்கும், அந்த நிருவாகத்திற்கும் என்னுடைய நன்றியை, வணக்கத்தை மீண்டும் ஒருமுறை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

பாராட்டிப் போற்றி வந்த பழமை லோகம் ஈரோட்டுப் பூகம்பத்தால் இடியுது பார்'' – என்று எடுத்துச் சொன்ன தந்தை பெரியாரின் 95 ஆண்டுகால வாழ்க்கையை இரண்டே வரிகளில் வடித்துத் தந்தார், யார் ? நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள்.

சாதியால், மதத்தால், பொருளாதார ஏற்றத் தாழ்வுகளால், பாலினப் பாகுபாட்டால், மூடப்பழக்க வழக்கங்களால், ஆண்டான் அடிமை என்ற உணர்வால் அடக்கி ஒடுக்கி வைக்கப்பட்டிருந்த மனிதர்களை ஒன்று திரட்டி, நீ மனிதன், அதுவும் சாதாரண மனிதன் அல்ல, சுயமரியாதை இருக்கக்கூடிய மனிதன், நீ தமிழன் – என்ற உணர்வை ஊட்டி எழுச்சி பெற வைத்தவர்தான் நம்முடைய தந்தை பெரியார் அவர்கள். சுயமரியாதை உணர்வும்,

சமதர்மக் கொள்கைகளையும், பகுத்தறிவுச் சிந்தனையும், சமூகநீதி வழிமுறையும் கொண்டதாக, இந்த நாட்டை மாற்றுவதற்காக மகத்தான பணிகளைச் செய்தவர் தான் நம்முடைய தந்தை பெரியார் அவர்கள். அவர் இல்லையென்றால் அறிஞர் அண்ணா இல்லை, முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் இல்லை, ஏன், நாம் இல்லை, இந்த இயக்கமும் இல்லை. தமிழ்நாடு இன்று அடைந்துள்ள முன்னேற்றம் இல்லை! தந்தை பெரியாரும், இந்த திராவிட இயக்கமும் தோன்றாமல் போயிருந்தால், இந்தத் தமிழ்ச்சமூகம் இன்று இத்தகைய நிலைக்கு வந்திருக்குமா என்பது கேள்விக்குறிதான். இந்த இயக்கத்தின் நூறு ஆண்டுகால வரலாற்றுச் சாதனைகளை நாம் உணர முடியும்.

பழமைவாத கருத்துகளையும், மூடப்பழக்க வழக்கங்களையும் இன்றைக்கும் பின்பற்ற பரப்புரை செய்து கொண்டிருக்கக்கூடிய சிலரது ஆதிக்கத்தால், நாட்டில் என்ன மாதிரியான பிரச்சினைகள் எல்லாம் எழுகின்றது என்பது உங்களுக்கு நன்றாகவே தெரியும்! புரியும்!

அந்த சூழ்ச்சிகள் தமிழ்நாட்டில் எடுபடாமல் போனதற்குக் காரணம் யார் என்று கேட்டால், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள். திராவிட இயக்கத்தினுடைய தலைவர்கள்தான்! சாதி என்ற அழுக்கைச் சுமந்து வாழ்ந்து வந்த இந்தச் சமூகத்திற்குப் பகுத்தறிவை ஊட்டி, பண்படுத்தி, தன்மான உணர்ச்சி மிக்க, சமத்துவமிக்க சமூகத்தைக் கட்டியெழுப்பியது நம்முடைய திராவிட இயக்கம் தான்! இதற்கெல்லாம் வித்திட்ட தந்தை பெரியார் அவர்களது பெயரால், நம்முடைய தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் உருவாக்கிக் கொடுத்த கனவுத் திட்டம்தான் இந்தச் சமத்துவபுரம் என்பதை மறந்துவிடக் கூடாது.

எந்தவிதப் பாகுபாடின்றி, எந்தவித வேறுபாடின்றி இந்தச் சமூகம் வாழவேண்டும் என்பதற்காகத்தான் குடியிருப்புகளாக நம்முடைய ஊர்கள் மாற வேண்டும் என்று பெரியார் கனவு கண்டார். ஒரு குறிப்பிட்ட சாதியினர், ஒரு குறிப்பிட்ட இடத்தில் மொத்தமாக வாழ்வார்கள் என்ற நிலை இல்லாமல், அனைவரும், எல்லா மதத்தைச் சார்ந்தவர்களும், ஒற்றுமையோடு, ஒருமித்தக் கருத்தோடு அவர்கள் வாழவேண்டும் என்று தந்தை பெரியார் அவர்கள் விரும்பினார். அந்த விருப்பத்தின் அடையாளம் தான் சமத்துவபுரங்களை தலைவர் கலைஞர் அவர்கள் உருவாக்கினார். 1997ஆம் ஆண்டு தந்தை பெரியார் நினைவு சமத்துவபுரத் திட்டத்தை கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது தொடங்கி வைத்தார்.

அனைத்துவிதமான முற்போக்கிற்குரிய புரட்சிகளுக்கும் நாட்டுக்கே முன்னோடியாக விளங்கக்கூடிய நம்முடைய தமிழ்நாட்டில்தான் இத்தகைய சமத்துவபுரங்கள் உருவாகியிருக்கிறது. இதுதான் சமத்துவத்தைப் பேசிக் கொண்டிருக்கக்கூடிய 'திராவிட மாடல்!'. இதுதான் திராவிட மாடல். இதை முதலில் புரிந்து கொள்ள வேண்டும். ஏதோ, ஒரு இடத்தில் சும்மா ஒரு அடையாளத்திற்காக நாம் கட்டவில்லை. தமிழ்நாடு முழுவதும் 238 சமத்துவபுரங்களை முதலைமைச்சர் தலைவர் கலைஞர் அவர்கள் அமைத்துக் கொடுத்தார். அதிலே ஒன்றுதான் விழுப்புரம் மாவட்டம், வானூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த கொழுவாரி ஊராட்சியில் அமைக்கப்பட்ட இந்தச் சமத்துவபுரம்!

ஆகவே, இதை தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிக் காலத்தில்தான் கட்டவேண்டும் என்று முடிவு செய்து அதற்கான நிதியை ஒதுக்கி அந்தப் பணி தொடங்கியது. அதற்குப் பிறகு ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. அதனால் பாதியிலேயே அது நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. தலைவர் கலைஞர் அவர்களால் தொடங்கி

வைக்கப்பட்ட இந்த சமத்துவபுரத்தை அவருடைய மகன் ஸ்டாலின் இன்றைக்கு வந்து உங்களிடத்திலே திறந்து வைத்திருக்கிறார். அதில் உள்ளபடியே எனக்கு மகிழ்ச்சி. கலைஞருடைய கொள்கையை, அவரது சிந்தனைகளை, அவரது நினைவுகளை, அவரது கனவுகளை என்னுடைய மூச்செனை முன்னெடுத்துச் செல்லக்கூடிய நிலையிலே நான் இருக்கிறேன் என்பதற்கு அடையாளமாகத்தான், இந்த சமத்துவபுரத்தை நான் திறந்து வைத்திருக்கிறேன். 2010–2011ஆம் ஆண்டிலே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட திட்டம் இது. பத்தாண்டுகால அ.தி.மு.க. ஆட்சி, தமிழகத்துக்கு இருண்டகாலமாக இருந்ததுடைய அடையாளம்தான், அதற்கொரு சாட்சியாக இந்த சமத்துவபுரம் திட்டம் கிடப்பில் போடப்பட்டது!

இப்போது நம்முடைய ஆட்சி. நாம் எப்போதும் இந்த ஆட்சியை தலைவர் ஆட்சி, என்னுடைய ஆட்சி என்று சொல்வது கிடையாது, நம் ஆட்சி என்றுதான் சொல்லிக் கொண்டிருக்கிறேன். ஆகவே, நம்முடைய ஆட்சி அமைந்தவுடன்,

✶ இந்தச் சமத்துவபுரத்தில் 21 இலட்சத்து 79 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் குடிநீர் வசதி,

✶ 7 இலட்சத்து 32 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் சிறுவர்களுக்கான பூங்கா மற்றும் விளையாட்டுத் திடல்கள்,

✶ தெருவிளக்குகள், மழைநீர் வடிகால்களுடன் கூடிய தார்ச்சாலைகள் அமைக்கப்பட்டிருக்கிறது. இங்கு, விரைவில் 10 இலட்சத்து 19 ஆயிரம் ரூபாயில் அங்கன்வாடி கட்டடமும், 12 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நூலகக் கட்டடமும் அமைக்கப்பட இருக்கிறது.

ஒவ்வொரு சமத்துவபுரத்திலும் 100 வீடுகள், அந்த 100 வீடுகளில் 40 வீடுகள் ஆதிதிராவிட வகுப்பினருக்கும், 25 வீடுகள்

மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்களுக்கும், 25 வீடுகள் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கும், 10 வீடுகள் இதர வகுப்பினருக்கும் ஒதுக்கீடு செய்து அனைத்துச் சாதியினரும் ஒற்றுமையுடன் வாழக்கூடிய ஒரு சூழல் இந்த சமத்துவபுர திட்டத்தின் மூலமாக உருவாக்கப்பட்டுள்ளது.

பல்வேறு சமத்துவபுரங்களில் வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்ட பயனாளிகள் இதுவரை 90 விழுக்காடு குடும்பங்கள் தொடர்ந்து அதே வீடுகளில் ஒற்றுமையாக வாழ்ந்து வருகிறார்கள். இதுதான் எனக்கு கிடைத்திருக்கக்கூடிய பெருமகிழ்ச்சியான செய்தி என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த அரசால் அமைக்கப்பட்ட சமத்துவபுரங்கள் அனைத்துப் பிரிவு மக்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என்பதற்கு இந்த நிகழ்ச்சியே ஒரு சான்றாக, சாட்சியாக அமைந்திருக்கிறது.

இத்தகைய உயர்ந்த நோக்கத்துடன் அமைக்கப்பட்ட சமத்துவபுரங்கள் கடந்த பத்து ஆண்டுகளாக அ.தி.மு.க. ஆட்சியில் சரியாகப் பராமரிக்கப்படவில்லை. அதனால்தான், அனைத்து சமத்துவபுரங்களும் எங்கேயாவது பழுது இருந்தால் அது மக்கள் பயன்படுத்தப்பட முடியாத நிலைக்கு போய்விடக் கூடாது என்பதற்காகத்தான் அது உடனடியாக சீரமைக்கப்படும் என்று 24.06.2021 அன்று சட்டமன்றத்தில் நான் தெரிவித்தேன்.

சமத்துவபுரங்களைச் சீரமைக்கிறோம் என்று சொன்னால், ஏதோ கட்டடங்களைச் சீரமைப்பது மட்டுமல்ல; பிற்போக்குத்தனங்களில் இருந்தும் அடிமைத்தனத்தில் இருந்தும் மீண்ட இந்தத் தமிழினம் சற்றே தேங்கிவிட்ட நிலையையும் சீரமைக்கிறோம்.

அந்த அடிப்படையில் தான் 1997 முதல் 2010 வரை கட்டப்பட்ட சமத்துவபுரங்களை 190 கோடி ரூபாயில் சீரமைக்க

இந்த அரசு உத்தரவிடப்பட்டிருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். கூடிய விரைவில் சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, சமத்துவபுரங்கள் புதுப்பொலிவைப் பெறும்.

சமத்துவபுரத்தைப் போல 2011ஆம் ஆண்டுக்குப் பிறகு கைவிடப்பட்ட மற்றொரு முக்கியமான திட்டம் இருக்கிறது என்று சொன்னால் அண்ணா மறுமலர்ச்சித் திட்டம். அதுவும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் தான் தொடங்கி வைக்கப்பட்டது. நான் உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்தபோது பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டது என்றால் அதில் முக்கியமான திட்டமாக, ஒரு தனி சிறப்புத் திட்டமாக இந்தத் திட்டம் இருந்தது.

ஊராட்சி அளவில் திட்டமிடுதலை ஊக்குவித்து, அனைத்துத் துறை திட்டங்களையும் ஒருங்கிணைத்து, அனைத்து கிராமங்களுக்கும், அனைத்து துறைகளின் திட்டங்களும் சென்றடைவது உறுதி செய்யப்பட்டது.

இத்திட்டத்தில் ஒவ்வொரு ஊராட்சிக்கும் ஒரு நூலகம் அமைத்தோம். அறிவுசார்ந்த இளைய சமுதாயம் உருவாக வழிவகை செய்தோம். ஆனால், அண்ணா நூற்றாண்டு விழாவையொட்டி, சென்னை, கோட்டூர்புரத்தில் அண்ணா நூற்றாண்டு நினைவு நூலகம் என்று ஆசியாவிலேயே ஒரு மிகப்பெரிய நூலகமாக கலைஞர் அவர்கள் அன்றைக்கு உருவாக்கித் தந்தார்கள். ஆட்சி மாற்றத்திற்குப் பிறகு, அதையும் சீரழிப்பதற்கான முயற்சியில் கடந்த கால ஆட்சி ஈடுபட்டது. அதையும் இப்போது சீர்படுத்திக் கொண்டிருக்கிறோம். கடந்த காலத்தில் நிறுத்தப்பட்டிருந்த அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் மீண்டும் புதுப்பொலிவு பெறுவது மூலமாக தமிழகக் கிராமங்கள் மிகச் சிறந்த வளர்ச்சியை நிச்சயமாக அடையும்.

இதேபோல் 1997ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட ஒரு திட்டம் தான் ‘நமக்கு நாமே’ திட்டம். இந்தத் திட்டத்தையும் கடந்த பத்து வருடமாக முடக்கி போட்டு வைத்திருந்தார்கள்.

பொது சொத்துகளை உருவாக்குவதில் பொதுமக்களின் பங்களிப்பை பரவலாக்கவும், தற்சார்பு எண்ணத்தை வலுப்படுத்தவும் உருவாக்கப்பட்ட மகத்தான திட்டம்தான் ‘நமக்கு நாமே’ திட்டம். அந்தத் திட்டமும் இப்போது புதுப்பிக்கப்பட்டிருக்கிறது.

ஊரக வளர்ச்சித் துறையின் சார்பிலான நிகழ்ச்சி என்பதால், இந்தத்துறையின் மூலமாக கடந்த பத்து மாதகாலத்தில் நிறைவேற்றியுள்ள திட்டங்களையும், சாதனைகளையும் மட்டும் உங்களுக்கு நான் சுருக்கமாக, தலைப்புச் செய்திகளாக நினைவுபடுத்த விரும்புகிறேன்.

- ✶ ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் மூலம் கடந்த ஓராண்டில் மூன்றடுக்கு ஊராட்சிகளுக்கு 6,970 கோடி ரூபாய் விடுவிக்கப்பட்டிருக்கிறது. இதில், கிராம ஊராட்சிகளுக்கு விடுவிக்கப்பட்டது மட்டும் 4,500 கோடி ரூபாய் ஆகும்.
- ✶ மொத்தம் 14 இலட்சத்து 32 ஆயிரத்து 204 ஊரக வீடுகளுக்கு 1,162 கோடி ரூபாய் மதிப்பீட்டில் குடிநீர் குழாய் இணைப்புகள் ஓராண்டில் வழங்கப்பட்டிருக்கிறது.
- ✶ 2021–2022ஆம் ஆண்டில் மட்டும் 5,696 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைப் பணிகள் மற்றும் 54 பாலங்கள் அமைக்க 2,223 கோடி ரூபாய் செலவிடப்பட்டிருக்கிறது.
- ✶ இந்த அரசு, நம் அரசு பொறுப்பேற்ற பிறகு, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் கடந்த

ஆண்டுகளில் நிலுவையில் இருந்த 3 இலட்சத்து 35 ஆயிரத்து 759 பணிகள் முடிக்கப்பட்டிருக்கிறது.

✶ ஊரகப் பகுதிகளில் 2 இலட்சத்து 89 ஆயிரத்து 887 வீடுகளை 8,017 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்ட அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. 1 இலட்சத்து 4 ஆயிரத்து 345 வீடுகளின் கட்டுமானப் பணிகள் துவங்கப்பட்டிருக்கிறது.

✶ 4 இலட்சத்து 8 ஆயிரத்து 740 சுயஉதவிக் குழுக்களுக்கு, 21 ஆயிரத்து 392 கோடி ரூபாய் வங்கிக் கடன் வழங்கி, மிகப் பெரிய சாதனையை நம்முடைய அரசு இன்றைக்கு உருவாக்கியிருக்கிறது.

ஊரகவளர்ச்சிமற்றும்ஊராட்சித்துறையின்கீழ்கடந்தஓராண்டில் (2021–2022), 23,841 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 18 இலட்சத்து 21 ஆயிரத்து 37 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது.

– இவை எல்லாம் ஒரே ஒரு துறையின்கீழ், கடந்த ஓராண்டுக்குள் செய்து தரப்பட்டவை மட்டுமே. இப்படி ஒவ்வொரு துறையாகச் சொல்ல ஆரம்பித்தால் நான் அடுத்த நிகழ்ச்சிக்கு குறித்த நேரத்திற்கு சென்று சேர முடியாது. அதனால்தான் தலைப்புச் செய்திகளாக சிலவற்றை மட்டும் நான் உங்களுக்கு அடையாளம் காட்டியிருக்கிறேன்.

பத்தாண்டுகாலம் செய்து தர வேண்டிய திட்டங்களை, பத்து வருடமாக செய்யாத திட்டங்களை, பத்தே மாதத்தில் செய்து கொண்டிருக்கக்கூடிய ஒரு ஆட்சி தான் நம் ஆட்சி. இதை நீங்கள் நன்றாக மனதில் பதிய வைத்துக் கொள்ள வேண்டும், புரிந்துகொள்ள வேண்டும்.

இன்றைய நாள், பல்வேறு துறைகள் சார்பாக விழுப்புரம் மாவட்டத்தில் கட்டி முடிக்கப்பட்ட கட்டடங்களைப் பொது மக்களின்

பயன்பாட்டிற்குத் திறந்து வைப்பதில் நான் உள்ளபடியே மகிழ்ச்சி அடைகிறேன்.

22 கோடி ரூபாய் மதிப்பிலான 33 கட்டடங்கள் இன்று திறந்து வைக்கப்பட்டிருக்கிறது.

42 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டிருக்கிறது.

- ✶ பழங்குடியினர் – நரிக்குறவர் நலவாரிய அட்டைகள்,
- ✶ பழங்குடியினருக்கு வீடுகள்,
- ✶ மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கான கடன்கள்,
- ✶ பண்ணைக் கருவிகள்,
- ✶ வேளாண் இடுபொருள்கள்,
- ✶ இலவசத் தையல் இயந்திரம்,
- ✶ மாற்றுத்திறனாளிகளுக்கு இணைப்புச் சக்கரம் பொருத்திய பெட்ரோல் ஸ்கூட்டர் – ஆகியவை வழங்கப்பட்டிருக்கிறது.

“இந்தியா என்பது மும்பையோ, கொல்கத்தாவோ அல்ல; ஆயிரம் ஆயிரம் கிராமங்களில்தான் இந்தியா வாழ்கிறது!” என்றார் தேசத் தந்தை மகாத்மா காந்தி!

எனவே கிராமங்கள் வளர வேண்டும்! வளம் பெற வேண்டும்!

கிராமங்கள் வளர்ந்தால்தான் மாநிலங்கள் வளரும்!

மாநிலங்கள் வளர்ந்தால்தான் நாட்டின் வளர்ச்சி உண்மையானதாக இருக்க முடியும்!

ஆகவே வலுவான கிராமங்களுக்கு அடித்தளமிடும் வலுவான மாநிலங்கள் மட்டுமே நாட்டின் வளர்ச்சிக்கு, முன்னேற்றத்திற்கு முதுகெலும்பாக இருக்கும்!

“மக்களிடம் செல், மக்களோடு மக்களாகச் சேர்ந்து வாழ், மக்களுக்குப் பணியாற்று” என்று பேரறிஞர் அண்ணா கூறியதை மனதில் கொண்டு இந்த அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அந்த வகையில், உங்களுக்காக இயங்கக்கூடிய இந்த அரசு உங்களுக்கான அனைத்து தேவைகளையும் நிச்சயமாக, உறுதியாக நிறைவேற்றும்.

இந்த நாடே சமத்துவபுரமாக மாற வேண்டும், அதுதான் எங்களுடைய லட்சியம். அதுதான் எங்களுடைய இலக்கு. அதைத்தான் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், சமத்துவபுரம் ஒன்றைத் திறந்து வைத்துப் பேசும்போது, “இந்திய நாடு விடுதலை அடைந்து, பல்வேறு சட்டங்களும், திட்டங்களும் செயல்படுத்தப்பட்டு இருந்தாலும், சாதியும் மதமும் நாட்டின் வளர்ச்சிக்குத் தடையாக இருக்கிறது. இந்தச் சூழலில் தமிழர்கள் அனைவரும் ஒரே சமுதாயமாக வாழ வேண்டும் என்ற நோக்கத்திற்காக உருவாக்கப்பட்ட திட்டம்தான் இந்த சமத்துவபுரம் திட்டம்” என்றார்.

அதுமட்டுமல்ல, “சாதியும் மதமும் அற்ற சமத்துவ சமுதாயத்தை உருவாக்கப் பாடுபடுவதோடு – தமிழ்நாடே சமுத்துவபுரமாகக் காட்சியளிக்க நாமெல்லாம் பணியாற்ற வேண்டும்” என்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் நமக்கெல்லாம் அறிவுரையாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்.

அந்த இலக்கை நோக்கித் தான் சமத்துவபுரங்கள் சீரமைக்கப்படுகின்றன. அப்படி சீரமைக்கப்பட்ட ஒரு சமுத்துவபுரத்தை இன்றைய நாள் நான் உங்கள் அன்போடு, உங்கள் வாழ்த்துகளோடு திறந்து வைத்திருக்கிறேன்.

அண்மையில் தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக நான் துபாய் சென்றிருந்தேன். அங்குள்ள தமிழர்களிடம் நான் பேசும்போது ஒரு கருத்தைச் எடுத்துச் சொன்னேன்.

சாதியால், மதத்தால் பிளவுபடாமல் தமிழினத்தைச் சார்ந்தவர்கள் என்ற உணர்வால் அனைவரும் ஒன்றுபட வேண்டும் என்று நான் கேட்டுக் கொண்டேன்.

அனைவருக்குமான வளர்ச்சி, அனைத்து மாவட்டங்களுக்குமான வளர்ச்சி, என்று நான் திரும்பத் திரும்ப வலியுறுத்துவதற்குக் காரணமே சமத்துவச் சிந்தனை தான்.

இந்தத் தமிழ்நாடே சமத்துவபுரமாக மாறவேண்டும். இந்த இந்திய நாடே சமத்துவ நாடாகவும் சமூகநீதி நாடாகவும் மாற வேண்டும். இதற்குத் தமிழ்நாடும் நமது திராவிட மாடலும் தொடர்ந்து வழிகாட்டும் என்று இந்த நேரத்திலே நான் எடுத்துச் சொல்லி, இந்த சிறப்பான நிகழ்ச்சியிலே உங்களை எல்லாம் காணக்கூடிய ஒரு அரிய வாய்ப்பை நான் பெற்றமைக்கு மீண்டும், மீண்டும் உங்கள் அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துகளையும், நன்றியையும் தெரிவித்துக் கொண்டு இந்த நிகழ்ச்சியை சிறப்போடு ஏற்பாடு செய்து, இங்கு ஒரு எழுச்சியை ஏற்படுத்தித் தந்திருக்கக்கூடிய இந்தத் துறையின் அமைச்சர் அவர்களுக்கும், அதிகாரிகளுக்கும், மாவட்ட ஆட்சித் தலைவருக்கும், அரசு அலுவலர்களுக்கும் மீண்டும் ஒரு முறை என்னுடைய இதயமார்ந்த நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன்.

நன்றி வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள், விழுப்புரம் மாவட்டம்,*
ஒழுந்தியாம்பட்டில் நடைபெற்ற அரசு விழாவில் முடிவுற்ற
திட்டப் பணிகளை திறந்துவைத்து, பயனாளிகளுக்கு
அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி
ஆற்றிய உரை – ***05.04.2022***

விழுப்புரத்தில் ரூ.500 கோடி மதிப்பீட்டில் காலணி தயாரிக்கும் தொழிற்சாலை

மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி அவர்களே!

மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு.தங்கம் தென்னரசு அவர்களே !

மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் திரு.செஞ்சி மஸ்தான் அவர்களே !

மாண்புமிகு நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் ரவிக்குமார் அவர்களே !

சட்டமன்ற உறுப்பினர்கள்

திரு.புகழேந்தி அவர்களே !

டாக்டர் இலட்சமணன் அவர்களே !

திரு.சிவக்குமார் அவர்களே !

திரு.மணிகண்ணன் அவர்களே !

தொழில்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.ச.கிருஷ்ணன், ஐ.ஏ.எஸ்., அவர்களே !

சிப்காட் மேலாண்மை இயக்குநர் திரு.டி.ஆனந்த், ஐ.ஏ.எஸ்.,அவர்களே!

MEPZ சிறப்புப் பொருளாதார மண்டலத்தின் மேம்பாட்டு ஆணையர்

திரு.எம்.கே. சண்முகசுந்தரம், ஐ.ஏ.எஸ்., அவர்களே !

விழுப்புரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.மோகன், ஐ.ஏ.எஸ்., அவர்களே !

மாவட்ட ஊராட்சித்தலைவர் திரு.ஜெயச்சந்திரன் அவர்களே !

செய்யாறு சிறப்புப் பொருளாதார மண்டல மேம்பாட்டு நிறுவனத்தின் தலைமை மேலாண்மை இயக்குநர் திரு.அருள் அவர்களே !

செய்யாறு சிறப்புப் பொருளாதார மண்டல மேம்பாட்டு நிறுவனத்தின் இயக்குநர் திரு.சுனில் அவர்களே !

அரசு உயர் அலுவலர்களே ! அதிகாரிகளே !

உள்ளாட்சி அமைப்புகளில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கக்கூடிய மக்கள் பிரதிநிதிகளே !

பத்திரிகை மற்றும் ஊடகத்துறையைச் சார்ந்திருக்கக்கூடிய நண்பர்களே !

காவல்துறையில் பணியாற்றிக் கொண்டிருக்கக்கூடிய காவல்துறை அதிகாரிகளே! காவல்துறை தோழர்களே !

வருகை தந்திருக்கக்கூடிய பெரியோர்களே! தாய்மார்களே!

என் உயிரோடு கலந்துள்ள தலைவர் கலைஞர் அவர்களின் உயிரினும், உயிரான அன்பு உடன்பிறப்புக்களே,

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கக்கூடிய அடிக்கல் நாட்டுவிழா. எனக்கு என்ன சந்தேகம் என்றால், இது அடிக்கல் நாட்டுவிழாவா ? அல்லது தொழிற்சாலையினுடைய துவக்க விழாவா ? என்று சந்தேகப்படக்கூடிய அளவிற்கு, அடிக்கல் நாட்டு விழா என்றால், ஒரு ஹாலில், ஒரு சின்ன அரங்கத்திற்குள், ஒரு 100 பேர், 200 பேரை கொண்டு அதிகாரிகள், முக்கியமான அலுவலகர்களை மட்டும் உட்கார வைத்து அடிக்கல் நாட்டு விழாவை நடத்துவதுண்டு. ஆனால் இது, ஏதோ பெரிய திறப்பு விழா நிகழ்ச்சியைப் போல அமைந்திருக்கிறது. அடிக்கல் நாட்டு விழாவுக்கே இந்தக் கூட்டம் என்று சொன்னால், இந்தப் பணிகள் எல்லாம் முடிந்து அதனுடைய திறப்பு விழா நடக்கிறபொழுது என்ன கூட்டம் வரும் அப்படியென்ற எண்ணம் தான் எனக்கு இப்பொழுது வந்திருக்கிறது.

அரசின் சார்பில் எத்தனையோ துறைகள் இருக்கிறது. நான் முதலமைச்சராக மக்களால், உங்களால் தேர்தெடுக்கப்பட்டு அந்தப் பொறுப்பை ஏற்றதற்கு பிறகு, நம்முடைய ஆட்சி அமைந்ததற்குப் பிறகு, நான் அதிகம் கலந்து கொள்ளும் நிகழ்ச்சி எது என்று பார்த்தால், தொழில் துறையைச் சார்ந்த நிகழ்ச்சியில் அதிகமாக கலந்து கொண்டிருக்கிறேன். அதற்கு காரணம் என்னவென்று கேட்டால், அந்தத் துறையினுடைய அமைச்சராகப் பொறுப்பேற்றிருக்கக்கூடிய நம்முடைய தங்கம் தென்னரசு அவர்கள். அவருக்கு ஈடுகொடுக்கக்கூடிய வகையிலே, அவருக்கு துணை நிற்கக்கூடிய வகையிலே அவருடைய தொழில்துறையைச் சார்ந்த தொழில்துறையினுடைய செயலர் திரு.கிருஷ்ணன், ஐ.ஏ.எஸ்., அவர்கள். இரண்டு பேரும் போட்டிப்

போட்டுக்கொண்டு, துபாய்க்கு போனாலும் சரி, டெல்லிக்குப் போனாலும் சரி அல்லது MOU கையெழுத்து போடுவதாக இருந்தாலும் சரி, அதில் அவர்கள் காட்டக்கூடிய ஆர்வத்தைப் பார்த்து நானே மெய்மறந்து போயிருக்கிறேன். ஆகவே, எல்லாத் துறைகளிலும் ஒப்பிட்டுப் பார்க்கிறபோது, அதிகம் கலந்து கொள்ளக்கூடிய நிகழ்ச்சி இந்தத் தொழில்துறையைச் சார்ந்த நிகழ்ச்சியாக அமைந்திருப்பது உள்ளபடியே பாராட்டுக்குரிய ஒன்று. ஆகவே, அந்தப் பணியிலே ஈடுபட்டு அதில் வெற்றி காணுவதற்காக துடித்துக் கொண்டிருக்கக்கூடிய, பணியாற்றிக் கொண்டிருக்கக்கூடிய நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களையும், அந்தத் துறையினுடைய செயலர் திரு.கிருஷ்ணன் அவர்களையும், அவர்களுக்குத் துணை நிற்கக்கூடிய அனைத்துத் தரப்பு அலுவலர்களையும் நான் இந்த நேரத்திலே பாராட்ட, போற்ற, அவர்களுக்கு நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே போல, அனைத்துத் துறையும் வளரவேண்டும், அதுவும் அனைத்துத் துறையும் சமவிகிதத்தில் வளரவேண்டும் என்று நினைக்கக்கூடிய வகையில் இந்த அரசு நடந்து கொண்டிருக்கிறது. அதனுடைய அடையாளம்தான் இன்றைய தினம் நான் அடுத்தடுத்து, ஏற்கெனவே விழுப்புரம் மாவட்டத்தில் இன்னொரு பகுதியில் சமத்துவபுரம் என்கிற ஒரு நிகழ்ச்சியை அங்கு இருக்கக்கூடிய அனைத்து மதத்தைச் சேர்ந்தவர்கள் ஒன்றாக வாழ வேண்டும் என்ற நல்ல எண்ணத்திலே தந்தை பெரியார் கண்ட கனவை, அறிஞர் அண்ணா எண்ணிய எண்ணத்தை நிறைவேற்றக்கூடிய வகையில் நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது, சமத்துவபுரம் என்ற ஒரு திட்டத்தை உருவாக்கி ஒற்றுமை உணர்வோடு, ஒருமித்த கருத்தோடு ஒன்றிணைந்து வாழவேண்டும் என்பதற்காக அந்தத் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. எனவே அது போன்ற ஒரு சமத்துவபுரத்தை நான், அங்கே கட்டி முடிக்கப்பட்ட வீடுகளை

எல்லாம் திறந்து வைத்துவிட்டு, அந்த நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு உரையாற்றிவிட்டு, இந்த நிகழ்ச்சிக்கு வந்திருக்கிறேன்.

''வீதியோரத்தில் வேலையற்றவர்கள் – வேலையற்றவர்களின் எண்ணத்தில் விபரீதங்கள்! இதுதான் வேந்தே காலத்தின் குறி'' – என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒரு கவிதை நடையிலே, கட்டுரையிலே எழுதி சுட்டிக்காட்டியிருக்கிறார். இந்த நிலையை மாற்றுவதற்கு உருவான இயக்கம்தான் நம்முடைய திராவிட இயக்கம்.

கல்வியில், வேலைவாய்ப்பில், பொருளாதாரத்தில், தொழில் வளர்ச்சியில், சமூகத் திறனில் நாம் யாருக்கும், எந்த மாநிலத்தவர்க்கும் சளைத்தவர்கள் அல்ல என்பதை நிரூபிக்கக்கூடிய வகையில், தமிழக அரசு எண்ணற்ற திட்டங்களை எல்லாம் இன்றைக்கு தீட்டி, அதை செயல்படுத்திக் கொண்டிருக்கிறது.

அப்படிப்பட்ட நோக்கத்தை இலக்காகக் கொண்டிருக்கக்கூடிய நிறுவனங்களுக்கு முழு ஒத்துழைப்பை நம்முடைய அரசு வழங்கிக் கொண்டு வருகிறது. அந்த வகையில் நான் இந்த விழாவில் கலந்து கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

ஃபெங் டே (Feng Tay) நிறுவனத்தின் துணை நிறுவனமாகிய செய்யாறு சிறப்புப் பொருளாதார மண்டல (SEZ) மேம்பாட்டு நிறுவனத்தினுடைய புதிய திட்டத்திற்கான அடிக்கல் நாட்டு விழாவில் பங்கேற்பதிலே நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

இங்கே துவக்கத்திலே வரவேற்புரை ஆற்றிய நண்பர், இந்தத் தொழிற்சாலையினுடைய இந்த தொழில் நிறுவனத்தினுடைய வரலாற்றை அவர் இங்கே சுட்டிக்காட்டியிருக்கிறார். இந்த நிறுவனத்தினுடைய காலணிகள் தயாரிப்புத் திட்டத்திற்காக 2006ஆம் ஆண்டு அன்றைக்கு முதலமைச்சராக இருந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முன்னிலையில் ஒரு புரிந்துணர்வு

ஒப்பந்தம் போடப்பட்டது. 2009ஆம் ஆண்டில், செய்யாறு சிப்காட் பகுதியில் அதற்கான பணிகளை நான் அடிக்கல் நாட்டி அன்றைக்கு துவக்கி வைத்தேன். 300 கோடி ரூபாய் முதலீடு மற்றும் 5,000 பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் ஆரம்பிக்கப்பட்ட இந்த நிறுவனம், இன்றைய தினம் கிட்டத்தட்ட 2,000 கோடி ரூபாய் அளவிற்கு முதலீடு செய்தது மட்டுமில்லாமல், 35 ஆயிரம் பேர்களுக்கு மேல் வேலைவாய்ப்பையும் கொடுத்திருக்கிறது. அதற்காக இந்த நிறுவனத்தை, அரசின் சார்பில், தமிழ்நாட்டு மக்களின் சார்பில் மனதார வாழ்த்துகிறேன், பாராட்டுகிறேன்.

அதிலும் குறிப்பாக, 70 சதவீதத்திற்கு மேல் பெண்கள் பணியமர்த்தப்பட்டிருக்கிறார்கள். அதற்கும் என்னுடைய தனிப்பட்ட முறையில் பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் 1,000 கோடி ரூபாய் அளவிற்கு முதலீடு செய்யவும் இந்த நிறுவனம் திட்டமிட்டிருப்பதை அறிந்து நான் வரவேற்கிறேன்.

தலைவர் கலைஞர் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்பட்டு, நான் அடிக்கல் நாட்டிய ஒரு நிறுவனம், 13 ஆண்டுகளில் இத்தகைய மாபெரும் வளர்ச்சி அடைந்திருப்பதைப் பார்த்து நான் பெருமைப்படுகிறேன்.

சுற்றுப்புறத்தில் இருக்கக்கூடிய கிராமங்களில் உள்ளவர்களுக்கு வேலைவாய்ப்புகள் அளிப்பதன் மூலமாக அவர்களுடைய வாழ்வாதாரத்திற்கு வழியமைத்துக் கொடுத்திருக்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தையும் மேம்படுத்தி கொண்டு வந்திருக்கிறார்கள். சமூக அமைதியும், தொழில் வளர்ச்சியும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை என்று நான் சொல்வது இதன் அடிப்படையில்தான். அதனால்தான் தொழில் வளர்ச்சிக்கு அதிக முக்கியத்துவம் தந்து கொண்டிருக்கிறோம். அத்தகைய தொழில்கள் ஒரே இடத்தில் குவியாமல், தொழில் வளர்ச்சி இல்லாத மாவட்டங்களில் அதிகம் உருவாக வேண்டுமென்று நினைக்கிறோம்.

அனைத்துத் துறைகளும், அனைத்து மாவட்டங்களிலும் வளர வேண்டுமென்று நினைக்கிறோம்.

திராவிட முன்னேற்றக் கழக அரசு பொறுப்பேற்ற இந்தப் பத்து மாத காலத்தில் தமிழ்நாட்டை நோக்கி ஏராளமான நிறுவனங்கள் வரத் தொடங்கியிருக்கிறது. தமிழ்நாடு அரசு அளித்துக் கொண்டிருக்கக்கூடிய ஊக்கத்தால், பல தொழில் நிறுவனங்கள் நம்முடைய தமிழ்நாட்டை அவர்கள் தேர்ந்தெடுக்கிறார்கள். முத்தமிழறிஞர் கலைஞரின் ஆட்சியில் தான், கார், கண்ணாடி, மின்னணுவியல் மற்றும் காலணி வரை பல தொழில்நிறுவனங்களைத் தமிழ்நாட்டிற்கு கொண்டு வந்து, அந்தத் தொழில் நிறுவனங்களையெல்லாம் அன்றைக்கு முதலமைச்சராக இருந்த தலைவர் கலைஞர் அவர்களே நேரடியாக வந்து துவக்கி வைத்திருக்கிறார். அவர் துவக்கி வைத்த பல திட்டங்களின் விரிவாக்கத் திட்டத்திற்கு தற்போது நான் அடிக்கல் நாட்டிக் கொண்டிருக்கிறேன். இதுதான் ஒரு நல்ல ஆட்சியினுடைய அடையாளமாக, எடுத்துக்காட்டாக விளங்கிக் கொண்டிருக்கிறது.

தோல் துறையில், ஒரு கோடி முதலீட்டிற்கு 250 நபர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்று சொல்கிறார்கள். ஆகவே, அத்துறையில் முதலீடுகள் அதிகரிக்க, அதிகரிக்க, வேலைவாய்ப்புகளும் அதிகரித்துக் கொண்டே போகும். இது மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சியை வலுப்படுத்துவதோடு மட்டுமில்லாமல், மாநிலத்தின் உற்பத்திச் சூழலையும் வெகுவாக மேம்படுத்தும். நான் செல்லுகின்ற இடமெல்லாம், அதிக முதலீடுகளை பெற வேண்டும், தயாரிப்புகளை பல்வகைப்படுத்த வேண்டும், அதிக அளவில் விரிவாக்கம் மேற்கொள்ள வேண்டும், மதிப்புக் கூட்டுப் பொருட்களை உற்பத்தி செய்ய வேண்டும் என்று தொடர்ந்து கேட்டுக் கொண்டு வருகிறேன், அதை நான் வழக்கமாக வைத்திருக்கிறேன். அவ்வாறே, இன்றும் நான் உங்களுக்கு ஒரு கோரிக்கை வைக்கிறேன். தோல் ஒரு முக்கியமான பொருளாகத்

தொடர்ந்திடும் அதே வேளையில், தோல் அல்லாத காலணிகள்தான் அடுத்த 10 ஆண்டுகளில் மிகப்பெரிய வளர்ச்சி வாய்ப்புகளை வழங்கிடும். அண்மையில், நைக் (Nike) போன்ற காலணித் தயாரிப்பாளர்கள், சுற்றுச்சூழலுக்கு உகந்த பொருட்களாக வழங்கத் தொடங்கியுள்ளனர் என்று நான் அறிகிறேன். அவ்வாறே, தோல் அல்லாத துறைகளிலும் உங்கள் உற்பத்தி நடவடிக்கைகளை தொடர்ந்து விரிவுபடுத்திடுமாறும் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாடு அரசு கேட்டுக்கொண்டதற்கு ஏற்ப, செய்யாறு மற்றும் பர்கூரில் தொழிற் திட்டங்களை அமைத்திருக்கிற நீங்கள் இன்று, திண்டிவனத்தைத் தேர்ந்தெடுத்து உங்கள் திட்டத்தினை அமைக்க முன்வந்திருப்பதற்காக உங்கள் அனைவரின் சார்பில் இந்த நிறுவனத்திற்கும், இந்த நிறுவனத்தின் பொறுப்பாளர்களுக்கும் நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

திண்டிவனம் என்பது விழுப்புரம் மாவட்டத்தின் இரண்டாவது பெரிய நகரம். தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதிகளையும் இணைக்கக்கூடிய முக்கியமான சந்திப்பு இந்த திண்டிவனம் தான். ஆகவே, திண்டிவனத்தைப் பொறுத்தவரைக்கும், உங்கள் திட்டத்திற்கான நல்ல போக்குவரத்து வசதிகள் இருக்கும். இங்கு அமைக்கப்பட இருக்கிற இந்தத் திட்டம் உங்கள் தொழில் முன்னேற்றத்திற்கான ஒரு மைல்கல்லாக அமைந்திட என்னுடைய வாழ்த்துகளை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

நீங்கள் உங்கள் திட்டங்களை தமிழ்நாட்டில் மூன்று வெவ்வேறு இடங்களில் அமைத்து இருக்கிறீர்கள். இது எனக்கு பெரும் மகிழ்ச்சி அளிக்கிறது.

ஆகவே, இந்த இனிய தருணத்தில், தமிழ்நாட்டில் மேலும் பல இடங்களில், குறிப்பாக தென் மாவட்டங்களிலும் புதிய திட்டங்களை அமைத்திடுமாறும், உங்களை நான் உரிமையோடு, அன்போடு

கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இதற்கான முதலீட்டுச் சூழலும் இங்கு வலுவாக இருக்கிறது.

காலணி உற்பத்தியில், தேசிய மற்றும் உலக அளவில் தமிழ்நாடு முன்னணியில் இருக்கிறது. தமிழ்நாட்டின் பங்களிப்பு, தேசிய காலணி உற்பத்தியில் 26 விழுக்காடாகவும், ஏற்றுமதியில் 45 விழுக்காடாகவும் இருக்கிறது. காலணி மற்றும் விளையாட்டிற்கு பயன்படுத்தப்படும் காலணிச் சந்தையைக் கைப்பற்ற, நம் மாநிலம் பெரும் வாய்ப்புகளைப் பெற்றிருக்கிறது.

சமீபத்தில் தலைநகர் டெல்லியில் நான் சென்றிருந்தபோது மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களை நான் சந்தித்தபோது, அதிகரித்து வரும் காலணிகளுக்கான உள்நாட்டுத் தேவை மற்றும் ஏற்றுமதித் தேவைகளை சமாளிக்க, தமிழ்நாட்டில் உள்ள உற்பத்திக் குழுமங்களை (Manufacturing clusters) பயன்படுத்தலாம் என்று தெரிவித்திருந்தேன். "உற்பத்தி சார்ந்த ஊக்கத்தொகை" (Production Linked Incentive) அந்தத் திட்டத்தினை அறிமுகப்படுத்தவும் கோரிக்கை வைத்திருந்தேன்.

தமிழகத்திறகு என "தோல் மற்றும் காலணிக் கொள்கை", விரைவில் வெளியிடப்பட இருக்கிறது. ஏற்கெனவே, பல காலணி தயாரிப்பு நிறுவனங்கள், தமிழ்நாட்டில் முதலீடு செய்ய ஆர்வம்காட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அத்துறையில், அதிக அளவில் முதலீடுகளை ஈர்த்திட முடியும் என்று நான் நம்புகிறேன்.

மோட்டார் வாகனத்துறை, மின்னணுவியல், தகவல் தொழில்நுட்பம், பட்டாசு ஆலைகள், காலணி மற்றும் தோல் பொருட்கள் துறை உள்ளிட்ட பல துறைகளிலும் பெண்கள் பெருமளவில் பணிசெய்து வருகிறார்கள். சமூகநீதி மற்றும் சமூகப் பொருளாதார முன்னேற்றத்தை மேம்படுத்தும் வகையில், "மகளிர் கொள்கை" ஒன்றை விரைவில் அரசின் சார்பில் நாங்கள் வெளியிட இருக்கிறோம்.

நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற இந்த 10 மாதங்களிலேயே, பெருமையோடு சொல்கிறேன், இதுவரை 68 ஆயிரத்து 375 கோடி ரூபாய் முதலீடு ஈர்க்கப்பட்டுள்ளது. 130 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டுள்ளன.

2 இலட்சத்து 5 ஆயிரத்து 402 நபர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்க இருக்கிறது. ஒன்றிய அரசின் தொழில் மற்றும் வர்த்தகத்துறை தன்னுடைய அறிக்கையில் அகில இந்திய அளவில், அன்னிய முதலீடு கடந்த ஆண்டை விட 16 விழுக்காடு குறைந்திருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கக்கூடிய அதே வேளையில், சென்ற ஆண்டு தமிழ்நாட்டில் ஈர்க்கப்பட்ட அன்னிய முதலீடுகளை விட, இந்த ஆண்டு ஈர்க்கப்பட்ட முதலீடுகள் 41.5 விழுக்காடு வளர்ச்சி கண்டுள்ளதாக தெரிவித்திருக்கிறது. இந்த வளர்ச்சி என்பது ஒரு மிகப் பெரிய சாதனை. இது இந்த நல்லாட்சிக்குக் கிடைத்திருக்கக்கூடிய ஒரு நல்ல பெயர்!

அகில இந்திய அளவில், சட்டம் ஒழுங்கைப் பராமரிப்பதில், தமிழ்நாடு முன்னணி மாநிலமாக சிறந்து விளங்கிக் கொண்டிருக்கிறது. சமீபத்தில் கூட, இந்திய அளவில் மாநிலங்களுக்கான பொருளாதார சுதந்திரத் தரவரிசையில், தமிழ்நாடு, பொருளாதார ரீதியாக இந்தியாவின் மிகவும் சுதந்திரமான மாநிலமாக தரவரிசைப்படுத்தப்பட்டிருக்கிறது.

2030ஆம் ஆண்டில் நம்முடைய மாநிலம் 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரமாக வளர்ச்சி பெறவேண்டும் என்கிற நமது அரசின் இலட்சிய இலக்கைப் பற்றி நான் தொடர்ந்து பேசிக்கொண்டு வருகிறேன். இந்த இலக்கினை அடைவதற்காக நாங்கள் எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டிருக்கிறோம்.

இந்தப் பயணத்தில் எங்களுடன் பங்கேற்றிட வருமாறு முதலீட்டாளர்களுக்கு நான் எல்லாத் தருணங்களிலும் அழைப்பு விடுத்துக் கொண்டிருக்கிறேன்.

தமிழ்நாட்டில் வெளிப்படையான நிருவாகம் நடக்கிறது. முதலீடுகளை ஊக்குவிக்கக்கூடிய நல்லாட்சியாக நடந்து கொண்டிருக்கிறது. இந்தியாவிலேயே சட்டம், ஒழுங்கை நிலைநாட்டுவதில் சிறந்த மாநிலமாக தமிழ்நாடு இருந்து கொண்டிருக்கிறது. இந்தச் சூழலில்தான் இன்று உங்களுக்கு நான் அழைப்பு விடுக்கிறேன். உங்கள் எதிர்காலத் தொழிற்சாலைகளையும் தமிழ்நாட்டிற்கே கொண்டு வாருங்கள். உங்கள் புதிய முதலீடுகளையும் தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் செய்யுங்கள். தமிழ்நாட்டு இளைஞர்களின் திறனைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்! என உங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

உங்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் திறந்த மனதுடன் செய்து தந்திட இந்த அரசு என்று கூட சொல்லமாட்டேன், நம் அரசு தயாராக இருக்கிறது என்ற அந்த உறுதியைச் சொல்லி, செய்யாறு சிறப்புப் பொருளாதார மண்டலத்தின் இப்புதிய திட்டம் நன்கு செழித்து, வெற்றி பெற வேண்டும், மற்ற மாவட்டங்களுக்கும் இது பரவ வேண்டும் என்று மீண்டும் ஒருமுறை மனதார என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்து என் உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி, வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்,*
பெலாக்குப்பம் சிப்காட் தொழிற்பூங்கா வளாகத்தில்
*ரூ.**500** கோடி மதிப்பீட்டில் செய்யார் SEZ டெவலப்பர்ஸ்*
பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் காலணி தயாரிக்கும்
*தொழிற்சாலைக்கு அடிக்கல் நாட்டி ஆற்றிய உரை **– 05.04.2022***

கொளத்தூர் அனிதா அச்சீவர்ஸ் அகாடமி மாணவிகளுக்கு மடிக்கணினிகள்

தமிழகத்தினுடைய மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு.சேகர்பாபு அவர்களே,

நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி அவர்களே,

சென்னை மாநகரத்தினுடைய மேயர் அருமை சகோதரி பிரியா அவர்களே, துணை மேயர் திரு.மகேஷ் குமார் அவர்களே,

அனிதா அகாடமியின் நிருவாகிகளாக இருக்கக்கூடிய அன்பிற்குரிய சகோதரி ஹெலன் மற்றும் நரேந்திரன் அவர்களே,

இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டிருக்கக்கூடிய அன்பிற்கினிய சகோதரர்களே, சகோதரிகளே,

அனிதா அச்சீவர்ஸ் அகாடமியின் அன்பிற்கினிய மாணவச் செல்வங்களே, உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

என்னதான் நான் இன்றைக்கு தமிழகத்திற்கே முதலமைச்சராக இருந்தாலும், கொளத்தூர் தொகுதி என்று வருகிறபோது எனக்கு ஒரு உணர்வு, ஒரு பாசம், ஒரு அன்பு தானாகவே வந்துவிடுகிறது. ஆகவே, தமிழ்நாடு முழுவதும் சுற்றி வரக்கூடிய வாய்ப்பைப் பெற்றிருந்தாலும், என்னைத் தேர்ந்தெடுத்து, என்னைத் தொடர்ந்து இந்த தொகுதியிலிருந்து பணியாற்ற வேண்டும் என்று உத்தரவிட்டிருக்கக்கூடிய மக்களைப் பார்க்கப்போகிறோம் என்ற ஆவல் எனக்கு அதிகமாக இருந்து வருகிறது. ஆகவே, அந்த ஆவலோடு வந்திருக்கிறேன். அனிதா அச்சீவர்ஸ் அகாடமி என்பது எப்படி உருவாக்கப்பட்டது. ஏன் தொடங்கப்பட்டது என்பது உங்களுக்குத் தெரியும் என்று நான் நம்புகிறேன். இருந்தாலும் உங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். நீட் என்ற ஒரு கொடுமையான சூழ்நிலையை ஏற்படுத்தி அதிலே படித்து வெற்றிபெற்றால்தான் மருத்துவராக முடியும் என்ற நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது.

தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தவரையில் நீட் தமிழ்நாட்டிற்குள் நுழையவிடவில்லை. இன்னும் சொல்லவேண்டுமென்றால், அ.தி.மு.க. ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்தபோது மறைந்த ஜெயலலிதா அம்மையார் முதலமைச்சராக இருந்தவரையிலே, அந்த நீட் தமிழ்நாட்டிற்குள் நுழையவிடவில்லை. ஆனால், அவருடைய மறைவிற்குப் பிறகு அ.தி.மு.க. ஆட்சியில் பொறுப்பேற்றுக்கொண்டவர்கள், எதைப்பற்றியும் கவலைப்படவில்லை. காரணம், அவருடைய பதவி நிலைக்க வேண்டும். ஆகவே, தன்னுடைய பதவிக்கு எந்த ஆபத்தும் வந்துவிடக்கூடாது என்பதற்காக அதை ஏற்றுக்கொண்டு நீட்டை தமிழ்நாட்டிற்குள் நுழையவிட்டார்கள். அதனால்தான், நம்முடைய மாணவச் செல்வங்கள் ஏழைக் குடும்பத்தில் பிறந்திருக்கக்கூடிய

மாணவச் செல்வங்கள், நடுத்தரக் குடும்பத்தில் பிறந்திருக்கக்கூடிய மாணவச் செல்வங்கள் அதிர்ச்சியடைந்து அவர்கள் அதிகமான மதிப்பெண்ணை தேர்வில் பெற்றாலும், நீட்டிலே வெற்றிபெற முடியாது என்று எண்ணி நம்முடைய மாணவச் செல்வங்கள் தற்கொலை செய்துகொண்டு இறந்துவிடக்கூடிய நிலை நாட்டிலே ஏற்பட்டிருக்கிறது.

அதில் முதல் மாணவியாக அரியலூர் பகுதியைச்சார்ந்த தாழ்த்தப்பட்டக் குடும்பத்தில் பிறந்த அனிதா என்ற நம்முடைய அருமை சகோதரி பள்ளிக்கூடத்தில் படிக்கிறபோது நல்ல மதிப்பெண்களைப் பெற்றிருந்தவர்தான். அவர் இந்த நீட் தேர்விலே வெற்றிபெற முடியுமா என்ற சந்தேகம் ஏற்பட்டு தற்கொலை செய்து கொண்டு மாண்டார். அவருடைய நினைவாகத்தான் நம்முடைய கொளத்தூர் தொகுதியிலே அனிதா அச்சீவர்ஸ் அகாடமி என தொடங்கி அதன் மூலமாக மாணவச் செல்வங்களுக்கு முறையானப் பயிற்சியை வழங்கி, அதன்மூலமாக வேலைவாய்ப்புக்களை ஏற்படுத்தித் தரவேண்டும் என்ற ஒரு நல்ல சூழ்நிலையை ஏற்படுத்தி அந்தப் பணியை இன்றைக்கு சிறப்பாக நம்முடைய தொகுதியைப் பொறுத்தவரைக்கும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதனை ஒவ்வொரு ஆண்டும் நான் இந்த பயிற்சிக்கு வரும்பொழுது சொல்வதுண்டு. நாடு முழுவதும் கொண்டுவரவேண்டும். ஏன் நம்முடைய கொளத்தூரில் மட்டுமல்ல, தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய எல்லா தொகுதிக்கும் இதைக் கொண்டுவரவேண்டும் என்று நான் அடிக்கடி சொன்னதுண்டு.

எதிர்க்கட்சியாக இருந்தபொழுது நான் இந்தப் பணியை மேற்கொண்டு இதில் வெற்றியைப் பெற்றேன். எதிர்க்கட்சியாக இருக்கும்பொழுது நன்றாக கவனிக்க வேண்டும். அப்போது நாம் ஆட்சியில் இல்லை. ஆனால் இப்பொழுது ஆட்சிக்கு வந்த

பிறகு நான் எதிர்க்கட்சியாக இருந்து தொடங்கியப் பணிதான், இன்று "நான் முதல்வன்" என்ற அந்த பெயரிலே ஒரு திட்டத்தை அறிவித்திருக்கிறேன். "நான் முதல்வன்", நான் மட்டுமல்ல, எல்லோரும் முதல்வன், இங்கே இருக்கக்கூடிய அத்தனை பேரும் முதல்வனாக வரவேண்டும். எல்லாவற்றிலும் முதல்வனாக வரவேண்டும். ஆட்சியில் மட்டுமல்ல, கல்வியிலும், வேலைவாய்ப்பிலும், எல்லாத் துறைகளிலும் முதல்வனாக வரவேண்டும் என்பதற்காகத்தான் "நான் முதல்வன்" என்ற பெயர் சூட்டி, அந்தத் திட்டத்தின் மூலமாக தமிழ்நாடு முழுவதும், இன்னும் வெளிப்படையாக சொன்னால், "நான் முதல்வன்" என்கிற திட்டத்தைத் தொடங்குவதற்கு மூலகாரணமே இந்த அனிதா அச்சீவர்ஸ் அகாடமிதான் என்பதை பெருமையோடு சொல்கிறேன்.

இந்தத் திட்டத்திற்கு அரசாங்கத்தில் இருக்கக்கூடிய எல்லாத் துறைகளையுமே அதில் ஈடுபடுத்தி, "நான் முதல்வன்" என்ற திட்டத்தை நடத்தக்கூடிய வாய்ப்பை நான் பெற்றிருக்கிறேன். அப்படிப்பட்ட நிலையிலேதான் இந்த அனிதா அச்சீவர்ஸ் அகாடமியில் இதுவரை இளம் பெண்கள் 7 பிரிவுகளில் (batch) 515 பேர்களுக்கு மடிக்கணினியும், சான்றிதழ்களும் ஏற்கெனவே பெற்றிருக்கிறார்கள். இளைஞர்கள் 3 பிரிவுகளில் (batch) 236 பேர்கள் மடிக்கணினியும், சான்றிதழ்களும் ஏற்கெனவே பெற்றிருக்கிறார்கள்.

இன்று இளம்பெண்கள் 152 பேர்கள், இளைஞர்கள் 71 பேர்கள், 64 மடிக்கணினியும், சான்றிதழ்களும் பெற இருக்கிறார்கள். மடிக்கணினியும், சான்றிதழ்களும் பெற இருக்கக்கூடிய அத்தனை பேரையும் நான் இந்தத் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினராக மட்டுமல்ல, தமிழகத்தின் முதல்வராக மட்டுமல்ல, திராவிட முன்னேற்றக் கழகத் தலைவராக மட்டுமல்ல, எல்லாத்தையும் விட உங்களில் ஒருவனாக அத்தனை பேரையும் நான் வாழ்த்துகிறேன்,

பாராட்டுகிறேன். ஆகவே, இன்னும் பல வெற்றிகளை நீங்கள் பெறவேண்டும் என்பதை இந்த நேரத்தில் எடுத்துச் சொல்லி நான் நிகழ்ச்சியை முடித்துக்கொண்டு சட்டமன்றக் கூட்டத் தொடர் நடைபெற்றுக்கொண்டிருப்பது உங்களுக்குத் தெரியும். அதனால், ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு மானியக் கோரிக்கையும் நிறைவேற்றப்பட்டுக்கொண்டிருக்கிறது. ஆகவே, நாளை, நாளை மறுநாள் விடுமுறையாக இருந்தாலும், நாளையதினம் நான் கேரள மாநிலத்திற்கு நிகழ்ச்சி ஒன்றிற்காக செல்கிறேன்.

தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கக்கூடிய இந்த மானியக் கோரிக்கை சம்பந்தப்பட்ட அமைச்சர்கள், அதிகாரிகளிடம் ஆய்வு மேற்கொள்வதற்காக இப்போது இந்த நிகழ்ச்சியை முடித்துக்கொண்டு வீட்டிற்கு செல்லாமல் நேராக கோட்டைக்குத்தான் செல்கிறேன். அங்கே இருக்கக்கூடிய அதிகாரியிடத்தில், அமைச்சரிடத்தில் ஆய்வு நடத்தி வர இருக்கக்கூடிய மானியக் கோரிக்கைகள் எல்லாம் சட்டமன்றத்தில் நிறைவேற்ற வேண்டும், திட்டமிட்டு பணியாற்றவேண்டும், முறைபடுத்த வேண்டும் என்பதற்காக நான் போக வேண்டும். அதனால்தான் அதிக நேரம் உங்களிடத்திலே பேச முடியாத நிலைக்கு தள்ளப்பட்டிருந்தாலும், இன்றைக்கு உங்கள் மூலமாக இந்த நிகழ்ச்சியில் நான் கலந்துகொள்வதில் உள்ளபடியே பெருமைப்படுகிறேன், மகிழ்ச்சியடைகிறேன். என்றைக்கும் உங்களுக்கு பக்கபலமாக நாங்களும் இருப்போம், நீங்களும் இருக்கவேண்டும் என்று கேட்டு, இந்த சிறப்பான நிகழ்ச்சியை அமைத்துத் தந்திருக்கக்கூடிய அன்பிற்கினிய இந்த அகாடமியின் நிருவாகிகளாக இருக்கக்கூடிய திருமதி ஹெலன் அவர்களுக்கும், சகோதரர் நரேந்திரன் அவர்களுக்கும் என்னுடைய வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

சிறப்பாக ஒரு நிகழ்ச்சியை எப்படி நடத்த வேண்டும் என்பதற்கு திட்டமிட்டு, வெற்றி காணக்கூடியவர்தான் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் திரு.சேகர்பாபு அவர்கள். அது எந்த நிகழ்ச்சியாக இருந்தாலும் சரி, அரசாங்க நிகழ்ச்சியாக இருந்தாலும் சரி, கட்சி நிகழ்ச்சியாக இருந்தாலும் சரி, திருமண நிகழ்ச்சியாக இருந்தாலும் சரி, இதுபோன்று உங்களையெல்லாம் அழைத்து உட்கார வைத்து நடத்தக்கூடிய நிகழ்ச்சியாக இருந்தாலும், எந்த நிகழ்ச்சியாக இருந்தாலும் முத்திரைப் பதிக்கக்கூடிய ஒரு செயல் வீரராக விளங்கிக்கொண்டிருக்கிறார். அவருக்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவித்து என் உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி, வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள்,*
சென்னை, கொளத்தூர், அனிதா அச்சீவர்ஸ் அகாடமியில்
பயிற்சி முடித்த மாணவ, மாணவியர்களுக்கு
மடிக்கணினிகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கிய நிகழ்ச்சியில்
ஆற்றிய உரை – ***08.04.2022***

‘மக்கள் சேவையில் மாநகராட்சி’
‘நமது சேவையில் நகராட்சி’

மாநகராட்சி மேயர்கள், துணை மேயர்கள், நகராட்சித் தலைவர்கள் மற்றும் துணைத் தலைவர்களுக்கான நிருவாக பயிற்சி முகாம் நிறைவு விழா நிகழ்ச்சியினுடைய தலைவர் மாண்புமிகு நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்களே!

நிகழ்ச்சிக்கு முன்னிலை ஏற்று சிறப்புரை ஆற்றி இருக்கக்கூடிய தலைமைச் செயலாளர் முனைவர் இறையன்பு, இ.ஆ.ப., அவர்களே!

இங்கு உரையாற்றி அமர்ந்திருக்கக்கூடிய சேப்பாக்கம், திருவல்லிக்கேணி சட்டமன்ற உறுப்பினர் தம்பி உதயநிதி ஸ்டாலின் அவர்களே!

தன்னுடைய அனுபவங்களை உங்களுக்கு எடுத்துச் சொல்லி, உரையாற்றி, உங்களை பயிற்றுவித்திருக்கக்கூடிய மாநிலங்களவை உறுப்பினர் திராவிட முன்னேற்றக் கழக அமைப்புச் செயலாளர் திரு.ஆர்.எஸ்.பாரதி அவர்களே!

நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையினுடைய கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.சிவ்தாஸ்மீனா, இ.ஆ.ப., அவர்களே!

மற்றும் இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு மாநகராட்சி மேயர்களே! துணை மேயர்களே! நகராட்சித் தலைவர்களே! துணைத் தலைவர்களே!

நிறைவாக நன்றியுரை ஆற்ற இருக்கக்கூடிய நகராட்சி நிருவாக இயக்குநர் திரு.பொன்னையா, இ.ஆ.ப., அவர்களே!

அரசு உயர் அதிகாரிகளே! அலுவலகப் பெருமக்களே!

பத்திரிகை மற்றும் ஊடகத்துறையைச் சார்ந்திருக்கக்கூடிய பாசமிகு நண்பர்களே!

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்!

மேயர்கள், துணை மேயர்கள், நகர்மன்றத் தலைவர்கள், நகர்மன்றத் துணைத் தலைவர்கள் ஆகியோருக்கான பயிற்சி நிறைவு விழாவில் கலந்துகொண்டு உங்களை எல்லாம் ஒரே இடத்தில் சந்திக்கும் வாய்ப்பைப் பெற்றமைக்கு மகிழ்ச்சி அடைகிறேன்.

உள்ளாட்சி அமைப்புகளும், அதன் பிரதிநிதிகளாகிய நீங்களும்தான் மக்களாட்சித் தத்துவத்தின் மகத்தான நம்பிக்கைகளாக இருக்கிறீர்கள்!

நீங்கள் முறையாக செயல்பட்டீர்கள் என்றால், மக்களாட்சித் தத்துவம் மகத்தான வளர்ச்சியை பெற்றிட முடியும்!

எனவே, நான் உங்களுக்கு முதலில் சொல்லிக்கொள்ள விரும்புவது,

மக்களோடு இருங்கள்.

மக்களுக்காக இருங்கள் என்பதுதான்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் அடிக்கடி மக்கள் பிரதிநிதிகள் யாராக இருந்தாலும், அது எம்.பி.யாக இருந்தாலும், எம்.எல்.ஏ.வாக இருந்தாலும், மேயராக இருந்தாலும், கவுன்சிலராக இருந்தாலும், எந்த பிரநிதிகளாக இருந்தாலும், மக்களோடு மக்களாக இருக்க வேண்டும் என்று தொடர்ந்து அவர் வலியுறுத்தியது உண்டு.

எனவே, மக்களோடு இருந்தால், மக்களுக்காக இருந்தால், ‘உங்களது பணியை மிகச்சிறப்பாகச் செய்தீர்கள்!’ என்ற பாராட்டை அது உங்களுக்கு நிச்சயமாகப் பெற்றுத்தரும்.

உங்களுக்குக் கிடைத்திருக்கிற இந்த வாய்ப்பு, எல்லோருக்கும் கிடைக்காத வாய்ப்பு!

எத்தகைய நம்பிக்கையை மக்கள் உங்கள் மீது வைத்திருக்கிறார்கள் என்பதை மனதில் வைத்து நீங்கள் செயல்படுங்கள்.

உங்களுக்குக் கிடைத்துள்ள இந்த வாய்ப்பை தயவுகூர்ந்து நீங்கள் வீணாக்கிவிடக்கூடாது.

மக்களது நம்பிக்கையை நாள்தோறும் பெறுவதன் வழியாக, இந்த வாய்ப்பை தக்கவைத்துக்கொள்ளுங்கள்!

மக்களாட்சித் தத்துவத்திலும், அதன் நெறிமுறைகளிலும் நமது அரசு எப்போதும் நம்பிக்கை கொண்டுள்ளது. எப்போதெல்லாம் மக்களாட்சித் தத்துவத்திற்கு ஊறு விளைகிறதோ, அப்போதெல்லாம் கழக ஆட்சி அதை சரிசெய்யும் அமைப்பாக திகழ்ந்து இருக்கிறது. இதுதான் நம்முடைய இயக்கத்தினுடைய வரலாறு.

உள்ளாட்சித் தேர்தலை முறையாக, சரியாக, குறிப்பிட்ட காலத்துக்குள் நடத்துவதுதான் மக்களாட்சித் தத்துவத்தின் அடிப்படை! அதில் எப்போதும் உறுதியாக இருப்பதுதான் திராவிட முன்னேற்றக் கழக அரசு என்பதை முதலில் நீங்கள் புரிந்து கொண்டாக வேண்டும்!

இந்திய அரசமைப்பு 74ஆவது திருத்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட பின்னர் முதலாவது உள்ளாட்சித் தேர்தல் 1996ஆம் ஆண்டு நடத்தப்பட்டது.

அதன்பிறகு, 2001, 2006, 2011 ஆகிய ஆண்டுகளில், குறிப்பிட்ட கால இடைவெளியில் நடத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, 2016ஆம் ஆண்டு தேர்தல் நடத்தப்பட்டிருக்க வேண்டும். ஆனால் நடத்தப்படவில்லை. இப்போது எந்தவிதமான முறைகேடுகளுக்கும், கிஞ்சிற்றும் இடம் கொடுக்காமல், தேர்தல் நடத்தப்பட்டு முடிவடைந்திருக்கிறது.

21 மாநகராட்சிகள், 138 நகராட்சிகள், 489 பேரூராட்சிகளுக்குத் தேர்தல் நடந்துள்ளது.

1,373 மாநகராட்சி உறுப்பினர்களும், 3,842 நகராட்சி உறுப்பினர்களும், 7,604 பேரூராட்சி உறுப்பினர்களும் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள்.

மறைமுகத் தேர்தல் மூலமாக 21 மேயர்கள், 21 துணை மேயர்கள், 138 நகராட்சித் தலைவர்கள், 136 நகராட்சித் துணைத் தலைவர்கள், முறையே 487 பேரூராட்சித் தலைவர்கள், 483 பேரூராட்சித் துணைத் தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள்.

இப்படி மக்களால் நேரடியாகவும், மறைமுகமாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உள்ளாட்சிப் பிரதிநிதிகள் அனைவருக்கும் நான் இந்த நேரத்திலே எனது பாராட்டுதலையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

உங்களது சிறப்பான செயல்பாடுகள் தமிழ்நாட்டு மக்களுக்கு பயன்பட வேண்டும், தமிழக அரசுக்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என்று உங்களை நான் உரிமையோடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

தற்போது புதிதாக பதவி ஏற்றுள்ள பெரும்பான்மையான மேயர்கள் மற்றும் துணை மேயர்கள், நகர்மன்றத் தலைவர்கள் மற்றும் துணைத் தலைவர்கள் இளம் வயதினராக இருக்கிறீர்கள்.

முதன் முதலாக உள்ளாட்சிப் பொறுப்புக்கு வந்திருக்கிறீர்கள்.

புதியவராகவும் தேர்வுசெய்யப்பட்டு வந்துள்ளீர்கள்.

உங்கள் கைகளில் உள்ளாட்சிகளின் எதிர்காலம் அடங்கி இருக்கிறது.

தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் அனைவரும் இதை தங்களுக்குக் கிடைத்த பதவி என்று நினைக்காமல், பொறுப்பாக நினைக்க வேண்டும்.

நான் பல நேரங்களில், பல இடங்களில் இதைப்பற்றி அடிக்கடி எடுத்துச் சொல்வதுண்டு.

நான் 1996ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சியின் மேயராக, முதன்முதலில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மேயர் யாரென்று கேட்டால் அது நான்தான். மேயர் என்றால், அது எப்படிப்பட்ட பொறுப்பு என்றால், வணக்கத்திற்குரிய மேயர். அப்போது எல்லாம் ஒரு வருடம்தான் மேயருடைய பதவிக்காலம். அந்த ஒரு வருடத்தில் அவர் பதவியேற்றதற்கான பாராட்டு விழாவே மூன்று மாதங்கள் போய்விடும், ஆங்காங்கே இருக்கக்கூடிய சங்கங்கள் மூலமாக வரவேற்பு கொடுக்கின்ற நிகழ்ச்சிகள் அது மூன்று மாதங்கள் போய்விடும், அதற்குபிறகு பல மாநிலங்களுக்கு, பல வெளிநாடுகளுக்கு சுற்றுப்பயணம், அது ஒரு ஆறு மாதங்கள் போய்விடும். ஒரு பெரிய Chevrolet கார், ஒரு பெரிய அங்கி, 100 பவுன் செயின், ஒரு செங்கோல், இதுதான். பதவியேற்றுக் கொள்வார், பதவி முடிந்துவிடும். முக்கியமான நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வது தான் மேயருடைய பணியாக இருந்தது.

ஆனால், 1996ஆம் ஆண்டு நான் மேயராக பொறுப்பேற்றதற்குப் பிறகு அது அப்படியே மாற்றிவிட்டேன். ஆக, மக்களோடு மக்களாக இருந்தால்தான், நமக்குப் பெருமை. நாம் சார்ந்திருக்கக்கூடிய இயக்கத்திற்குச் சிறப்பு. அதுதான் உண்மையான மக்களாட்சியாக இருந்திட முடியும் என்ற நிலையிலே அந்த பொறுப்பை ஏற்றுக்கொண்டு நான் பணியாற்றினேன் என்பது உங்கள் அத்தனை பேருக்கும் தெரியும். தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் அனைவரும் இதை தங்களுக்குக் கிடைத்த பதவியாக நினைக்கக்கூடாது, பொறுப்பாக நினைக்க வேண்டும்.

இன்னும் கூட ஒன்றை சொல்ல விரும்புகிறேன். நான் 1996ஆம் ஆண்டு மேயராக பொறுப்பேற்று, மாநகராட்சிக் கூட்டத்தில் போய் என்னுடைய முதல் கன்னிப் பேச்சை பேசுவதற்கு உரை தயாரித்து, அது சரியாக இருக்கிறதா என்று முதல்வராக இருந்த கலைஞர் அவர்களிடத்தில் காண்பித்தேன். அதை படித்துப் பார்த்து நன்றாக இருக்கிறது, இரண்டே இரண்டு திருத்தங்கள் இருக்கிறது என்று கூறினார். என்ன திருத்தம் என்று கேட்டால், மேயர் பதவி என்று போட்டு இருப்பேன், அந்தப் பதவி என்ற வார்த்தையை அடித்துவிட்டு, பொறுப்பு என்று மாற்றினார். அதற்குப்பிறகு எதற்காக இதை மாற்றினேன் தெரியுமா என்று என்னை பார்த்துக் கேட்டார். எதற்கு என்று கேட்டேன், மக்கள் கொடுத்திருப்பது மேயர் பதவியல்ல, மேயர் பொறுப்பு. ஆகவே பொறுப்போடு இருந்து, நீ பொறுப்போடு பணியாற்றினால்தான் அது மக்களுக்குப் போய் சேரும் என்று எடுத்துச் சொன்னார். அதைத்தான் உங்களுக்கு நான் இங்கே நினைவுப்படுத்த விரும்புகிறேன்.

இன்றைக்கு நீங்கள் பொறுப்பிற்கு வந்திருக்கிறீர்கள் என்றால், அதை பதவியாக நினைக்காமல், பொறுப்பாக நினைத்தீர்கள் என்றால், பொறுப்போடு உங்களால் பணியாற்ற முடியும் என்பதை இந்த நேரத்தில் நான் உறுதியிட்டு தெரிவிக்க விரும்புகிறேன்.

எப்படிச் செயல்பட வேண்டும் என்பது குறித்து சிறந்த முறையிலே அனுபவம் பெற்றிருக்கக்கூடிய நம்முடைய நேருவாக இருந்தாலும், சேகர்பாபு–வாக இருந்தாலும், மா.சுப்பிரமணியனாக இருந்தாலும், அதைப்போல குறிப்பிட்ட சில அதிகாரிகளும், இங்கே பயிற்சி தரக்கூடிய அளவிலே சில கருத்துகளை எல்லாம் எடுத்துரைக்கிறார்கள், அதை நீங்கள் உள்வாங்கி இருப்பீர்கள் என்று நான் நம்புகிறேன். எப்படி செயல்பட வேண்டுமென்பது குறித்து பயிற்சி அளிக்க மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்கள் ஏற்பாடு செய்துள்ளார்கள். பயிற்சி அளிக்க வேண்டும் என்று முடிவெடுத்து அந்தப் பயிற்சியை உடனடியாக நடத்திய அவருடைய சிந்தனையையும், வேகத்தையும் நான் பாராட்டுகிறேன்.

ஆட்சி அமைந்துவிட்டது. அமைச்சர்கள் பட்டியல் தயாரித்துக் கொண்டு இருக்கிறோம். அப்போது நகராட்சித் துறைக்கு நேரு அவர்களைதான் தேர்ந்தெடுத்தேன். ஏன் என்றால், அவர் எல்லாவற்றிலும் வேகமாக இருப்பார். மேடையிலே பார்த்திருப்பீர்கள். அதனால்தான் அவரை தேர்ந்தெடுத்து, இத்துறைக்கு அமைச்சராக நியமித்து இருக்கிறோம். அதைப்போல, பயிற்சியையும் உங்களுக்கு அளிக்கும் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டு நடத்திக் கொண்டு இருக்கிறார்.

அவரே உள்ளாட்சிப் பிரதிநிதியாக அரசியல் களத்தில் காலடி வைத்தவர்தான். புள்ளம்பாடி ஊராட்சித் தலைவராக. அங்கிருந்து தான் அவரது அரசியல் அடிச்சுவடி ஆரம்பம் ஆனது.

என்னுடைய அரசியல் அடிச்சுவடி கூட மேயர், அதே உள்ளாட்சி அமைப்புதான். எனவே, எங்களுக்கு உள்ளாட்சி அமைப்புகளின் முக்கியத்துவம் என்பது நன்றாகத் தெரியும்.

மக்களுக்கு மிகச்சிறிய நன்மையைச் செய்தாலும், அது பெரிய பேரை வாங்கித் தரும்.

சிறிய தவறு செய்தாலும், அதுவும் பெயரை கெடுத்துவிடும்! அதை மறந்துவிடாதீர்கள்.

எனவேதான், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் தங்களது ஒவ்வொரு அடியையும் கவனத்தோடு வைக்க வேண்டும்.

உள்ளாட்சி அமைப்புகளின் நிருவாகமும் மாமன்ற நடவடிக்கைகளும் சிறந்து விளங்கிட மாநகராட்சிகளின் சட்டங்களையும், விதிமுறைகளையும் மாண்புமிகு மேயர்கள் அறிந்திருப்பது அவசியம்.

மாமன்றத்தின் நடைமுறைகள் குறித்தான சட்ட விதிகள், நிருவாக வழிமுறைகள், கணக்கு முறைகள், நிதி நிருவாகம் போன்ற அனைத்தும் அறிந்தவர்களாக நீங்கள் உங்களை தகுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

விதிமுறைப் புத்தகத்தை தொடர்ந்து அவ்வப்போது நீங்கள் படிக்க வேண்டும்.

அதில் இருக்கின்ற முக்கியமானதை குறிப்பு எடுத்து வைத்துக் கொள்ள வேண்டும்.

விதிமீறல் என்பது எங்கும் எப்போதும் எந்தச் சூழலிலும் வந்துவிடாமல் கவனமாக இருக்க வேண்டும்.

- ✶ நகர்ப்புற உள்ளாட்சி மன்றங்களை தற்சார்புடைய நிறுவனங்களாக முன்னேற்றுவது அரசின் மிக முக்கிய நோக்கம்.
- ✶ மக்களுக்கு தேவைப்படுகின்ற அனைத்து விதமான அடிப்படை வசதிகளையும், சேவைகளையும் பல்வேறு

வழிகளில் நகராட்சி நிருவாகம் திறம்பட செயல்படுத்திக் கொண்டு இருக்கிறது.

★ நகர்ப்புறங்களில் வசிக்கும் மக்களுக்கு அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளான பாதாளச் சாக்கடை, மழைநீர் வடிகால் அமைப்புகள், மேம்படுத்தப்பட்ட சாலைகள், பேருந்து நிறுத்தங்கள், போதிய மற்றும் தரமானக் குடிநீர், திடக்கழிவு மேலாண்மை, குடிசை பகுதிகளை மேம்படுத்துதல், நகர்ப்புற ஏழைகள் வாழ்வதற்கு வீடுகளைக் கட்டிக்கொடுத்தல், சாலையோர வியாபாரிகளின் நலன் காத்தல், வீடு இல்லாதவர்களுக்கு புகலிடம் அமைத்து பராமரித்தல் மற்றும் தனி நபர் மற்றும் சமுதாயக் கழிப்பிடம் அமைத்தல் போன்றவையுடன் இன்னும் பலவிதமான சேவைகளை நகராட்சி நிருவாகத்துறை மேற்கொண்டு வருகிறது.

இவை அனைத்தும் மக்களுக்கு சரியாகத் தரப்பட்டுள்ளதா என்பதை கண்காணிக்கவேண்டிய மிகப்பெரியப் பொறுப்பு உங்கள் கையில் இருக்கிறது.

தமிழகத்தின் நிதி நிலைமை பற்றி உங்களுக்குத் தெரியும். எவ்வளவு கடனில் இருக்கிறோம், எவ்வளவு வட்டி கட்டிக்கொண்டு இருக்கிறோம். இது எல்லாம் அவ்வப்போது அரசின் சார்பில், நிதித்துறையின் சார்பில் சட்டமன்றத்தில் பேசப்பட்டுக் கொண்டு இருப்பது எல்லாம் உங்களுக்குத் தெரிந்திருக்கக்கூடிய வாய்ப்பு உண்டு.

எனவே, நிதிநிலைமைக்கு ஏற்றவாறுதான் அரசின் சார்பில் ஒதுக்கீடு செய்ய முடியும்.

அப்படி ஒதுக்கீடு செய்யும் நிதி முறையாகச் செலவு செய்யப்பட வேண்டும்.

அதனை நீங்கள் தொடர்ந்து கண்காணிக்க வேண்டும்.

2011ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி தமிழ்நாடு, இந்தியாவிலேயே பெரிய மாநிலங்களில் அதிக நகர்ப்புற மக்கள் தொகை (48 விழுக்காடு) கொண்ட மாநிலம்.

நகர்ப்புறங்களில் அதிகரித்து வரக்கூடிய மக்கள்தொகைக்கு ஏற்றவாறு நாம் திட்டங்களை வகுத்தாக வேண்டும்.

அனைத்து மக்களுக்கும் சீரான, நீடித்த, நிலையான வளர்ச்சியை ஏற்படுத்திக் கொடுப்பதே இத்துறையின் முக்கிய குறிக்கோள்.

மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் செய்திடவும், சுற்றுப்புறச்சூழலை தூய்மையாகப் பேணவும், நகர்ப்புற கட்டமைப்பை மேம்படுத்திடவும், நேர்மையான நிருவாகம் அமைந்திட மாநகராட்சி சட்ட விதிகளுக்குட்பட்டு தீர்மானங்களை நிறைவேற்றி நல்லமுறையில் செயல்படுத்தி அமைந்திருக்கக்கூடிய தமிழக அரசிற்கு நற்பெயர் பெற்றுத் தரவேண்டுகிறேன்.

✶ தரமான குடிநீர் வசதி,

✶ தெருவிளக்குகள் அமைத்தல்,

✶ சாலைகள் மேம்படுத்துதல்,

✶ பாதாளச் சாக்கடை திட்டப்பணிகள்,

✶ மழைநீர் சேகரிப்பு அமைப்பு அமைத்தல்

✶ பொதுசுகாதாரம் சார்ந்த திடக்கழிவு மேலாண்மை – ஆகியவற்றுக்கு அதிகமான முக்கியத்துவம் தாருங்கள்.

‘மக்கள் சேவையில் மாநகராட்சி’

‘நமது சேவையில் நகராட்சி’ – என்பதுதான் நம்முடைய இலக்காக இருக்க வேண்டும்!

இதனை நீங்கள் செயல்படுத்திக் காட்டுங்கள். செயல்படுத்திக் காட்டுவீர்கள் என்று நான் நம்புகிறேன். அந்த நம்பிக்கையை நீங்கள் காப்பாற்றித் தரவேண்டும்.

மாநகராட்சி சட்டங்களில் வார்டு குழுக்களுக்கான பொறுப்புகளும் அதிகாரங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன.

மாநகராட்சியின் நிருவாகத்தில் மாமன்றத்திற்கு உதவிட கணக்குக் குழு, கல்வி குழு, பொது சுகாதாரக் குழு, வரி விதிப்பு மற்றும் நிதிக் குழு, நகரமைப்புக் குழு மற்றும் பணிக்குழு ஆகிய நிலைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இத்தகைய ஏற்பாட்டின்படி மாநகராட்சி அமைப்பிற்கும் உள்ளூர் மக்களுக்கும் இடையேயான தொடர்பின் இடைவெளி குறைந்துள்ளது. வார்டு குழுக்கள் அடிமட்ட அளவில் செயல்படுவதால் மக்களின் குறைகளை உடனுக்குடன் களைய வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மாண்புமிகு மேயர்கள், மாமன்ற கூட்டங்களைக் காலமுறைப்படி கூட்ட வேண்டும்.

சட்டப்படியாக நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகளை நிறைவேற்றியும் அதிகாரங்களை முறையாக செலுத்துதல் வேண்டும்.

மாமன்றங்களின் தீர்மானங்களின் செயல்பாட்டை ஆய்வு செய்தல் வேண்டும்.

அனைத்துப் பகுதிகளிலும் அடிப்படை வசதிகள் நல்ல முறையில் உள்ளதா என்பதையும், தூய்மையான முறையில் அனைத்துப் பகுதிகளும் பராமரிக்கப்படுகிறதா என்பதையும் நாள்தோறும் நீங்கள் ஆய்வு செய்திட வேண்டும்.

மக்களுடைய கோரிக்கைகளைக் கேட்டறிந்து உடனுக்குடன் அவற்றை சரிசெய்திட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அரசின்

நலத்திட்டங்களை உடனுக்குடன் மக்களிடம் கொண்டுசேர்க்க வேண்டும்.

அதாவது, உள்ளாட்சி அமைப்புகளுக்கு பிரதிநிதிகள் இல்லாத காரணத்தினால்தான், எம்.எல்.ஏ.க்களை தேடிப் போகக்கூடிய, எம்.பி.க்களை தேடிப் போகக்கூடிய, அமைச்சர்களை தேடிப் போக வேண்டிய ஒரு சூழல். இன்னும் சுருக்கமாக, விளக்கமாக உங்களுக்கு சொல்லவேண்டும் என்றால், மக்களோடு அதிகமாக தொடர்பு வைத்துக்கொள்வது கவுன்சிலர்கள்தான். ஒரு இயக்கத்திற்கு பெருமை சேர்ப்பதும் அதற்கும் காரணம் நீங்கள்தான், கெட்ட பேர் வருவதற்கும் காரணம் நீங்கள்தான் என்று இருக்கக்கூடாது. நல்ல பெயரை எடுத்தாக வேண்டும்.

உதாரணத்திற்கு சொல்லவேண்டும் என்றால், கோபாலபுரம் பகுதி, ஆயிரம் விளக்குத் தொகுதியில் இருக்கிறது. தலைவருடைய வீடு இருக்கும் பகுதி. அங்கே தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த கவுன்சிலர் திரு.ஜேசுதாஸ் என்பவர் **1967–1968**ஆம் ஆண்டுகளில் இருந்தார். அவருக்கு அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய எல்லோரும் வாக்களித்துவிடுவார்கள். ஆனால், அதே தொகுதிக்குட்பட்டு இருக்கக்கூடிய ஆயிரம் விளக்குத் தொகுதியில் நான் நிற்கிறேன், முரசொலி மாறன் அவர்கள் நிற்கிறார், வாக்களிக்க மாட்டார்கள். குடும்ப டாக்டராக இருக்கக்கூடிய கிருஷ்ணன் அவர்கள் வெளிப்படையாகச் சொன்னார், கவுன்சிலருக்கு வாக்களித்தேன், உங்களுக்கு எல்லாம் வாக்களிக்கவில்லை என்றார். ஏன் என்றால் கவுன்சிலர் காலை 5 மணிக்கு சைக்கிள் எடுத்துக்கொண்டு தெருத்தெருவாகச் சென்று தண்ணீர் வருகிறதா, தெருவிளக்கு எரிகிறதா, அப்படி என்று தொடர்ந்து பார்த்துக்கொண்டு இருக்கிறார். அதனால்தான் கவுன்சிலர்கள் மக்களுடைய மனதில் ஆழமாக பதியக்கூடிய நிலையில் இருக்கிறார்கள். அதை நீங்கள் மறந்துவிடக்கூடாது. அதனால்தான் நீங்கள் மக்களோடு மக்களாக

இருக்க வேண்டும் என்று தொடர்ந்து கூறிக்கொண்டு இருக்கிறேன். மக்களுடைய கோரிக்கைகளைக் கேட்டு, அதை உடனுக்குடன் சரிசெய்கிற நடவடிக்கை எடுத்தாக வேண்டும். அரசினுடைய நலத்திட்டங்களை உடனுக்குடன் மக்களிடம் கொண்டுபோய் சேர்க்க வேண்டும். என்னதான் நாங்கள் திட்டங்களை தீட்டினாலும், பெரிய பெரிய சாதனைகளை படைத்தாலும் அதை மக்களுக்குப் போய் சேர்க்கக்கூடிய பணி யாரிடத்தில் இருக்கிறது என்றால் அது உங்களிடத்திலேதான் இருக்கிறது என்பதை மறந்துவிடக்கூடாது.

நகர்ப்புற சேவைகளை மக்கள் அறியும் வண்ணம் வழிவகைகளை ஏற்படுத்திட வேண்டும்.

மாநகராட்சி சேவைகள் மக்களை எளிதில் சென்றடைய தேவையான தொழில்நுட்ப வசதிகளை மேம்படுத்தி வழங்கிட வழிவகை செய்ய வேண்டும். மக்களுக்கு முறையான விழிப்புணர்வை ஏற்படுத்திட வேண்டும்.

தமிழகம் தொடர்ந்து உள்ளாட்சி நிருவாகத்தில் நல்லாட்சி செய்திட முழுமையான ஈடுபாட்டோடு செம்மையான நிருவாகத்தை மக்களுக்குக் கிடைப்பதை உறுதிசெய்ய வேண்டும்.

தங்களுக்கான பொறுப்புகளையும், கடமைகளையும் நன்கு அறிந்துகொண்டு தாங்கள் சார்ந்த உள்ளாட்சி அமைப்புகளுக்கும் பெருமை சேர்த்து தமிழ்நாட்டிற்கும் பெருமை சேர்க்கும் வகையில் செயலாற்றிட உங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அனைவருக்குமான வளர்ச்சி என்ற ‘திராவிட மாடல்’ ஆட்சியை நாங்கள் நடத்த விரும்புகிறோம்.

ஒருகாலம் இருந்தது, 50 சதவிகிதம் பெண்களுக்கு இடஒதுக்கீடு கிடைத்துள்ளது என்று பெருமையோடு சொன்னார்கள். இன்னார் படித்தால் போதும், இன்னார் வேலைக்குப் போனால் போதும்,

இன்னார் பதவிக்கு வந்தால் போதும், இன்னார் அதிகாரத்துக்கு வந்தால் போதும், இன்னார் வீதியில் நடந்தால் போதும், இன்னார் கோவிலுக்குள் வந்தால் போதும், பெண்களுக்குப் படிப்பு வேண்டாம், பெண்ணுக்கு வேலை வேண்டாம், பெண் வீட்டை விட்டு வெளியில் வரக்கூடாது என்றெல்லாம் ஒரு காலத்தில் இருந்தது.

அதனை மாற்றி எல்லார்க்கும் எல்லாம் என்பதை உருவாக்கிய இயக்கம்தான் நம்முடைய திராவிட இயக்கம். அதனை சட்டப்பூர்வமாக ஆக்கிய ஆட்சி திராவிட இயக்கத்தின் ஆட்சி.

அனைத்தையும் சமூக ஜனநாயகப்படுத்திய இயக்கம் திராவிட இயக்கம்.

அனைத்து துறைகளிலும் வளர்ச்சி,

அனைத்து சமூகத்தின் வளர்ச்சி,

அனைத்து மாவட்டங்களுக்குமான வளர்ச்சி என்ற திராவிட மாடல் ஆட்சிக்கு உங்களது செயல்பாடுகள் உறுதுணையாக இருக்க வேண்டும்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி பிரதிநிதிகளும், அரசு அதிகாரிகளும் ஒன்றிணைந்து ஓர் அணியாக செயல்பட்டு மக்களுக்கானப் பணிகளை செய்திட வேண்டும்.

உங்களை நம்பி நாங்கள் எங்களது திட்டங்களை ஒப்படைத்திருக்கிறோம். அதை மறந்துவிடாதீர்கள்.

ஒரு வேண்டுகோளை எடுத்துவைக்க விரும்புகிறேன். மேயர்களுக்கு மட்டுமல்ல அரசு அதிகாரிகளுக்கும் ஒரு வேண்டுகோளாக இதை வைக்க விரும்புகிறேன். நான் மேயராக இருந்தபோது சென்னை மாநகரத்தில் 10 மேம்பாலங்கள் கட்டினோம். இதுவரை மாநகராட்சி சார்பில் பாலம் கட்டிய வரலாறு கிடையாது. அரசின் சார்பில் நெடுஞ்சாலைத் துறையின் சார்பில், பொதுப்பணித்

துறை சார்பில், மத்திய அரசின் மூலமாக அல்லது மாநில அரசின் மூலமாகதான் பாலங்கள் கட்டுகின்ற பணி நடக்கும். முதன்முதலில் 1996ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சியில் 10 மேம்பாலங்களைக் கட்டிய மேயர் நான்தான்.

அரசுப் பணி என்றால் காலதாமதமாகதான் நடக்கும். அது ஒரு வழக்கமாக இருந்தது. அதை முறியடிக்க வேண்டும் என்று முடிவு செய்து, ஒரு வருடத்தில் முடிக்க வேண்டிய பணியைப் பத்தே மாதத்தில் நாங்கள் முடித்தோம். இன்னும் சொல்ல வேண்டும் என்றால், மதிப்பீடு போடுவோம். அப்பணி முடிகிற நேரத்தில் மதிப்பீடு எப்படி போட்டோமோ அதைவிட அதிகமாகதான் முடியும். 10 பாலங்களை கட்ட நாங்கள் போட்ட மதிப்பீட்டில் 30 கோடி ரூபாய் குறைவாக முடித்து, அதை மாநகராட்சியின் கஜானாவில் சேர்த்தோம். அது மிகப்பெரிய சாதனை. மாநகராட்சியில் இருக்கக்கூடிய நிருவாகிகளை கேட்டுக்கொள்கிறேன். ஒரு கூட்டுக் குழு (Joint Committee) போடுங்கள். ஒரு பாலம் கட்டுகிறோம் என்றால், அதற்கு பள்ளம் தோண்டும்போது டெலிபோன் கேபிள் போகும், ரோடு போட வேண்டும் என்றால் மழைநீர் கால்வாய் இருக்கும், கழிவு நீர் கால்வாய் இருக்கும். இப்படி பல குழாய்கள் இருக்கும், அதற்கு எல்லாம் பாதிப்பு வரும். அதனால் பணிகள் கொஞ்சம் தாமதமாகும். அதனால், இரயில்வேத் துறையாக இருந்தாலும், தொலைபேசித் துறையாக இருந்தாலும், பொதுப்பணித் துறையாக இருந்தாலும், போக்குவரத்துத் துறையாக இருந்தாலும், அந்தந்த துறைகளின் அதிகாரிகளைக் கொண்டு கூட்டுக் குழு அமைத்து, அந்த பாலம் கட்டி முடிக்கும் வரை, வாரத்திற்கு ஒருமுறை அல்லது 15 நாட்களுக்கு ஒருமுறை கூட்டத்தைக் கூட்டி, என்னென்ன பிரச்சினைகள் என்று பேசி தீர்த்துக் கொண்டீர்கள் என்றால், உடனடியாக நினைத்த நேரத்தில் அப்பணியை செய்து முடிக்க முடியும். ஆகவே, அதையும் பின்பற்ற வேண்டும் என்று உங்களை எல்லாம் நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஆகவே, இந்த அரசுக்கும் நற்பெயரை பெற்றுத்தரக்கூடிய சூழலை நீங்கள் உருவாக்கித் தரவேண்டும்.

நான் மேயராக பொறுப்பேற்றபோது, சென்னையில் தொடர்ந்து 15–20 நாட்கள் மழை பெய்துகொண்டிருந்தது. எங்கு பார்த்தாலும் தண்ணீர் தேங்கி நின்றது. முதல்வர் அவர்கள் பாதிக்கப்பட்டப் பகுதிகளை பார்க்க வேண்டும், நிவாரண பணிகளை முடிக்கி விட வேண்டும் என்று முதலமைச்சர் அலுவலகத்தில் இருந்து செய்தி வந்தது. அவரை அழைத்துக்கொண்டு, சென்னை மாநகரம் முழுவதும் சுற்றிசுற்றி வந்துகொண்டு இருக்கிறோம். அப்போது முதல்வர் அவர்கள் வேடிக்கையாகச் சொன்னார்கள். ஸ்டாலின் மேயராக வந்தபிறகு மழை பெய்துகொண்டே இருக்கிறது. அது எல்லாம் இப்போது எனக்கு நினைவுக்கு வருகிறது. அந்த அனுபவம் தான் இப்போது நாம் ஆட்சிக்கு வந்த பிறகு, கொரோனா, அதைவிட கொடுமை எங்கு பார்த்தாலும் மழை பெய்து வரலாற்றில் இல்லாத அளவிற்கு தண்ணீர் நிற்கிறது. அப்போது இந்த மாநகராட்சிக்கு யார் ஆணையராக இருந்தால் பொருத்தமாக இருக்கும், யாரை ஆணையராக நியமிக்க வேண்டும் என்று அதிகாரிகளை எல்லாம் கலந்து பேசியபோது, திரு.ககன்தீப்சிங் பேடி அவர்களைதான் நியமிக்க வேண்டும் என்று சொன்னார்கள். அவர் பொறுப்பு எடுத்துக்கொண்ட பிறகுதான் மாநகராட்சியில் மிகச் சிறப்பான பணிகள் நடந்துகொண்டு இருப்பதை நான் கண்கூடாகப் பார்க்கிறேன். நேரு அவர்களை இந்த துறைக்கு அமைச்சராக நியமித்தவுடனே இந்த துறைக்கு யாரை செயலாளராக நியமிக்க வேண்டும் என்று ஆலோசித்தபோது என்னுடைய நினைவிற்கு வந்தது திரு.சிவ்தாஸ் மீனா அவர்கள்தான். அப்போது அவர் சென்னையில் இல்லை, தில்லியில் பணியாற்றிக்கொண்டு இருந்தார். அவரிடத்திலே தகவல் அனுப்பினோம். நீங்கள் சொன்னால் வந்து விடுகிறேன் என்றார். சொன்னால் அல்ல, உடனே வாருங்கள் என்று

சொல்லி அழைத்து இத்துறைக்குச் செயலாளராக நியமித்தோம். ஏன் இதை நான் சொல்கிறேன் என்றால், பணிகளை வேகப்படுத்த வேண்டும், விரைவுபடுத்த வேண்டும், மக்களுக்குப் போய் சேரவேண்டும் என்பதற்காகத்தான் இந்த முயற்சியிலே நாங்கள் ஈடுபட்டோம். எனவே நிச்சயமாக, உறுதியாக ஆட்சிக்கு வந்து இந்த 11 மாத காலம், அடுத்த மாதம் 7ஆம் தேதி வந்தால் ஒரு வருடம் ஆகப்போகிறது. இதற்கிடையிலே ஏற்கெனவே ஊரகப் பகுதியில் நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தல், நகராட்சிப் பகுதிகளில் நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தல்களில் மிகப் பெரிய வெற்றியை பெற்றிருக்கிறோம் என்றால் இந்த ஆட்சியினுடைய சாதனைகள் மக்களைப் போய் சேர்ந்திருக்கிறது, மக்கள் நம் ஆட்சியின் மீது நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். ஆக, அந்த நம்பிக்கைக்கு வலுசேர்க்கக் கூடிய அளவில் உங்கள் பணி அமைந்திருக்க வேண்டும் அதற்கு பணியாற்ற உறுதி எடுத்துக்கொள்ளக்கூடிய வகையிலே இந்த பயிற்சி பாசறைக் கூட்டம் பயன்பெற வேண்டும் என்று உங்களை அன்போடு கேட்டு, உங்கள் அனைவருக்கும் நன்றி கூறி, விடைபெறுகிறேன்,

நன்றி, வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள்,*
மாண்புமிகு மாநகராட்சி மேயர்கள், துணை மேயர்கள், நகராட்சித் தலைவர்கள் மற்றும் துணைத் தலைவர்களுக்கான நிருவாகப் பயிற்சி முகாம் நிறைவு விழாவில் ஆற்றிய உரை – 13.04.2022

நரிக் குறவர்களுக்கு நலத்திட்ட உதவிகள்

நரிக்குறவர் குடும்பங்களுக்கு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கக்கூடிய இந்த சிறப்பான நிகழ்ச்சிக்கு தலைமைப் பொறுப்பு ஏற்றுள்ள மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு.சா.மு.நாசர் அவர்களே!

சட்டப்பேரவை உறுப்பினர் அன்புக்குரிய கிருஷ்ணசாமி அவர்களே,

தொடக்கத்தில் அனைவரையும் வரவேற்று அமர்ந்திருக்கக் கூடிய மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் ஆல்பி ஜான் வர்கீஸ், இ.ஆ.ப., அவர்களே,

ஆவடி மாநகராட்சி மேயர் திரு.ஜி.உதயகுமார் அவர்களே,

மாவட்ட ஊராட்சிக் குழுவினுடைய தலைவர் உமா மகேஸ்வரி அவர்களே,

பல்வேறு துறைகளைச் சார்திருக்கக்கூடிய உயர் அதிகாரிகளே, அரசு அலுவலர்களே,

பத்திரிகை, ஊடகத்துறையைச் சார்ந்திருக்கக்கூடிய பாசமிகு தோழர்களே, நண்பர்களே,

இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டு இங்கே எங்களுக்கெல்லாம், ஒரு மிகச் சிறந்த வரவேற்புத் தந்திருக்கக்கூடிய பெரியோர்களே, தாய்மார்களே, நண்பர்களே உங்கள் அனைவருக்கும் என் அன்பான வணக்கம்.

நான் நல்லா இருக்கிறேன், நீங்கள் நல்லா இருக்கிறீர்களா ?

நீங்கள் நன்றாக இருந்தால், நான் மட்டுமல்ல, இந்த நாடே நன்றாக இருக்கும். இப்பொழுது கூட ஒரு சகோதரி வீட்டில் உட்கார்ந்து கறி சோறு சாப்பிட்டுவிட்டு இந்த நிகழ்ச்சிக்கு வந்திருக்கிறேன். கொஞ்சம் காரமாக இருந்தது. என்னம்மா இவ்வளவு காரமாக இருக்கிறது என்று கேட்டதற்கு, காரமாக சாப்பிட்டால்தான் நாங்கள் பலத்தோடு, ஆரோக்கியத்தோடு இருக்க முடியும். எங்களிடத்தில் கொரோனா கூட வரமுடியாது என்று பெருமையோடு சொன்னார்கள். ஆகவே, நான் கற்றுக்கொண்டேன். இனிமேல், நானும் இன்றிலிருந்து காரம் அதிகமாக சேர்த்துக் கொள்ளப் போகிறேன். அது உங்கள் மூலமாக இப்பொழுது தெரிந்து கொண்டேன்.

இன்றைக்கு நலத்திட்டங்கள், நலத்திட்டத்தின் அடிப்படையில் பல உதவிகள், உதவி செய்யக்கூடிய சில நிகழ்ச்சிகள் நடக்கப்போகிறது. அதற்காகத்தான் இந்த விழா ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இந்த ஊரைப்பற்றி, இந்த ஊரில் உள்ள உங்களைப்பற்றி, உங்களுக்கு ஏற்கெனவே இருந்த சங்கடங்கள், பிரச்சினைகள், தொல்லைகள், துன்பங்கள் எப்படியெல்லாம் இருந்தது, இப்பொழுது எப்படியெல்லாம் படிப்படியாக நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கிறது. அனைத்தும் சரிசெய்யப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதைப்பற்றி திரு.நாசர் அவர்கள் உங்களிடத்தில் விளக்கமாகப் பேசியிருக்கிறார்.

நான் ஒரு சில மாதங்களுக்கு முன்னால், ஒரு நாள் தொலைக்காட்சியைப் பார்த்துக்கொண்டிருந்தபோது, ஒரு செய்தியைப் பார்த்தேன். என்ன என்று சொன்னால், அந்த செய்தி வாட்ஸ்அப்பில் வந்தது. மாமல்லபுரம் அருகில் உள்ள பெருமாள் கோயிலில் நடைபெற்ற அன்னதான நிகழ்ச்சி, எல்லோரும் உட்கார்ந்து சாப்பிடுகிற நிகழ்ச்சி, அந்த நிகழ்ச்சிக்கு நரிக்குறவர் பெண்ணுக்கு உணவளிக்க மறுத்து இருக்கிறார்கள். உள்ளே விட மறுத்திருக்கிறார்கள். அதற்கு எதிர்ப்பு தெரிவித்து அந்தப் பகுதியில் இருக்கின்ற ஒரு பெண் எதைப் பற்றியும் கவலைப்படாமல், அச்சப்படாமல் அதை அப்படியே செய்தியாக்கி அதை வீடியோவில் பேசியதை நானும் பார்த்தேன். பார்த்தவுடன் நான் ஆச்சரியப்பட்டேன், அதிசயப்பட்டேன் மிகவும் வருத்தப்பட்டேன். அந்த உணவளிக்கக்கூடிய நிகழ்ச்சியில் நரிக்குறவர் இனத்தைச் சார்ந்த ஒரு பெண்ணை அனுமதிக்காமல் இப்படி ஒரு கெட்ட காரியத்தை செய்திருக்கிறார்களே என்று நான் கோபப்பட்டேன், ஆத்திரப்பட்டேன். உடனே அறநிலையத்துறை அமைச்சர் அவர்களைத் தொலைபேசியில் தொடர்புகொண்டு, இந்தச் செய்தியைச் சொன்னேன். நீங்கள் பார்த்தீர்களா, நான் தொலைக்காட்சி மற்றும் வாட்ஸ்அப்பில் பார்த்தேன். அங்கே

சாப்பாடு போடுகின்ற இடத்தில் நரிக்குறவர் இனத்தைச் சார்ந்து இருக்கக்கூடிய ஒரு பெண்ணை அனுமதிக்காமல், ஒரு கொடுமையை செய்திருக்கிறார்களே, இது நியாயமா? உடனடியாக நீங்கள் அங்குப் போகவேண்டும். என்னவென்று விசாரியுங்கள். அந்தப் பெண்ணை அந்தக் கோயிலில் உட்காரவைத்து எல்லோருக்கும் மத்தியில் உட்கார்ந்து அவரை சாப்பிட வைக்கவேண்டும். அதுமட்டுமல்ல, அமைச்சராக இருக்கக்கூடிய நீங்களே அருகில் இருந்து சாப்பிட வேண்டும் என்று நான் உத்தரவிட்டேன்.

அதற்குப் பிறகு அவர் அந்த இடத்திற்குச் சென்று உடனே அந்தப் பெண்ணை தேடிக் கண்டுபிடித்து, அந்தக் கோயிலில் நடைபெறுகின்ற அன்னதானத்தில் பங்கேற்கவைத்து அருகில் அமர்ந்து உணவு அருந்தியக் காட்சியை நான் பார்த்த பிறகுதான் எனக்கு நிம்மதி ஆனது. சந்தோஷமானது. இது எனக்குப் பெருமை என்பதைவிட தைரியமாக அந்தப் பெண் வாதாடியதுதான் எனக்குப் பெருமை. அந்தப் பெண் பெயர் அஸ்வினி. ஆகவே, அந்தப் பெண் வாதாடி, போராடி அதை வெளிப்படுத்தியது உள்ளபடியே அந்தப் பெண்ணுக்கு இங்கிருந்தே என்னுடைய வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பிறகு, அந்தப் பெண்ணுடைய குடும்பச் சூழ்நிலை என்ன? அந்தப் பெண் வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய, பகுதியில் இருக்கக்கூடிய நிலைமைகள் என்ன? என்பதைப்பற்றி குறைகளை எல்லாம் கேட்டு, அப்பெண், அவரது உறவினர்கள் வாழும் பூஞ்சேரி கிராமத்திற்கு நானே நேரடியாக 04.11.2021 அன்று சென்றேன். அங்குள்ள நரிக்குறவர்கள் மற்றும் பழங்குடியின மக்களையெல்லாம் நேரடியாகச் சந்தித்தேன்.

அவர்கள் ஒவ்வொருவரிடமும் பேசினேன். கருத்துக்களைக் கேட்டேன். உங்கள் குறைகள், என்ன? உங்கள் பிரச்சினைகள்

என்ன ? தைரியமாக வந்து சொல்லுங்கள். அதையெல்லாம் இந்த அரசு நிச்சயமாக உடனடியாகச் செய்ய முடியாவிட்டாலும், படிப்படியாக, நிச்சயமாக, உறுதியாக நாங்கள் செய்து முடிப்போம். தைரியமாக எது இருந்தாலும் சொல்லுங்கள் என்று சொல்லிக் கேட்டேன். பல பிரச்சினைகளை எல்லாம் சொன்னார்கள்.

அதில் முக்கியமாக நீண்ட காலமாக அவர்களுக்கு வழங்கப்படாத வாக்காளர் அடையாள அட்டை, வீட்டுமனைப் பட்டாக்கள், சாதிச் சான்றிதழ்கள், முதியோர் உதவித்தொகை இது எல்லாம் வழங்கப்படாமல் இருந்தது. 4.53 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு நலத்திட்ட உதவிகளை நானே அந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு அதை வழங்கி இருக்கிறேன். இந்த நிகழ்வு பூஞ்சேரியில் மட்டுமல்ல, தமிழ்நாடு முழுவதும் பல பகுதிகளில் இந்தப் பிரச்சினை இருக்கிறது.

அதற்குப் பிறகு, தமிழ்நாடு முழுவதும் அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் நான் உத்தரவிட்டேன். நரிக்குறவர்கள், பழங்குடியின மக்கள், இதர விளிம்புநிலை மக்கள் வசிக்கும் ஒவ்வொரு கிராமங்களையும் நீங்கள் சென்று ஆய்வு செய்து, அந்த ஒவ்வொரு குடும்பத்திற்குமான அரசின் நலத்திட்ட உதவிகள் என்னென்ன தேவைப்படுகிறது என்பதற்கு ஒரு பட்டியல் எடுத்து, ஆய்வு செய்து, அந்த அறிக்கையை உடனடியாக அனுப்பிட வேண்டுமென்று நான் உத்தரவிட்டேன்.

அதற்கான நடவடிக்கைகள் எடுப்பதற்கு ஒரு இயக்கமாகவே நடத்தப்பட்டு கடந்த நான்கு, ஐந்து மாதங்களில் நரிக்குறவர், பழங்குடியின மக்கள், இதர விளிம்புநிலை மக்கள் ஒவ்வொரு குடும்பத்திற்கும் அரசின் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. புள்ளிவிவரத்தோடு சொல்லவேண்டுமென்றால், இதுவரைக்கும்,

2 ஆயிரத்து 84 குடும்பங்களுக்குப் புதிய கான்கிரீட் வீடுகளும்,

701 குடும்பங்களுக்கு கழிவறை வசதிகளும்,

2 ஆயிரத்து 91 வீடுகளுக்கு குடிநீர் இணைப்புகளும்,

226 வீடுகளுக்கு மின்சார இணைப்புகளும்,

5 ஆயிரத்து 991 குடும்பங்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்களும்,

7 ஆயிரத்து 824 குடும்பங்களுக்கு குடும்ப அட்டைகளும்,

2 ஆயிரத்து 860 குடும்பங்களுக்கு முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்ட அட்டைகளும்,

9 ஆயிரத்து 468 நபர்களுக்கு வாக்காளர் அடையாள அட்டைகளும்,

15 ஆயிரத்து 290 நபர்களுக்கு சாதிச் சான்றிதழ்களும்,

3 ஆயிரத்து 437 நபர்களுக்கு நலவாரிய அட்டைகளும்,

465 நபர்களுக்கு மாற்றுத்திறனாளி அட்டைகளும்,

3 ஆயிரத்து 147 நபர்களுக்கு முதியோர் ஓய்வூதியமும்,

339 நபர்களுக்கு மாற்றுத்திறனாளி ஓய்வூதியமும்,

233 ஆதரவற்றோருக்கு ஆதரவற்றோர் உதவித்தொகையும்,

1,564 பெண்களுக்கு விதவைகள் ஓய்வூதியமும்,

39 திருமணமாகாத பெண்களுக்கான உதவித்தொகையும்,

7 ஆயிரத்து 955 நபர்களுக்கு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட (MGNREGS) அட்டைகளும்,

507 தெரு விளக்குகளும்,

37 குடியிருப்புகளில் வடிகால் வசதிகளும்,

152 குடியிருப்புகளில் சாலை வசதிகளும்,

67 குடியிருப்புகளில் குடிநீர் வசதிகளும்,

127 ஆண்களுக்கு திறன் பயிற்சிகளும்,

228 பெண்களுக்கு திறன் பயிற்சிகளுக்கு அட்டைகளும் வழங்கப்பட்டுள்ளன.

இது ஒரு மிகப் பெரிய சாதனை. இவ்வளவு கொடுத்ததற்குப் பிறகும் இன்னும் மீதம் இருக்கிறது. நான் இல்லை என்று மறுக்கவில்லை. அதனால் மேலும், வழங்கப்படவேண்டிய நலத்திட்ட உதவிகள் அனைத்தும் வரும் மே மாதம் இறுதிக்குள் நிச்சயமாக நிறைவேற்றப்படும் என்ற உறுதியை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இப்படி நரிக்குறவர், பழங்குடியின மக்கள், விளிம்பு நிலையில் உள்ள மக்களுக்கு நீங்கள் தேடிவரத் தேவையில்லை, நாங்களே தேடி வந்து அந்த உதவிகளைச் செய்யக்கூடிய ஒரு அரசாக இந்த அரசு, எங்கள் அரசு என்று கூட நான் சொல்லமாட்டேன். நம்முடைய அரசு, ஏன் என்றால் நீங்கள் அதில் இருக்கிறீர்கள்.

நமது அரசு என்றால், இது உங்களுடைய அரசு.

இது விளிம்புநிலை மக்களுக்கான அரசு. ஆகவேதான் அவர்களை ஒவ்வொரு குடும்பமாகத் தேடி ஒவ்வொரு அடிப்படைத் தேவைகளை முன்னுரிமை கொடுத்து நிறைவேற்றி வருகிறோம்.

பெண்ணுரிமைக்காகப் போராடிய இயக்கம் நம்முடைய திராவிட இயக்கம். அந்த இயக்கம் ஆட்சியிலிருந்தபோதெல்லாம் பெண்ணுரிமையை நிலைநாட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகளை தொடர்ந்து செய்துகொண்டிருக்கிறது.

அந்த வகையில் பெண்ணுரிமையை உலகுக்கு உணர்த்தும் வகையில் நரிக்குறவர் இனத்தைச் சேர்ந்த இன்னொரு மாணவி திவ்யா, அவர்கள் காணொலியில் பேசியதை நான் பார்த்தேன். பார்த்தவுடனே நான் ஆவடி நாசருக்கு தொடர்புகொண்டேன். அந்த வீடியோவை அனுப்பி வைத்தேன். அவரும் சொன்னார்,

நானும் பார்த்தேன். அதற்குரிய நடவடிக்கைகள் எல்லாம் நாங்கள் எடுத்துக் கொண்டிருக்கிறோம். சரி மறுபடியும் சென்று அங்கிருந்து என்னென்ன பிரச்சினைகளைக் கேட்டு, அங்கிருந்து மக்களோடு மக்களாக இருந்து கைப்பேசியில் தொடர்புகொள்ளுங்கள் என்று சொன்னேன். அவரும் உடனடியாக இங்கிருந்து என்னுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டார்கள். ஆகவே, நான் இங்குள்ள மக்களோடு மக்களாக இருக்கிறேன். அங்குப் பேட்டி கொடுக்க ஏற்கெனவே கைப்பேசி வாட்ஸ்அப்பில் அனுப்பிவைத்த, அந்த திவ்யா அருகில்தான் இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். வீடியோ அழைப்பில் நானே பேசினேன். “என்னம்மா, திருப்தியா, குறைகளையெல்லாம் உடனடியாக கேட்டிருக்கிறோமே, நான் அமைச்சரை மட்டுமல்ல, ஒரு பத்து நாட்களுக்குள் எப்பொழுது வாய்ப்பு கிடைக்குமோ, ஏன் என்றால், சட்டமன்றக் கூட்டத் தொடர் நடந்துகொண்டிருக்கிறது. அதனால், அந்த வாய்ப்பை நான் எப்படி என்று யோசித்து, உடனடியாக நான் வருகிறேன். வந்தால் சாப்பாடு போடுவீர்களா?” என்று கேட்டேன். நிச்சயமாக வாருங்கள், கறி சோறேப் போடுகிறோம் என்று அங்கு இருந்தவர்கள் சொன்னார்கள். அந்த அடிப்படையில்தான் இன்றைக்கு உங்களை எல்லாம் சந்திக்கக்கூடிய வாய்ப்பு எனக்குக் கிடைத்திருக்கிறது.

விளிம்புநிலை சமுதாயத்தைச் சேர்ந்த பெண் பிள்ளைகள், துணிச்சலாகப் பேசுவதைப் பார்த்து உள்ளபடியே ஆச்சரியமாக இருக்கிறது, அதிசயமாக இருக்கிறது, மகிழ்ச்சியாகவும் இருக்கிறது, பெருமையாகவும் இருக்கிறது. இதுதான் திராவிட இயக்கத்தின் பெண்ணுரிமைக் குரல், இந்தப் பெண் பிள்ளை வழியாக இன்றைக்கு ஒலிக்கக்கூடிய காட்சியை நாம் பார்க்கிறோம்.

அதனால்தான், விளிம்புநிலை மாணவிகள், திவ்யா, பிரியா, தர்ஷிணி ஆகிய மூன்று பேரையும் கோட்டையில் உள்ள எனது அறைக்கே அழைத்துப் பேசினேன். முதலமைச்சர் அறையில்

வந்தார்கள். அவர்களிடம் ஒரு 10 நிமிடம் பேசினேன். ஃபோட்டோ எடுத்துக்கொண்டு சென்றார்கள்.

பெண்ணுரிமைக்காகப் போராடிய திராவிட இயக்கத்திற்குக் கிடைத்த மாபெரும் வெற்றி, இந்த வெற்றி என்பதை நான் பெருமையோடு சொல்கிறேன். ஆகவே, அந்த வெற்றியை யார் மூலமாகப் பார்க்கிறேன் என்றால், அஸ்வினி வடிவிலும், திவ்யா வடிவிலும். உள்ளபடியே நான் நெகிழ்ந்துபோனேன், மகிழ்ச்சியடைந்தேன். அதனால்தான், எப்படி அஸ்வினி வீட்டிற்குப் போனேனோ, அதேபோல் இன்று திவ்யா, தர்ஷிணி வீட்டிற்கும் வந்திருக்கிறேன்.

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் இன்றைக்கு நம்மையெல்லாம், பிரிந்து இருந்தாலும், மறைந்து இருந்தாலும், நம்முடைய ஊனோடும், உதிரத்தோடும், நெஞ்சிலே தொடர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கிறார். அவருடைய காலத்தில்தான் திருநங்கைகளுக்கும், மாற்றுத்திறனாளிகளுக்கும், ஒடுக்கப்பட்டவர்களுக்கும், நசுக்கப்பட்டவர்களுக்கும் ஒரு பாதுகாப்பு அரணாக இருந்து பல்வேறுத் திட்டங்களையெல்லாம் நிறைவேற்றிக் கொடுத்திருக்கிறார். அவர்கள் வழியில் இந்த ஆட்சி நிச்சயமாக செயல்படும், செயல்பட்டுக்கொண்டிருக்கிறது.

நமது அரசு நரிக்குறவர் மற்றும் இருளர் மக்களின் வாழ்வில் அப்படியொரு அணையா விளக்கை ஏற்றிடும் முயற்சியில் நாங்கள் ஈடுபட்டிருக்கிறோம். அதனுடைய அடையாளம்தான் அதற்கு எடுத்துக்காட்டுதான் இந்த நிகழ்ச்சி. நான் எத்தனையோ நிகழ்ச்சிக்குப் போயிருந்தாலும், ஏற்கெனவே நான் சென்னை மாநகராட்சியின் மேயராக இருந்தேன். உள்ளாட்சித்துறை அமைச்சராக இருந்தேன். துணை முதலமைச்சராக இருந்தேன். இப்போது உங்கள் அன்போடும், ஆதரவோடும் முதலமைச்சராக பொறுப்பேற்றுப் பணியாற்றிக்கொண்டிருக்கிறேன். ஆகவே,

இந்தப் பொறுப்புகள் இருந்தபோது, எந்த நிகழ்ச்சிக்கெல்லாம் சென்றிருந்தாலும் இதுபோன்ற உங்களைப்போல மகிழ்ச்சியோடு உங்கள் நிகழ்ச்சியில் பங்கேற்கிறபோது உள்ளபடியே அளவிடாத மகிழ்ச்சி ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த அரசு உங்களுக்காக என்றைக்கும் துணைநிற்கும். நீங்கள் எதைப் பற்றியும் கவலைப்பட வேண்டாம். நீங்கள் என்ன நினைக்கிறீர்களோ, என்ன பிரச்சினை இருக்கிறதோ, சட்டரீதியாக நிச்சயமாக அதையெல்லாம் நாங்கள் நிறைவேற்றித் தருவோம் என்ற உறுதியை இந்த நேரத்தில் எடுத்துச் சொல்லி தமிழ்நாட்டு மக்களுக்காக, ஒவ்வொரு இலக்கினை எட்டிடவும், இந்த திராவிட மாடல் ஆட்சி நடந்துகொண்டிருக்கிறது, இது தொடரும், இந்த அரசு உங்களுக்காகத் தொடர்ந்து பாடுபடும். நலத்திட்டங்களை நிறைவேற்றி, உங்களது வாழ்வில், வாழ்க்கையில் ஒளிவிளக்கை ஏற்றக்கூடிய இந்தச் சிறப்பான நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உங்கள் அனைவரையும் சந்திக்கக்கூடிய இந்த வாய்ப்பைப் பெற்றமைக்கு மீண்டும் ஒருமுறை என்னுடைய மகிழ்ச்சியையும், நன்றியையும் தெரிவித்து என் உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி, வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள்,*
ஆவடியில் உள்ள நரிக்குறவர் குடியிருப்புகளுக்கு நேரில் சென்று
அங்குள்ள மக்களுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி
ஆற்றிய உரை – 15.04.2022

ரூ.803 கோடி ஒதுக்கீட்டில் ஒரு இலட்சம் விவசாய மின் இணைப்புகள்

விவசாயப் பெருமக்களோடு கலந்துரையாடல் நிகழ்ச்சியை நடத்தி அந்த நிகழ்ச்சிக்கு வந்திருக்கக்கூடிய அனைவரையும் வரவேற்று மகிழ்ந்திருக்கக்கூடிய

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு. வி.செந்தில்பாலாஜி அவர்களே !

உரையாற்றி இருக்கக்கூடிய சேப்பாக்கம் திருவல்லிக்கேணி சட்டமன்ற உறுப்பினர் தம்பி உதயநிதி அவர்களே !

பல்வேறு மாவட்டங்களிலிருந்து காணொலிக் காட்சிகள் மூலமாக இந்த நிகழ்ச்சியில் பங்கேற்று இருக்கக்கூடிய அமைச்சர் பெருமக்களே !

சட்டமன்ற உறுப்பினர்களே ! நாடாளுமன்ற உறுப்பினர்களே !

பாட்டாளி மக்கள் கட்சியினுடைய சட்டமன்ற கட்சித் தலைவர் திரு.ஜி.கே.மணி அவர்களே !

எரிசக்தித் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.ரமேஷ்சந்த் மீனா, இ.ஆ.ப., அவர்களே !

நிறைவாக நன்றியுரை ஆற்றக்கூடிய தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு.ராஜேஷ் லக்கானி, இ.ஆ.ப., அவர்களே !

விவசாய சங்கத்தைச் சார்ந்திருக்கக்கூடிய, பல்வேறு பிரிவுகளைச் சார்ந்திருக்கக்கூடிய நிருவாகிகளே !

அரசுத் துறை அதிகாரிகளே ! அலுவலகப் பெருமக்களே !

பத்திரிகை, ஊடகத்துறையைச் சார்ந்திருக்கக்கூடிய நண்பர்களே, சகோதரர்களே ! மற்றும் இந்த நிகழ்ச்சிக்கு வருகை தந்திருக்கக்கூடிய பயனாளிகளே,

உங்கள் அனைவருக்கும் எனது அன்பான வணக்கம்!

உங்களை எல்லாம் பார்க்கும்போது எனக்கு சாதாரண மகிழ்ச்சி அல்ல, ஒரு மிகப்பெரிய மகிழ்ச்சி ஏற்படுகிறது.

அதற்கு என்ன காரணம் என்று கேட்டால், நமது அரசு என்ன சாதனை செய்திருக்கிறது என்பதை முதலமைச்சராக இருக்கக்கூடிய நான் சொல்வதைவிட, மின்துறை அமைச்சராக பொறுப்பேற்று இருக்கக்கூடிய

திரு.செந்தில்பாலாஜி அவர்கள் சொல்வதைவிட, இதனால் பயன்பெற்று இருக்கக்கூடிய நீங்கள் அதைப்பற்றி சொல்வதைக் கேட்கும்போதுதான் நான் அதிகமான அளவில் மகிழ்ச்சியடைகிறேன்.

ஏதோ ஒரு திட்டத்தை அறிவித்தோம்,

அப்படி அறிவித்த திட்டத்தால் சிலர் பயனடைந்து இருப்பார்கள் என்று நானோ நமது அரசோ இருப்பது இல்லை.

அறிவிக்கிற திட்டத்தால் எத்தனை இலட்சம் பேர் பயனடைந்தார்கள்,

நாம் அறிவிக்கிற திட்டத்தின் உண்மையான பலனை அனைவரும் அடைந்தார்களா என்பதைக் கவனிப்பதில் நான் எப்போதும் கண்ணும் கருத்துமாக இருப்பவன்.

அதேபோலத்தான் அமைச்சர்களும், அதிகாரிகளும் இருக்க வேண்டும் என்றும் நினைப்பவன் நான்.

புதிய மின் இணைப்பைப் பெற்ற வேளாண் பெருங்குடி மக்களாகிய நீங்கள்,

இத்திட்டத்தால் எந்த வகையில், எந்தெந்த அடிப்படையில் பயனடைந்திருக்கிறோம் என்று சொல்வது எங்களுக்குக் கிடைத்த மிகப்பெரிய பாராட்டுப் பத்திரம்!

ஒரு இலட்சம் உழவர்களுக்கு இலவச மின் இணைப்பு கொடுக்கலாம், அதுவும் சில மாதங்களில் கொடுத்து நம்முடைய இலக்கை அடைந்துவிடலாம் என்று மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.

இந்த ஓராண்டு காலத்துக்குள், ஒரு இலட்சம் பேருக்கு மின் இணைப்பு கொடுத்துவிட முடியுமா என்ற சந்தேகம் பலருக்கு இருந்தது, ஏன் எனக்கே இருந்தது.

ஆனால், மாண்புமிகு அமைச்சர் திரு.செந்தில்பாலாஜி அவர்களைப் பொறுத்தவரையில், எதிலும் ஒரு டார்கெட் வைத்து பணியாற்றக் கூடியவர். அந்த டார்கெட்டை எப்படியும் முடித்துக்

காட்டக் கூடியவர் என்பதற்கு இந்த நிகழ்ச்சியே ஒரு சாட்சியாக அமைந்திருக்கிறது.

1,00,000 புதிய இலவச உழவர் மின் இணைப்புகள் வழங்கும் திட்டம், அவரே இங்கு குறிப்பிட்டுச் சொன்னார், கடந்த 23.09.2021 அன்று சென்னை அண்ணா நூற்றாண்டு நூலக அரங்கத்தில் நான் தொடங்கி வைத்தேன். ஓராண்டு காலம் முடிவதற்கு முன்னால் ஒரு இலட்சம் பேருக்கு மின் இணைப்பு தரப்பட்டுள்ளது.

இந்த வேகத்துக்கு, இந்த சாதனைக்கு காரணமாக இருக்கக்கூடிய அமைச்சர் திரு.செந்தில்பாலாஜி அவர்களுக்கும், மின்சார வாரியத் தலைவர், உயர் அதிகாரிகள், அலுவலர்கள் அனைவருக்கும், விவசாய பெருங்குடி மக்களின் சார்பில் நான் என்னுடைய நன்றியை, வாழ்த்துக்களை, பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு இலட்சம் இணைப்பு என்கிற காரணத்தினால், 1 இலட்சம் குடும்பம் அடையும் பயன் மட்டுமல்ல,

அவர்களது வேளாண் உற்பத்தியால் இந்த மாநிலம் அடைய இருக்கக்கூடிய வளர்ச்சி என்ன என்பதை நாம் சிந்தித்து பார்க்க வேண்டும்.

எனவே, இந்தச் சாதனையையும் நாம் அளவிட முடியாத சாதனை என்றுதான் சொல்ல வேண்டும்.

1990 வரை உழவர்கள், வேளாண்மைக்காக பயன்படுத்தும் மின்சாரத்துக்குக் கட்டணம் செலுத்திவந்தார்கள். இப்போது இருக்கக்கூடிய புதியவர்களுக்கு இதுபற்றித் தெரியாமல் இருக்கலாம் என்பதால் அதனை நினைவூட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

12,09,543 வேளாண் மின் இணைப்புகள் அப்போது இருந்தது.

ஒவ்வொரு உழவரிடமிருந்து 10 குதிரைத்திறன்வரை உள்ள மின் மோட்டார்களுக்கு குதிரைத்திறன் ஒன்றிற்கு 50 ரூபாய் வீதமும், 10 குதிரைத் திறனுக்கு மேல் உள்ள மின் மோட்டார்களுக்கு ஒரு குதிரைத் திறனுக்கு 75 ரூபாய் வீதமும் ஆண்டுதோறும் கணக்கிட்டு வசூலிக்கப்பட்டு வந்தது.

தமிழ்நாட்டின் வேளாண் உற்பத்தியினை பெருக்கி, உழவர்களின் நலனை மேம்படுத்தும் நோக்குடன் கடந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு 19.11.1990 அன்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், அனைத்து உழவர்களுக்கும் இலவச மின்சாரம் என்ற ஒரு உன்னதமான அறிவிப்பை அறிவித்தார்கள்.

இலவச மின்சாரம் என்று சொன்னால் போதுமா ?

அதற்குரிய இணைப்பு கொடுக்க வேண்டாமா ?

அதிகளவில் இணைப்புகளையும் தலைவர் கலைஞர் அவர்கள் கொடுக்கச் சொன்னார்.

2001 முதல் 2006 வரை நடந்த ஆட்சியில் 1,62,479 வேளாண் மின் இணைப்புகளும்,

2006 முதல் 2011 வரை நடைபெற்ற கழக ஆட்சியில் 2,09,910 வேளாண் மின் இணைப்புகளும் வழங்கப்பட்டன. அதிலும், குறிப்பாக 2010–2011 காலகட்டத்தில் கழக ஆட்சியில் அதிகபட்சமாக ஒரே ஆண்டில் 77,158 வேளாண் மின் இணைப்புகள் உழவர்களுக்கு வழங்கப்பட்டன.

அதன்பின் நடந்த 10 ஆண்டுகால ஆட்சியில், அதாவது 2011 முதல் 2021 வரை உழவர்களுக்கு வழங்கப்பட்ட வேளாண் மின் இணைப்புகள் 2,21,579 மட்டுமே.

அதாவது, ஆண்டுக்குச் சராசரியாக 22,100 மின் இணைப்புகள் மட்டுமே கொடுக்கப்பட்டன.

புதிய இணைப்பு கேட்டு விண்ணப்பித்தவர்களுக்கும் இணைப்புகள் வழங்கவில்லை.

31.03.2021 நிலவரப்படி, பல்வேறு பிரிவுகளின்கீழ் மொத்தம் 4,52,777 வேளாண் விண்ணப்பங்கள் பதிவுசெய்து நிலுவையில் இருந்தன.

இந்த குறையை தீர்க்கும் வண்ணம், உழவர்களின் நலனை எப்போதுமே முதன்மையாக கருதக்கூடிய நாம், 2021–2022ஆம் ஆண்டில் 1,00,000 வேளாண் மின் இணைப்புகள் வழங்குவதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்படும் என கடந்த ஆண்டு செப்டம்பரில் அறிவித்தோம்.

நானே தொடங்கிவைத்தேன். அன்றைய நாளே, பயனாளிகள் பத்து பேருக்கு வேளாண் மின் இணைப்புக்கான ஆணையை நான் வழங்கினேன்.

அன்று அடையாளமாகப் பத்து பேருக்கு வழங்கினேன்; இன்று ஒரு இலட்சம் பேர் பெற்றுவிட்டார்கள்.

ஒரு அறிவிப்பு, இன்றைய நாள் முழுமை அடைந்துவிட்டது. இது மகத்தான சாதனை!

ஒரு திட்டத்தை தொடங்குவது சாதனை அல்ல, அந்த திட்டத்தின் பயன் முழுமையாக பயனாளிகளுக்குக் கொண்டுபோய்ச் சேர்ப்பதுதான் உண்மையான சாதனையாக அமைய முடியும்.

கொரோனா பெருந்தொற்று மற்றும் வடகிழக்குப் பருவமழை, இப்படிப்பட்ட இடர்பாடுகளுக்கு இடையிலும் வேளாண் மின்

இணைப்பு கொடுக்கும் பணிகள் எவ்வித தொய்வும் இன்றி, செய்து முடிக்கப்பட்டுள்ளது.

அதனால்தான், நம்முடைய தேர்தல் அறிக்கையிலேயே, தலைப்புச் செய்தியாக என்ன சொல்கிறோம் என்றால் "சொல்வதைச் செய்வோம்! செய்வதை சொல்வோம்!", இது கழக அரசின் அடிப்படை கொள்கையாக அமைந்திருக்கிறது. ஆறு மாத காலத்திற்குள்ளாகவே முடிக்கப்பட்டு ஒரு இலட்சம் உழவர்களுக்கும் மின் இணைப்புகள் 29.03.2022 அன்று நிறைவு செய்யப்பட்டன.

- ✶ இன்று ஒரு இலட்சமாவது இலவச மின் இணைப்புக்கான உத்தரவை நான் வழங்குகிறேன்.
- ✶ இதனையும் சேர்த்து தமிழ்நாட்டில் வேளாண் தொழில் செய்வோரின் எண்ணிக்கை 21.80 இலட்சத்திலிருந்து 22.80 இலட்சமாக உயர்ந்திருக்கிறது.
- ✶ வழங்கப்பட்ட ஒரு இலட்சம் வேளாண் மின் இணைப்புகளினால் தமிழ்நாட்டின் வேளாண் நிலப்பரப்பு 2,13,107 ஏக்கர் அதிகரித்திருக்கிறது.
- ✶ சுமார் 6,30,340 குதிரைத் திறன் கொண்ட மின் மோட்டார்கள் மின் கட்டமைப்பில் இணைக்கப்பட்டிருக்கின்றன.
- ✶ இந்தத் திட்டத்தை முழுமையாக செயல்படுத்தியதற்கு 803 கோடி ரூபாய் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

மக்களின் நலன் ஒன்றை மட்டுமே கருத்திற்கொண்டு செயல்படும் இந்த அரசு, இதுவரை இல்லாத வரலாற்று சாதனையாக ஓராண்டில் ஒரு இலட்சம் மின் இணைப்புகளை வழங்கி ஒரு பெரிய சாதனையைப் படைத்திருக்கிறது.

எனவே, நான் மீண்டும் மீண்டும் உறுதியோடு தெரிவித்துக் கொள்ள விரும்புவது, எப்பொழுதுமே உழவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கக்கூடிய அரசுதான் இந்த அரசு, இனிவரும் காலங்களிலும் சிறப்பான நடவடிக்கைகளை முன்னெடுக்கும் என்று உறுதியளித்து, மிகப்பெரிய சாதனையைப் படைத்து, வெற்றி கண்டு இருக்கக்கூடிய இந்தத் துறைக்கு, இந்தத் துறையில் இருக்கக்கூடிய அதிகாரிகளுக்கு, எல்லாவற்றிற்கும் மேலாக இந்தத் துறையின் பொறுப்பை ஏற்றுக் கொண்டு இருக்கக்கூடிய அமைச்சர் திரு.செந்தில்பாலாஜி அவர்களுக்கு என்னுடைய வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொண்டு, என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி, வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள்,*
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் தலைமை அலுவலகத்தில், ஓராண்டில் ஒரு இலட்சம் மின் இணைப்பு பெற்று பயனடைந்த விவசாயப் பெருமக்களுடன் நடைபெற்ற கலந்துரையாடல் விழாவில் ஆற்றிய உரை – ***16.04.2022***

சீரான, நீடித்த, நிலையான வளர்ச்சியை அனைத்து மக்களுக்கும் ஏற்படுத்தி கொடுப்பது உள்ளாட்சி துறையின் முக்கிய குறிக்கோள்

பேரூராட்சித் தலைவர்கள் மற்றும் துணைத் தலைவர்களுக்கான நிருவாக பயிற்சி நிறைவு விழாவிற்குத் தலைமையேற்று இருக்கக்கூடிய மாண்புமிகு நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்களே!

இந்த நிகழ்ச்சியிலே பங்கேற்றுப் பயிற்சி விளக்கவுரை, பயிற்சி மட்டுமல்ல முயற்சி, அதனால் ஏற்படக்கூடிய எழுச்சி, இவை அனைத்தையும் மிகத் தெளிவாக எடுத்துவைத்து உரையாற்றி அமர்ந்திருக்கக்கூடிய தலைமைச் செயலாளர் முனைவர் இறையன்பு, இ.ஆ.ப., அவர்களே!

துவக்கத்தில் அனைவரையும் வரவேற்று மகிழ்ந்திருக்கக்கூடிய நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையினுடைய கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.சிவ் தாஸ் மீனா, இ.ஆ.ப., அவர்களே!

நன்றியுரை ஆற்றியிருக்கக்கூடிய பேரூராட்சியினுடைய ஆணையர் திரு.ஆர்.செல்வராஜ், இ.ஆ.ப., அவர்களே!

சென்னை மாநகராட்சியினுடைய ஆணையர் திரு.ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப., உள்ளிட்ட நகர்ப்புற உள்ளாட்சித் துறையினுடைய அரசு அலுவலர்களே!

வருகை தந்திருக்கக்கூடிய பேரூராட்சித் தலைவர்களே!

பேரூராட்சியின் துணைத் தலைவர்களே!

பத்திரிகை மற்றும் ஊடகத்துறையைச் சார்ந்திருக்கக்கூடிய பாசமிகு நண்பர்களே!

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான மாலை வணக்கம்!

உள்ளாட்சிகளிலும் நல்லாட்சி தொடர வேண்டும் என்பதற்காக இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

பொறுப்பேற்றுக் கொண்டிருக்கக்கூடிய உங்களுக்கு, உங்களுடைய பணியில், உங்களுடைய தொண்டில் மக்களுக்கு ஆற்ற வேண்டிய பணிகளை மிகச் சிறப்பாக நிறைவேற்றிட வேண்டும் என்பதற்காக இந்தப் பயிற்சி முகாம் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இந்த நிகழ்ச்சியிலே, இந்தப் பயிற்சி முகாமில் நம்முடைய பேரூராட்சித் தலைவர்கள், பேரூராட்சியினுடைய துணைத் தலைவர்கள் ஆர்வத்துடன் வந்து கலந்துகொண்டுள்ளீர்கள்.

சில நாட்களுக்கு முன்னால் மாநகராட்சி மேயர்கள், துணை மேயர்கள், நகராட்சித் தலைவர்கள், நகராட்சித் துணைத் தலைவர்களுக்கு இதேபோன்ற ஒரு பயிற்சி வழங்கப்பட்டிருக்கிறது.

அதனுடைய தொடர்ச்சியாகத்தான் பேரூராட்சித் தலைவர்கள், துணைத் தலைவர்களுக்கான பயிற்சி முகாம் ஏற்பாடு செய்யப்பட்டு காலையிலிருந்து நடைபெற்றிருக்கிறது.

இங்கு வந்திருக்கக்கூடிய உங்களில் அனுபவம் வாய்ந்தவர்களும் இருக்கிறீர்கள்; ஏற்கெனவே உள்ளாட்சி அமைப்புகளில் பொறுப்புகளை ஏற்று பணியாற்றி இருக்கிறீர்கள்; அதேபோல, பலர் முதன்முறையாக இந்தப் பதவிகளுக்கு, இந்தப் பொறுப்பிற்கு நீங்கள் வந்திருக்கிறீர்கள். அதிலும் குறிப்பாக, பெண்கள் அதிகம் இப்போது பொறுப்பிற்கு வந்திருக்கிறீர்கள். இதைப் பார்க்கும்போது, ஒரு காலத்திலே பெண்களுக்கு இட ஒதுக்கீடு வேண்டும், இட ஒதுக்கீடு வேண்டும் என்று உரிமையோடு கேட்டுக்கொண்டிருந்த நீங்கள் போகிற போக்கைப் பார்த்தால், ஆண்களுக்கு இட ஒதுக்கீடு வேண்டும், ஆண்களுக்கு இட ஒதுக்கீடு வேண்டும் என்று கேட்கிற நிலை வந்தாலும் ஆச்சரியம் இல்லை. ஆகவே, அந்த அளவிற்கு இன்றைக்கு பெண்களுக்கு தந்தை பெரியார் எதை எண்ணினாரோ அதை இன்றைக்கு நாம் நிறைவேற்றிக்கொண்டிருக்கிறோம் என்பது மகிழ்ச்சியாக இருக்கிறது.

இதன்மூலமாக சீரான, ஒன்றுபட்ட, சிறப்பான செயல்பாட்டை உங்களிடம் இருந்து நாங்கள் எதிர்பார்த்துக் காத்திருக்கிறோம். அதற்காகத்தான் இந்தப் பயிற்சி முகாம் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

கோட்டையில் நாங்கள் உட்கார்ந்துகொண்டு, என்னதான் திட்டங்களைத் தீட்டினாலும், அந்தத் திட்டங்கள் வெற்றிபெற வேண்டும் என்று சொன்னால், அதை மக்களுடைய உள்ளத்தில், மக்களுடைய கையில் கொண்டுபோய் சேர்க்கவேண்டுமென்று சொன்னால், அது உங்களால்தான் முடியும். அந்தப் பொறுப்பும், கடமையும் உங்களுக்கு இருக்கிறது என்பதை நீங்கள் மறந்துவிடக்

கூடாது. உங்களை நம்பி அரசினுடைய திட்டங்களை நாங்கள் ஒப்படைத்திருக்கிறோம். அதற்கான நிகழ்ச்சிதான் இந்தப் பயிற்சி முகாம் என்கிற இந்த நிகழச்சி.

மக்களாட்சியின் மாண்புகளையும், ஜனநாயகத்தின் நெறிமுறைகளையும் காப்பதில், இந்த அரசு எப்போதும் முதன்மையான மாநிலமாக இருக்கும், முதன்மையான அரசாக இருக்கும் என்பதை உறுதியோடு உங்களுக்கு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

எப்போதெல்லாம் ஜனநாயகம் அல்லது மக்களாட்சி தத்துவத்திற்கு ஊறு விளைகிறதோ, அப்போதெல்லாம் நம்முடைய கழக ஆட்சி அதை சரிசெய்வதோடு, களத்திலே உங்களில் ஒருவராய் இந்த அரசு நிச்சயம் நிற்கும்.

உள்ளாட்சித் தேர்தல்களைக்கூட முறையாக நடத்துவது என்பது ஜனநாயகம், அந்த ஜனநாயகத்தைக் காப்பதுதான்.

யாரோ சிலருக்கு பதவி கிடைக்கும் என்பதற்காக இத்தகைய தேர்தல்களை நடத்துவது இல்லை. மக்களுக்கு நேரடியாகத் தொண்டாற்றுவதற்கான மக்கள் தொண்டர்களைத் தேர்ந்தெடுக்க இந்தத் தேர்தல்களை நாம் நடத்துகிறோம். அதுவும் முறையாக நடத்துகிறோம். இப்போது நடந்த தேர்தலில்கூட எந்தவித குறைபாடும் இல்லாமல், முறைகேடும் இல்லாமல், எந்தவித புகார் இல்லாமல், எந்தக் குற்றச்சாட்டுக்கும் ஆளாகாமல் இந்தத் தேர்தலை நடத்தி முடித்திருக்கிறோம் என்பது வரலாற்றிலே பதிவாகியிருக்கக்கூடிய ஒரு மிகப்பெரிய சாதனை.

ஒவ்வொரு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பின் பதவிக்காலம் என்பது ஐந்து ஆண்டுகள். அந்த பதவிக்காலம் முடிவடைவதற்கு முன்னதாக தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதுதான் சட்டம். இப்படித்தான் இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 74ஆவது திருத்தம் சொல்கிறது, அதைத்தான் சுட்டிக்காட்டுகிறது. அந்த அடிப்படையில்

பார்த்தால், முதலாவது தேர்தல் 1996ஆம் ஆண்டு நடந்தது. அதன்பிறகு 2001, 2006, 2011 ஆகிய ஆண்டுகளில் இந்தத் தேர்தல் நடந்தது. அந்த வரிசையில் 2016ஆம் ஆண்டு தேர்தல் நடத்தப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அது நடத்தப்படவில்லை.

இப்போது நம்முடைய கழக அரசு அமைந்ததும் எந்தவித முறைகேடுகளுக்கும் இடமில்லாமல் தேர்தலை நடத்தி முடித்திருக்கிறோம். இந்தத் தேர்தல் மூலமாக,

21 மாநகராட்சிகள்,

138 நகராட்சிகள்,

489 பேரூராட்சிகளுக்கு தேர்தல் நடந்துள்ளது.

இதன் மூலமாக 1,373 மாநகராட்சி உறுப்பினர்களும்,

3,842 நகராட்சி உறுப்பினர்களும்,

7,604 பேரூராட்சி உறுப்பினர்களும் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள்.

அதைப்போல மறைமுகத் தேர்தல் மூலமாக,

21 மேயர்கள்,

21 துணை மேயர்கள்,

138 நகராட்சித் தலைவர்கள்,

136 நகராட்சித் துணைத் தலைவர்கள்,

487 பேரூராட்சித் தலைவர்கள்,

483 பேரூராட்சித் துணைத் தலைவர்கள், தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள்.

இப்படி மக்களால் நேரடியாகவும், மறைமுகமாகவும்

தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உள்ளாட்சிப் பிரதிநிதிகள் அனைவருக்கும் எனது பாராட்டுதலையும் வாழ்த்துக்களையும் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

உங்கள் கைகளில் உள்ளாட்சிகளின் எதிர்காலம் ஒப்படைக்கப்பட்டு இருக்கிறது. நான் கொஞ்சம் உரிமையோடு, பெருமையோடு சொல்லவேண்டுமென்றால், நானும் உள்ளாட்சி மூலமாகத்தான் மேயராக தேர்ந்தெடுக்கப்பட்டேன் என்பது உங்களுக்குத் தெரியும். 1996ஆம் ஆண்டு நடைபெற்ற மேயர் தேர்தலில் சென்னை மாநகரத்தின் மேயராக மறைமுகமாக அல்ல, நேரடியாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டேன். இப்போது மேயர் தேர்தல் என்பது கவுன்சிலர்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறது. 1996ஆம் ஆண்டு மக்களால் நான் தேர்ந்தெடுக்கப்பட்ட மேயராக பொறுப்பு வகித்தேன். அதற்குப் பிறகு 2001ஆம் ஆண்டு அப்போது நாம் ஆட்சியில் இல்லை, அ.தி.மு.க. ஆட்சி தமிழ்நாட்டில் இருந்தது. அந்தத் தேர்தலில் என்னை எப்படியாவது தோற்கடிக்க வேண்டுமென்று எவ்வளவோ திட்டமிட்டு பணியாற்றினார்கள். நான் அந்தப் பிரச்சினைக்கு எல்லாம் அதிகம் செல்ல விரும்பவில்லை. அது உங்கள் பலபேருக்குத் தெரியும். ஆனால், அ.தி.மு.க. ஆட்சியிலே இருந்த நேரத்திலேயே இரண்டாவது முறையாக சென்னை மாநகரத்தின் மக்களால் மேயராக தேர்ந்தெடுக்கப்பட்டவன் நான்.

இதை என்னுடைய பெருமைக்காக நான் சொல்கிறேன் என்று நினைத்துவிடக்கூடாது. எப்படி இரண்டாவது முறையும் நான் தேர்ந்தெடுக்கப்படும் வாய்ப்பு எனக்குக் கிடைத்ததென்றால், எவ்வளவோ முறைகேடுகள் எல்லாம் நடந்தது, அதையெல்லாம் தாண்டி வெற்றிபெற்று இரண்டாவது முறையாக அந்தப் பொறுப்பிற்கு வந்தேன். ஆனால், வந்ததற்குப் பிறகு, ஏன்தான் வெற்றிபெற்றேனோ என்று அப்போது நான் நினைத்தேன், ஏனென்றால், எந்தப் பணியையும் செய்ய முடியவில்லை. எதையும் செய்வதற்கு அன்றைக்கு இருந்த அரசு இடம் கொடுக்கவில்லை.

எவ்வளவோ சங்கடங்கள், இடையூறுகள் எல்லாம் நடந்தது. ஆனால், இரண்டாவது முறையாக நான் தேர்ந்தெடுக்கப்பட்டு அந்தப் பொறுப்பிற்கு வருவதற்குக் காரணம் என்னவென்று கேட்டால், மக்களோடு மக்களாக நான் இருந்தேன், மக்களோடு மக்களாக நான் இணைந்தேன், மக்களுக்காக பணிகளை ஆற்றினேன். அதுதான் அதில் இருக்கக்கூடிய சிறப்பு.

அதனால்தான், நான் இன்னும் கூட சொல்ல வேண்டுமென்றால், நான் கட்சியிலே ஒரு பொறுப்பில் இருக்கின்ற காரணத்தால் நான் மேயராக இருந்தபோதும் சரி, சட்டமன்ற உறுப்பினராக இருக்கக்கூடிய சூழ்நிலையிலும் சரி, உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்தபோதும் சரி, இப்போது முதலமைச்சராக இருக்கும் இந்த நேரத்திலும் கூட, என்னை தேர்ந்தெடுத்த தொகுதி மக்களுக்கு எப்படியும் வாரத்திற்கு ஒரு முறை, பத்து நாட்களுக்கு ஒரு முறையாவது அங்கு சென்றுவிட்டுதான் வருவேன், என்னுடைய கொளத்தூர் தொகுதிக்குப் போகாமல் நான் இருந்தது கிடையாது. நான் வெளியூர் சுற்றுப்பயணம் முடித்துவிட்டு வருவேன், வந்துவிட்டு காலையில் முதல் வேலையாக தொகுதிக்குச் சென்றுவிடுவேன். தலைவர் அறிவாலயத்தில் அல்லது கோபாலபுரத்தில் உட்கார்ந்து கொண்டு ஸ்டாலின் வந்துவிட்டாரா என்று கேட்பார். மாலையோ, இரவோ சந்திக்கச் செல்லும்போது “என்னப்பா ஊரிலிருந்து வந்தவுடன் பார்த்துவிட்டுச் செல்லக்கூடாதா?” என்று கேட்பார். தொகுதிக்குச் சென்றிருந்தேன் என்று கூறுவேன். தொகுதியில் என்ன வைத்திருக்கிறாய் என்று கேட்பார். அதுமட்டுமல்லாமல், நீ தான் மறுபடியும் அங்குபோய் நிற்கப்போகிறாயா என்று கேட்பார். அய்யா, நம் கட்சி வெற்றிபெற வேண்டும், உதயசூரியன் வெற்றிபெற வேண்டும் என்று சொல்வேன்.

எதற்காக சொல்கிறேன் என்றால், மக்களோடு மக்களாக நாம் இருந்தால்தான் நம் மீது நம்பிக்கை வைத்து நமக்கு தொடர்ந்து அந்தந்தப் பகுதியில் இருக்கக்கூடிய மக்கள் ஆதரவை

வழங்குவார்கள் என்பதற்காகத்தான் சுட்டிக்காட்டினேனேத் தவிர, என்னை பெருமைப்படுத்திக் கொள்வதற்காக நான் சொல்லவில்லை.

அதைத்தான் நம்முடைய தலைமைச் செயலாளர் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னார். பதவி என்பதை பொறுப்பாக நினைத்து நாம் கடமை ஆற்ற வேண்டும். தலைவர் கலைஞர் அவர்கள் என்னிடத்தில் அடிக்கடி சொல்வார், உனக்குக் கிடைத்திருக்கக்கூடிய பதவி மேயர் பதவி அல்ல, மேயர் பொறுப்பு, பொறுப்போடு நீ பணியாற்ற வேண்டும், பொறுப்பாக இருந்து பொதுமக்களுக்கு பணியாற்ற வேண்டும், அப்போதுதான், பொறுப்பாக மக்கள் உன்னை கவனிப்பார்கள் என்று அடிக்கடி எடுத்துச் சொன்னது உண்டு.

இப்பயிற்சியை நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்கள் ஏற்பாடு செய்து மிகச் சிறப்பாக நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அவருடைய அரசியல் நுழைவு எப்படியென்றால் உள்ளாட்சிப் பிரதிநிதியாகத்தான் உள்ளே வருகிறார். எனவே, அவருக்கும் இந்த உள்ளாட்சிப் பொறுப்புக்கு எவ்வளவோ தொடர்பு உண்டு, கரைத்துக் குடித்து வைத்திருப்பவர். எனவே, இப்படிப்பட்ட சின்னசின்ன விவரங்களைக் கூட எங்களால் தெரிந்துக்கொள்ள முடிகிறது என்று சொன்னால், அதற்கு அடித்தளமாக இருந்தது உள்ளாட்சிதான். ஆக, எங்களுடைய வளர்ச்சியும், எங்களுடைய அரசியல் வளர்ச்சியும் இந்த உள்ளாட்சி பொறுப்பிலிருந்துதான் வளர்ந்து இவ்வளவு தூரம் வந்திருக்கிறோம். அதுபோல், நீங்களும் வர வேண்டும் என்பதுதான் எங்களுடைய ஆசை. உள்ளாட்சி அமைப்புகளில் நாங்கள் பணியாற்றிய காலம்தான் ஒரு பொற்காலமாக நாங்கள் கருதிக் கொண்டிருக்கிறோம்.

நகர்ப்புற உள்ளாட்சி மன்றங்களுடைய தற்சார்புடைய

நிறுவனங்களாக முன்னேற்றுவதுதான் நமது அரசின் மிக முக்கிய நோக்கமாக அமைந்திருக்கிறது. மக்களுக்குத் தேவைப்படுகின்ற அனைத்துவிதமான அடிப்படை வசதிகளையும், சேவைகளையும், பல்வேறு வழிகளில் பேரூராட்சிகள் நிருவாகம் திறம்பட செயல்படுத்துகிறது.

நகர்ப்புறங்களில் வசிக்கும் மக்களுக்கு அடிப்படை கட்டமைப்பு வசதிகளாக இருக்கக்கூடிய,

- ✶ பாதாளச் சாக்கடை,
- ✶ மழைநீர் வடிகால் அமைப்புகள்,
- ✶ மேம்படுத்தப்பட்ட சாலைகள்,
- ✶ பேருந்து நிறுத்தங்கள்,
- ✶ தரமான குடிநீர்,
- ✶ திடக்கழிவு மேலாண்மை,
- ✶ குடிசைப் பகுதிகளை மேம்படுத்துதல்,
- ✶ நகர்ப்புற ஏழைகள் வாழ்வதற்கு வீடுகளைக் கட்டிக் கொடுப்பது,
- ✶ சாலையோர வியாபாரிகளின் நலன் காப்பது,
- ✶ வீடு இல்லாதவர்களுக்கு புகலிடம் அமைத்து பராமரித்தல்
- ✶ தனிநபர் மற்றும் சமுதாயக் கழிப்பிடம் அமைத்தல் போன்றவையுடன் இன்னும் பலவிதமான சேவைகளை நகராட்சி நிருவாகத்துறை மேற்கொண்டு வருகிறது.

இவற்றை பொதுமக்களுக்கு சரியாக நாம் செய்து கொடுத்தாலே மக்கள் உங்களைக் கொண்டாடுவார்கள். இத்தகைய அடிப்படைத் தேவைகளை செய்துகொடுப்பதில் உங்களது கவனத்தைச் செலுத்த வேண்டும். அதற்காக ஒவ்வொரு பேரூராட்சித் தலைவரும், எங்கள்

பேரூராட்சிக்கு இத்தனை கோடி தேவை என்று கோரிக்கை வைத்துள்ளார்கள். இது பயிற்சி முகாம்தான். ஆனால், இங்கு கோரிக்கை வைக்கக்கூடிய நிலையில் ஒரு அடையாளத்திற்காக பேச அழைத்தவுடன், இங்கே ஒரு சகோதரி வந்து பேசினார்கள். இங்கு பயிற்சி முகாம் கூட்டம் என்பதையே மாற்றி, அந்தப் பயிற்சி பற்றி பேச வந்தவர்கள் ஒவ்வொருவரும் கோரிக்கை வைத்துத்தான் அதிகம் பேசியிருக்கிறார்கள். இருப்பினும், மக்கள் நலன் சார்ந்த கோரிக்கையை கேட்கும்போது எனக்கு உள்ளபடியே மகிழ்ச்சியாக இருக்கிறது.

ஆகவே, பொறுப்பிற்கு வந்தவுடனேயே இதையெல்லாம் செய்ய வேண்டும், இதற்கு இந்த அரசு உதவி செய்ய வேண்டும், நிதி அளிக்க வேண்டும் என்ற கோரிக்கையை வைக்கும்போது உள்ளபடியே உங்களுடைய உரிமையை, நியாயமாகக் கேட்பதை நினைத்து நான் பெருமைப்படுகிறேன், மகிழ்ச்சியடைகிறேன். குறிப்பாக, இங்கு பேசிய இளையாங்குடி பேரூராட்சித் தலைவர் சகோதரி பல கோரிக்கைகளை வைத்தார்கள். அதில் முக்கியமான ஒன்றை இந்தக் கூட்டத்தில் நான் இப்போது அறிவிக்கப் போகிறேன்.

பேரூராட்சியினுடைய பொது நிதியிலிருந்து நிருவாக அனுமதி வழங்குவதற்கான உச்சவரம்பை உயர்த்த வேண்டும் என்று ஒரு கோரிக்கை வைத்தார்கள். பணிகளை விரைவாக செயல்படுத்திடும் வகையில், உச்சவரம்பு இரண்டாம் நிலை மற்றும் முதல் நிலை பேரூராட்சிகளுக்கு 4 இலட்சம் ரூபாயிலிருந்து 10 இலட்சம் ரூபாயாகவும், தேர்வு நிலை மற்றும் சிறப்பு நிலை பேரூராட்சிகளுக்கு 8 இலட்சம் ரூபாயிலிருந்து 15 இலட்சம் ரூபாயாகவும், உதவி இயக்குநர் அளவிலே 20 இலட்சம் ரூபாயிலிருந்து 30 இலட்சம் ரூபாயாகவும், மாவட்ட ஆட்சியருக்கு 30 இலட்சம் ரூபாயிலிருந்து 50 இலட்சம் ரூபாயாகவும், உயர்த்தப்படும் என்பதை மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோன்று, நீங்கள் வைக்காத கோரிக்கை மக்கள் பணியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டிருக்கக்கூடிய நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் உறுப்பினர்கள், துணைத் தலைவர்கள் மற்றும் தலைவர்கள் உரிய மதிப்பூதியம் வழங்குவது குறித்தும் இந்த அமைப்புகளின் நிதி நிலையை ஆராய்ந்து உரிய ஆணைகளை இந்த அரசு விரைவில் வெளியிட இருக்கிறது என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதே நேரத்தில் நான் கேட்டுக்கொள்ள விரும்புவது திட்டங்களை முறையாக செயல்படுத்துவது உங்களுடைய கடமை. நிதிகள் முறையாக செலவு செய்யப்படுகிறதா என்பதைக் கண்காணிக்க வேண்டியது மிகமிக முக்கியமானக் கடமையாக நீங்கள் கருத வேண்டும்.

2011ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி தமிழ்நாடு இந்தியாவிலேயே பெரிய மாநிலங்களில் அதிக நகர்ப்புற மக்கள் தொகை (48 விழுக்காடு) கொண்ட மாநிலமாகும். நகர்ப்புறங்களில் மக்கள்தொகை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இந்த மக்கள் தொகைக்கேற்ப நகர்ப்புற ஏழைகளின் வாழ்வாதாரத்தை பல்வேறு திட்டங்களின் மூலமாக மேம்படுத்தி அனைத்து மக்களுக்கும் சீரான, நீடித்த, நிலையான வளர்ச்சியை ஏற்படுத்திக் கொடுப்பதுதான் இத்துறையின் முக்கிய குறிக்கோள் ஆகும்.

ஒருபுறம் நிதிப்பற்றாக்குறை, இன்னொரு புறம் மக்கள்தொகை அதிகரிப்பு, இதற்கிடையில்தான் நாம் நம்முடைய மக்களுக்கு நன்மைகள் செய்தாக வேண்டும். இத்தகைய காரணங்களை மட்டுமே நாம் பேசிக்கொண்டு இருந்துவிட முடியாது. செயல்களைச் செய்தாக வேண்டும்.

பேரூராட்சிகளின் வளர்ச்சியில் பேரூராட்சி மன்றங்களின் பங்கு மகத்தானது, மிகவும் முக்கியமானது. மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் செய்திடவும், சுற்றுப்புறச் சூழலை தூய்மையாகப்

பேணவும், நகர்ப்புறக் கட்டமைப்பை மேம்படுத்திடவும், நேர்மையான, திறமையான நிருவாகம் அமைந்திடவும், சட்ட விதிகளுக்குட்பட்டு தீர்மானங்களை நிறைவேற்றி நல்ல முறையில் செயல்படுத்தி தமிழக அரசிற்கு நீங்கள் நல்ல பெயரைப் பெற்றுத்தர வேண்டும் என்று உங்களை எல்லாம் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அதேபோல்,

✶ தரமான குடிநீர் வசதி,

✶ தெருவிளக்குகள் அமைத்தல்,

✶ சாலைகள் மேம்படுத்துதல்,

✶ பாதாளச் சாக்கடை திட்டப்பணிகள்,

✶ மழைநீர் சேகரிப்பு அமைப்பு அமைத்தல் ஆகிய பணிகளை பேரூராட்சிகள் மேற்கொள்ள வேண்டும்.

✶ பொதுச் சுகாதாரம் சார்ந்த திடக்கழிவு மேலாண்மை பணிகள் சிறப்புற நடைபெறுதலை கண்காணித்திட வேண்டும்.

✶ திடக்கழிவு மேலாண்மைப் பணிகளை மக்கள் இயக்கமாக நீங்கள் மாற்ற வேண்டும்.

✶ நெகிழி கழிவு மேலாண்மையை நீங்கள் முறையாக செயல்படுத்த வேண்டும்.

✶ நமது அரசால் துவங்கிவைக்கப்பட்டுள்ள 'மஞ்சப்பை திட்டம்' தங்களது எல்லைக்குட்பட்ட ஒவ்வொரு பேரூராட்சிப் பகுதியிலும் தீவிரமாக செயல்படுத்துவதை நீங்கள் உறுதிப்படுத்திட வேண்டும்.

✶ மக்களோடு மக்களாக இணைந்து பணியாற்றிட வேண்டும். அண்ணா அடிக்கடி சொல்வார், "மக்களிடம் செல், மக்களோடு சேர்ந்து வாழ், மக்களுக்காக பணியாற்று,

மக்களுக்காக திட்டங்களைத் தீட்டு'' அதை மனதிலே வைத்துக்கொண்டு செயல்பட வேண்டும்.

- ✶ பேரூராட்சியின் சேவைகள் மக்களை எளிதில் சென்றடையக்கூடிய வகையில் தேவையான தொழில்நுட்ப வசதிகளை மேம்படுத்தி வழங்கிட வழிவகை செய்ய வேண்டும்.
- ✶ மக்களுக்கு முறையான விழிப்புணர்வை ஏற்படுத்திட வேண்டும்.

தமிழகம் தொடர்ந்து உள்ளாட்சி நிருவாகத்தில் நல்லாட்சி செய்திட முழுமையான ஈடுபாட்டோடு செம்மையான நிருவாகம் மக்களுக்குக் கிடைப்பதை உறுதிசெய்து மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாக விளங்கி வருகிறது.

இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் 74ஆவது திருத்தச் சட்டம் 1992இல் அமலுக்கு வந்தபிறகு, உள்ளாட்சி அமைப்புகளுக்கு கூடுதல் அதிகாரங்கள் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. அவற்றை உரிய முறையில் பயன்படுத்தி வெளிப்படையான, திறமையான நிருவாகம் அமைந்திட உறுதி செய்ய வேண்டும். நீங்கள் சார்ந்த உள்ளாட்சி அமைப்புகளுக்கும் பெருமை சேர்த்து தமிழ்நாட்டிற்கு பெருமை சேர்க்கும் வகையில் செயலாற்றிட உங்களை அன்புடன் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

நேற்றைய தினம், சேலம் பகுதியைச் சார்ந்த நரசிங்கபுரம் நகராட்சி தி.மு.க. கவுன்சிலர் புஷ்பாவதி அவர்களுக்கு ஒரு பாராட்டை நான் சொல்லி இருந்தேன். நீங்கள் படித்திருப்பீர்கள், பார்த்திருப்பீர்கள், தொலைக்காட்சியில் வந்தது, பத்திரிகையில் வந்தது. அந்த அம்மையார் கவுன்சிலர் புஷ்பாவதி அவர்கள் ஒரு தள்ளுவண்டிக் கடையில் இட்லி வியாபாரம் செய்துகொண்டிருக்கிறார். அந்த புஷ்பாவதி என்ற சகோதரி இப்போது மாநகராட்சித் தேர்தலில் கவுன்சிலராக நின்று, சேலத்தில் கவுன்சிலராக வெற்றிபெற்றுள்ளார்.

கவுன்சிலர் ஆனபிறகும் அதே வியாபாரத்தை எளிமையான வகையில் நடத்தி வருகிறார். இன்றைக்கும் தொடர்ந்து நடத்திக் கொண்டு இருக்கிறார். அதனால்தான் அவரை நான் பாராட்டி இந்த செய்தியை வெளியிட்டிருந்தேன்.

கவுன்சிலர் ஆகிவிட்டோம் என்று நினைத்து பழசை மறந்து விட்டு அவர் இருந்துவிடவில்லை. மக்களோடு மக்களாக இருந்து அவர் தொடர்ந்து இருந்துகொண்டிருக்கிறார், வாழ்ந்து வருகிறார். இதுதான் முக்கியமானது. மக்களுக்குத் தொண்டாற்ற நமக்குக் கிடைத்த வாய்ப்பாக இதனை நீங்கள் கருத வேண்டும். ஏதோ பெரிய பதவி கிடைத்துவிட்டது என்று சொல்லி, மக்களிடம் இருந்து நீங்கள் அந்நியப்பட்டு விடக்கூடாது.

என்ன செய்கிறோம் என்பதைவிட எப்படிச் செய்கிறோம் என்பதே முக்கியம். எவ்வளவு நாட்கள் பதவியில் இருந்தோம் என்பதை விட அந்தப் பதவியில் என்னென்ன காரியங்களை செய்திருக்கிறோம் என்பதை நீங்கள் மனதில் பதியவைத்துக்கொள்ள வேண்டும். அதைத்தான் மகாத்மா காந்தி அவர்கள் குறிப்பிட்டுக் காட்டி இருக்கிறார். இந்தியாவே கிராம ராஜ்யமாக இருக்க வேண்டும் என்று கனவு கண்டவர் காந்தி அவர்கள்.

தந்தை பெரியார் அவர்கள் கிராமம், நகரம் என்ற வேறுபாடுகள் இல்லாமல், கிராமங்கள் அனைத்தும் சிறுசிறு நகரங்களாக மாற வேண்டும் என்று சொன்னார்கள்.

அதனைத்தான் அனைவருக்குமான வளர்ச்சி, அந்த வளர்ச்சி என்பது திராவிட மாடல் வளர்ச்சியாக தமிழக அரசு இன்றைக்கு முன்மொழிந்து செயல்பட்டு வருகிறது. இத்தகைய 'திராவிட மாடல்' வளர்ச்சியை உங்களது ஒவ்வொரு பேரூராட்சியும் அடைய வேண்டும்.

ஒவ்வொரு பேரூராட்சியும், மாதிரி பேரூராட்சி என்று சொல்லத்தக்க வகையில் அமைய வேண்டும். நீங்கள்தான் அதனை

நடத்திக் காட்ட வேண்டும். நீங்கள் ஒவ்வொருவரும் உங்களுக்கான வீடுகளைக் கட்டி இருப்பீர்கள். அதனை உங்கள் கனவுகளுக்கு ஏற்ப கட்டி இருப்பீர்கள். இப்படியெல்லாம் திட்டமிட்டு, நீங்கள் முடிவு செய்து என்னென்ன வசதிகள் வேண்டும் என்ற எண்ணத்தோடு கட்டி இருப்பீர்கள். இப்போது உங்கள் கையில் ஒரு பேரூராட்சி, உங்களை சார்ந்திருக்கக்கூடிய பேரூராட்சி ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதனை உங்களது கனவுகளைச் செயல்படுத்தும் பேரூராட்சியாக நீங்கள் மாற்றிக் காட்டுங்கள்.

இதுதான் ஒற்றை வரியில் நான் வைக்கக்கூடிய வேண்டுகோள். அத்தகைய பெருமைமிகு பேரூராட்சிகளை நீங்கள் நிச்சயம் அமைப்பீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு மிகுதியாக இருக்கிறது.

அந்த நம்பிக்கையைக் காப்பாற்றுங்கள், காப்பாற்றுவோம், காப்பாற்றுவதற்கு நாங்கள் என்றைக்கும் உங்களுக்கு துணை நிற்போம் என்ற உறுதியை எடுத்துச்சொல்லி என் உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி, வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள்,*
பேரூராட்சித் தலைவர்கள் மற்றும் துணைத் தலைவர்களுக்கான
நிருவாகப் பயிற்சி நிறைவு விழாவில்
ஆற்றிய உரை – ***18.04.2022***

“நம் பள்ளி நம் பெருமை”

“நம் பள்ளி நம் பெருமை” பள்ளி மேலாண்மைக்குழு மறுகட்டமைப்பு தொடக்க விழாவிற்கு வருகை தந்திருக்கக்கூடிய அனைவரையும் வரவேற்று மகிழ்ந்திருக்கக்கூடிய மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு.அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்களே!

மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்களே!

நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்களே!

சென்னை மாநகரத்தினுடைய வணக்கத்திற்குரிய மேயர் அவர்களே!

துணை மேயர் அவர்களே!

நாடாளுமன்ற உறுப்பினர் திரு.தயாநிதி மாறன் அவர்களே!

சட்டப் பேரவை உறுப்பினர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்களே!

பள்ளிக் கல்வித் துறையினுடைய முதன்மைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, இ.ஆ.ப., அவர்களே!

நன்றியுரை ஆற்ற இருக்கக்கூடிய திரு.நந்தகுமார், இ.ஆ.ப., அவர்களே!

பள்ளி மேலாண்மைக் குழுவின் தலைவர் லதா அவர்களே!

மேலாண்மைக் குழுவினுடைய உறுப்பினர் ஆசிரியர் பெருமக்களே!

அன்பிற்கினிய பெற்றோர் பெருமக்களே!

மாணவச் செல்வங்களே!

அரசு அலுவலர்களே!

உள்ளாட்சி அமைப்புகளைச் சார்ந்திருக்கக்கூடிய பிரதிநிதிகளே!

பத்திரிகை மற்றும் ஊடகத் துறையைச் சார்ந்திருக்கக்கூடிய நண்பர்களே!

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

பள்ளிப் பருவம் என்பது திரும்பக் கிடைக்காத ஒரு மகிழ்ச்சியானக் காலம். அத்தகைய பள்ளிப் பருவத்தில் இருக்கக்கூடிய உங்கள் அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துக்களை, என்னுடைய பாராட்டுக்களை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இன்னும் சொல்லவேண்டுமென்றால், உங்களுக்கு மகிழ்ச்சியைச் சொல்கிறபோது, வாழ்த்துக்களைச் சொல்கிறபோது ஒரு

ஏக்கத்தோடு அந்த வாழ்த்தை நான் சொல்கிறேன். ஏக்கத்தோடு அந்த வாழ்த்தைச் சொல்வதற்கு என்ன காரணம் என்று கேட்டீர்களானால், இத்தகைய மகிழ்ச்சியும், மன நிறைவும், கொண்டாட்டமும் வேறு எந்தப் பருவத்திலும் யாருக்கும் கிடைக்காத பருவம் இந்தப் பருவம். இத்தகைய பள்ளிப் பருவ காலத்தை நீங்கள் முறையாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

இந்த நிகழ்ச்சி மிகவும் புகழ்பெற்று விளங்கிக் கொண்டிருக்கக்கூடிய லேடி வில்லிங்டன் மேல்நிலைப் பள்ளியில் நடந்துகொண்டிருக்கிறது. அது உள்ளபடியே மகிழ்ச்சிக்குரிய, பாராட்டுக்குரிய ஒன்றாக அமைந்திருக்கிறது. காரணம் என்னவென்று கேட்டீர்களானால், மிகப்பெரிய சீர்திருத்த எண்ணத்தோடு சகோதரி ஆர்.எஸ்.சுப்புலட்சுமி அம்மையார் அவர்களால் இந்தப் பள்ளியும், பயிற்சிப் பள்ளியும் தொடங்கப்பட்டது. விஜயரங்கம் அறக்கட்டளையால் மீனவப் பெண் குழந்தைகளுக்கான பள்ளியாக இது செயல்பட்டு வந்திருக்கிறது. 1914ஆம் ஆண்டு ஆசிரியர்களுக்கான பயிற்சிப் பள்ளியாக இதனுடைய தரம் உயர்த்தப்பட்டு, 1922ஆம் ஆண்டு பள்ளிக்கான கட்டடம் கட்டப்பட்டு ‘லேடி விலிங்டன் உயர்நிலைப் பள்ளி’ எனப் பெயர் மாற்றம் பெற்றது.

சென்னை மாகாணத்தின் ஆளுநராக இருந்த வில்லிங்டன் அவர்களுடைய துணைவியார் லேடி வில்லிங்டன் பெயரில் 1922ஆம் ஆண்டு டிசம்பர் 19ஆம் நாளன்று இந்தப் பள்ளி துவங்கப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட வரலாற்றுக்குரிய இந்தப் புகழ்பெற்ற இந்தப் பள்ளியில் இந்த நிகழ்ச்சி நடைபெறுவது என்பது உள்ளபடியே மிகப் பொருத்தமான ஒன்றாக அமைந்திருக்கிறது.

ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப்பு உடைத்து

– என்கிறார் அய்யன் திருவள்ளுவர் அவர்கள்.

ஒரு தலைமுறையில் பெறக்கூடிய கல்வி அறிவானது, ஏழேழு தலைமுறைக்கும் பாதுகாப்பாக அமையும். உங்களிடம் இருந்து யாராலும் அதைப் பறிக்க முடியாது, திருட முடியாத ஒரு சொத்து இருக்கு என்றால், அது உங்களது கல்வி மட்டும்தான் என்பதை நீங்கள் மறந்துவிடக் கூடாது. அதனால்தான், பள்ளிக் கல்விக்கு இந்த அரசு மிகமிக முக்கியத்துவத்தை வழங்கிக்கொண்டிருக்கிறது, எத்தனை மிகமிக வேண்டுமானாலும் போட்டுக்கொள்ளுங்கள். அந்த அளவிற்கு, கல்விக்காக இந்த அரசு மிக மிக மிக முக்கியத்துவத்தை தொடர்ந்து கொடுத்து வருகிறது.

மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர் ஆகிய மூவரது சிந்தனையும் ஒரே நேர்கோட்டில் இருந்தால்தான், கல்வி நீரோடை மிக சீராகச் செல்லும். அதில் எவர் ஒருவர் தடங்கல் போட்டாலும் கல்வியானது தடம் புரண்டுவிடும்.

உலகப் புகழ்பெற்ற கவிஞர் கலீல் ஜிப்ரான் அவர்கள் எழுதியிருக்கக்கூடிய வரிகளைத்தான் இங்கு இருக்கக்கூடிய பெற்றோர்களுக்கு நான் சொல்ல விரும்புகிறேன்.

‘‘உங்கள் குழந்தைகள் உங்கள் குழந்தைகள் அல்ல,

அவர்கள் உங்கள் வழியாக வருகிறார்கள்.

ஆனால் அவர்கள் உங்களில் இருந்து வரவில்லை.

அவர்களுக்கு நீங்கள் உங்கள் அன்பைத் தரலாம், சிந்தனையை அல்ல.

அவர்களுக்கு என அழகான சிந்தனைகள் உண்டு.

நீங்கள் அவர்களைப் போல ஆவதற்கு உழையுங்கள்,

ஆனால் அவர்களை உங்களைப்போல ஆக்கிவிடாதீர்கள்’’

– என்பதுதான் கலீல் ஜிப்ரான் எழுதிய கவிதை வரிகள். மிகப் பெரிய நீண்ட கவிதை அது. அதிலிருந்து சில வரிகளைத்தான் இப்போது உங்களிடத்தில் நான் சுட்டிக்காட்டியிருக்கிறேன்.

உங்கள் குழந்தைகள் என்னவாக ஆக வேண்டும் என்று விரும்புகிறார்களோ, அவர்களுக்கு நீங்கள் தடைபோடாமல், அவர்களுக்கு உதவி செய்யுங்கள், வழிகாட்டுங்கள். உங்கள் கனவுகளை தயவு செய்து அவர்கள் மீது திணிக்காதீர்கள் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

பெற்றோராக இருந்தாலும் ஆசிரியர்களாக இருந்தாலும், பள்ளிகளாக இருந்தாலும் மாணவச் செல்வங்களை வளர்த்தெடுப்பதை மட்டுமே குறிக்கோளாகக்கொண்டு செயல்பட வேண்டும்.

"புத்தகங்களே!

குழந்தைகளைக் கிழித்துவிடாதீர்கள்" என்று நமது கவிக்கோ அப்துல்ரகுமான் அவர்கள் எழுதியிருக்கிறார். இதை மனதில் வைத்துக்கொண்டு அனைவரும் செயல்பட வேண்டும்.

குழந்தைகளின் கல்வி என்பது ஒரு சமூகத்தின் எதிர்காலத்திற்கான அடித்தளம். அவர்களுக்கு அளிக்கப்படும் தரமானக் கல்விதான் சமுதாய முன்னேற்றத்தின் திறவுகோல். அரசுப் பள்ளிகளில் மாணவர்கள் மகிழ்ச்சியோடும் பாதுகாப்போடும் கல்வி கற்பதற்கு உகந்த சூழ்நிலையை ஏற்படுத்துவதுதான் நமது அரசினுடைய நோக்கம், குறிக்கோள், இலட்சியம்.

பள்ளிகளில் தரமான கல்வியை வழங்குவதிலும் உள் கட்டமைப்பை மேம்படுத்துவதிலும் இந்திய துணைக்கண்டத்திற்கே தமிழகம் ஒரு முன்னோடி மாநிலமாக விளங்கிக்கொண்டிருக்கிறது.

கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்து தமிழக அரசு பள்ளிக்கல்வித் துறைக்கு இந்த நிதியாண்டில் ரூ.36 ஆயிரத்து 895 கோடி ஒதுக்கீடு செய்திருக்கிறது.

அரசுப் பள்ளிகளை முழுமையாக மேம்படுத்துவதற்காக பள்ளி மேலாண்மைக் குழுக்களை சீரமைப்பதற்கான நடவடிக்கைகளைப் பள்ளிக் கல்வித்துறை மேற்கொண்டு வருகிறது.

பள்ளியில் படிக்கும் குழந்தைகளின் பெற்றோர்கள், தலைமையாசிரியர், ஆசிரியர், உள்ளாட்சி அமைப்புப் பிரதிநிதிகள் மற்றும் கல்வியாளர்கள் போன்றோர் இந்தப் பள்ளி மேலாண்மைக் குழுவில் இடம்பெறுவார்கள்.

ஒவ்வொரு அரசுப் பள்ளியும் தன்னிறைவு பெற்ற பள்ளியாக மாற வேண்டும். அந்தப் பள்ளியின் தேவைகள் என்ன என்று அறிந்து அதை வழங்க வேண்டும்.

குழந்தைகளுக்குத் தரமான, சமமான கல்வி கிடைக்கச் செய்ய வேண்டும், அதற்குரிய நடவடிக்கைகளை நீங்கள் எடுக்க வேண்டும்.

இதனைச் செயல்படுத்துவதற்காகத்தான் பள்ளி மேலாண்மைக் குழுவை நாம் இப்போது அமைத்திருக்கிறோம்.

- ✶ குழந்தைகளின் கற்றல் அறிவை மேம்பாடு அடையச் செய்தல்,
- ✶ பள்ளி வளங்களைப் பராமரித்தல்,
- ✶ பள்ளியின் சுற்றுப்புற சூழலைத் தூய்மையாக்குதல்,
- ✶ இடைநிற்றலை தவிர்த்தல் மற்றும் இடைநின்ற குழந்தைகளை வயதுக்கேற்ற வகுப்பில் மீண்டும் பள்ளியில் சேர்த்தல்

* பள்ளியின் அடிப்படைக் கட்டமைப்பை உருவாக்குதல்

போன்ற செயல்பாடுகளில் புதிய மேலாண்மைக் குழுக்கள் ஆக்கப்பூர்வமாக செயலாற்ற வேண்டும்.

* அனைத்து வகை வன்முறைகளில் இருந்தும் குழந்தைகளை நாம் பாதுகாக்க வேண்டும்.

* குழந்தைகள் ஒருவருடன் ஒருவர் அன்புடன் பழகும் சூழலை உருவாக்க வேண்டும்.

இதனைச் செயல்படுத்துவதற்காகத்தான் இந்தக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது.

20.03.2022 அன்று **37,558** அரசுப் பள்ளிகளில் நடைபெற்ற பெற்றோர்களுக்கான விழிப்புணர்வுக் கூட்டங்களில், மொத்தம் **23** இலட்சத்திற்கும் அதிகமானப் பெற்றோர்கள் கலந்து கொண்டிருக்கிறார்கள் என்ற செய்தியைப் பார்க்கும்போது மகிழ்ச்சியாக இருக்கிறது. தமிழ்நாட்டின் பள்ளிக் கல்வியினுடைய வரலாற்றில் இது முக்கியமான மைல்கல் ஆக அமைந்திருக்கிறது. அரசுப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களின் பெற்றோர்கள் அனைவரும் ஒருசேர இதுபோல் பங்கேற்றது இதுதான் முதல்முறை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தச் சாதனை என்பது ஒரு நிகழ்ச்சியின் சாதனையாக மட்டும் அல்ல, வரலாற்றுச் சாதனையாக, கல்விச் சாதனையாக இது மாற வேண்டும்.

37,558 அரசு தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பள்ளி மேலாண்மைக் குழுவுக்கு புதிய உறுப்பினர்கள் முறைப்படி தேர்வு செய்யப்படுவார்கள்.

பள்ளிகளின் பெருமையை மீட்டெடுத்து, நமது குழந்தைகளுக்குத் தரமான கல்வி கிடைக்க தமிழ்நாடு அரசு முன்னெடுக்கக்கூடிய இந்த முயற்சிக்குக் கைகொடுக்க வாருங்கள்! என்று உங்களை எல்லாம் மிகுந்த பணிவோடு, உரிமையோடு விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். பள்ளி மேலாண்மைக் குழுக்களை வலுப்படுத்தி பள்ளிகளை வளப்படுத்துவோம் !

நம் பள்ளி! நம் பெருமை என ஆனால்தான் நம் நாடு, நம் பெருமை என ஆகும் என்பதை மனதில் வைத்து அனைவரும் செயல்பட வேண்டும் என்று உங்களை அன்போடு கேட்டு, உங்கள் அனைவருக்கும் என்னுடைய இதயப்பூர்வமான வாழ்த்துக்களை, நன்றியைத் தெரிவித்து என் உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி, வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள்,*
சென்னை, லேடி வில்லிங்டன் மேல்நிலைப் பள்ளியில்
பள்ளிக் கல்வித்துறை சார்பில் நடைபெற்ற
“நம் பள்ளி நம் பெருமை” பள்ளி மேலாண்மைக் குழு
மறுகட்டமைப்பு நிகழ்வினைத் தொடங்கிவைத்து,
ஆற்றிய உரை – ***19.04.2022***

பள்ளிப் பருவம்தான்
உங்கள் வளர்ச்சிக்கும், எதிர்காலத்திற்கும்
அடித்தளம்

எவர்வின் பள்ளிக் குழுமத்தினுடைய 30ஆம் ஆண்டு விழாவிலே பங்கேற்கக்கூடிய இந்தச் சிறப்பான நிகழ்ச்சிக்கு வருகை தந்து சிறப்பித்துக் கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அருமை சகோதரர் சேகர்பாபு அவர்களே!

மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் தம்பி அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்களே!

பெருநகர சென்னை மாநகராட்சியினுடைய வணக்கத்திற்குரிய மேயர் திருமதி பிரியா அவர்களே!

வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி அவர்களே!

திரு.வி.க. நகர் சட்டமன்ற உறுப்பினர் அருமை சகோதரர் தாயகம் கவி அவர்களே!

மாமன்ற உறுப்பினர்களே!

எவர்வின் பள்ளியினுடைய முதன்மை நிருவாக அலுவலர் திருமதி மகேஸ்வரி அவர்களே!

இந்தப் பள்ளியின் நிறுவனர் மற்றும் முதல்வர் மதிப்பிற்குரிய திரு.புருஷோத்தமன் அவர்களே!

என்னுடைய பேரன்பிற்குரிய ஆசிரியர் பெருமக்களே!

என்னுடைய அன்பிற்கினிய மாணவச் செல்வங்களே!

அவர்களை ஈன்றெடுத்திருக்கக்கூடிய பெற்றோர்களே!

பத்திரிகை மற்றும் ஊடகத்துறையைச் சார்ந்திருக்கக்கூடிய நண்பர்களே!

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு.ரங்கநாதன் அவர்களே!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் சட்டத்துறையினுடைய செயலாளர் வழக்கறிஞர் கிரிராஜன் அவர்களே!

இந்தக் கொளத்தூர் தொகுதியின் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பகுதிச் செயலாளர் நாகராஜன் அவர்களே!

மற்றும் வருகை தந்திருக்கக்கூடிய நண்பர்களே!

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்!

எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. என்ன ஆச்சரியம் என்றால், இங்கே குழுமியிருக்கக்கூடிய மாணவச் செல்வங்கள் இவ்வளவு அமைதியாக, இவ்வளவு கட்டுப்பாடாக இருக்கக்கூடிய காட்சியைப் பார்க்கும்போது இந்தப் பள்ளியினுடைய நிருவாகம் எந்த அளவிற்கு

கட்டுப்பாட்டோடு இருக்கிறது, கண்ணியத்தை கடைப்பிடிக்கிறது என்பதை எண்ணி நான் வியந்து நிற்கிறேன்.

நானும் பள்ளிக்கூடத்தில் படித்தவன் தான். உங்களைப்போல நானும் மாணவனாக இருந்தவன் தான். இப்போது பார்த்தால் கூட வயது தான் அதிகமாக இருக்குமே தவிர உருவத்தைப் பார்த்தால் நானும் ஒரு மாணவனாகத்தான் காட்சி அளித்துக் கொண்டிருக்கிறேன். உங்களையெல்லாம் பார்க்கிறபோது, இன்னும் ஒரு 10 வயது எனக்கு குறைந்த மாதிரி நான் உங்கள் முன்னால் நின்று கொண்டிருக்கிறேன்.

நான் பள்ளிக்கூடத்தில் படித்துக் கொண்டிருந்தபோது, கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தபோது, இது போன்ற நிகழ்ச்சிகளெல்லாம் நான் படித்த பள்ளிக் கூடத்தில், கல்லூரியில் நடைபெற்றதுண்டு. அப்படி நடைபெறும்போது இவ்வளவு கூட்டம் எல்லாம் இருக்காது. ஒரு 200 பேர், 300 பேர், 500 பேர் அதற்குள் தான் இருக்கும். சிறப்பு விருந்தினர்களை அழைத்து வந்து உட்கார வைத்து அவர்களை பேசவிடாமல் பாதியிலே நாங்கள் திருப்பி அனுப்பிவைத்த அந்த நிகழ்ச்சிகளெல்லாம் எனக்கு இப்போது ஞாபகம் வருகிறது. அதுமாதிரி இப்போது எனக்கு நிச்சயமாக நடக்காது. அது நன்றாக எனக்குத் தெரியும். எதற்கு சொல்கிறேன் என்றால், அது அந்தக் காலம். இப்பொழுது நிலைமை மாறி மாணவ, மாணவிகளிடத்திலே எந்த அளவுக்கு கட்டுப்பாடு வந்திருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கிறபோது இது தான் எனக்கு பெருமை தரக்கூடிய நிகழ்ச்சியாக அமைந்திருக்கிறது என்பதை நான் பெருமையோடு தெரிவிக்க விரும்புகிறேன்.

புருஷோத்தமன் அவர்கள் என்னை மேடைக்கு அழைத்து வரும்போது சொன்னார், உங்களை நிறைய நேரம் காக்க வைக்க மாட்டோம், உடனே அனுப்பி வைத்துவிடுவோம் என்று சொன்னார்.

இல்லை, இல்லை ரொம்ப நேரம் நான் இருக்க வேண்டும் என்ற ஆசையோடு தான் வந்திருக்கிறேன். ஏனென்றால், இப்போது தான் எனக்கு Relax ஆக இருக்கிறது. முதலமைச்சராக பதவி ஏற்று ஒரு வருஷம் ஆகப்போகிறது. அடுத்த மாதம் 7ஆம் தேதி வந்தால் ஒரு வருடம். இந்த ஒரு வருடம் எப்படி போனது என்றே தெரியவில்லை. ஏனென்றால் நேரம், காலம் பார்க்காமல், தூக்கத்தை, உணவை, ஓய்வை அத்தனையும் மறந்து நான் மட்டும் அல்ல, என்னைச் சார்ந்திருக்கக்கூடிய அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசு அதிகாரிகள் எல்லோருமே இப்படி பணியாற்றிக் கொண்டிருக்கின்ற காரணத்தால் தான், இன்றைக்கு தமிழ்நாடு எல்லா மாநிலத்திலும் பேசக்கூடிய அளவுக்கு வளர்ந்து வந்து கொண்டிருக்கிறது. முதல்வருக்கெல்லாம் முதல்வர் என்று சொன்னீர்கள். இதை எல்லோரும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். பல பத்திரிகைகள் கருத்துக் கணிப்புகளை எடுத்து, அந்தக் கருத்துக் கணிப்புகள் மூலமாக வெளிப்படுத்தக்கூடிய செய்திகள் என்னவென்றால், இன்றைக்கு முதலமைச்சரில், முதல் முதலமைச்சராக, முதலிடத்தைப் பெறக்கூடிய முதலமைச்சராக இன்றைக்கு தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் விளங்கிக் கொண்டிருக்கிறார் என்று எல்லோரும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அது எனக்கு பெருமைதான், மகிழ்ச்சிதான். எனக்கு மட்டுமல்ல, என்னைத் தேர்ந்தெடுத்திருக்கக்கூடிய இந்தப் பொறுப்பை என்னை நம்பி ஒப்படைத்திருக்கக் கூடிய உங்களுக்கெல்லாம் பெருமைதான்.

நான் அந்த பொறுப்பை ஏற்றுக் கொண்ட நேரத்தில், இந்தக் கொளத்தூர் தொகுதியில் மூன்றாவது முறையாக நான் வெற்றி பெற்று அதற்குரிய சான்றிதழைப் பெற்று அந்தச் சான்றிதழை நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் ஓய்வு எடுத்துக்

கொண்டிருக்கக்கூடிய அந்த நினைவிடத்திற்குச் சென்று அங்கே வைத்து நான் வாழ்த்துக்களைப் பெற்று அதற்குப் பிறகு பத்திரிகையாளர்களிடத்தில் பேசுகிறபோது சொன்னேன், என்ன உங்கள் திட்டம் என்று கேட்டார்கள். நான் எதையும் பெரியதாக சொல்ல விரும்பவில்லை, ஒரே வரியில் சொல்கிறேன். என்னை தேர்ந்தெடுத்திருக்கக்கூடிய மக்களுக்கு மட்டுமல்ல, எனக்கு வாக்களித்த ஓட்டுப் போட்டிருக்கக்கூடிய மக்களுக்கு மட்டுமல்ல, ஓட்டுப்போடாத மக்களுக்கும் சேர்த்து நான் பணியாற்றப் போகிறேன். ஓட்டுப் போட்டவர்கள் மகிழ்ச்சி அடைய வேண்டும். ஓட்டுப் போடாதாவர்கள் இப்படிப்பட்டவருக்கு நாம் ஓட்டுப் போடாமல் விட்டு விட்டோமே என்று வருத்தப்பட வேண்டும். அந்த நிலையை நான் நிச்சயமாக நிறைவேற்றிக் காட்டுவேன் என்று, அன்றைக்கே நான் உறுதி எடுத்துக் கொண்டேன். அதைத் தான் இப்போது நான் தொடர்ந்து நிறைவேற்றுகின்ற முயற்சியில் ஈடுபட்டிருக்கிறேன். ஆகவே, முதல் இடம் என்று எனக்கு தனிப்பட்ட முறையில் கிடைத்த பெருமையாக நான் கருதவில்லை என்றாலும், இந்தியாவிலேயே நம்முடைய மாநிலம் தமிழ்நாடு தான் முதலிடம் என்று சொல்லக்கூடிய நிலை வரவேண்டும். அதற்காகத் தான் நம்முடைய கடமையை நாம் ஆற்றிக் கொண்டிருக்கிறோம்.

எவர்வின் என்றால் அது எப்போதும் வெற்றி என்று பொருள். நான் வந்தவுடன் மேடையில் ஒரு கலை நிகழ்ச்சி, அதைத் தொடர்ந்து ஒரு காணொலியும் பார்த்தேன். அந்த காணொலியைப் பார்த்த நேரத்தில் இந்த எவர்வின் பள்ளிக்கு 50 முறைக்கு மேல் வந்திருப்பேன் என்று சொன்னார்கள். என்னைப் பொறுத்தவரை அது குறைவு தான். இன்னும் அதிகமாக வருவேன், வர வேண்டும் என்று விரும்பிக் கொண்டிருக்கிறேன்.

கொளத்தூரின் மண்ணின் மைந்தன் என உங்கள் முதல்வர் சொன்னார், உங்கள் முதல்வர் இந்த முதல்வரைப் பார்த்துச் சொன்னார். நான் முதல்வராக இருந்தாலும், சட்டமன்ற உறுப்பினராக இருந்தாலும், எந்தப் பொறுப்பில் இருந்தாலும் என்றைக்கும் உங்களுடைய அன்பை பெற்ற உங்களில் ஒருவனாக நான் இருக்க வேண்டும். இன்னும் சொல்லப் போனால், நான் எப்போதுமே தமிழகம் முழுவதும் அடிக்கடி கட்சிப் பொறுப்பில் இருந்தபோது, முதலமைச்சராக பொறுப்பேற்றிருக்கிறபோது, பல நிகழ்ச்சிகளுக்காக பல மாவட்டங்களுக்கு, பல மாநிலங்களுக்கு, ஏன், பல நாடுகளுக்கு செல்லக்கூடிய வாய்ப்பைப் பெறுகிற அந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு அதிலே எந்த அளவுக்கு சிறப்பு பெறுகிறேனோ, அப்போதெல்லாம் பெறக்கூடிய அந்த மகிழ்ச்சியை விட, அதில் இருக்கக்கூடிய சந்தோஷத்தை விட இந்த கொளத்தூர் தொகுதி என்று நினைத்து அந்த நிகழ்ச்சிக்கு வந்துவிட்டால் அதில் அதிகமான அளவுக்கு நான் பெருமைப்படுவேன் என்பது உங்களுக்கெல்லாம் நன்றாகத் தெரியும். அதுவும், மாணவச் செல்வங்களாக இருக்கக்கூடிய உங்களையெல்லாம் இப்படி ஒரு நிகழ்ச்சியின் மூலமாக சந்திப்பதில் நான் அளவுகடந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

எவர்வின் பள்ளியின் முப்பதாவது ஆண்டு விழா நிகழ்ச்சியில் பங்கெடுப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். அதுவும் என்னுடைய என்று சொல்லக்கூடாது, நம்முடைய கொளத்தூர் தொகுதியில் இப்படி ஒரு பள்ளி 30 வருடங்களாகச் சிறப்பு பெற்றிருக்கிறது. அந்தப் பெருமையை பெற்றிருப்பது என்பது உள்ளபடியே பாராட்டுக்குரிய ஒன்று.

30 ஆண்டுகள் ஒரு பள்ளி கடந்திருக்கிறது என்று சொன்னால், இதில் படித்த மாணவ, மாணவியருடைய அந்தப் பிள்ளைகள், அந்த

மாணவச் செல்வங்கள் இன்றைக்கு உலகின் பல்வேறு இடங்களில் எத்தகைய, எந்தவிதமான பொறுப்புகளில் இருப்பார்கள் என்பதை நினைத்துப் பார்த்தால் பூரிப்பாக இருக்கிறது. பல்லாயிரக்கணக்கான மாணவ, மாணவியரின் உயர்வுக்கு வழிகாட்டிய ஒரு கலங்கரை விளக்கமாக விளங்கிக் கொண்டிருக்கின்ற இந்தப் பள்ளி விழாவில் கலந்து கொள்வதில் நான் பெருமைப்படுகிறேன்.

எனது தொகுதியில் நடக்கும் விழா என்பதால் மட்டுமல்ல,

பொதுவாகவே, மாணவச் செல்வங்களைச் சந்திப்பது என்பது எனக்கு மிகப்பெரிய உற்சாகத்தை தரக்கூடிய ஒன்றாக அமைந்திருக்கிறது. நானே மாணவச் செல்வங்களை அடிக்கடி தேடிச் சென்று சந்திக்கக்கூடிய வழக்கத்தை, பழக்கத்தை பெற்றிருக்கக்கூடியவன். எங்கேயாவது நிகழ்ச்சிக்கு போய்க் கொண்டிருக்கும்போது, சாலை வழியாக காரில் சென்று கொண்டிருக்கும்போது, அந்த வழியில் அமைந்திருக்கக்கூடிய பள்ளிக் கூடங்களின் நிருவாகிகள், பள்ளிக்கூடத்தில் படிக்கக்கூடிய மாணவச் செல்வங்கள் எல்லாம் அங்கே வாசலில் வந்து நின்று என்னை வரவேற்க, என்னைப் பார்க்க காத்திருப்பார்கள். நான் உடனே என்னுடைய காரை நிறுத்தச் சொல்லி இறங்கி அங்கு நின்று கொண்டிருக்கும் மாணவச் செல்வங்களிடத்தில் சென்று பேசிவிட்டு, உங்களுக்கு என்ன பிரச்சினை, தேவை ஏதாவது உண்டா என்று கேட்டுவிட்டுத் தான் நான் செல்லக்கூடிய வழக்கத்தை, பழக்கத்தை தொடர்ந்து கடைபிடித்துக் கொண்டிருக்கிறேன்.

‘வாழ்க்கை ஒரு பள்ளிக்கூடம், அதில் அனைவரும் மாணவர்கள் தான், அனைவருமே கற்றுக் கொண்டு தான் இருக்கிறோம்’ என்று ஒரு அறிஞர் சொன்னார்.

அந்த வகையில், நானும் ஒரு மாணவன் தான் உங்களைப் போல. தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர்

கலைஞர் ஆகியோரது திராவிடப் பாசறையில் பயின்றிருக்கக்கூடிய மாணவன் நான்! பயிலக்கூடிய மாணவன் நான்.

பள்ளி, கல்லூரிப் படிப்புகளை முடித்துவிட்டாலும், நாள்தோறும் புதிய அனுபவங்களைக் கற்றுக்கொள்ளக்கூடிய முறையில் நான் மாணவனாக இருக்கிறேன். இந்த உணர்வுடன் இன்று உங்களிடையே இந்த நிகழ்ச்சியில் பங்கேற்று உரையாற்றுவதில் உள்ளபடியே நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

1992ஆம் ஆண்டு 78 மாணவர்களுடன், நம்முடைய அன்பிற்கினிய திரு.புருஷோத்தமன் அவர்கள் இந்தப் பள்ளியைத் தொடங்கினார். இது இன்று ஒரு ஆலமரமாக பரந்து விரிந்துள்ளது. 5 பள்ளிகள், 20 ஆயிரம் மாணவர்கள்,

1,000 ஆசிரியர்கள் என ஒரு மிகப்பெரும் கல்வி நிறுவனமாக விரிவடைந்திருக்கிறது. இது திரு.புருஷோத்தமன் அவருடைய உழைப்பால் மட்டுமே நிகழவில்லை. அவருடைய உழைப்பையும் தாண்டி, கல்வியை வெறும் வியாபாரமாகப் பார்க்காமல், ஏழை, எளிய பெற்றோர்கள் மீதான அக்கறையோடு அவர் செயல்பட்ட காரணத்தால் தான் இந்த வளர்ச்சியை எவர்வின் பள்ளிக் குழுமம் பெற்றிருக்கிறது.

இதில் ஒரு முக்கியம் என்னவென்று பார்த்தீர்கள் என்றால், 30 ஆண்டுகளாக பெண் ஆசிரியர்களைக் கொண்டு மட்டுமே இந்த எவர்வின் பள்ளி இயங்கி வருகிறது. ஆரம்பப் பள்ளியில், பெண் ஆசிரியைகளை மட்டும் நியமிக்க வேண்டும் என்று குரல் கொடுத்த இயக்கம் தான் திராவிட முன்னேற்றக் கழகம். அதை நிறைவேற்றி கொண்டிருப்பது தான் நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகம். ஆட்சிப் பொறுப்பேற்ற நேரத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அதை செயல்படுத்திக் காட்டினார். இப்போது ஒரு தனியார்

பள்ளியில் முழுக்க முழுக்க பெண் ஆசிரியைகள் மட்டுமே கல்வியை கற்றுத் தருகிறார்கள் என்பதைப் பார்க்கிறபோது உள்ளபடியே பாராட்டுக்குரியது.

பெண் ஆசிரியர்களை மட்டும் வைத்துப் பள்ளி நடத்துவது என்பது மட்டுமல்ல, எவர்வின் குழுமப்பள்ளிகள் அனைத்துமே ஏழை, எளிய, நடுத்தர மக்கள் வாழும் பகுதியில் அமைந்துள்ளது என்பதும் பாராட்டுக்குரிய ஒன்று.

கழக ஆட்சியும் அதுபோலத்தான், தமிழ்நாட்டின் எல்லா மாவட்டங்களும் கல்வியில் முன்னேற வேண்டும். கல்வி கற்கும் வசதிகள் பரவலாக, சமமாக இருக்க வேண்டும் என்று கருதி, தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது சமச்சீர் கல்வி, ஏழை, பணக்காரன் என்று பார்க்காமல், அனைவருக்கும் ஒரே கல்வி, சமமான கல்வியை வழங்கிட வேண்டும் என்பதற்காகத்தான் சமச்சீர் கல்வித் திட்டத்தைக் கொண்டு வந்து அன்றைக்கு நிறைவேற்றினார். அத்தகைய சீரான வளர்ச்சியை அனைத்துத் துறைகளிலும் கொடுப்பதுதான் நான் இப்போது தொடர்ந்து சொல்லிக் கொண்டிருக்கக்கூடிய திராவிட மாடல். அத்தகைய மாடலைத் தான் நம்முடைய புருஷோத்தமன் அவர்களுடைய தலைமையில் எவர்வின் பள்ளியும் பின்பற்றி வருகிறது என்பதை எண்ணிப் பார்க்கிறபோது நான் மகிழ்ச்சி அடைகிறேன். கல்வியிலே பின்தங்கிய மாணவர்களுக்கும் சிறப்பு பயிற்சிகளைக் கொடுத்து நூறு விழுக்காடு தேர்ச்சியை பெற்று வருகிறது.

மாணவர்களாகிய நீங்கள் சமூகத்தில் உள்ள பல நிலைகளில் பல பொறுப்புகளை எதிர்காலத்தில் ஏற்க இருக்கிறீர்கள். சமூகத்தின் அனைத்துப் பின்னணியில் இருந்தும் வருபவர்களையும் ஒரேபோல, சமமாக, உங்களில் ஒருவராக பார்க்கும் பழக்கத்தை, உயர்ந்த பண்பை நீங்கள் வளர்த்துக் கொள்ளவேண்டும். ஏற்றத்

தாழ்வுகள், வேற்றுமைகளைக் கடந்து இங்கே நீங்கள் நண்பர்களாக இருக்கிறீர்கள். இந்த நட்புணர்வு பள்ளிக் காலத்தோடு நின்று விடக்கூடாது, என்றென்றும் இந்த நட்புணர்வு தொடர வேண்டும். இந்த ஒற்றுமை உணர்வு இருந்தால் தான் நம் மாநிலம் ஆனாலும், நாடானாலும் வளர்ச்சியை பெற முடியும். வெறுப்புணர்வால், பகைமையுணர்வால் சாதிக்கப் போவது எதுவுமே கிடையாது. அத்தகைய உணர்வுகளுக்கு நீங்கள் என்றுமே இடம் தந்து விடக்கூடாது. இந்த நிகழ்ச்சியின் மூலமாக அதைத்தான் நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

தமிழர், இந்தியர் என்று நாம் சொல்கின்ற அடையாளங்கள் கூட நம் அனைவரையும் இணைக்கின்ற அடையாளங்களாகத் தான் இருக்க வேண்டுமே தவிர, யாரையும் வெறுப்பதற்கான கருவிகளாக அவை அமைந்துவிடக் கூடாது.

இந்தப் பண்பை, பள்ளி பருவத்திலேயே நீங்கள் பெற்றிருக்க வேண்டும். தந்தை பெரியார் பிறந்தநாளை சமூக நீதி நாள் என்றும், சட்ட மேதை அண்ணல் அம்பேத்கர் பிறந்தநாளைச் சமத்துவ நாள் என்றும், கொண்டாடி, அந்த நாளில் உறுதிமொழிகள் எடுக்கவேண்டும் என்று அரசாணைகளை நாம் வெளியிட்டிருக்கிறோம்.

ஏழை, எளிய பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களால் அந்த மக்களுக்கு திறக்கப்படாமல் பூட்டப்பட்டிருந்த கல்விக் கதவுகளை பல நூறு ஆண்டு கால போராட்டத்திற்குப் பிறகுதான் நாம் திறந்திருக்கிறோம். நம்மை பள்ளிகளை நோக்கி அழைத்து வருவதற்கான திட்டங்களை நீதிக்கட்சி செயல்படுத்தியது. அதனை மேலும் செம்மைப்படுத்தியவர் பெருந்தலைவர் காமராஜர் அவர்கள். அதனை மாணவர்களாகிய நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான், அந்தப் பெருந்தலைவரின் பிறந்தநாளை ‘கல்வி

வளர்ச்சி நாளாக' கொண்டாட வேண்டும் என்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அறிவித்தார்கள்.

இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, மீண்டும் பள்ளிக்கல்வித் துறைக்கு அதிக முக்கியத்துவம் அளித்து பல்வேறு திட்டங்களை இன்றைக்கு நாம் செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

இன்னொன்றையும் நான் சொல்ல வேண்டும். அண்மையில் நிதிநிலை அறிக்கையில் தாக்கல் செய்தோம். எல்லா துறைகளுக்கும் நிதிகளை ஒதுக்கியிருக்கிறோம். இந்த நிதி ஆண்டில் பள்ளிக் கல்வித் துறைக்கு மட்டும் **36** ஆயிரத்து **895** கோடி ரூபாய் நிதி ஒதுக்கியிருக்கிறோம். கொரோனா கால பொது முடக்கம், கட்டுப்பாடு இவையெல்லாம் ஏற்பட்டது. அதனால், கற்றல், இழப்பு ஏற்பட்டது. அதை சரிசெய்ய, 'இல்லம் தேடிக் கல்வி' என்ற திட்டத்தை அறிவித்து, அதை வெற்றிகரமாக செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம். அதை செயல்படுத்துவதற்கான அனைத்து முயற்சிகளையும் ஈடுபட்டு அதில் வெற்றி கண்டிருக்கக்கூடிய இந்தத் துறையினுடைய அமைச்சராக பொறுப்பேற்றிருக்கக்கூடிய திரு.அன்பில் மகேஷ் பொய்யா மொழி அவர்களை நான் உங்கள் அனைவரின் சார்பில் வாழ்த்த, பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல், அரசுப் பள்ளிகளில் ஸ்மார்ட் வகுப்பறைகளை அமைக்கிறோம். இப்படி தொடர்ந்து புதிய திட்டங்களை செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம். உங்கள் வளர்ச்சிக்கும், எதிர்காலத்திற்கும் அடித்தளம் அமைக்கப்போவது இந்தப் பள்ளிப் பருவம் தான். நீங்கள் என்னவாக ஆகப் போகிறீர்கள் என்பதைத் தீர்மானிப்பதில் முக்கியப் பங்கு வகிப்பதும் இந்தப் பள்ளிப் பருவம் தான். அதனால் தான், இதில் நான் மிக மிக அதிக முக்கியத்துவம் கொடுத்து செயல்படுகிறேன். போட்டி மிகுந்த இந்த உலகத்தில்

நீங்கள் அதற்கேற்ப உங்களைத் தகுதிக்குரியவர்களாக உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

‘நான் முதல்வன்’ என்ற புதுமையான வழிகாட்டித் திட்டத்தையும் நான் தொடங்கி வைத்திருக்கிறேன். பள்ளிப் பருவம் என்பது புத்தகங்களோடு அடங்கிவிடாமல் எல்லா திசைகளிலும் இருக்கக்கூடிய கற்கக்கூடிய பருவமாக அமைய வேண்டும். எந்த வித அழுத்தங்களும் இல்லாமல் மகிழ்ச்சிக்குரிய காலகட்டமாக அமையட்டும். கற்றல் என்பதே மகிழ்ச்சியோடு ஈடுபடக்கூடிய ஒரு செயல்பாடாக மாறட்டும். அதற்கு நம்முடைய ஆசிரியப் பெருமக்கள் உதவி செய்யவேண்டும். பள்ளிகள் என்பது, திறந்த மனதுடன் வரும் குழந்தைகளுக்கு, அறிவை ஊட்டி, அறிவியல் பூர்வமான சிந்தனைத் திறனை வளர்த்து, இந்தச் சமூகத்தின் பொறுப்புமிக்க மனிதர்களாக உருவாக்கக்கூடிய இல்லங்கள் தான் இந்தப் பள்ளிகள். இந்த இல்லங்களில் இருக்கக்கூடிய ஆசிரியர்கள், இன்னொரு பெற்றோராக மாணவர்களை அரவணைத்து வழிநடத்த வேண்டும்!

நல்லிணக்கமிக்க பூந்தோட்டமாக உங்கள் ஊரும், இந்த மாநிலமும், நமது நாடும் திகழ, பெற்றோர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் இணைந்து சமத்துவ சிந்தனையை வளர்க்கும் தூதுவர்களாக மாறிட வேண்டும். உங்கள் ஒவ்வொருவரையும் கேட்டுக் கொள்ள விரும்புவது இதைத்தான் என்பதை அழுத்தத்திருத்தமாக எடுத்துச் சொல்லி, இத்தகைய, நிறைவான, மகிழ்வான நிகழ்ச்சிக்கு என்னை அழைத்ததற்காக மீண்டும் உங்கள் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய கொளத்தூர் தொகுதிக்கு நான் வருகிறபோதெல்லாம் இந்தப் பள்ளியினுடைய பொறுப்பாளராக இருக்கக்கூடிய

ஏறக்குறைய 30 ஆண்டுகாலம் இதைக் கட்டிக்காத்து தொடர்ந்து வெற்றி நடை போட்டிருக்கக்கூடிய திரு.புருஷோத்தமன் அவர்களை அடிக்கடி சந்திக்கக்கூடிய வாய்ப்பைப் பெறக்கூடியவன். எனவே, அவருடைய பணி தொடர வேண்டும், அவருடைய குடும்பத்தைச் சார்ந்திருக்கக்கூடியவர்கள் அவருக்கு துணையாக இருந்து பணியாற்றக்கூடிய அந்தச் செய்தியை நான் அவ்வப்போது அறிந்து கொள்வது உண்டு. அமைச்சர் திரு.சேகர்பாபு அவர்கள் அடிக்கடி என்னிடத்தில் இந்தப் பள்ளியைப் பற்றி, இந்தப் பள்ளியினுடைய சிறப்பைப் பற்றி, இந்தப் பள்ளியை நடத்தக்கூடிய புருஷோத்தமன் அவர்களைப் பற்றி, அவர்கள் குடும்பத்தைப் பற்றி எடுத்துச் சொல்வது உண்டு. ஆகவே, அவரது பணி தொடர வேண்டும். அதன் மூலமாக நீங்கள் வெற்றி பெற வேண்டும், நீங்கள் நினைத்த காரியம் வெற்றி பெற வேண்டும், வெற்றி பெற வேண்டும் என்று அன்போடு என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்து, 30ஆம் ஆண்டு விழாவை காணக்கூடிய இந்தப் பள்ளி இன்னும் பல ஆண்டுகாலம், நூறாண்டு காலம், அதையும் தாண்டி சிறப்பு பெற வேண்டும் என்று கூறி, இந்த நல்ல வாய்ப்பிற்கு மீண்டும் ஒரு முறை என்னுடைய நன்றியைத் தெரிவித்து விடை பெறுகிறேன்.

நன்றி, வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்,*
சென்னை, கொளத்தூர், எவர்வின் பள்ளியில் நடைபெற்ற
30ஆம் ஆண்டு விழாவில் கலந்து கொண்டு
ஆற்றிய உரை – 22.04.2022

மக்களுக்கான நீதியே மகத்தானது...

அனைவருக்கும் அன்பான வணக்கம்.

மாண்பமை உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதியரசர் அவர்களே!

உச்சநீதிமன்ற நீதியரசர் மாண்பமை திரு.வி.இராமசுப்பிரமணியன் அவர்களே!

உச்சநீதிமன்ற நீதியரசர் மாண்பமை திரு.எம்.எம்.சுந்தரேஷ் அவர்களே!

மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதியரசர் அவர்களே!

சென்னை உயர்நீதிமன்றத்தினுடைய நீதியரசர்களே!

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் திரு.எஸ்.இரகுபதி அவர்களே!

ஓய்வுபெற்ற தலைமை நீதியரசர் திரு.சதாசிவம் அவர்களே!

மற்றும் ஓய்வுபெற்ற நீதியரசர்களே!

தலைமைச் செயலாளர் உள்ளிட்ட அரசு அதிகாரிகளே!

சென்னை உயர்நீதிமன்ற அரசு அட்வகேட் ஜெனரல் திரு.ஆர்.சண்முகசுந்தரம் உள்ளிட்ட அரசு வழக்கறிஞர்களே!

நீதித் துறையினுடைய முக்கியத் தூணாகவும், கடைக்கோடி மனிதனுக்கும் நீதிக் கிடைக்க பாடுபடக்கூடிய வழக்கறிஞர் பெருமக்களே!

பார் கவுன்சில் சேர்மேன் திரு.பி.எஸ்.அமல்ராஜ் அவர்களே!

நிறைவாக நன்றி நல்கவிருக்கக்கூடிய துணைச் சேர்மேன் திரு.எஸ்.பிரபாகரன் அவர்களே!

மற்றும் வருகை தந்திருக்கக்கூடிய சகோதர, சகோதரிகளே!

பத்திரிகை மற்றும் ஊடகத் துறை நண்பர்களே!

உங்கள் அனைவருக்கும் எனது அன்பான வணக்கம்.

நம்முடைய உச்ச நீதிமன்றத்தினுடைய தலைமை நீதியரசர் அவர்கள் பொறுப்பேற்று ஓர் ஆண்டு இன்றோடு நிறைவு பெறக்கூடிய வகையில், உங்களோடு சேர்ந்து நானும் அவருக்கு என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அவருக்கு இன்று ஓர் ஆண்டு முடிவடைகிறது. எனக்கு அடுத்த மாதம் 7ஆம் தேதி ஓர் ஆண்டு முடிவடையவிருக்கிறது.

தமிழ்நாட்டில் எனது தலைமையில் அரசு பொறுப்பேற்ற பிறகு, உயர் நீதிமன்றத்தில் நான் பங்கு பெறக்கூடிய முதல் விழா இந்த விழா. அப்படிப்பட்ட இந்த சிறப்பான நிகழ்ச்சியில் கலந்துகொள்வதில் நான் மிகுந்த பெருமைப்படுகிறேன்.

சட்டத்தின் ஆட்சியை, சமூகநீதியின் ஆட்சியை, நீதிநெறிமுறைகளையும், விதிமுறைகளையும் முறையாகப் பின்பற்றும் ஆட்சியை வழங்க வேண்டும் என்ற உறுதியோடு, தமிழ்நாட்டில் நல்லாட்சியை வழங்கிக் கொண்டிருக்கிறோம். அத்தகைய வழிமுறையே எந்நாளும் எங்களை வழிநடத்தும் என்பதை நான் இந்த

நேரத்தில் தெரிவித்துக் கொண்டு, மாண்பமை உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதியரசர் அவர்கள் தமிழ்நாட்டிற்கு வந்திருப்பது, உள்ளபடியே பெருமைக்குரிய வகையில் அமைந்திருக்கிறது. அதுவும் அவரோடு நானும் இந்த விழாவில் பங்கேற்பதில் நான் உள்ளபடியே பெருமையாகக் கருதுகிறேன்.

சட்டத்தின் குரலாக மட்டுமல்ல, மக்களின் குரலாகவும் பலநேரங்களில் ஒலிக்கக் கூடியவராக நம்முடைய உச்சநீதிமன்றத் தலைமை நீதியரசர் அவர்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆந்திர மாநிலத்தில் பொன்னாவரம் என்ற கிராமத்தில் ஒரு எளிய விவசாயக் குடும்பத்தில் பிறந்து இன்றைய நாள் இந்தியாவின் உச்சநீதிமன்றத் தலைமை நீதியரசராக அவர் உயர்ந்து நிற்கக் காரணம், இந்திய மக்களின் மனசாட்சியின் குரலாக அவர் இருக்கின்ற காரணம் தான். அதுதான் அவரது தீர்ப்புகளிலும், தலைமை நீதியரசர் என்ற முறையில் பங்கேற்கும் நிகழ்ச்சிகளில் அவர் ஆற்றக்கூடிய உரைகளிலும் எதிரொலித்துக் கொண்டிருக்கிறது. ஜனநாயகத்தின் அசைக்க முடியாத நம்பிக்கைக் கொண்ட நீதியரசரான இவர், தற்போது நாட்டு மக்கள் அனைவரின் நம்பிக்கையைப் பெற்றவராக அவர் திகழ்ந்து கொண்டிருக்கிறார்.

நாடாளுமன்றம், சட்டமன்றம், நீதிமன்றம் ஆகிய மூன்றும் மக்கள் மன்றத்தின் விருப்பங்களை, உணர்வுகளைப் பிரதிபலிக்கக்கூடிய மன்றங்களாக செயல்பட வேண்டும். நமது மாண்பமை தலைமை நீதியரசர் அவர்கள் அப்படித்தான் செயல்பட்டு வருகிறார் என்பதற்கு ஏராளமான எடுத்துக்காட்டுகளை என்னால் எடுத்துக் கூற முடியும்.

'அனைத்து சட்டங்களும் நீதிமுறை சார்ந்த இலட்சியங்களால் உறுதிசெய்யப்பட வேண்டும்' என்பதில் உறுதியாக இருக்கும் மாண்பமை உச்சநீதிமன்றத் தலைமை நீதியரசர் அவர்கள் இந்த விழாவுக்கு வந்திருப்பது நமக்கெல்லாம் மிகுந்த மகிழ்ச்சியை அளித்துக் கொண்டிருக்கிறது.

Today, we have an excellent judicial system headed by our Hon'ble Chief Justice of India. As the guardian of the Constitution, the Indian judicial system has performed very well and is held in high esteem by the people of this country.

அதேபோல், இங்கே நம்முடைய சென்னை உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதியரசர் அவர்களும் நீதித்துறைக்குச் சிறப்பான பங்களிப்பை அளித்து வருகிறார். தமிழ்நாட்டில் இருந்து உச்சநீதிமன்றத்துக்குச் சென்று, அங்கு வரலாற்றுச் சிறப்பு மிக்க தீர்ப்புகளை வழங்கக்கூடியவர்களாக நீதியரசர் மாண்பமை ராமசுப்பிரமணியம் அவர்களும், நீதியரசர் எம்.எம்.சுந்தரேஷ் அவர்களும் செயல்பட்டு வருகிறார்கள். இத்தகைய மாண்பமை நீதிமன்றங்களின் நீதியரசர்கள் வீற்றிருக்கும் இந்த அவையிலே உரையாற்றுவதில் நான் உள்ளபடியே மகிழ்ச்சி அடைகிறேன்.

நாகரிக சமுதாயத்தின் முன்னேற்றத்திற்கும், மறுமலர்ச்சிக்கும், மக்களின் பாதுகாப்பிற்கும், அவர்களது உரிமை பாதுகாக்கப்பட்டு செழித்தோங்குவதற்கும், சுதந்திரமாக செயல்படும் நீதித்துறை தேவை என்பதை நமது அரசியலமைப்பு உறுதி செய்கிறது. அதன்படி தமிழ்நாடு அரசும் செயல்பட்டு வருகிறது.

அனைத்து மக்களுக்கும் விரைவில் நீதி கிடைப்பதற்குத் தேவையான அனைத்து வசதிகளையும் முன்னுரிமை அடிப்படையில் இந்த அரசு செய்து வருகிறது.

Hon'ble Chief Justice Sir,

Now I am listing out of the details of recruitment of Judges to the Subordinate Judiciary and constitution of new courts in the State to deal with the increasing number of litigations.

✶ கடந்த ஆண்டு மட்டும் சார்நிலை நீதிமன்றங்களுக்கு 64 நீதிபதிகள் நியமிக்கப்பட்டு அவர்களுக்குத் தேவையான பயிற்சிகளும் வழங்கப்பட்டுள்ளன.

★ கோயம்புத்தூர், சேலம், செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களில் 3 வணிகவியல் நீதிமன்றங்கள் (Commercial Courts), உரிமையியல் நீதிபதி (Civil Judge) நிலையில் அமைப்பதற்கான ஆணைகள் வெளியிடப்பட்டது.

★ அது மட்டுமல்ல, 3 வணிகவியல் நீதிமன்றங்கள் மாவட்ட நீதிபதி நிலையில் அமைப்பதற்கும் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

★ அதோடு, திருவண்ணாமலை, திருவாரூர் மாவட்டங்களில் புதியதாக சார்பு நீதிமன்றங்கள் (Sub-courts) அமைக்கவும் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

★ விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டையில் கூடுதல் மாவட்ட நீதிமன்றம் (Additional District Courts) அமைக்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

★ நீதித்துறையின் நீடித்த சிறப்பான செயலாக்கத்திற்கு இந்த அரசு பல்வேறு நடவடிக்கைகளை தொடர்ந்து எடுத்து வருகிறது.

★ வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் கீழமை நீதிமன்றங்களை படிப்படியாக சொந்தக் கட்டடங்களுக்கு மாற்றுவதற்கும் அரசு துரித நடவடிக்கை எடுத்து வருகின்றது.

★ காரைக்குடியில் ஒரு சட்டக்கல்லூரி தொடங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்படி பல்வேறு முன்னெடுப்புகளை நீதித்துறைக்கு தமிழ்நாடு அரசு செய்து வருகிறது.

★ நீதித்துறையின் உயிரோட்டமாக விளங்கும் வழக்கறிஞர்களின் நலன் காப்பதிலும் இந்த அரசு கவனம் செலுத்தி வருகிறது. இந்த நிகழ்ச்சியின் வாயிலாக,

வழக்கறிஞர்களின் கோரிக்கையான தமிழ்நாடு வழக்கறிஞர்கள் நல நிதி மூலம் வழங்கப்படும் சேம நல நிதியானது ரூபாய் 7 இலட்சத்திலிருந்து 10 இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

- ✶ கொரோனா பெருந்தொற்றால் உயிரிழந்த சுமார் 450 வழக்கறிஞர்களுக்கு அறிவிக்கப்பட்ட 20 கோடி ரூபாய் தொகையினை மாநில அரசு விரைவில் வழங்கும்.

- ✶ இந்த நேரத்தில் இன்னொரு நல்ல செய்தியினை உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகின்றேன். சட்டமேதை பாபாசாகேப் அண்ணல் அம்பேத்கர் அவர்களின் பிறந்தநாளான கடந்த 14.04.2022 அன்று சென்னை உயர்நீதிமன்ற வளாகத்திற்குள் இயங்கிவரும் பல்வேறு நீதிமன்றங்களை ஒரு புதிய 9 மாடி கட்டடத்தில் அமைக்கக்கூடிய வகையில் 20 கோடியே 24 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

- ✶ சென்னை உயர்நீதிமன்ற வரலாற்றிலேயே முதன்முறையாக சென்னையின் முக்கிய பகுதியில் நீதித்துறையின் உட்கட்டமைப்புத் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் பல்வேறு நீதிமன்றங்களை அமைக்கும் வண்ணம் கடந்த 20.04.2022 அன்று 4.24 ஏக்கர் நிலம் நீதித்துறைக்கு இந்த அரசு வழங்கி உத்திரவிட்டுள்ளது. அதையும் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். அந்தக் கட்டடம் அமைந்தால் நீதித்துறை உட்கட்டமைப்புக்கு அடுத்த 100 ஆண்டுகளுக்கான தேவை பூர்த்தி ஆகும் என்பதில் ஐயம் இல்லை.

I am happy to announce that the State Government has allocated 4.24 acres of land in addition to 3.52 acres of land

already allocated to Judiciary. This prime land- in the city to create a strong judicial infrastructure that can take care of the needs for the next 100 years. The State will take steps to create necessary infrastructure to make it as an Integrated Comprehensive Judicial Complex.

இந்தத் தருணத்தில், நீதித் துறையே முழுமையாக இங்கு வந்து வீற்றிருக்கும் இந்த மேடையில் மாநிலத்தின் சார்பாக சில கோரிக்கைகளை வைக்க நான் விரும்புகின்றேன்.

On behalf of the Government of Tamil Nadu, I would like to place a few important requests for the kind consideration of the Hon'ble Chief Justice of India and other Learned Lordships here on the dais.

- In the appointment of Judges to the High Court and Supreme Court the Hon'ble Collegium may kindly ensure that the principle of Social Justice along with other parameters for appointment is followed. In this way, I consider that the principle of inclusiveness would be ensured in higher judiciary.
- Second, as we are all aware, Tamil Nadu occupies an important place among the States of Southern Region and in order to meet the needs of the people of the Southern States have to go to New Delhi-to get justice. I would like to mention a long pending request to constitute a Bench of the Supreme Court at Chennai.
- My third request to the Lordships is for allowing the official language of the State, Tamil to be used in the High Court of Madras. Already 4 States namely-

Rajasthan, Uttar Pradesh, Bihar and Madhya Pradesh-use their official language of the State in their respective High Courts. This is a long pending and important request of the people and legal community of the State. I take this golden opportunity to place these requests on behalf of the people of the State and I am confident that your Lordships would certainly consider it all favourably.

தமிழில் சொல்ல வேண்டுமென்றால்,

- ✶ உச்சநீதிமன்ற, உயர் நீதிமன்ற நீதிபதிகள் நியமனத்தில் சமூகநீதியும் கருத்தில் கொள்ளப்படவேண்டும்.
- ✶ தமிழ் மொழி உயர்நீதிமன்றத்தில் வழக்காடு மொழியாக ஆக்கப்பட வேண்டும்.

பொதுமக்கள் மற்றும் வழக்கறிஞர்களின் நலனைக் கருத்தில் கொண்டு உச்சநீதிமன்றத்தின் ஒரு கிளையினை சென்னையில் அமைக்க வேண்டும், ஆகிய மூன்று கோரிக்கைகளை இங்கு வருகை புரிந்துள்ள மாண்பமை உச்சநீதிமன்றத் தலைமை நீதியரசர் அவர்களுக்கு முன்பாக நம் அனைவரின் சார்பாக நான் வைத்திருக்கின்றேன். நம் மாநில உயர்நீதிமன்ற தலைமை நீதியரசர் அவர்களும், தமிழ்நாட்டிலிருந்து டெல்லி சென்று உச்சநீதிமன்றத்தில் நீதியரசர்களாக செயலாற்றும் மாண்பமை நீதியரசர்களும் அதற்குத் துணை நிற்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

நீதியரசர்கள் அதனை நிச்சயம் நிறைவேற்றித் தருவார்கள் என்று நான் நம்புகின்றேன். சட்டத்தின் ஆட்சியாக, சமூகநீதி ஆட்சியாக, நீதிநெறிமுறை கொண்ட ஆட்சியாக தமிழ்நாட்டு ஆட்சி செயல்பட்டு வருகிறது. இத்தகைய ஆட்சியில், நீதித்துறையினரின் கோரிக்கைகள் உடனுக்குடன் எந்தவிதத் தாமதமும் இல்லாமல் நிறைவேற்றப்பட்டு

வருகிறது. அதற்கு ஒரே காரணம், மக்களுக்கான நீதியே மகத்தானது என்பதோடு, கடைக்கோடி குடிமகனுக்கும் நீதி தாமதமின்றி கிடைக்க வேண்டும் என்ற அடித்தளத்தில் செயல்பட்டு வருபவர்கள் நாங்கள். இத்தகைய நெறிமுறைகளே எங்களை வழிநடத்துகிறது.

இறுதியாக,

- I would like to thank Hon'ble Chief Justice of India for having kindly consented to visit the State and grace this occasion and all the eminent legal luminaries present here today.

நன்றி, வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள்,*
சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் நடைபெற்ற
நீதிமன்றக் கட்டட திறப்பு விழா மற்றும் அடிக்கல் நாட்டு விழாவில்
ஆற்றிய உரை ***– 23.04.2022***

நிபுணத்துவம் பெறும் இளைஞர்களை உருவாக்கும் TechKnow-2022 கருத்தரங்கு

"TechKnow-2022" கண்காட்சி மற்றும் கருத்தரங்கு நிறைவு விழா நிகழ்ச்சிக்கு வருகை தந்து உரையாற்றிக் கொண்டு இருக்கக்கூடிய மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி அவர்களே,

அண்ணா பல்கலைக்கழகத்தின் சிண்டிகேட் உறுப்பினரும், சட்டமன்ற உறுப்பினருமான திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்களே,

உயர்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.காத்திகேயன், இ.ஆ.ப., அவர்களே,

அண்ணா பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் பேராசிரியர் வேல்ராஜ் அவர்களே,

அனைத்திந்திய உற்பத்தியாளர்கள் நிறுவனத்தின் தலைவர் திரு.ரமேஷ் துகார் அவர்களே,

முதுநிலை துணைத் தலைவர் டாக்டர் ஹரிஷ் மேத்தா அவர்களே,

ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் திரு.ரகுநாதன் அவர்களே,

வருகை தந்திருக்கக்கூடிய பேராசிரியர் பெருமக்களே, என் அன்பிற்கினிய மாணவச் செல்வங்களே,

பல்வேறு தொழில் நிறுவனங்களைச் சார்ந்திருக்கக்கூடிய நிருவாகிகளே,

அரசு உயர் அலுவலர்களே,

பத்திரிகை மற்றும் ஊடகத் துறை நண்பர்களே,

உங்கள் அனைவருக்கும் என்னுடைய மாலை வணக்கத்தை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

நான் முதல்வராக பொறுப்பேற்றப் பிறகு அண்ணா பல்கலைக்கழகத்தில் நடக்கக்கூடிய மூன்றாவது நிகழ்ச்சி இந்த நிகழ்ச்சி. தொழில் துறையின் சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்று இருக்கிறேன். அதைத்தொடர்ந்து உயர்கல்வித் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்று இருக்கிறேன்.

இப்போது “நான் முதல்வன்” நிகழ்ச்சி என்ற அடிப்படையிலே இந்த கருத்தரங்கு நிகழ்ச்சியிலே நான் பங்கு பெறக்கூடிய வாய்ப்பை பெற்றிருக்கிறேன். இந்த வாய்ப்பை பெற்றமைக்கு நான் மகிழ்ச்சியடைகிறேன். இந்த வாய்ப்பினை உருவாக்கி தந்திருக்கக்கூடிய அனைவருக்கும் இந்த நேரத்திலே நான் நன்றி சொல்ல விரும்புகிறேன்.

அருமை யுடைத்தென்று அசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்.

அனைவருக்கும் முதலில் என்னுடைய வணக்கத்தை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அனைத்திந்திய உற்பத்தியாளர் சங்கம், அண்ணா பல்கலைக் கழகம், இந்திய வர்த்தக சங்கங்களின் கூட்டமைப்பு இந்த மூன்றும் ஒருங்கிணைத்து பொறியாளர்களின் மேம்பாடு தொடர்பான கருத்தரங்கத்தையும் கண்காட்சியையும் நீங்கள் சிறப்பான வகையில் ஏற்பாடு செய்துள்ளீர்கள்.

உங்களின் ஒருங்கிணைந்த செயல்பாட்டை, இந்த செயலில் ஈடுபட்டு இருக்கக்கூடிய அனைவருக்கும் முதலில் நான் என்னுடைய நன்றியை, வாழ்த்துக்களை, பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இத்தகைய ஒருங்கிணைப்பு மிகமிக தேவை, மிகமிக அவசியம். எந்தத் துறையாக இருந்தாலும் அந்த துறை தனித்துச் செயல்பட முடியாது. ஒன்றோடு ஒன்று ஒற்றுமை கலந்திருக்கக்கூடிய உணர்வோடு அதிலே நாம் ஈடுபட்டால் தான் அதில் வெற்றி காண முடியும், அதனை நிறைவேற்ற முடியும். தனித்தனியாக தங்களது சக்தியைச் செலவிடுவதைவிட தேவையான நேரத்தில் ஒருங்கிணைந்து செயல்பட்டால் அந்த செயல் விரைவாகவும் முடியும், சிறப்பாகவும் முடிய வாய்ப்பு ஏற்படும்.

பலநேரங்களின் துறைகளுக்குள் அத்தகைய ஒருங்கிணைப்பு இருப்பது இல்லை என்பது உண்மைதான். அதை நாம் ஏற்றுக் கொண்டாகத்தான் வேண்டும். அதனை அதிகாரிகளும் ஏற்றுக் கொள்வார்கள் என்று நான் நம்புகிறேன்.

இத்தகைய நிலைமை இருக்கும் காலத்தில் கல்வியும், தொழிலும், உற்பத்தியும் இணைந்து செயல்படுவது என்பது மகிழ்ச்சி அளிப்பதாக அமைந்திருக்கிறது.

* வேலை இல்லை என்று ஒரு பக்கம் இளைஞர்கள் சொல்கிறார்கள்.
* வேலை இருக்கிறது, ஆனால் அதற்கு தகுதி வாய்ந்த இளைஞர்கள் கிடைக்கவில்லை என்று தொழில் நிறுவனங்கள் சொல்லிக் கொண்டு இருக்கின்றன.

இந்த இடைவெளியைக் குறைக்க வேண்டும். அதற்கு இத்தகைய கருத்தரங்குகள் நிச்சயம் பயன்படப் போகிறது.

எத்தகைய தகுதியை இளைஞர்களிடம் இருந்து எதிர்பார்க்கிறோம் என்று நிறுவனங்கள் சொல்லியாக வேண்டும்.

அத்தகைய தகுதியை இளைஞர்களுக்கு ஊட்டுவதாக பல்கலைக்கழகங்கள் மாற வேண்டும்.

இந்த பரஸ்பர நட்புறவு உங்களுக்குள் இருக்க வேண்டும். அதனை அரசு அதிகாரிகள் உணர்ந்திருப்பதன் வெளிப்பாடு தான் இது போன்ற கருத்தரங்குகள்.

தமிழ்நாட்டை அனைத்து துறைகளிலும், முதன்மை மாநிலமாக உருவாக்க சீரிய முயற்சிகளை மேற்கொண்டு, சிறப்பான திட்டங்களை தமிழக அரசு நிறைவேற்றி கொண்டு வருகின்றது என்பது உங்கள் அனைவருக்கும் நன்றாக தெரியும்.

நான் கூட பல இடங்களில், பல நிகழ்ச்சிகளில் ஒன்றை அடிக்கடி குறிப்பிட்டுக் காட்டுவதுண்டு. சமீபத்தில் ஒரு கருத்துக் கணிப்பு எடுக்கப்பட்டது. இந்தியாவில் இருக்கக்கூடிய முதலமைச்சர்களில் யார் முதலிடத்தில் இருக்கிறார்கள், இரண்டாவது இடத்தில் இருக்கிறார்கள், மூன்றாவது இடத்தில் இருக்கிறார்கள் என்று வரிசைப்படுத்தி ஒரு கருத்துக்கணிப்பு எடுத்தார்கள். அந்த கருத்துக் கணிப்பு எடுத்தபோது, 100 நாட்களிலேயே உங்களால்

முதலமைச்சராக பொறுப்பேற்றிருக்கக்கூடிய என்னுடைய பெயர் வந்தது. எல்லோரும் பாராட்டினார்கள். சட்டமன்றத்தில் எதிர்கட்சியினர் உட்பட அனைவரும் என்னை பாராட்டிப் பேசினார்கள். எனக்கு இதில் ஒருபக்கம் பெருமை தான். அதை மறுக்க முடியாது. ஆனால் அதையெல்லாம் தாண்டி நம்பர் 1 முதலமைச்சர் என்று சொல்வதைவிட, நம்பர் 1 தமிழ்நாடு என்று சொல்லக்கூடிய நிலை வரவேண்டும். அதற்காக பல்வேறு சிறப்பான திட்டங்களை எல்லாம் தொடர்ந்து நம்முடைய அரசு நிறைவேற்றி வருகிறது என்று உங்களுக்கு எல்லாம் நன்றாக தெரியும்.

உயர் கல்வியில் மாணவர் சேர்க்கை விகிதம் என்பது அகில இந்திய அளவில் 27.1 விழுக்காடாக இருக்கிறது. ஆனால் தமிழகம் 51.4 விழுக்காடு பெற்று சிறப்பான இடத்தில் உள்ளது. இந்த ஆண்டு இந்த புள்ளிவிபரத்தை எடுத்தால் 54 விழுக்காடாக கூட கூடியிருக்கலாம்.

உயர்கல்வியில் அனைத்து மாணவர்கள் சேர்க்கை விகிதங்களிலும் தமிழகம் முதலிடம் பெற்று முன்னிலையில் இருக்கிறது.

உயர்கல்வித் துறையில் செயல்படுத்தப்படும் நலத்திட்டங்கள், தமிழகத்தின் மொத்த மாணாக்கர்கள் சேர்க்கை விகிதத்தின் அதீத வளர்ச்சிக்கும், சமூகத்தில் ஒதுக்கப்பட்ட பிரிவு மாணாக்கர்களின் முழுமையான வளர்ச்சிக்கும் சான்றாக உள்ளது.

- இலவச பாடப்புத்தகங்கள்,
- பேருந்து பயண அட்டை,
- முதல் தலைமுறை பட்டதாரிகளுக்கு கல்வி உதவித்தொகை திட்டம்,

✶ ஆதிதிராவிட மாணவர்களுக்கான போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகை திட்டம்,

✶ பொருளாதாரத்தில் நலிவுற்ற மாணவர்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும் கல்வி உதவித்தொகை,

✶ முதுநிலை பட்டமேற்படிப்புகளுக்கு கல்வி உதவித்தொகை போன்றவைகள் தமிழகத்தில் வழங்கப்படுகிறது.

அரசு பள்ளி மாணவர்களுக்கு பொறியியல் கல்லூரிகளில் முன்னுரிமை அடிப்படையில் 7.5% உள் ஒதுக்கீடு வழங்கியதோடு, கல்விக் கட்டணம், விடுதிக் கட்டணம் மற்றும் போக்குவரத்துக் கட்டணங்களையும் தமிழக அரசே ஏற்றுக் கொண்டு இருக்கிறது. நம்முடைய சாதனைக்கு சமூகநீதிக் கொள்கையும் முக்கியமான காரணமாக அமைந்திருக்கிறது.

பல்வேறு பன்னாட்டு தொழில்துறை நிறுவனங்கள் தமிழகத்தில் உள்ள பல்வேறு பொறியியல் கல்லூரிகளில் பயிலும் பொறியியல் பட்டதாரி மாணவர்கள் வளாகத் தேர்வுமூலம் உயர் நிலை பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிறார்கள்.

தமிழக பொறியியல் மாணவர்களும் இயல்பிலேயே புதியதாக ஒன்றை கற்றுக்கொள்ள வேண்டும் என்ற ஆர்வமும், அதனை வெற்றிகரமாக செயல்படுத்தப்படவேண்டும் என்ற துடிப்பும், உணர்ச்சியும் உள்ளவர்கள். மேலும், தற்போதுள்ள நவீன தொழிலகங்களின் எதிர்பார்ப்புகள் மற்றும் எதிர்கொண்டு வரும் சவால்கள் ஆகியனவற்றை கண்டறியவும், தமிழகத்தில் உள்ள பல்வேறு பொறியியல் கல்லூரிகளில் பயின்று பட்டம் பெற்ற பட்டதாரி மாணவர்களிடையே, தொழில்நுட்பத் திறன் மற்றும் வேலைவாய்ப்பு

பெறுதலுக்கான திறன்களை மேம்படுத்தவும் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

இதில் முக்கியமான புதிய திட்டம்தான் "நான் முதல்வன்" என்ற திட்டம். நீங்கள் எதை தேர்ந்தெடுத்து, அதிலே வெற்றி பெற வேண்டும் என்று நினைக்கிறீர்களோ, அதிலே முதல்வனாக வரவேண்டும் என்பதற்காகத் தான் நான் முதல்வன் என்று பெயரிட்டு அந்த திட்டம் தொடங்கப்பட்டு இருக்கிறது. தமிழகத்தின் மாணவ, இளைஞர்களின் அறிவுச் சக்தியை மேம்படுத்துவதுதான் இந்த திட்டத்தின் முக்கியமான நோக்கம் ஆகும்.

அனைத்திந்திய உற்பத்தியாளர்கள் சங்கத்தின் அனைத்து உறுப்பினர்களும் இத்திட்டத்தில் முழு மனதோடு கலந்துகொண்டு, மாணவர்களின் வளர்ச்சியினை ஊக்குவிக்குமாறு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழகத்தில் உள்ள கல்வி மற்றும் தொழில்துறைகளின் வளர்ச்சி பல்வேறு மாநிலங்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்கி கொண்டு இருக்கிறது.

தமிழகம், கல்வித் துறையில் மேலும் உயரிய நிலையை அடைவதற்கு பல்வேறு முயற்சிகளை தமிழக அரசு எடுத்துக் கொண்டு வருகிறது. அதற்கு ஒரு எடுத்துக்காட்டு தான் இந்த இரண்டு நாள் கண்காட்சி மற்றும் கருத்தரங்க நிகழ்ச்சி அமைந்திருக்கிறது.

பொறியியல் பட்டதாரி மாணவர்களுக்கு திறன்மிகு பயிற்சி அளித்து ஒரு சிறந்த பொறியாளர்களை மேம்படுத்துவதே தொழில் துறையின் வெற்றி ஆகும். மேலும், தற்போதைய சூழலில் உள்ள தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப பொறியியல் பட்டதாரி மாணவர்களை உருவாக்குவது இன்றியமையாததாக அமைந்திருக்கிறது.

அதற்கேற்ப அனைத்திந்திய உற்பத்தியாளர்கள் சங்கம், அண்ணா பல்கலைக்கழகம் மற்றும் இந்திய வர்த்தக சங்கங்களின் கூட்டமைப்பு ஆகியவை ஒன்றிணைந்து பொறியாளர்களின் மேம்பாடு தொடர்பான TECHKNOW-2022 என்ற கண்காட்சி மற்றும் கருத்தரங்கை ஏற்பாடு செய்துள்ளது. இச்சிறப்புமிக்க நிகழ்ச்சியில் கலந்துகொள்வதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். TECHKNOW-2022–ன் நோக்கங்களை நான் படித்துப் பார்த்தேன். உங்களது நோக்கங்கள் சிறப்பானதாக அமைந்துள்ளன.

✶ வளர்ந்து வரும் முக்கியத் துறைகளில் நிபுணத்துவம் பெற்றவர்களாக இளைஞர்களை உருவாக்க நினைக்கிறீர்கள்.

✶ புதிய தொழில்முனைவோரை அடையாளம் காண நினைக்கிறீர்கள்.

✶ சுயவேலை வாய்ப்புக்கான சிறந்த யோசனை சொல்பவர்க்கு பரிசு வழங்குவதாக அறிவித்துள்ளீர்கள்.

✶ இதில் பங்கெடுக்கும் மாணவர்களுக்கு கல்லூரியை விட்டு வெளியேறும் போது வேலையும் செய்ய வழிவகை செய்துள்ளீர்கள்.

✶ மேலும் புதிய தொழில்நுட்பங்களும், புதிய தொழில் நிறுவனங்களும், ஆதரவு அளிக்கின்ற கல்வி மற்றும் தொழில் நிறுவனங்களும் தங்களது தயாரிப்புகள் மற்றும் சேவைகளை கண்காட்சியில் வைப்பதற்கு வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளது.

இத்தகைய கருத்தரங்குகள், போட்டிகள், திறமைவளர்க்கும் கண்காட்சிகள் மூலம் மாணவர்களை ஊக்குவிப்பதுடன், வருங்காலத்தில் தொழிற்திறன் வாய்ந்த மனிதவளம் மேன்மேலும்

அதிகரிக்கவும், பொறியியல் பட்டதாரிகளுக்கு அதிக அளவில் வேலைவாய்ப்பு கிடைக்க வழிவகை செய்யும் என நான் நம்புகிறேன்.

இந்த இனிய விழாவினை சிறப்பாக ஏற்பாடு செய்த அனைவருக்கும் என்னுடைய நன்றியை மீண்டும் ஒருமுறை தெரிவித்து, உங்களுடைய எண்ணம் ஈடேற, நிறைவேற இந்த அரசுக்கு இன்னும் பல பெருமைகள் வந்துசேர, அதனால் தமிழகத்தில் இருக்கக்கூடிய இளைஞர்கள், மாணவர்கள் பெரும் வெற்றியை பெறுவதற்கு, அவர்கள் வாழ்விலே எல்லா வசதிகளையும், வாய்ப்புகளையும் உருவாக்கித் தரக்கூடிய வகையிலே இந்த கருத்தரங்கமும், பயிற்சியரங்கமும் நடைபெற்று இருக்கிறது என்று சொல்லி, இந்த சிறப்பான நிகழ்ச்சியிலே கலந்து கொண்டுள்ள அனைவருக்கும் மீண்டும் ஒருமுறை நன்றி சொல்லி, இதை எழுச்சியோடு ஏற்பாடு செய்து தந்திருக்கக்கூடிய அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும், அரசின் சார்பில் தெரிவித்து வாய்ப்புக்கு நன்றி சொல்லி, எனது உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி, வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்,*
"TechKnow-2022" கண்காட்சி மற்றும் கருத்தரங்கு
*நிறைவு விழாவில் ஆற்றிய உரை – **23.04.2022***

அரசின் நலத்திட்டங்கள் கிராம அளவில் அனைத்துத்தரப்பு மக்களையும் அடைய வேண்டும்

தேசிய ஊராட்சிகள் தினத்தை முன்னிட்டு நடைபெற்றுக் கொண்டிருக்கக்கூடிய இந்த சிறப்பு கிராம சபைக் கூட்டத்தில் கலந்துகொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்களே!

முன்னாள் ஒன்றிய அமைச்சரும் திருப்பெரும்புதூர் நாடாளுமன்ற உறுப்பினருமான அருமை நண்பர் திரு.டி.ஆர்.பாலு அவர்களே!

திருப்பெரும்புதூர் சட்டமன்ற உறுப்பினர், சட்டமன்ற காங்கிரஸ் கட்சியின் தலைவர் திரு.கு.செல்வப்பெருந்தகை அவர்களே!

ஊரக வளர்ச்சித் துறை மற்றும் ஊராட்சித் துறை முதன்மைச் செயலாளர் திருமதி பி.அமுதா, I.A.S., அவர்களே!

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் இயக்குநர் திரு.பிரவீன் நாயர், I.A.S., அவர்களே!

காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் மா.ஆர்த்தி, I.A.S., அவர்களே!

ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி செஞ்சுராணி கவாஸ்கர் அவர்களே!

ஊராட்சி மன்றத் துணைத் தலைவர் திரு.டி.சுதாகர் அவர்களே!

உள்ளாட்சிப் பிரதிநிதிகளே!

அரசு அதிகாரிகளே! அலுவலர்களே!

பத்திரிகை மற்றும் ஊடகத்துறையைச் சார்ந்திருக்கக்கூடிய நண்பர்களே!

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கத்தை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

செங்காடு ஊர் பொதுமக்களிடத்தில் குறைகளைக் கேட்டு அதைச் சரிசெய்ய வேண்டும், நிவர்த்தி செய்திட வேண்டும் என்கிற உணர்வோடு இந்த கிராம சபைக் கூட்டத்தில் கலந்து கொண்டிருக்கக்கூடிய உங்களுக்கு என்னுடைய வாழ்த்துக்களை, பாராட்டுக்களை, நன்றியை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த கிராம சபைக் கூட்டத்தில் இன்று தேசிய ஊராட்சிகள் நாள். அப்படிப்பட்ட இந்த நாளில் இந்த செங்காடு கிராமத்தில், உங்களோடு இந்த கிராம சபைக் கூட்டத்தில் கலந்து கொள்ளக்கூடிய வாய்ப்பைப் பெற்றமைக்கு நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

எண்ணற்ற கோயில்கள், குடவரைகள், சின்னங்கள், புராதன கட்டடங்கள், கோபுரங்கள் ஆகியவற்றின் மூலமாக ஓர் உன்னத இடத்தைப் பெற்றிருக்கக்கூடிய ஊர்தான் இந்த காஞ்சி மாவட்டம் என்பதை அனைவரும் நன்றாக அறிவோம்.

நமக்கெல்லாம் ஆசானாக விளங்கிக் கொண்டிருக்கக்கூடிய நம்முடைய பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த ஊர் காஞ்சிபுரம். எனவே, அவர் வழி வந்திருக்கக்கூடிய நாம் இன்றைக்குக் காஞ்சிபுரத்தில் இருக்கக்கூடிய இந்த செங்காடு கிராம ஊராட்சியினுடைய மக்களைச் சந்திக்கக்கூடிய வாய்ப்பினைப் பெற்றிருக்கிறோம். இதை நான் பெருமையாகக் கருதுகிறேன்.

தமிழக உள்ளாட்சி அமைப்புகள், பாரம்பரியமான பழம்பெரும் வரலாறுகள் கொண்டது என்பது அனைவருக்கும் நன்றாகத் தெரியும். இந்த மாவட்டத்தில் உள்ள உத்திரமேரூர் கல்வெட்டு குறிப்புகள் இதற்குச் சான்றாக விளங்கிக் கொண்டிருக்கிறது. ஊராட்சியினுடைய அமைப்புகளை வலுப்படுத்தவும், வலிமைப்படுத்தவும், அதிகாரப் பரவலை உறுதிப்படுத்தவும், அரசியலமைப்பினுடைய சட்டத்தில் 73ஆவது திருத்தம் ஊராட்சி அமைப்புகளுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டம் முதன்முதலாக நடைமுறைக்கு வந்த நாளான ஏப்ரல் 24, தேசிய ஊராட்சிகள் தினமாக கொண்டாடப்படுகிறது.

ஒரு நாடு வளர்ச்சி அடைய வேண்டும் என்றால் அதற்குத் தேவையான எல்லா அடிப்படை வசதிகளையும் நாம் பூர்த்தி செய்தாக வேண்டும். ஐக்கிய நாடுகள் சபை, 17 வகையான நிலையான நீடித்த வளர்ச்சி இலக்குகளை (Sustainable Development Goal) அறிவித்திருக்கிறது. அதன்படி, ஊராட்சிகளில் எல்லா அடிப்படை வசதிகளையும் ஏற்படுத்தி தன்னிறைவு அடையக்கூடிய வகையில் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் பல்வேறு திட்டங்களை கொண்டு வந்தார் என்பது நாடறிந்த உண்மை. அவர் கொண்டு வந்த

திட்டம்தான் 'அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்'. அந்தத் திட்டத்தை புதுப்பொலிவோடு நாம் இப்போது நிறைவேற்றத் தொடங்கியிருக்கிறோம். அவர் கொண்டு வந்திருக்கக்கூடிய திட்டங்களில் முக்கியமானவற்றை நான் சொல்ல வேண்டும் என்று சொன்னால், சமூகநீதியோடு இன, மத ஏற்றத் தாழ்வுகள் இல்லாமல், சாதி, பேத, மதங்களெல்லாம் கடந்து அனைவரும் ஒற்றுமையோடு வாழ வேண்டும், ஒருமித்த கருத்தோடு வாழ வேண்டும் என்பதற்காக உருவாக்கப்பட்ட திட்டம்தான் தந்தை பெரியார் பெயரில் உருவாக்கிய 'பெரியார் நினைவு சமத்துவபுரத் திட்டம்' என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும்.

அதேபோல, மக்கள் பணிகளை அடையாளம் கண்டு அரசின் உதவியோடு தங்களுக்குத் தேவையான பணிகளை தாங்களே நிறைவேற்றிக்கொள்ள நிறைவேற்றப்பட்ட திட்டம்தான் 'நமக்கு நாமே திட்டம்'. ஊராட்சிகள் அனைத்திலும் முழுமையாக அறிவுச் சுடரை ஏற்ற வேண்டும் என்பதற்காக பேரறிஞர் அண்ணா பெயரில் நூலகங்கள் (Library) உருவாக்கப்பட்டது.

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் வழியில் செயல்படக்கூடிய நமது அரசு, உள்ளாட்சிகள் மீது கவனம் செலுத்தி பல்வேறு திட்டங்களை செயல்படுத்திக் கொண்டிருக்கிறது. மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் உள்ளதுபோல, ஊராட்சி அளவிலும் அனைத்து துறைகளின் செயல்பாடுகளை ஒருங்கிணைத்து, அரசின் சேவைகள் கிராம மக்களைச் சென்றடைய கிராம செயலகம் உருவாக்கப்பட இருக்கிறது. மக்களுடைய பங்கேற்பினை அதிகப்படுத்தி முழு மக்கள் அதிகாரத்தினை ஏற்படுத்திட, கிராம சபைக் கூட்டங்கள் ஆண்டுக்கு ஆறு முறை கட்டாயமாக கூட்டப்பட வேண்டும் என்ற ஒரு அறிவிப்பை 110 விதியின்கீழ் சட்டமன்றத்தில் நேற்று முன்தினம் நான் அறிவித்திருக்கிறேன். முன்பெல்லாம் ஆண்டுக்கு நான்கு முறைதான் கிராம சபைக் கூட்டம் கூட்டப்பட்டிருக்கிறது, அதையும் முறையாக கூட்டியதில்லை.

நோயற்ற ஊராட்சி இலக்கை எட்டுவதற்கு மக்களைத் தேடி மருத்துவம், மொத்தம் உள்ள ஊராட்சிப் பிரதிநிதிகளில் மகளிருக்கு 56 விழுக்காடு இட ஒதுக்கீடு, அனைத்து ஊராட்சிப் பிரதிநிதிகளுக்கும் 5 முதல் 10 மடங்கு வரை அமர்வுப் படி உயர்த்தி, அவர்களுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. அதேபோல், நவம்பர் 1ஆம் நாள் உள்ளாட்சிகளின் நாளாக கடைப்பிடித்து சிறந்த கிராம ஊராட்சிகளுக்கு உத்தமர் காந்தி விருது வழங்குவது போன்ற அந்தத் திட்டங்களும் நிறைவேற்றப்பட இருக்கிறது. தமிழகத்தில் மொத்தம் உள்ள 7.46 இலட்சம் மகளிர் சுயஉதவிக் குழுக்களில் உறுப்பினர்களாக உள்ள 1.7 கோடி மகளிருடைய நிதி சுதந்திரத்தையும், நிதி மேலாண்மையையும் உறுதி செய்து நம்முடைய அரசு முனைப்போடு செயலாற்றிக் கொண்டிருக்கிறது. நீடித்த வளர்ச்சி இலக்குகளை அடைவதற்கு கிராம ஊராட்சிகள் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொண்டு 'திராவிட மாடல் ஆட்சி' என்பதை உலகிற்கு நாம் உணர்த்திடப் போகிறோம். நீடித்த மற்றும் நிலைத்த வளர்ச்சிகளை எட்டுவதன் மூலமாக இந்த கிராம ஊராட்சிகள், தேசிய அளவில் மற்ற மாநிலங்களுக்கு முன்மாதிரியாக விளங்கும். கிராம ஊராட்சிகளை ஊக்குவிக்க, முன்மாதிரி கிராம விருது, உத்தமர் கிராம விருது அனைத்து மாவட்டங்களிலும் சிறப்பாக செயல்படக்கூடிய சிறந்த தொழில் மற்றும் சிறந்த வணிக நிறுவனங்களுக்கு விருது என அரசு பல்வேறு விருதுகளை அறிவித்துக் கொண்டிருக்கிறோம். மாநில அளவிலும், ஒன்றிய அளவிலும் பல்வேறு திட்டங்கள் வகுக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்தத் திட்டங்களையெல்லாம் திறம்பட தேவைக்கேற்ப ஒருங்கிணைத்து கடைக்கோடி மக்களிடம் கொண்டு போய் சேர்ப்பது உள்ளாட்சி அமைப்புகளால்தான் முடியும்.

எனவே, இன்றைய கிராம சபைக் கூட்டத்தில் இங்கே உங்களிடத்தில் நான் கேள்விகளைக் கேட்டபோது, அத்தனை பேரும் எழுந்து சொன்னீர்கள். இது இந்த கிராமத்தில் மட்டும்

அல்ல, ஏறக்குறைய 10 வருட காலமாக ஒரு ஆட்சி இருந்தது. அந்த ஆட்சியில் முறையாக உள்ளாட்சி அமைப்பினுடைய தேர்தலைக் கூட நடத்த முடியாத நிலை இருந்தது.

நாம் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு, உள்ளாட்சித் தேர்தலையும் முறையாக நடத்தி முடித்திருக்கிறோம். உள்ளாட்சியினுடைய பிரதிநிதிகள் எல்லாம் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். ஏதோ நூற்றுக்கு நூறு நம்முடைய ஆளும்கட்சிதான் வந்திருக்கிறது என்று இல்லை. 90 சதவீதம், 95 சதவீதம் நாம் வந்திருந்தாலும், 5 சதவீதம் எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்களும் அந்தப் பொறுப்பிற்கு வந்திருக்கிறார்கள். எனவே, அவர்கள் எதிர்க்கட்சி, இன்னொரு கட்சி என்று நாங்கள் பார்க்காமல், எல்லா ஊராட்சிகளுக்கும், எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் அந்த ஊராட்சிகளுக்கு என்னென்ன உதவிகள் வேண்டுமோ, என்னென்ன தேவைகள் அவசியமோ, குடிநீர் பிரச்சினையைப் பற்றி சொன்னீர்கள், ரேஷன் கடையைப் பற்றி சொன்னீர்கள், அதேபோல மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு இருக்கக்கூடிய இடையூறுகளைப் பற்றிச் சொன்னீர்கள், நூறு நாள் வேலைத் திட்டத்தை 150 நாளாக உயர்த்தித் தர வேண்டும் என்ற கோரிக்கை வைத்திருக்கிறீர்கள், இப்படி பல கோரிக்கைகள் இருக்கின்றன. இதையெல்லாம் நாங்கள் இன்றைக்கு கவனமாக குறித்து வைத்துக்கொண்டு, நிச்சயமாக, உறுதியாக அதையெல்லாம் மிகமிக விரைவில், அனைத்தையும் நாங்கள் நிறைவேற்றித் தருவதற்குக் காத்திருக்கிறோம்.

செங்காடு ஊராட்சியைப் பொறுத்தவரைக்கும் நான் சொல்ல வேண்டுமென்றால்,

- ✶ அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ், செங்காடு கிராமத்தில் ரூ.12 இலட்சத்து 11 ஆயிரம் செலவில் மதுரை வீரன் கோயில் குளம் புனரமைக்கப்படும் என்ற அந்த உறுதியை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

* அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ், கண்டமங்கலம் கிராமத்தில் மாத்தம்மன் கோயில் தெரு, செங்காடு கிராமத்தில் செங்காடு குறுக்குத் தெரு, மதுரைவீரன் கோயில் தெரு மற்றும் கண்டமங்கலம் பிரதான தெருக்களுக்கு ரூ.9 இலட்சத்து 40 ஆயிரம் செலவில் பேவர் பிளாக் சாலைகள் அமைக்கப்படும்.

* அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ், ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளிக்கு ரூ.5 இலட்சத்து 70 ஆயிரம் மதிப்பீட்டில் பெண் குழந்தைகளுக்கான கழிவறை கட்டித் தரப்படும்.

* மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின்கீழ், செங்காடு, கண்டமங்கலம் கிராமத்தில் உள்ள தெருக்களுக்கு ரூ.25 இலட்சத்து 57 ஆயிரம் மதிப்பீட்டில் பேவர் பிளாக் சாலைகள் அமைக்கப்படும்.

* ஊராட்சிப் பொது நிதியில், கண்டமங்கலம் கிராமத்தில் அமைந்துள்ள மயானத்திற்கு ரூ.7 இலட்சம் மதிப்பீட்டில் தார்ச்சாலை அமைக்கப்படும்.

* பதினைந்தாவது நிதிக்குழு மானிய நிதியில், செங்காடு கிராமத்தில் ரூ.23 இலட்சத்து 30 ஆயிரம் மதிப்பீட்டில் கழீவுநீர் கால்வாய் அமைக்கப்படும்.

* ஆதிதிராவிடர் குக்கிராம மேம்பாட்டு திட்டத்தின் கீழ், செங்காடு கிராமத்தில் பெருமாள் கோயில் மற்றும் மாரியம்மன் கோயில் தெருக்களுக்கு ரூ.14 இலட்சத்து 4 ஆயிரம் மதிப்பீட்டில் சிமெண்ட் சாலை அமைக்கப்படும்.

இப்பொழுது நான் அறிவித்துள்ள திட்டங்கள் மட்டுமன்றி இன்னும் அரசின் பல்வேறு நலத்திட்டங்கள் கிராம அளவில் அனைத்துத் தரப்பு மக்களையும் அடைய வேண்டும் என்பதுதான்

இந்த அரசினுடைய குறிக்கோளாக இருக்கிறது. அதன் மூலம் உங்கள் ஒவ்வொருவருடைய வாழ்வு வளம் பெற வேண்டும் என்ற வகையிலேதான் நம்முடைய அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இவைகளெல்லாம் ஏதோ அறிவிப்புகளுக்கு அறிவித்துச் சென்றுவிட்டேன் என்று நீங்கள் நினைத்துவிட வேண்டாம். நாங்கள் எப்போதுமே, நம்முடைய ஆட்சியைப் பொறுத்தவரைக்கும் கலைஞர் வழியில் நின்று, அண்ணா வழி நின்று, சொன்னதைத்தான் செய்வோம் – செய்வதைத்தான் சொல்வோம் என்ற அந்த நம்பிக்கை உங்களுக்கு இருக்கிறது. அதை நான் நிச்சயமாக உணருகிறேன். எனவே, இது நடந்து முடிந்திருக்கிறதா என்பதை அவர்களிடத்தில் தொலைபேசியிலோ அல்லது கடிதம் மூலமாகவோ கேட்டு மட்டும் அல்ல, நேரடியாக வந்து அடுத்த முறையும் நான் வந்து பார்ப்பேன் என்ற அந்த உறுதிமொழியை இந்த நேரத்தில் எடுத்துச் சொல்லி, எனவே, அதற்கு உங்களுடைய ஒத்துழைப்பும், உங்களுடைய ஆதரவும் தொடர்ந்து இந்த அரசுக்கு இருக்க வேண்டும் என்ற அந்தக் கோரிக்கையையும் வைத்து, இந்த கிராம சபைக் கூட்டத்தில் கலந்து கொண்டிருக்கக்கூடிய உங்கள் அத்தனை பேருக்கும் என்னுடைய வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்து, நன்றி தெரிவித்து என் உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி, வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள்,*
தேசிய ஊராட்சிகள் தினத்தை முன்னிட்டு, காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் ஒன்றியம், செங்காடு ஊராட்சியில் நடைபெற்ற சிறப்பு கிராம சபைக் கூட்டத்தில் கலந்துகொண்டு,
ஆற்றிய உரை – ***24.04.2022***

பெருந்தொற்றின் தாக்கத்தை கட்டுப்படுத்தும் ஒரே ஆயுதம் தடுப்பூசி

கொரோனா தொடர்பான ஆலோசனைக் கூட்டமாக, ஒரு காணொலிக் காட்சியின் மூலமாக நடத்தப்படக்கூடிய கூட்டமாக இது அமைந்திருக்கிறது. இந்த அரசு பொறுப்பேற்ற போது, கொரோனா பெருந்தொற்றின் இரண்டாவது அலை உச்சத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்ததை நீங்கள் எல்லாம் நன்றாக அறிவீர்கள். அந்த இக்கட்டான நிலையிலே, தேவைப்படக்கூடிய அனைத்து தீவிர நடவடிக்கைகளையும் உடனடியாக எடுத்து, அதனை உங்களுடைய கடும் உழைப்பினால் ஓரளவுக்கு கட்டுப்படுத்தியிருக்கிறோம். அதனால் ஏற்பட இருந்த பெரும் பாதிப்புகளையும், உயிரிழப்புகளையும் பெருமளவு நாம் குறைத்திருக்கிறோம்.

கடந்த 2021 ஜனவரி மாதம் நமது மாநிலத்தில் தடுப்பூசிகள் செலுத்தக்கூடிய பணி துவங்கியது. இதன் ஆரம்பக்கட்டத்தில் தடுப்பூசி செலுத்தக்கூடிய பணியிலிருந்த சுணக்கத்தை

முழுமையாக அகற்றி, தடுப்பூசி செலுத்துவதை ஒரு மக்கள் இயக்கமாக நாம் மாற்றிக் காட்டியிருக்கிறோம். அதில் மாவட்ட ஆட்சித் தலைவர்களுடைய பங்கு மிக மகத்தான பங்கு என்பதை யாராலும் மறக்க முடியாது. இதனுடைய விளைவாகத்தான், தமிழ்நாட்டில் தடுப்பூசி செலுத்துவதற்கு தகுதியுள்ள **6.33** கோடி மக்களில், **74.75** சதவீதம் பேருக்கு இரண்டு தவணை தடுப்பூசிகளும் செலுத்தப்பட்டுள்ளன. **91.5** சதவீதம் பேருக்கு முதல் தவணை தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. பூஸ்டர் தடுப்பூசி செலுத்துவதற்கு, தகுதியுள்ளோரில் **41.66** சதவீதம் பேருக்கு இதுவும் செலுத்தப்பட்டுள்ளது.

அடுத்து, ஒமைக்ரான் வைரஸ் காரணமாக ஏற்பட்ட மூன்றாவது அலையின் தாக்கம் பெரும் அளவில் இல்லை. இதனால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை சிறிதளவு உயர்ந்தாலும் கூட, இந்தத் தொற்று கடும் நோயையும், உயிரிழப்புகளையும் ஏற்படுத்தவில்லை. இவ்வாறு நாம் அனைவரும் இணைந்து எடுத்த பல்வேறு முயற்சிகளின் காரணமாகத்தான், பெருந்தொற்றின் தாக்கத்திலிருந்து வெளிவந்து இயல்பு வாழ்க்கைக்கு நாம் திரும்பி வருகிறோம். பொருளாதாரம் மெல்ல வளர்ச்சி பெற்று வந்து கொண்டிருக்கிறது, மக்களுடைய வாழ்வாதாரமும் படிப்படியாக உயர்ந்து கொண்டிருக்கிறது.

இந்தச் சூழ்நிலையில் தான், டெல்லி, மகாராஷ்டிரா, உத்திரப்பிரதேசம் போன்ற மாநிலங்களில் இத்தொற்றால் பாதிக்கப்பட்டவர்களுடைய எண்ணிக்கை கடந்த ஒருவார காலமாக மீண்டும் உயரத் தொடங்கி இருக்கிறது. ஒமைக்ரான் வைரஸின் புதிய வகையால் இந்த உயர்வு ஏற்பட்டுள்ளது என மருத்துவ அறிஞர்கள் கூறிக் கொண்டிருக்கிறார்கள். ஒமைக்ரான் வைரஸால் தொற்று எண்ணிக்கை உயர்ந்தபோது ஏற்பட்டது போன்றே,

தற்போதும் உயிரிழப்புகள் எண்ணிக்கை உயரவில்லை என்பது சற்று ஆறுதல் அளித்துக் கொண்டிருக்கிறது.

இருந்தாலும், நாம் அனைவரும் எந்த ஒரு சூழ்நிலையையும் எதிர்கொள்வதற்கு தயாராக இருக்க வேண்டும் என்பதே என்னுடைய வேண்டுகோள். நான் ஏற்கெனவே பலமுறை அறிவுறுத்தியிருக்கிற அடிப்படையில் இந்தப் பெருந்தொற்றின் தாக்கத்தை கட்டுப்படுத்திட நம் வசம் இருக்கக்கூடிய மிகப்பெரிய ஆயுதம் தடுப்பூசியே ஆகும். தடுப்பூசி செலுத்திக் கொள்வோரில் சிலருக்கு தொற்று ஏற்பட்டாலும் கூட, உயிரிழப்பு ஏற்படுவது மிக மிகக் குறைவு. எனவே, தகுதியுள்ள அனைவருக்கும் தடுப்பூசி செலுத்தப்படுவதை உறுதி செய்வதே நமது தலையாயக் கடமையாக இருந்திட வேண்டும். நமது மாநிலத்தில் தடுப்பூசி செலுத்தப்பட்டவர்களின் எண்ணிக்கை பெருமளவு உயர்ந்த போதிலும், இன்னும் நாட்டின் பிற மாநிலங்களுடன் ஒப்பிடும்போது, நமது சாதனை சற்று குறைவாகத் தான் அமைந்திருக்கிறது. இன்னும் குறிப்பிட்டுச் சொன்னால், இரண்டாவது தவணை தடுப்பூசி போடாதவர்கள் நமது மாநிலத்தில் 1.48 கோடி பேர் இருக்கிறார்கள். பூஸ்டர் தடுப்பூசி செலுத்துவதற்கு தகுதி இருந்தும் அதனை செலுத்திக் கொள்ளாதவர்கள் இன்னும் 11.68 இலட்சம் பேர் இருக்கிறார்கள். இவர்கள் அனைவருக்கும் இனிவரும் வாரங்களில் தடுப்பூசி செலுத்தப்படுவதை உறுதி செய்வதே நம் முன் இருக்கக்கூடிய ஒரு சவாலாக அமைந்திருக்கிறது.

அடுத்து, பெருந்தொற்றைத் தடுப்பதற்கான பல்வேறு கட்டுப்பாடுகள் அனைத்தும் பெருமளவு குறைக்கப்பட்டிருக்கக்கூடிய இந்தச் சூழ்நிலையில், பொது இடங்களிலும், பொதுமக்கள் அதிகமாக கூடும் இடங்களிலும் அனைவரும் முகக்கவசம் அணிவதை நீங்கள் அனைவரும் உறுதி செய்திட வேண்டும். இவ்வாறு பொருளாதார வளர்ச்சி தடைபட்டுவிடாமலும் மக்களின் வாழ்வாதாரம் மீண்டும்

பாதிக்கப்பட்டுவிடாமலும் இருப்பதை உறுதி செய்யக்கூடிய அதே நேரத்தில், எதிர்காலத்தில் இந்தப் பெருந்தொற்றினால் உயிரிழப்புகள் ஏற்படாமல் தடுத்திட வேண்டும். இது ஒரு Fine balance. இதற்கான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்வதே நம் குறிக்கோளாக அமைந்திட வேண்டும். இதனை மனதிலே நிறுத்தி, தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் அனைத்து அரசுத் துறைகளும், மாவட்ட ஆட்சியர்களும் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டுமென்ற எனது வேண்டுகோளை இந்தத் தருணத்தில் மீண்டும் உங்கள் முன் வைக்கிறேன்.

நன்றி, வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள்,*
கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் தடுப்பூசி செலுத்தும் பணிகள் குறித்து காணொலிக் காட்சி மூலம் நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்களுடனான ஆலோசனைக் கூட்டத்தில் ஆற்றிய உரை – ***26.04.2022***

தொலைநோக்குப் பார்வையும் நல்லெண்ணமும்தான் நல்லதோர் நாட்டை உருவாக்கும்

தேனி மாவட்டத்தில் அரசு நலத்திட்ட உதவிகள் அதைத் தொடர்ந்து திட்டப்பணிகள் திறந்து வைத்தல், புதிய திட்டப் பணிகளுக்கான தொடக்க விழா, இப்படி பல்வேறு நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்து சிறப்போடு நடைபெற்றுக் கொண்டிருக்கக்கூடிய இந்த விழாவில் பங்கேற்று உரையாற்றி அமர்ந்துள்ள தமிழகத்தினுடைய மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு.இ.பெரியசாமி அவர்களே!

தமிழகத்தின் மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் அவர்களே!

சுருக்கமாக உரையாற்றி பல்வேறு கோரிக்கைகளை எடுத்துவைத்திருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர் திரு.கம்பம் என். ராமகிருஷ்ணன் அவர்களே!

சட்டமன்றமாக இருந்தாலும், மக்கள் மன்றமாக இருந்தாலும் கோரிக்கைகளை எடுத்து வைப்பதுதான் என்னுடைய வழக்கம் என்ற அடிப்படையில் உரையாற்றியிருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்கள்

திரு.மகாராஜன் அவர்களே!

திரு.கே.எஸ்.சரவணகுமார் அவர்களே!

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள்,

மாவட்டத்தின் பொறுப்பாளர் அருமை சகோதரர் திரு.தங்க தமிழ்ச்செல்வன் அவர்களே!

அன்பிற்குரிய திருமூக்கையா அவர்களே!

நாடாளுமன்றத்தின் முன்னாள் உறுப்பினர் திரு.கம்பம் செல்வேந்திரன் அவர்களே!

துவக்கத்தில் அனைவரையும் வரவேற்று மகிழ்ந்திருக்கக்கூடிய மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.முரளிதரன், இ.ஆ.ப., அவர்களே!

நன்றியுரை ஆற்றவிருக்கக்கூடிய மாவட்ட வருவாய் அலுவலர் திரு.சுப்பிரமணியன் அவர்களே!

நிகழ்ச்சியில் பங்கேற்றிருக்கக்கூடிய உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளே!

அரசு துறைகளைச் சார்ந்திருக்கக்கூடிய அதிகாரிகளே! அலுவலர் பெருமக்களே!

சட்டம்–ஒழுங்கை பேணிப் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருக்கும் காவல்துறையைச் சார்ந்திருக்கக்கூடிய தோழர்களே!

நலத்திட்ட உதவிகள் மூலமாக பயன்பெற இங்கு அந்த உதவிகளைப் பெறுவதற்காக வருகை தந்திருக்கக்கூடிய பயனாளிப் பெருமக்களே!

பத்திரிகை மற்றும் ஊடகத் துறையைச் சார்ந்திருக்கக்கூடிய நண்பர்களே!

மிகுந்த எழுச்சியோடு இங்கு திரண்டிருக்கக்கூடிய பெரியோர்களே!

தாய்மார்களே! இளைஞர்களே!

என் உயிரோடு கலந்திருக்கக்கூடிய தலைவர் கலைஞர் அவர்களின் உயிரினும் உயிரான அன்பு உடன்பிறப்புக்களே!

உங்கள் அனைவருக்கும் என் அன்பான வணக்கம்.

தமிழ்நாட்டின் தென்பகுதியில் மேற்குத் தொடர்ச்சி மலைகள் சூழ்ந்த இயற்கை சூழ்ந்த இந்த எழில் மிகுந்த தேனி மாவட்டத்துக்கு நான் வருகை தந்திருக்கிறேன். நான் முதலமைச்சராக பொறுப்பேற்று வருகிற 7ஆம் தேதி ஓராண்டு நிறைவடைய இருக்கிறது. ஏறக்குறைய இரண்டாண்டு காலம் கொரோனா தொற்று இருந்த காரணத்தால், உடனடியாக பல மாவட்டங்களுக்கு செல்ல முடியாத நிலைக்கு நான் ஆளாக்கப்பட்டேன்.

இருந்தாலும் இன்றைக்கு முதலமைச்சராக பொறுப்பேற்று முதல் முதலாக இந்த தேனி மாவட்டத்தில் ஒரு சுற்றுப்பயணத்தை நடத்தக்கூடிய, அரசு விழாவில் பங்கேற்கக்கூடிய ஒரு சிறப்பான நிகழ்ச்சியில் கலந்து கொள்ளக்கூடிய ஒரு நல்ல வாய்ப்பு பெற்றமைக்கு நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

தேனி மாவட்டம் என்பது தலைசிறந்த மாவட்டம்.

- அணை என்றால் மாபெரும் அணையான வைகை அணை.
- மலை என்றால் மேகமலை, வெள்ளிமலை, போடிமெட்டு.
- அருவிகள் என்றால் கும்பக்கரை அருவி, சுருளி அருவி.
- கலை என்றால் கண்ணகி கோவில்.

இப்படிப்பட்ட வரலாற்றிலே இடம் பெற்றிருக்கக்கூடிய பெருமைக்குரிய மாவட்டமான இந்த தேனி மாவட்டத்தில் நடைபெறக்கூடிய இந்த நிகழ்ச்சியில் பங்கேற்பதை நான் பெருமையாகக் கருதுகிறேன்.

நம்முடைய கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே பேசுகிற போது கூறிப்பிட்டு சொன்னார், இந்த தேனி மாவட்டம் நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்ட மாவட்டம் என்பதை அவர் நினைவுபடுத்தி எடுத்துச் சொன்னார், ஆம். 1996ஆம் ஆண்டு இந்த மாவட்டத்தை தலைவர் கலைஞர் அவர்கள் உருவாக்கித் தந்தார்கள்.

01.01.1997 முதல் தேனி மாவட்டம் செயல்படத் தொடங்கியது.

- ✶ 1989ஆம் ஆண்டு பெரியகுளம் அருகே அரசு தோட்டக்கலைக் கல்லூரியை அன்றைக்கு முதலமைச்சராக இருந்த தலைவர் கலைஞர் அவர்கள்தான் தொடங்கி வைத்தார்.
- ✶ 2001ஆம் ஆண்டு புதிதாக கட்டப்பட்ட தேனி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தை அன்றைக்கு முதலமைச்சராக இருந்த தலைவர் கலைஞர் அவர்கள்தான் திறந்து வைத்தார்.
- ✶ தேனியில் 1999ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட உழவர் சந்தையை முதலமைச்சராக இருந்த தலைவர் கலைஞர் அவர்கள்தான் தொடங்கி வைத்தார்.
- ✶ பெரியகுளம் அருகே உள்ள சோத்துப்பாறை அணை ரூபாய் 32 கோடி மதிப்பீட்டில் 50 கிராமங்கள் பயன்பெறும் வகையில் 2001ஆம் ஆண்டு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் அது கட்டி முடிக்கப்பட்டது.

- ✶ உத்தமபாளையம் மற்றும் தேவாரம் பகுதி உழவர்களின் கோரிக்கையான பி.டி.ஆர் கால்வாய் திட்டம் மற்றும் 18ஆம் கால்வாய் திட்டத்தை முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அன்றைக்கு தொடங்கி வைத்தார்.
- ✶ தேனி மாவட்ட மக்களின் நூற்றாண்டு கனவுத்திட்டம்தான் 18ஆம் கால்வாய் திட்டம்.

1999ஆம் ஆண்டு 22.50 கோடி ரூபாயில் முதலமைச்சர் கலைஞர் அவர்களால் தொடங்கப்பட்டு 2008ஆம் ஆண்டு அது நிறைவு பெற்று இன்று மக்களுக்கு பயன்தரக்கூடிய வகையில் அமைந்திருக்கக்கூடிய திட்டம் இந்தத் திட்டம்.

- ✶ தேனியில் இருக்கக்கூடிய புதிய பேருந்து நிலையத்துக்கு கடந்த 2010ஆம் ஆண்டு இடம் தேர்வு செய்யப்பட்டு 12 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அன்றைக்குத் துணை முதலமைச்சராக இருந்த நான் வருகை தந்து அடிக்கல் நாட்டினேன் என்பதையும் நான் மறந்து விடவில்லை.
- ✶ திராட்சை அதிகம் விளையும் பகுதியான சின்னமனூர் பக்கத்தில் இருக்கிற ஒத்தப்பட்டி பகுதியில், தனியார் திராட்சைத் தொழிற்சாலையையும் அன்றைக்கு நான் தொடங்கி வைத்தேன்.

இப்படி இந்த மாவட்டத்துக்கு ஏராளமான பணிகள், ஏராளமான திட்டங்கள், எண்ண முடியாத சாதனைகள் அன்றைக்கு செய்த ஆட்சிதான் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி என்பதை நான் பெருமையோடு எடுத்துச் சொல்லி,

அந்த வரிசையில் தான் இப்போது மீண்டும் நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி 6ஆவது முறையாக பொறுப்பேற்று தமிழ்நாடு முழுமையும் பல்வேறு நலத்திட்டங்களை நிறைவேற்றிக்

கொண்டிருக்கும் நேரத்தில், இந்த தேனி மாவட்டத்தில் நலத்திட்ட உதவிகள் அளிப்பதற்காக இன்றைக்கு நான் வந்திருக்கேன்.

இந்த மாவட்டத்தின் பொறுப்பு அமைச்சராக கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு.ஐ.பெரியசாமி அவர்கள் வழிநடத்திக் கொண்டிருக்கிறார் என்பது உங்களுக்குத் தெரியும். அவர், திண்டுக்கல் ஐ.பெரியசாமி என்றுதான் எல்லோரும் சொல்வார்கள். ஆனால் இப்போது திண்டுக்கல் ஐ.பெரியசாமி மட்டுமல்ல, தேனி ஐ.பெரியசாமி என்று சொல்லக்கூடிய நிலைக்கு அவர் தன்னுடைய பணியை அவர் இங்கே ஆற்றிக் கொண்டிருக்கிறார். பல்வேறு நலத்திட்டப் பணிகளை, பல உதவிகளை இங்கு இருக்கக்கூடிய மாவட்ட நிருவாகத்தோடு அவர் தொடர்பு கொண்டு அந்தப் பணிகளையெல்லாம் மிகச் சிறப்பாக செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்.

தேனீயைப் போல சுறுசுறுப்புக்குச் சொந்தக்காரர், துடிப்போடு செயல்படக்கூடியவர். எனவே அவருக்கும், இந்த தேனி மாவட்டத்தின் மக்கள் பிரதிநிதியாக இருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், உள்ளாட்சிப் பிரதிநிதிகளுக்கும், அரசு அதிகாரிகளுக்கும், நம்முடைய அரசின் சார்பில் வாழ்த்துக்களை, பாராட்டுக்களை நன்றியுணர்வோடு தெரிவித்துக்கொள்ள நான் விரும்புகிறேன்.

பல்வேறு நலத்திட்ட உதவிகள் இங்கு தரப்பட்டிருக்கிறது.

- சாலை விபத்து நிவாரண நிதி,
- முதலமைச்சரின் பொதுநிவாரண நிதி,
- நலிந்தோர் உதவித்தொகை,
- வீட்டுமனைப்பட்டா,
- இணையவழி இ–பட்டா,

- பெரியார் நினைவு சமத்துவபுரம் பராமரிப்பு,
- பிரதமர் குடியிருப்புத்திட்டம்,
- பழங்குடியினர் வீடு வழங்கும் திட்டம்,
- ஆட்டுக்கொட்டகை அமைக்க உதவித்தொகை,
- நமக்கு நாமே திட்டம்,
- புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தில் கருணை அடிப்படையில் வேலை,
- வங்கிக் கடன்கள்,
- வாழ்ந்துகாட்டுவோம் திட்ட சுழல் நிதி,
- வேளாண் இயந்திரங்கள் வழங்குதல்,
- ஆதரவற்ற பெண்களுக்கு ஆடுகள் வழங்குதல்,
- பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்ட நிதி உதவி,
- திருநங்கையர்க்கு அடையாள அட்டை வழங்குதல்,
- புதிய மின்னணு குடும்ப அட்டை,
- சலவை பெட்டிகள் வழங்குதல்,
- இஸ்லாமிய மகளிர்க்கு சங்க உதவி நிதி,
- கிறித்துவ மகளிர் சங்க உதவி நிதி,
- முதுகுத் தண்டுவடம் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஸ்கூட்டர்,
- சுய வேலைவாய்ப்புத் திட்டம்,
- கலைமன்ற விருதுகள்,
- புழு வளர்ப்பு மனை மானியம்,
- கல்வி உதவித் தொகைகள்,

✶ பயிர்க்கடன்கள்,

– இப்படி பல்வேறு தலைப்புகளில் பல்வேறு உதவிகள்.

அதாவது 71 கோடி கோடி ரூபாய் மதிப்பிலான திட்ட உதவிகளை 10,427 பேருக்கு இன்றைக்கு வழங்கியிருக்கிறோம். ஒருசேர விழா மூலமாக பல துறைகளின் சார்பிலான 50–க்கும் மேற்பட்ட திட்டங்களின் கீழ் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டிருக்கிறது. இதுதான் ஒரு நல்ல ஆட்சியினுடைய இலக்கணம். இதுதான் மக்களுக்கான அரசு.

இதைத்தான் நாம் இன்றைக்கு எப்படி பெருமையோடு சொல்கிறோமென்றால், இது திராவிட மாடல் அரசு என்று நாம் பெருமையோடு பேசிக் கொண்டிருக்கிறோம். வளர்ச்சி என்பதை அனைவருக்கும் சாத்தியப்படுத்துவதே திராவிட மாடல், அதுதான் என்னுடைய மாடல், முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினுடைய மாடல். இதுதான் திராவிட மாடல்.

அரசாங்கத்தின் அனைத்துத் திட்ட உதவிகளும் அனைவரையும் சென்று சேரும் வகையில் ஒவ்வொரு திட்டத்தையும் பார்த்துப் பார்த்து நாம் செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம். கழக ஆட்சியில் அனைத்துத் திட்டங்களும் தொய்வு இல்லாமல் நடக்க வேண்டும் என்று நான் அதிகாரிகளுக்கு தொடர்ந்து அறிவுரை மட்டுமல்ல, ஆலோசனைகள் மட்டுமல்ல, ஆணையும் வழங்கிக் கொண்டிருக்கிறேன்.

அதேபோல, ஒவ்வொரு தனிமனிதனின் தேவையையும் பூர்த்தி செய்ய வேண்டும் என்பதுதான் இந்த அரசினுடைய இலக்கு. அந்த இலக்கை நோக்கிய பயணம்தான் நம்முடைய திராவிட மாடல் என்று நாம் சொல்வோம்.

இன்றைக்கு 10,427 பேர் அரசு உதவிகளைப் பெற்றிருக்கிறார்கள் என்றால், இதன் மூலமாக, அவர்களது

குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் பயனடைகிறார்கள். உங்கள் முகத்தில் காணக்கூடிய மகிழ்ச்சிதான் என்னை ஒவ்வொரு நாளும் சோர்வில்லாமல் உழைக்கக்கூடிய அந்த உத்வேகத்தை, ஊக்கத்தை எனக்கு வழங்கிக் கொண்டிருக்கிறது.

நம்மை ஆளாக்கிய பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் அடிக்கடி சொல்வார், ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண வேண்டும் என்று, அதுதான் எனக்கு நினைவிற்கு வருகிறது. அந்த வகையில் நீங்கள் இன்று நலத்திட்ட உதவிகளைப் பெற்று மகிழ்ச்சி அடையும்போது உங்களுடைய புன்சிரிப்பிலே தான் பேரறிஞர் அண்ணா சொன்ன அந்த தாரக மந்திரத்தை நான் காண்கிறேன்.

கழக ஆட்சி பொறுப்பேற்று இன்னும் ஓராண்டு கூட முடியவில்லை, வருகிற 7 ஆம் தேதி தான் ஓராண்டு முடிவடைகிறது, அதற்கு இன்னும் ஒருவார காலம் இருக்கிறது. இந்த ஓராண்டு காலத்தில் ஐந்து வருடம் ஆட்சியில் இருந்தால், ஏன், 10 வருடம் ஆட்சியில் இருந்தால் என்னென்ன செய்திருப்போமோ அதையெல்லாம் இந்த ஒரே ஆண்டிலே நம்முடைய அரசு அந்த சாதனையை செய்திருக்கிறது. இது என்னால் நெஞ்சை நிமிர்த்தி சொல்ல முடியும்.

- ✶ கொரோனா என்ற அந்த கொடிய நோய்க்கு ஓரளவுக்கு முற்றுப்புள்ளி வைத்தோம்.
- ✶ தடுப்பூசி செலுத்துவதை மிகப்பெரிய மக்கள் இயக்கமாகவே மாற்றினோம். இதுவரை தமிழ்நாட்டில் 91 விழுக்காடு பேருக்கு முதல்கட்ட தடுப்பூசி செலுத்தப்பட்டிருக்கிறது.
- ✶ மகளிருக்குக் கட்டணமில்லாப் பேருந்து வசதி செய்யப்பட்டிருக்கிறது.
- ✶ இங்கே சட்டமன்ற உறுப்பினர் குறிப்பிட்டுச் சொன்னதைப்போல, கொரோனா காலத்தில் நிவாரண

நிதியாக நாம் ஆட்சிக்கு வந்தவுடன் முதல் கையெழுத்து 4,000 ரூபாய், அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் வழங்கப்பட்டது.

- ✶ கொரோனா கால நிவாரணமாக 13 வகையான மளிகைப் பொருள்கள் தரப்பட்டது.
- ✶ பொங்கல் பரிசாக 22 மளிகைப் பொருள்கள் வழங்கப்பட்டது.
- ✶ ஆவின் பால் விலை லிட்டருக்கு 3 ரூபாய் குறைக்கப்பட்டிருக்கிறது.
- ✶ ஆட்சிப் பொறுப்பேற்ற பின்னர் யாரும் குறைப்பதற்கு முன்பாக பெட்ரோல் விலையை லிட்டருக்கு 3 ரூபாய் குறைத்தோம்.
- ✶ இலங்கையில் இருக்கக்கூடிய நம்முடைய தமிழர்கள் அடைக்கலம் தேடி தமிழ்நாட்டிற்கு வந்திருக்கக்கூடிய அந்த இலங்கைத் தமிழர்களுக்கு 317 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- ✶ அது மட்டுமல்ல, நெசவாளர் கோரிக்கையான பஞ்சுக்கு ஒரு விழுக்காடு வரி தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது.
- ✶ அரசுப் பணியாளர்களுக்கு அகவிலைப்படி உயர்வு வழங்கப்பட்டிருக்கிறது.
- ✶ கூட்டுறவு வங்கிகளில் நகைக்கடன்கள் தள்ளுபடி, 14 இலட்சம் பேரின் கடன் தள்ளுபடி செய்யப்பட்டது.
- ✶ மகளிர் சுயஉதவிக் குழுக்கள் பெற்ற கடன்கள் முழுமையும் தள்ளுபடி செய்திருக்கிறோம்.
- ✶ அதைத் தாண்டி, இப்போது மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு கடன்களும் வழங்கப்பட்டு வருகிறது.

* கொரோனாவால் பெற்றோரை இழந்தவர்களுக்கு உதவித்தொகை வழங்கப்பட்டிருக்கிறது.

* கொரோனாவால் பள்ளி இடைநின்ற குழந்தைகள் அடையாளம் காணப்பட்டு அவர்கள் பள்ளியில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். பொதுமுடக்கக் கால கற்றல் இழப்பைச் சரிசெய்ய 'இல்லம் தேடி கல்வி' என்ற சிறப்பான திட்டம்.

* மருத்துவச் சேவையை மக்களின் இல்லத்திற்கே கொண்டு சேர்க்கும் மக்களைத் தேடி மருத்துவம் என்ற ஒரு உன்னதமான திட்டத்தை நடத்திக் கொண்டிருக்கிறோம்.

* சாலை விபத்துகளில் சிக்கக்கூடிய, பாதிக்கக்கூடிய விலை மதிப்பற்ற அந்த உயிர்களைக் காப்பாற்ற – இன்னுயிர் காப்போம் – நம்மைக் காக்கும் 48 என்ற உன்னதத் திட்டம்.

* காவிரி டெல்டாவில் குறுவை சாகுபடி தொகுப்பு 61 கோடி ரூபாய்க்கு வழங்கியதால் உழவர்கள் பெருமகிழ்ச்சி அடைந்திருக்கிறார்கள்.

* மேட்டூர் அணையில் உரிய நேரத்தில் தண்ணீர் திறந்து விடப்பட்டது. அந்த தண்ணீர் திறந்துவிடுவதற்கு முன்னால் கால்வாய்களை முன்கூட்டியே தூர் வாரினோம். 4.9 இலட்சம் ஏக்கர் பரப்பளவில் குறுவை நெல் சாகுபடி செய்து இன்றைக்கு வரலாற்றுச் சாதனையை நாம் ஏற்படுத்தியிருக்கிறோம்.

* தமிழ்நாட்டு இளைஞர்களைப் பொறுத்தவரை, அவர்களை கல்வியில் சிறந்தவர்களாக ஆக்குவதற்காக 'நான் முதல்வன்' என்ற ஒரு உன்னதமான திட்டத்தை இன்றைக்கு நாம் தொடங்கி இருக்கிறோம்.

- இந்தப் பத்து மாத காலத்தில் 64 ஆயிரம் கோடி ரூபாய் முதலீட்டை ஈர்க்கும் வகையில் 133 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டு, இதன் மூலமாக 2 இலட்சம் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை நாம் இன்றைக்கு உருவாக்கியிருக்கிறோம்.

- மாநிலப் பேரிடர் நிவாரண நிதியிலிருந்து கொரோனாவில் இறந்தவர்களின் குடும்பத்திற்கு தலா 50 ஆயிரம் ரூபாய் வீதம் 279 கோடி ரூபாய் அளவுக்கு அவர்களுக்கு நிதி வழங்கப்பட்டிருக்கிறது.

- உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்தின் கீழ் 2 இலட்சத்து 29 ஆயிரத்து 216 மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டிருக்கிறது.

- இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு – 2,567 கோடி ரூபாய் திருக்கோயில் நிலங்கள் உள்ளிட்ட அசையா சொத்துக்கள் மீட்கப்பட்டுள்ளன.

- மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் உயர்கல்வி உறுதித் திட்டத்தின் கீழ் அரசு பள்ளி மாணவிகளின் மேல்படிப்புக்காக மாதம் 1,000 ரூபாய் அவர்களுக்கு உதவித் தொகை அளிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தால் 6 இலட்சம் மாணவிகள் பயனடைய இருக்கிறார்கள். தமிழ்நாட்டு மாணவிகள் பட்டம் பெற்றவர்களாக உயர வேண்டும். அதற்கு இந்தத் திட்டம் உறுதுணையாக இருக்க வேண்டும். தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய ஒவ்வொரு பெண்ணும் பட்டதாரியாக வேண்டும் என்பதுதான் இந்த அரசினுடைய இலட்சியம். அதற்காகத்தான் திராவிட இயக்கம் பல ஆண்டுகாலமாக போராடி வருகிறது. போராடிய இலட்சியங்களை அடையத்தான் நாம் சட்டங்களையும்,

திட்டங்களையும் உருவாக்கி இன்றைக்கு செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம். பெண்கள் கல்வியைக் கற்றுக் கொண்டாலே “பழமை லோகம் இடியுது, தூள்தூளாகும்”. அந்த பயத்தில்தான் கல்வி கற்க பல தடைகளை உருவாக்கியிருக்கிறார்கள். அத்தனை தடைகளையும் நாம் தகர்த்தெறிவோம்.

நம்முடைய கழகத்தினுடைய தேர்தல் அறிக்கையில் சொல்லப்பட்டதில் பெரும்பாலான திட்டங்களை, நாங்கள் எல்லாவற்றையும் நிறைவேற்றி விட்டோம் என்று சொல்லி உங்களை ஏமாற்ற விரும்பவில்லை. இன்னும் 5 சதவீதம், 10 சதவீதம் இருக்கிறது, நான் இல்லை என்று மறுக்கவில்லை. அதையும் நிச்சயமாக, உறுதியாக, படிப்படியாக இந்த ஸ்டாலின் நிறைவேற்றிக் காட்டுவான் என்பதை நான் மீண்டும் உறுதியோடு தெரிவிக்க விரும்புகிறேன்.

இவ்வளவு நேரம் நாங்கள் செய்த சாதனைகளை உங்களிடத்தில் சொன்னோம். இப்போது என்ன சொல்லப் போகிறேன் என்று சொன்னால், இனி இந்த தேனி மாவட்டத்திற்கு செய்யப்படக்கூடிய வளர்ச்சிப் பணிகளைப் பற்றி, திட்டங்களைப் பற்றி இப்போது நான் சொல்லப் போகிறேன்.

தேனி மாவட்டத்தில் உள்ள பெரியகுளம் அரசு மருத்துவமனை 8 கோடி ரூபாய் செலவிலும், உத்தமபாளையம் அரசு மருத்துவமனை 4 கோடி ரூபாய் செலவிலும் மேம்படுத்தப்படும்.

போடிநாயக்கனூர் வட்டம், மஞ்சநாயக்கன்பட்டி அருகில் கொட்டக்குடி ஆற்றின் அருகே 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தடுப்பணை அமைக்கப்படும்.

ஆண்டிப்பட்டியிலுள்ள வைகை உயர் தொழில்நுட்ப விசைத்தறி பூங்காவைத் தொடர்ந்து சிறப்புற செயல்படச் செய்வதற்கான திட்டம் வகுக்கப்பட்டு அதுவும் செயல்படுத்தப்படும்.

இங்கே திரு.கம்பம் ராமகிருஷ்ணன் அவர்கள் பல கோரிக்கை எடுத்து வைத்திருக்கிறார், அதில் முக்கியமான ஒரு கோரிக்கை, தேனி மாவட்டத்தில் அதிக அளவில் நெல் உற்பத்தியாவதைக் கருத்தில் கொண்டு, வேளாண் பெருமக்களுக்கு உதவக்கூடிய வகையில் நவீன அரிசி ஆலை உருவாக்கப்படும் என்ற அந்த உறுதியை நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

வீரநாயக்கன்பட்டியில் உள்ள குறவர்கள் காலனி திட்டப் பகுதியில், நரிக்குறவர் மற்றும் குறவர்களுக்காக குடியிருப்பு கட்டப்படும். 175 குடியிருப்புகளுக்கான பயனாளிகளின் பங்களிப்புத் தொகை 3.5 கோடி ரூபாயை முதற்கண் அரசு அளித்திருக்கிறது. பின்பு எளிதான சிறு தவணைகளில் அவர்கள் திருப்பிச் செலுத்திட வழிவகை செய்யப்படும்.

அதிக அளவில் பயணியர் வந்துசெல்லக்கூடிய குமளி பேருந்து நிலையம் 7.5 கோடி செலவில் மேம்படுத்தப்படும்.

என்னைப் பொறுத்தவரையில், என் கடன் பணிசெய்து கிடப்பதே என்ற அந்த வழித்தடத்தில் பயணிக்க நினைக்கிறவன் நான். மக்களுக்கு பணியாற்றும்போது – மக்களுக்கு நன்மை செய்யும் நோக்கத்தில் சொல்லப்படும் ஆலோசனைகளை ஏற்றுக் கொள்ள எப்போதும் இந்த அரசும், நானும் தயாராக இருக்கிறோம்.

அவதூறு செய்யும் நோக்கத்தோடு, உள்நோக்கத்தோடு செய்யப்படும் விமர்சனங்களுக்கு நான் பதில் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை, அதற்கு பதில் சொல்லி நேரத்தைச் செலவிடுவதை விட, நல்லது செய்வதற்கே எனக்கு இப்போது நேரம் கிடைக்கவில்லை, அதனால் கெட்டதைப் பற்றி நாம் கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லை.

இன்னும் சொல்ல வேண்டுமென்றால், சென்னையில் சட்டமன்றம், அதற்குப் பிறகு காஞ்சிபுரம் மாவட்டத்தில் கிராம சபை,

அதைத் தொடர்ந்து தஞ்சையில் நடைபெற்ற எதிர்பாராத விபத்து, அங்கே நான் சென்று வந்தேன். மறைந்த 11 பேரின் உடல்களுக்கு அஞ்சலி செலுத்தி விட்டு, காயம்பட்டவர்களுக்கு ஆறுதல் சொல்லி நிவாரணத் தொகையை வழங்கிவிட்டு வந்தேன், மீண்டும் சட்டமன்றம், அதை முடித்துவிட்டு இப்போது தேனி வந்திருக்கிறேன்.

இது முடித்துவிட்டு, மாலையில் திண்டுக்கல் செல்கிறேன். இதேபோன்று, அங்கு ஒரு நிகழ்ச்சி நடக்கவிருக்கிறது, அந்த நிகழ்ச்சியில் பங்கேற்கிறேன். அதை முடித்துவிட்டு, இரவோடு இரவாக, நான் சென்னைக்கு செல்ல வேண்டும். அதற்குப் பிறகு மே தின நாள். அதற்குப் பிறகு அன்று மாலையே நெடுஞ்சாலைத் துறையின் சார்பில் 75ஆம் ஆண்டு நிறைவு விழா நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

‘கடிகாரம் ஓடும் முன் ஓடு’ என்று பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் ஒரு பாடல் எழுதினார். அப்படித்தான் நான் உழைத்துக் கொண்டிருக்கிறேன்.

நம்முடைய தலைவர் கலைஞரிடத்தில் ஒரு பத்திரிகை நிருபர் ஒரு கேள்வியைக் கேட்டார், உங்கள் மகன் ஸ்டாலினைப் பற்றி ஒரு வரியில் சொல்லுங்கள் என்று, கலைஞர் சொன்னார், ‘ஸ்டாலின் என்றால் உழைப்பு, உழைப்பு, உழைப்பு’ என்று சொன்னார். அந்த உழைப்பைக் கற்றுக் கொடுத்தவரே அவர்தான். அப்படி உழைப்பதற்கு எனக்கு ஊக்கம் கொடுத்தவரே அவர்தான்.

எனக்கு மட்டும் இல்ல, தமிழ்நாட்டின் இலட்சக்கணக்கான இளைஞர்களுக்கும் அதுதான் வழிகாட்டியாக அவர் விளங்கிக் கொண்டிருக்கிறார். ஆக, அவருடைய பிறந்தநாளான ஜுன் 3ஆம் தேதியை அரசு விழாவாக நடத்திட வேண்டும் என்று சட்டமன்றத்தில் நான் அறிவித்து, எல்லா கட்சித் தலைவர்களும் அதை வரவேற்று, அதை நிறைவேற்றித் தந்திருக்கிறார்கள். ஆக, ஒரு தந்தையினுடைய

பிறந்தநாளை அரசு விழாவாக நடத்த வேண்டும் என்று அறிவிக்கிற வாய்ப்பு அவருக்கு மகனாக இருக்கக்கூடிய இந்த ஸ்டாலினுக்கு கிடைத்திருப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

பி.ஜே.பி. கூட ஆதரித்தது, எல்லா கட்சிகளும் ஆதரித்தார்கள். ஆதரிக்காத கட்சி யார் என்று இந்த மேடையில் நான் சொல்ல விரும்பவில்லை. இந்த மேடையை நான் அரசியலாக்க விரும்பவில்லை.

கருணாநிதி என்று நம் தலைவர் முத்தமிழறிஞரின் பெயரைக் குறிப்பிட்டு, தலைவர் பெயரை கருணாநிதி என்று பெயரை சொன்ன காரணத்தால், அவருடன் காரிலே வந்த ஒருவரை இறக்கிவிட்டவர் யார் என்றால், முன்னாள் முதலமைச்சர் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்கள். எனக்கே தலைவர் ‘கலைஞர் தான், அவர் பெயரை நீ சொல்லலாமா என்று இறக்கி விட்டவர் அவர்கள் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்கள். அப்படிப்பட்ட நாகரீகத்தை இன்றைக்கு இருக்கக்கூடியவர்களிடத்தில் எதிர்பார்ப்பது என்னுடைய தவறுதான். ஆனால் இதன் மூலமாக மக்களிடம் தாங்கள் யார் என்பதை அவர்கள் காட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

நல்லதோர் நாட்டை மட்டுமல்ல, நல்லதோர் நாகரீகமான அரசியலையும் உருவாக்க நாம் நினைக்கிறோம். அதற்குத் தேவை தொலைநோக்குப் பார்வையும் நல்லெண்ணமும் தான்.

எனது தொலைநோக்குப் பார்வை என்பது அனைத்திலும் சிறந்த தமிழ்நாடு என்ற பெயரை நாம் பெற வேண்டும். அனைத்திலும் சிறந்த தமிழ்நாட்டை உருவாக்குவதற்கு என்னை நான் ஒப்படைத்து செயல்படுவேன். அப்படி ஒப்படைத்து செயல்படுகிறபோது என்னோடு அமைச்சர் பெருமக்கள் மட்டுமல்ல, எம்.எல்.ஏ.க்கள், எம்.பி.க்கள் மட்டுமல்ல, உள்ளாட்சிப் பிரதிநிதிகள் மட்டுமல்ல, மக்கள்

பிரதிநிதிகள் மட்டுமல்ல, தமிழ்நாட்டு மக்களும் எனக்கு ஒத்துழைப்பு தரவேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொண்டு,

இந்த சிறப்பான நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உங்களையெல்லாம் சந்திக்கக்கூடிய வாய்ப்பைப் பெற்றமைக்கு மீண்டும் என்னுடைய இதயப்பூர்வமான நன்றியைத் தெரிவித்து, இங்கு நலத்திட்ட உதவிகளைப் பெறுவதற்காக வந்திருக்கும் பயனாளி பெருமக்களுக்கும் என் வாழ்த்துக்களை, பாராட்டுக்களை தெரிவித்து, இந்த சிறப்பான நிகழ்ச்சியை எழுச்சியோடு நடத்தி தந்திருக்கக்கூடிய மாவட்டத்தின் நிருவாகத்திற்கும், அரசு அலுவலர்களுக்கும், அதிகாரிகளுக்கும் குறிப்பாக இந்த மாவட்டத்தின் பொறுப்பு அமைச்சராக பொறுப்பேற்றுக் கொண்டிருக்கக்கூடிய நம்முடைய கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களுக்கும்,இங்குவந்திருக்கக்கூடிய அமைச்சர் அவர்களுக்கும், நம்முடைய சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் மீண்டும் ஒரு முறை என்னுடைய இதயப்பூர்வமான நன்றியைத் தெரிவித்து, என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி, வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள்,*
தேனி மாவட்டம், ஊஞ்சாம்பட்டி கிராமத்தில் நடைபெற்ற அரசு விழாவில் முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து, புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி, ஆற்றிய உரை – ***30.04.2022***

திண்டுக்கல் மாவட்டத்தில் ரூ.930 கோடி மதிப்பீட்டில் மாபெரும் கூட்டுக் குடிநீர் திட்டம்

திண்டுக்கல் மாவட்டத்தில் அரசு நலத்திட்ட உதவிகள் திறப்பு விழா நிகழ்ச்சிகள், திட்டப்பணிகளை தொடங்கி வைக்கக்கூடிய அடிக்கல் நாட்டு விழாக்கள் போன்ற பல்வேறு நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்து எழுச்சியோடு நடைபெற்றுக் கொண்டிருக்கக்கூடிய இந்த விழாவிற்கு முன்னிலை பொறுப்பு ஏற்று இதை உணர்ச்சியோடு, உத்வேகத்தோடு நடத்திக் கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு.ஐ.பெரியசாமி அவர்களே!

நிகழ்ச்சியிலே பங்கேற்று சிறப்பித்துக் கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்களே!

மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் அவர்களே!

இந்த மாவட்டத்தோடு ஒன்றி நம்முடைய கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு.ஐ.பெரியசாமி அவர்களுக்கு உற்ற துணையாக இருந்து அது கட்சிப் பணியாக இருந்தாலும், ஆட்சிப்பணியாக

இருந்தாலும் இரண்டிலும் முத்திரை பதித்துக் கொண்டு இருக்கக்கூடிய மாண்புமிகு உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு.அர.சக்கரபாணி அவர்களே!

திண்டுக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.வேலுசாமி அவர்களே!

கரூர் நாடாளுமன்ற உறுப்பினர் அன்பிற்கினிய சகோதரி செல்வி ஜோதிமணி அவர்களே!

திண்டுக்கல் மாநகராட்சியின் மேயர் திருமதி இளமதி ஜோதி பிரகாஷ் அவர்களே!

சட்டப்பேரவை உறுப்பினர் திரு.காந்திராஜன் அவர்களே!

பழனி சட்டமன்ற உறுப்பினர் மாவட்டச் செயலாளர் அருமைத் தம்பி செந்தில்குமார் அவர்களே!

தமிழ்நாடு பாடநூல் கழகத்தின் தலைவர் திண்டுக்கல் லியோனி அவர்களே!

துவக்கத்தில் அனைவரையும் வரவேற்று மகிழ்ந்திருக்கக்கூடிய மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் எஸ்.விசாகன், இ.ஆ.ப., அவர்களே!

நிறைவாக நன்றியுரை ஆற்றவிருக்கக்கூடிய வருவாய் அலுவலர் திருமதி லதா அவர்களே!

வருகை தந்திருக்கக்கூடிய சட்டமன்ற, நாடாளுமன்ற முன்னாள், இந்நாள் உறுப்பினர்களே!

உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளே!

அரசு அதிகாரிகளே! அரசு அலுவலர்களே!

அரசினுடைய நலத்திட்ட உதவிகளை பெறுவதற்காக வருகை தந்திருக்கக்கூடிய பயனாளிப் பெருமக்களே!

பத்திரிகை மற்றும் ஊடகத் துறையைச் சார்ந்திருக்கக்கூடிய நண்பர்களே!

அருமை பெரியோர்களே!

அன்பிற்கினிய தாய்மார்களே!

என் உயிரோடு கலந்திருக்கக்கூடிய தலைவர் கலைஞர் அவர்களின் உயிரினும் உயிரான அன்பு உடன்பிறப்புக்களே!

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

தென்னவன் சிறுமலை என்று சிலப்பதிகாரக் காப்பியத்தில் இளங்கோவடிகளால் போற்றப்பட்டதுதான் இந்தத் திண்டுக்கல். விடுதலைப் போராட்ட வரலாற்றின் பக்கங்களில் சிறப்பிடம் கொண்ட மண்தான் இந்தத் திண்டுக்கல் மண். இத்தகைய பெருமைக்குரிய இந்த மாவட்டத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கக்கூடிய இந்த அரசு விழாவில் கலந்து கொண்டு உங்களை எல்லாம் சந்திப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். நம்முடைய மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் அவர்களும் அதேபோல இந்த மாவட்டத்திற்குட்பட்டு இருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும், உள்ளாட்சிப் பிரதிநிதிகளும் ஒருங்கிணைந்து இதை மிகப் பிரம்மாண்டமாக ஏற்பாடு செய்து, இது ஒரு வெற்றி விழாவாக, வெற்றி விழா மாநாடு போல் இதை நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

நம்முடைய ஐ.பெரியசாமி அவர்களைப் பற்றி சொல்ல வேண்டுமென்றால், வானமே வாழ்த்தக்கூடிய மழை கொட்டிய நேரத்தில், மண்டல மாநாட்டைப் பற்றி தலைவர் கலைஞர் அவர்கள் எழுதும்போது, அவர் குறிப்பிட்டுச் சொன்னார். திண்டுக்கல் தி.மு.க.–வினுடைய இலட்சிய வைரக்கல் என்று குறிப்பிட்டார். அந்த திண்டுக்கல்லில் திமுகவுக்கு ஒரு வைரக்கல் அல்ல, ஓராயிரம் வைரக்கற்கள் உண்டு. அத்தகைய வைரக்கற்களில் முதன்மையான

வைரங்கள்தான் நம்முடைய ஐ.பெரியசாமி அவர்களும், இங்கு இருக்கக்கூடிய சக்கரபாணி அவர்களும். கழகத்திற்கு என்று சொன்னாலும் அல்லது ஆட்சிப் பொறுப்பிற்கு வந்து மக்கள் பணி ஆற்றக்கூடிய அந்த நிலை இருந்தாலும், அந்த இரண்டையும் ஒன்றாகக் கருதி அதிலே தங்களை ஒப்படைத்துக் கொண்டு, அர்ப்பணித்துக் கொண்டு பணியாற்றக்கூடியவர்கள் இவர்கள்.

அதனால்தான் எந்தத் தேர்தலாக இருந்தாலும், அந்தத் தேர்தலில் நம்முடைய கழகம் வெற்றி வாகை சூடக்கூடிய ஒரு பகுதியாக, வெற்றி வாகை சூடக்கூடிய ஒரு மாவட்டமாக இந்த மாவட்டம் தொடர்ந்து விளங்கிக் கொண்டிருக்கிறது என்பதை நான் மட்டுமல்ல, அனைவரும் அறிந்திருக்கும் செய்தி தான்.

நம்முடைய சக்கரபாணி அவர்கள் பேசும்போது குறிப்பிட்டுச் சொன்னார். செந்தில் அவர்களும் அதை குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார். நான் இந்த மாவட்டத்திற்கு பல நேரங்களில் வந்தது உண்டு. கட்சிப் பொறுப்பில் இருக்கக்கூடிய நேரத்தில் இளைஞர் அணியின் செயலாளராக, கழகத்தின் துணைப் பொதுச் செயலாளராக, பொருளாளராக, செயல் தலைவராக இப்படி பல்வேறு பொறுப்புக்கள் ஏற்றுக் கொண்டிருக்கக்கூடிய நேரத்தில், இந்த திண்டுக்கல் மாவட்டத்திற்கு நான் வந்ததுண்டு. அதேபோல், மக்கள் பணியாற்றக்கூடிய மேயராக இருந்தபோதும் வந்திருக்கிறேன், உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்த நிலையிலும் வந்திருக்கிறேன், துணை முதலமைச்சராக இருந்த அந்த சூழ்நிலையிலும் வந்திருக்கிறேன். இப்போது முதலமைச்சராக பொறுப்பேற்றிருக்கக்கூடிய இந்த நிலையிலும் உங்களைத் தேடி, நாடி வந்திருக்கிறேன். அதையெல்லாம் எடுத்துச் சொன்னார்கள்.

என்னைப் பொறுத்தவரையில் நான் பணிவோடு தெரிவித்துக் கொள்ள விரும்புவது, இப்படிப்பட்ட பொறுப்புக்களை ஏற்று வருகிற நேரத்தில் அடைகிற பெருமைகளை விட, எந்த சூழ்நிலையிலும்,

எப்படிப்பட்ட நிலையிலும் உங்களில் ஒருவனாக இருந்து என்னுடைய கடமையை ஆற்றிட வேண்டும் என்று விரும்பிய நிலையிலே தான் நான் பெருமைப்படுவது உண்டு.

- ✶ மாங்கரையாற்றின் குறுக்கே எட்டுப் பாலங்கள்,
- ✶ கொடகனாற்றின் குறுக்கே நான்கு பாலங்கள்,
- ✶ திண்டுக்கல் – நத்தம் இரயில்வே மேம்பாலம்,
- ✶ திண்டுக்கல் முதல் பழனி வரை பாதயாத்திரை செல்லும் பக்தர்கள் நடப்பதற்கென்று தனியாக 5 கோடி ரூபாய் செலவில் நடைபாதை,
- ✶ கன்னிவாடி நாயோடையின் குறுக்கே அணை,
- ✶ யானைவிழுந்தான் ஓடையின் குறுக்கே அணை,
- ✶ நங்காஞ்சியாற்றின் குறுக்கே அணை,
- ✶ நல்லதங்காள் ஆற்றின் குறுக்கே அணை,
- ✶ சிறுமலையாற்றின் குறுக்கே அணை,
- ✶ சுக்காம்பட்டி, ரெட்டியார் சத்திரம், பஞ்சம்பட்டி, அய்யம்பாளையத்தில் உயர் அழுத்த மின் நிலையங்கள்,
- ✶ ரெட்டியார்சத்திரம் அருகே அண்ணா பல்கலைக்கழகப் பொறியியல் கல்லூரி,
- ✶ கன்னிவாடியில் மகளிர் விடுதி மற்றும் மாணவர் விடுதிகள்,
- ✶ மருதாநதி அணையில் கிணறு அமைத்துக் கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலம் குழாய் பதித்து 20 ஆண்டு கால குடிநீர்ப் பிரச்சினை கழக ஆட்சியில் நிவர்த்தி செய்யப்பட்டது,
- ✶ அய்யங்கோட்டை பொதுமக்கள் மருதாநதி ஆற்றினைக் கடந்து செல்ல கழக ஆட்சியில் மேம்பாலம் கட்டப்பட்டிருக்கிறது,

- ✶ திண்டுக்கல் வட்டத்தை இரண்டாகப் பிரித்து ஆத்தூர் தாலுகாவை புதிதாக ஏற்படுத்தி அதற்கான அலுவலகக் கட்டடங்களைக் கட்டிக் கொடுத்தது கழக ஆட்சிக் காலத்தில்தான்.

– இப்படி பல்வேறு சாதனைகளை இந்தத் திண்டுக்கல் மாவட்டத்திற்குச் செய்து கொடுத்த அரசுதான் தலைவர் கலைஞர் அவர்கள் தலைமையிலான ஆட்சி.

ஐந்து முறை தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக பொறுப்பேற்றிருந்த நேரத்தில் இந்தப் பணிகளெல்லாம் நடந்திருக்கின்றன.

இப்போது ஆறாவது முறையாக முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் தலைமையில் நடைபெறக்கூடிய இந்த ஆட்சியில் ஏராளமான பணிகள், அதற்கெல்லாம் நன்றி தெரிவித்து நம்முடைய அமைச்சர் பெருமக்கள் எடுத்துச் சொன்னார்கள்.

- ✶ ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையில் திண்டுக்கல் மாவட்டத்திற்கு இந்த ஓராண்டில் மூன்றடுக்கு ஊராட்சிகளுக்கு மாநில நிதிக்குழு மானியம் மூலம் 121 கோடி ரூபாய் விடுவிக்கப்பட்டிருக்கிறது.
- ✶ குடிநீர்த் தேவையினை நிவர்த்தி செய்யக்கூடிய வகையில் ரூ.27 கோடி மதிப்பீட்டில் 709 பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- ✶ சுகாதாரப் பணிகளுக்காக ரூ.27 கோடி மதிப்பீட்டில் 822 பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- ✶ அடிப்படை வசதிக்கான பணிகளுக்காக ரூ.37 கோடி மதிப்பீட்டில் 1,128 பணிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

- ✶ கிராமப்புறங்களில் குடியிருக்க வீடு இல்லாமல் தவிக்கிற ஏழை மக்களுக்குத் தேவையான வீடுகள் கட்டும் திட்டத்தின்கீ,ழ் ரூ.107 கோடி மதிப்பீட்டில் 3,907 வீடுகள் கட்ட அனுமதி வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

- ✶ இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாமில் வசிக்கக்கூடிய இலங்கைத் தமிழர்களுக்காக புதிதாக 8 உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய 321 வீடுகள் கட்டும் பணி ரூ.17.16 கோடி மதிப்பீட்டில் முடிவடையக்கூடிய தருவாயில் இருக்கிறது, அதற்காக தேதியை நம்முடைய அமைச்சர்களும், ஆட்சித் தலைவர் அவர்களும் இன்றைக்கு நினைவுபடுத்தி எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

- ✶ தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், 69 கி.மீ நீளத்திற்கு 43 தார்ச்சாலைகள் அமைக்கும் பணிகள் ரூ.21.51 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- ✶ மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் அடிப்படையில் 10,463 பணிகள் ரூ.411 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. வரும் நிதியாண்டிற்கு ரூ.108 கோடி உத்தேச ஒதுக்கீடு வரப்பெற்றிருக்கிறது.

- ✶ தூய்மை இந்தியா இயக்கம் சார்பில் 6,165 தனிநபர் இல்லக் கழிப்பறைகள் கட்டும் பணி ரூ.7.40 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

- ✶ தூய்மை இந்தியா இயக்கம் திட்டத்தின்கீழ், 102 சமுதாய சுகாதார வளாகம் கட்டும் பணிகள் ரூ.5.35 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டிருக்கிறது.

- ✶ சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின்கீழ், ரூ.21 கோடி மதிப்பீட்டில் பல்வேறு வகையான வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

* ✶ நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் மேம்பாட்டு திட்டத்தின்கீழ், ரூ.2 கோடி மதிப்பீட்டில் பல்வேறு வகையான வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
* ✶ நமக்கு நாமே திட்டத்தின்கீழ், 18 பணிகள் ரூ.4.28 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
* ✶ தேசிய கிராம சுயாட்சி திட்டத்தின்கீழ், 2 பணிகள் 47 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.
* ✶ ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், மலைகிராமங்களில் 243 பணிகள் ரூ.1.85 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
* ✶ அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ், 102 கிராம ஊராட்சியில் உள்ள நூலகங்கள் பழுது நீக்கம் செய்வதற்கு ரூ.1.76 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
* ✶ அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ், முதற்கட்டமாக 70 கிராம ஊராட்சிகள் தேர்வு செய்யப்பட்டு ரூ.44 கோடி மதிப்பீட்டில் திட்டம் தயார்படுத்தப்பட்டு வருகிறது.
* ✶ திண்டுக்கல் மாவட்டத்தில் மொத்தமுள்ள 9 பெரியார் நினைவு சமத்துவபுரங்களில் முதற்கட்டமாக 6 சமத்துவபுரங்களில் 695 மறுசீரமைப்புப் பணிகள் ரூ.6 கோடியில் நடைபெற்று வருகிறது.
* ✶ நபார்டு திட்டத்தின்கீழ், 10 பாலங்கள் கட்டும் பணிகள் ரூ.15.42 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஆக மொத்தம் திண்டுக்கல் மாவட்டத்தில் ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் 2021–2022ஆம் ஆண்டில் ரூ.1,080 கோடி மதிப்பீட்டில் 27,265 பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன

என்ற மகிழ்ச்சியான செய்தியை உங்களுக்கு தெரிவிப்பதில் நான் பெருமைப்படுகிறேன்.

இதுவரை, நான் சொன்னவை அனைத்தும் திண்டுக்கல் மாவட்டத்தில் நடந்து வரும் இந்த ஓராண்டுப் பணிகள் மட்டும்தான். இப்படி தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் பல்லாயிரக்கணக்கான பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இதன் தொடர்ச்சியாக, இந்த ஆண்டுக்கான சில திட்டங்களை இந்த விழாவின் மூலமாக நான் அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

- 930 கோடி ரூபாய் மதிப்பில் மாபெரும் கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஒன்றைத் தீட்டி இருக்கிறோம்.

- ஒட்டன்சத்திரம் நகராட்சி நெய்க்காரப்பட்டி மற்றும் கீரனூர் பேரூராட்சி ஆகியவற்றிற்கும், ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள 217 குடியிருப்புகளுக்கும், பழனி ஒன்றியத்தில் உள்ள 116 குடியிருப்புகளுக்கும், தொப்பம்பட்டி ஒன்றியத்தில் உள்ள 173 குடியிருப்புகளுக்கும், ஆழியாறு நதியை ஆதாரமாகக் கொண்டு இத்திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது. இதனுடைய மொத்த மதிப்பு 930 கோடி ரூபாய்.

- இதேபோல் மேலும் ஒரு குடிநீர்த் திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது. காவிரி நீரை ஆதாரமாகக் கொண்டு, திண்டுக்கல் மாநகராட்சி, ஆறு பேரூராட்சிகள் மற்றும் கரூர் மாவட்டத்தில் இருக்கிற 815 குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்கக் கூடிய திட்டம், காவிரி கூட்டுக்குடிநீர்த் திட்டம் கடந்த 15 ஆண்டுகளாக செயல்பட்டு வருகிறது. இதன் மூலமாக, தற்போது 21 எம்.எல்.டி. குடிநீர் மட்டுமே அளிக்க முடிகிறது. இத்திட்டத்தின் கீழ், கூடுதலாக 23 எம்.எல்.டி குடிநீரைத் திண்டுக்கல் மாவட்டத்திற்கு அளிக்கும் வகையில் 95.5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இத்திட்டம் மேம்படுத்தப்படும்

என்பதை இந்த நிகழ்ச்சியின் வாயிலாக நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

நான் அறிவிப்பு செய்கிறேன் என்றால், அந்த அறிவிப்பைச் செயல்வடிவம் கொடுத்து நிச்சயமாக நிறைவேற்றிக் காட்டுவேன் என்பது உங்கள் அனைவருக்கும் நன்றாகத் தெரியும். அதில் யாருக்கும் சந்தேகம் வேண்டாம். ஏதோ அறிவித்துவிட்டு சென்று விடுவேன் என்று நினைக்காதீர்கள். அறிவித்த திட்டம் எந்த நிலையில் இருக்கிறது என்பதைப் பற்றி வாராவாரம் அது சம்பந்தப்பட்ட அமைச்சரிடத்தில், சம்பந்தப்பட்ட அதிகாரியிடத்தில், ஏன், இன்னும் சொல்ல வேண்டுமென்றால், கோட்டையில் என்னுடைய அறையிலேயே ஒரு போர்டு வைத்திருக்கிறேன். அதன் பெயர் Dash Board. அந்த Dash Board எதற்கு என்று கேட்டீர்கள் என்றால், என்னென்ன திட்டங்களை நாம் அறிவித்திருக்கிறோம், அந்தத் திட்டங்கள் எப்போது தொடங்கியிருக்கிறது, அது எந்தெந்த நிலையில் இருக்கிறது என்பது நான் கோட்டையிலே முதலமைச்சர் அறையில் உட்கார்ந்துகொண்டே பார்க்கக்கூடிய அளவிற்கு ஒரு வசதியை செய்து வைத்திருக்கிறேன். எனவே, யாரும் அதிலிருந்து தப்பி விட முடியாது, அதில் நான் உஷாராக இருப்பேன் என்பதை தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அதை தினந்தோறும் நான் கண்காணித்துக் கொண்டு இருப்பேன்.

எனவே, திண்டுக்கல் மாவட்டத்திற்கு அறிவிக்கப்பட்ட திட்டமாக இருந்தாலும், வேறு எந்த மாவட்டத்துக்கு அறிவிக்கப்பட்ட திட்டமாக இருந்தாலும், திட்டத்தை அறிவித்ததோடு நம் பணி முடிந்துவிட்டது என்று அமைதியாக இருந்துவிட மாட்டேன். திட்டத்தின் பயனை மக்கள் அடையக்கூடிய வகையில் அதை தொடர்ச்சியாக நான் கண்காணித்துக் கொண்டு இருப்பேன் என்பதை மீண்டும் மீண்டும் உறுதியோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஒரு கட்சியினுடைய ஆட்சி முடிந்து, இன்னொரு கட்சியினுடைய ஆட்சி வந்திருக்கிறது என்று இல்லாமல், ஒரு மிகப்

பெரிய மாற்றத்திற்கான அடித்தளத்தை நாங்கள், தமிழ்நாட்டில் அமைத்துக் கொண்டு வருகிறோம். சமூகத்தில் சமூகநீதியை உருவாக்குவதிலும், பொருளாதாரத்தில் எல்லார்க்கும் எல்லாம் என்பதைக் கிடைக்க வைப்பதிலும், மாணவர்கள், இளைஞர்கள் உயர்கல்வியை அடைவதிலும், தகுதிக்கு ஏற்ற வேலையைப் பெறுவதிலும், சமூகத்தின் அனைத்து தடைகளை எல்லாம் தாண்டி, பெண்களை முன்னேற்றப் பாதைக்கு கொண்டு செல்லக்கூடிய, தொழில் வளர்ச்சியானது இந்திய அளவில் மட்டுமில்லாமல் உலகத்தரத்துடன் போட்டி போடக் கூடியதாக, உலகத்தின் தலைசிறந்த நிறுவனங்களையும் ஈர்க்கத்தக்க வகையில் தமிழ்நாடு எழுச்சி பெறுவதும்தான் இந்த ஆட்சியின் நோக்கம்.

ஆட்சியினுடைய நோக்கம் என்று சொன்னால், இப்போது தொடர்ந்து நாம் சொல்லிக் கொண்டிருக்கிறோம், இந்த ஆட்சி திராவிட மாடல் ஆட்சியாக நடைபோடுகிறது என்பதை தொடர்ந்து சொல்லிக் கொண்டிருக்கிறோம். இன்னும் சொல்ல வேண்டுமென்று சொன்னால், இதுதான் நான் காண விரும்பும் கனவு தேசம். தமிழ்நாட்டைத் தலைநிமிர வைக்கத்தான் ஒவ்வொரு நாளும் நான் உழைத்துக் கொண்டிருக்கிறேன். தமிழ்நாட்டை வழிநடத்தி, தமிழ்நாட்டின் உயர்வுக்குக் காரணமான சமூகநீதி, மாநில சுயாட்சி, கூட்டாட்சித் தத்துவம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய அனைத்தும் இந்தியா முழுமைக்கும் பரவ வேண்டும் என்று நான் நினைக்கக்கூடியவன்.

இத்தகைய உன்னதமான சிந்தனையானது தனிப்பட்ட என்னால் அல்ல, தனிப்பட்ட ஸ்டாலினால் அல்ல, தனிப்பட்ட ஒரு முதலமைச்சரால் அல்ல, இதையெல்லாம் முழுமையாக நிறைவேற்ற வேண்டுமென்று சொன்னால், இதற்கு அமைச்சர் பெருமக்கள், நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், துறைகளைச் சார்ந்திருக்கக்கூடிய அதிகாரிகள் அனைவருக்கும், அதேபோல மாவட்டங்களை வழிநடத்திக் கொண்டிருக்கக்கூடிய

அதிகாரிகள் அனைவருக்கும், அந்தப் பொறுப்புணர்வு இருந்து, நீங்கள் கை கோர்க்க வேண்டும் என்று இந்த இலக்கை வைத்து நான் மட்டும் நினைத்தால் அதில் வெற்றி பெற்றுவிட முடியாது. இந்த இலக்கு என்பது அதிகாரத்தை கொண்டு செலுத்தக்கூடிய நூற்றுக்கணக்கான மனிதர்களுக்கும் வந்துவிடுமானால் தமிழ்நாட்டின் வளர்ச்சியை யாரும் தடுக்க முடியாது. அந்த இலக்கோடு அனைவரும் பணியாற்றிட வேண்டுமென்ற அந்த வேண்டுகோளை இந்த நேரத்தில் நான் எடுத்துவைக்க விரும்புகிறேன்.

மாநிலங்களின் அரசியல் உரிமைகளை, மாநிலங்களின் நிதி உரிமைகளை, மாநிலங்களின் சட்ட உரிமைகளைப் பறித்துவிடுவதன் மூலமாக மாநிலங்களை முடக்கிவிட சிலர் திட்டமிட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதாவது மாநிலங்களை முடக்குவதாக நினைத்து, மக்களை முடக்க நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். மக்களுக்குத் தேவையான அனைத்து அடிப்படை வசதிகளையும் செய்வதுதான் மாநிலங்களுடைய உரிமை. அதை மாநிலங்கள்தான் செய்தாக வேண்டும்.

மிகக் கடுமையான நிதி நெருக்கடி இருந்தாலும், இத்தனை திட்டங்களைத் தீட்டுகிறோம் என்றால், எல்லாம் யாருக்கு, உங்களுக்கு. எல்லாம் தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய மக்களுக்குத்தான். ஆக, மக்களுக்காக இருப்பவர்கள் நாங்கள். மக்களோடு இருப்பவர் நாங்கள். மக்களுக்காகவே வாழ்பவர்கள் நாங்கள். எனவே, நாங்கள் எல்லாம் மக்களுடைய தொண்டர்கள். உங்களால் முதலமைச்சராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நான் ஒரு தலைமைத் தொண்டனாக இருந்து, உங்கள் தேவைகள் அனைத்தையும் நிச்சயமாக, உறுதியாக செய்து தருவேன். ஐ.பெரியசாமி அவர்கள் குறிப்பிட்டதைப் போல 70 சதவீதம், 80 சதவீதம் பணிகள் தேர்தல் நேரத்தில் அளித்திருக்கக்கூடிய உறுதிமொழிகள் எல்லாம் நிறைவேற்றியிருக்கிறோம். மீதம் இருக்கக்கூடிய அந்த உறுதிமொழிகளையும் மிக விரைவிலே,

படிப்படியாக, நிதிநிலை சூழ்நிலைக்கேற்ப அனைத்தையும் நிறைவேற்றித் தருவோம் என்ற அந்த உறுதியை இந்த நேரத்தில் எடுத்துச் சொல்லி, எல்லார்க்கும் எல்லாம் என்ற திராவிடக் கொள்கை தமிழ்நாட்டில் நிலைக்க நித்தமும் பாடுபடுவோம்! பாடுபடுவோம்! என்று சொல்லி,

இந்த எழுச்சிமிகுந்த நிகழ்ச்சியை மிகுந்த சிறப்போடு ஏற்பாடு செய்து தந்திருக்கக்கூடிய மாவட்டத்தினுடைய ஆட்சித் தலைவர், அவருக்கு துணை நின்று பணியாற்றியிருக்கக்கூடிய அரசு அதிகாரிகள், அலுவலர்கள் அத்தனை பேருக்கும், அதையெல்லாம் முறையாகக் கண்காணித்து இதை மிகச் சிறப்பாக நடத்திட வேண்டும் என்று திட்டமிட்டு அந்தப் பணியில் வெற்றி கண்டிருக்கக்கூடிய நம்முடைய மதிப்பிற்குரிய மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களுக்கும், அதேபோல, உணவுத் துறையின் அமைச்சர் திரு.சக்கரபாணி அவர்களுக்கும், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், மக்கள் பிரதிநிதிகள் அத்தனை பேருக்கும் மீண்டும் ஒருமுறை என்னுடைய இதயப்பூர்வமான நன்றியைத் தெரிவித்து என் உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி, வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள்,*
திண்டுக்கல் மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாவில் முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து, புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி ஆற்றிய உரை ***– 30.04.2022***

சென்னை, கிழக்குக் கடற்கரை சாலை "முத்தமிழறிஞர் கலைஞர் கருணாநிதி சாலை" என பெயர் மாற்றம்

நெடுஞ்சாலைத் துறையின் 75ஆவது ஆண்டு விழாவில் பவள விழா நினைவுத் தூணை திறந்து வைத்து முதலமைச்சர் சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் அடிக்கல் நாட்டு விழாவாக நடைபெற்றுக் கொண்டிருக்கக்கூடிய இந்த சிறப்பான நிகழ்ச்சிக்கு தலைமைப் பொறுப்பேற்றுள்ள மாண்புமிகு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு அவர்களே!

முன்னிலை ஏற்றுள்ள மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்களே!

நிகழ்ச்சியில் பங்கேற்று இருக்கக்கூடிய மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு.நாசர் அவர்களே!

துணை மேயர் மகேஷ் அவர்களே!

வருகை தந்துள்ள நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே!

தலைமைச் செயலாளர் முனைவர் வெ.இறையன்பு, இ.ஆ.ப., அவர்களே !

துவக்கத்தில் அனைவரையும் வரவேற்று அமர்ந்திருக்கக்கூடிய நெடுஞ்சாலைகள் துறை முதன்மைச் செயலாளர் திரு.தீரஜ் குமார், இ.ஆ.ப., அவர்களே!

தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்ட இயக்குநர் திரு.பி.கணேசன், இ.ஆ.ப., அவர்களே!

நெடுஞ்சாலைத் துறையின் முதன்மை இயக்குநர், தலைமைப் பொறியாளர்கள், அரசு உயர் அலுவலர்கள், பங்கேற்று பெருமை சேர்த்துக் கொண்டிருக்கக்கூடிய மக்கள் பிரதிநிதிகள், பத்திரிகை, ஊடகத் துறையைச் சார்ந்திருக்கக்கூடிய நண்பர்கள், அனைவருக்கும் என்னுடைய வணக்கத்தை, நன்றியை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு அரசினுடைய நெடுஞ்சாலைத் துறையின் பவளவிழா நிகழ்ச்சி என்பது அல்லது இந்த விழா என்பது விழாவாக மட்டும் நடத்தி முடித்து விடாமல் பல்வேறு திட்டங்களைத் தொடங்கி வைக்கக்கூடிய, அந்தத் திட்டங்களின் தொடக்க விழாவாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட சிறப்பான இந்த நிகழ்ச்சியில் நானும் கலந்து கொள்ளக்கூடிய வாய்ப்பைப் பெற்றமைக்கு மகிழ்ச்சி அடைகிறேன், பெருமைப்படுகிறேன். இதனை மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்து இருக்கக்கூடிய இந்தத் துறையினுடைய பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு அமைச்சர் திரு.வேலு அவர்களை நான் மனதார, உளமார பாராட்டுகிறேன்.

“நான் என்ன நினைப்பேன் என்று நான் சொல்லாமலேயே என் கண் ஜாடையைப் புரிந்து கொண்டு செயலாற்றுவதில் எ.வ.வேலு முன்னிலையில் இருக்கிறார்” என்று தலைவர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர். ‘எதிலும் வல்லவர் வேலு, அவருடைய Initial பார்த்தால் தெரியும், எ.வ.வேலு, எதிலும் “எ” வல்லவர் “வ” எ.வ.வேலு

என்று நான் பல நேரங்களில் குறிப்பிட்டதுண்டு. அதை இந்த நிகழ்ச்சியிலும் வழிமொழிய நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அந்த வகையில் நெடுஞ்சாலைத் துறையை மிகச் சிறப்பாகப் பேணிப் பாதுகாத்து, அதை வழிநடத்தி இன்றைக்கு பவள விழாவை பயனுள்ள விழாவாக இவர் நடத்திக் கொண்டு இருக்கிறார்.

- ✶ கன்னியாகுமரியில் அய்யன் திருவள்ளுவர் சிலைக்கும், விவேகானந்தர் நினைவுப் பாறைக்கும் நடுவில் கண்ணாடி இழை பாலம் அமைத்தல்;
- ✶ மதுரை – கோரிப்பாளையம் சந்திப்பில் மேம்பாலம் கட்டுதல்;
- ✶ சென்னை அடையாறு, மத்திய கைலாஷ் சாலைச் சந்திப்பில் மேம்பாலம் கட்டுதல்;

ஆகிய திட்டங்களுக்கு இன்று அடிக்கல் நாட்டப்பட்டிருக்கிறது. இவைகள் எல்லாம் இரண்டு ஆண்டுகளில் மக்களுடைய பயன்பாட்டிற்கு வரப் போகிறது. அந்த வகையில் இந்த பவளவிழா என்பது மக்களுக்கு பயனளிக்கக் கூடிய விழாவாக அமைந்திருக்கிறது.

மக்களுடைய அன்றாட வாழ்க்கையில் தினந்தோறும் பயனளிக்கக் கூடிய துறையாக இருப்பது இந்த நெடுஞ்சாலைத் துறை. வீட்டை விட்டு ஒருவர் வெளியே வாசலுக்கு வந்த உடனேயே இந்தத் துறையின் பயன்பாட்டைப் பெற்றுவிடுகிறார்கள். அந்த அளவுக்கு ஒவ்வொரு மனிதரின் வாழ்க்கையோடும் தொடர்புடையது இந்த நெடுஞ்சாலைத் துறை. அதனால் சரியான, அழகான, தரமான சாலைகளை அமைத்து விட்டாலே போதும்! அனைத்து மக்களிடமும் நல்லபெயரை முழுமையாக நாம் வாங்கிவிட முடியும்.

ரோடு சரியில்லை என்றால், வாகனத்தில் சென்று கொண்டு இருக்கக்கூடியவர்கள் முதலில் திட்டுவது அரசாங்கத்தைத்தான். அதே நேரத்தில், தரமானதாக இருந்தால், பரவாயில்லையே, ‘‘பளிங்கு

மாதிரி ரோடு இருக்கே'' என்று பாராட்டக்கூடிய அந்த செய்தியும் மக்கள் மூலமாக நமக்குக் கிடைக்கும். எனவே, அரசாங்கத்திற்கு நற்பெயரை பெற்றுத்தர வேண்டும் என்று சொன்னால், அதேபோல ஒரு அவப்பெயரைப் பெற்றுத்தர வேண்டும் என்று சொன்னால், அதற்கு நெடுஞ்சாலைத் துறைதான் காரணமாக அமைந்திட முடியும். இந்தத் துறைக்கு அமைச்சராக பொறுப்பேற்று இருக்கக்கூடியவர் அவருக்குத் துணை நின்று பணியாற்றிக் கொண்டிருக்கக்கூடிய அரசு அதிகாரிகள், அலுவலர்கள் மிகச் சிறப்பாக இந்தப் பணியை மேற்கொண்டிருக்கிறார்கள் என்பதை அறிந்து நான் உள்ளபடியே பெருமைப்படுகிறேன், மகிழ்ச்சியடைகிறேன்.

இன்று நெடுஞ்சாலைத் துறைக்கு பவளவிழாவைக் கொண்டாடிக் கொண்டு இருக்கிறோம்.

- ✶ இங்கு குறிப்பிட்டுச் சொன்னார்கள், தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை 1946ஆம் ஆண்டுதோற்றுவிக்கப்பட்டு 75 ஆண்டுகள் நிறைவடைந்திருக்கிறது. தமிழ்நாடு உட்கட்டமைப்பில் இந்தளவுக்கு வளர்ச்சி பெற்றுள்ளது என்றால், அதற்கு முழுமுதற் காரணம் இந்த நெடுஞ்சாலைத் துறைதான்.
- ✶ 1954ஆம் ஆண்டு நெடுஞ்சாலைத்துறை ஆராய்ச்சி நிலையத்தை உருவாக்கி, இந்தியாவிலேயே மாநில அளவிலான முதல் நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் என்ற பெருமையைப் பெற்றிருக்கிறது. இதுதான் இந்தியாவுக்கே முன்மாதிரியான ஆராய்ச்சி நிலையம். இந்த ஆராய்ச்சி நிலையத்தை உலகத் தரம் வாய்ந்ததாக விரைவில் மாற்ற வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.
- ✶ நெடுஞ்சாலைத் துறைக்காக தனி அமைச்சகம் 1998ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. அதை ஏற்படுத்தியவர் நம்மையெல்லாம் ஆளாக்கிய முத்தமிழறிஞர் தலைவர்

கலைஞர் அவர்கள்தான். எந்தத் துறையாக இருந்தாலும் அந்தத் துறையை மேன்மைப்படுத்தியவராக தலைவர் கலைஞர் அவர்கள்தான் அந்த முயற்சியிலே வெற்றி கண்டிருப்பார்.

- ✶ சென்னையில் இன்று மிகப் பிரம்மாண்டமாகக் காணப்படும் அண்ணா மேம்பாலம், அதை அமைத்தவர் நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள்தான்.

1969ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் அவர்கள், முதலமைச்சராகப் பொறுப்பேற்றபின் நெடுஞ்சாலைத் துறையால் திட்டமிடப்பட்டு, வடிவமைத்து கட்டப்பட்ட மிகப்பெரிய பாலம் அண்ணா மேம்பாலம். 5 சாலைகள் சந்திக்கக்கூடிய அந்தப் பகுதியில் கடுமையான போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுக் கொண்டிருந்தது ஒரு காலத்தில். அந்த நெரிசலை நீக்கி, அப்பகுதியில் சீரான சாலை போக்குவரத்தை உறுதிப்படுத்தும் வகையில் கட்டப்பட்டு, நாட்டின் சிறந்த மேம்பாலங்களில் ஒன்றாக இன்று வரை மக்களுக்கு அது பயன்பட்டுக் கொண்டிருக்கிறது. இது ஆசியாவின் முதல் மற்றும் இந்தியாவின் மூன்றாவது Grade separator மேம்பாலம்.

அந்த நாளில் 66 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட பாலம் அந்தப் பாலம். 01.07.1973 அன்று முதலமைச்சர் கலைஞர் அவர்களால் அது திறந்து வைக்கப்பட்டது. அண்ணா மேம்பாலத்தை முன்னோடியாகக் கொண்டு தொடர்ந்து தமிழ்நாட்டில் ஏராளமான மேம்பாலங்கள் கட்டப்பட்டிருக்கிறது.

- ✶ 1970ஆம் ஆண்டு கோவையில் உயர்த்தப்பட்ட ரோட்டரி வகை இரயில்வே மேம்பாலம் கட்டப்பட்டது. இந்த மேம்பாலம் இந்தியாவில் ரோட்டரி வகையில் கட்டப்பட்ட முதல் மேம்பாலம் என்ற சிறப்பைப் பெற்றது.

- ✶ திருநெல்வேலி ஈரடுக்கு இரயில்வே மேம்பாலம் 1972ஆம் ஆண்டு கட்டப்பட்டது. ‘திருவள்ளுவர் மேம்பாலம்’ என்று

பெயரிடப்பட்ட இந்த மேம்பாலம் தான் இந்தியாவின் முதல் ஈரடுக்கு மேம்பாலம் என்கிற அந்தப் பெருமையும் பெற்றிருக்கிறது.

- ✶ கிராமங்கள் நகரங்களோடு இணைக்கப்பட வேண்டும் என்பதை உணர்ந்த முதலமைச்சராக இருந்த தலைவர் கலைஞர் அவர்கள் 1972ஆம் ஆண்டிலேயே கிராமப்புறங்களில் சாலைகளை உருவாக்கிடத் தனியாக ஓர் அலகினை நெடுஞ்சாலைத்துறையில் தோற்றுவித்து கிராமப்புறச் சாலைகள் உருவாக்கத்திற்கும், மேம்பாட்டிற்கும் அவர் வித்திட்டார்.

- ✶ 1972ஆம் ஆண்டு 1,500–க்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட கிராமங்களுக்கு இணைப்புச் சாலைகள் அமைக்கும் திட்டம் திராவிட முன்னேற்றக் கழக அரசினால் அறிமுகம் செய்யப்பட்டது.

- ✶ 1990ஆம் ஆண்டு 1,000–க்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட அனைத்துக் கிராமங்களுக்கும் இந்தத் திட்டம் விரிவாக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் 1996ஆம் ஆண்டுக்கு பிறகு, 517 கிராமங்கள் இணைப்புச் சாலை வசதிகளைப் பெற்றன. இணைப்புச் சாலை வசதி இல்லாத 1,000 பேருக்கு மேல் மக்கள் தொகை கொண்ட கிராமங்களே தமிழகத்தில் இல்லை என்ற சாதனையும் படைக்கப்பட்டது.

- ✶ 1997ஆம் ஆண்டு மத்திய சுடு கலவை இயந்திரம், அதிர்வு உருளை, பேவர் இயந்திரங்களை அறிமுகப்படுத்தி சாலைகளை உறுதிப்படுத்தும் பணிகளை நெடுஞ்சாலைத் துறை செயல்படுத்தியதும் கழக ஆட்சியில்தான் என்பதும் குறிப்பிடத்தக்கது.

- ✶ 1997ஆம் ஆண்டு தமிழகத்தில் ஒரே வீச்சில் ரூ.302 கோடியில் 106 பாலங்களை கட்ட நடவடிக்கை

மேற்கொள்ளப்பட்டது. இப்பாலங்கள் அனைத்தும் இரண்டு ஆண்டுகளில் முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டது என்பது இப்பொழுது நினைத்தாலும் நம்ப முடியாத சாதனையாகத்தான் நினைத்துக் கொண்டிருக்கிறோம்.

- 1997ஆம் ஆண்டுக்குப் பின் சாலைப் பணியாளர்கள் நீக்கப்பட்டக் காரணத்தால், நெடுஞ்சாலைகளை சரிவரப் பராமரிப்பதில் அதிக சிரமங்கள் ஏற்பட்டது. இந்தக் குறையைப் போக்கிட 1998–1999இல் 10,000 சாலைப் பணியாளர்கள் நியமிக்கப்பட்டார்கள்.

இத்தகைய சாதனைச் சரித்திரத்தின் தொடர்ச்சியாக பல்வேறு பணிகளை இந்தத் துறை செயல்படுத்தி வருவதை நான் மனமார பாராட்டுகிறேன்.

ரோடு போடுவதில் மிகப்பெரிய சிக்கலாக இருப்பது என்னவென்று கேட்டால் அதற்கான நிலங்களைக் கையகப்படுத்துவது தான். நிலம் கையகப்படுத்துவதில் சிக்கல் என்று சொல்லிவிட்டு நேரத்தை நாம் கடத்திக் கொண்டிருக்க முடியாது. நில எடுப்புப் பணிகள் தாமதமாக நடைபெற்று வருகிற காரணத்தால் தான் பணிகள் மக்களின் பயன்பாட்டிற்கு வர தாமதமாகிறது என்பதை அதிகாரிகள் அதை கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள். அதை ஏற்றுக்கொண்டு, அந்த சுணக்கம் ஏற்படக் கூடாது என்பதற்காகதான் 5 சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலர் தலைமையிலான குழுக்கள் கொண்ட 184 பணியிடங்கள் உருவாக்கப்பட்டிருக்கிறது. இனிமேல், நிலம் கையகப்படுத்துவதில் தாமதம் ஏற்படாது என்று நான் நம்புகிறேன்.

ஆட்சி அமைந்த பிறகு எனக்குக் கிடைத்த தகவல்களில் வருத்தம் அடைய வைத்த ஒரு புள்ளிவிபரம் உண்டு. அது என்னவென்று கேட்டால், சாலை விபத்துகள். அந்த சாலை

விபத்துக்கள் அதிகம் நடக்கக்கூடிய மாநிலமாக நம் தமிழ்நாடு இருக்கிறது என்பதுதான் அது. அதனால் தான் அதைத் தவிர்க்க, அதை தடுக்க பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.

சாலை விபத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு, முதல் 48 மணி நேரத்திற்கான அவசர மருத்துவ சிகிச்சைச் செலவை தமிழ்நாடு அரசே மேற்கொள்ளும் வகையில் ''இன்னுயிர் காப்போம்–நம்மைக் காக்கும் 48'' என்ற திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம்.

இந்தத் திட்டத்தில் விபத்தில் சிக்கியவர்களுக்கு முதல் 48 மணி நேர அவசர சிகிச்சைச் செலவை அரசே ஏற்கும். அதேபோல் அந்த விபத்தில் பாதிக்கப்பட்டவரை மருத்துவமனையில் அனுமதிக்கும் நபருக்கு 5,000 ரூபாய் ஊக்கத் தொகை வழங்கப்படும். விபத்தில் சிக்கியவர்கள் வேறு நாடு, வேறு மாநிலத்தைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் இந்தத் திட்டத்தில் அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்படும்.

இந்தத் திட்டத்தில் சாலைப் பாதுகாப்பை மேம்படுத்த தமிழ்நாடு முழுவதும் அதிக அளவு விபத்துகள் நடைபெற்றுள்ளதாக கண்டறியப்பட்ட 556 இடங்களில் குறுகியகால நடவடிக்கைகளான வேகத்தடைகள் அமைத்திருக்கிறோம். சூரிய ஒளி பிரதிபலிப்பான்கள், தற்காலிகத் தடுப்பான்கள், சாலைக் குறியீடுகள் மற்றும் எச்சரிக்கைக் குறியீடுகள் போன்றவை அமைக்கப்பட்டு, கடந்த டிசம்பர் மற்றும் ஜனவரி மாதங்களில் விபத்துக்கள் பெருமளவில் குறைக்கப்பட்டிருக்கிறது.

ஒன்றிய சாலைப் போக்குவரத்துறை அமைச்சர் மாண்புமிகு நிதின் கட்கரி அவர்கள் அண்மையில் மாநிலங்களவையில் பேசியிருக்கிறார். தமிழ்நாட்டில் சாலைப் பாதுகாப்புத் திட்டம் மிகவும் சிறப்பாகச் செயல்பட்ட காரணத்தால் விபத்துகள் குறைந்திருக்கிறது என்று மாநிலங்களவையில் பதிவு செய்திருக்கிறார். இதே மாதிரி

ஒன்றிய அரசும், தமிழ்நாட்டைப் போல நாடு முழுவதும் தேசிய நெடுஞ்சாலைகளில் சாலைப் பாதுகாப்பை மேம்படுத்த வேண்டும் என்று தெரிவித்திருக்கிறார்.

இந்தப் பாராட்டு, நெடுஞ்சாலைத்துறையின் பங்களிப்பினால் ஏற்பட்டது என்பதை இந்த நேரத்தில் நான் பதிவு செய்து, அவர்களுக்கெல்லாம் என்னுடைய வாழ்த்துக்களை சொல்ல விரும்புகிறேன். துறைப் பொறியாளர்கள், அலுவலர்கள் அனைவருக்கும் என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னையில் நெடுஞ்சாலைத் துறையினரால் பல்வேறு வெள்ளத் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. இந்த முன்னேற்பாடு நடவடிக்கைகளை மூன்று முறை நானே நேரடியாக சென்று பார்வையிட்டு ஆலோசனைகளை தெரிவித்திருக்கிறேன்.

கடந்த ஆண்டு பெய்த பெருமழையால், நெடுஞ்சாலைத் துறையினர், சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு உடனடியாக வெள்ளச் சீரமைப்புப் பணிகளை மேற்கொண்டு தங்குதடையற்ற போக்குவரத்தினை உறுதி செய்தார்கள். போர்க்கால அடிப்படையில் செயல்பட்ட நெடுஞ்சாலைத் துறைக்கு என்னுடைய பாராட்டுதல்களை இந்த நேரத்தில் மனமுவந்து நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இதன் தொடர்ச்சியாக, சில திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருக்கிறது.

இதில் மிக மிக முக்கியமானது முதலமைச்சரின் சாலை மேம்பாட்டுத் திட்டம்.

இந்த திட்டத்தில், மாவட்டத் தலைமை இடங்கள் மற்றும் தாலுகா தலைமை இடங்களை இணைக்கும் 2,200 கிலோ மீட்டர் நீளமுள்ள மாநில நெடுஞ்சாலைகளில் போக்குவரத்துச் செறிவின் அடிப்படையில், அடுத்த பத்து ஆண்டுகளில் நான்குவழிச் சாலைகளாகவும்; 6700 கிலோமீட்டர் நீள சாலைகள் இரண்டு வழித்தடச் சாலைகளாகவும் மேம்படுத்தப்பட இருக்கிறது.

நெடுஞ்சாலைத்துறை சாலைகளில் உள்ள 1,281 தரைப்பாலங்களை ரூ.2,401 கோடி மதிப்பீட்டில் உயர்மட்டப் பாலங்களாகக் கட்டுவதற்கு திட்டமிட்டிருக்கிறோம்.

முதற்கட்டமாக 648 தரைப்பாலங்களை உயர்மட்டப் பாலங்களாக ரூ.610 கோடி மதிப்பில் கட்ட எடுத்துக்கொள்ளப்பட இருக்கிறது.

இரண்டாம் கட்டமாக, இந்த ஆண்டில், 435 தரைப்பாலங்களை உயர்மட்டப் பாலங்களாக ரூ.1,105 கோடி மதிப்பில் கட்ட எடுத்துக்கொள்ளப்பட இருக்கிறது.

2026–க்குள் தரைப்பாலங்களே இல்லாத மாநிலமாக இந்த தமிழ்நாட்டை உருவாக்கப் போகிறோம்.

அறிவிப்புக்களுக்கெல்லாம் முத்தாய்ப்பாக இந்த நெடுஞ்சாலை துறையை உருவாக்கிய நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களை மனதில் வைத்துக்கொண்டு இப்போது அறிவிப்பை நான் சொல்லப் போகிறேன்.

சென்னையிலிருந்து மாமல்லபுரம் வரை இருக்கக்கூடிய கிழக்கு கடற்கரை சாலை, ஈசிஆர் ரோடு, அந்த ரோடு இனிமேல் “முத்தமிழறிஞர் கலைஞர் கருணாநிதி சாலை” என்று பெயர் சூட்டப்படும் என்பதை மகிழ்ச்சியோடு இந்த பவள விழா நிகழ்ச்சியில் நான் அறிவிக்க பெருமைப்படுகிறேன்.

எனவே, போக்குவரத்து நெரிசலைக் குறைக்க மாநில நெடுஞ்சாலைகளில் உள்ள 59 நகராட்சிகளுக்குப் புறவழிச்சாலை அமைக்கப்படும். பல்வேறு செயல்பாட்டு

நிலைகளில் உள்ள புறவழிச்சாலைப் பணிகளை விரைந்து முடிக்க உத்தரவிட்டிருக்கிறேன்.

நெடுஞ்சாலைத் துறை மானியக் கோரிக்கையின்போது 18 முக்கியமான அறிவிப்புகளை மாண்புமிகு அமைச்சர் அமைச்சர் திரு.வேலு அவர்கள் அறிவித்திருக்கிறார். இவை எல்லாவற்றையும் திட்டமிட்டவாறு உருவாக்கினால், தமிழ்நாட்டின் உள்கட்டமைப்பு மிகமிகச் சிறப்பாக அமையும் என்பதில் எந்தவித ஐயமும் இல்லை.

என்னை பொருத்தவரை, தமிழ்நாட்டில் அனைத்து மக்களும் மிக மனநிறைவான வாழ்க்கையை அமைத்துத்தர தரமான உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கித் தர வேண்டும். அந்த அடிப்படையில் முழுமையாக நல்ல சாலைகள் அமைத்துத் தரவேண்டும். தரமான சாலைகள் அமைத்துள்ளோம் என்றால், தரமான ஆட்சி அமைந்துள்ளது என்று பொருள்.

அத்தகைய பெயரையும், புகழையும் அரசுக்குப் பெற்றுத் தர வேண்டும் என்று இந்தத் துறையில் இருக்கக்கூடிய அத்தனை பேரையும் மீண்டும் ஒரு முறை நான் கேட்டு, விபத்து இல்லாத தமிழகம் அமைக்க சாலைகளும் சீராக அமைய வேண்டும். என்னைப் பொறுத்தவரை, பொருளாதார வளர்ச்சி, தொழில் வளர்ச்சி, சுற்றுலா, வணிகம், வாழ்க்கை மேம்பாடு, மன மகிழ்ச்சி ஆகிய அனைத்தையும் உள்ளடக்கிய சாலைகள் தான், தரம். அந்த தரமான சாலைகள் அமைத்துத் தரமான வாழ்க்கையைத் தமிழ்நாட்டு மக்களுக்கு வழங்குவோம் என்று இந்த விழாவில் உங்களோடு சேர்ந்து நானும் உறுதி எடுத்து விடைபெறுகிறேன்.

நன்றி, வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்,*
நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் நெடுஞ்சாலைத்துறை பவள விழா நினைவுத் தூணை திறந்து வைத்து புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி, தொடங்கி வைத்து ஆற்றிய உரை – 01.05.2022

வணிகர்கள் அரசின் திட்டங்களை மக்களுக்கு எடுத்துச் செல்லும் தூதுவர்களாக செயல்பட வேண்டும்

தீரர்களின் கோட்டமாம் திருச்சியில் நடைபெறக் கூடிய தமிழக வணிகர் விடியல் மாநாட்டின் தலைவர் என்னுடைய அன்பிற்கினிய அருமை சகோதரர் விக்கிரமராஜா அவர்களே!

இந்த மாநாட்டில் பங்கேற்றுப் பெருமை சேர்த்துக் கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்களே!

மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் திரு.அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்களே!

மாண்புமிகு வணிகவரி மற்றும் பத்திரப்பதிவுத் துறை அமைச்சர் திரு.மூர்த்தி அவர்களே!

மாநாட்டிற்கு வருகை தந்திருக்கக்கூடிய சட்டமன்ற, நாடாளுமன்ற முன்னாள், இந்நாள் உறுப்பினர்களே!

வணிகர் நலப் பேரவையின் மாநிலப் பொதுச்செயலாளர் திரு.கோவிந்தராஜுலு அவர்களே!

மாநிலப் பொருளாளர் திரு. சதக்கத்துல்லா அவர்களே!

இந்த மாநாட்டுக் குழுவைச் சார்ந்திருக்கக்கூடிய அன்பர்களே! நண்பர்களே!

வணிகர் சங்கத்தினுடைய நிருவாகிகளே!

பல்லாயிரக்கணக்கில் இங்கே திரண்டிருக்கும் என்னுடைய அன்பிற்கினிய வணிகர் பெருமக்களே!

ஊடகத்துறை, பத்திரிகை நண்பர்கள் உள்ளிட்ட பாசமிகு நண்பர்களே!

என் உயிரோடு கலந்திருக்கக்கூடிய நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களுடைய உயிரினும் உயிரான அன்பு உடன்பிறப்புக்களே!

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

பொதுவாக, சட்டமன்றம் நடைபெறுகிற நேரத்தில், ஆட்சிப்பொறுப்பில் இருக்கக்கூடிய அந்த நிலையில் இருந்தாலும், எதிர்க்கட்சி என்ற நிலையில் நான் இருந்தாலும், இதுபோன்ற நிகழ்ச்சிகளுக்கு நான் செல்வதை தவிர்த்து விடுவது உண்டு. இருந்தாலும் இன்று காலையில் நான் சட்டமன்றத்திற்குச் சென்று, கேள்விநேர நிகழ்ச்சிகளில் பங்கேற்று அதற்குப் பிறகு விமானத்தைப் பிடித்து இந்த மாநாட்டிற்கு நான் வந்து சேர்ந்திருக்கிறேன். அதற்கு முழுக் காரணம் உங்கள் தலைவர் விக்கிரமராஜா அவர்கள்தான்.

அவர் எதைச் சொன்னாலும், நான் ஏதும் மறுத்துப் பேசாமல் அப்படியே ஏற்றுக்கொள்ளக்கூடிய வழக்கத்தை, பழக்கத்தை, இன்றல்ல, நேற்றல்ல, பல ஆண்டுகாலமாக நான் கடைப்பிடித்து வந்து கொண்டிருக்கக்கூடியவன்.

அவர் பேசினார், பேசி முடித்தபிறகு, என் அருகே உட்கார்ந்து எப்படி பேசினேன் என்று கேட்டார், உணர்ச்சியோடு பேசினீர்கள் என்று நான் சொன்னேன். அவர் உடனே, ‘‘உணர்ச்சியல்ல, உண்மையைப் பேசினேன்’’ என்று சொன்னார். அதுதான் விக்கிரமராஜா. அவர் அன்பிற்கு நான் எப்போதும், இப்போது அல்ல, எப்போதும் கட்டுப்பட்டவன்தான். எனவே, அவருடைய அன்பான அந்தக் கட்டளையை ஏற்றுக்கொண்டு இங்கே எழுச்சியோடு, ஏற்றத்தோடு நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்த மாநாட்டில் பங்கேற்கக்கூடிய வாய்ப்பை நான் பெற்றிருப்பது உள்ளபடியே, அந்த வாய்ப்பை எனக்கு உருவாக்கித் தந்திருக்கக்கூடிய நம்முடைய வணிகர் சங்கத்தின் தலைவராக இருக்கக்கூடிய விக்கிரமராஜா அவர்களுக்கும், அவரோடு இணைந்திருக்கக்கூடிய உங்களுக்கும் எனது இதயப்பூர்வமான நன்றியை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அவர் சொன்னார், ஆட்சிப் பொறுப்பேற்றபோது, என்னுடைய தலைமையில் இந்த ஆட்சியை நாங்கள் ஏற்றுக்கொண்ட நேரத்தில், கொரோனா என்ற கொடூரமான தொற்றுநோய்; நாடு முழுவதும் மக்களை அச்சுறுத்தக்கூடிய கொரோனா என்ற தொற்றுநோய் தமிழ்நாட்டிலும் ஏற்பட்ட நேரத்தில், அரசாங்கத்தின் சார்பில் நிதி திரட்டி மக்களுக்கு நன்மை செய்வதற்காக முதலமைச்சர் நிவாரண நிதி வசூலிக்கப்பட்டது. அப்படி வசூலிக்கப்பட்ட நேரத்தில், நம்முடைய விக்கிரமராஜா அவர்கள், வணிகர்களையெல்லாம் ஒன்றுதிரட்டி நிதி உதவி வழங்கினார். கொரோனா காலத்தில் ஊரடங்கு, கடைகளைத் திறக்க முடியாத ஒரு கொடுமை, அந்தச் சூழல் ஏற்பட்டது. அப்படிப்பட்ட நெருக்கடியான நேரத்திலும் முதலமைச்சர் நிவாரண நிதிக்காக,

நிதி உதவி வழங்கியிருக்கக்கூடிய வணிகர்களே உங்களை நான் மனதாரப் பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன். மாநாட்டிற்கு நான் உடனடியாக ஒப்புக்கொண்டு வந்ததற்குப் பல காரணங்கள் உண்டு, அதில் முக்கியமான காரணம், உங்களுக்கு நன்றி சொல்ல நான் இந்த மாநாட்டைப் பயன்படுத்திக் கொள்ள வந்திருக்கிறேன். இந்த தாராள மனப்பான்மை உங்களுக்குத் தொடர வேண்டும். அடுத்தது திரட்ட ஆரம்பித்தாகி விட்டது. இலங்கையில் இருக்கக்கூடிய தமிழர்களுக்கு மட்டுமல்ல, இலங்கையில் இருக்கக்கூடிய அனைத்துத் தரப்பு மக்களுக்கும் நம்முடைய தமிழகத்தின் சார்பில், தமிழக அரசின் சார்பில் உதவி செய்வதற்காக சட்டமன்றத்தில் தீர்மானம் போட்டு அந்தப் பணியை நாம் தொடங்கியிருக்கிறோம்.

கொரோனா காலத்தில், அது முதன்முதலாக கொரோனா என்ற அந்தக் கொடிய நோய் நாட்டிலே பரவிய நேரத்தில், தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க்கட்சி, ஆளும் கட்சி அல்ல. ஆனால், ஆளும்கட்சி என்னென்ன பணிகளெல்லாம் செய்ய வேண்டுமோ அந்தப் பணிகளை, எதிர்க்கட்சியாக இருந்தபோதே நாங்கள் செய்தோம் என்பது நாட்டுக்கு நன்றாகத் தெரியும்.

‘‘ஒன்றிணைவோம் வா’’ என்ற தலைப்பில் மக்களுக்கு வேண்டிய வசதிகளை நம்மால் ஆன அத்துணை உதவிகளை நாம் செய்திருக்கிறோம் என்பது வரலாறு. திருச்சி என்றால் தலைவர் கலைஞர் அவர்கள் அடிக்கடி சொல்வார், தீரர்கள் கோட்டம் என்று. திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் பல்வேறு மாநாடுகள் திருச்சியில் நடைபெற்றிருக்கிறது. திருச்சி என்றால் தி.மு.க.–விற்கு ஒரு திருப்புமுனை. அதுமாதிரி இன்றைக்கு திருச்சியில் வணிகர்கள் நடத்தக்கூடிய இந்த மாநாடு, ஒரு திருப்புமுனையை உருவாக்கக்கூடிய வகையில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இந்த மாநாடு நடக்கக்கூடிய தேதி மே, 5ஆம் தேதி. இந்தத் தேதியின் பின்னால் வணிகர்களான உங்களுடைய வரலாறு

இருக்கிறது. 1982ஆம் ஆண்டு அன்றைய அதிமுக அரசு, நுழைவு வரி என்ற புதிய சட்டத்தைக் கொண்டு வந்து அதை உடனடியாக நடைமுறைப்படுத்தியது. அதை எதிர்த்து முதன் முதலில் சேலம் மாவட்டத்தில் மிகப்பெரிய அளவில், வணிகர்களை ஒன்று திரட்டி, மேற்குறிப்பிட்ட வரிகளை நடைமுறைப்படுத்தக் கூடாது என்று ஒரு மிகப் பெரிய போராட்டம் சேலம் மாவட்டத்திலே நடந்திருக்கிறது.

அதைத் தொடர்ந்து, மாநிலம் முழுவதும் ஆங்காங்கே வணிகர்கள் போராட்டங்களை நடத்திக் காட்டினார்கள். அதன்பிறகு, சென்னையில் ஒரு மிகப்பெரிய எதிர்ப்பு ஊர்வலமும் நடத்திக் காட்டப்பட்டிருக்கிறது. சென்னையில் இருக்கக்கூடிய சாந்தோம் பகுதியில் கண்டன மாநாடும் நடத்தப்பட்டது. அப்போது போராட்டத்தில் காவல்துறையினரால் வணிகர்கள் கடுமையாகத் தாக்கப்பட்டார்கள்.

அப்போதைய அ.தி.மு.க. அரசை வன்மையாகக் கண்டிக்கும் வகையில், தமிழக வணிகர்கள், போராட்டங்கள், ரயில் மறியல் போன்ற பல போராட்டங்களில் ஈடுபட்டார்கள். அப்போது அவர்கள் கைது செய்யப்பட்டு, சிறையிலும் அடைக்கப்பட்டார்கள். அப்படி கைது செய்யப்பட்ட நாள்தான் மே 5ஆம் தேதி. அப்படி சிறை வைக்கப்பட்ட நாளை வணிகர் தினமாக இன்றைக்கு நீங்கள் கொண்டாடிக் கொண்டிருக்கிறீர்கள். இப்போது நடப்பது தி.மு.க. ஆட்சி, மன்னிக்க வேண்டும் நமது ஆட்சி. எனவே, இந்த மே, 5 ஒரு மகிழ்ச்சிக்குரிய நாளாக இந்த மாநாட்டின் மூலமாக நாம் வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியானது வணிகர்களது நலனைப் பேணும் ஆட்சியாகத்தான் எப்போதுமே இருந்திருக்கிறது; அப்படித்தான் இருக்கும். வணிகவரித் துறை என்று ஒரு துறையே செயல்பட்டு வருகிறது. வணிகவரித் துறையானது அரசுக்கு வருகிற வருவாயில் நான்கில் மூன்று பங்கை ஈட்டித்தரும் ஒரு

முக்கியத் துறையாக விளங்கிக் கொண்டிருக்கிறது. வணிகர்களின் நலன் காக்கப்பட்டால்தான் அரசுக்கு வரும் வருவாயின் நலனும் காக்கப்படும் என்ற அந்த செய்தியை நான் உளப்பூர்வமாக உணர்ந்திருக்கிறேன்.

ஆட்சிப் பொறுப்பேற்று அனைத்து காலக்கட்டத்திலும் வணிகர்களின் நலனைக் காப்பதில் மிகவும் அக்கறை கொண்ட அரசாகச் செயல்பட்டு வந்துள்ளோம் என்பதை நீங்கள் யாரும் மறக்க மாட்டீர்கள். கடந்த தேர்தல் அறிக்கையில், வணிகர்களின் நலனைக் காப்பதற்காக வணிகர் நல வாரியம் சீரமைக்கப்பட்டு அதனால் வழங்கப்படும் நலத்திட்ட உதவிகள் அதிகப்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அந்த அடிப்படையில், ஆட்சிப் பொறுப்பேற்ற உடனேயே புதிய நலத் திட்ட உதவிகள் வணிகர் நல வாரியத்தால் வணிகப் பெருமக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இன்னும் சொல்ல வேண்டுமென்றால்,

- ✶ தமிழ்நாடு வணிகர் நல வாரியத்தை 1989ஆம் ஆண்டு உருவாக்கியவரே நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள்தான். கழக ஆட்சியில்தான் அந்த வாரியமே உருவாக்கப்பட்டது.
- ✶ முந்தைய திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் 2007ஆம் ஆண்டு வணிகர் நல வாரியத்தின் கீழ், ஏற்கனவே வழங்கப்பட்டு வந்த குடும்பநல உதவித் தொகை ரூ.20,000/–லிருந்து ரூ.50,000/– ஆக உயர்த்தப்பட்டது.
- ✶ இதய அறுவை சிகிச்சை மற்றும் புற்றுநோய் அறுவை சிகிச்சைகளுக்கு வழங்கப்பட்டு வந்த ரூ.25,000/– உதவித் தொகை ரூ.50,000/– ஆக உயர்த்தப்பட்டது.

- ✶ பெண் உறுப்பினர்களுக்கு கருப்பை அறுவை சிகிச்சைக்கு ரூ.20,000/– உதவித் தொகை வழங்கப்படுகிறது.

- ✶ உறுப்பினர்களின் வாரிசுகளின் கல்லூரிப் படிப்பிற்கு முன்னர் வழங்கப்பட்டு வந்த வருடாந்திர கல்வி உதவித் தொகை ரூ.3,000/– இருந்து ரூ.5,000/– ஆக உயர்த்தப்பட்டது.

- ✶ நலிவுற்ற வியாபாரிகளுக்கு கூட்டுறவுத் தொழிற்கூடங்களில் தயார் செய்யப்படும் பெட்டிக் கடை அல்லது மூன்று சக்கர மிதிவண்டி வாங்க ரூ.10,000/– நிதி உதவி வழங்கப்படுகிறது.

- ✶ வணிகர் நல வாரியத்தில் இதுவரை பதிவு செய்துள்ள மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 84,101. இந்த வாரியத்தின் நலத் திட்டங்களின் வாயிலாக 31.03.2022 வரை ரூ.3 கோடி மதிப்பீட்டில் 8,875 உறுப்பினர்கள் பயனடைந்துள்ளனர்.

- ✶ இவ்வாரியத்தில் இணையவழி மூலமாகவே உறுப்பினராகப் பதிவு செய்து கொள்ளும் வசதி வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் மூர்த்தி அவர்களால் 16.06.2021 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.

- ✶ பேரிடர் காலங்களில் சிறு, குறு வணிகர்களுக்கு உதவி செய்யும் வகையில், சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தில் பதிவு பெற்று, விற்றுமுதல் அளவு ரூ.40 இலட்சத்துக்கு உட்பட்ட சிறு வணிகர்கள் மற்றும் இச்சட்டத்தின்கீழ் பதிவுபெறாத குறு வணிகர்களை இவ்வாரியத்தில் உறுப்பினர்களாகச் சேர்க்கவும், அதற்கான கட்டணத் தொகை ரூ.500/– செலுத்துவதிலிருந்து 15.07.2021 முதல் 14.10.2021 வரையிலான மூன்று மாத காலத்திற்கு விலக்களிக்கப்பட்டது. இச்சலுகையை 31.03.2022 வரை கால நீட்டிப்பு செய்து உத்தரவிட்டவன் நான்தான் என்பதைப் பெருமகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

- ✶ இந்தச் சிறப்பு முயற்சியின் பயனாக, **36,952** வணிகர்கள் புதிதாக தமிழ்நாடு வணிகர் நல வாரியத்தில் உறுப்பினர்களாக பதிவு செய்திருக்கிறார்கள்.

நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்யும் முன்பு வணிகர்களை அழைத்துப் பேசி அவர்களுடைய கருத்துக்களைக் கேட்க வேண்டும் என்ற நடைமுறையை முதன்முதலில் கொண்டு வந்தவர் யார் என்றால், நம்மை ஆளாக்கிய நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள்தான். அதைப் பின்பற்றித்தான் நிதிநிலை தாக்கல் செய்யும் முன்பு வணிகர்களின் கருத்தைக் கேட்டுத்தான், அதற்குப் பிறகு நிதிநிலை அறிக்கையைச் சட்டமன்றத்தில் தாக்கல் செய்த ஆட்சிதான் இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கக்கூடிய நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி. அந்த ஆட்சியினுடைய முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருக்கக்கூடிய நான் இன்றைக்கு உங்கள் முன்னால் நின்று கொண்டிருக்கிறேன், இந்த மாநாட்டில் நான் பெருமையோடு பங்கேற்க வந்திருக்கிறேன்.

- ✶ ஜிஎஸ்டி சட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர், தாங்கள் எதிர்கொள்ளும் சில சிரமங்கள் குறித்து வணிகர்கள் அப்போது எடுத்துரைத்தனர். உள்நாட்டு வணிகத்தில் உள்ள வரி சிரமங்கள் குறித்த வணிகர்களின் கருத்துக்கள் அவ்வப்போது பெறப்பட்டு ஜிஎஸ்டி மாமன்றத்திற்கு அவை அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றன.

- ✶ வணிகர்கள் ஜிஎஸ்டி சேவைகள் இணையவழிச் சேவைகள் ஆங்கிலத்தில் மட்டுமே இருப்பதால் தமிழிலும் அவை தரப்பட வேண்டும் என்று வணிகர்கள் பெருவாரியாக கோரிக்கை வைத்தார்கள்.

நம்முடைய கழக அரசு அக்கோரிக்கையை ஏற்று, ஜிஎஸ்டி சேவைகள் தமிழிலும் வழங்கப்படலாம் என்று இன்றைக்கு நாம் கடிதம் எழுதியிருக்கிறோம். விரைவில் ஜி.எஸ்.டி சேவைகள் தமிழிலும்

வழங்கப்படும் என்று நாம் எதிர்பார்த்துக் காத்திருக்கிறோம். இந்தக் கோரிக்கையைத் தொடர்ந்து நம்முடைய அரசு வலியுறுத்தும், வற்புறுத்தும்.

- ✶ தமிழ்நாடுமதிப்புக்கூட்டுவரிச்சட்டத்தின்கீழ்படிவம்தாக்கல் செய்வதற்கான காலக்கெடு நீட்டிக்கப்பட்டிருக்கிறது. இதன்படி 2020–2021ஆம் ஆண்டிற்கான இணையவழி மூலமாகத் தாக்கல் செய்வதற்கான காலக்கெடு 31.03.2022 வரை நீட்டித்து ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.
- ✶ நமது அரசு பொறுப்பேற்ற பிறகு, வரி கைவிடுதல் ஆய்வுக் குழு துவக்கப்பட்டு மூன்று கூட்டங்கள் நடத்தப்பட்டு, 66 வரி கைவிடுதல் முன்மொழிவுகள் பரிசீலிக்கப்பட்டு, 65 இனங்களில் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.
- ✶ வணிக வரி ஆணையரின் தலைமையில், மாநில அளவிலான வரி செலுத்துவோர் ஆலோசனைக் குழுவும் மற்றும் அந்தந்த மாவட்ட ஆட்சியர்கள் தலைமையில் மாவட்ட அளவிலான வரி செலுத்துவோர் ஆலோசனைக் குழுவும் மறு உருவாக்கம் செய்யப்பட்டிருக்கிறது.
- ✶ வணிகர் நட்புறவான சமாதானத் திட்டம் 2006, 2008, 2010 ஆகிய ஆண்டுகளில் நடைமுறைப்படுத்தப்பட்டதை நீங்கள் மறந்திருக்க மாட்டீர்கள்.

ஜி.எஸ்.டி வரிவிதிப்பு முறை அமலுக்கு வந்த பின்னர், இத்தகைய வரிச்சலுகைகளை மாநில அரசுகள் அளிக்க முடியாத நிலை ஏற்பட்டபோதிலும், இந்த வரிவிதிப்பு முறையில் வணிகர்கள் பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலை வரும்போதெல்லாம், ஜிஎஸ்டி மன்றத்தில் எதிர்த்தும், மாற்றியமைத்தும் வணிகர்களின் நலன் காப்பதில் நமது திராவிட முன்னேற்றக் கழக அரசு என்றைக்கும் முன்னணியில் இருந்து வருகின்றது என்ற அந்த செய்தியையும் உங்களிடத்தில் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, வணிகர்களுக்கு எந்தவிதத் தொல்லையும் இருக்கக்கூடாது. இந்த மாநாட்டிற்கு நான் வருவதற்கு முன்பு தமிழகக் காவல்துறையின் தலைவர் டி.ஜி.பி. அவர்களிடத்தில் ஆலோசனை செய்தேன். அதன் விளைவாக, சில வாரங்களுக்கு முன்பு நான் அறிமுகம் செய்து வைத்த 'காவல் உதவி செயலி'–இல் வணிகர்கள் உதவி என்ற ஒரு புதிய பகுதியும் அதில் சேர்க்கப்படும் என்ற நல்ல செய்தியை உங்களிடத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன். வணிகர்களுக்கு யாராவது தொல்லை கொடுக்க நேரிட்டால், செயலியில் சேர்க்கப்பட்டுள்ள இந்தப் புதிய பகுதியில் காவல்துறையின் உதவியை நீங்கள் கோரலாம். உடனடியாக ரோந்து வாகன காவலர்கள் விரைந்து வந்து தகராறு செய்பவர்கள் மீது தக்க நடவடிக்கையை நிச்சயமாக, உறுதியாக எடுப்பார்கள்.

வணிகர்களை பாதுகாக்கின்ற இந்த வசதி இன்னும் ஓரிரு வாரத்தில் துவங்கப் போகிறது என்ற செய்தியையும் நான் மகிழ்ச்சியோடு இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

என்னுடைய தலைமையில் இயங்கிக் கொண்டிருக்கக்கூடிய வணிகர் நல வாரியத்தில் செயல்பாடுகளை மேம்படுத்த உங்களிடையே இருந்து புதிய உறுப்பினர்களை நியமிக்க இருக்கிறேன். இதனால், வாரியத்துக்குப் புத்துயிர் ஊட்டப்பட்டு அனைத்து நலத்திட்டப் பணிகளும் முடுக்கி விடப்படும்.

வணிகர் நல வாரியத்தின் மூலமாக, இப்போது வழங்கப்பட்டு வரும் உறுப்பினர்களின் இறப்புக்கான குடும்பநல இழப்பீடு ஒரு இலட்சம் ரூபாயிலிருந்து மூன்று இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். தீ விபத்துகளில் பாதிக்கப்படும் வணிகர்களுக்கான உடனடி இழப்பீடு 5,000 ரூபாயிலிருந்து 20 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

உள்ளாட்சி அமைப்புகளின் கடைகள் மற்றும் வணிக இடங்களில் நிலவி வரும் வாடகை உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளைத்

தீர்ப்பதற்கான கொள்கை வழிமுறைகளை வகுக்க, நகராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தலைமையில் வழிகாட்டுக் குழு ஒன்று அமைக்கப்படும்.

தற்போது வணிக நிறுவனங்களுக்கு ஆண்டுதோறும் வணிக உரிமம் எடுக்கப்பட வேண்டும் என்ற அந்த நிலையை மாற்றி மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை அவர்கள் உரிமம் எடுப்பதற்கான திருத்தங்கள் கொண்டு வரப்படும்.

உடற்பயிற்சிக் கூடங்களுக்கு, இனிமேல் காவல்துறையின் உரிமம் தேவையில்லை.

பாலங்கள், மெட்ரோ இரயில் போன்ற பல்வேறு பணிகள் நடைபெறுகிற நேரத்தில், அதனால் பாதிக்கப்பட்டுக் கடைகளை இழக்கக்கூடிய வணிகர்களுக்கு, அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் மூலமாக வாடகைக் கடைகளை வழங்குவதில் நிச்சயமாக, உறுதியாக முன்னுரிமை வழங்கப்படும்.

இன்றைக்கு அமைந்திருக்கக்கூடிய இந்த அரசு என்பது, நான் நேற்றைக்குக்கூட சட்டமன்றத்தில் பேசுகிறபோது சொன்னேன், ஏதேதோ சொல்லி களங்கத்தை ஏற்படுத்த யார் யாரோ திட்டமிடுகிறார்கள், அது நிச்சயம் பலிக்காது. காரணம், இது பெரியார் ஆட்சி, அண்ணா ஆட்சி, கலைஞர் ஆட்சி, ஒரே வரியில் சொல்ல வேண்டுமென்றால், திராவிட மாடலில் நடைபெறக்கூடிய ஆட்சி. ‘எல்லார்க்கும் எல்லாம்’ என்ற இலக்கை நோக்கிய அரசாக சமூக வளர்ச்சி, கல்வி வளர்ச்சி, பொருளாதார வளர்ச்சி ஆகிய அனைத்திலும் ஒரே நேரத்தில் வளர்ச்சியை எட்ட நினைக்கக்கூடிய அரசு. இது வணிகர் பெருமக்களுடைய மாநாடு என்கிற காரணத்தால், பொருளாதார வளர்ச்சி குறித்து மட்டும் சிலவற்றை விரிவாக உங்களிடத்தில் நான் சொல்ல விரும்புகிறேன்.

பெரிய பெரிய நிறுவனங்கள் வளர்வதை மட்டுமே பொருளாதார வளர்ச்சியாக நாங்கள் நினைக்கவில்லை. சிறுகுறு மற்றும் நடுத்தர

நிறுவனங்களும் வளர வேண்டும், அதுதான் பொருளாதார வளர்ச்சி, அப்படித்தான் நாங்கள் கருதுகிறோம். மிகப்பெரிய தொழிலதிபர்கள் வளர்ந்தால் மட்டும் போதாது, உங்களைப் போன்ற சிறுவணிகர்களும் வளர வேண்டும் என்று நாங்கள் நினைக்கிறோம். அதுதான் உண்மையான வளர்ச்சியாக இருக்க முடியும், அதுதான் திராவிட மாடல் ஆட்சி.

பெரிய நிறுவனங்கள் தொடங்கி சிறு கடைகள் வரைக்கும் வளர்ந்தாக வேண்டும். வளர்ச்சியை நோக்கியதாக எல்லா தொழில்களும் மாற வேண்டும்.

அதனால் பெரும் தொழிலதிபர்கள் மாநாடு என்றாலும், சிறு வணிகர்கள் நடத்தும் மாநாடு என்றாலும் எனக்கு இரண்டும் ஒன்றுதான், நான் வேறுபடுத்திப் பார்ப்பதில்லை. பெரிய தொழில்கள் செழிக்கும்போது சிறுதொழில்களும் வளரும். சிறு தொழில்கள் காலப்போக்கில் பெரும் நிறுவனங்கள் ஆகும். எனவே ஒன்றுக்கொன்று எதிரானது அல்ல. ஒன்றின் வளர்ச்சியில் மற்றொன்றுக்கும் பங்கு உண்டு என்ற எண்ணத்தோடு வணிகர் பெருமக்கள் தங்கள் தொழிலில் முனைப்போடு ஈடுபட வேண்டும்.

தொழில் முதலீடுகளை வரவேற்கக்கூடிய அதே நேரத்தில் வணிகர்களின் நலன் நிச்சயமாக, உறுதியாக பாதுகாக்கப்படும். அந்த அளவுக்கு உற்பத்தி ஆற்றல் மிக்க மாநிலமாக தமிழகம் மாற வேண்டும் என்பதுதான் என்னுடைய ஆசை.

வணிகர்களாகிய நீங்கள் நாள்தோறும் பல்லாயிரக்கணக்கான மக்களோடு பழகக் கூடியவர்கள், நேரடித் தொடர்பில் இருக்கக் கூடியவர்கள். தமிழ்நாடு அரசின் நல்ல பல திட்டங்களை மக்களுக்கு எடுத்துச் சொல்லும் தூதுவர்களாக நீங்கள் செயல்பட வேண்டும். மக்களின் எண்ணங்களை, எதிர்பார்ப்புகளை அரசுக்கு நீங்கள் ஆலோசனைகளாகச் சொல்லலாம். அதைக் கேட்டுச் செயல்படுத்தித் தர நாங்கள் காத்திருக்கிறோம், தயாராக இருக்கிறோம். நல்ல

யோசனைகள் எந்தப் பக்கத்திலிருந்து வந்தாலும் அதை ஏற்றுக்கொள்ளக்கூடிய திறந்த மனத்தோடு இருக்கக்கூடியவன்தான் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் ஆகிய நான்.

ஆனால், அதே நேரத்தில் திட்டமிட்டுப் பரப்பக்கூடிய அவதூறுகளுக்குப் பதில் சொல்லி என்னுடைய நேரத்தை நான் வீணடிக்க விரும்பவில்லை. அவர்களுக்கெல்லாம் நான் சொல்லக்கூடிய ஒரே பதில், திரும்பத்திரும்பச் சொல்கிறேன், பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்ன 'வாழ்க வசவாளர்கள்' என்பதுதான்.

வணிகர் சங்கப் பேரவை சார்பில் எனக்கு அளிக்கப்பட்ட பாராட்டுக்கள் மகிழ்ச்சியைத் தந்திருக்கிறது. அதற்கு அனைவருக்கும் நான் முதலில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த எழுச்சி மிகுந்த மாநாட்டை ஏற்பாடு செய்து அதில் பங்கெடுப்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்த இந்த மாநாட்டின் தலைவர், உங்கள் அமைப்பினுடைய தலைவர் விக்கிரமராஜா அவர்களுக்கு மீண்டும் ஒரு முறை என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

தமிழ்நாடு முழுவதும் பல்வேறு ஊர்களில் இருந்து இங்கு வந்திருக்கிறீர்கள். கலைஞர் அவர்கள் மாநாட்டு நிகழ்ச்சிக்கு சென்றாலும், பொதுக்கூட்ட நிகழ்ச்சிக்கு சென்றாலும், எந்த நிகழ்ச்சியாக இருந்தாலும், அந்த நிகழ்ச்சியில் பேசி முடிக்கின்ற நேரத்தில் ஒரு வேண்டுகோளை வைப்பார், வந்திருக்கக்கூடியவர்கள் நீங்கள் பத்திரமாக ஊர் போய்ச் சேர வேண்டும். நான் அதைத்தான் இங்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். பாதுகாப்பாகச் செல்ல வேண்டும் என்று முதலமைச்சராக மட்டுமல்ல, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக மட்டுமல்ல, உங்களில் ஒருவனாக இருந்து உங்கள் அன்புச் சகோதரனாக நான் கேட்டுக்கொள்ள

கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய விக்கிரமராஜா அவர்கள் பல கோரிக்கைகளை அவரே சொன்னார், அவர் என்னை சந்திக்க வருகிறபோதெல்லாம் கோரிக்கையோடுதான் வருவார், அந்தக் கோரிக்கையோடு வருகிறபோதெல்லாம் பக்குவமாக அதை எடுத்துச் சொல்வார். அரசு அதிகாரிகளை அழைத்து உட்காரவைத்து அவர்களிடத்தில் பேசுகிறபோது, எப்படி சொன்னால் அதிகாரிகள் அதை ஏற்றுக் கொள்வார்கள் என்று அறிந்து, புரிந்து அதற்கேற்ற வகையில் சொல்லக்கூடிய ஆற்றலைப் பெற்றவர் நம்முடைய விக்கிரமராஜா அவர்கள்.

கொரோனா நேரத்தில் கடையை மூடவேண்டும், Lockdown செய்ய வேண்டும் என்று சொல்கிறபோதெல்லாம், ஒவ்வொரு முறையும் அந்தக் கூட்டம் நடத்துவதற்கு முன் அவரைத் தனியாக அழைத்து கேட்ட பின்புதான் எந்த முடிவையும் நாங்கள் எடுத்திருக்கிறோம், அதுதான் உண்மை. ஆக, அவர் சொல்கிறார் என்றால், அது உங்களுடைய குரல். எனவே, வணிகப் பெருமக்களாக இருக்கக்கூடிய உங்களுடைய குரலாக அது ஒலிக்கிறது என்பதை நாங்கள் அறிந்து, புரிந்து வைத்திருக்கக்கூடிய காரணத்தினால்தான், அதே அடிப்படையில் இன்றைக்கும் பல கோரிக்கைகள் இந்த மேடையில் வைத்திருக்கிறார், மனுவும் கொடுத்திருக்கிறார். சட்டமன்றம் நடந்து கொண்டிருக்கிறது, 10ஆம் தேதி முடிவடைய இருக்கிறது. நீங்கள் வைத்த கோரிக்கைகளை முடிந்த வரைக்கும் இப்போது எதை அறிவிக்க முடியுமோ அவற்றையெல்லாம் ஓரளவுக்குச் சொல்லியிருக்கிறேன். ஆனால், இன்னும் என் மனம் நிறைவடையவில்லை.

என் மனம் எப்போது நிறைவடையும் என்றால், அத்தனைக் கோரிக்கைகளையும் நாம் நிறைவேற்றிக் கொடுத்திருக்கிறோம் என்று சொல்கிறபோதுதான் என் மனம் நிறைவடையும், அதில்

எந்த மாற்றமும் கிடையாது. ஏதோ பேச்சுக்காக பேசுகிறான், மேடையில் நின்று பேசுகிறான், மாநாட்டில் ஏதோ கைத்தட்டல் வாங்குவதற்காக பேசுகிறான் என்று நினைத்துவிடாதீர்கள். திரும்பத் திரும்பச் சொல்கிறேன், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையில் இரண்டே வரி திருக்குறள்போன்று, ஒன்றிரண்டு தலைப்புச்செய்தியைச்சொல்வார்கலைஞர்அவர்கள், “சொன்னதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம்” என்று. ஆக அவர் வழி நடைபெறக்கூடிய இந்த ஆட்சிக்குப் பொறுப்பேற்றிருக்கக்கூடிய உங்களால் அந்தப் பொறுப்பில் உட்கார்ந்திருக்கக்கூடியவன் நான், அதை மறந்திட மாட்டேன். ஆகவே, நிச்சயம் இன்னும் என்னென்ன கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டுமோ, சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிந்ததற்குப் பிறகு அதிகாரிகளை அழைத்துப்பேசி, ஏன், உங்கள் தலைவரையும் மீண்டும் கோட்டைக்கு வரவழைத்துப் பேசி, எது, எது தீர்த்து வைக்கப்படுமோ அத்தனை கோரிக்கைகளையும் உறுதியாக நிறைவேற்றப்படும், நிறைவேற்றப்படும் என்ற உறுதியை, நம்பிக்கையை எடுத்துச்சொல்லி, இந்த மாநாட்டில் பங்கேற்கக்கூடிய நல்ல வாய்ப்பு தந்திருக்கக்கூடிய அனைவருக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்,*
39ஆவது வணிகர் தினத்தையொட்டி திருச்சிராப்பள்ளியில்
தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பின் சார்பில் நடைபெற்ற
*தமிழக வணிகர் விடியல் மாநாட்டில் ஆற்றிய உரை – **05.05.2022***

"நாள்தோறும் ஏதாவது ஒரு திட்டத்தைத் தொடங்கி வைக்கிறோம். ஏதாவது ஒரு முக்கியமான அறிவிப்பை வெளியிட்டுக் கொண்டிருக்கிறோம். தொடர்ந்து நலத்திட்ட உதவிகளையும் மக்களுக்கு வழங்கிக் கொண்டிருக்கிறோம்."

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்

வெளியீடு:
இயக்குநர், செய்தி - மக்கள் தொடர்புத்துறை